# வளரும் தமிழ்

MADURAI UNIVERSITY LIBRARY
20 OCT 1979
MADURAI.

'சோமலெ'

பாரி நிலையம்
59, பிராட்வே · சென்னை-1.

முதற் பதிப்பு: 1956
இரண்டாம் பதிப்பு: 1960
மூன்றும் பதிப்பு: 1968

விலை ரூ. 8-00

## BIBLIOGRAPHICAL DATA

Name of the Book : VALARUM TAMIL

Name of the Author : 'SOMALE' (SM. L. Lakshmanan Chettiar, b. 1921)

Date of Publication : Third and Revised Edition December, 1968 (First Edition December, 1956)

Size of the Book : 18·3 Cm.

Pagination : viii+448

Price : Rs. 8-00

Published by : PAARI NILAYAM, 59, Broadway, Madras-1.

Brief indication of the contents : History of Tamil Literature, with special referencc of Tamil Prose in the 20th Century.

Library classification Dewey 894 : 811409
Colon 031, 6 v N 6

MARUTHY PRESS, 83, Peters Road, Madras-14.

# முதற் பதிப்பின் முன்னுரை

**1-12-1956**

1950-ஆம் ஆண்டில் ஒரு நாள். மாலைப்பொழுது. வழக்கம்போல் மெரினா கடற்கரைக்குச் சென்றேன். ஆனால் அன்று சற்று முன்னரே சென்றுவிட்டேன். கடற்கரையிலோ கூட்டம் இல்லை. வானொலி நிகழ்ச்சிகள் தொடங்கவும் இல்லை. மொபைல் காண்டீனும் வரவில்லை. எதிரே இருந்த கட்டடத்தை நோக்கினேன். சென்னை மாநிலக் கல்லூரி— யான் படித்த கல்லூரி அது. எனவே, அங்கே சென்று பொழுது போவதற்காக அங்குள்ள அறிக்கைப் பலகைகளில் இருந்த செய்திகளைப் படித்தேன். அந்தக் கல்லூரியில் மாணவர்களாக இருந்தவர்களுக்கென ஒரு கட்டுரைப் போட்டி நிகழுவதாகவும், அதற்கு 'பவ்வல் மோர்ஹெட் பரிசு' என்பது பெயர் என்றும், கட்டுரை இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடையைப்பற்றி இருக்கவேண்டு மென்றும் ஓர் அறிக்கை இருந்தது.

பரிசு கிடைப்பது ஒருபுறமிருக்க, ஏதோ ஒரு வகையாக அந்தக் கட்டுரையை எழுதலாம். எழுதவேண்டுமென்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. ஒரு சில செய்திகளைச் சேகரித்தேன். சில நூல்களிலிருந்து குறிப்புகளைத் தொகுத்தேன். இதன் விளைவாக என்னுடைய கட்டுரை ஒரு வகையாக அமைந்தது. டாக்டர் மா. இராசமாணிக்கனாரும் தமிழ்ப் புலமை நிரம்பிய வேறு சில நண்பர்களும் என் கட்டுரையின் அமைப்புக்குச் சில கருத்துக்கள் தெரிவித்து உதவினர்.

மேற்கூறிய போட்டிக்கு என்னுடைய கட்டுரை ஒன்று மட்டுமே வந்திருந்தது என்ற காரணத்தால் பரிசு வழங்க மாநிலக் கல்லூரியினர்க்கு மனம் வரவில்லை. எனினும் இந்தத் துறையில் என்னுடைய ஆர்வம் ஒரு சிறிதும் குன்ற வில்லை. இடையிலே அது பல்கிப் பெருகியது. பல அறிஞர் களோடு 'இருபதாம் நூற்றாண்டின் உரைநடை'யைப்பற்றி நான் விவாதித்தேன். தாம்பரம் கிறித்தவக் கல்லூரியிலுள்ள பழைய நூல்கள் பலவற்றைப் புரட்டினேன். வேறு பல நூல் நிலையங்களுக்கும் சென்றேன். பாரி நிலையத்தின் உரிமை யாளர் தமிழன்பர் திரு. செல்லப்பன் அவர்களும் அரிய

நூல்களைப் பெறச் செய்வதில் எனக்குப் பேருதவியாக இருந்தார்கள்.

இந்நூலின் சில பகுதிகளைப் படித்துப் பார்த்து, கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்களும் மகாமகோபாத்தியாய பண்டிதமணி கதிரேசச் செட்டியார் அவர்களும் தங்களுடைய அரிய அறிவுரைகளை நல்கி இத்துறையில் என்னுடைய ஊக்கத்தை வளர்த்தனர்.

பல இடங்களுக்குச் செல்லும்போதெல்லாம் ஆங்காங்கு வழங்கும் சொற்களையும் அங்குள்ள தமிழன்பர்களுடன் உரையாடும்போது அவ்வப்பகுதியின் இலக்கிய வளத்தைப்பற்றிய செய்திகளையும் அறிந்துகொண்டேன்; குறித்துக்கொண்டேன்; பயன்படுத்திக்கொண்டேன். இந்நிலையில் இந்திய அரசினரின் சாகித்திய அகடமிக்காக தமிழில் இந்த நூற்றுண்டில் வெளியான நூல்களின் பட்டியலைத் தொகுக்கும் பணியில் தமக்கு உதவி செய்யும்படி அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியரும் என் இனிய நண்பருமான பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் என்னைக் கேட்டுக்கொண்டார்கள். இதன் பயனுக, இந்த நூற்றுண்டில் வெளியான தமிழ் நூல்கள் எல்லாவற்றையுமே தொட்டுப் பார்க்கின்ற வாய்ப்பேனும் எனக்குக் கிடைத்தது. சென்னை எழும்பூரிலுள்ள அரசாங்க ஆதாரங்களின் சேமிப்பு நிலையத்துக்கும் (Madras Record Office) நூல்களின் பதிவாளர் (Registrar of Books) அலுவலகத்துக்கும் ஏறத்தாழ மூன்று மாதங்கள் நாள்தோறும் சென்றேன். அப்போது யான் பெற்ற அனுபவமும் பயிற்சியும்ஏற்கெனவே கட்டுரை வடிவத்தில் இருந்ததை, பெரியதொரு நூலாக உருப் பெறுவதற்குப் உதவி செய்தன. புதிய குறிப்புகள் கிடைக்கக் கிடைக்க, பழைய கட்டுரைகள் புதிய உருவம் பெற்றன. மீண்டும் மீண்டும் திருத்தியும், டைப்பு அடித்தும் நூலினுடைய அமைப்பை மாற்ற நேர்ந்தது. இவ்வகையில் எனக்கு உதவி செய்தவர்கள் திரு. வி. என். சாமி, திரு. பொ. க. சாமிநாதன் ஆகியோர். தமிழ் டைப்பு அடிப்பதில் வல்லவர்களாகிய இவர்களுடைய துணையின்றேல் இந்நூல் வெளிவந்திராது.

இந்நூலின் படியினைப் பார்த்த அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சிப் பேராசிரியர் ஜி. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் இத்தகைய பெரு நூல்களைப் பல்கலைக் கழக வெளியீடாகவோ, பல்கலைக் கழகப் பொருளுதவி பெற்றோ

வெளியிடலாமென்றும், இவ்வாறு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் பல நூல்களுக்கு உதவி செய்திருப்பதாகவும் என்னிடம் தெரிவித்தார்கள். அவர்களுடைய விருப்பத்திற் கிணங்க, எனது நூலின் படியை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாருக்கு மூன்று ஆண்டுகளுக்குமுன்னர் அனுப்பினேன். பல்கலைக் கழகத்திலுள்ள தமிழ்ப் பேராசிரியர்கள் வழங்கிய கருத்துக்கேற்ப, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தார் ஓராயிரம் ரூபாய் வழங்கினர். இவ்வாறு தமிழ்ப் பணியில் என்னை ஊக்குவித்த தமிழ்ப் பேராசிரியர்களுக்கும், அக்காலத்துத் துணைவேந்தராயிருந்த திரு. இராமநாதப் பிள்ளை அவர்களுக்கும் பதிவாளர் திரு. தி. து. மீனாட்சிசுந்தரம் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல்கலைக் கழகத்தின் இணைவேந்தர் செட்டிநாட்டரசர் டாக்டர் ராஜா சர் முத்தையச் செட்டியார் அவர்களுக்கும், துணைவேந்தர் திரு. தி. மு. நாராயணசாமிப் பிள்ளை அவர்களுக்கும் என் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூல் எழுதத் தொடங்கிப் பல ஆண்டுகளாகிவிட்டன. இந்த இடைப்பட்ட பகுதியிலே பல அலுவல்களில் யான் ஈடுபட்டிருந்ததாலும், அடிக்கடி பிரயாணம் செய்துகொண்டிருந்ததாலும், படிப்பவர்கள் விரும்பத் தக்கவாறு சிறந்த முறையில் இந்நூலை உருவாக்குவதற்கு இயலவில்லை. மேலும் கடந்த இரண்டு ஆண்டுகளாக அண்ணாமலைப் பல்கலைக் கழகம் செட்டிநாடு அண்ணாமலை தொழிற் கல்லூரி ஆகிய கல்வி நிலையங்களில் எனக்குள்ள பல அலுவல்களின் காரணமாக இந்நூல் அச்சிலிருந்த காலத்தில் இதைத் தொடர்ந்து படிக்கவோ திருத்தவோ ஓய்வு கிடைக்கவில்லை. எனவே. நூலிலுள்ள குறைபாடுகளைப் பொறுத்தருளுமாறு அன்பர்களை இறைஞ்சுகின்றேன்.

## இரண்டாம் பதிப்பின் முன்னுரை

**30-9-1960**

இந்நூலை ஆதரித்த தமிழ் மக்களுக்கு என் நன்றி உரியது.

இந்தப் பதிப்பில் 1960 ஆகஸ்டு வரை வெளியான முக்கியமான நூல்களைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளேன். முன் பதிப்பிலிருந்து 'நூல் மதிப்புரை', 'பாட நூல்கள்', 'பிற மொழிகளில் உரைநடை' ஆகிய பகுதிகள் நீக்கப்பட்டு, '*அகராதி*', '*1958*', 'வெளிநாடுகளில் தமிழ்' என்ற பகுதிகள்

சேர்க்கப்பட்டுள்ளன. எல்லாக் கட்டுரைகளிலும் பல புதிய செய்திகள் தரப்பட்டுள்ளன.

பல செய்திகளைத் தெரிவித்த அன்பர்களுக்கும், இப்பதிப்பையும் அழகுற வெளியிடும் பாரி நிலையத்தார்க்கும் விரைந்து அச்சிட்டுத் தந்த மாருதி அச்சகத்தார்க்கும், புலவர் வகுப்புக்குப் பாடநூலாகவைத்து உதவிய சென்னைப்பல்கலைக் கழகத்தாருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## மூன்றும் பதிப்பின் முன்னுரை

இந்த மூன்றும் பதிப்பு பெரும்பாலும் ஒரு புதிய நூல் என்றே சொல்லலாம்.

என் நூல்களைப்பற்றி வாசகர்கள் குறைபட்டு அடிக்கடி கடிதம் எழுதுகிறுர்கள். அவர்கள் சொல்லும் குறை—''அடுத்த அடுத்த பதிப்புக்களில் பல புதிய செய்திகளும், பகுதிகளும் சேர்க்கிறீர்கள்--ஆதலால் உங்களது நூல்களை மூன்றுவது அல்லது நான்காவது பதிப்புக்களையே வாங்குவது நல்லது'' என்கிறுர்கள்.

எழுத்தாளர்களில் இருவகை உண்டு. சிலர் ஏற்கெனவே அறைத்த மாவையே அறைப்பதைப்போல் எழுதியதையே திரும்பத் திரும்ப எழுதுவார்கள். வாசகர்களின் அறிவுத் திறனை அந்த எழுத்தாளர்கள் அவ்வளவாக மதிப்பதில்லை.

நான் என் வாசகர்களை மதிப்பவன், அவர்களுடைய அறிவும், தரமும், தேவையும் காலத்திற்கேற்ப மாறிவருவதாகவும், வளர்ச்சியடைந்து வருவதாகவும் எண்ணுபவன்.

என் கருத்துக்களும், சூழல்களும் மாறியவண்ணமாக உள்ளன. ஓயாத பயணம்; ஏராளமான புது நூல்களைப் படித்தல், பலநூறுபேர்களுடன் உரையாடுதல், தமிழ் நடையில் விரைந்து ஏற்பட்டுவரும் மாறுதல்கள்—இந்த அலைகள் யாவும் என் உள்ளத்தை மோதுகின்றன. அவற்றின் எதிரொலியே என் எழுத்துக்கள்.

அமெரிக்காவில் மோட்டார்க் கார் செய்யும் ஒரு தொழிற்சாலை முந்தின ஆண்டில் செய்த மாடலையே செய்வதில்லை. அந்த மாடல் கார்களை பல ஆயிரம் எண்ணம் விற்று லாபம் சம்பாதித்துவிட்டோம் என்பதற்காக அறிவியல் வளர்ச்சியை புறக்கணிப்பதில்லை.

சிந்தனை வளர்ச்சியில் ஏற்பட்டு வரும் முன்னேற்றங்களையும் எழுத்தாளன் புறக்கணிக்கக் கூடாது என்பது என் கருத்து.

ஒவ்வொரு நூலும் வெளிவந்த பிறகே அந்த நூலில் கண்ட பொருள்களைப்பற்றிப் பலருடன் விரிவாகப் பேசவும், புதிய விவரங்களைத் தெரிந்துகொள்ளவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

முதல்தடவையாக நூல் எழுதும்போது, தம் பெயரை அச்சில் காணவேண்டும் என்பதே தலையான நோக்கமாக இருக்கிறது. அடுத்த பதிப்பில், கருத்துக்கள் சிறப்பிடம் பெறுகின்றன. பின்வரும் பதிப்புக்களில் தெளிவு, சொற்செட்டு, பத்தி அமைப்பு, பக்க அமைப்பு, நூலின் புறத்தோற்றம் ஆகியவற்றிலும் மனம் செல்லுகிறது.

முன் பதிப்புக்களில் 'என்பவர்' என்னுஞ் சொல்லை 160 இடங்களில் கையாண்டிருக்கிறேன். இப்பதிப்பில்இச்சொல்லை மிகக் குறைவாகவே கையாண்டிருக்கிறேன். எடுத்துக்காட்டாகப் புதிய மேற்கோள்களையே கொடுத்திருக்கிறேன். பெயர்க்குறிப்பு அகராதியுடன் வெளிவருவதால் ஆழப் படிப்பவர்களுக்கு இப்பதிப்புப் பயன்படும்.

இலக்கியத்தில் ஈடுபாடு, சிந்தனையாற்றல், தம் நூல்களைப் படிப்பவரிடம் பரிவு—இம்மூன்றும் உள்ள எழுத்தாளர் தம் நூலைப் பதிப்புத்தொறும் மாற்றத்தான் செய்வார். அவர் உயிருள்ளவரை நூலிலும் மாறுதல்கள் இருக்கத்தான் செய்யும். மாற்றத்தை நிறுத்த, இறுதிமூச்சால்தான் இயலும்.

இந்நூலைப் பாடநூலாக வைத்துள்ள லெனின்கிராடு முதலிய வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களுக்கு என் நன்றி உரியது. 1968 இறுதிவரை வெளிவந்துள்ள முக்கியமான நூல்களைக் குறிப்பிட்டுள்ளேன். என் கண்ணில் படாமல் சில சிறந்த நூல்கள் விடுபட்டிருக்கலாம்.

இப்பதிப்பைச் சிறந்த முறையில் வெளியிடும் பாரி நிலையத்தார்க்கும், விரைந்து அச்சிட்டுதவிய மாருதி அச்சகத்தார்க்கும், அச்சு நகலைத் திருத்துவதில் உதவிய இராமுவுக்கும் நன்றியன்.

*11-12-1968* 'சோமலெ'

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | உரைநடையின் தோற்றம் | ... 1 |
| 2. | கல்வெட்டுக்கள் | ... 16 |
| 3. | ஐரோப்பியர் காலத்தில் உரைநடை | ... 24 |
| 4. | செந்தமிழ் நடை | ... 46 |
| 5. | தனித் தமிழ் | ... 79 |
| 6. | மறுமலர்ச்சி நடை | ... 157 |
| 7. | சொற்பொழிவு | ... 187 |
| 8. | நாடகம் | ... 205 |
| 9. | திரைப்படங்கள் | ... 224 |
| 10. | செய்தித் தாள்கள் | ... 232 |
| 11. | வானொலி | ... 258 |
| 12. | விளம்பரம் | ... 266 |
| 13. | சமயமும் தமிழும் | ... 280 |
| 14. | உரைநடை நூல்கள் | ... 292 |
| 15. | விஞ்ஞான நூல்களும் கலைச் சொற்களும் | ... 324 |
| 16. | மொழிபெயர்ப்பு | ... 345 |
| 17. | ஆராய்ச்சி நூல்கள் | ... 360 |
| 18. | அகராதி | ... 373 |
| 19. | கடிதங்கள் | ... 377 |
| 20. | பேச்சுவழக்கில் தமிழ் | ... 395 |
| 21. | கவிதை | ... 403 |
| 22. | வெளிநாடுகளில் தமிழ் | ... 410 |
| 23. | பல்கலைக் கழகங்கள் | ... 420 |
| 24. | அரசினரும் தமிழும் | ... 431 |
| 25. | தமிழ்வளர்ச்சிக் கழகம் | ... 444 |
| 26. | முடிவுரை | ... 447 |

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI.

# வளரும் தமிழ்

## 1. உரைநடையின் தோற்றம்

"மொழி உயரத் திரு உயரும்
திரு உயரத் திறல் உயரும்."

—விபுலாநந்தர்

இருபதாம் நூற்றுண்டில், தமிழ் மொழியின் வளர்ச்சி என்பது பெரும்பாலும் உரைநடையின் வளர்ச்சியேயாகும். எனவே, நமது ஆராய்ச்சிக்கு முன்னுரையாக, தமிழ் இலக்கியத்தில் உரைநடை தோன்றிய வரலாற்றைக் கூறுவோம்.

### சங்க காலத்தில் உரைநடை

சங்க காலத்தில், தமிழ் நூல்கள் எல்லாம் செய்யுள் வடிவிலேயே இருந்தன. காவியம், வரலாறு, சோதிடம், மருத்துவம் போன்ற பல துறைகளில், தமிழ் மக்கள் தங்களுடைய அறிவுச் செல்வத்தைச் செய்யுள் உருவிலேயே சேமித்து வைத்து வந்தனர். எனவே, உரைநடை அப்போது தோன்றவில்லை. அச்சியந்திரங்களும் எழுது கருவிகளும் அக்காலத்தில் இல்லாமையே இதற்குக் காரணம் என்று சிலர் கருதுகிறுர்கள். இக் கருத்தை யாம் ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஏன் எனின்,

அச்சியந்திரம் இல்லாத காலத்தில், கிரேக்க மொழியில் உரைநடை இருந்திருக்கிறது; ஆல்பிரட் மன்னர் காலத்தில், ஆங்கிலத்தில் உரைநடை இருந்திருக்கிறது; பல நூற்றுண்டுகளாகவே, உபநிடதம் போன்ற நூல்களில் ஒரு பகுதி உரைநடையாக இருந்ததை வடமொழியின் வரலாற்றுல் அறிகிருேம். எனவே, சங்க காலத்துத் தமிழ்நாட்டில், உரைநடை யிலக்கியம் சிறப்பாக இல்லாமைக்கு வேறு காரணங்கள் இருந்திருக்கக் கூடும். உரைநடை உலகியல் வாழ்வில் சாதாரணமாக எல்லா மக்களாலும் எளிதிற் புரிந்துகொள்ளக்கூடியது என்ற எண்ணத்திஞல், அக்கால மக்கள் அதனைத் தனித்ததோர் இலக்கியமாகத் தொகுத்துப் பாதுகாத்தலில் கருத்தின்றி யிருந்திருக்கலாம். ஓலைப் பிரதி ஒன்றை வைத்துக்கொண்டு பலர் மனப்பாடம் அல்லது நெட்டுருச் செய்வது வழக்கமாக இருந்திருக்கலாம். எதுகை மோனைகளுடன் கூடியிருந்தமையாலும், சுருக்கமாகவும் தெளிவாகவும் இருந்தமையாலும் மனப்பாடம் செய்வதற்கு உரைநடையைக் காட்டிலும் செய்யுட்களே ஏற்றவையாக இருந்தன.

இப்போதுகூட, நமது வாழ்க்கை முழுவதும் பாடல்மயமாக இருந்து வருகிறது. குழந்தை பிறந்தவுடன் அதைத் தாலாட்டி உறங்கச் செய்கிருேம்; குழந்தையின் அழுகையை நிறுத்த,

பாட்டி அடிச்சாளோ,
    பால் வார்க்கும் சங்காலே?
ஆண் பனையின் நுங்கே
    அணில்கோதா மாம்பழமே
கூப்பிட்டு நான் கேட்பேன்
    குஞ்சரமே கண் வளராய்

சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு
சாயக்கிளியே சாய்ந்தாடு
சோலைக்கிளியே சாய்ந்தாடு
குத்துவிளக்கே சாய்ந்தாடு
கோவில்புருவே சாய்ந்தாடு...

என்றெல்லாம் தாய்மார்கள் பாடுவதை, இன்று கேட்கிறோம். பள்ளிக்கூடத்தில், சிறுவர்கள் பாடுகின்றனர்; விளையாடும்போதும் பலர் ஊசற்பாட்டுப் பாடுகின்றனர். மணவறையில் மணப்பெண் நலுங்குப் பாட்டும், மற்றவர்கள் மங்கல வாழ்த்தும பாடுகின்றனர். நாற்று நடும்போதும், நெல் குத்தும்போதும் பெண்கள் பாடுகின்றனர். ஆடவருள்ளும் வண்டி ஓட்டும்போதும் மாடு மேய்க்கும்போதும பாடுபவர் எண்ணிலர். தேர்தல்களில் கலந்து கொண்டவர்கள் பாடல்கள் வாயிலாக மக்களுடைய ஆதரவைத் தேடியதையும் நாம் அறிவோம். பிச்சை எடுப்பதற்காகப் பாடுபவர்களை ரயில் பயணங்களில் பார்க்கலாம். திரைப் படங்களில், எந்தக் கட்டத்திலும் ஒரு பாடல் இடம் பெற்றுவிடுவது வழக்கம். இறைவனை வணங்குவதற்கும், பாட்டுக்கள் பயன்படுகின்றன. பாம்பு பிடிக்கும் போதும், கப்பல் ஓட்டும்போதும், பாரமான கல்லைத் தூக்கும்போதும் பாட்டுப்பாடுவது மரபு. குழந்தைக்கு அம்மை நோய் ஏற்பட்டால், மாரியம்மன் தாலாட்டுப் பாடி நோயைப் போக்க நம் தாய்மார் முயலுகின்றனர். யாராவது ஒருவர் இறைவனடி சேர்ந்ததும், உறவினர் ஒருங்கே பாடி அழுவது (இதை ஒப்பாரி வைத்தல் என்பர்) இன்றும் தமிழ் மரபாக இருந்து வருகிறது. திரைப்படப் பாடல்கள் இக்கால மக்களின் உள்ளத்தைக் கவர்ந்திருக்கிறதல்லவா? 1944—ஆம் ஆண்டில் அரிசித் தட்டுப்பாட்டால் உணவு விடுதி

களில் இட்டலி போடக்கூடாது என்ற தடை அரசின ரால் விதிக்கப்பட்டபோது, அன்பர்கள் பாடல்கள் பாடியே தங்களுடைய ஏக்கத்தைத் தெரிவித்தனர். இவை "குமரன்" இதழில் ஈற்றடி கொடுத்துப் பாடச் சொன்னபோது வெளிவந்தன. இவற்றுள் ஒன்றை இங்கே தருவோம்:

"வாராத பஞ்சமிங்கு வந்திடுமோ வென்றஞ்சி
ஆராய நேரமின்றி அவசரமாய்ப்—பாராள்வோர்
இட்டதொரு சட்டத்தால் எங்கும் மலிந்திருக்கும்
இட்டலிக்கு வந்த இடர்."

கவியரசர் சுப்பிரமணிய பாரதியார் பாடியுள்ள பாடல்கள்தாம் தமிழகத்தில் நாட்டுப்பற்றை வளர்க்கப் பேருதவியாயிருந்தன. உப்புக் காய்ச்சுவதற்காக வேதாரணியத்தில் நடந்த அறப்போரில் கலந்து கொண்டவர்களுக்கும் "கத்தியின்றி இரத்தமின்றி" என்ற பாடலே உணர்ச்சியூட்டியது, இந்தி மறுப்புப் போரிலும் பாடல்கள் பெரிதும் பயன்பட்டன. இலக்கிய விழாக்களில் கவி அரங்கங்கள் நடைபெறுகின்றன; வானொலியில் பாட்டு முடிந்து பேச்சுத் தொடங்கிவிட்டால், பெட்டியை மூடிவிடும் காட்சிகளை உணவு விடுதிகளில் காணுகின்றோம். பொதுக் கூட்டங்கள், எக்கட்சியாரால் நடத்தப் பட்டாலும் பாட்டுடன் முடிவதைக் காணுகின்றோம். இன்னும் துன்ப நிகழ்ச்சிகள் நிகழும்போதும் ஒருசிறிதே படித்த மக்களும் பெண்டிரும் தங்கள் கருத்துக்களை உணர்ச்சிப் பெருக்கால் பாட்டுக்களாலேயே அமைத்து வெளிப் படுத்தி வருவதற்கு எடுத்துக்காட்டாகப் பின்வரும் பாடலைத் தருவோம்:

"சாகும் வயதுமல்ல —நீர்
சாய்ந்துவிடும் காலமல்ல

மாளும் வயதுமல்ல—நீர்
மாண்டிருக்க நாளுமல்ல''

நாட்டுப்புறங்களில் வாழும் பெண்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்ளும்போதுகூட, பாட்டுக்களைப் பரிமாறிக் கொள்வதைப் பார்ப்போம்:

**ஒருத்தி:**

''வட்டவட்டத் திட்டையிலே
வரகரிசி தீட்டையிலே
ஆர்கொடுத்த *சாயச்சோமன்
ஆலவட்டம் போடுதடி?''

**மற்றொருத்தி:**

''ஆருங் கொடுக்கவில்லை
அவிசாரி யாடவில்லை
கையெரியப் பாடுபட்டுக்
கட்டினேன்டி சாயச்சோமன்.''

ஒருவன் தனியே இருந்து தனக்குத்தானே பாடிக் கொண்டிருந்தால், இசை அறிவுடையவன் என்று அவனைக் கருதுகிறோம்; பிறிதொருவன் தனியே இருந்து தனக்குத் தானே ஏதாவது உரைநடையில் சொல்லிக் கொண்டிருந்தால் அவனுக்குப் பைத்தியம் என்று எண்ணுகிறோம்.

உயர்ந்த கருத்துக்கள், பாட்டாக அமைக்கப் பெற்றால், அழியா வாழ்வு பெறுகின்றன. ஒலியமைப் பாலும், பாட்டு, செவிப் புலனைக் கவர்ந்து விடுகிறது. இசையே முதலில் தோன்றி, அது வளர்ச்சியடைந்து மொழியாயிற்று என்று மொழி நூல் அறிஞர் சிலர் கூறுகின்றனர்.

எள்ளிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுவதுபோல இலக்கியத்திலிருந்து வருவது இலக்கணம். மொழியின்

*சாயச்சோமன்-கெண்டை போட்ட சேலை.

வேலி இலக்கணம். பல சிறந்த இலக்கியங்கள் தோன்றிய பின்பே, இலக்கணம் தோன்றும். தொல்காப்பியர் தமக்கு முன்பு பல ஆசிரியர்கள் இலக்கண நூல்களைச் செய்துள்ளனர் எனக் கூறியுள்ளார்.

இவற்றையெல்லாம் நோக்கும்போது, (ஆற்றுவரி, கானல் வரி முதலியன† பாடப்பெற்ற காலத்தில்) பல நூற்றாண்டுகளுக்கு முன்னர், தமிழ் நூல்கள் யாவும் செய்யுள் வடிவில் இருந்ததில் வியப்பில்லை.

தமிழ் மருத்துவ நூலும் செய்யுளிலேயே உள்ளது.

> ''நெல்லிக்காய்க்குப் பித்தம் நீங்கும்; அதன் புளிப்பால்
> செல்லுமே வாதம்; அதிற் சேர் துவரால்—சொல்லும்
> ஓடும்; இதைச் சித்தத்தில் உள்ள அனலுடனே [ஐயம்
> கூடு பிறமேகமும் போங் கூறு.''

என்பதும் ஒரு பாடல்.

## உரைநடை என்னுஞ் சொற்றொடரின் பொருள்

செய்யுள் வடிவாயிருந்த இலக்கிய இலக்கணங்கள்* பிற்காலத்தில் பொருள் காண்பதற்குக் கடினமாயிருந்தமையால், புலவர் பலர் சங்க நூல்களுக்கு உரை

---

† பல நூற்றாண்டுகளுக்கு முன்னர், பாடப்பெற்ற நாடோடிப் பாடல்கள் வருமாறு:—காதல் பாட்டு, கல்யாணப் பாட்டு, கூத்துப் பாட்டு, குறையிரத்தல் பாட்டு, போர்ப் பாட்டு, ஏசல் பாட்டு, கொம்பு முறித்தல் பாட்டு, விறகு சுமப்போர் பாட்டு, தோட்டக்காரர் பாட்டு, பெண்கள் தண்ணீர்க் குடத்தினராய்ப் பாடும் பாட்டு, கோலாட்டப் பாட்டு, வசந்தன் பாட்டு, ஒப்பாரி, தாலாட்டு, திரிகைப் பாட்டு, கப்பல் பாட்டு, ஓடப் பாட்டு, ஏற்றப் பாட்டு, பள்ளுப் பாட்டு, அருவி வெட்டுப் பாட்டு, நாற்று நடுகைப் பாட்டு, சூட்டு மிதிப் பாட்டு, கிரியைப் பாட்டு, கள்ளுப் பாட்டு, ஊஞ்சல் பாட்டு, தெம்மாங்கு, பறையன் பாட்டு, அம்பட்டன் பாட்டு, வண்ணான் பாட்டு, மருத்துவச்சி பாட்டு, மழைப் பாட்டு, கொடும்பாவிப் பாட்டு, கிணறுவெட்டிகள் பாட்டு, தவளைப் பாட்டு, எலிப் பாட்டு, நாய்ப் பாட்டு, சேவற் பாட்டு, ஊர்க்குருவி, நரிக்குருவிப் பாட்டு, கிட்டிப் பாட்டு, சிறுவர் பாட்டு, வயற் பாட்டு, விளையாட்டுப் பாட்டு, காவடிப் பாட்டு, நெசவுப் பாட்டு, சிங்கன் சிங்கி பாட்டு முதலிய பல.

*இலக்கியத்தினின்றும் இலக்கணம் எடுபடும் என இலக்கண நூல் கூறுமென்பது சான்றோர் கருத்து.

யியற்றுவராயினர். இவ்வாறு தோன்றிய உரைகளாலேயே, தமிழில் உரைநடை உருப்பெறத் தொடங்கியது. இந்த உரை நடைகளை ஆங்கிலத்தில் விளக்கவுரை (Commentary, Explanation, Interpretation, Exposition, Gloss) என்பர்.

இப்போது உரைநடை என்னுஞ் சொற்றொடர் வசனம் (Prose) என்னும் பொருளில் வழங்கப்படுகிறது.

சங்க காலத்தில் ஆசிரியப்பாவும், அதனியல்புடைய நூற்பாவாகிய சூத்திரமும் உரைநடை போலப் பெருவழக்கிலிருந்தன. பின்னர் உரைநடை நூல்கள் தோன்றுதற்கு மூலமாயிருந்தன இவையே என்று அறிஞர் கூறுவர்.

'மனத்தின் எண்ணி மாசறத் தெரிந்துகொண்டு
இனத்திற் சேர்த்தி உணர்த்தல் வேண்டும்'

எனவரும் தொல்காப்பியச் சூத்திரம் தொல்காப்பியர் காலத்து உரைநடையின் சாயலைப் புலப்படுத்துகின்றது. உரைநடை நூல்களுக்குத் தொல்காப்பியர் இலக்கணம் அமைத்திருக்கிறார்; ஒரு பாட்டின் இடையிலோ, பாட்டை விளக்கவரும் குறிப்புரையிலோ உரை எழுதும்போதோ, மொழிபெயர்க்கும்போதோ உரைநடையைப் பயன்படுத்தலாமென்று அவர் வகுத்திருக்கிறார். சிலப்பதிகாரம் போன்ற சில நூல்களில் மட்டுமே இடையிடையே ஓரளவு உரைநடையும் கலந்து வந்திருக்கிறது.

"அது கேட்டுக் கடல் சூழிலங்கைக் கயவாகு
வென்பான் நங்கைக்கு பீடிகைக் கோட்டமுந்துறுத்
தாங்கு அரந்தை கெடுத்து வரந்தருமிவளென ஆடித்
திங்களகவையினுங்கோர் பாடி விழாக்கோள் பன்

முறை யெடுப்ப மழை வீற்றிருந்துவளம் பல
பெருகிப் பிழையா விளையுள் நாடாயிற்று''

என்பது சிலப்பதிகார உரைநடைப் பகுதியாகும்.

உரையாசிரியர்கள் அனைவரும் கற்றோருக்காகவே உரை எழுதினார்கள். எனவே, அவர்களுடைய நூலையோ, உரைநடையையோ இக்கால முறைப்படி ஆராய்வது பொருந்தாது. அந்த உரைநடைகளுக்குச் சில எடுத்துக்காட்டுக்களைக் கூறி, அவற்றின் சிறப்பியல்புகளைச் சுருக்கமாகச் சுட்டிக் காட்டுவோம்.

## இறையனார் களவியலுரை*

பண்டைய உரைநடை நூல்களில் முதன்முதலாகத் தோன்றியதாகப் பலரால் கருதப்படுவது இறையனார் களவியலுரை. இதை நக்கீரர் இயற்றினார் என்று சிலர் சொல்லுகிறார்கள். இந்த உரையில் எதுகை மோனைகள் மிகுதியாக உள்ளன; வாக்கியங்கள் மிக நீளமாக இருக்கின்றன. எனினும், நடை உயிருள்ளதாக இருக்கிறது; உரையின் போக்கு, கதையைப் போன்றது. இதன் பகுதி வருமாறு:

''சந்தனமும் சண்பகமும் தேமாவும் தீம்பலவும் ஆசினியும் அசோகமும் கோங்கும் வேங்கையும் குரவமும் விரிந்து, நாகமும் திலகமும் நறவமும் நந்தியும் மாதவியும் மல்லிகையும் மௌவலொடு மணங்கமழ்ந்து, பாதிரியும் பாவை ஞாழலும் பைங் கொன்றையொடு பிணியவிழ்ந்து, பொரிப்புன்கும் புன்னாகமும் முருக்கொடு முகைசிறந்து, வண் டறைந்து தேனார்ந்து வரிக்குயில்கள் இசைபாட...''

## இளம்பூரணர் உரை

தொல்காப்பியத்திற்கு முதலில் உரை எழுதியவர் இளம்பூரணர்; இக்காரணத்தால், இளம்பூரணர் ''உரை

*இதனை இறையனார் அகப்பொருள் உரை என்றுஞ் சொல்வர்,

யாசிரியர்" என்று சிறப்பிக்கப் பெற்றிருக்கிறார். இவரது உரைநடையின் அமைப்பைப் பின்வரும் வரிகளில் காண்க:

'இந்நூலகத்து ஒருவனும் ஒருத்தியும் நுகரும் காமத்திற்குக் குலனும் குணனும் செல்வமும் ஒழுக்கமும் இளமையும் அன்பும் ஒருங்கும் உளவழி இன்பம் உளதாமெனவும், கைக்கிளை ஒருதலை வேட்கையெனவும், பெருந்திணை ஒவ்வாக் கூட்டமாய்இன்பம் பயத்தல் அரிதெனவும் கூறுதலான், இந் நூலுடையார் காமத்துப் பயனின்மை உய்த்துணர வைத்தவாறு அறிந்து கொள்க.''

## சேனாவரையர்-பேராசிரியர்

சேனாவரையரும் பேராசிரியரும் தொல்காப்பியத்திற்கு உரை எழுதியுள்ளனர். சேனாவரையருடைய உரைநடை இலக்கியம் சிறு அளவினதேயாகும். பேராசிரியருடைய உரைநடை ஓரளவு கடினமானதே. சான்றாக, ஒரு பகுதியைத் தருவோம்:

''அச்சத்துக்கு ஏதுவாகிய ஒரு பொருள் கண்டு அஞ்சி ஓடி வருகின்றானொருவனை மற்றொருவன் கண்ட வழி, இவன் வள்ளெயிற்றரிமா முதலாயின கண்டு அஞ்சினானென்றறிவதல்லது வள்ளெயிற்றரிமாவினைத் தான் காண்டல் வேண்டுவதன்று; தான் கண்டானாயின் அதுவும் சுவையெனவே படும்.''

## தெய்வச் சிலையார்

இவர், தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு உரை எழுதியுள்ளார். இதைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் வெளியிட்டுள்ளனர். சில இடங்களில், தாமே புது முறையில் நுட்பமாக உரை எழுதியிருப்பது இவருடைய தனிச் சிறப்பு.

**கல்லாடர்**

கல்லாடர் என்ற உரையாசிரியர் சொல்லதிகாரத்திற்கு மட்டும் உரை எழுதியுள்ளார். இவர் உரை முழுவதும் இன்னும் வெளிவரவில்லை. "கல்லாடர் உரை" என்ற ஓர் உரை தருமபுர ஆதீன வெளியீடான "ஞானசம்பந்த"த்தில் வெளிவந்திருக்கிறது.

**நச்சினார்க்கினியர்**

தொல்காப்பியம் முழுவதற்கும் விரிந்த முறையில் உரையெழுதியவர் உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் ஆவார். சொல்லுக்குப் பொருள் காண்பதிலும் அதற்குத் தெளிவான விளக்கம் காண்பதிலும் இவர் தலை சிறந்தவர். நச்சினார்க்கினியர்க்குள்ள தமிழ்ப்பற்று சேனாவரையர்க்கு இல்லையென்றும், சேனாவரையர்க்குரிய ஆரியப்பற்று நச்சினார்க்கினியர்க்கு இல்லையென்றும் சொல்லலாம். நச்சினார்க்கினியருடைய நடை, இனிமையும் அழகும் சற்றுக் கடினமும் பொருந்தியது. சங்க இலக்கியப் பாக்களின் ஆழ்ந்த பொருள்களை உய்த்தறியும் பேராற்றல் நச்சினார்க்கினியரிடம் மிகுதியாக இருந்தமை இவருடைய உரைகளிலிருந்து புலனாகிறது. இவர், கி. பி. பதினான்காம் நூற்றாண்டில் இருந்தவர் எனலாம். இவர் காலத்திலேயே நல்ல உரைநடை தமிழில் தோன்றியிருக்க வேண்டுமென்ற கருத்துடையவரும் உண்டு. கொண்டு கூட்டு முறையில் பொருள் காணும் இயல்பு இவருக்கு உண்டு. இவருடைய உரை நடையில், ஒரு பகுதியைப் பார்ப்போம்:

"ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்

படாததாய், யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர் பொருளாதலின், அதனை அகம் என்றார். எனவே, அகத்தே நிகழ்கின்ற இன்பத்திற்கு அகமென்றது ஓர் ஆகு பெயராம்.''

—பொருளதிகாரம்

நச்சினார்க்கினியர் உரை எழுதியிருக்கிற வேறு நூல்களாவன: பத்துப்பாட்டு உரை. கலித்தொகை உரை, சீவக சிந்தாமணி உரை, இந்த உரைகள் பிற் காலத்தவர் சங்க இலக்கியங்களுக்கு உரைகாணுவதற் குப் பெரிதும் பயன்பட்டன.

**அடியார்க்குநல்லார்**

நச்சினார்க்கினியர் காலத்தையொட்டி வாழ்ந்த அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதியுள்ளார். இவருடைய தெளிவான நடையும் சொல் லமைப்பும் பாராட்டுக்குரியவை. இவருடைய உரையில் நாடக நூல்களிலிருந்தும் இசை நூல்களிலிருந்தும் பல மேற்கோள்களைக் காணலாம். பாட்டில் வரும் திசைச் சொற்கள் இன்னநாட்டு வழக்கு என்பதை இவர் புலப் படுத்துவார். முத்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரத் திற்கு உரை எழுதிய பின் தமக்குக் கிடைத்த இயல் இசை நாடக நூல்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு இவர் காட்டிய விளக்கம் இக்காலத்தில் தமிழ் இசை, நாடக இயக்கங்களுக்குப் பெரிதும் துணையாக இருந்து வருகிறது. கானல்வரி உரை மிகச் சிறப்பானது; அது கிடைக்கவில்லை. பின்வரும் பகுதி இவருடைய உரை நடையினின்று எடுக்கப்பெற்றது:

''இவ்வியலிசை நாடகப் பொருட்டொடர் நிலைச்செய்யுளை அடிகள் செய்கின்ற காலத்து இயற் றமிழ் நூல் தொல்காப்பியமாதலானும் பிறர்கூறிய நூல்கள் நிரம்பா இலக்கணத்தனவாதலானும் அந் நூலின் முடிபே இதற்கு முடிபென்றுணர்க.''

### குணவீரபண்டிதர்

எழுத்து இலக்கணத்தையும் சொல் இலக்கணத்தையும் சுருக்கிக் கூறும் நேமிநாதம் என்னும் சிறு நூலுக்கு இவர் உரை எழுயிருக்கிறார்.

### குணசாகரர் உரை

யாப்பருங்கலம் எனும் நூலுக்கு அமைந்த குணசாகரர் விருத்தியுரை சிறப்புடையது. இதைப் பவானந்தம் பிள்ளை வெளியிட்டிருக்கிறார். செவ்விய உரையும் தெள்ளிய தமிழும் இதில் தவழக் காண்போம். இவ்வுரைக்கு இரு சான்றுகள் தருவோம்:

(1) "என்றார் வாமமேகலை மாதையோர் பாகனார் நாம மகிழ்ந்த நல்லாசிரியர்."

(2) "என்றார் நீர்மலிந்த வார்சடையோன் பேர் மகிழ்ந்த பேராசிரியர்."

### ஏனையோர்

புறநானூற்று உரையில், 46-ஆம் செய்யுளுக்கு உள்ள பின்வரும் பகுதியும் பண்டைய உரைநடைக்குச் சான்றாகக் காட்டத்தக்கது.

"நீதான் புறவின் அல்லல் அன்றியும் பிறவும் உற்ற துன்பம் பலவற்றையும் தீர்த்த சோழனுடைய மரபிலுள்ளாய். இவர்தாம். அறிவான் உழுதுண்ணும் கற்றோரது வறுமையை அஞ்சித் தம்முடைய பொருளைப் பகுத்துண்ணும் குளிர்ந்தநிழலையுடையராய் வாழ்வாரது மரபிலுள்ளார்."

### பரிமேலழகர்

அடியார்க்குநல்லார் காலத்தையொட்டி வாழ்ந்த பரிமேலழகரின் உரைச் சிறப்பை,

''பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ—நூலின்
பரித்த வுரையெல்லாம் பரிமே லழகன்
தெரித்தவுரை யாமோ தெளி''

என்னும் பாட்டால் அறியலாம். இவருடைய உரை நடையில் ஒரு பகுதி வருமாறு:

''இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமி லின்பத் தழிவில் வீடும் நெறியறிந்து எய்து தற்குரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரான் எடுக்கப்பட்ட பொருள் நான்கு. அவை அறம் பொருள் இன்பம் வீடென்பன. அவற்றுள் வீடென்பது சிந்தையும் மொழியுஞ் செல்லா நிலைமைத்தாகலின் துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்லது இலக்கணவகையாற் கூறப்படா மையின் நூல்களாற் கூறப்படுவன ஏனை மூன்றுமே யாம்.''

பரிமேலழகர் உரையில் சில இடங்கள் எளிமையாக இல்லை; கடினமாகவே இருக்கின்றன; இடையிடையே வடசொற்களும் உள்ளன. (தமிழ் நூலாகிய திருக்குறளுக்கு உரை கண்ட இப்பெரியார் தமிழ் மரபுக்கு மாறுகச் சில இடங்களில் வடமொழிக் கருத்துக்களை வலிந்து புகுத்தியிருப்பது வருந்தத்தக்கது.) அது ஒரு புறமிருக்க, அருமைக்குப் பரிமேலழகரையும் எளிமைக்கு (19ஆம் நூற்றுண்டில் வாழ்ந்து குறளுக்கு உரை இயற்றிய) கந்தப்பையர், விசாகப் பெருமாளையர் ஆகியோரையும் குறிப்பிடலாம். குறள் உரை ஆசிரியர்கள் ஏனையோருள் குறிப்பிடத் தக்கவர்கள் மணக்குடவர், காளிங்கர், பருதியார், நாகை சோ. தண்டபாணிப் பிள்ளை ஆகியோர். நாகை சோ. தண்டபாணிப் பிள்ளை அறத்துப்பாலுக்கு மட்டும் விரிவான உரை எழுதியுள்ளார். இவருடைய உரையே சிறந்தது என்று

சொல்லலாம். "அமிழ்தும்" போன்ற பல சொற்களின் சொல் ஆய்வுத் திறமையை இவ்வுரையில் பலபடக் காணலாம்.

'உரையாசிரியர்கள்' என்ற விரிவான நூல் (மு. வை. அரவிந்தன்) வெளிவந்துளது.

**நாலாயிர திவ்யப் பிரபந்த வியாக்கியானம்** *(பேருரை)*

*நம்பிள்ளை, நஞ்சீயர், ("வியாக்கியான சக்கர வர்த்தி" என்ற புகழ் பெற்ற) பெரியவாச்சான் பிள்ளை இவர்கள் நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்திற்கு மணிப் பிரவாள நடையில் உரை எழுதியுள்ளனர். ஆறுயிரப் படி முதலிய உரைகளில் பாசுரங்களின் ஆழ்ந்த பொருள்களை அவற்றின் நயம் புலப்படுமாறு இவர்கள் எழுதியிருக்கிறார்கள். மிக அரிய தமிழ்ச் சொற்கள் இவைகளில் பொதிந்து கிடக்கின்றன. இவை உபந் நியாசம் செய்வதைக் கேட்ட எழுத்தாளர்களால் பதம் பதமாகச் சோதித்து எழுதப் பெற்றவை. இந்த உரை களில் ஒரு பாடலுக்கு உரை கேட்டுவிட்டால், மனம் வேறொன்றிற் செல்லாது. இவை, வடமொழி தென் மொழி இரண்டிலும் ஒருங்கே தேர்ச்சியுடையவரே யன்றிப் பிறரால் எளிதில் பொருள்காண முடியாத நிலையில் இருக்கின்றன. இவ் வியாக்கியானங்களில் எடுத்ததற்கெல்லாம் மேற்கோள் காட்டப்பட்டிருக் கிறது. முன் சொன்னதே பல இடங்களில் திருப்பிச் சொல்லப் பெற்றிருப்பதால், இந்நூல்களில் ஒழுங்கு முறை இல்லையென்று சொல்லலாம். இந் நூலைப்போல தேவாரம் முதலியவற்றிற்கும் "வியாக்யானம்" எழுத

*சிவநேசச் செல்வர்களைப்போல வைணவர்களும், தமிழ்மொழிக்குக் கனிவும் மணமும் ஊட்டியுள்ளனர். அவர்களின் பிரபந்தங்களும் பாசுரங் களும் பக்திச் சுவை நனி சொட்டுவன.

யாராவது முன்வருவார்களானல் அது வரவேற்கத் தகுந்த இலக்கியப் பணியாகும்.

மேற்குறிப்பிட்ட மணிப்பிரவாள நடையில் அமைந்த உரை, அறிஞர் பு. ரா. புருஷோத்தம நாயுடு அவர்களால் செந்தமிழாக்கப் பெற்றுச் சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் வெளியிடப்பெற்றிருக்கிறது.

உரை ஆசிரியர்கள் காலத்திலேயே தமிழ் உரை நடை தொடங்கியது* என்பதை ஆராய்ந்தோம். அச்சகங்கள் தோன்றியதால், இவ்வகை இலக்கியம் பெரிதும் வளர்ந்ததைப் பிறிதொரு பகுதியில் எடுத்துரைப்போம்.

* Good Tamil prose began with the Commentators. The present-day printing facilities have added to the quantity of prose literature in Tamil while its quality hae gone down very appreciably In the name of intelligible prose, the crime of diffusing ungrammatical Tamil and spoiling the sweetness and euphoniousness of Tamil by writing foreign words phonetically without their being Tamilised is ruthlessly prepetuated The attempt to write pure and unmixed Tamil is condemned by those who are unequal to the task as "Purism"

—M. S. Purnalingam Pillai in "Tamil India"
(Chapter on Tamil Language and Literature)

# 2. கல்வெட்டுக்கள்

அச்செழுத்து ஏற்படுவதற்கு முன்னரே தமிழ் இலக்கியம் பெருவளர்ச்சியடைந்திருந்தது. எனவே, கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் தமிழிலக்கிய ஆராய்ச்சிக்குப் பெரிதும் துணை செய்கின்றன.

தமிழ்க் கல்வெட்டுக்கள் அசோகன் காலத்தை யொட்டியே முதலில் ஏற்பட்டதாகத் தெரிகின்றது. இப்போது கிடைத்துள்ள கல்வெட்டுக்களுள் பழமை யானது ஐந்து அல்லது ஆறும் நூற்றாண்டைச் சேர்ந் தது. இது தென்னார்க்காடு மாவட்டத்தில், விழுப்புரம் வட்டத்தில், செஞ்சிக்கு அண்மையிலுள்ள திருநாதர் குன்றத்தில் காணப்படுகிறது. இதைக் கண்டுபிடித்து, கோபிநாதராவ் என்பவர் "செந்தமிழ்" இதழில் ஐந்தாம் தொகுதியில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். இக் கல்வெட்டு, வட்டெழுத்துக்களில் உள்ளது (கிரந்தத் தமிழிலேயே உளது என்பர் கோபிநாத ராவ்) இக் கல்வெட்டாவது:

*"ஐம்பத் தேழன*<br>
*சனந் நோற்ற*<br>
*சந்திர நத்தி ஆ*<br>
*சிரிகர் நி சீதிகை"*

இக்கல்வெட்டில், சந்திரநந்தி என்பது ஆசிரியர் பெயர் ஆகும்; அனசனம் என்பது பட்டினி என்றும், நிசீதிகை

---

*செப்பேடுகள் தனி மனிதரிடம் இருப்பவை; சில செப்பேடுகள் ஆசாரிகளால் கொத்தப்பட்டிருக்கும்; வேறு சில கிறப்பட்டிருக்கும் கல்வெட்டுக்கள் பொது இடங்களில் இருக்கின்றன. எனவே, பிற்காலத்தில் மாறுதல் ஏற்பட்டிருக்க இயலாது. இக்காரணங்களால் கல்வெட்டுக்களையே சிறந்த ஆதாரமாகக் கொள்ளவேண்டும்,

என்பது கல்லறை என்றும், ஆசிரிகர் என்பது ஆசிரியர் என்றும் பொருள்படும்.

பத்தாம் நூற்றுண்டு முதல் பதினுன்காம் நூற்றுண்டு வரை சோழர்கள் அமைத்த கல்வெட்டுக்கள் பெரும்பாலும் உரைநடையிலேயே அமைந்திருக்கின்றன. இதற்குச் சான்றுக, ஒரு கல்வெட்டிலிருந்து எடுக்கப்பெற்ற பகுதியைக் காண்போம்:

## வில்லவராயன் சாசனம்

''ஸ்வஸ்திஸ்ரீ புகழ் சூழ்ந்த புணரி யகழ் சூழ்ந்த புவியில் பொரந்நேமி யளவுந் தந்நேமி நடப்பவிளங்கு சயமகளை யிளங்கோப் பருவத்து சக்கர கோட்டத்து விக்கிரமத் தொழிலால் புது மணம் புணர்ந்து மதவரை யீட்டம் வயிராகரத்துவாரி அயிர்முனைக் கொந்தளவரசர் தந்தளமிரிய வாளுறை கழித்து தோள்வலிகாட்டிப் போர்ப்பரி நடாத்திக்கீர்த்தியை நிறுத்தி வடதிசை வாகைசூடித் தெந்திசைத் தேமரு கமலப் பூமகள் பொதுமையும் பொந்நியாடை நன் நிலப் பாவையின் தனிமையுந் தவிரப் புனிதத் திரு மணிமகுடம் உரிமையிற்சூடித் தந்நடியிரண்டுந் தட முடியாகத் தொந்நில வேந்தர்''

இது உரைநடையுமன்று; அகவலுமன்று. இது கவிஞர்களால் ஆக்கப்பெற்ற மெய்க்கீர்த்தியேயாகும். மெய்க்கீர்த்தி இல்லாத சாசனங்களும் சோழர் பாண்டியர் காலத்தில் மிகுதியாக உள்ளன. தஞ்சை இராசராசச் சோழன் காலத்தில்தான் சாசனக் கல்வெட்டுடன் இடையில் ஒருபகுதியாக மெய்க்கீர்த்தி என்னும் இவ்வகைப் பாடலும் சேரத் தொடங்கியது.

சுமத்திராவில் 11-ஆம் நூற்றுண்டு அளவில் அரசாங்க ஏடுகளிலும் கல்வெட்டுக்களிலும் தமிழ்மொழி பயன்பட்டுள்ளது. இது பட்டேவியா கலை விஞ்ஞான

சேமிப்புக் கழகம் சேமித்துள்ள கல்வெட்டுக்களால் அறியக் கிடக்கின்றது. உடைந்துள்ள இந்தக் கல் வெட்டுப் பட்டயத்தின் காலம் கி. பி. 1088; அதாவது முதலாவது குலோத்துங்கச் சோழன் தமிழ்நாட்டை ஆண்ட காலம்.

தாய்லந்து (சயாம்) நாட்டிலும் தமிழ்க் கல்வெட்டுக்கள் சில இருக்கின்றன.

கல்வெட்டுக்களில் பாடல்கள்,, விருத்தம், வெண் பாக்கள் மிகுதி. அவற்றை வெளியிட வேண்டும். மைசூர்-அரசியலார் கன்னட மொழிக்கு இத்தகைய நூல்களை வெளியிட்டுள்ளனர். தமிழ் மொழியில் இது போன்ற முயற்சியை மயிலை சீனி வேங்கடசாமி 1959-இல் செய்திருக்கிறார்.

அரசியல் உலகில் சில காலம் பெரிய பதவிகளில் இருந்தவரும், 1933 அளவில் காலமானவருமான எல். டி. சாமிக்கண்ணுப் பிள்ளை என்பார் Indian Ephemeris எனும் ஆங்கில நூலில் கல்வெட்டு, செப்பேடு களிலுள்ள ஆண்டுகளை வரையறை செய்துள்ளார்; வரலாற்று ஆராய்ச்சியாளர்க்கு இது மிகவும் பயன் படுகிறது.

கல்வெட்டுக்களைப்பற்றிய உரைநடை நூல்களை டாக்டர் பர்னல், டாக்டர் பூலர் ஆகிய மேனாட்டு அறிஞர்கள் ஆங்கிலத்தில் எழுதியுள்ளனர் "சாசனத் தமிழ்க் கவி சரிதம்" எனும் நூலை மு. இராகவய்யங்கார் இயற்றியுள்ளார். தி. நா. சுப்பிரமணியம், "பண்டைத் தமிழ் எழுத்துக்கள்" என்ற நூலை, கல்வெட்டு ஆதாரங் களுடன் எழுதியிருக்கிறார்; தென்னிந்தியக் கோவிற் கல்வெட்டுக்கள் என்னும் நூலையும்பதிப்பித்திருக்கிறார். கனகசுந்தரம் புள்ளை. 20 கல்வெட்டுக்களைத் தொகுத் துள்ளார். மயிலை சீனி வேங்கடசாமி இயற்றியுள்ள

சாசனச் செய்யுள் மஞ்சரி இவ்வகையில் வெளிவந் துள்ள ஆராய்ச்சிகளுள் குறிப்பிடத்தக்கது. தென் ஞட்டுக் கல்வெட்டுக்கள் என்னும் நூலே, மு. சிவகுரு நாதன் இயற்றியிருக்கிறுர்.

கோபிநாதராவ், வெங்கையா, சுந்தரம் பிள்ளே, K. V. சுப்பிரமணிய ஐயர் என்பவர்கள் அரசியல் அலுவலர்களாக இருந்து கல்வெட்டாராய்ச்சி செய் துள்ளனர். ஏனேயோருள் கவிமணி சி. தேசிகவிநாயகம் பிள்ளே, தி வை. சதாசிவப் பண்டாரத்தார், கும்ப கோணம் ஏ எம். சடகோபராமானுசாச்சாரி, அண்ணு மலேப் பல்கலேக் கழகத்து ஆசிரியராக இருந்த எஸ். கே கோவிந்தசாமி, தஞ்சை கலியாண சுந்தரம் உயர்நிலேப்பள்ளி ஆசிரியராக இருந்த உலகநாதம் பிள்ளே, தமிழ்ப்பேரகராதி அலுவலகத்திலிருந்துவரும் இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரையினருமான சோமசுந்தர தேசிகர் ஆகியோர் குறிப்பிடத்தக்க வர்கள்.

குமரிமுனேக் கல்வெட்டுக்களேப் பதிப்பித்த பெருமை, கவிமணி தேசிகவிநரயகம்பிள்ளேக்கு உண்டு. கல்வெட்டுத் துறையில் ஈடுபட்டு உழைக்குமாறு இலேஞர் பலரை அவர் ஊக்கப்படுத்தியிருக்கிறுர்.

R. நாகசாமி பதிப்பித்துள்ள 'கல்வெட்டுக் கருத் தரங்கு' உரைகள் (1968-இல்) வெளிவந்திருக்கின்றன. இவ்வெளியீட்டில் ஆங்கிலத்திலும் தமிழிலும் அரிய கட்டுரைகள் அடங்கியுள்ளன.

கல்வெட்டு ஆராய்ச்சியாளர்க்குச் சோழர் வர லாற்று அறிவு இன்றியமையாதது. தி.வை. சதாசிவப் பண்டாரத்தார் பிற்காலச் சோழ சரித்திரம் 2 பகுதி களில் விரிவாக எழுதியுள்ளார். இது, பல ஆண்டு

முயற்சியால் உருவான நூல். ஒட்டக்கூத்தரின் உலாக்கள், செயங்கொண்டாரின் கலிங்கத்துப்பரணி முதலிய நூல்களையும் ஆராய்ந்து அவற்றிலுள்ள ஆதாரங்களை இந்நூலுக்குப் பயன்படுத்தியிருக்கிறார். பழந் தமிழர்கள் பல துறைகளில் சிறந்து விளங்கியிருந்த போதிலும், வரலாற்றை ஒழுங்காக எழுதி வைக்கும் பயிற்சி அவர்களிடமில்லை. இக்குறையைப் போக்கப் பண்டாரத்தாரின் நூல் நமக்கு உதவியாக இருக்கிறது. செந்தமிழ், தமிழ்ப் பொழில் ஆகிய இதழ்களில் கல் வெட்டு ஆராய்ச்சியில் தாம் கண்ட அரிய செய்திகளை இவர் வெளிப்படுத்தியிருக்கிறார். இந்த நூற்றாண்டில், கல் வெட்டுத் துறைக்கே வாழ்ந்து இறுதி நாள் வரை தொண்டாற்றிய பெரியார் என்று இவரைக் கூறலாம்.

பண்டாரத்தார்க்குப் பிறகு கல்வெட்டு ஆராய்ச்சியில் பேரார்வம் காட்டிவரும் சிறப்பு திருவையாறு சுந்தரேச வாண்டையார்க்கு உரியது, சென்னை. தொல் பொருள் கழகத்தார் நடத்தும் கூட்டங்களில் நிகழும் உரைகளின் குறிப்புகளும் பயனுள்ளவை.

கல்வெட்டு ஆராய்ச்சியில் நம்மவர்க்கு வழிகாட்டியவர் ஐரோப்பியரே. டாக்டர் ஹூல்ஷ் எனும் ஜெர்மன் அறிஞர் தஞ்சையிலும் மாவல்லபுரத்திலும் உள்ள கோயிற் கல்வெட்டுக்களை ஆராய்ந்தார். அவரது முயற்சியால் 1887-இல் கல்வெட்டு ஆராய்ச்சிப் பகுதியை இந்திய அரசியலார் தொடங்கினர். Epigraphica India எனும் சஞ்சிகையை ஓராண்டுக்கு 5, 6 முறை ஆங்கிலத்தில் இப்பகுதியினர் வெளியிட்டு வருகின்றனர். தமிழகத்தைப் பற்றிய அளவில் இது வரை வெளியான நூல்களாவன:—

South Indian Inscriptions 1 முதல் 8 வரை*

,, 12 ,, 13 ,,

திருவிதாங்கூர் அரசியலார் T. A. S.

புதுக்கோட்டை Inscriptions (Texts) of the Pudukkottai State with translation and notes.

மைசூர் Epigraphia Karnataka in Kolar Dt. Volume.

இதுவரை 10,000 தமிழ்க் கல்வெட்டுக்கள் அச்சிடப்பட்டுள. படி எடுத்து, அச்சாக வேண்டிய தமிழ்க் கல்வெட்டுக்கள் 30,000 இருக்கலாம். படி எடுக்காத தமிழ்க் கல்வெட்டுக்கள் பல ஆயிரம் உள்ளன. எனவே, இந்தத் துறையில் மிகப் பலர் ஈடுபடுவதற்குப் பெரு வாய்ப்பு இருக்கிறது. பல இடங்களில் கல்வெட்டுக்கள் இன்னும் ஆராயப்படவில்லை. அவற்றைப் பற்றிய குறிப்பு (Index) உடனே வெளிவர வேண்டும்.

முற்காலத்து உரைநடைச் செய்திகளையும் வழக்கிழந்த அருஞ் சொற்களையும் அறியக் கல்வெட்டுக்கள் துணையாக உள. கோயில்சுவர்களிலேயே இவை பெரும்பாலும் உள. எனவே, கோயில்கள் புதுப்பிக்கப்படும் போதும் தட்ப வெப்ப நிலைகளாலும் பழுதுறுதிருக்க அரசினர் ஆவன செய்ய வேண்டும்.

மிகத் தொன்மையான தமிழ்க் கல்வெட்டு, பிள்ளையார் பட்டியில் இருக்கிறது. இக் கல்வெட்டின்

*முதல் மூன்று தொகுதிகள் மட்டும் மொழிபெயர்ப்பு, விளக்கம், குறிப்பு ஆகியவற்றுடன் வெளிவந்திருக்கின்றன.

9 — Madras Kannada
10 — Telugu
11 — Bombay Kannada

Office of the Superintendent of Epigraphy, Govt Epigraphist Offiice, Ootacmund,

காலத்தை பற்றி, 1968-ல் சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கில் விரிவாக ஆராயப்பட்டது. பழைய வட்டெழுத்துக்களிலும் இப்பொழுது வழங்கும் எழுத்துக்களையொத்த பழைய எழுத்துக்களிலும் வரையப் பெற்ற தமிழ்க் கல்வெட்டுக்களும் செப்புப் பட்டயங்களும் கி. பி. 5-ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 16-ம் நூற்றாண்டு வரை தமிழ்நாட்டின் அரசியல், சமுதாயம், சமயநெறி பற்றிய தமிழ் உரையின் இயல்பினை விளக்குவனவாகும்.

தமிழ் எழுத்து முறையை அரசியல் அதிகாரத்தின் வாயிலாக மாற்ற முயற்சி நடைபெறும் இந்நாளில், நமது எழுத்துக்கள் இயல்பாக இயற்கையாக முன்னாளில் மாறி வந்திருப்பதை அறிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாதது. இதற்குக் கல்வெட்டாராய்ச்சி உதவியாக இருக்கும். காகா, கைகை என்று கல்வெட்டுக்களில் காணலாம். தமிழ் எழுத்தை ஒத்த வடமொழி எழுத்துக்கள் (கிரந்தம்) பல்லவர் காலத்தில் அமைந்ததையும் கல்வெட்டு வாயிலாகவே அறிகிறோம். T. A. S. Vol. 1 No. 16-இல் **கல்வெட்டில் எழுத்துக்கள்** என்ற தலைப்பில் கோபிநாதராவ் வரைந்துள்ள கட்டுரை தமிழன்பர் படிக்க வேண்டுவதொன்றாகும்,

எழுத்துக்களின் வடிவங்களைக் கொண்டே இன்ன காலத்தில் இன்ன கல்வெட்டுத் தோன்றியது என்று வரையறுக்க இயலும். வட்டெழுத்து, கோலெழுத்து கிரந்தலிபி முதலியவற்றில் கல்வெட்டு ஆராய்ச்சியாளர் பயிற்சி பெறுதல் வேண்டும். தமிழ் இலக்கியத்தில் ஈடுபாடும் ஏனைய திராவிட மொழிகளிலும் ஓரளவு அறிவும் அவர்களுக்கு இன்றியமையாதன. மேலும்,

தமிழக வரலாற்று அறிவும் பரந்துபட்ட பொது அறிவும் அவர்கள் பெற்றிருக்க வேண்டும். நாடோடிப் பேச்சு வழக்குகளையும் ஆராய்ச்சியாளர் அறிந்திருக்க வேண்டும். பற்று நீங்கி உண்மையைக் காண வேண்டுமென்ற ஆசையும் சுரக்க வேண்டும். இவ்வளவு தகுதிகளும் ஒருங்கே பெற்றவரே கல்வெட்டு ஆராய்ச்சியாளராகலாம் என்கிறார் கவிமணி.

இனியாவது, அரசினர் இத்தகுதிகளைப் பெற்றுச் சிறப்பாகத் தமிழ்த்துறையறிவுள்ளவர்களைக் கல்வெட்டு ஆராய்ச்சியாளராக நியமிக்க முன்வர வேண்டும். South Indian Epigraphy என்ற ஆண்டு அறிக்கை 1947-க்குப் பின் வெளிவரவில்லை. இந்தியா முழுமைக்கும் 300 பக்க அளவில் ஓர் அறிக்கை வெளியிடப்படுகிறது; இதில் 5, 6 பக்கந்தான் தென்னாட்டுச் செய்திகள் உள. இந்த முறையிலும் மாறுதல் செய்து தமிழ்க் கல்வெட்டுக்களுக்குச் சிறப்பான இடம் கொடுக்க வேண்டுவது அரசினரின் கடமையாகும்.

# 3. ஐரோப்பியர் காலத்தில் உரைநடை

நெடுங்காலமாகவே, ஒரு வகையான உரைநடை தமிழ் மொழியில் ஓரளவு இருந்துவந்தது என்பதையும், அது படித்தவர்களுக்காகவே எழுதப் பெற்றது என்பதையும் முந்திய பகுதிகளில் குறிப்பிட்டோம். இருபதாம் நூற்றுண்டில், தமிழ் உரைநடை வேறுபட்ட வகைகளில் பெருவளர்ச்சி அடைந்திருப்பதை அடுத்த பகுதியில் ஆராய்வோம். இவ் வளர்ச்சிக்கு அடிகோலிய ஐரோப்பியர்கள் தமிழகத்துக்கு வந்ததையும் அதனுல், இலக்கியத் துறையில் ஏற்பட்ட மாறுதல்களேயும் இப் பகுதியில் குறிப்பிடுவோம்.

17 ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் ஜிகென்பாக் (Ziegenbag) 1663-1719 என்னும் டேனிஷ்காரர் ஒருவர் தமிழகத்திற்கு வந்தார். அவரே, தமிழ் எழுத்துக்களே -அச்சுக் கருவிக்கு ஏற்ற முறையில் அமைப்பதற்காக- மரத்தில் தோண்டினுர். அவர் 1716-இல் வெளியிட்ட ஒரு நூலில் தமிழ், இலத்தின் ஆகிய இரு மொழிகளிலும் பல சொற்கள் ஒன்ருக இருப்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிருர். இருமொழிகளின் இலக்கண வழக்குகளேயும் இந்நூலில் ஆராய்ந்திருக்கிருர். இந்நூலின் பெயர் "தமிழ் இலத்தின் ஒப்பிலக்கண ஆய்வு ("Comparative Study of Tamil and Latin Grammar) என்பதாகும். யாழ்ப்பாணக் கல்லூரி நூல் நிலேயத்தில் இதனே யான் பார்த்திருக்கிறேன். இதற்கு முன்னரே 1679-இல் இயற்றப்பெற்றது Fr. Atem De Proenca தொகுத்த தமிழ்-போர்த்துகீசு அகராதி. இந்நூல் இப்போது கிடைக்கவில்லே,

பிற மொழிகளிலிருந்து அறிந்தவற்றைத் தமிழில் எழுதும் முயற்சி தொடங்கியபோதே, உரைநடையை மிகுதியாகக் கையாளும் முறை பரவிற்று. இந்த நோக்குடன் பார்த்தால், தமிழ் உரைநடை 18ஆம் நூற்றாண்டில்தான் வளரத் தொடங்கியது என்பது தெரியவரும். ஏனைய இந்திய மொழிகள் பலவற்றில் இதற்குப் பிறகே உரைநடை தோன்றியதென்பதை, "பிற மொழிகளில் உரைநடை" என்னும் பகுதியில் விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறோம்.

ஐரோப்பியர் வருவதற்கு முன்னர்த் தமிழ்மொழியில் தனி உரைநடை நூல்கள் இல்லையென்பது இதுவரை கூறியதிலிருந்து புலனாகும். 17ஆம் நூற்றாண்டில் இத்தாலியிலிருந்து மதுரைக்கு வந்த தத்துவப் போதக சுவாமிகள் (Robert de Nobili) என்ற கத்தோலிக்கப் பெரியார் தனி உரைநடை நூல்கள் எழுத வழிகாட்டினார். முழுவதும் உரைநடையாலாகிய நூல் ஒன்றை இயற்றிய முதல்வர் இவரே. இவர் யாத்த நூல்கள், "ஏசுநாதர் சரித்திரம்," "தத்துவக் கண்ணாடி" முதலியன. இந்நூல்களில், ஆசிரியர் வடசொற்களை மிகுதியாகப் பயன்படுத்தியுள்ளார்.

**ஆனந்தரங்கம் பிள்ளை**

இந்தக் காலத்தில்தான், பிரெஞ்சிந்தியாவில் செல்வாக்குடன் விளங்கியவரும், ஐரோப்பியருடன் தொடர்பு கொண்டவருமான ஆனந்தரங்கம் பிள்ளை என்பவர் நிகழ்ச்சிகளையும் கருத்துக்களையும் தெரிவிக்கும் குறிப்பு ஒன்றை நாள்தோறும் எழுதினார். இக்குறிப்பு, தென்னாட்டு வரலாற்றின் இருளடைந்த பகுதி ஒன்றைப்பற்றி அரிய செய்திகள் பலவற்றைத் தருகிறது. இது, செந்தமிழ் நடையில் எழுதப்படவில்லை. எழுத்

துப் பிழைகள் மலிந்துகிடக்கின்றன. "அநேக படியாத குமாஸ்த்தாக்களைக் கொண்டு எழுதுவித்தது" எனினும், இதன் நடையில் வன்மையும் ஓட்டமும் இருக்கின்றன. 200 ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டில் கையாளப் பெற்ற தமிழ் நடையை இதிலிருந்து அறியலாம்.

> பிரத்தியேகமான ஆனந்தரங்கம் பிள்ளை தினப்படி சேதி குறிப்பு 1746 ஷு அக்டோபர் மீ 24 உ அக்ஷய ஷு அற்பசி மீ 11உ சோம வாரம்.
>
> இற்றைநாள் காலத்தாலே துரையவர்கள் சத்து முசாப்பா யிருந்தபடியினாலே படுத்துக்கொண் டிருக்கச்சே போட்டுக் கொள்ளுகிற நெடுங்கால் சட்டை இரொப்பதேர சாம்புறு குல்லாவுடனே பல்லக்கின் பேரிலே ஏறிக்கொண்டு செட்டித்தெரு விற்கு நேராயிருக்கிற கடற்கரை சின்னவாசல் படியிலே போயிறங்கி அதற்கு நேராயிருந்து கப்பலுக்குச் சலங்குகள் சீக்கிரம் துக்குத் துள்ளி வித்து அங்கே யிருந்து துவானுக்குப் போய் விசாரித்துப் போட்டுச் சென்னப்பட்டிணத்திலிருந்து காத்துக்கு அடிபட்டு கம்பங்கள் பாய்மரங்கள் தெறிச்சு மறுபடி ஆனைப்போல ஒரு சின்னக் கம்பம் வைத்துக்கொண்ட கப்பல் கம்பத்துக்காணுதென்று வருகிற பூறபோம் என்கிற கப்பலைக்கண்டு அதற்கு அனுப்ப வேண்டியதும் துறைக்கு நேராக வரும் போது அதற்குச் சலங்கும் மத்ததுகளும் அனுப்பச் சொல்லிப் போட்டு வீட்டுக்கு வந்தார்.

**சிவப்பிரகாச சுவாமிகள்**

கி. பி. 17-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த இவ் வாசிரியர் 'தருக்க பரிபாஷை' என்ற உரைநடை நூலை இயற்றியுள்ளார். இவ்வுரைநடை நூல் தருக்க சாத் திரங் கற்கும் மாணக்கர்களுக்குரிய முறையில் எழுதப் பெற்றுள்ளது.

## வீரமாமுனிவர் 1680-1746

இத்தாலி நாட்டினரான பெஸ்கி என்னும் வீரமாமுனிவர் 18ஆம் நூற்றாண்டில் நம் நாட்டிற்கு வந்தார். இவர் தமிழில் உரைநடை நூல்கள் சிலவற்றை எழுதியுள்ளார். பனையோலை எழுத்துக்களுக்குச் சுழி வைத்து முற்றுப்புள்ளி, நிறுத்துப்புள்ளி போன்ற குறியீடுகளை ஏற்படுத்தியவர் இவரேயாவார். ஒரு நூற்றாண்டுக்கு முன்வரை 'எ' என்னும் எழுத்து நெடிலையும், குறிலைக் குறிப்பதற்கு அந்த எழுத்தின்மீது ஒரு புள்ளி வைப்பதும் வழக்கமாக இருந்தது. எ, ஏ, ஒ, ஓ, எழுத்துக்களுக்கு இப்போதுள்ள அடையாளத்தை உண்டாக்கியவர் வீரமா முனிவரே. இவர் காலத்திற்கு முன் 'அ'வுக்கு மேல் ஒரு புள்ளி வைப்பது வழக்கமாக இருந்தது. புள்ளி வைக்காமல் எழுதுவது நெடில் (ஆ) எழுத்தை குறிப்பிடுவதாக இருந்தது. 'அ'வில் கீழே வளையம் போட்டு இன்றைய 'ஆ'வை உண்டாக்கினார். திவாகரம் என்னும் (லெச்சிகன்) நூலை முதன் முதலில் ஆக்கியவர் இவரே. தொன்னூல் என்னும் இலக்கணத்தையும் இவர் எழுதியுள்ளார்.

தெளிவான நடையில் வழக்கிலுள்ள அழகான சொற்களைப் பயன்படுத்திப் புதிய கருத்துக்களை இவர் உணர்ச்சியோடு எழுதியிருக்கிறார். இக்காரணத்தால் "வேதியர் ஒழுக்கம்" போன்ற இவரது நூல்களை மக்கள் விரும்பிப் படித்தனர். இவருடைய "பரமார்த்த குரு" என்ற கதையைத் தமிழில் தோன்றிய முதல் ஏளன **இலக்கியம்** (Satire) என்று கூறுவர் அறிஞர். *சதுரகராதி, தமிழ், இலத்தீன், தமிழ்-பிரெஞ்சு, போர்ச்-லத்தீன்-தமிழ் அகராதிகளை எழுதியுள்ளார்.

*1. பெயர் 2. பொருள் 3. தொகை 4. தொடை

இவர் திருக்குறளை லத்தின் மொழியில் மொழிபெயர்த்துள்ளார். இது இன்னும் அச்சிடப் பெறவில்லை. வீரமாமுனிவர் பற்றிய வரலாற்று நூல் ஒன்றைத் "தமிழ்த் தொண்டர்" என்னும் தலைப்பில் தேம்பாவணி ஆராய்ச்சியாளர் ஜே. ஜி. சுந்தரம் எழுதியிருக்கிறார். இந்த இனிய நூலினைத் தூத்துக்குடித் தமிழ் இலக்கியக் கழகத்தார் வெளியிட்டுள்ளனர். இனி, வீரமா முனிவரின் நடைக்கு ஒரு சான்று தருவோம்.

> பரமார்த்த குருவும், ஐந்து சிஷ்யர்களும் மடத்துக்குச் சென்ற பின்பு. ஆற்றிலே தாங்கள் பட்ட அவதியைப் பலகாலும் சொல்லிச் சொல்லி விசனப்பட்டார்கள். அப்பொழுது மடத்தைப் பெருக்கிக் கொண்டிருந்த ஒரு கண் குருட்டுக் கிழவி நடந்தவைகளையெல்லாம் விவரமாய்க் கேட்டுக் கைகொட்டி நகைத்து ......... "தன்னையாகிலும் வேறொருவனையாகிலும் தப்பவிட்டெண்ணினுற் கணக்குந் தப்புத் தான்......" என்றாள்.

பங்களூரிலுள்ள யுனைட்டட் தியலாஜிகல் கல்லூரியில் பெஸ்கியின் 'கொடுந்தமிழ்' என்னும் லத்தின் நூலின் கையெழுத்துப் பிரதியில் சிதைந்து போன சில பகுதிகள் செல்லரித்த நிலையில் 1959இல் கிடைத்தன.

## ஜெர்மன் பாதிரிமார்

ஜெர்மன் லூதரன் மிசனைச் சேர்ந்த பாதிரிமார் இருவர் சிறையில் இருந்த போது தமிழ்-ஆங்கில அகராதி ஒன்றை எழுதி 1779-இல் அதை வெளியிட்டனர். இதுவே Fabricus's Tamil Dictionary.

## சிவஞான முனிவர்

தமிழில் தருக்க நூல் ஒன்றை முதலில் (மொழி பெயர்த்து) இயற்றிய சிவஞான முனிவர், வீரமா

முனிவர் காலத்தை யொட்டியே வாழ்ந்தவர். இவர் சைவ சித்தாந்த நூலான சிவஞான போதத்திற்குப் பேருரை வகுத்தவர்; நன்னூல் உரைகாரர். தொல்காப்பியப் பாயிரவிருத்தி, இலக்கண விளக்கச் சூறுவளி போன்ற இலக்கண ஆராய்ச்சி நூல்களையும், "சித்தாந்த மரபு கண்டன கண்டனம்" என்ற நூலையும் இவர் எழுதியுள்ளார்.

இவருடைய நடை எந்தப் பொருளையும் தெளிவாகச் சிந்திக்கவும், கண்டனம் எழுதவும், மொழிபெயர்க்கவும் பொருந்துவது. உரையாசிரியர்களுடைய நடையை நன்றாக மனத்திற்கொண்ட சிவஞான முனிவர், தெளிவாக விளங்கக்கூடியமுறையில் உயர்ந்த பொருள் பற்றித் தூய தமிழ் நடையில் விரிவாக ஆராய்ந்தெழுதும் உரைநடையினைத் தோற்றுவித்துப் பரப்பியவராவர்.

இவர் இயற்றிய உரைச் செய்யுள்கள் என்ற நூலில் தனிச் செய்யுளுரை என்னும் பகுதியில் காணப்படும் பின்வரும் வரிகளை அவருடைய நடைக்குச் சான்றாகக் காட்டலாம்:

> சங்கமரீஇய சான்றோர், அவரொடு ஒருதன்மையராகிய சான்றோர் செய்த இலக்கணத்தின் வழாத செய்யுட்களின் பொருள் நுட்பங்களை எம்மனோர் பால் கேட்பின் அமையும்; வாழையிலே தாழையிலே என்றற் றொடக்கத்து இழிவழக்குகளும், எந்தனங்கள் என்றற் றொடக்கத்து சந்தி வழுவும்...இன்னோரன்ன செய்யுட்கள் இவ்வாறு செய்யுட் செய்ய வல்லாரைக் கேட்க அமையுமல்லது எம்மனோரையும் அவரொடு ஒருவராக்கி இவற்றையும் ஒன்றாகக் கருதிக் கேட்டல் அமையாதென அறிக.

**பேரூர் சாந்தலிங்க அடிகளார்**

இவர் கொலை மறுத்தல் உரை, வைராக்கிய தீபம் என்ற நூல்களை இயற்றியவர்; விளக்கமான உரைநடை எழுதியவருள் ஒருவர்.

**பாதிரிமார்**

புதிய மொழியைக் கற்கும்போது, அந்த மொழியின் இலக்கணத்தை அறிய வேண்டியது இன்றியமையாததாகிறது தம் மொழியிலுள்ள சொற்களுக்கு, அந்த மொழியில் ஏற்ற சொற்கள் எவையெவை என்பதையும் அறிய வேண்டும். எனவே, தமிழ் கற்க முன்வந்த ஐரோப்பியப் பாதிரிகள் இலக்கண நூல்களையும் அகராதிகளையுமே இயற்றுவாராயினர்.

19-ம் நூற்றாண்டில் ஆங்கில ஆட்சி இந்தியாவில் வேரூன்றிற்று. அதன் பயனாக அமைதி நிலவியது; மக்களுக்குக் கல்வியில் ஆர்வம் ஏற்பட்டது. இந்த ஆர்வம், தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு உதவி செய்தது. அச்சகங்கள் தோன்றின. ஏட்டுப் பிரதிகள் அச்சு நூல்களாக வெளிவந்தன. தங்கள் மதத்தைப் புகழ்ந்தும், அயலார் மதத்தைப் பழித்தும் வெளியீடுகள் வெளிவரலாயின. தம் மதத்தைத் தமிழ் மக்களிடையே பரப்ப முன்வந்த மேனாட்டுப் பாதிரிமாருக்குத் தம் குறிக்கோளை நிறைவேற்றத் தமிழ் மொழியைக் கற்பது இன்றியமையாததாயிற்று. ஆகையால், அவர்கள் தமிழைக் கற்க முன் வந்தனர்; தமிழில் பேசவும் சொற்பொழிவாற்றவும் முயன்றனர். இவ்வாறு சமயப் பிரசாரத்தின் பொருட்டாகத் தமிழ் மொழியைக் கற்ற சிலர், மொழியாராய்ச்சியிலும் ஈடுபட்டனர்; உரைநடை நூல்களை இயற்றும் பணியில் தலைப்பட்டனர். வீரமா முனிவர்

நெடுங்கணக்கு முறையாகச் சொற்களின் பொருளை விளக்கும் அரிய தமிழ் அகராதியை முதலில் இயற்றினர்; வேறு சிலர், பிற மொழியினின்றும் சில நூல் நூல்களைத் தமிழில் ஆக்கினர்; இன்னும் சிலர், பல கலைகளுக்கு உரிய பனுவல்களைத் தமிழில் எழுத முற்பட்டனர். இத்தகைய மேனாட்டுப் பாதிரிமார்களில் தலைசிறந்தவர்கள் (முன் சொல்லப்பெற்ற) வீரமாமுனிவர், தமிழ்-ஆங்கில அகராதியை இயற்றிய டாக்டர் J. P. ராட்லர், வின்ஸ்லோ,* திருவாசகத்தையும் நாலடியாரையும் திருக்குறளையும் மணிமேகலையை (உரைநடையில்) யும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த போப்பையர் (G. U. Pope 1820-1908), திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் இயற்றிய கால்டுவெல் ஐயர், தமிழ்ப் பழமொழிகளைத்தொகுத்து ஓர் அகராதியாக வெளியிட்டவரும் தமிழ் இலக்கணத்தைப் பற்றி ஆங்கிலத்தில் அரியதொரு நூல் எழுதியவருமான லாஸரஸ், "திட்டாந்த சங்கிரகம்" என்ற தலைப்பில் பழமொழிகளைத் திரட்டி ஒரு நூலாக்கிய பெர்சிவல் என்போராவர்.

## கால்டுவெல் 1814—1891

மொழி உலகில் திராவிட மொழிகள் ஒரு தனிக் குடும்பம் என்பதைத் தமது அரிய ஆராய்ச்சியில் உலகம் ஒப்புக்கொள்ளச் செய்த பெரியார் இவரே. தமிழ் நாட்டில் புதைபொருள் ஆராய்ச்சியின் இன்றி

*வின்சுலோ இயற்றிய அகராதியின் தனிச் சிறப்பு வடசொற்களையும் தமிழ்ச் சொற்களையும் தனித்தனியே கொடுத்திருப்பதாகும். இது 1862-இல் வெளியாயிற்று. புதிய குறிப்புக்களுடன் திருத்தி வெளியிட வேண்டுமென்ற முயற்சியே தமிழ்ப் பேரகராதியாகப் பிற்காலத்தில் உருப்பெற்றது. 1907-இல் போப்பையர் இறந்த பிறகு, அவர் சேர்த்திருந்த குறிப்புக்களும் சென்னைக்குக் கொண்டுவரப் பெற்றன. இவையும் தமிழ்ப் பேரகராதி தொகுப்பு வேலைக்குப் பெரிதும் பயன்பட்டன.

யமையாமையை முதல் முதல் வெளிப்படுத்தியவரும் இவரே. கையில் கருவிகளை எடுத்துக்கொண்டு போய்க் கொற்கைப் பகுதியை அகழ்ந்து உண்மைகளைத் தாமே ஆராய்ந்தவர் இவரே.

தமிழ் இலக்கியப் பகுதிகளில் சிறந்தன பலவற்றை ஆங்கில மொழியில் ஆக்கி உலகம் போற்றச் செய்தவரும் இவரே.

கால்டுவெல் தமிழ் மொழியின் அமைப்பை, இயல்பை, நல்ல கூறுகளை ஆராய்ந்தவர்; அவருடைய ஒப்பிலக்கணம் முதல் முயற்சி; ஒரு பல்கலைக்கழகம் செய்ய வேண்டிய வேலையைத் தனியொருவராகச் செய்து, தமிழ் மொழி தனித்து விளங்கும் ஆற்றல் வாய்ந்த மொழி என்ற உண்மையைக் காய்தல் உவத்தல் இன்றி வெளியிட்டார். அவரின்றேல் மொழிப் பெருமை பேசி நாம் இன்று தலை தூக்கி நிற்க இயலாமற் போயிருக்கும்.

இந்தியாவுக்குச் சமயத் தொண்டாற்ற வந்த கால்டுவெல்லின் புகழ் இன்று நிலைத்திருப்பது அவருடைய மொழிப் பணியால்தான் என்பது குறிப்பிடத் தகுந்தது.

**தேச வழமை**

இது, ஒல்லாந்தர் ஆட்சியில் யாழ்ப்பாணத்து மக்களிடையே இருந்த வழக்கங்களை இக்காலத்தவர்க்கு அறிவிக்கும் அரிய சட்டநூல். இது 1862-இல் வெளியாயிற்று. அந்நாளில் யாழ்ப்பாணத்தார் பயன்படுத்திய தமிழின் போக்கை இதிலிருந்து நாம் அறியலாம்.

**தேச வழமை**

**முகவுரை**

இலங்கைத் தீவிலுள்ள யாழ்ப்பாண நாயன்
பட்டினத்தில் நடந்துவருகிறவழமைகள், இவைகள்

உலாந்தாக் கொம்பெனியார் காலத்துத் தேச வழமைகளுங் கட்டளைகளுமெனப்படும். இந்தத் தேசத்தாருடைய ஜென்மச் சுபாவமான வழமைகளின்படி நியாயத்தலங்களில் நீதி செலுத்தப் பட்டும் வருகின்றது. அவ்வழமைகளாவன, முதுசொம், மஞ்சனீர், நன்கொடை, கொள்வனவு, விற்பனவு, காணிகள் தோட்டங்கள் ஒற்றிவைத்தல், மீழுதல், அறுதிவிற்றல் முதலானவைகளாம்.

### க. அதிகாரம்

### சுதந்திரங்களும் ஆதன உரிமைகளும்

பிதாமாதாவின் முடுகின உறவுமுறையார் மனச்சந்தோஷத்தின் பேரால், கலியாணம்முடிக்கப் போகிற பெண்பிள்ளையிடமாக வந்து ஒரு கலியாணம் முடிக்கிறதற்கு சீதனமாக வென்கிலும், நன்கொடையாக வென்கிலும் தங்கள் ஆதனங்களிலே சிலவற்றைக் கொடுப்பார்கள். இந்தச் சீதன நன்கொடை இன்னார் கொடுத்ததென்று சீதன ஓலையிலே காண்பித்து, கொடுத்தவர்களும் அதிலே தங்கள் கையெழுத்துத் திட்டமாக வைக்கவேண்டியது. இப்படிக் கொடுப்பது மனப் பிரியத்தினாலல்லாயல் வலாத்சாரத்தினாலல்ல.

## ஆறுமுக நாவலர் 1822—76

பாதிரிமார் வேத நூல்களை மொழிபெயர்த்துப் பொது மக்களிடையே தம் மதத்தைப் பரப்ப முயன்ற போது, அதற்கு மாற்றாக மக்களிடையே இந்து சமய உணர்ச்சியைப் பரப்ப, இந்துக்கள் இராமாயணம், பாரதம் போன்ற நூல்களை உரைநடையில் எழுதலாயினர். யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர், அச்சகம் ஒன்றை நிறுவி அதன் வாயிலாகச் சைவ நூல்களை நன்கு பதிப்பித்தார். சமயச் சொற்பொழி

வுகள் ஆற்றியும் உரைநடை நூல்களை இயற்றியும் வளர்ச்சியின்றித் தளர்ச்சியுற்றுக் கிடந்த தமிழ் மொழிக்குப் புத்துயிரளித்தவரும் இவரே. குறிப்பாக, உரைநடைக்கு இவர் ஆற்றிய தொண்டு அளவிடற் கரிது. தாம் கற்ற பண்டை நூல்களிலிருந்து பல தொடர்களையும் செய்யுட்களையும் உரைநடையாக அமைத்து விடுதலே, "உயரிய" செந்தமிழ் நடையெனக் கொள்ளப்பெற்ற காலத்தில், ஆறுமுக நாவலர், விளங்கக்கூடிய எளிய தமிழில் எழுதத் தொடங்கினர். தெளிந்தபொருளும் வீர உணர்ச்சியும் உரைநடையில் உண்டாகும் பொருட்டுக் குறியீட்டிலக்கணத்தைத் தமிழ் உரைநடையில் முதன் முதல் பயன்படுத்திய வரும் இவரே. இவர் மொழிபெயர்த்து இயற்றிய விவிலிய நூலிலும் (Bible) இவர் தமிழ் இலக்கியங் களையே பயன்படுத்தியிருப்பது பாராட்டுக் குரியது.

இலக்கண வழு இல்லாத தூய எளிய நடையை முதன் முதல் கையாண்ட பெருமை நாவலருக்கு உரியது. "வைதாலும் வழுவின்றி வைவாரே" என்று இவரைப்பற்றி ஒருவர் புலம்பியதாகக் கூறுவர். இவருடைய உரைநடை நூல்கள் இன்றும் படித்து இன் புறத்தக்கனவாய் இருக்கின்றன. மேலைநாட்டுக் கல்வியின் பயனுக, ஆங்கில இலக்கிய நயங்களில் கவர்ச்சியுடையவராய், நாவலர் அதன் நயங்களைத் துய்த்து இன்புறத் தொடங்கினர். அதனுலேயே, தமிழிலும் நல்ல உரைநடை நூல்கள் எழுதவேண்டு மென்ற ஆர்வம் இவருக்கு ஏற்பட்டது. மெதாடிஸ்ட் காட்சிசம் (Methodist Catcheism) என்ற கிறித்தவ சமய நூலைப் பின்பற்றிச் **சைவ வினு—விடை** என்னும் நூலை நாவலர் இயற்றினர். இலக்கண நூல் ஒன்றையும் வினு-விடை வடிவத்தில் பலரும் எளிதில் படித்து உணர்வதற்கேற்ப

நாவலர் எழுதியுள்ளார். இவருடைய சைவ வினா-விடை, முதற் புத்தகத்திலிருந்து, ஒரு பகுதியைத் தருவோம். வட சொற்களும் (மணிப்பிரவாள நடை-யும்) நாவலர் எழுத்துக்களில் இருப்பது இதிலிருந்து தெரியவரும்.

## கடவுளியல்

1. *உலகத்திற்குக் கருத்தா யாவர்?*
   *சிவபெருமான்.*
2. *சிவபெருமான் எப்படிப்பட்டவர்?*
   *என்றும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர்.*
3. *சிவபெருமான் ஆன்மாக்களுக்குச் செய்யுந் தொழில்கள் எவை?*
   *படைத்தல். காத்தல், அழித்தல் என்னும் மூன்றும்*
4. *பாவங்களாவன யாவை?*
   *கொலை, களவு, கள்ளுக் குடித்தல், மாமிசம் புசித்தல், பொய் பேசுதல், வியபசாரம், சூதாடுதல் முதலானவைகள்.*

நாவலர் மிகக் கடுமையான நடையிலும் எழுதியுள்ளார். இவரது கடுந் தமிழுக்குச் சான்றாக ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடுவோம் ஒரு நாள் காலை 7-30 மணி அளவில் நாவலர் கடற்கரையில் நடந்துகொண்டிருந்தார். அப்போது ஒரு வீட்டில் தீப்பற்றிக் கொண்டது. அதைப் பற்றி நீதிமன்றத்தில் நாவலர் சாட்சி கூற நேர்ந்தது. "தீப்பற்றியபோது எத்தனை மணியிருக்கும்? தாங்கள் என்ன செய்துகொண்டிருந்தீர்கள்?" என்று நீதிபதி நாவலரைக் கேட்டார். நாவலர் ஆங்கிலத்தில் மறுமொழி கூறியதை ஐரோப்பிய நீதிபதி விரும்பவில்லை. எனவே, மொழிபெயர்ப்

பாளரைத் திணறவைக்கும் நோக்கோடு, கடுமை யான தமிழ் நடையில் நாவலர் பின்வருமாறு விடை பகர்ந்தாராம்.

"அஞ்ஞான்று எல்லிஎழ நானாழிப் போதின்வாய் ஆழி
காலேற்றுக் காலோட்டப் புக்குழி"* [வரம்பணித்தே

இதை மொழிபெயர்க்க இயலாமல், நீதி மன்றத்தி லுள்ள அலுவலர் தடுமாறினராம். பின்னொருமுறை, ஒரு கடையில், 'தேங்காய் விலை என்ன?' என்று கேட்ப தற்கு, "அம்மையே, நீவிர் தெங்கங்காய்களை மாறல் எங்ஙனமோ?" என்றாராம்.

நாவலருடைய நூல்களில் சில இடங்களில் தொடர்பு இல்லை; இப்போது வெளிவரும் தமிழ் இலக் கிய நூல்கள் சிலவற்றைப் படிப்பவர்க்கு அவருடைய நடையிலும் சிறப்பாக ஒன்றும் புலப்படுவது அருமை. ஆறுமுக நாவலரின் நடையை மணிப்பிரவாள நடை என்றே சொல்லலாம் என்பதும் சிலர் கருத்து. சான் றாக அவரது திருவிளையாடல் வசனம், பெரிய புராண வசனம் ஆகியவற்றையும், பின்வருவன போன்ற கடிதங்களையும் சிலர் சுட்டிக் காட்டுகின்றனர்.

அன்னதானம் முதலிய தானங்களைச் சற்பாத்தி ரத்திலே செய்வது புண்ணியம்; அசற் பாத்திரத் திலே செய்வது பாவம். சற்பாத்திரங்களுள்ளும் கரும யாகஞ் செய்வோர்க்குக் கொடுத்தது ஒரு பிறப்பளவு நிற்கும்; தபோயாகஞ் செய்வோர்க்குக்

---

*ஞான்று - நாளில். நானாழி-நான்கு நாழிகை. ஆழி-கடல். போது-காலம். வரம்பு - ஓரத்தினருக்கே. எல்லி - சூரியன். எழ - எழுவதற்கு. காலேற்று - காற்றை வாங்கிக்கொண்டு. காலோட்டப் புக்குழி-உலாவச் சென்றபோது.

இவ்வாறு தமிழ் பேசுபவர்களைப் பற்றி, வ. ரா. அவர்கள் எழுதியிருப் பதை இங்கே குறிப்பிடலாம். "அவர்கள் தமிழ் பேசுவதும் நான் இங்கிலீஷ் பேசுவதும் ஒன்றுதான். இரண்டும் தமிழ் பேசும் தமிழர்களுக்குப் புரியாது."

*கொடுத்தது நூறு பிறப்பளவு நிற்கும்; செபயாகஞ் செய்வோர்க்குக் கொடுத்தது ஆயிரம் பிறப்பளவு நிற்கும்; தியான யாகஞ் செய்வோர்க்குக் கொடுத்தது கற்ப மளவும் நிற்கும்; ஞான யாகஞ் செய்வோர்க்குக் கொடுத்தது மகாசங்கார காலமளவும் நிற்கும். இதற்குப் பிரமாணம்-சிவதரு மோத்திரம், நான்காவது பலவிசிட்ட காரணவியல்.*

(ரௌத்திரி ௵ வைகாசி ௴ 21௳ நாவலர் எழுதிய முதல் விக்கியாபனத்தில் ஒரு பகுதி)

கவர்னர், கம்மிஷனர், கவர்ன்மெண்டு ஏசண்டு, சுப்பிரிங் கோட்டு யூரிமார், டிஸ்திறிக் கோட்டுப் பிறக்கருசி, கிறிமினல் வழக்கு முதலிய சொற்றொடர்களை நாவலர் பயன்படுத்தியுள்ளார். இவற்றை இக்காலத்தில் பயன்படுத்த வேண்டுமென்று சொல்வது பெருந் தவறென்று அறிஞர் பலர் கருதுகின்றனர். இந்தக் கருத்துக்களில் ஓரளவு உண்மையிருக்கிறது. ஆனால், இலக்கிய நலன் ஆய்பவர்கள் உரிய ஆசிரியர் வாழ்ந்த சூழ்நிலை, காலம், அக்காலத்தில் இலக்கியம் இருந்த நிலை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே அவர்களுடைய நூல்களை ஆராய முற்பட வேண்டும். அந்த அளவில் பார்க்கும் போது, நாவலர் தமிழ்மொழிக்கு ஆக்கந் தந்திருக்கிறார் என்பதைத் தடையின்றி ஒப்புக் கொள்ளலாம். அவருடைய மொழிப்பணி பின்வரும் ஈரடிகளால் இனிது விளங்கும்.

*''நல்லை நகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேற்
சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே''*

**சி. வை. தாமோதரம் பிள்ளை**

சுருங்கச் சொன்னால், ஆங்கில மொழியில் **டிரைடன்** என்பவர் உரைநடைக்குத் தந்தையாக விளங்குவது போலவே, தமிழ் உரைநடையின் தந்தையாக ஆறுமுக

நாவலர் மிளிர்கின்ருர். இதையொட்டியே, "வசன நடை கை வந்த வல்லாளர்" என்று வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் இவரைச் சிறப்பித்திருக்கிருர். பாட்டுக்கொரு புலவன் பாரதியென்ருல், உரை நடைக்கு ஒரு புலவன் ஆறுமுக நாவலர் என்று சொல்லத் தோன்றுகிறது.

குழந்தைகளுக்கு, அவர்களுடைய வயது வாரியாகப் பாகுபாடு செய்து பால பாட நூல்களை எழுதிய முதல்வர் நாவலரே என்பதும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. சமயச் சொற்பொழிவுகளாலும், மொழி பெயர்ப்பு வேலைகளாலும் நாவலர் தமிழுக்குச் செய் திருக்கும் தொண்டைப் பற்றி உரிய பகுதிகளில் குறிப் பிட்டுள்ளோம்.

## இராமலிங்க அடிகள் 1823-1874

ஆறுமுக நாவலர் காலத்தவரான வடலூர் இராமலிங்க அடிகள் "திருவருட்பா"வால் புகழ் பெற் றவர். இவர் பெரிய புராணத்திலுள்ள மனுநீதிச் சோழன் வரலாற்றை "மனுமுறை கண்ட வாசகம்" என்னும் பெயருடன் எழுதியிருக்கிருர். இந்த நூல் யாவரும் படித்துப் பயனடையத்தக்க நிலையில் அமைந் திருப்பது; பொருட் செறிவும், சொல்லடுக்கும், பக்திச் சுவையும் நிறைந்தது. இராமலிங்க அடிகள் எழுதி யுள்ள "ஜீவகாருண்ய ஒழுக்கம்" என்ற கட்டுரை, படிப்பவர் உள்ளத்தை உருக்கும் வகையில் அமைந் திருக்கிறது. இந்நூலின் நடை (இப்போது மாறி விட்டதால்)இக்காலத்திற்கு ஏற்றதன்று. அக்காலத்தில் உரைநடை நூல்கள் மிகுதியாக இல்லாமையால், இந் நூல்கள் சிறப்பாகக் கொள்ளப்பட்டன. நாயன்மார் களுக்குப் பிறகு இவரைப் போலச் சைவ சமயப் பத்தி நெறிப் பாடல்கள் பாடியவர் ஒருவருமில்லை எனலாம்.

வள்ளலாருடைய கருத்துக்களையும் எழுத்துக்களையும் இராமலிங்கர் நிறுவனம் என்ற அமைப்பு பரப்பி வருவது பாராட்டுக்குரியது.

## மீனாட்சிசுந்தரம் பிள்ளை

ஆறுமுக நாவலர், இராமலிங்க அடிகள் ஆகியோரோடு சேர்ந்து 19ஆம் நூற்றாண்டில் தமிழ் அறிஞராகச் சிறந்து விளங்கிய மூன்றாவது தமிழ்ப் பெரியார் மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை ஆவார். டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரின் ஆசிரியர் என்ற அளவிலேயே இவர்களை இன்றைய தமிழ் மக்கள் அறிவர். "இவருடைய வீடு ஒரு கலைமகள் நிலையமாகத் திகழ்ந்தது. தம்பால் வரும் பல மாணாக்கர்களுக்கும் பாடஞ் சொல்லுவதும், தம்மைப் பார்க்கவந்த பிரபுக்களிடம் தமிழ் நூல்களிலுள்ள அருமையான செய்திகளைக் கூறி மகிழ்வித்தலும்...ஆகிய தமிழ்த் தெய்வ வழிபாடுகளே காலை முதல் இரவு நெடுநேரம் வரையில் இவருடைய வேலையாக இருந்தன." இவருடைய நூல்கள் அனைத்தும் கலம்பகம், தலபுராணம் முதலியவையே. சாமிநாத ஐயர் எழுதியிருக்கும் "மகா வித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் சரித்திரம்" சிறந்த முறையில் வெளியாகியிருக்கும் இவரது வரலாற்று நூலாகும்.

## சுப்பராயச் செட்டியார்

பிள்ளை அவர்களின் மற்றொரு மாணவர் திரிசிரபுரம் சோடச அவதானம் சுப்பராயச் செட்டியார் என்பவர். இவர்தான் முதலில் சிலப்பதிகாரத்தை வெளியிட்டவர். புகார்க் காண்டத்துக்கு மட்டும் இவர் மூல நூல் வெளியிட்டார்.

மணிமேகலையைத் திருமயிலை சண்முகம் பிள்ளை என்பவர் வெளியிட்டிருக்கிறார்.

**வீராசாமிச் செட்டியார்**

அஷ்டாவதானம் வீராசாமிச் செட்டியார் என்பவர் **விநோதரச மஞ்சரி** என்னும் அரிய உரைநடை நூலையும், "கர்ணபரம்பரைச் செய்திகளின் தொகுப்பு" ஒன்றையும் வெளியிட்டிருக்கிறார். இவரது நடை, ஆறுமுக நாவலர், இராமலிங்க அடிகள் ஆகியோருடைய நடைகளினின்றும் வேறுபட்டுத் தனிச்சுவை பயப்பதாகும். சான்றாகச் சில வரிகளைக் கீழே காண்க.

> காற்றுக் கெதிரே ஏற்றிய விளக்குப்போல, அடிக்கடி யலைந்து ஓயாமல் ஆடும் பம்பரம் போல, இடைவிடாது சுழன்று, ஒரு வேலையுமில்லா விட்டாலும் நிற்க நேரமில்லாமல் திரியும் நாய் போல அரைக் கணமுந் தங்காது, காடு மலை காறுகளெல்லாங் கடந்து, லோகா லோகமெங்கும் ஓடியுழல்கின்ற பொல்லாத மனமென்னுங் குரங்கு அஞ்ஞானமாகிய வெறிகொண்டு, ஆணவமாகிய மரத்தில் ஏறி, பலவகை எண்ணமாகிய இலைகள் செறிந்த ஆசையாகிய கிளைகளைத் தாவி, தீவினையாகிய கனிகளைக் கொள்ளை கொண்டு சேஷ்டை செய்யவொட்டாமல், அதனை நிராசையாகிய கயிற்றினாற் கட்டி விடய வாதனையில்லாமல் அடக்கி வைத்தாலும், தெய்வத்தை உணரும் ஞானமில்லாதவர்களுக்கும் மோக்ஷத்திற்கும் வெகுதூரமே.

**தாண்டவராய முதலியார்**

செய்யுள் நடையிலும் உரைநடையிலும் பஞ்சதந்திரக் கதைகள் பல வெளியாகியிருந்தும் தாண்டவராய முதலியார் என்பவரே எல்லோரும் பாராட்டுகின்ற முறையில் "பஞ்சதந்திர"த்தை எழுதியிருக்கிறார்.

"19-ஆம் நூற்றுண்டில் முற்றிலும் புதிய உரைநடை யொன்று தோன்றியிருக்கிறது. அதுதான் உலக வழக்கை அனுசரித்த அழகிய வசன நடையாகும். இந்நடைக்குக் கர்த்தா என்று சொல்லத் தக்கவர் தாண்டவராய முதலியார்." என்பது டாக்டர் கால்டுவெல் கருத்து. இனி, தாண்டவராய முதலியாருடைய நடைக்கு எடுத்துக்காட்டாக, அவருடைய பஞ்சதந்திரத்தில் இரண்டாவதான சுகிர்த லாபம் அல்லது நட்புப் பேறு என்ற பகுதியில் பின்வரும் வரிகளைத் தருவோம்.

> புத்திசாலிகளாயிருக்கிற சிநேகிதர்கள், திரவியமில்லாதிருந்தாலும் வேறே சாதனங்களில்லாவிட்டாலும், காகமும் எலியும் ஆமையும் மானும் நட்பினுல் ஒன்றையொன்று காப்பாற்றினுற்போல் ஒருவர்க்கொருவர் உதவுவார்கள் எனச் சோமசன்மா சொல்ல, இராஜகுமாரர்கள், "அஃதெப்படி?" என, அவ்ன் சொல்லத் தொடங்கினுன்.

இந்நூலில், பல பழமொழிகள் ஏற்ற இடங்களில் பயன்படுத்தப்பெற்றிருக்கின்றன. நீதி நூல்களிலிருந்தும் சில சொற்கள் ஆளப்பெற்றுள்ளன. சில இடங்களில் வழக்குச் சொற்களும் இடம் பெற்றுள்ளன. ஏனைய நூல்களுள் சபாபதி நாவலர் இயற்றிய "திராவிடப் பிரகாசை" என்னும் நூலும் உரைநடை வளர்ச்சிக்கு உறுதுணை செய்திருக்கிறது.

## வேதநாயகம் பிள்ளை 1824 - 89

"பிரதாப முதலியார் சரித்திரம்", "சுகுணசுந்தரி' ஆகிய நெடும் புனைகதைகளை இயற்றிப் புதியதொரு துறையில் தமிழ் நூல்கள் மல்கிப் பெருக வேதநாயகம் பிள்ளை அடிகோலினுர். மேனுடுகளில், நாவல் என்னும் புதுவகை இலக்கியத்தைத் தொடங்கிய சாமுவேல்

ரிச்சட்சன் என்பவரைப்போல, தமிழகத்தில் இவ்வகை இலக்கியத்திற்கு வழிகாட்டிய சிறப்பு வேதநாயகத்திற்கே உரியது. இதைப்பற்றி, இந்நூலின் பிறிதோரிடத்தில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளோம். பாடல், வசனம், கீர்த்தனங்களை எளிய, இனிய நடையில் ஆக்கி, பாரதிக்கு வழிகாட்டியவர் இவ் வேதநாயகம் பிள்ளையவர்கள் எனக் கூறுதல் பொருந்தும். இவருடைய உரைநடை நூல்களின் சிறப்பைப் பேராசிரியர் ரா. பி. சேதுப் பிள்ளை அவர்கள் பாராட்டியிருப்பதை மட்டும் இங்கே குறிப்பிடுவோம்.

> வேதநாயகர் வசன நூல்களும் சில இயற்றினர். அவற்றுள் தலைசிறந்தது பிரதாப முதலியார் சரித்திரம் என்னும் கற்பனைக் கதையாகும். அதுவே தமிழில் எழுந்த முதல் நவீனக் கதை (நாவல்) என்று சொல்லப்படுகிறது. பிரதாபன் கதை நகைச்சுவை நிரம்பியது; படிப்போர் மனத்தைப் பற்றி இழுத்துச் செல்லும் பண்புடையது: மூடப் பழக்கவழக்கங்களை ஒழிப்பது; நல்ல பழக்கங்கள் பரவ வழிகாட்டுவது. கதாநாயகனுன பிரதாபனது கள்ளங் கபடமற்ற உள்ளம் நம் கருத்தை அள்ளுகின்றது. அவன் தாயாகிய சுந்தரமும் மனையாளாகிய ஞானம்பாளும் மதிநலம் வாய்ந்த மங்கையர் குலத்திற்கு அணிகலன்களாக விளங்குகின்றுர்கள். சுருங்கச் சொல்லின், அந் நவீனம் கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் கதையாகும்.

பிரதாப முதலியார் சரித்திரம், தனித் தமிழ் நடையில் ஆக்கப்பட்டு, தெ. இ. சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தாராலும், ஆசிரியரின் நடையிலேயே தூத்துக்குடித் தமிழ் இலக்கியக் கழகத்தாராலும் வெளியிடப்பெற்றுள்ளன.

ஆறுமுக நாவலர், வீராசாமிச் செட்டியார், தாண்டவராய முதலியார். வேதநாயகம் பிள்ளை ஆகியோர் எழுதிய நூல்கள் இருபதாம் நூற்றுண்டில் எழுந்த உரைநடை நூல்களுக்கு அடிகோலினமையால் மேலே விரிவாகத் தெரிவித்தோம். இனி 19-ஆம் நூற்றுண்டின் பிற்பகுதிக்கு வருவோம்.

## சோமசுந்தர நாயகர் 1846 - 1901

வேதாந்த சிந்தாந்தப் போர்களாலும் தமிழ் உரைநடை வளம் பெற்றது. சோமசுந்தர நாயகர் சைவ சமயத்தைப்பற்றி இருபது நூல்கள் எழுதினுர். இந் நூல்களுக்கு எதிராக இரத்தினச் செட்டியார் முதலானோர் பல நூல்களை இயற்றினர். இந்த இரு சாராருடைய நூல்களையும் படித்து 'ஒப்பிட்டுப் பார்ப் பவர் விவாதத்தில் வல்லுனராகி விடலாம். இந் நூல் களில் பொருள் மிகுதி; மாறுபட்ட கருத்துக்களைப் பற்றிய கண்டனம் குறைவு. இத்தகைய சிறப்பான நூல்கள் இப்போது வெளிவருவதில்லை என்பதை அடுத்துவரும் பகுதிகளில் காண்போம். பொதுவாகக் கூறுமிடத்து, இருபதாம் நூற்றுண்டில் வெளிவரும் நூல்களில் 19-ஆம் நூற்றுண்டில் வெளியான நூல்களி லிருந்த பொருளாழம் இல்லை.

## சுந்தரம் பிள்ளை 1855 - 97

திருவனந்தபுரத்தில் தோன்றிய இப் பேராசிரியர் மனோன்மணீயம் என்னும் காவிய நாடக நூலால் தமிழ்த் தாய்க்கு மணிமுடி புனைந்தவர்; தத்துவஞானி; தமிழில் இரு நாடகங்கள், ஷேக்ஸ்பியரைப் பின்பற்றி இயற்றியுள்ளார். மலையாளம், வடமொழிச் சொற் களை விரவிவிட்டிருக்கிறுர். கவித்துவ ஈடுபாடு இவருக்கு உண்டு. இவர் நயமாகவும் நகைச்சுவையாகவும் எழுதுபவர். Travancore Early Sovereigns; Life of

Gnanasambander என்ற ஆராய்ச்சி நூல்களை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்.

இளங்கோ அடிகளுக்குப் பிறகு தமிழில் தனி நாடகநூல் ஒன்றை—மனோன்மணீயத்தை—இயற்றித் தந்த பெருமை இவரைச் சேரும்.

பத்துப் பாட்டு, ஞானசம்பந்தர் கால ஆராய்ச்சி போன்ற இவரது கட்டுரைகளும் தொகுப்புநூல்களாக வந்துள்ளன.

தமிழுக்குத் தெய்வத் தன்மை கற்பித்து, இறைவனைப் போன்று என்றும் இருக்கும் திறம் படைத்தது என்று கூறி மகிழ்வதிலிருந்து இவரது தமிழ்ப் பற்றுத் தெரிகிறது. தமிழ்த் தொண்டாற்றிய இவரது மகனாகிய நடராசப் பிள்ளையின் முயற்சியாலேயே கேரளப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை நலிவடையாது நடைபெற்று வருவதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

## தாமோதரம் பிள்ளை 1832 - 1901

சைவ மகத்துவம் என்னும் உரைநடை நூலை இயற்றிய தாமோதரம் பிள்ளை என்னும் இலங்கைப் புலவரையும் இங்கே குறிப்பிட வேண்டும். தமிழ் நாட்டில், இலக்கணப் பயிற்சி குன்றிவிடலாகாது என்று எண்ணி, தொல்காப்பியம், இறையனார் அகப் பொருளுரை, வீரசோழியம், இலக்கண விளக்கம் என்னும் நூல்களை இவர் பதிப்பித்திருக்கிறார். இவர் கலித்தொகைப் பதிப்புரையில், கூறுவதாவது:

> "ஏடு எடுக்கும்போது ஓரஞ் சொரிகிறது. கட்டு அவிழ்க்கும்போது இதழ் முரிகிறது. ஒற்றைபுரட்டும் போது துண்டு துண்டாய்ப் பறக்கிறது. இனி எழுத்துக்களோ வென்றால், வாலுந் தலையுமின்றி நாலு புறமும் பாணக்கலப்பை மறுத்து மறுத்து உழுது கிடக்கின்றது"

டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்களைப் போற்றியும் பாராட்டியும் வருபவர்கள், அவர்க்கு வழிகாட்டியாக விளங்கிய சி. வை. தாமோதரம் பிள்ளையின் பணிகளைக் குறிப்பிடாதிருப்பது, யாழ்ப்பாணத்தவர்க்கு —ஏன், தமிழ்ப் பற்றுள்ள அனைவருக்குமே—வருத்தம் தருவதாகும்.

தாமோதரம் பிள்ளை இருபதாம் நூற்றாண்டு தொடங்கிய நாளில் (1-1-1901) உலக வாழ்வை நீத்தார். எனவே, இவரைப்பற்றிய குறிப்புடன் இருபதாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தமிழ் உரைநடையைப் பற்றிய பகுதியை முடிப்போம்.

**முடிவுரை**

உரைநடை எழுதுவது அண்மைக் காலம் வரை எவ்வளவு அரிதாக இருந்ததென்பது பின்வரும் செய்தியிலிருந்து அறியப்படும், சொற்செறிவும் பொருட்செறிவும் ஓசை நயமும் உள்ள 6,000 விருத்தங்களாக விஷ்ணு புராணத்தைச் சென்ற நூற்றாண்டில் சுப்பராய ஐயர் என்பவர் தமிழில் மொழிபெயர்த்தார். எனினும், முன்னுரை எழுத அவர் மிகவும் துயரப்பட்டாராம். எட்டு நாட்கள் முயன்று, ஒருவாறாக, ஒன்றரைப் பக்க அளவில் தம் முன்னுரையை அவர் எழுதி முடித்தாராம்.

இங்ஙனம் பல நூற்றாண்டுகளாக வளர்பிறை போல் பல மாறுதல்களை அடைந்து, தமிழ் உரைநடை வளர்ந்து வந்திருக்கிறது. ஆயினும், அது மலிந்து பொலிவுற்று விளங்குவது இந்த நூற்றாண்டிலேயே என்று உறுதியாகக் கூறலாம். புதுப்புதுத் துறைகளில் தமிழ் உரை நடை இருபதாம் நூற்றாண்டில் எவ்வாறு மேலும் வளர்ச்சியடைந்ததென்பதை அடுத்துவரும் பகுதிகளில் காண்போம்.

## 4. செந்தமிழ் நடை

19-ம் நூற்றாண்டில் எழுந்த உரைநடை பெரும் பாலும் கல்வியறிவுடையவர்கள் படித்தறிதற் கென்று எழுதப்பெற்றதென்பதையும், அது இலக்கண வரம்புக் குட்பட்ட உயரிய நடை யென்பதையும், முன்னர்க் கூறினோம். 20 ஆம் நூற்றாண்டில் அத்தகைய நடை சிறிது சிறிதாகக் கைவிடப்பெற்றது; வேறுவகையான நடை உருவாயிற்று. இக்காலத்து உரைநடை, சிறி தளவு தமிழைக் கற்றோரும் படித்துப் பொருள் அறியக் கூடியதாகக் காலத்தின் போக்கிற்கிணங்க அமைந்துள் ளது. சிலர் பிறமொழி கலவாத (தனித்) தமிழ் நடை யொன்றை வளர்க்க முற்பட்டனர். வேறு சிலர், வட சொற்களை வேண்டாத அளவுக்குப் புகுத்தி மணிப் பிரவாள நடையை ஒத்த ஒரு புதிய நடையில் எழுத முற்பட்டனர். இன்னும் சிலர் வழக்கொழிந்த சொற் களைப் பயன்படுத்திப் பழைய உரையாசிரியர்கள் கையாண்ட உரைநடையைத் தழுவத் தொடங்கினர்.

எனவே, இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்நடை ஒரு வகையானதன்று; புலவர்கள் எழுதிய செந்தமிழ் நடை யெனவும், புலவர்களும் பிறரும் எழுதிய தூய தமிழ் நடை யெனவும், செய்தித்தாள் நடையெனவும், மிகக் குறைந்த கல்வியுடைய மக்களும் புரிந்து கொள்ளத் தக்க மறுமலர்ச்சி நடையெனவும் அதைப் பல்வகைப் படுத்தலாம். அவற்றுள் முற்பட்ட செந்தமிழ் நடை யைப்பற்றிச் சிலவிவரங்களை இப்பகுதியில் காண்போம்.

செந்தமிழில் உரைநடை எழுதியவர்களைப்பற்றிக் குறிப்பிடுமுன், இந் நூல்கள் வெளிவருவதற்குப்

பெரிதும் துணை செய்திருக்கிற தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரையும், இது போன்ற முயற்சியில் ஈடுபட்ட திரு. பவானந்தம் பிள்ளை அவர்களையும், கரந்தைத் தமிழ்ச் சங்க வாயிலாகப் பணியாற்றிய தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை அவர்களையும் சிறப்பாகப் பாராட்ட விரும்புகிறோம்.

இந்த நூற்றாண்டுத் தொடக்கத்தில் நிகழ்ந்த மற்றொரு சிறப்பான நிகழ்ச்சி, 14-9-1901-இல், பாண்டித் துரைத் தேவருடைய முயற்சியால் மதுரையில்மீண்டும் தமிழ்ச் சங்கம் நிறுவப்பெற்றதாகும்.

## சூரியநாராயண சாத்திரியார் 1870 - 1903

இவருடைய தமிழார்வம் எல்லையற்றது. இவர் உயரிய கடினமான நடையில் எழுதினார்; மேனாட்டு முறையை ஒட்டிய வரலாற்று ஆராய்ச்சியில் ஈடுபட்டார்; பரிதிமாற் கலைஞர் எனத் தம்பெயரை மாற்றிக் கொண்டார். இவருடைய நூல்களில் இருவகை நடைகள் உள்ளன. தமிழார்வம் ஏற்படுமுன் வடமொழி கலந்த நடையையும், அந்த உணர்ச்சி ஏற்பட்ட பின்னர் எழுதிய நூல்களில் தனித் தமிழ் நடையையும் இவர் கையாண்டிருக்கிறார். இலக்கியச் சுவை மிகுந்த நாடகங்களையும் இவர் எழுதியிருப்பதால், நாடகம் என்னும் பகுதியிலும் இவரைப்பற்றிக் கூறுவோம். இவருடைய நூல்களுள் தலைசிறந்தது "மதிவாணன்" என்பது. இதில் முதற் சொற்றொடர் வருமாறு:

> திருவளர்ந்தோங்கும் பரதகண்டத்துப் பாண்டிய நாட்டு மதுரை என்னும் மாநகரின் வைகையாற்று வடகரைக்கண் ஓர் நாட் காலைப் பொழுது

புலர்ந்தது சிறிது நேரம் சென்ற பின்னர்ச் செவ்விய மேனியன் சிவந்த நோக்கினன் பவள வாயினன் பரந்த மார்பினன் பதினாறுட்டைப் பிராயத்தான் ஓர் இளந்தோன்றல் போர்க்கோலம் பூண்டு புரவி மீதேறிக் காற்றிலும் கடுகி வாரா நின்றான்.

## ஆ. சிங்காரவேலு முதலியார்

எத்தனையோ இடையூறுகளுக்கும் ஏமாற்றத்துக்கும் இடையில்—பச்சையப்பன் கல்லூரிப் பணியோடு சேர்த்து—அபிதான சிந்தாமணி என்ற 1600 பக்க நூலை இவர் 1910-இல் வெளியிட்டார். வேதப்பொருள் விளக்கம், இதிகாச புராணக் கதைகள், சமய உண்மைகள், வரலாறுகள், நுண்கலைக் குறிப்புக்கள், வைத்தியம், சோதிடம், வானநூல், பறவை நூல்—இப்படி மனிதனுடைய அறிவு சென்றவிடமெல்லாம் பல செய்திகளைத் திரட்டித் தருகிறது இந்நூல். இதை வெளியிடும் முயற்சியில் அவர் பட்ட துயரங்களைப் பின்வருமாறு கூறியுள்ளார்:

"சற்றேறக் குறைய 1890-ஆம் வருஷங்களுக்கு முன் தொடங்கினேன்...நான் ஒருவனே பலர் கூடிச் செய்யவேண்டிய இதனை விளையாட்டாகத் தொடங்கினேன். பின்னர் இதனை முடிப்பது எவ்வாறு என்று கவலை மிக்கது. பன்னூல் ஆராயத் தொடங்கி, வேறு பொழுதுபோக்காகக் கொள்ளாது இதனிடை முயன்று வருந்தினேன். இதனை எழுதப் புகுங்கால் சிலர்வாயிலாகக் கேட்டதை அப்போதைக்கப்போது மறப்பெனும் கள்வன் அவற்றை வஞ்சியாது என் கைப் புத்தகத்தில் பதித்து, அவற்றைச் சின்னாள் பொறுத்து அகராதிமுறைப்படுத்தி, மீண்டும் பெயர்த்து எழுதினேன்...இந்நூல் ஒருவாறு முற்றுப் பெற்ற பின் இதனைச் சென்னையிலிருந்த பிரபுக்கள் சிலரிடம் காட்டினேன். அவர்கள் "இத்தகைய நூல்

தமிழிற்கு இன்றியமையாததே; அதனை வெளியிடுக!''என்றனரே யன்றி, அதனை அச்சிட்டு வெளிப்படுத்த ஒன்றும் கூறிற்றிலர்.''

இத்துணை இன்னலுக்கிடையே உருவான இந்நூல் இன்று கிடைக்கவில்லை. மீ. ப. சோமசுந்தரம் (சோமு) கூறியிருப்பதுபோல,

> அபிதான சிந்தாமணி என்ற இந்த அரிய நூலை ஆக்கித் தந்த ஆ. சிங்காரவேலு முதலியார் அவர்கள் வெறும் பாராட்டுக்கு உரிய புலவர் அல்லர். தன்னந்தனியாக நின்று அறிவுக்கு ஓர் ஆலயம் எழுப்பித் தந்த தமிழ்ச் சிற்பி அவர். கோயில் கட்டிய சிற்பிக்குக் கோயிலை எடுத்துக் கும்பிடவேண்டும் என்று தோன்றுகிறது. அப்படிச் செய்யாவிட்டாலும் மீண்டும் அச்சிட்டு வழங்கித் தமிழ் மக்கள் ஆதரித்தால் அதுவே அந்த ஆத்மாவுக்குச் செய்யும் அஞ்சலியாகும். அது மட்டுமில்லை. படிப்பவர்களின் அறிவுக்குமே மிகவும் பயன்தரக்கூடிய விருந்தும் மருந்துமாகும் அது.

## சோழவந்தான் அரசஞ் சண்முகனார் 1868—1915

இவர் வியக்கத்தக்க நுட்பமான ஆராய்ச்சியாளர்; தந்நிகரற்ற தமிழ்ப் புலவர்; "செந்தமிழ்", "விவேக பாநு", "ஞானசாகரம்", "தமிழகம்" முதலிய திங்கள் வெளியீடுகளில் கட்டுரைகளையும் திருக்குறள் ஆராய்ச்சிக் குறிப்புக்களையும் வெளியிட்டுள்ளவர். இவருடைய செய்யுள் நூல்கள் அச்சாகி உள்ளன. ஆனால், இவர் எழுதி வைத்துச் சென்ற ஏனைய உரைநடை நூல்கள் இதுவரை அச்சிடப்பெறவில்லை. தொல்காப்பியப் பாயிரவிருத்தி என்ற நூலை உரைநடையில் இயற்றியுள்ளார். இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சிவஞான முனிவர் இவர்கள் கண்ட உரைகளைக் காட்டிலும் சிறந்த முறையில் புத்துரை எழுதியிருக்கிறார். இது,

இலக்கணப் புலமை பெற விரும்புகின்றவர்கள் இன்றி யமையாது படித்தற்குரிய சிறந்த ஓர் ஆராய்ச்சி நூலாகும்.

## செல்வகேசவராய முதலியார் 1864 - 1921

இந்நூற்றுண்டின் தொடக்கத்தில், இலக்கியச் சுவையோடு உரைநடை நூல்கள் எழுதியவர்கள் **தி.** செல்வகேசவராய முதலியாரும், நாம் முன் குறிப் பிட்ட வி. கே. சூரியநாராயண சாத்திரியாரும் ஆவார்கள்.

உரைநடை வளர்ச்சிக்கு வழிகாட்டிய செல்வ கேசவராய முதலியார், உரைநடை நூல்கள் பெருக வேண்டுமென்பதையும் பல இடங்களில் வற்புறுத்தி யிருக்கிறூர். அவர், பல்வேறு பொருள்களைப் பாகுபாடு செய்து, இடையிடையே பழமொழிகளைச் சேர்த்துச் சுவையான பல நூல்களை அழகாகவும் தெளிவாகவும் எழுதியிருக்கிறூர். "தமிழ் வியாசங்கள்" என்னும் நூலிலிருந்து கீழ்க்காணும் பகுதி எடுக்கப்பெற்றிருக் கின்றது. அவருடைய நடையையும் கருத்தையும் இதிலிருந்து அறியலாம்.

> "வழுவின்மையை நடையின் செவ்விகளில் ஒன்ருக வைத்தார் பரிமேலழகர். வழு, சொல் வழு, பொருள் வழு என்பன...சந்தி வழு, முடிபு வழு என்னும் வழுக்களும் ஓம்பற்பாலனவே. வலி மிகுத லான இடத்தில் இயல்பாக விடுதலும், இயல்பா மிடத்தில் மிகுதியாக விடுதலும் ஆகிய வழுக்கள், கற்கறிக்குமாறு அட்ட அடிசில்போல் படிப்பவன் வாய்க்கும், அபசுவரம் கலந்த கீதம்போல் கேட் பவன் செவிக்கும் அருவருப்புத் தருவனவாகும். இவ் வழுக்களைத் தவிர்ப்பதற்கு எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் அறிவது அவசியம்."

## பா. வே. மாணிக்க நாயக்கர் 1871—1931

சேலம் மாவட்டத்துப் பாகற்பட்டி, வேங்கடசாமி நாயக்கர் மகனுன இவர் பொறியியல் கலைஞர்; அரசாங்க அலுவலில் இருந்தவர்; எனினும், இடையிடையே தமிழில் ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியும் சொற்பொழிவுகள் ஆற்றியும் வந்தவர். உலகிலுள்ள ஏனைய மொழிகளுக்கெல்லாம் அடிப்படையாக இலங்கக்கூடிய ஆற்றல் தமிழுக்குஉண்டு என்பதை அறிவியல் முறையில் தக்க ஆதாரங்களுடன் எடுத்து விளக்கி இவர் பெரும்புகழ் எய்திஞர். இவர் தொல்காப்பியம் திருக்குறள் இரண்டையும் எழுத்தெண்ணிக் கற்ருர். தமிழ் எழுத்துக்களின் ஒப்புயர்வற்ற ஒலியிலக்கணத்தைப் பற்றியும் முறைப்படி ஆராய முயன்ற பெரியார் இவரேயாவர்.

### மகிழ்நன்

நகைச்சுவையாகக் கட்டுரைகள் எழுதிப் புகழ் பெற்றவர் வேலூர் க. ப. சந்தோஷம் என்னும் மகிழ்நன் ஆவார். இவர் 1943-இல் காலமாஞர். இவருடைய நடைக்கு மேற்கோளாக, ''மகிழ்நன் ஆராய்ச்சிக் கட்டுரைகள்'' என்னும் நூலிலிருந்து ஒரு பகுதியைத் தருவோம்:—

அழுக்கெடுப்பது வண்ணுன் தொழில். இஃது இருவகைப்படும்: அழுக்குத் துணிகளை வீடு வீடாய்ச் சென்று சேர்ப்பது ஒன்று; துணியிலுள்ள அழுக்கை நீக்கித் தூய்மை செய்தல் மற்ருென்று.

ஒவ்வோர் இனத்திலும் வெண்மை நிறம் உடையது எதுவோ அது தலைமை பெற்று நிற்கும். யானைகளில் வெள்ளை யானை(ஐராவதம்) உயர்ந்தது; அறுகம் புல்லில் வெள்ளறுகு சிறந்தது; எருக்கில் வெள்ளெருக்கு உயர்ந்தது. இது பற்றியே தமிழ்

மக்களில் வெள்ளாளர் மேலோரானார் என்று வண்ணான் சொல்வது எத்துணைப் பொருத்தமோ யாம் அறியோம்.

முகம் வெளுப்பதும், சொல் வெளுப்பதும் வண்ணானுக்குரிய வெளுப்பல்ல...சீராய் வெளுக்கப் பட்ட ஆடை சென்றவிடமெல்லாம் சிறப்பைக் கொடுக்கும். செல்வத்தையும் வெல்லும்; கல்வி யையுங் கொல்லும்; கண்ணைப் பறிக்கும்; காதலைப் பெருக்கும்...மனிதனின் தன்மை அவன் ஆடையில் வெளிப்படும். (The apparel oft proclaims the man—Shakespeare)

## வ. உ. சி. 1872—1936

கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரம் பிள்ளை தமிழ்ப்பற்று மிகுந்தவர்; 'தொல்காப்பிய எழுத்ததிகாரம், பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, திருக்குறள் மணக்குடவர் உரை' முதலிய நூல் களைப் பதிப்பித்திருக்கிறார். தாமே சில நூல்களை எழுதி யுள்ளார். சில நூல்களை மொழி பெயர்த்துமிருக்கிறார். பின்வரும் பகுதி, "சாந்திக்கு மார்க்கம்" என்னும் நூலி லிருந்து எடுக்கப்பெற்றது.

எனது நீண்டகால அனுபவத்தில் தமிழ் நாட்டின் சீதோஷ்ண நிலைக்கும், தமிழ் நாட்டினரின் சரீர இயற்கைக்கும் பொருத்தமான வைத்தியம் தமிழ்ச் சித்த வைத்தியமே என்று யான் கண்டுள் ளேன். தமிழ்ச் சித்தர்கள், தமிழ்நாட்டிலே பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, தமிழ் நாட்டினுடைய நிலைமை யையும தமிழ் மக்களுடைய பழக்க வழக்க ஒழுக்கங் களையும் நேரில்அறிந்து வைத்தியம் செய்து,வைத்திய நூல்கள் எழுதி வைத்தவர்கள்...இன்னமும் தமிழ் வைத்திய நூல்களெல்லாம் பாக்களாகவே இருக் கின்றன. அவற்றை வசன நடையில் எழுதி வெளிப்

படுத்துவதற்கு...அரசாங்கத்தார் ஏற்பாடு செய்ய வேண்டும்.

## உ. வே. சாமிநாத ஐயர் 1855—1942

"என்றும் வற்ருச் செந்தமிழ்" எனத்தகும் மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர், சங்க இலக்கியங்களின் உரைகளைப் பதிப்பித்துப் புகழ் பெற்றவர்.

> "குடந்தைநகர்க் கலைஞர் கோவே
> பொதியமலைப் பிறந்தமொழி வாழ்வறியும்
> காலமெலாம் புலவோர் வாயில்
> துதியறிவாய், அவர் நெஞ்சின் வாழ்த்தறிவாய்,
> இறப்பின்றித் துலங்குவாயே"

என்னும் பாரதி பாட்டு மகாமகோபாத்யாய சாமிநாத ஐயரின் தமிழ்த்தொண்டுக்குத் தக்கதொரு சான்ருக விளங்குகிறது. சிலப்பதிகாரம், மணிமேகலை முதலியன முன்னரே வெளியாகியிருந்தாலும் உரையோடு அவற்றைத் திருத்தமாகப் பதிப்பித்த சிறப்பு ஐயரவர்களுக்கே உரியது. அவர் பதிப்பித்த எல்லா நூல்களிலும் முன்னும் பின்னும் ஆராய்ச்சிக் குறிப்புக்களும் நூலாசிரியர், உரையாசிரியர் வரலாறுகளும், மேற்கோள் உள்ள நூல்களின் பட்டியலும், அரும்பத அகராதியும், மூல பாடத்திற்கு அகராதியும் ஒழுங்காக ஆங்கில முறைப்படி எழுதிப் பதிப்பித்திருப்பது சாமிநாத ஐயரின் சிறப்பு எனலாம். இவருடைய நூல்களில் இத்தகைய குறிப்புக்கள் மூலத்தைவிட அளவிற் கூடுதலாக இருப்பதையுங் காணலாம். இவை, அடுத்த பதிப்புக்களில் பெருகியிருப்பதும் குறிப்பிடத் தகுந்தது. ஒவ்வொரு பதிப்புக்கும் முன் பதிப்புக்களில் முன்னுரையோடு பிறிதொரு முன்னுரை எழுதிய முறையும் பாராட்டுக்குரியது. உரை எழுத விரும்பு

வோர் இந்தச் சிறப்பியல்புகளைக் கையாளுவது நலம் பயக்கும். ஒரு நூலை ஆராயும்போது பிற நூல்கள் பற்றிய குறிப்புக்கள் கிடைத்தால் அவற்றையும் பேணி வைத்திருப்பது இவருடைய வழக்கம்.

இவருடைய சீவகசிந்தாமணி மூலமும் உரையும் என்ற நூலில் நூலைப்பற்றிச் சில குறிப்புக்களும், சரித்திரச் சுருக்கமும், விளங்கா மேற்கோள் அகராதியும், பதிப்பில் எடுத்துக்காட்டிய நூல்கள் முதலியவற்றின் முதற் குறிப்பகராதியும் உள்ளன.

சிலப்பதிகாரம், மணிமேகலை, உதயணன் கதை ஆகிய நூல்களின் சுருக்கங்களையும் சாமிநாத ஐயர் எழுதியிருக்கிறார். பாட்டு வடிவில் கடினமான முறையில் எழுதப் பெற்றிருந்த அரிய பொருள்களை எளிய தமிழ் நடையில் இவர் தந்திருக்கிறார். இவர் புதிதாக எழுதிய உரைநடை நூல்களில் நல்லுரைக்கோவை, மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம், தியாகராசச் செட்டியார் சரித்திரம் ஆகியவை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. டாக்டர் சாமிநாத ஐயர் இலக்கிய நடையிலும் எழுத வல்லவர் என்பதற்குச் சான்றாக, புறநானூற்றுப் பதிப்பின் முன்னுரையில் ஒரு பகுதியைக் காண்க:

> அமிழ்திற் சிறந்த தமிழ்மொழியதனை ஒன்பான் சுவைபுணர்த் தன்பால் வளர்த்தருள் நச்சும் பெருமை முச்சங்கத்துள் கடைச்சங்கப் புலவர்கள் அருளிச் செய்த எட்டுத்தொகை நூல்களுள் புறநானூறு என்பது எட்டாவதாகும்.

இதுபோன்ற கடுமையான நடையை மாற்றி, எளிய நடையில் பிற்காலத்தில் கலைமகளிலும், ஆனந்த விகடனிலும் எழுதியிருக்கிறார். மணிமேகலை வசனந்

தான் உ. வே. சா. வின் நடை என்றும், 1930-க்குப் பிறகு அவர் பெயரால் வெளிவந்த நூல்கள். அவர் கருத்துக்களை ஆதாரமாக வைத்துப் பிறர் எழுதியவை என்றும் தக்க அறிஞர்கள் கூறுகின்றனர். டாக்டர் சாமிநாத ஐயர் "ஆனந்தவிகடன்" என்னும் வார இதழில் தம்முடைய வாழ்க்கை வரலாற்றை எழுதியிருக்கிறார். இதிலிருந்து ஓர் பகுதியை அவருடைய எளிய நடைக்கு மேற்கோளாகத் தருவோம்!

> "முதலில் உத்தமதானபுரத்தில் எனக்கு உபாத்தியாயராகஇருந்த நாராயணய்யர் சற்றேறக் குறைய முப்பத்தைந்து பிராயம் கொண்டவர்; நல்ல வடிவம் உடையவர். அவரைக் காணும்போது எனக்கும் மற்றப் பிள்ளைகளுக்கும் பயம்உண்டாகும். பிரம்பை அதிகமாக அவர் உபயோகிப்பார். அவரை நினைக்கும்போதெல்லாம் அவருடைய பிரம்படிதான் எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. பிள்ளைகளுக்கு மணல்தான் சிலேட்டின் ஸ்தானத்தில் இருந்தது. பனையேடுதான் புஸ்தகம். எழுத்தாணியே பேனு. உபாத்தியாயர் எழுதித் தரும் ஏட்டுச் சுவடியிலிருந்து முதலில் நெடுங்கணக்கைக் கற்றுக் கொள்வான் மாணுக்கன். அப்பால் எண்சுவடி முதலிய சுவடிகள் பெற்றுப் படிப்பான். ஓலை வாரவும், சுவடி சேர்க்கவும், நன்ருக எழுதவும் தெரிந்து கொள்வதற்குப் பல நாளாகும். சுவடியைப் பிரித்து ஒழுங்காகக் கட்டுவதற்குக்கூடப் பழக்கம் வேண்டும்.

## பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர்

இவர் எட்டுத்தொகை நூல்களில் ஒன்ருகிய நற்றிணைக்குத் தெளிவான முறையில் உரையெழுதியுள்ளார்.

**சருக்கை ராமசாமி ஐயங்கார்**

பரிதிமாற் கலைஞரிடம் பைந்தமிழ் பயின்றவர். சரச லோசனச் செட்டியாருடன் படித்தவர். இவர் சில நவீனங்களை எழுதியிருக்கிறார்.

**பண்டிதை விசாலாட்சி அம்மாள்**

இந்த அம்மையாருடைய நாவல்களுக்கு இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் நல்ல மதிப்பு இருந்தது. இவரது நடையில் வடமொழிப் பிரயோகங்கள் கலந்திருக்கும். ஆனால், நடை கம்பீரமாக இருக்கும்.

**பண்டிதை அசலாம்பிகை அம்மையார்**

கம்பராமாயணச் சார்பில் காந்தி புராணம் இயற்றியவர். திருவொற்றியூர் தல புராணம், திருவாமாத்தூர் திரிபந்தாதி, திலகர் மான்மியம், இராமலிங்க சுவாமிகள் சரிதம் என்னும் நூல்களையும் இவர் ஆக்கியுள்ளார்.

**சி. ஆர். சீனிவாச ஐயங்கார்**

வடமொழியோடு தமிழிலும் புலமை உடையவர். மதாசாரியார்களின் வாழ்க்கை வரலாறுகளை எழுதியிருக்கிறார். **நன்றியறியா மகன்** முதலிய சிறந்த நாவல்களை எழுதியிருக்கிறார்.

**மகேசகுமார சர்மா**

இவருடைய இயற்பெயர் மாம்பாக்கம் குப்புசாமி ஐயர். இவர் கவியரசர் சுப்பிரமணிய பாரதியாரின் பெரு மதிப்புக்குரியவராக இருந்தார். இவரைப்பற்றி, 'ஞானரதம்' என்ற நூலின் முன்னுரையில் பாரதியார் குறிப்பிட்டிருக்கிறார். இவருடைய தூண்டுதலின் பேரில்தான் பாரதியார் பங்கிம் சந்திரருடைய வந்தே மாதர கீதத்தைத் தமிழ்ப்படுத்தினார். இவர் வங்க

மொழியிலும் புலமை உடையவர்; பங்கிம் சந்திரருடைய ஆனந்த மடம் அசுவினி குமார் தித்தருடைய பக்தியோகம் என்ற நூல்களைத் தமிழில் தந்துள்ளார்.

## ந. மு. வேங்கடசாமி நாட்டார் 1884—1944

நடுக்காவேரி வேங்கடசாமி நாட்டார் சிறந்த புலவராக விளங்கினார். அகத்தியர், நக்கீரர், கபிலர் என்னும் பெரும் புலவர்களுக்கு வாழ்க்கை வரலாறு வகுத்து அரிய நூல்களை இவர் இயற்றியிருக்கிறார். 'வேளிர் வரலாறு', 'கள்ளர் சரித்திரம்', 'அகநானூற்று உரை' என்னும் நூல்களும் தமிழிலக்கியத்தில் அழியாத இடம் பெற்றவை. இவரது கட்டுரைக் கோவை ஒன்றும் இப்போது தொகுத்து வெளியிடப் பெற்றிருக்கிறது. இவருடைய சிலப்பதிகார உரையும் சிறப்பு வாய்ந்தது. இவர், கரந்தைக் கவியரசு இரா. வேங்கடாசலம் பிள்ளையோடு சேர்ந்து, அகநானூற்றுக்கு உரை எழுதியிருக்கிறார். இவருடைய தமிழ் நடை தனி ஆற்றல் நிரம்பியது; சற்றுக் கடினமானது. எழுதுவதுபோலப் பேசும் இயல்பு இவரிடம் இருந்தது: மனைவி மக்களுடன் பேசும்போதும் நாட்டார் ஐயா இலக்கணத் தவறின்றிப் பேசினார்.

1937-இல் காங்கிரசு அமைச்சு ஏற்பட்டதும், நாட்டில் பல மாறுதல்கள் நிகழ்ந்தன. உலகப் போரில் கலந்துகொள்ள விருப்பமின்றிக் காங்கிரசுக் கட்சி 1939-இல் பதவியினின்றும் விலகியது. அதன் பயனாகக் காங்கிரசு அமைச்சர்கள் செய்த திருத்தங்கள் பெரும்பாலும் வழக்கொழிந்தன. "காங்கிரசு அமைச்சர்கள் இட்ட ஆணைகளுள் இன்னும் அமலில் இருப்பது ஒன்றுதான்; மகா ரா ஸ்ரீ என்பதற்குப் பதிலாக ஸ்ரீ என்பதே பயன்படுத்தப்பட வேண்டும் என்பதுதான் எஞ்சியுள்ள ஆணை" என்று ஒருவர் அப்போது சுவையாகக்

கூறினர். "ஸ்ரீ" என்னும் மரியாதைச் சொல்லைத் "திரு" என்று மாற்ற வேண்டுமென்ற கருத்துடையவர் தமிழ்நாட்டில் பலர் அப்போதும் இருந்தனர். திருத்தணி, திருப்பதி போன்ற ஊர்களைத் தமிழ்நாட்டுடன் சேர்க்க வேண்டுமென்று கேட்கத் துணையாக இருந்தது, திரு என்ற சொல்லேயாகும்.

"திரு", "ஸ்ரீ" என்ற இரு சொற்களைப்பற்றியும் நாட்டார் எழுதியிருக்கிற பகுதியைத் தருவோம். முட்டுப்பட்ட கருத்துக்களைத் தெளிவாக்குவதில் இவர் வல்லுநர் என்பதற்கு இவ்வரிகள் சான்று பகரும்.

> "திரு" என்ற சொல் தொன்றுதொட்டு நூல் வழக்கிலும், உலக வழக்கிலும் மங்கல மொழியாகத் தமிழில் இருந்துவருகிறது. திருப்பதி, திருவண்ணமலை, திருவானைக்கா எனத் தெய்வத் தலங்களின் முன்னும், திருக்குறள், திருக்கோவையார் எனச் சிறப்புடைய நூல்களின் முன்னும், திருநாவுக்கரையர் திருமங்கையாழ்வார் எனப் பெரியோர் பெயர்களின் முன்னும் "திரு" என்பது சேர்ந்து வருவது அறியத்தக்கது. இவற்றிலுள்ள "திரு" என்பதற்குப் பதிலாக "ஸ்ரீ" என்பதைச் சேர்த்தால் விபரீதமாக முடியும். மேலும் சாதாரண மக்கள் "ஸ்ரீ" என்பதை "ஸ்திரி" என வழங்குவார்கள். இப்பொழுது தமிழ் மக்கள் கடிதப் போக்குவரத்துகளில் "திரு" என்பதே இடம் பெற்றிருக்கிறது. இக்காரணங்களால் மரியாதைக்கு "ஸ்ரீ" என்பதைவிட "திரு" என்பதை முதலில் எழுதுவதே தமிழைப் பொறுத்தமட்டில் தகுதியும் பொருத்தமுமாகும் என்பது என் கருத்து.

**கா. சுப்பிரமணிய பிள்ளை**

இவர் தாகூர் சட்ட விரிவுரையாளராக இருந்தவர். சிறந்த தமிழ் அறிஞர். "செந்தமிழ்ச் செல்வி"

யில் எண்ணிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளார். சந்தானுச்சாரியார்கள் வரலாற்றையும் சைவ சமய ஆசாரியார்கள் வரலாற்றையும் எழுதி வெளியிட்டிருக்கிருர். மெய்கண்ட சாத்திரத்தை முழுவதும் உரைநடையில் எழுதியிருக்கிருர். சிவப்பிரகாசம் என்ற சைவ சித்தாந்த நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிருர். தமிழ் இலக்கிய வரலாறு என்ற நூலையும் இவர் எழுதியிருக்கிருர். வித்துவான் வகுப்பு மாணவர்களுக்கு இந்நூல் பாடமாக இருந்து வருகிறது. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் தோற்றத்திற்கு உரியவருள் கா. சு. பிள்ளையும் ஒருவர் சைவ சித்தாந்த உண்மைகளை எளிய தமிழில் எல்லோரும் தெளிவாகப் புரிந்துகொள்ளக் கூடிய முறையில் பல்வேறு உரைநடை நூல்களை ஆக்கியவர் இவரே.

## பண்டிதமணி 1881—1953

மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் முதலில் எழுதிய நூல்கள் வடமொழியிலிருந்து மொழி பெயர்ந்தவையே. 1930-இல் இவர் எழுதிய "நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் சீர்திருத்தம்" என்ற நூல் மிகுதியான வடசொற்களும், வடமொழியில் பல மேற்கோள்களும் உடையது. 1937-இல் இவர் எழுதிய "ஞானத்தின் திருவுரு" என்ற கட்டுரை இவர்தம் உயரிய தமிழ் நடைக்குச் சான்ருக விளங்குகிறது, இவர் இறக்குந் தறுவாயில் 1951-இல் எழுதியுள்ள திருவாசக உரை ஏனைய நூல்களைவிட எளிய நடையில் செந்தமிழில் அமைந்திருக்கிறது. இந்த உரை, ஆசிரியருடைய இணையற்ற புலமையின் பயனுகப் பிறர் காண்டற்கரிய நூல்நயங்களும் சிவநெறி உண்மைகளும் நிறைந்திருக்கிறது. இவர் உயர்ந்த நிலையிலிருந்து எழுதியிருப்பதால், போதிய கல்வியறி

MADURAI UNIVERSITY LIBRARY

வில்லாத மக்களுக்கு இவருடைய நூல்கள் பயன்பட வில்லை. இவர் எழுதிய கட்டுரைகள், "உரைநடைக் கோவை" என்ற பெயருடன் சமயக் கட்டுரைகள், இலக்கியக் கட்டுரைகள் என இரு பகுதிகளாக வெளி வந்துள்ளன. இவை, இக்காலத்தில் புலவர் கையாளும் சிறந்த தமிழ் நடைக்குத் தக்க எடுத்துக் காட்டாக மிளிர்கின்றன.

மிக எளிய நடையில் எழுதுவதைப் பண்டிதமணி விரும்பியதில்லை. எளிமை கயமை ஆகிவிடக் கூடா தென்பது அவர் கருத்து. அவர் எழுதிய ஒரு பகுதி யைப் படித்துவிட்டு ஒருவர் அவரிடம் சென்று சில இடங்கள் விளங்குவதாகவும், வேறு சில இடங்கள் எளிமையாக எழுதப்படாததால் விளங்கவில்லை என்றும் சொன்னாராம். உடனே, பண்டிதமணி, "அப்படியானால், விளங்கின பகுதியைச் சொல்லுக; அதையும் மாற்றிவிடுகிறேன்" என்று நகைச்சுவை ததும்ப விடை பகர்ந்தனராம்.

இனி, பண்டிதமணியின் இலக்கியக் கட்டுரைகளி லிருந்து ஒரு மேற்கோள் தருவோம்:

> இக் கழகத்தினின்றுந் திங்கள் வெளியீடாகத் தோன்றிய தமிழ்ப் பொழிலோ, தான் தோன்றிய சில திங்களுள் தமிழன்பர்களின் உள்ளத்தைக் குளிர்விக்கும் உள்ளுறையாந் தண்ணிய நிழலையும், அரும் பொருண் மணமிக்க வேற்றுமொழி விரவாத் தண்டமிழ்ச் சொற்றிரளாம் நறுமலர்த்துணர் களையும் உதவித் தமிழ் நிலத்தாரை மிகவும் இன்புறுத்தி வருகின்றது. வேற்று மொழிப் பயிற்சி யால் வெதும்பிய அன்பர்கள் இப்பொழிலை அடைவார்களாயின் அவ்வெப்பம் ஒழியப்பெற்றுச் செந்தமிழ்த் தட்பத்தால் இன்புறுதல் ஒருதலை,

## திரு. வி. க. 1883—1953

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு ஏற்றம் தந்தவருள் முதல் வரிசையில் வைத்து எண்ணத்தக்கவர் திருவாரூர் வி. கலியாண சுந்தர முதலியார். இவர் தமிழ் மொழிக்கு ஆற்றி யிருக்கும் தொண்டு அளவிடற்கரியது; இந்நூலின் பிறிதோரிடத்தில் மேற்கோளாகக் காட்டப்பெற்றிருக் கும் பாராட்டிதழால் இவருடைய தொண்டினை ஓரளவு அறியலாம்.

திரு. வி. க, எண்ணற்ற நூல்களை உரை நடையில் இயற்றியிருக்கிறார். இவற்றுள் குறிப்பிடத்தக்கவை- "என் கடன் பணிசெய்து கிடப்பதே", பெண்ணின் பெருமை", "தமிழ்த் தென்றல்", "திரு. வி. க. வாழ்க் கைக் குறிப்புகள்", முதலியன. "முருகன் அல்லது அழகு" என்னும் நூலின் பகுதி வருமாறு:

> முருகனை வழிபடுவோர்க்கு முருகனிடத்து இடை யறாத உறுதி யிருத்தல் வேண்டும். உறுதியின்றிச் செய்யப்படும் வழிபாடுகள் போலியாகவே முடியும். கடல் பொங்கி வரினும், மலை குலைந்து சாயினும், வானிடிந்து வீழினும், "முருகன் காப்பான்" என்னும் உறுதி முருகன் வழிபாட்டிற்கு அடிப்படையானது. இவ் உறுதியுடையார் விரும்பும் எல்லா நலன்களையும் பெறுவர். இன்றியமையாத அருட்செல்வம் முதலிய எல்லாச் செல்வங்களையும் முருகன் அவர்க்கு அளிப்பன். முருகப் பெருமான் தன்னை வழிபடும் அன்பர்க்குத் தோன்றாத் துணையாய் நின்று செய்து வரும் பேருதவி, அவன் அடியவர்க்குத் தெரியும். உறுதியால், முருகனிடத்து எல்லாம் பெறலாம்.

திரு. வி. க. வினைமுற்றுக்களைத் தம் எழுத்தில் மிகுதியாகப் பயன்படுத்துவார். "என்ன நயம்! என்ன எளிமை! என்ன இனிமை!" என்பன போன்ற சொற்

றொடர்களை அவருடைய நூல்களிற் காணலாம். அவருடைய நூல்களை அச்சிடும் அச்சகத்தார், வியப்புக் குறியை (!) அச்சிடும் "டைப்" உள்ள பெட்டிகளைக் கூடுதலாக வாங்கி வைத்துக்கொள்ள வேண்டுமென்று நகைச்சுவையாகக் கூறுவதுண்டு.

"அந்தோ," "எங்கணும் ஒல்லும் வகை", "யா", "கூர்தல்", "பொலிவு", "பூத்து, காய்த்து கனிந்து" என்ற சொற்களைத் திரு. வி. க. அடிக்கடி பயன்படுத்தியிருக்கிறார். "கொல்" என்னும் ஐயக் கிளவியையும் அவருடைய எழுத்துக்களில் காணலாம். காந்தியடிகளைப்பற்றிய கட்டுரைகளில் அண்ணல், ஏந்தல், செம்மல் என்னும் இலக்கியச் சொற்களைப் பயன்படுத்தி, அவற்றைப் பரப்பினார். வள்ளுவரின் கருத்து என்பதைக் குறிக்க, வள்ளுவம் என்ற சொல்லை ஆக்கி அதனைப் பரப்பியவரும் திரு. வி. க. வே. தாமே கேள்வியை எழுப்பி அதற்குப் பதிலும் கூறுவது அவர் இயல்பு.

பலதுறை அறிஞரான திரு. வி. க. இயற்கைக் காட்சிகளை வியந்து எழுதுவதிலும் இணையற்று விளங்குகிறார். "எனது இலங்கைச் செலவு" என்ற கட்டுரையை இவர் எழுதிய பின்னரே, "செலவு" என்னுஞ் சொல்லுக்குப் "பயணம்" என்ற பொருளும் உண்டு என்பதைத் தமிழ் மக்களிற் பலர் அறியலாயினர். இவ்வாறு அருமையான சொற்கள் பலவற்றைச் சிறிது படித்தவர்களும் அறியும்படி செய்த சிறப்பு இவருக்கு உண்டு. இனி, இவருடைய இலங்கைச் செலவிலிருந்தும் ஒரு பகுதியைப் படிப்போம்.

> ஸ்ரீநகர், டார்ஜீலிங், ஆல்ப்ஸ் முதலிய இடங்களிலுள்ள இயற்கை வளங்களைப் பற்றிக் கேள்வியுற்றிருக்கிறேன்; நூல்கள் வாயிலாகப் படித்துமிருக்

கிறேன். அவைகளை நேரே கண்டதில்லை. கண்டிக்குச் செல்லும் வழிநெடுக இயற்கை அன்னையின் திருவோலக்கமன்றி வேறென்ன இருக்கிறது? எங்கணும் மலைகள்—மலைத்தொடர்கள்—மலைச்சூழல்கள்; எங்கணுஞ் சோலைகள் சாலைகள், செடிகள், கொடிகள் பைங்கூழ்கள்; எங்கணும் அருவிகள், ஆறுகள், நீர்நிலைகள். இவையாவும் ஒன்றோடொன்று கலந்து அளிக்குங் காட்சியன்றோ கடவுட் காட்சி? நூற்றுக்கணக்கான குற்றாலங்கள் விதவிதமாகக் காட்சி வழங்குகின்றன. சில இடங்களில் மலைகள் படிப்படியாக இழிந்து இடை வெளியிட்டு இவர்ந்து நிற்குந் தோற்றம் இயற்கை ஊசல்போல் விளங்குகின்றது. சில இடங்களில் மலைகள் சிங்கம் எழுந்து நின்று பாயவருந் தோற்றத்தை வழங்கிக்கொண்டு நிற்கின்றன. சில இடங்களில் அவைகள் செய்கரை போல் நேர்மையாக நிற்கின்றன. பசுமை நிலவாத மலைப்பாங்கரே காணேம்.

சமயத்தைப்பற்றித் திரு. வி. க. எழுதியிருப்பதாவது:—

சடங்குகள் வேறு; சமயம் வேறு. இரண்டையும் ஒட்டவைத்தல் அறியாமை......மந்திரம் குறிப்பிட்ட ஒரு மொழியிலேயே அமைதல் வேண்டும் என்னும் நியதி இல்லை. அவரவர் தத்தம் தாய் மொழியில் மந்திரம் வகுத்துக்கொள்ளலாம்.

"முருகன் அல்லது அழகு" என்னும் நூலிலிருந்து ஒரு பகுதியைத் தருவோம்;

முருகன் பொருளும் பொதுமையும்.

முருகன் - முருகு - முருகின் சொற்பொருள் - மணம் இளமை கடவுட்டன்மை அழகு-பழந்தமிழர் கூர்த்தமதி - முருகன் ஒரு கூட்டத்தவரின் கடவுள் அல்லன் – மொழி வேற்றுமையால் இறைவன் பல

பெயர் பெறல் – மணம் இளமை இறைமை அழகு எல்லார்க்கும் பொது,

முருகன் எவன்? முருகையுடையவன் முருகன். முருகு என்றால் என்னை? முருகு என்பது பல பொருள்களைக் குறிக்கும் ஒரு சொல். அப் பல பொருள்களுள் சிறப்பாகக் குறிக்கத் தக்கன நான்கு. அவை மணம், இளமை, கடவுட்டன்மை, அழகு என்பன. இந் நான்கு பொருளடங்கிய ஒரு சொல் லால் பண்டைத் தமிழ் மக்கள் முழுமுதற் பொருளை அழைத்தது வியக்கத்தக்கது. இயற்கை மணமும், மாறா இளமையும், எல்லாப் பொருளையுங் கடந் தொளிருந்தன்மையும், அழியா அழகும் இறைவ னிடத்தில் இலங்குவது கண்டு, அப் பொருள்கள் முறையே உறைதற்கிடம் பெற்றுள்ள முருகன் என்னுஞ் சொல்லை, அவ்விறைவனுக்குப் பழந்தமிழ் மக்கள் சூட்டியதன் திறமையை நோக்குழி அவர் களது கூர்த்தமதி புலனாகிறது.

வாழ்க்கையின் பல துறைகளிலும் புதிய எண்ணங்களை யும் இலட்சியங்களையும் பரப்புவதற்குத் தமிழையும், ஆங்கிலத்தைப் போன்று, ஆற்றல் நிறைந்த ஒரு கருவி யாகப் பயன்படுத்த இயலுமென்பதைத் திரு. வி. க. தமிழர் உள்ளங்களில் வேரூன்றச் செய்திருக்கிறார். பின்வரும் பகுதி, ''தமிழ்ச்சோலை''யிலிருந்து எடுக்கப் பெற்றது.

நம் பெருங் கிழவர் ஸர். பி. தியாகராஜ செட்டியார் சென்ற செவ்வாய்க்கிழமை இரவு நம்மைவிட்டுப் பிரிந்தார்; இவ்வுலகவாழ்வு நீத்தார்; விண்ணுலகெய்தினார்:.........அவரது பிரிவு எமது உள்ளத்தை உருக்குகிறது. எழுதவும் முடியவில்லை. தியாகராஜர் பிரிவை உன்னுங்கால், அப்பிரிவு - ஆறும் மலையும், கூவலும், குளமும், கலையும்,

தொழிலும், மக்களும், ஒழுக்கமும் பலபடச் செறிந்த ஒரு பெருந் திரு நகரம் திடீரென மறைந்ததுபோல் எமக்குத் தோன்றுகிறது. "அந்தோ! தியாகராஜ மலையுஞ் சாய்ந்ததோ!" என்று அழுகிறோம். ராஜ கெம்பீரத் தோற்றமும், திரு நீற்றொளியும், சிங்க நோக்கும், மலர்ந்த முகமும், பீடு நடையும், அஞ்சா நெஞ்சும், ஆவின் இயல்பும் உடைய ஒரு பெரு வடிவை இனி என்றே காண்போம்! எமதாருயிர்த் தியாகராஜரை இனி என்றே காண்போம்!

காந்தியத்தைத் தென்னாட்டில் பரப்பியவர் திரு. வி. க. என்பதைத் தமிழுலகம் நன்கறியும்; வாளினும் கூரிய எழுத்துக்களால், பொருளாதாரத் துறையில் புரட்சிகரமான கருத்துக்களை வெளியிட்டவர்களுடைய கொள்கைகளையும் அவர் பரப்பியுள்ளார். கார்ல் மார்க்சைப்பற்றிய பின்வரும் பகுதி, சிறுசிறு வாக்கியங்களில் அரிய பொருள்களைக் கூறும் அவருடைய நடைக்குச் சான்றாகும்.

கார்ல் மார்க்ஸ் (1818-1883) ஜெர்மனியில் பிறந்தவர்; அறிஞர் ஹெகலிடம் தத்துவம் பயின்றவர். அவர்க்கும் இவர்க்கும் கருத்தில் வேற்றுமை விளைந்தது. கார்ல் மார்க்சுக்குத் தனிமைப் பொருளுடைமையில் - வெறுப்பும், சேர்க்கையில் - சேர்கைத் தொழிலின் முறையில்-விருப்பும் உண்டாயின. இக்கொள்கை அக்கால ஜெர்மனிக்குப் பிடிக்கவில்லை. அதை முன்னிட்டு ஜெர்மனி மார்க்ஸைத் துரத்தியது.

கார்ல் மார்க்ஸ் என் செய்தார்? ஜெர்மனியின் பொருட்டுத் தமது கொள்கையை விட்டுக் கொடுக்க நினைத்தாரில்லை. அவர் தமது கொள்கையில் உறுதியுடன் உறைந்தே நின்றார். மார்க்ஸ் பெல்ஜியம் நோக்கினர். பெல்ஜியம் அவரை ஏற்றதா? இல்லை.

அவர் பிரான்ஸுக்கு ஓடினார். பிரான்ஸ் குடியரசு நாடு. அந்நாடாகிலும் அவர்க்கு இடந் தந்ததா? இல்லை. ஏழை மார்க்ஸின் நெஞ்சம் சுழன்றது. சுழன்ற நெஞ்சில் இங்கிலாந்து தவழ்ந்தது. கருத்து வேற்றுமையை மதிக்கும் பெருமை வாய்ந்த இங்கிலாந்து மார்க்ஸுக்கு இடம் கொடுத்தது. அவர் காலம் அங்கேயே கழிந்தது. மார்க்ஸுக்கு இங்கிலாந்து இடம் கொடாமல் அவரை அலைய வைத்திருப்பின், உலகை ஒருமைப்படுத்தவல்ல "காபிடல்" போன்ற சீரிய நூல்கள் வெளிவந்திருக்குமா?

திரு. வி. க. வின் நடைக்குத் "தமிழ்த் தென்றல்" என்னும் நூலிலிருந்து பின்வரும் மேற்கோளையும் தருவோம்.

> உலகம் சில காலம் குருமார் அடிவருடி நின்றது; சில காலம் மன்னர் வாள்வழி நடைபெற்றது; இப்போது வாணிபருக்கு இரையாகி வருகிறது; இனித் தொழிலாளர் வயப்பட்டு நலம் பெறப் போகிறது. தொழிலாளர் புரட்சி இதுகாலை உலகத்தைச் சூழ்ந்து முற்றுகை செய்திருக்கிறது. இனி, அப்புரட்சி "கொடுமை," "அடக்குமுறை" என்னும் அரண்களைப் பொசுக்கி "சமத்துவம்" என்னும் கோட்டையைக் கைப்பற்றிச், "சுதந்திரம்" என்னும் அரியாசனமேறி, "சகோதரத்துவம்" என்னும் கொடியைப் பறக்கவிடும்.

சுருங்கக்கூறின் தமிழின் அழகை, தமிழின் ஆற்றலை, தமிழின் உயிர்த் துடிப்பை அவருடைய உரைநடையில் காணலாம். உரைநடையில் கவிதை நயத்தை ஏற்றி அதற்கு ஆற்றலும் வடிவமும் தந்தவரும் திரு. வி. க.வே.

**டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார் 1879-1959**

*இவர் சிறந்த தமிழறிஞர்; பெரும் புலவர்; திருவள்ளுவர், சேரர் பேரூர், சேரவேந்தர் தாய வழக்கு போன்ற ஆராய்ச்சி நூல்களையும், மாரிவாயில், மங்கலக் குறிச்சிப் பொங்கல் நிகழ்ச்சி என்னுஞ் செய்யுள் நூல்களையும் எழுதியிருப்பவர். தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அகத்திணையியல், புறத்திணையியல், மெய்ப்பாட்டியல் ஆகிய மூன்று இயல்களுக்கு இவர் உரை வகுத்துள்ளார். "தசரதன் குறையும் கைகேயி நிறையும்" என்ற நூலையும் இவர் எழுதியுள்ளார். சோமசுந்தர பாரதியாருடைய பேச்சும் எழுத்தும் தமிழ் உணர்ச்சியை யூட்டும் ஆற்றல் பெற்றவை. பல அறிஞர்களுடைய நூல்களுக்கு வழங்கிய தலைமை யுரைகளாலும் தமிழர்களைத் தட்டி எழுப்பிய சான்றோர் என்று இவரைக் கூறலாம். கடினமான நடையில் எழுதுவதில் இவருக்கு ஒப்பாவார் ஒருவரும் இல்லை எனலாம். சங்ககாலத்துப் புலவர்களுடைய நடையைப் போலவே இவர் எழுதியுள்ளார். இவரது நடையைச் செயற்கை நடை என்று சொல்லுவாரும் உளர். இவரது நடைக்குச் சான்றாக, "சௌபாக்கியம்" என்னும் இதழுக்கு 12—9—'39இல் இவர் எழுதியனுப்பிய வாழ்த்திலிருந்து ஒரு பகுதியைத் தருவோம்.*

*தமிழில் "பெட்பு" என்பது அன்பைக் குறிக்கும். பெண்மை அன்புடைமைக்குப் பெயர். அஃதுடையாரைப் "பெண்டிர்" என்றழைத்தனர் தமிழ்ச் சான்றோர். அது மட்டோ? மேல் நாட்டாரைப் போல அழகியர், எளியவர், வலியிலார் என்று பெண்களுக்குப் பெயரிட்டுச் செருக்கி மகிழாமல், பண்டைத் தமிழ்ப் பெரியோர் பெண்களை அவர் இயல்பாலே - பண்பாலே - இரக்கத்தாலே - பொறுமையாலே - பிறர் நலம் பேணித் தந்நல மறக்கும்*

> பெருமையாலே ஆண்களைவிடச் சிறந்தவர் என் பதை உணர்ந்து, அவர் தம் இயல்பை விளக்கி, "நல்லார்" என்றே பெயர் தந்து பெருமிதமுற்றூர் என்பதை நினைத்தால், பெண்களை ஆண்களும் மதிப் பார்; தம்மைப் பாராட்டும் ஆண்களைப் பெண்களும் பேணி இன்னு மிக அன்பு கூர்வார். அந்நிலையுற்ற பின் வாழ்வில் சரிசமமான சம்பூர்ண இன்பமும் ஆக்கமும் இரு பாலாரும் ஒத்தெய்தி மாண்புறுவதில் ஐயமென்ன?

ஓர் இதழின் தீபாவளி மலரைப் பற்றிச் சோமசுந்தர பாரதியார் எழுதியிருப்பதைப் பார்ப்போம்.

> அரிய புதிய கருத்துக்களை எளிய இனிய தமிழ் நடையில் சுவை மலியச் சொற் சுருங்கச் சொல்லுந் திறனுடையாரைத் தேடிப் பல துறையிற் பயனோடு நயனுதவும் நல்ல உரைகளைத் திரட்டித் தொகுத்த நலமும் வினைத்திறமும் வியத்தற்குரியன.

இப்படியே இவரது எழுத்துக்கள் இயங்கும். இவற்றின் அணிசெழு போக்கும் விழுமிய நடையும் அடுக்குச் சொற்களும் இவரது அறிவின் திறனை விளக்குவன.

## டி. கே. சி. 1882-1954

இலக்கிய உலகில் சில காலம் புகழ்பெற்றிருந்தவர் ரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார். செல்வர்களுக்கும், அரசியல் தலைவர்களுக்கும், உயர்நீதி மன்றத்து நீதிபதிகளுக்கும் தமிழ் இலக்கியத்திலுள்ள தனிப் பாடல்களின் கலை நயங்களை, டி. கே. சி. விளக்கிக் கூறியிருக்கிறூர். இதனுல், "தாடி இல்லாத தாகூர்" என்று சில அன்பர்கள் இவரைப் பாராட்டியிருக்கின்றனர். இவர் அளவு கடந்த தமிழ்ப் பற்று உடையவர் என்று உறுதியாகச் சொல்லலாம். தமிழை விடச் சிறந்த மொழி வேறென்றும் இல்லை என்றும்

தமிழ் இலக்கியத்தைவிடச் சிறந்த இலக்கியம் இல்லை என்றும், தமிழ்ப் பண்பாட்டைவிடச் சிறந்த பண்பாடு இல்லை என்றும் இவர் பல மேடைகளில் முழங்கியுள்ளார். கவிதைச் சுவையைத் தமிழ் மக்களிடம் பரப்பிய பெருமையும் இவருக்கு உண்டு. இவருடைய முயற்சியால் முத்தொள்ளாயிரத் தெரு என்று நெல்லையில் ஒரு தெருவிற்குப் பெயர் ஏற்பட்டிருக்கிறது. "பண்பாடு" என்ற சொல்லை முதலில் பயன்படுத்தியவர் டி. கே. சி. யே. "ரேடியோ" என்பதற்கு "வானொலி" என்ற சொல்லை ஆக்கித் தந்த பெருமையும் இவருக்கு உண்டு. முத்தொள்ளாயிரத்திற்கு உரையும் முன்னுரையும் எழுதி இவர் பதிப்பித்திருக்கிறார். நந்திக் கலம்பகம், குற்றாலக் குறவஞ்சி போன்ற பழந் தமிழ் நூல்களின் பெருமையையும் இவர் பரப்பியிருக்கிறார். 'இதய ஒலி' என்ற கட்டுரைத் தொகுப்பையும், "கம்பன் யார்?" என்ற நூலையும் இவர் எழுதியுள்ளார். இவருடைய கம்பராமாயணப் பதிப்பும் நாடறிந்த ஒன்று.

தமிழ் மொழியை முறையாகப் பயிலாமலே யாரும் தமிழில் நூல்கள் எழுதலாம் என்பது டி. கே. சி. யின் கருத்து. "மீனுக்கு நீச்சும், தமிழனுக்குத் தமிழும் கற்பிப்பானேன்? சும்மா எழுதையா?" என்பார் டி. கே. சி.

மேற்கூறிய கருத்தில் சான்றோர் வழக்கிலோ, நூல் வழக்கிலோ காணப்படாத பல வழிகளை இவர் கையாண்டார். பல்ப்பொடி, பால்க்காரி, கல்க்கண்டு, மேல்ச் சபை, கல்த்தூண் என்று டி. கே. சி. எழுதுவார்.*

---

* இவ்வாறு எழுதும் வழக்கம் டி. கே. சி.க்கு முன்னரே இருந்து வந்திருக்கிறது. ஏடுகளைப் படி எடுத்தவரும், சாசனங்களைக் கல்லில் வெட்டியவரும் போதிய கல்விப் பயிற்சி இல்லாமையால் இவ்வாறு எழுதியுள்ளனர்.

இருக்கிற சந்திகள் நிலைப்பதே அரிதாக இருக்கிற காலத்தில், புதுச் சந்திகளைப் புகுத்துவது தவறான முறையாகும். இதுபோன்ற முயற்சியைத் தமிழகத்திற்கு வந்த மேனாட்டு அறிஞர் ஒருவர் தொடங்கினார்; இலக்கணம் கற்றபின் அவர் தம் தவறை உணர்ந்தார். ரசிகமணியின் முயற்சியும் தமிழ் மக்களுடைய ஆதரவு இல்லாமையாலும், அளவுகடந்த பிரசாரத்தாலும் வெற்றி பெறவில்லை. உலகியல் சார்பு பற்றிப் புலமைப் புகழ் அடைய முயலுபவர் என்று இவரைத் தமிழ் அறிஞர் சிலர் கருதினர். டி. கே. சி. யின் கருத்துக்களைப் பின்வரும் குறிப்பில் காண்க:

> "கவிதையா, கம்பன் ஒருவனால்த்தான் பாட முடியும்; வசனமா, கல்கி ஒருவர்தான் தமிழ் வசனம் எழுதுகிறார். சங்கீதமா, ஸ்ரீ எம். எஸ். சங்கீதம் ஒன்றுதான் சங்கீதம்."

டி. கே. சி. யின் நடைக்குச் சான்றாக அவருடைய கடிதம் ஒன்றைத் தருவோம்.

> டி. கே. சிதம்பரநாத முதலியார் திருக்குற்றாலம்
> தென்காசி.
>
> ஓம்
>
> மங்களமான பொங்கல் வருகிறது. வீடு அழகாய் இருக்கிறது. ஊர் அழகாய் இருக்கிறது. நாடே அழகாய் இருக்கிறது. மக்கள் உள்ளத்தில் திருப்தியும் ஆனந்தமும் குடிகொண்டிருக்கிறது.
>
> ராமனது உள்ளத்தில் நடுக் காட்டில் ஒரு சமயம் திருப்தியும் ஆனந்தமும் நிறைந்து நின்றது. எப்போது:
>
> நடுக்காட்டில் ராமன் சீதை இருவரும் தங்குவதற்கு அழகான குடிசை கட்டி விட்டான் லக்ஷ்மணன். குடிசையின் வேலைப்பாட்டைப் பார்த்த ராமனுக்கு உள்ளம் பூரித்து விட்டது;

செல்வம் என்று ஒன்று இல்லாதவன் காரியம் அபாரமாய் அல்லவா இருக்கிறது!

"மேவு கானம்
　மிதிலையர் கோன்மகள்
பூவின் மெல்லிய
　பாதமும் போந்தன,
தாவில் எம்பிகை
　சாலை சமைத்தன! —
யாவை யாதும்
　இலார்க்கியை யாதவே!"

ராமனது உள்ளத்தில் நிறைந்து நின்ற திருப்தியும் ஆனந்தமும் நமக்கும் உண்டாவதாக.

(ஒ—ம்) டி. கே. சிதம்பரநாதன்
13—1—'53

மனுஷ்யன், தொனி, பாணி. பேஷ், அடாடடா என்ற சொற்களையும் வேறு பல கொச்சைச் சொற்களையும் இவர் மிகுதியாகப் பயன்படுத்துகிறார். "நிரம்ப" என்ற சொல்லின் உருச் சிதைந்த "ரொம்ப" இவருக்கு மிகவும் விருப்பமான சொற்களுள் ஒன்று.

உணர்ச்சியின் சாயல் என்ற பொருளில் இவர், "பாவம்" என்ற சொல்லைப் பயன்படுத்தும்போது "பா" என்ற எழுத்தைத் தடித்த எழுத்தில் அச்சிடுவதும் இவருடைய இயல்பு.

**வையாபுரிப் பிள்ளை—ம. 1956**

இவர் தமிழ், ஆங்கிலம் தவிர, மலையாளம், பிரஞ்சு, வடமொழி ஆகிய மொழிகளிலும் புலமை பெற்றவர். இவர் சிறந்த படிப்பாளி. டாக்டர் சாமிநாத ஐயரைப் போலவே இவர் வாழ்நாள் முழுவதும் ஏட்டுச் சுவடிகளைப் படித்து ஆராய்ந்தவர். இவ்வாறு முறைப்படி ஆராய்ந்தவர் தமிழ் நாட்டில்

மிகச் சிலரே. டாக்டர் சாமிநாத ஐயருக்கே இவர் பல ஏட்டுச் சுவடிகளைத் தந்து உதவியிருக்கிறார். 1926 முதல் 1936 வரை பத்து ஆண்டுகள் தமிழ்ப் பேரகராதிக் குழுவின் தலைவராக இருந்து இவர் தமிழ் நூல்களைப் பழுதறப் படித்திருக்கிறார். சொல் ஆராய்ச்சியில் இவர் இணையற்றவர். சொற்களை வைத்துக் கால ஆராய்ச்சி செய்கின்ற வழக்கத்தைத் தமிழ் நாட்டில் பரப்பியவரும் இவரே. எனினும் இவருடைய கால ஆராய்ச்சி முடிவுகளைப் பற்றி முரண்பட்ட கருத்துக்கள் உண்டு. இப்பேராசிரியர் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார். இக்கட்டுரைகள் பல நூலாக வெளிவந்துள்ளன. இத்தகைய நூல்களுள் சிறப்பானவை "தமிழ்ச்சுடர் மணிகள்," "இலக்கியச் சிந்தனைகள்," "தமிழர் பண்பாடு," "தமிழின் மறு மலர்ச்சி," "இலக்கிய உதயம்," "உலக இலக்கியங்கள்" என்பவை. இவர் பதிப்பித்த நூல்களும் மிகப்பல.

இவர் சிறந்த முறையில் முகவுரை எழுதும் ஆற்றல் வாய்ந்தவர். புறத்திரட்டு முகவுரை ஒப்புயர்வற்றது. இவரது பன்னூல் பயிற்சிக்கு அது சான்றாக உள்ளது. தமிழ்ப் பேரகராதிக்கும் சிறந்த முறையில் முகவுரை எழுதியுள்ளார். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை எழுதிய நூல்களுக்கும் இவர் விரிவான முன்னுரைகள் எழுதியுள்ளார். அவை இவருடைய சிறந்த இலக்கியத் திறன் ஆய்விற்கு எடுத்துக்காட்டாக உள்ளன. ஆங்கிலம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் புலமை பெற்றவர்களால்தான் தமிழ் மொழி வளர்ச்சி பெற இயலும் என்பது வையாபுரிப் பிள்ளை அவர்களுடைய கருத்து.

இவருடைய தமிழ் நடை வடசொற் கலந்தது; இலக்கண வழு இல்லாதது. எளிமையானது. பிறர்

பயன்படுத்தாத பல சொற்களை—உய்தி, சட்டகம் போன்றவற்றை—இவர் கையாண்டிருக்கிறார். பின் வரும் பகுதியை, இவருடைய நடைக்கு மேற்கோளாகக் காட்டலாம்.

> "(டாக்டர் சாமிநாத ஐயர்) இவருடைய பூதவுடம்பு இப்பொழுது மறைந்து விட்டது. ஆனால், இவர் புகழுடம்பு சென்னைக் கடற் கரையிலே, அரசாங்கக் கல்லூரியின் முகப்பிலே, சிலை வடிவாக நின்று காட்சியளிக்கிறது. தமிழ்க் காதல் நிரம்பியமைந்த திருமேனி; தமிழ்ச் சுவடிகள் இருக்கும் இடங்கட்கெல்லாம் ஓடியோடிச் சென்ற திருவடிகள்; ஏட்டுச் சுவடிகள் பெற்று ஆனந்தாதிசயத்தால் விதிர் விதிர்க்கும் திருக் கரங்கள்; தமிழின் பெருமையையும் தமிழின் தொன்மையையும் நினைத்த மாத்திரத்தில் உள் ளத்தே ஓங்கி வருகின்ற உவகையால் ஓங்கியமைந்த திருப்புயங்கள்; தமிழ் ஒளியும் தமிழ் அறிவும் ஒருங்கு விளங்குகின்ற திருநயனங்கள்; தமிழ்த் தொண்டு என்னும் தவத் துறையிலே நெடுங்காலம் ஒழுகி முதிர்ந்த திருக்கோலம்; இவை நமது கண் ணுக்கு விருந்தாய் அமைந்து நின்றன." (தமிழ்ச் சுடர் மணிகள்)

## பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை 1896-1961

சொல்லின் செல்வர், பேராசிரியர் ரா. பி. சேதுப் பிள்ளையின் நடையைப் பண்டிதர் புகழ்வர்; பாமரர் விரும்புவர். இந்த நடை டபிள்யு. எச். அட்சன் (W. H. Hudson) என்னும் ஆங்கில அறிஞரது நடை யைப் போன்றது. பாடல்களிலுள்ள அரிய சொற்கள் பலவற்றைச் சேதுப்பிள்ளையின் எழுத்துக்களில் பல இடங்களில் காணலாம். எதுகை மோனை நிறைந்த கட்டுரைகளை ஆக்கி இவர் தமிழ் உரைநடைக்கு ஆக்கம்

தந்திருக்கிருர் என்று கூறலாம். இவர் எழுதியுள்ள நூல்களுள் "திருவள்ளுவர் நூல் நயம்", "தமிழ் விருந்து," "தமிழர் வீரம்," "தமிழ் நாட்டு நவ மணிகள்," "வீரமாநகர்", "கிறித்தவத் தமிழ்த் தொண்டர்," "தமிழின்பம்," "வேலும் வில்லும்." "கடற்கரையிலே," "ஊரும் பேரும்," என்ற நூல்கள் குறிப்பிடத் தக்கவை. இந்த நூல்களில், தமிழகத்தின் "செழுமையும் செம்மையும்," "வளமையும் பண்பாடும்" ஆசிரியரின் நடையின் "வலுவும் வனப்பும்", காட்சி தருகின்றன. "ஊரும் பேரும்" என்ற நூலில்,"சிதைந் தும் திரிந்தும், மருவியும் மாறியும், சாம்பியும் சோம்பி யும் நலிந்தும் மெலிந்தும்" உள்ள பெயர்களைத் திருத்தி அமைக்க வேண்டுமென்பதை இவர் தெளிவாகக் காட்டி யிருக்கிருர். இந்நூலின் பகுதிகளுக்கு இவர் கொடுத் திருக்கும் தலைப்புக்களும் இனிய ஓசையுடையனவாக உள்ளன, சான்ருக, "நாடும் நகரமும்", "குடியும் படையும்", "குலமும் கோவும்", "தேவும் தலமும்", "அன்றும் இன்றும்" என்பனவற்றைக் குறிப்பிடலாம். இவருடைய நடைக்குப் பின்வரும் மேற்கோள்களைத் தருவோம்.

காதல் மனையாளும் கணவனும் கருத்திசைந்து நடத்தும் அறமே இல்லறம் எனப்படும். அத்தகைய இல்லறத்தினும் நல்லறம் வேருென்றில்லை. பெண்மையைப் பேணுத நாடு என்றும் பெருமையுற மாட்டாது; இல்லறத்தைப் போற்ருத நாடும் எந் நாளும் ஏற்றமுற மாட்டாது.

* * *

யாழ்ப்பாணம், இலங்கையின் தொன்னகரம்; தமிழர் வாழும் நன்னகரம்.

தமிழ் நாட்டிலே கலைமணங் கமழும் துறைமுக நகரங்கள் சில உண்டு. அவ்வற்றுள்ளே தலை

சிறந்தது மாமல்லபுரம். அங்குள்ள பாறையெல்லாம் பழங்கதை சொல்லும். கல்லெல்லாம் கலை வண்ணம் காட்டும்.

சேதுப்பிள்ளையின் நடைக்குச் சான்றாக, "வேலும் வில்லும்" என்னும் நூலில் "கம்பரும் கச்சியப்பரும்" என்ற பகுதியிலிருந்து பின்வரும் மேற்கோள்களைத் தருவோம்:

> நல்லரசும் வல்லரசும் இவ்வுலகில் எந்நாளும் உண்டு. நல்லரசு அறநெறியிற் சென்று நெடுங் காலம் நிற்கும்: வல்லரசு மற நெறியில் முனைந்து நிலை குலைந்து அழியும்......அரக்கர் கோமகனாகிய இராவணனும், அசுரர் வேந்தனாகிய சூரனும் வரம் பெற்றுயர்ந்த வல்லரசர்; ஆயினும் ஈரமற்ற நெஞ்சினர்; வீரமே விளைத்துத் திளைத்தவர். இலங்கையில் இராவணன் நிறுவிய அரசு இராமனது வில்லால் அழிந்தது; வீரமகேந்திரத்தில் சூரன் அமைத்த அரசு முருகனது வேலால் முறிந்தது.
>
> இலங்கை வேந்தனும், மகேந்திர மன்னனும் கண்டோர் வியப்புறக் கடும்போர் புரிந்து வீழ்ந்தனர். இராவணன் மனைவியாய மண்டோதரியும், சூரன் மனைவியான பதுமையும் கற்பு நெறி வழுவாமல் கணவனாருடன் சென்றார். வல்லரசுகளை முறித்த வில்லையும் வேலையும் நல்லோர் யாவரும் வாழ்த்தி வழிபடுவராயினர்.

சேதுப்பிள்ளையின் நூல்களைப் படிக்குந்தோறும், ஆர். எல். ஸ்டீவன்சன் எழுதிய பின்வரும் பகுதி எனக்கு நினைவுக்கு வருவதுண்டு.*

---

*First the phrases should be rhythmical and pleasing to the ear; secondly the phrases should be musical in the mouth; thirdly the writer should weave the argument into a pattern, both beautiful and logical and lastly, he should master the art of choosing apt, explicit and communicative words—Robert Louis Stevenson in "ON SOME TECHNICAL ELEMENTS OF STYLE.

தொடர்கள் முதற்கண் செவிக்கு இனிமையாகவும் விழுமிய ஓசையுடையதாகவும் யாப்பு ஒழுங்கினதாகவும் அமைய வேண்டும். இரண்டாவதாக, அவை படிப்பதற்கே இன்பம் தர வேண்டும். மூன்றாவதாக, நயமும் அளவும் பொருந்தக் கருத்துக்களை அமைக்க வேண்டும். இறுதியாக, உரிய, தெளிந்த, உளம் பதியும் சொற்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

கொச்சைத் தமிழ் கொடிகட்டிப் பறந்த சென்னை மாநகரில், இனிய தமிழைப் பரப்பிய பெருமை இவர்க்கு உரியது. ஒய். எம். சி. ஏ. பட்டி மன்றத்தில் இவர் தமிழ் இலக்கிய வகுப்புக்கள் நடத்தியது இவரது தமிழ்ப் பணியில் தலையாயது.

## கி. வா. ஜகந்நாதன் பி. 1906

இலக்கண வழுவின்றி, நல்ல தமிழில் எழுதி வருபவருள் "கலைமகள்" ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன் குறிப்பிடத்தக்கவர்; சங்க இலக்கியங்களில் சிறந்த புலமை நிறைந்தவர். "எல்லாம் தமிழ்", "பயப்படாதீர்கள், "வழிகாட்டி" என்ற நூல்களை இவர் இயற்றியிருக்கிறார். தனித் தமிழில் எழுதும் ஆற்றலுடைய இப்புலவர் **எல்லாம் தமிழில் எழுதி வழி காட்ட ஏன் பயப்படுகிறரோ?** நாம் அறியோம். இவருடைய நடைக்குச் சான்றாக, "ஒரு சாண் வயிறு" என்னும் நூலிலிருந்து ஒரு பகுதியைத் தருவோம்.

ஒரு விஷயம். இலக்கியக் கட்டுரைகளை எழுதுகிறேமென்று எண்ணிக் கொண்டிருக்கும் இரண்டு வகையினர் இப்பொழுது இந்நாட்டில் இருக்கிறார்கள். ஒருவகையினர் பரம வைதீக கோஷ்டி. அவர்களுக்கு நிகழ்காலமென்றும் எதிர் காலமென்றும் இரண்டு இல்லை. எல்லாம் பழைய காலத்துச் சமா

சாரந்தான். பொறுமை, பொருமை, கற்பு, அஹிம்சை முதலிய விஷயங்களைப்பற்றி ஆயிரம் பாட்டுக்களை மேற்கோள் காட்டி எழுதிக் குவித்து விடுவார்கள். உலகம் சிருஷ்டியான காலந் தொடங்கி இன்றளவும் திருப்பித் திருப்பி அந்த விஷயங்களைப் பற்றியே எழுதிக்கொண்டிருக்கும் அந்த "அப்பாவி"களுக்கு இலக்கியக் கட்டுரை இன்னது என்று படும்படி விளக்கிச் சொல்ல யாரா லும் முடியாது.

கி. வா. ஜ. "சங்க நூற் காட்சிகள்" வரிசையில் எழுதியிருக்கும் ஏடுகள் சிறந்தவை. திருமுருகாற்றுப் படையின் சாரத்தை விளக்குவது "வழிகாட்டி"; தொல்காப்பிய எழுத்ததிகாரத்தை விளக்குவ்து "பயப் படாதீர்கள்" அதை விவரிப்பது "வாழும் தமிழ்." இவரது சிறு கதைகளுள் "கலைஞனின் தியாகம்", "அறுந்த தந்தி" இரண்டும் இக்காலத் தமிழ்ச் சிறுகதை வ்ளர்ச்சிக்கு அளவு கோலாக விளங்குவன.

## முடிவுரை

இந் நூற்றாண்டில் தமிழ் மொழிக்குத் தொண் டாற்றிய பெருமக்களுள் ஈழ நாட்டைச் சேர்ந்த சிலர் குறிப்பிடத் தக்கவர்கள். சுன்னாகம் குமாரசாமிப் புலவரும், மகா வித்துவான் கணேசய்யரும் பொருட் செறிவுடைய வனப்பு மிக்க வசன நூல்களை ஆறுமுக நாவலரின் அடிச்சுவட்டில் எழுதியிருக்கின்றனர். (நாவலியூர்) ந. சி கந்தையா பிள்ளை என்பார், தமிழ் மொழியில் மிகுந்த பயிற்சியில்லாதவரும் சங்க இலக் கியங்களை எளிதிற் படித்துணர்வதற்கேற்ற முறையில் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களுள் சில, புறப் பொருள் வெண்பா மாலை போன்ற பல நூல்களை உரை நடையில் எழுதி யிருக்கின்றார். யாழ் நூல் இயற்றிப்

புகழ் பெற்றவர் அருள் திரு. விபுலானந்த அடிகள் (1892-1947). இவரது வரலாறு (தமிழ்க்) கலைக் களஞ்சியத்தின் மாதிரிப் பிரதியில் இடம் பெற்றிருக்கிறது. அந்தப் பகுதி 20-ஆம் நூற்றுண்டில் வழங்கும் செந்தமிழ் நடைக்குச் சான்ருக விளங்குவதால், அதை இங்கே தந்து அடிகளார்க்கு நாமும் வணக்கம் செலுத்துவோம்.

**சுவாமி விபுலானந்தர்:** தமிழ் அன்னையின் தவப் புதல்வருள் ஒருவராகிய முத்தமிழ் அறிந்த வித்தகப் புலவர் சுவாமி விபுலானந்தர் சிலப்பதிகாரத்தின் உயிர்நிலையான யாழினையும் இசையினையும் உயிர்ப்பித்த உத்தமராவார்.

சுவாமி விபுலானந்தர் இசைத் தமிழ் ஆராய்ச்சியினைத் தொடங்கிய காலத்தில், எல்லை காணவொண்ணுத பண்டைக்கால முதலே தமிழகத்துப் புலவராலும் முனிவராலும் வளர்க்கப்பட்டுச் சீரும் சிறப்பும் எய்தியிருந்த இசைத் தமிழும் யாழ்க் கருவியும் பல்லாண்டுகளாக வழக்கொழிந்து மறைந்து விட்டன.

பழம் பெருமை வாய்ந்த இசைத் தமிழ் நூல்கள் யாவும் கால ஆழியில் கரந்து மறைந்தமை குறித்துச் சுவாமி விபுலானந்தர் வருந்தினுர். அதன் மேல் அவர் சிலப்பதிகாரத்திலும் பத்துப் பாட்டிலும் அவற்றின் உரைகளில் காணும் மேற்கோள்களிலும் கூறப்பட்டுள்ள யாழ்க் கருவிகளின் இலக்கணங்களையும் இசை நூற் பகுதிகளையும் துருவி ஆராயலாயினர்...... ''யாழ் நூல்'' என்னும் இணையற்ற நூலை இயற்றித் தமிழுலகுக்கு ஈந்தார்.

# 5. தனித் தமிழ்

பிற மொழியின் உதவியின்றித் தமிழ் தனித்தியங்க வல்லது என்பதைப்பற்றிப் பொதுவாகத் தமிழ் மக்களும் சிறப்பாகப் புலவர்களும் பெருமிதம் கொள்ளுகின்றனர். பேச்சிலும், எழுத்திலும் இயன்றவரை பிறமொழிக் கலப்பு கூடாது என்பதே இவர்களுடைய கருத்து.

ஐரோப்பியர்கள் சிலர் தங்களுடைய பெயர்களைத் துறந்து தமிழ்ப் பெயர்கள் வைத்துக்கொண்டனர்; பெஸ்கி, வீரமா முனிவர் ஆனார். இவ்வாறு வேறு சிலரும் தமிழ்ப் பெயர் வைத்துக்கொண்டனர். தமிழார்வத்தால் சூரியநாராயண சாஸ்திரியார் தம் பெயரையே பரிதிமாற் கலைஞராக்கிக் கொண்டார். சுவாமி வேதாசலம் என்பவர் தம் பெயரை மறைமலை அடிகளாக ஆக்கிக் கொண்டது அனைவரும் அறிந்ததே. இவர்களைப் பின்பற்றி நல்ல தமிழ்ப் பெயர்களை வைக்கவே பலர் விரும்புகின்றனர். தமிழ்ச் சேரன், இளமைப்பித்தன், புதுமைப்பித்தன், கலைப்பித்தன் இலக்கியப்பித்தன், தமிழண்ணல், தமிழ்வாணன், முடியரசன், இளஞ்செழியன், நெடுஞ்செழியன், கோவை கிழார், கலைச்செல்வன், தில்லைச்செல்வன், தொல்காப்பியன், பூங்குன்றன், இளம்பாரி, எழிலரசன்,மகிழ்நன், தமிழேந்தி, இளங்கோ, கலையரசன், கலை அன்பன், கலை மன்னன், தமிழரசி, முல்லை, தென்றல், கலைச்செல்வி, இன்பவல்லி என்ற பல பெயர்கள் இன்று நாட்டில் வழங்கி வருவதை நாம் அறிவோம். மக்களுக்குப் பெயரிடுதல் பெற்றோர் கடன். ஒருவரைப் பிறரிட

மிருந்து வேறுபடுத்த, ஓர் அடையாளத்திற்காகவே ஒவ்வொருவருக்கும் பெயரிடப்படுகிறது. ஒருவர் தம் பெயரையே மாற்றிக் கொள்ளுவதைவிட, தம் மக்களுக்குத் தனித்தமிழ்ப் பெயரிடுதலே தமிழ்ப்பற்று மிக்கவர் தமிழ்மொழிக்குச் செய்யக்கூடிய சிறந்த தொண்டு எனலாம்.

**மாறுபட்ட கருத்து**

தனித் தமிழுக்கு மாறுகக் கூறுவோர் கூற்றையும் இங்கே தெரிவிப்போம். "உலகில் உயிர்ப்பொருள் எதுவும் பிறவற்றின் கலப்பின்றித் தனித்து வாழ இயலாது. பிறவற்றினின்று தான் பெற்று வளர்தலும் தன்னுடையவற்றைப் பிறவற்றுக்குத் தந்து வாழ வைத்தலும்தான் உயிர்களின் உலக வாழ்க்கை இயல்பு. உயிரில்லாததுதான் தனித்து நிற்கும். இத்தன்மை எல்லா மொழிகளுக்கும் ஒக்கும். தமிழ்மொழி உயிருடன் கூடியது. வளரும் இயல்புடையது. ஆதலின் தன் மொழிகளை உடன்வாழும் பிறவற்றுக்குத் தரும்; தானும் பிறமொழிச் சொற்களைக் கைக்கொள்ளும்,"

**இயக்கம் தோன்றியது ஏன்?**

பிறமொழிகளின் உறவாலும், அயலார் ஆட்சியாலும் தமிழ் மக்கள் பேச்சு வழக்கில் பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்துவராயினர். "விஜயநகரத்தின் வீழ்ச்சியின் பின்பும், நாயக்கர்களுடைய ஆட்சி தமிழ் நாட்டில் பல இடங்களில் ஏற்பட்டது. அரசியல், பெருமித வாழ்வு, ஆடையாபரணதிகள் பற்றிய பல தெலுங்குச் சொற்கள் தமிழுக்குக் கிடைத்தன" என்கிருர் பேராசியர் வையாபுரிப் பிள்ளை. காலப்போக்கில் எழுத்திலும் இவ்வாறு மணிப்பிரவாள நடை ஏற்பட்டது. நாளுக்கு நாள் பிறமொழிச் சொற்கள்

மிகுதியாயின. தமிழ்ச் சொற்களை மக்கள் மறந்துவிட நேர்ந்தது. பிறமொழிச் சொற்களைத் தமிழ்ச் சொற்கள் என்று எண்ணி மயங்கும்படியான நிலையும் ஏற்பட்டது. பலருடைய கட்டுரைகளிலும் நூல்களிலும் தமிழ்ச் சொற்களைவிடப் பிறமொழிச் சொற்களே கூடுதலாக இருந்தன. இதனால் தமிழ் மொழிக்கு நேரிடக்கூடிய தீங்கை மறைமலையடிகள் பின்வருமாறு விளக்கினார்.

> "வட சொற்களை இப்போதே நாம் தடை செய்யாவிடின், தமிழ் தன்னிலை கெட்டு வேறுமொழி போலாகி விடக்கூடும். தமிழில் பிறமொழிச் சொற்களைச் சேர்ப்பதால் தமிழ் தன் இனிமை இழந்து போவதோடு பல தமிழ்ச் சொற்களும் வழக்கில் இல்லாது இறந்து போகின்றன."

தனித் தமிழ் இயக்கத்தில் ஈடுபாடில்லாதவர்கள் தம் கருத்தைத் தெரிவிக்கும்போது, மொழிக்கு ஒரு வரம்பு கூடாது; அது எல்லையற்ற ஒரு நாடு போன்றது என்று விவாதிக்கின்றனர், இது தவறான கருத்தாகும். ஆற்றுக்கு அணை கட்டுகிறோம்: சாலைகளுக்குக் கரை அமைக்கிறோம். இவை போல மொழிக்கும் ஒரு கட்டுப்பாடு வேண்டும்.

## மறைமலையடிகள் 1876 - 1950

தமிழ்ப் பெரியார்களுள் மாமலை என விளங்கியவர் மறைமலையடிகள். "மறைமலை ஒரு பெரும் அறிவுச் சுடர்: தமிழ் நிலவு. அவர்தம் தமிழ்ப் புலமையும் வடமொழிப் புலமையும், ஆங்கிலப் புலமையும், ஆராய்ச்சிப் பேச்சும், எழுத்தும், தொண்டும் தென்னாட்டை ஊழிக்கச் செய்தன. அடிகள் பேச்சு, பல பேச்சாளரைப் படைத்தது. எழுத்து, பல எழுத்தாளரை ஈன்றது!"

என்று தமிழ்ப் பெரியார் திரு. வி. க. இவரைப் பாராட்டியுள்ளார். மறைமலையடிகள் நல்வாழ்க்கை நூல்களும் திருவாசக அகவல்களுக்கு விரிவுரையும் மாணிக்கவாசகர் கால ஆராய்ச்சி என்ற நூலையும் பிற வற்றையும் எழுதியுள்ளார். இவர் தனித் தமிழ் நடையைக் கையாண்டு தம் நூல்களுக்குத் தனிப் பெருஞ் சிறப்பைத் தந்துள்ளார். தனித் தமிழிலே தேனும் பாலும் கலந்தனைய தீஞ்சொற் சுவைமிக்க இனிய உயரிய உரைநடை எழுதுவதிலும் சொன்மாரி பொழிவதிலும் இவருக்கொப்பாவார் எவருமிலர்.

மொழி பெயர்ப்பிலும் மறைமலையடிகள் இக்கால எழுத்தாளர்க்கு வழி காட்டினார். ஆங்கில மொழியி லுள்ள அரிய நூல்களைத் தமிழாக்கும்போது தமிழ் இலக்கண முறைக்கேற்ப அவர் மொழிபெயர்த்திருக் கிறார். ''சிந்தனைக் கட்டுரை''யில் அடிகள் இயற்றி யிருக்கும் ''முருகவேள் கண்ட காட்சி'', ''பேய்களும் ஆவிகளும்'' என்ற கட்டுரைகளை அடிசன் எழுதிய "The Vision of Mirza"; "Ghosts and Apparatus" என்ற எழுத்தோவியங்களோடு ஒத்துப்பார்த்தால் இது புலனாகும்.

மறைமலையடிகளுடைய வாக்கியங்கள் மைல் கணக்கில் செல்லும். அவற்றைப் படிக்க மணிக்கணக் கில் நேரம் ஆகும். அருஞ்சொற்கள் பலவற்றை ஆங் காங்கே காணலாம். எனினும் படிப்பதற்கு இனிமை யாக இருக்கும். அவருடைய நடைக்குப் பின்வரும் மேற்கோளைத் தருவோம்.

*நமது பொதுநிலைக் கழக முதன் மாணவரும், சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியரு மான மணி. திருநாவுக்கரசு முதலியார் பிரசோற் பத்தி வைகாசி 10ஆம் நாள் சனிக்கிழமை(23-5-1931)*

முற்பகலில் திடீரென இம்மண்ணுலக வாழ்வு நீத்து விண்ணுலகு புகுந்த செய்தி இத்தமிழ் நாட்டவர் எல்லோரையும் திடுக்கிடச் செய்து, அவருக்குப் பெருந் துயரைத் தருவதொன்றாய் எங்கும் பரவலாயிற்று. முகிழ்ந்து மணங்கமழ்ந்து அழகாய் மலரும் பருவத்தே ஓர் அரிய செங்கழுநீர்ப் பூ அதனருமையறியான் ஒருவனாற் கிள்ளியெறியப்பட்டு அழிந்தாற் போலவும், மறை நிலாக் காலத்தே திணிந்து பரந்த இருளின்கட் செல்லும் நெறி இதுவெனக் காட்டுதற்கு ஏற்றி வைத்த ஒரு பேரொளி விளக்குச் சடுதியில் வீசிய சூறைக் காற்றினால் அவிந்து மறைந்தாற் போலவும், நீண்டநாள் வறுமையால் வருந்திய ஒருவன் புதையலாய்க் கண்டெடுத்த பொன் நிறைந்த குடம் ஒன்று வன்னெஞ்சக் கள்வனொருவனாற் கவர்ந்து கொள்ளப் பட்டாற் போலவும் இத் தமிழ்நாட்டுக்கு ஒரு கல்வி மலராய், ஓர் அறிவு விளக்காய், ஓர் அருங்குணப் புதையலாய்த் தோன்றிய இவ்விளைஞர் தமது 43-ஆம் ஆண்டில் கதுமெனக் கூற்றுவனாற் கவரப்பட்டது ஒரு பெருங் கொடுமையன்றோ?

தம் இல்லத்தில் இருந்த கடிகாரத்தைச் செப்பனிட நேரிட்டபோது உரிய தொழிலாளிக்கு மறைமலையடிகளார் பின்வருமாறு எழுதினார்.

"நிலைக் கடிகாரததில் மணி முள் நிமிட முள்ளை அழுத்தும் பித்தளைச் சிறு குமிழ் முறிந்துபோனதற்கு வேறு நல்லதொன்று பொருத்தவில்லை. மணி முள்ளும் கழன்று கீழே தொங்குகின்றது. அதனை இறுகப் பொருத்த வேண்டும்."

மறைமலையடிகள் நூல் நிலையத்தார், தமிழக அரசுக்கு அனுப்பிய பின்வரும் வேண்டுகோள், அவருடைய பெரும் பணியை நன்கு கூறுகிறது:

"நாட்டுக்கு நலம்புரிந்த பெரியார், புலவர் பெருந்தகை, அண்மையில் மறைவெய்தியமறைமலை அடிகள் ஆவார். இக்காலத்தே தமிழ் மக்களிடையே காணும் எழுச்சிக்கும் தமிழ் ஆர்வத்திற்கும் வித்திட்டவரும் மறைமலை அடிகளே ஆவர். தமிழ் மொழிக்கும், தமிழ் இலக்கியத்திற்கும்; சமயத்திற்கும் அரிய தொண்டாற்றியவர் அடிகளார் என்பதைத் தமிழ் நாடு நன்கு அறியும். தொன்மைத் தமிழ்ச் சான்றோர் போன்று தமிழ்மொழியைத் தூய தாய் வளர்த்தவரும்; வழங்கியவரும் அடிகளாரே.பெரும்பாலோர் தமிழைப் புறக்கணித்த அக்காலத்தே, ஆங்கிலம் கற்பதும் பேசுவதும் எழுதுவதுமே அழகெனக் கருதிய அக்காலத்தே அடிகளார் தூய தமிழ் நடையை நிலைநாட்டியது செயற்கரிய செயலாகும், எழுந்த எதிர்ப்பையும் மறுப்பையும் பொருட்படுத்தாது உரங்கொண்டு எழுந்து அடிகளார் காட்டிய செந்தமிழ் நெறியிலே மரபு வழாமல், தூய்மைகெடாமல் இன்று புதுமலர்ச்சி மலர்கின்றது. அடிகளார் இயற்றிய தொண்டின் பயனை, அவர்பட்ட அரும்பாடு தந்த பயனை, இன்று தமிழ்நாடு நுகர்ந்து நலம் பெறுகின்றது.

உயரிய செந்தமிழ் நடைக்கு இலக்கியமாய்த் திகழும் உரை நடை நூல்கள் பலவற்றை அடிகளார் எழுதிப் போந்தார். வடமொழியிலும், ஆங்கிலத்திலும். தமிழிலும் வித்தகப் புலமை எய்திப் புலவரெல்லாம் போற்றும் புலவர் மன்னரான அடிகளார் சிறந்த மொழி பெயர்ப்பு நூல்களும், திறனாய்வு நூல்களும், புதினங்களும் எழுதியுள்ளார், 'சாகுந்தல நாடக ஆராய்ச்சி' ஷேக்ஸ்பியர் நாடகத்திறனாய்வைப் போல வடமொழி நாடகத்திற்கு எழுதப்பட்ட தமிழ்த் திறனாய்வு நூலாகும். சங்ககாலப் புலவர்

களின் கவிதை நயங்கள் எல்லாம் பெற்றிலங்குவது அடிகளார் இயற்றிய 'திருவொற்றியூர் மும்மணிக் கோவை'யாகும். திருவாசகத்தின் முதல் நான்கு அகவல்களுக்கும், திருவொற்றியூர் மும்மணிக் கோவைக்கும் அகலவுரை எழுதித் தொல்காப்பிய உரையாசிரியர்களைப் போலப் பெரும்புகழ் எய்தியுள்ளனர்.

பத்துப்பாட்டில் முல்லைப்பாட்டு, பட்டினப் பாலை முதலிய பாடல்களைப் பற்றி அரிய ஆராய்ச்சிகள் செய்து திறனாய்வு நூல்களைப் படைத்துள்ளார். மொழி பெயர்ப்புக் கலைக்கு இலக்கணமாய் விளங்கும் சில உரைநடை நூல்களை இயற்றியுள்ளார். தமது சொற்பொழிவு செய்யும் முறைகளைப் பல்லோரும் பின்பற்றுமாறு அழகுறச் சொற்பொழிவுகள் செய்து தமிழ்த் தொண்டாற்றினார், தமது வாழ்வு முழுதும் தமிழ்த்தொண்டிற்காகவும், தமிழர் நலத்திற்காகவும் பயன்படும்படி வாழ்ந்து வந்தார். தொலைவிலுணர்தல், மரணத்தின்பின் மனிதர் நிலை, மனிதவசியம், அறிதுயில் போன்ற மறைபொருள் ஆய்வு நூல்களைத் தம் பயிற்சியறிவோடு ஒட்டி முதன் முதலாகத் தமிழில் எழுதியுள்ளார். பல்வேறு துறைகளில் அடிகள் இயற்றிய நாற்பதுக்கு மேற்பட்ட நூல்கள் என்றுமுள தென்றமிழ் உள்ளளவும் கலைக்கருவூலங்களாய் நின்று நிலவும் பெருமையுடையன.

அடிகளாரோ அவர்காலத்தே தம்மைப் புறக் கணித்த, எதிர்த்த மக்கள் நாணுமாறு அவர்களுக்கு நல் நயம் ஒன்றைச் செய்துவிட்டுச் சென்றார். தாம் பெரும்பொருள் செலவிட்டு, அரிதில் தேடிய நாலாயிரத்திற்கு மேற்பட்ட நூல்களைத் தம் இறுதி விருப்ப ஆவணத்தின்படி தமிழ்மக்களின் பொது உடைமையாக்கிச் சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தாரிடம்

ஒப்புவித்துச் சென்ருர். அக் கழகத்தார் தாம் ஈட்டிய பொருளைக்கொண்டு பல நூற்றுக்கணக்கான அரிய நூல்களையும்சேர்த்து, அடிகளார் பெயரால் "மறைமலை அடிகள் நூல்நிலையம்" என ஒரு நூல் நிலையத்தைச் சென்னையில் சிறந்தமுறையில் தமிழ் மக்கள் பயன் துய்க்குமாறு நடத்தி வருகின்றனர்."

மறைமலையடிகளாரின் தனித் தமிழ்த் தொண்டை அவர்தம் மாண்புமிக்க செல்வி நீலாம்பிகை அம்மையார் தொடர்ந்து செய்து வந்தார்கள். இவர் "தனித் தமிழ்க் கட்டுரைகள்", "வடசொல்-தமிழ் அகராதி" என்னும் நூல்களை இயற்றியுள்ளார்.

தனித் தமிழ் இயக்கத்தை வளர்த்த பெருமை கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கும், அதன் தலைவராக இருந்த தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளைக்கும் தெ. இ. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்கும் உண்டு.

**டாக்டர் மு. வ. (பி. 1912)**

மறைமலையடிகளைப் பின்பற்றி, மிகப் பல தமிழ் எழுத்தாளர்கள் இயன்றவரை தனித்தமிழில் எழுதி வந்திருக்கிருர்கள். கா. சுப்பிரமணிய பிள்ளை, (மறைமலையடிகளின் மாணவரான) இளவழகனுர், டாக்டர் மா. இராசமாணிக்கனுர், தேவநேயப் பாவாணர் முதலியோர் இயன்றவரை தனித் தமிழில் நூல்கள் ஆக்கியுள்ளனர். குறிப்பிடத் தக்க மற்ருெருவர்—தலைசிறந்த அறிஞரும் புகழ்பெற்ற எழுத்தாளரும் ஆகிய—டாக்டர் மு. வரதராசனுர் ஆவார். சேதுப்பிள்ளை அவர்களின் எழுத்து மயிலின் நடை என்ருல், வ. ரா. வின் தமிழ் மின்வெட்டு என்ருல், மு. வ. வின் நடையை அமர்ந்த அறிவியல் ஓட்டம் என்று சொல்லலாம். எல்லாவிதக் கருத்துக்களையும் சொல்லத் தக்க ஆற்றல் தமிழ் மொழிக்கு இருப்பதை

இவருடைய எண்ணற்ற நூல்கள் உறுதிப்படுத்து கின்றன. தனித் தமிழ் என்றால் பல்லை உடைக்கும் தமிழ் என்று பிறர் எண்ணும்படியாக அறிஞர் சிலர் பேசியும் எழுதியும் வருகின்றனர். இதற்கு மாறாக இனிய எளிய முறையிலும் தூய தமிழில் எப் பொருளை யும் பற்றி எழுத இயலும் என்பதை நிலைநாட்டியிருக் கிறார். டாக்டர் மு. வ. தம் நூல்களில் மறைந்து போன பெயர்களையும் இசையொலி, அருளப்பன், மலர்விழி, பாவை, அல்லி, கனிமொழி, செந்தாமரை, தேமொழி, வளவன், இசைவாணன் என்ற பெயர்களை யும் பாரிமுனைபோன்ற இடப் பெயர்களையும் பயன் படுத்தி, நாடெங்கும் அவற்றைப் பரப்பியுள்ளார்.

இவருடைய நடை எளிமையானது; சிறிது படித் தவரும் புரிந்துகொள்ளக் கூடியது. சான்றாகச் சில பகுதிகளைத் தருவோம்:

''அறிஞர் பெர்னார்ட் ஷாவை நான் மதிப் பதற்குக் காரணம், வாழ்க்கைச் சிக்கல் எதுவாயினும் அதை மேற்போக்காகக் கண்டு மருந்திட்டுச் செல்லா மல், அடிப்படைக் காரணம் கண்டு திருத்தும் ஆற்றல் அவருடைய எழுத்துக்களில் இருத்தலே ஆகும்.

அறிஞர் ஷாவினிடம் எல்லோரும் கண்ட பெரிய குறை அவருடைய செருக்கும் கிறுக்கும் ஆகும். ஆனால், அவர் அவ்வாறு பேசியபோதும் எழுதிய போதும் அவரை ஒருவரும் வெறுத்தது இல்லை; அவரோடு சேர்ந்து சிரித்தார்களே அல்லாமல், அவரை நோக்கிச் சிரிக்கவில்லை.

அஞ்சாமை
கவலை இன்மை
கலை உயர்வு
அறிவின் தெளிவு

இவையே ஷாவின் வாழ்க்கை.

வருங்காலக் கலையுலகம், அரசியல் உலகம், சீர்திருத்த உலகம், விஞ்ஞான உலகம், சமய உலகம் அத்தனையும் அறிஞர் பெர்னாட் ஷாவை மறவாமல் போற்ற வேண்டிய வகையில் அவருடைய வாழ்க்கை விளங்கியது. இனி அந்த ஒளியை அவருடைய பற்பல நூல்களும் மங்காமல் பரப்பி வரும் என்பது திண்ணம்.''

## ஔவை துரைசாமிப் பிள்ளை

சித்தாந்த கலாநிதி உரைவேந்தர் ஔவைக்குப்பம் சு. துரைசாமிப் பிள்ளை, கரந்தைக் கவியரசு இரா. வேங்கடாசலம் பிள்ளையிடம் பாடங்கேட்டவர்; சங்க நூல்களிலும் சைவ சித்தாந்த சாத்திரங்களிலும் நல்ல பயிற்சி பெற்றவர். அதற்குச் சிறந்த சான்று அவருடைய மணிமேகலை, பதிற்றுப்பத்து (உரையோடு கூடிய, பதிப்புக்கள். சிலப்பதிகாரம் முதலிய ஐம்பெருங் காவியங்களில் உயிரோடுள்ள சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி என்னும் மூன்றையும் புலவரல்லாதார் சுருக்க முறையில் படித்துச் சுவை அறிவதற்கும் காவிய உண்மைகளை ஆராய்வதற்கும் ஏற்றாற்போல மூன்றுக்கும் தனித்தனியே சுருக்க நூலும் தனித்தனியே ஆராய்ச்சி நூலும் திறம்பட எழுதியும் பதிப்பித்தும் வெளியிட்டுள்ளார். 20ஆம் நூற்றாண்டின் சிறந்த பதிப்பாசிரியர் எனப் புலவர் மாநாடு சிறப்பித்திருப்பவர்களுள் இவரும் ஒருவர்.

இவர் சொல்வன்மை வாய்ந்த நாவுக்கரசர்; கேட்பவர் அனைவர்க்கும் புரியும்படி எப்பொருளையும் தெள்ளத்தெளிய எடுத்துக் கூறும் ஆற்றல் வாய்ந்தவர் இன்றும் தாம் இருக்குமிடந்தோறும் பலருக்குப் பாடங் கற்பித்து அவர்களையெல்லாம் தமிழ் வித்துவான்களாக்கி வருபவர். சான்றாக, வடஆர்க்காடு

மாவட்டத்துத் திருவோத்தூரில் உள்ள வித்துவான்கள் அனைவரும் இவரிடம் பாடங் கேட்டுப் பயன்பெற்றவர்களே.

இவருடைய கட்டுரைத் தொகுதி ஒன்று "ஔவைத் தமிழ்" என்ற பெயரில் வெளிவந்திருக்கிறது. ஐங்குறுநூறு விளக்கவுரையும் 7 முதல் 10 வரையுள்ள நூற்றாண்டுகளுக்குத் தமிழ் இலக்கிய வரலாறும் நற்றிணை உரையும் எழுதியுள்ளார்.

## தேவநேயப் பாவாணர்

இவர் இலக்கண அறிவு நிரம்பியவர். தனித் தமிழ் இயக்கத்துக்கு ஏற்றம் தந்து வருபவர். "கட்டுரை விரைவியல்", "சுட்டு விளக்கம்", "திராவிடத்தாய்", "செல்லாராய்ச்சிக் கட்டுரைகள்" "உயர்தரக் கட்டுரை இலக்கணம்" என்ற இவருடைய நூல்கள் மாணவருக்குப் பெரிதும் பயன்படுவன. தமிழ் உணர்ச்சியைப் பரப்பித் தமிழர் உள்ளங்களில் மொழிப் பெருமை நிலைக்கச் செய்துள்ள புலவர்களில் இவர் தலையாயவர்.

தனித் தமிழ் இயக்கத்தின் பயனாக, இப்போது மிகப் பலர் நல்ல தமிழில் எழுத முயன்று வருகின்றனர் பாட நூல்களிலும், தமிழ்ச் சொற்கள் முன்னிலும் மிகுதியாகக் காணப்படுகின்றன. தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் தனித் தமிழில் பல நூல்களை வெளியிட்டிருக்கின்றனர்.

## வட சொல்லும் தமிழ்ச் சொல்லும்

சிறிது படித்தவர்களும் தங்களுக்குள் பேசும் போதும் எழுதும்போதும், வட சொற்களுக்குப் பதிலாகத் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தி வருகின்றனர். இத்தகைய சொற்களின் பட்டியல் ஒன்றை இங்கே தரு

வடுதன்பது இயலாது, ஒரு சில சொற்களை மட்டும் சான்று தருவோம்.

| | | |
|---|---|---|
| நமஸ்காரம் | — | வணக்கம் |
| விலாசம் | — | முகவரி |
| தபால் | — | அஞ்சல் |
| சர்வகலாசாலை | — | பல்கலைக் கழகம் |
| வருஷம் | — | ஆண்டு |
| பாஷை | — | மொழி |
| விவாஹம் | — | திருமணம் |
| உப அத்யட்சகர் | — | துணை வேந்தர் |
| பிரசங்கம் | -- | சொற்பொழிவு |
| மாசம் | — | திங்கள் (கன்னட மொழியில் திங்கள் என்ற சொல், வழக்கி லுள்ளது.) |

**ஏனைய மொழிகளிலும் தூய மொழி இயக்கம்**

தனித் தமிழில் புதிய சொற்கள் உருவாக்கப்படும் போது, "இவை மக்களுக்குப் புதியன; ஒருகாலும் இவை புரியாதன. புரியாத தமிழ் வேண்டாம்" என்று சிலர் சொல்லுகின்றனர். புதிய சொற்கள் ஏற்படுவது ஒரு மொழியின் இயல்பு. எல்லா மொழி களிலும் ஆண்டுதோறும் புதுப்புதுச் சொற்கள் தோன்றிய வண்ணமாக இருக்கின்றன. சான்றாக, ஆங்கில மொழியில் Black-out, Black Market, De-Control போன்ற சொற்கள் போர்க் காலத்திலேயே ஏற்பட்டன. இச் சொற்களைப் பயன்படுத்துவோரைப் புரியாத ஆங்கிலம் பேசுகிறார் என்று யாரும் குறை கூறுவதில்லை. ஒரு மொழியில் இயன்றவரை பிறமொழி கலப்புக் கூடாது என்ற கருத்தும், இதையொட்டிய கிளர்ச்சியும் பல நாடுகளில் இருந்து வருகின்றன. வட

மொழிச் சொற்கள் மிகுதியாக உள்ள மலையாள மொழியில், தனி மலையாள மொழி இயக்கம் தோன்றியிருக்கிறது. உருது மொழிக் கலப்பின்றி இந்தி மொழியை வளர்க்கப் பல முயற்சிகள் நடைபெறுவது நாம் நன்கறிந்ததே. இந்தி மொழியிலும் வட சொற்களைக் குறைக்க வேண்டுமென்று, இந்தியத் தலைமை அமைச்சர் ஜவஹர்லால் நேரு கூறியுள்ளார்.* துருக்கியில் அரபு பேர்சிய மொழிச் சொற்களுக்குப் பதிலாக தொன்மையான துருக்கி மொழிச் சொற்களைப் பயன்படுத்தும் இயக்கத்தைக் கெமால் ஆதாதுர்க் என்பவர் பரப்பிப் பெரும் அளவு வெற்றி கண்டார். பெர்சியாவில் வேற்றுமொழிக் கலப்பின்றிப் பெர்சிய மொழி வளர்க்கப்பட்டு வருகிறது. ஆங்கிலத்தைப் பேசும் அமெரிக்கர் தங்களுடைய இயல்புக்கேற்ப ஆங்கிலத்திலுள்ள சொற்களினின்றும் வேறுபட்ட பல சொற்களை பயன்படுத்தி வருகின்றனர். இதற்குச் சில சான்றுகள் தருவோம்:

| இங்கிலாந்தில் | அமெரிக்காவில் |
|---|---|
| Aerodrome | Airport |
| Bill of Lading | Ocean Document |
| Biscuit | Cracker |
| Boot - laces | Shoe - strings |
| Bracers | Suspenders |
| Charge - Sheet | Ticket |
| Cinema | Movie |
| Client | Account |
| Company | Corporation |
| Compartment | Coach |

*The Sanskritised Hindi of the Pandits which was in vogue should be replaced by popular living and flexible Hindi. —Jawaharlal Nehru THE HINDU August 28, 1952.

| இங்கிலாந்தில் | அமெரிக்காவில் |
|---|---|
| Convocation | Commencement |
| Currency - note | Bill |
| Drama | Play |
| Half - yearly | Semi - annual |
| Ill | Sick |
| Lift | Elevator |
| Luggage | Baggage |
| Milk | Cream |
| Motor - car | Automobile |
| Pavement | Sidewalk |
| Parcel | Package |
| Petrol | Gasoline |
| Petrol bunk | Filling Station |
| Platform | Track |
| Post | Mail |
| Property | Real Estate |
| Railway | Railroad |
| Receipt | Chek |
| Share | Stock |
| Shop | Store |
| Store | Ware - house |
| Stud | Collar - button |
| Taxi | Cab |
| Telegram | Cable |
| Thermos - flask | Vacuum Jar |
| Tram | Street - Car |
| Transporting | Shipping |
| Vice - chancellor | President |
| Walking - stick | Cane |
| Waistcoat | Vest |

ஒரே சொல்லுக்கு இங்கிலாந்தில் ஒரு பொருளும் அமெரிக்காவில் மற்றொரு பொருளும் உண்டு. இத்தகைய சொற்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன. இவற்றை அறிய விரும்புபவர்கள் The American Language-Supplements I and II by H. L. Mencken (Alfred & Knopf, New York) என்ற நூலைப் படிக்கலாம். எடுத்துக்காட்டாக, அனுபவ வாயிலாக யாம் அறிந்த சொற்கள் சிலவற்றை இங்கே குறிப்பிடுவோம். CORN என்னுஞ் சொல் இங்கிலாந்தில் கோதுமையையும் அமெரிக்காவில் சோளத்தையும் குறிக்கிறது.

சாலைகளில் பொது மக்கள் நடப்பதற்கென ஒதுக்கப்பட்டுள்ள பகுதியை அமெரிக்கர் Sidewalk என்பர்; வாகனங்கள் செல்லும் பகுதியை Pavement என்பர்; இதன் பயனாக, "Dont walk on the Pavement; Use the Sidewalk" என்ற அறிவிப்புக்களை அமெரிகாவிற் காணலாம்!

"Homely" என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு இரு நாடுகளிலும் மாறுபட்ட பொருள் உண்டு. இங்கிலாந்தில் பயன்படுத்துவதுபோல, அமெரிக்காவில் நமக்கு விருந்தளித்தவர்கட்கு நன்றி கூறும்போது இந்தச் சொல்லைப் பயன்படுத்தினால், அவருடைய மனைவி தவறான ஒழுக்கமுடையவர்கள் என்று பொருள்பட்டு விடும்!

இவற்றால் "Punch"—இல் வெளிவரும் நகைச்சுவைத் துணுக்குகள் அமெரிக்கருக்குப் புரிவதில்லை. "New Yorker"—இல் வெளிவரும் நகைச்சுவைப் பகுதிகள் ஆங்கிலேயர் மனத்தைக் கவருவதில்லை.

பிறமொழிச் சொற்கள் மிகுதியாயுள்ள ஆங்கில மொழியிலும், பிற மொழிச் சொல் என்பதைக் குறிப்

பதற்காக அந்தச் சொற்களைச் சாய்வு எழுத்துக்களில் (Italics) அச்சிட்டு வருகின்றனர்.

ஆங்கில நாட்டில் தனி ஆங்கில மொழி இயக்கம் இருந்து வருவதற்கும் சான்று தருவோம்.

சிறந்த எழுத்தாளராவதற்கு மூன்று யோசனைகளை ஓர் ஆங்கில ஆசிரியர் வெளியிட்டுள்ளார்.* அவையாவன:

(1) சுற்றி வளைத்துச் சொல்லும் சொற்றொடருக்குப் பதிலாக ஒரே சொல்லைப் பயன்படுத்து.

(2) நீளமான சொல் வேண்டுவதில்லை; சுருக்கமான சொல் போதியதாகும்.

(3) **பிறமொழி கலந்த சொல்லைக் காட்டிலும் தூய சொல்லையே கையாளுக.**

இதிலிருந்து ஆங்கிலத்திலும் தூய மொழி இயக்கம் வலுத்து வருவது கண்கூடு. இன்றியமையாத கலைச் சொற்களுக்கு மட்டும் பிறமொழிச் சொற்களை ஏற்றுக்கொள்ளலாமென்றும் அவர் தெரிவித்திருக்கிறார். உரிய விவரங்களை அடிக் குறிப்பில் காண்க.

---

*Prefer the single word to the circumlocution.
Prefer the short word to the long.
Prefer Saxon word to the Romance.

‡Under Romance words, we include all that English has borrowed from Latin either directly or throughd the Romance languages - (Italian French and Spanish) - and words borrowed form Greek in general use, ranging from alms to metampsychosis may be considered as Romance. The vast number of purely scientific Greek words, as OXYGEN and MENINGITIS are on a different footing, since they are usually the only words for what they denote.

(Page 1 of THE KING'S ENGLISH—Third Ed. - H. W. Fowler. Oxford University Press)

தனி ஆங்கில மொழிக் கழகம் என்ற ஒரு கழகம் 1918 முதல் இங்கிலாந்தில் இருந்து வருவதையும் அன்பர்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றோம்.*

பிறமொழிச் சொற்களைத் தமிழ் மக்கள் எடுத்தாண்டிருக்கின்றார்கள். எனினும், அவற்றைத் தமிழ்ச் சொற்கள் என்று அவர்கள் கொள்ளவில்லை. "வட சொல்", "திசைச்சொல்" என்றே கொண்டுள்ளனர். வடமொழிச் சொற்கள் முதலியவற்றைப் பழந்தமிழர் ஏற்றுக்கொண்ட போதும் வடமொழி உருவத்திலேயே அவற்றை ஏற்றுக்கொள்ளவும் இல்லை. அச்சொற்கள் தமிழர் ஒலி முறைக்கேற்பத் திருத்தி அமைத்தே ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதும் கண்கூடு.

மேற்கண்ட காரணங்கள் ஒருபுறமிருக்க, மேற்குக் கடற்கரை ஓரத்தில், வடமொழி குடி புகுந்தபோது தமிழில் வட சொற்கள் மிகுதியாகக் கலந்தமையால், தமிழ் அழிந்து மலையாளம் என்னும் புதியதொரு மொழி தோன்றிற்று; அதன் பயனாகத் தமிழ் மொழி பேசுவோரின் தொகை குறைந்துவிட்டதென்பதை நாம் மறப்பதற்கில்லை. அம்மட்டோ? அப்பகுதியில் வாழும் எஞ்சிய தமிழர் ஏளனம் செய்யப்படுகிறார்கள். தமிழ் மொழியும்,

"நான்படும் பாடு சிவனே
  உலகர் நவிலும் பஞ்சு
தான்படு மோ சொல்லத்தான் படுமோ?
  எண்ணத் தான்படுமோ?
கான்படு கண்ணியில் மான்படு
  மாறு கலங்கி நின்றேன்;
ஏன்படு கின்றனை என்றிரங்
  காயெனில் என் செய்வனே?"

*Society For Pure English (P. 25 of Sir Ernest Gowers' Plain Words: Pubd. by His Majesty's Stationery office, London 1948.

என்ற திருவருட்பாவுக்கு இலக்காய் நின்று பரிதவிக்கிறது.

### அறிஞர்கள் கருத்து

இனி, தனித்தமிழ் இயக்கத்தைப்பற்றிச் சோமசுந்தர பாரதியார், சுத்தானந்த பாரதியார், சாமி வேலாயுதம், நாமக்கல் கவிஞர் ஆகிய அறிஞர்களின் கருத்துக்களை அறிந்து கொள்வோம்:

### சோமசுந்தர பாரதியார்

''புதிய கருத்துக்கள் எழுங்கால், பழைய மொழிப் பாத்திகளில் அம்மொழியின் அரிய உரிச் சொல் முளையைத் திரித்தாற்றி விளை நாற்றை மாற்றி நட்டுப் புதியவகைச் சொல்லாக்கல் ஒரு முறை. அக்கருத்தைப் பிற மொழியாரிடமிருந்து கொள்ள நேரின் அவர் மொழியில் அதற்குரிய சொல்லோடு ஏற்பதுவும் தவறாகா; இழிவுமன்று. ஆனால், எக்கருத்தும், அதற்கேற்பக் கொள்ளுபவர் மொழி முளையாம் உரியடியை விதை முதலாகக் கொண்டு உரத்தாலும் ஒட்டாலும் திருத்தமுறச் சொற்புனைய உதவுவது மொழி இயலில் அமைந்த உண்மை.

பல மொழி நூல் பயின்று அவற்றை ஒப்பு நோக்கி ஆராய்ந்து அளந்தறிந்த பெரும்புலவர், கால்டுவெல் ஐயர், எல்லிசறிஞர், வீரமாமுனிவர், போப்பையர் போல்வாரும் தமிழ் தனித்தியங்க நல்ல செம்மொழி எனத் துணிந்து கூறுகிறார். தமிழர் எனப் பேசுபவர் சிலரதனை அறியாமல் பேசுவது வியப்பன்றே. அவர்க்கதனில் ஐயம் எழ நேர்ந்த தேனோ? தமது பரு மறைப்பதற்கோ, தணியாத தமதடிமை மோகவெறி மறைப்பாலோ அல்லாமல், பிறிதேது காணலரிது.''

**சுத்தானந்த பாரதியார்**

இவர் 300 நூல்களை இயற்றியிருக்கிறார். இவர் செந்தமிழ் நடையில் எழுதவல்லவர். "ஏழைபடும் பாடு", "இளிச்சவாயன்" போன்ற விக்டர் ஹ்யூகோ வின் நாவல்களை இவர் மொழி பெயர்த்திருக்கிறார். இவருடைய வரலாறான **ஆத்மசோதனையில்** சுத்தானந்தர் சுதந்திரப் போராட்ட கால நிகழ்ச்சிகளையும் இடை யிடையே தந்திருக்கிறார். "யோக சித்தி", "திருக் குறளின்பம்", "சிலம்புச் செல்வம்" ஆகியவை இவரு டைய நூல்களிற் சிறந்தவை. இவருடைய நடை என்று (சில சொற்களைத் தவிர) சிறப்பாக ஒன்றும் சொல்வதற்கில்லை. ஏன் எனின், நடை நூலுக்கு நூல் மாறுபடுகிறது. தனித் தமிழ் இயக்கம்பற்றி இவர் கருத்து வருமாறு;

> "உலகிலுள்ள கலைச் செல்வமெல்லாம் தமிழில் வழங்க வேண்டும் என்பதே எனது கனவு. அதற் கிசைந்த நூல்களையே நான் சென்ற முப்பத்தைந் தாண்டுகளாக எழுதி வருகிறேன். தமிழில் வேண்டிய சொல்வளமும் உள்ளது. பழைய நூல்களைக் கொண்டும், புதிய ஆராய்ச்சியைக் கொண்டும் வெப்ஸ்டர் அகராதியைவிடப் பெரிய பெருஞ் சொல் லகராதி வகுக்க முடியும். பிரெஞ்சு மொழியைவிடத் தமிழில் சொற்கள் மிகுதியாயுள்ளன. இன்னும் இருபதாண்டுகள் தமிழர் தமிழ் வளர்ச்சியிலேயே கருத்தூன்றி முயன்றால், தமிழ் ஆங்கிலத்திற்கு மேல் ஓங்கி நிற்கும். இப்போது இந்திய மொழியாக விளங்கும் இந்துஸ்தானியைவிடத் தமிழ் பன்மடங்கு சொல்வளமும், பொருட் செறிவும், தன்னுறுதியும் உடையது. இந்திய மொழிகள் அனைத்தும், வட மொழி, பார்ஸி, உருது, ஆங்கிலம் கலவாமல் இயங்க முடியாது. வங்க மொழியில் நூற்றுக்கு அறுபது வட

மொழி, பாலி; மீதி பார்ஸி, ஆங்கிலம். தெலுங்கில் பாதி தமிழ், பாதி வடமொழி. மலையாளம்; கன்னடம் நூற்றுக்கு எழுபத்தைந்து தமிழ், மீதி வடமொழி. தமிழ் ஒன்றுதான் எம்மொழிக் கலப்பும் இல்லாமல் தனியரசு செலுத்தக்கூடிய மொழி.''

## தமிழ்மணி சாமி வேலாயுதம் 1895-1957

இவர் ''மொழியரசி'' என்னும் தொகுப்பு நூலை வெளியிட்டுள்ளார். அதன்கண் தமிழ் நாட்டவராலும் மேனாட்டவராலும் தமிழின் சிறப்பியல்புகளைப் பாராட்டி இதுவரை வெளிவந்துள்ள கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. இந்நூல் தமிழன்பர் யாவரிடமும் இருத்தற்குரியது. இவர் திருக்குறட் சொல்லடைவு என்னும் பேரகராதியையும் இயற்றியுள்ளார். இந்நூலில் ஆசிரியரது உழைப்புத்திறன் ஆராய்ச்சித்திறன் அறிவுத்திறன் மூன்றையும் ஒருங்கே காணலாம். தனித் தமிழ் இயக்கத்தைப்பற்றி இவர் கருத்துக்களைக் கேட்போம்:

''தூய்மை அல்லது கலப்பின்மையை விரும்புவது அறிவுடைமையேயாகும். அதில் ஒன்றும் தலை குனிவதற்கில்லை; ஆனால், அதில் பெருமையடையப் பல ஏதுக்கள் உள. உணவுப் பொருள்கள் முதல் உலோகப்பொருள்கள் ஈறுக யாவற்றிலும் கலப்பு அல்லது தாழ்பொருட் சேர்க்கை சட்டங்களாலும் தடை செய்யப் பெற்றுத் தண்டிக்கப்படுவதுங் கண்கூடு. அவ்வாறே சொற்களைப் பயன்படுத்துவதிலும் சொல்லாக்கத்திலும் வேற்று மொழிச் சேர்க்கை பண்பாடுடையோரால் வெறுக்கப்படுவது வியக்கத்தக்கதல்ல. மக்கள் தங்கள் நாட்டிற்கேற்ற நிறம், குறி, உடை, பண்பு, பழக்க வழக்கங்களைக் கொண்டிருத்தல் போல வெவ்வேறு மொழிகளையும்

உடையோராவர். ஒவ்வொரு மொழியும் ஒலி வடிவு, வரி வடிவு, சொன்முறை, புணர்ச்சி முதலியவற்றில் வேறுபட்டே விளங்குகின்றது.

எல்லா மொழிகளிலிருந்தும் பல நூற்றுண்டுகளாகக் கடன் வாங்கிவரும் ஆங்கிலங்கூட இன்னும் ஒரு எழுத்தையுங்கூடக் கடன் வாங்கவில்லையென்பதும், அம்மொழியும் பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்கும்போது தஞ்சாவூரை "டாஞ்சூர்" எனவும், தரங்கபாடியை "டிராங்குபார்" எனவும், மிளகு தண்ணீரை "மிளக்டாணி" எனவும், கட்டுமரத்தை "கடமரான்"* எனவும்......... இவ்வாறு எல்லாச் சொற்களையும் தம் வாயில் நுழையுமாறு மாற்றி அமைத்திருப்பதும் கூர்ந்து நோக்கத் தக்கதாகும்.

ஆங்கிலம் தன்னிடத்துத் தக்க அடிச்சொற்கள் (Roots) இல்லாததால், அப்பொழுது யாவரும் மகிழ்வுடன் பயின்ற உண்மையில் அதனினும் மேம்பட்டு விளங்கிய, கிரேக்க இலத்தீன் அடிகளைக் கொண்டே அறிவியற் சொற்களைப் புதிதாகப் புனைந்தது என்பதை மறக்கக்கூடாது. அம்முறையைத் தமிழும் பின்பற்றல் தக்கதேயாகும்."

---

*அணைக்கட்டு என்ற தமிழ்ச் சொல்லை "அணைக்கட்" (ANICUT) என்றும், பறையன் என்ற தமிழ்ச் சொல்லை, பரையா (PARIAH) என்றும், மண்வெட்டி என்ற தமிழ்ச் சொல்லை மம்மட்டி (MAMMOTTY) என்றும் திரித்துத் தம் மொழிச் சொல் ஆக்குவது ஆங்கிலேயரின் மரபு.

Rice, Ginger என்னும் ஆங்கிலச் சொற்களும், அரிசி, இஞ்சி என்னும் தமிழ்ச் சொற்களிலிருந்தே அமைந்தன என்று கருதுவாருளர். இவைபற்றி, சீ. ஆர். மயிலேறு என்பார். Journal of the Annamalai University Vol. xviii - இல் Some Dravidian Loan Words in English என்ற தலைப்பில் ஆராய்ந்துள்ளார்.

Pandal, Balcony, Bandy என்பவை முறையே பந்தல், பலகணி, வண்டி என்னும் தமிழ்ச் சொற்களிலிருந்து தோன்றியவையே. இத்தகைய சொற்கள் ஏராளமாக உள.

—ஆசிரியர்

**டி. எஸ். சொக்கலிங்கம்**

இவர் 'தினமணி' ஆசிரியராக இருந்தவர்; பத்திரிகைகளில் நாள்தோறும் ஏற்படும் சிக்கல்களை நன்கு உணர்ந்தவர். இவருடைய கருத்தைக் கீழே காண்க:

> "பாகிஸ்தானை எந்த தமிழ்ப் புலவராலாவது மொழி பெயர்க்க முடியுமா? பெடரேஷன் இவைகளுக்குத் தனித் தமிழில் என்ன வார்த்தைகள் இருக்கின்றன? தெர்மாமீட்டர் என்று சொன்னால் சகலருக்கும் புரியும்போது ஒருவருக்கும் புரியாத ஒரு தமிழ்ச் சொல்லடுக்கை உபயோகிக்க வேண்டிய அவசியமென்ன?
>
> டாங்கி, விமானம், பெட்ரோல், மோட்டார், பீரங்கி, குண்டு, துப்பாக்கி, தோட்டா ஆகிய வார்த்தைகளை உபயோகிக்காமல் யுத்த செய்திகளைச் சொல்லவே முடியாது. டாங்கியும் பெட்ரோலும் மோட்டாரும் ஆங்கிலம். இவற்றை எப்படி மொழிபெயர்ப்பார்கள்? தானே இயங்கும் ஊர்தி என்று ஒவ்வொரு தடவையும் மோட்டாருக்குப் பதில் நீளமாக எழுதுவார்களா? விமானம் பீரங்கி குண்டு துப்பாக்கி தோட்டாவை எடுத்துக்கொள்ளுவோம். இவை எல்லாம் தமிழ் வார்த்தைகள்தானே என்று நீங்கள் நினைக்கலாம். புலவர்கள் தனித் தமிழ் கொள்கைப்படி இவை தமிழ் வார்த்தைகளே அல்ல. விமானம் சமஸ்கிருதம். பீரங்கி போர்ச்சுக்கேய பாஷையிலிருந்து வந்தது. குண்டு மராத்தி பாஷை. துப்பாக்கி துருக்கி பாஷை. தோட்டா உருதுவிலிருந்து வந்து சேர்ந்தது. இவ்வளவையும் பிற மொழிச் சொற்கள் என்று தள்ளிவிட்டால், இவற்றிற்குப் பதிலாக தனித் தமிழில் எப்படிச் சொல்வார்கள்? விமானத்திற்குப் பறக்கும் வண்டி என்றும் பீரங்கிக்கு உருண்டு நீண்ட குழாயுள்ள வெடி

யென்றும் சொல்லுவார்களா? அப்படி சொன்னுல் அவை பொருத்தமாயிருக்குமா? அல்லது ஜனங் களுக்குத்தான் புரியுமா?

**சத்தியமூர்த்தி**

"தமிழ் வார்த்தைகளையும் சமஸ்கிருத வார்த்தைகளையும் இடையிடையே சேர்த்துப் பேசுவது முத்தையும் பவழத்தையும் சேர்த்துக் கோத்த மாலைபோல் இருக்கும்."

("சத்தியமூர்த்தி பேசுகிருர்")

திரு. சத்தியமூர்த்தி அவர்களின் கருத்து இவ்வா றிருக்க, தமிழ் மொழியில் பிற சொற்களைக் கலப்பது பாலோடு நஞ்சு கலப்பதற்கு ஒப்பாகும் என்று எண்ணு வாரும் உள்ளனர்.

தமிழ் தனித்தியங்கவல்லது என்ற கருத்தை வின்ஸ்லோ, டாக்டர் கால்டுவெல் ஆகிய மேனுட்டு அறிஞர்களும் வெளியிட்டுள்ளனர்.* விந்தை என்ன வென்ருல் தமிழில் பிறமொழி கலக்கவேண்டுமென்று கூறுபவர்கள் வட மொழியிலோ, ஹிந்தியிலோ தமிழ்ச் சொற்களைச் சேர்த்து எழுதுவதோ பேசுவதோ இல்லை என்பதுதான்.

---

*The following extraets are from Winslow's preface to his COMPREHENSIVE TAMIL AND ENGLISH DICTIONARY OF HIGH AND LOW TAMIL:

Within certain ranges of thought, omitting terms of art, science, religion, in a great measure, and certain abstraet forms, we may write in pure Tamil, as in English, we may, in pure Saxon. In faet the nearer we approach the SEN TAMIL the less we need Sanskrit, Dr. Caldwell has well said: "The Tamil the most cultivated, abintra, of all Dravidian idioms, can dispense with Sanskrit altogether, if need be and not only stand alone, but flourish without its aid."

## தனித் தமிழ் இயக்கத்தைப்பற்றி நாமக்கல் கவிஞர்

''கடுந்தமிழ்ப் பதங்களுள்ள நடையைத் தனித் தமிழ் என்று எண்ணிக்கொண்டு எடுத்தாள்வது படித்தவர்களுடைய ஆராய்ச்சிக்கும் அறிவுக்கும் இன்பமளிக்கலாம் என்றாலும் உலகத்துக்கு உபயோகப்படாது. மொழிகளை உண்டாக்குவது பண்டிதரும் இலக்கண வித்வான்களும்தான். ஆனாலும் அதை வளர்த்து வாழ வைக்கிறவர்கள் பாமர மக்களே. பாமரருக்குப் பழக்கமில்லாத எந்த நடையும் விரைந்து மறைந்துவிடும்.

இதனால் நான் பிறமொழிப் பதங்களையே பெரிதும் உபயோகப்படுத்த வேண்டுமென்று சொல்லுவதாக எண்ணிவிடக் கூடாது. ஆனால் எல்லோருக்கும் எளிதில் புரியக்கூடிய எந்த பதத்தையும் அதைப் பிறமொழிப் பதம் என்பதற்காக விலக்க முயல்வது விரும்பத் தக்கதல்ல. மற்றவர்கள் கடின நடையை நீக்கவேண்டும். தமிழோடு தமிழாகக் கலந்துவிட்ட பிறமொழிப் பதங்களைப் பொறுக்கி நீக்குவது பிழை.

கூடுமான வரையிலும் தமிழ்ப் பதங்களுக்கே இடந்தரவேண்டும் என்பது மிகவும் போற்றத் தகுந்த முயற்சி. அதை நாம் ஆதரிக்கத்தான் வேண்டும். கலைச் சொற்கள் என்று எவருக்கும் புரியாத வடமொழிப் பதங்களைக் கொண்டுவந்து தமிழில் திணிக்க விடுவதைக் காட்டிலும் ''வானொலி'' என்பதைப் போன்ற நல்ல தமிழ்ப் பதங்களை உண்டாக்கவேண்டும் என்பதும் நல்ல முயற்சி.

தொல்காப்பியக் கருத்தையும் இங்கு கவனிப்போம். இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகிய சொற்கள் தமிழில் உள, தமிழுக்கே உரிய சொற்களும் உண்டு. லாரி, மேரு, குங்குமம், டீணி ஆகிய சொற்கள் தனித்தமிழ்ச் சொற்களில்லா

விட்டாலும், வடமொழி தென்மொழி இரண்டிற்கும் பொதுவான எழுத்துக்களாலாய சொற்கள். மேலும் அவை தமிழ் ஒலி முறையை ஒத்தன. இவற்றை எடுத்தாளலாம் என்ற கருத்தைத் தொல்காப்பிய உரைகாரர் வாயிலாக அறிகிறோம்.

வடமொழிக்கே உரிய எழுத்துக்களாலாய சொற்களாயினும் பொருத்தமுடைய சொற்கள் தமிழ் மொழிக்கேற்பச் சிதைந்து, தமிழில் வரலாம்''

**ம. பொ. சி.**

தனித்தமிழ் பற்றிய கிளர்ச்சியின் விளைவாக, தலைவர் ம. பொ. சிவஞானம் தம் கருத்துக்களை விரிவாக எழுதியுள்ளார். 'தமிழும் கலப்படமும்' என்ற அவருடைய நூலின் பகுதிகள் சிலவற்றைக் கீழே காண்க:

''தமிழ், பைஸாஸ பாஷை; சமஸ்கிருதம் தேவ பாஷை, தமிழ் அபிவிருத்தி அடைந்ததும், அது இன்னுள்வரை ஜீவித்து வருவதும் வடமொழியால் தான். வேதாந்த, சித்தாந்த சாஸ்த்ர பூஜா விதிகளையும், ஸ்தோத்ர பூஜா விதிகளையும், தவயோக ஸாதனங்களையும், நாடக-நாட்டிய கலாஞானங்களையும் தமிழர் சமஸ்கிருதத்திடமிருந்தே ஆஸ்ரயித்துக் கொண்டனர். அதனுல், சமஸ்கிருதப் பதங்களை, லிபிகளைத் தமிழில் வெகுவாக ஸம்பந்தப்படுத்தி தமிழைப் போஷிக்க வேண்டும் என்கின்றனர் ஒரு சாரார்,

இவர்கள் கலப்படக்காரர்கள்.

தமிழர்க்கு சமக்கிருதப் பாடை வேண்டாம்; அந்தப் பாடையில் உள்ள இலக்கியங்களை, சமயசாத்திரங்களைத் தமிழில் மொழிபெயர்க்கத்தேவையில்லை வடமொழிச் சொற்கள் கூட தமிழில் கலத்தல்

கூடாது; கூடவே கூடாது. தமிழ் தனித்தியங்கும் மொழி; தெலுங்கு, கன்னட மலையாள மொழிகளின் தாய்மொழி, ஆகவே, தமிழின் தனிமையை, தூய்மையைக் காத்தல் தமிழர் கடன்-என்கின்றனர். ஒரு சாரார்.

இவர்கள், தனித் தமிழ்க் கட்சியினர்.

முன்னவர், பேச்சு மொழி அல்லாத வடமொழியின்பால் வரம்பு கடந்த 'பக்தி, கொண்டு, 'களை' யெடாமல் தாய்மொழிப் பற்று என்னும் நீர் விடாமல், இலக்கண மரபு என்னும் வேலி கட்டாமல் தமிழ்ப் பயிரை வளர்க்க விரும்புகின்றனர். பின்னவர் வடமொழியின்பால் தாம் கொண்ட 'பகைமை' என்னும் 'நஞ்சை' எருவாக்கித் தமிழ்ப் பயிரை வளர்க்க முயல்கின்றனர்.

பல்லாவரம் சுவாமி வேதாசலம் அவர்கள், தமிழ்மொழியில் அளவற்ற புலமை பெற்றிருந்தார். சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய பிறமொழிகளிலும் அவருக்குப் போதிய ஞானமிருந்தது. ஆயினும், தமிழில் பிறமொழிச் சொற்கள்-குறிப்பாக, வடமொழிச் சொற்கள் கலக்கக்கூடா தென்பதில் அவர் 'வைதிகம்' காட்டி வந்தார். தாம் எழுதி வெளியிடும் நூல்களில் தம்மையும் அறியாமல் வடமொழிச் சொற்கள் கலந்துவிடினும், மறுபதிப்பில் அவற்றைக் களைந்தெறிவதைக் கடமையாகக் கொண்டிருந்தார். பெரும் புலமை பெற்ற அவர்கூட வடமொழிச் சொற்களை முதலில் பெய்வதும் பிறகு களைவதுமாகப் 'போராடி'க் கொண்டிருந்தார் என்பதை மறப்பதற்கில்லை.

இந்த நிலையில், 'தனித் தமிழ்'க் கிளர்ச்சி தேவையா? சாதாரணக் கல்வி அறிவுள்ளவர்களும் தமிழில் நூல் எழுதும் அளவுக்கு விஷய ஞானம் வளர்ந்துள்ள இந்நாளில், தனித்தமிழில் எழுத

**வேண்டுமென்ற கிளர்ச்சி அந்த வளர்ச்சிக்குத் தடைபோடுவதாகாதா?**

மறைமலையடிகளார், வடமொழிச் சொற்களை முற்றிலும விலக்கிவைத்தெழுவதில் வல்லுநராக இருந்தது உண்மை, அவர் எழுதிய வெல்லாம் இலக்கிய நூல்கள்—புலவர்கள் மட்டுமே படித்துப் பயனடையத் தக்க எழுத்தோவியங்கள்.

இன்று உலக மொழியாக விளங்கும் ஆங்கிலத்தில் கூட, பிரஞ்சு, லத்தீன், கிரீக்கு ஆகிய மொழிகளின் சொற்கள் ஏராளமாகப் புகுந்துள்ளன. இந்தக் கலப்பின் காரணமாக ஆங்கில மொழி வளம் பெற்றதோடு, உலக மொழியாக வருவதற்கும் அதற்கு வாய்ப்புக் கிடைத்தது. ஆகவே தமிழ் தனித்தியங்கும் மொழியாக இருப்பினும் அது வளர்ச்சி பெறுவதற்குக் காலப்போக்கில் — தேவைப்படும் போதெல்லாம் பிறமொழிச் சொற்களை ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஏற்றுக்கொண்டும் வந்திருக்கிறது.

சங்க காலத் தமிழகத்தில், தமிழ் மன்னர்கள் புலவர்கள், மற்றுள்ள மக்கள் ஆகியோருடைய பெயர்களெல்லாம் தமிழிலேயே அமைந்திருந்தன. காரி பாரி, ஓரி, வளவன், குட்டுவன், செழியன் என மன்னர் பெயர்களும்; கீரன், நக்கீரன், குட்டுவன் கீரன், அரிசில் கிழார், கோவூர் கிழார், அடியநெடு வேட்டுவன், நப்பசலையார், நச்செள்ளையார், காக்கை பாடினியார், ஔவையார் எனப் புலவர் பெயர்களும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

சமய உணர்வு பெருகி, அகச் சமயங்களும் புறச் சமயங்களும் போராடும் களமாகத் தமிழகம் மாறிய இடைக் காலத்தில், மன்னர்கள்—புலவர்கள் பெயர்களும் மதவழி பிறமொழிகளில் மாறின.

ராஜசிம்மன், நரசிம்மவர்மன், ராஜராஜன், ராஜேந்திரன், அரிகேசரி, பராக்கிரமன் என மன்னர் பெயர்களும்: சுப்ரதீபக் கவி, அதிவீர ராமன், ஜெயங்கொண்டான், குமரகுருபரர், சிவப் பிரகாசர், மீனுட்சி சுந்தரர் எனப் புலவர் பெயர் களும் வடமொழியில் அமைந்திருத்தலைப் பார்க் கிறோம்,

இந்த மாறுதல்களெல்லாம் இந்துசமயத் தமிழர் களிடை ஏற்பட்டவையாகும். இதனுல் தமிழை, தமி ழகத்தின் ஊர்ப் பெயர்களை, மக்கள் பெயர்களை வட மொழி மயமாக்கிய குற்றத்தைப் பார்ப்பனப் புரோகிதர்மீதே சுமத்துகின்றனர் ஒரு சாரார்.

ஆனுல், வரலாற்றை நடுவு நிலைமையுடன் ஆராயுமிடத்து, இந்து சமயப் புரோகிதர்களே யன்றி, இஸ்லாமிய 'மௌல்வி'களும், கிறிஸ்துவப் 'பாதிரிமார்'களும் கலப்படத் ''திருப்பணியில்'' கலந் திருப்பதைக் காணலாம்.

இஸ்லாமியத் தமிழர்கள், 'சுபான்', 'ரஹீம்', 'ஸிபக்துல்லா', 'இஸ்மாயில்', :ஸலீம்', 'சாந்த் பீபி' என்ற பெயர்களை வாழையடி வாழையாக வைத்துக் கொண்டு வருகின்றனர்.

கிறிஸ்துவத் தமிழர்களும், 'ஜேசுபாதம்' 'ஆசீர்வாதம்', 'அந்தோணி', 'மேரி' என்ற பெயர் களை வைத்துக் கொண்டுள்ளனர்.

தமிழ் மொழியின் இலக்கண முறைப்படி ல், ட், ர் என்ற எழுத்துக்கள் மொழிக்கு முதலில் வாரா, இந்த மரபுக்கு மாருக, கிறிஸ்துவத் தமிழர்கள் ''டேனியல்'', ''டேவிட்'', ''லூயிஸ்'' என்றெல்லாம் பெயர்கள் வைத்துக் கொண்டிருப்பதைப் பார்க் கிறோம். இஸ்லாமியத் தமிழர்களிடையேயும்

லத்திப், லப்பை. ரஹீம் என்ற பெயர்கள் வழக்கி லிருக்கின்றன.

ஜ, ஸ, ஷ, ஹ என்ற கிரந்த எழுத்துக்கள் தமிழில் கலந்துள்ளன. அவை அப்பட்ட தமிழ் எழுத்துக்கள் அல்ல என்றால், அப்படியே சுயமான தேவநாகரி எழுத்துக்களும் அல்ல. இரு மொழிக்கும் பொதுவாக, தமிழின் வரிவடிவத்திற்கேற்ப திருத்தப் பெற்ற எழுத்துக்களாகும். ஆகவே, தேவைப்படு மிடத்து அவற்றைப் பயன்படுத்துவது தவறன்று. தனித் தமிழ்க் கட்சியின் தலைவராக விளங்கிய மறைமலையடிகள்கூட இந்தக் கிரந்த எழுத்துக்களை கையாண்டுள்ளார்.

ஷேக்ஸ்பியர் என்ற பெயரை செகசிற்பியர் என்று எழுதுவது நகைப்புக்கிடமாகும். சாக்ரடீஸ் என்பவரை சோக்ரதராக மாற்ற நமக்கு உரிமை யில்லை, அப்படியே 'பாஷை'யை 'பாடை'யாக்கு வதும் அமங்கலமாகும். இந்தமாதிரி இடங்களில் கிரந்த எழுத்துக்களைப் பயன்படுத்தி நயத்தையும் பொருளையும் காப்பதே அறிவுடைமையாகும்.

பொதுவாக, தொல்காப்பியர் காலத்துத் தமிழ் நடைமுறைக்கு வரவேண்டுமென்ற தனித் தமிழ்க் கட்சியோ, அல்லது மணிப்பிரவாளத்தைப் பயன் படுத்தி, வாழையடி வாழையாகப் புலவர் பெரு மக்கள் வளர்த்துவந்த தமிழில் கலப்படம் செய்ய வேண்டும் என்பதோ, தமிழரிலே ஒரு சில நபர் களுடைய எண்ணங்கள்தாம்.

## கலைச்சொற்கள்

கலைச் சொற்களைத் தனித் தமிழில் சொல்ல இயலாது என்பது சிலருடைய கருத்து: இந்தக்

கருத்துத் தவறு என்பதற்குப் பின்வரும் பட்டியலைத் தருவோம்:

| | |
|---|---|
| Aeroplane | வான ஊர்தி, ஆகாய விமானம் |
| Ball-bearings | சிக்கலைக் குறைக்கும் குண்டு |
| Binding | சுவடி கட்டுதல் |
| Block-making | பட அச்சு (அச்சு வெல்லம்) |
| Braille | தொடுமுறைக் கல்வி |
| Centre of Gravity | கவர்ச்சி மையம் |
| Certificate | சான்றிதழ் |
| Commissioner of Police | காவல்துறை ஆணையர் |
| Correspondence School | அஞ்சல் முறைப்பள்ளி |
| Cost of Living Index | வாழ்க்கைச்செலவுக் குறியீட்டு [எண் |
| Creative Evolution | கூர்தல் அறம் |
| Encyclopedia | கலைக்களஞ்சியம் |
| Equator | நிலநடுக்கோடு |
| Excursion | இன்பச் செலவு |
| Fork | குத்துமுள் |
| Free-port | வரியில்லாத் துறைமுகம் |
| Furlong | இளமைற்கல் (இளமையிற்கல்!) |
| Fuel Research | எரிபொருள் ஆராய்ச்சி |
| Handbook | கையேடு |
| Home Economics | இல்வாழ்க்கைக் கலை |
| Intermediate | இடைநிலை |
| Lagoon | கடல் ஏரி |
| Menu | உணவு நிரல் |
| Museum | நிலையான பொருட்காட்சி |
| Non-detailed text | துணைப்பாட நூல் |
| Observatory | ஆய்வுக் கூடம், ஆய்வகம் |

| | |
|---|---|
| Opera | இசை நாடகம் |
| Orchestra | கூட்டியம் |
| Pilot | வளவன் (புறநானூறு-செ. 27) |
| Plan | அமைப்புப் படம். பிளான் (யாழ்ப்பாண வழக்கு) |
| Post-script | பிற்குறிப்பு |
| Precedent | முன்மாதிரி |
| Professorial Chair | பேராசிரியக் கட்டில் |
| Rolling Cup | உலாவரும் கிண்ணம் |
| Super-man | உயர்நிலை மனிதன் |
| Television | தொலைக்காட்சி |
| Tender | கேள்வி விளம்பரம் |
| Thermos Flask | வெந்நீர்ச் சேமச்செப்பு (குறுந் தொகை, 277) |
| Toaster | ரொட்டி சுடும் கருவி |
| Toll-gate | ஆலவாயில் |
| Trawler | நீராவிப் படகு |
| Trial | வழக்கு விளக்கம் (யாழ்ப் பாணம்) |
| Tyre | சிற்கர்ப்பு |
| Underground Drainage | புதை சர்க்கடை |
| Vicious Circle | நச்சுவட்டம் (ஏணிக்குத் தோணி; தோணிக்கு ஏணி) |
| Will | இறுதி ஏற்பாடு |
| Zoo | உயிரினக் கூடம் |

**தமிழ் மரபு**

தனித் தமிழ் இயக்கத்தின் விளைவாக "ஸ", "ஷ", "ஜ", "ஹ" என்னும் எழுத்துக்கள் இப்போது அரிதாகவே பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

உரிய எழுத்துக்களுக்கு இணையாகப் பயன்படுத்தப் படும் தமிழ் எழுத்துக்களாவன.

| | | |
|---|---|---|
| ஜ | — | ச, ய |
| ஷ | — | ட, ச |
| ஸ | — | த |
| ஹ | — | அ |

மிகப் பலர், சொற்களைத் தமிழ் மரபுப்படி எழுதி வருவதைக் கீழ்வருவனவற்றால் அறியலாம்:

| பிறமொழிச் சொல் | தமிழ் தழீய சொல் |
|---|---|
| போலீஸ் | போலீசு |
| கிறிஸ்தவர் | கிறித்தவர் |
| சந்தோஷம் | சந்தோசம் |
| வருஷம் | வருடம் |
| நஷ்டம் | நட்டம் |
| ராஜ்யம் | இராச்சியம் |
| வரதராஜன் | வரதராசன் |
| ஜப்பான் | சப்பான், யப்பான் |
| ஹோட்டல் | ஓட்டல் |
| மஹாநாடு | மா நாடு |
| ஹிந்தி | இந்தி |
| ராதாகிருஷ்ணன் | இராதாகிருட்டிணன் |

தமிழில் ரகர லகரங்கள் சொற்களின் முதல் எழுத்தாக வருவதில்லை. எனவே, "ர"கர "ல"கரத்தை முதலாகவுடைய வடசொற்கள் தமிழில் பயன்படுத்தப் படும்போது, அவற்றுக்கு முன்னர் உரிய உயிர் எழுத்துக்கள் இடம் பெற்றுவிடுகின்றன. சான்றாக,

| | |
|---|---|
| ராமன் | இராமன் |
| லட்சுமணன் | இலக்குமணன் |

தமிழ் மொழியில் க்,ச்,ட்,த்,ப்,ற்-என்னும் வல்லின மெய்களை ஈறாகவுடைய சொற்கள் இல்லை; ஆகையால், வாக், திக் முதலான வேற்று மொழிச் சொற்கள் தமிழில் வருங்கால் அவற்றை "வாக்கு", "திக்கு" என்றே இருவகை வழக்கிலும் வழங்குதல் மரபு. மார்ச்சு, ஆகஸ்ட்டு, நியூ யார்க்கு நகரம் என வல்லொற்றிறுதியான சொற்களை உகர ஈறாக எழுதி வருகின்றனர்.

ஒரு மொழியின் மரபுக்கு மாறுபட்ட சொல்லைக் கையாளுவதால் விளையும் தீமையை விளக்க ஒரு நிகழ்ச்சியைக் கூறுவோம். ஹாமில்டன் வாராவதி என்று சென்னையில் ஒரு பாலம் இருக்கிறது. இது ஹாமில்டன் என்னும் ஆங்கிலேயர் பெயரால் ஏற்பட்டது. இப் பெயரும் "ஹ" என்ற ஒலியும் தமிழ் மக்கள் வாயில் நுழையாமையால் இது "அமில்டன் வாராவதி" என்றும் "அம்டன் வாராவதி" என்றும் மருவியும் மாறியும் வழங்கி இப்போது அம்பட்டன் வாராவதி ஆகிவிட்டது; ஆங்கிலத்திலும் அப்பொருள் பற்றியே பார்பர்ஸ் பிரிட்ஜ் (Barber's Bridge) என்னும் பெயரே இப்போது வழங்கி வருகிறது. இதைப்போலவே மதுரையிலுள்ள "Main guard Square" "மேங்காட்டுப் பொட்டல்" ஆகி விட்டது. தூத்துக்குடியில் "St. Paul Street" என்பது செம்புத் தெரு என்று சொல்லப்படுகிறது. செம்புக்கும் தெருவுக்கும் ஒரு தொடர்பும் இல்லை. இன்னும் சேலம் மாவட்டத்திலுள்ள Macdonald's Choultry என்னும் இரயில் நிலையம் தமிழில் மகுடன் சாவடி என்று சொல்லப் படுகிறது.

## அன்றாடவாழ்க்கையில் தனித் தமிழ்

சென்ற நூற்றாண்டின் இறுதியில், தமிழ் மக்கள் தங்கள் திருமணத் தாள், கருமாதித் தாள், கூட்ட அழைப்பு ஆகியவற்றை மணிப்பிரவாள நடையிலேயே எழுதினர். அவற்றுக்குரிய சான்றுகளையும், அவற்றில் ஏற்பட்டுள்ள மாறுதல்களை விளக்குவதற்குரிய சான்று களையும் காண்போம்:

**திருமண இதழ் (1)** **19-ஆம் நூற்றாண்டு**

உ

ஸ்ரீ ராமஜெயம்

### "விவாஹ சுப முகூர்த்தப் பத்திரிகை"

ஸ்ரீ பிரகதாம்பாள் கடாக்ஷத்தால் நாளது விக்ருதி வருஷம் சித்திரை மாசம் 13-ந் தேதி புத வாரம் பூசநக்ஷத்திரமும் பஞ்சமி திதியும் கூடிய சுப யோக சுப தினத்தில், சூரியோதயாதி நாழிகை 6-க்கு மேல் தனுசு லக்னத்தில்,

| | |
|---|---|
| எனது | திருச்சினுப்பள்ளி<br>மகா-ா-ாஸ்ரீ |
| சேஷ்ட குமாரன் | லேட் கோபாலகிருஷ்ண<br>கோனுரவர்கள் |
| சிரஞ்சீவி | கனிஷ்ட குமாரத்தி<br>சௌபாக்கியவதி |
| **குப்புசாமிக்கும்** | **லோகநாயகிக்கும்** |

பாணிக்கிரஹணம் செய்து கொள்வதாய் சர் வேஸ்வரன் கிருபையை முன்னிட்டு, பெரியோர் களால் நிச்சயிக்கப்பட்டு ஷை முகூர்த்தம் திருச்சினுப் பள்ளியில் நடைபெறுவதால் அதற்கு தாங்கள் **இஷ்டமித்ர பந்துக்களுடன்** நான்கு நாள் முன்ன தாகவே வந்திருந்து வைபவத்தை விமரிசையாக நடத்தி குழந்தைகளை ஆசீர்வதித்து சிறியேனையும் கௌரவிக்க வேணுமாய்க் கோருகிறேன்.

13-4-1887,
புதுக்கோட்டை.

இப்படிக்கு தங்கள்,
**காத்தக்கோனுன்**

திரு. திருமதி. திருவாட்டி என்ற தமிழ்ச் சொற்களிருக்க, பலர் அழைப்பிதழ்களில் சிரஞ்சீவி, சௌபாக்கியவதி என்ற வடசொற்களைப் பயன்படுத்தி வருகின்றனர். அச்சொற்களைக் குறிப்பதற்காகச் சுருக்கமாக, சி. சௌ. எனத் தமிழிலும், Chi Sow என்று ஆங்கிலத்திலும் எழுதி வருகின்றனர். இவ்வாறு எழுதி வருபவர்கள் Sow என்று ஆங்கிலத்தில் ஒரு சொல் இருப்பதையும், அச்சொல்லுக்குப் பெண் பன்றி என்று பொருள் இருப்பதையும் அறியார்போலும். இத்தகைய தவறுகளை நீக்கவேனும் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துவார்களாக!

கோருகிறோம் என்பதற்குத் தவருக கோறுகிறோம் என்று பலர் அச்சிட்டு வருகின்றனர். கோறுகிறோம் என்பதற்குப் பொருள் "கொல்கிறோம்" என்பதை இவர்கள் அறியவில்லைபோலும்!

**திருமண அழைப்பு (2)**

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

முருகப் பெருமான் திருவருளால் நிகழும் விய ஆண்டு ஆவணித் திங்கள் 24-ஆம் நாள் (9—9 '46) திங்கட்கிழமை, சிங்கவேளை முற்பகல் 5 மணிக்கு மேல் 6–30–க்குள்

| | |
|---|---|
| என் தம்பி<br>சி. ஆ. இரத்தின முதலியாரின்<br>இளைய குமாரன்<br>பைந்தமிழ்ச் செல்வன்<br>**சி.ரா. பழனியாண்டிக்கும்** | குறிஞ்சிப்பாடி, சவுளிக்கடை<br>நோ. மு. ந. சின்னசாமி<br>முதலியாரின்<br>தலைமகள்–திருமதி<br>**தனலட்சுமிக்கும்** |

குறிஞ்சிப்பாடி, விழப்பள்ளம் "முருகனகத்தில்" திருமணம் நடைபெறும். அதற்குத் தாங்கள் குடும்பத்துடன்வந்திருந்து சிறப்பித்தருளவேண்டுகிறேன்.

தங்கள் அன்புள்ள,

**சி. ஆ. மாணிக்க முதலியார்**

**திருமண அழைப்பு (3)**

உ

திருச்சிற்றம்பலம்

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணின் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

திருச்சிற்றம்பலம்.

**அன்புடையீர்,**

*30, செங்குந்தர் வீதி*
**புதுச்சேரி.**

*வணக்கம். அடியவர்க்கெளியோன் அருள்துணை கொண்டு நிகழ் சோபகிருது ஆண்டு ஆவணித் திங்கள் 13-ம் நாள் (29-8-1963) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு துலா லக்கினத்தில் எமது முதல் மகள்*

*திருநிறைச்செல்வி*
**அமுதாவுக்கும்**

*உயர்திரு. ந. முத்துக்குமாரசுவாமி* **B.A., B.E.,**
(Superintending Engineer, Madras State Electricity Board)
*அவர்களது மகன்*
*திருநிறைச்செல்வன்*
**அம்மையப்பன் B.E., க்கும்**

*சென்னை, ஆழ்வார்ப்பேட்டை, 48, மௌப்ரேஸ் சாலை, எதிராஜ கல்யாண நிலையத்தில் நிகழும் திருமணத்திற்கும், அன்று மாலை நடக்கும் வரவேற்புக்கும் தாங்கள் வந்திருந்து மணமக்களை வாழ்த்தியருளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.*

*தங்களன்பார்ந்த,*

| | | |
|---|---|---|
| **முகூர்த்தம்** | **காலை 9 மணி** | **ஆனந்தபாஸ்கரன்** |
| **வரவேற்பு** | **மாலை 6 மணி** | **பெரியநாயகி** |

---

(*பரத நாட்டியம்:* **குமாரிகமலா, ராதா, வசந்தி**)

திருமண இதழ் (4)

**செ. கணேசலிங்கன்**

4, டிக்மன்ஸ் பாத்,
(Dickman's Path)
கொழும்பு-5.
20-10-60.

அன்புடையீர்,

வணக்கம்.

எதிர்வரும் 29-10-60 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு, பம்பலப்பிட்டி, கில்டன் பிளேஸ், 60ம் இலக்கத்திலுள்ள திரு. வே. குமாரசாமி அவர்களின் இல்லத்தில், எங்கள் திருமணம் நடைபெற இருப்பதை மகிழ்வுடன் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

டாக்டர் மு. வரதராசன் அவர்கள் திருமண விழாவிற்குத் தலைமை தாங்கி நடாத்தி வைப்பார்கள். இத் தமிழ்த் திருமண விழாவில் தாங்களும் கலந்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

தங்கள் அன்புள்ள,
**செ. கணேசலிங்கன்,**
**வே. மீனும்பாள்.**

---

பி. கு.—கில்டன் பிளேஸ், புதிய அரசாங்க மாடி வீடுகளின் எதிரே செல்லும வழியாகும்.

திருமண இதழ் (5)

**மு. ரா. பெருமாள் முதலியார்,** ஆசிரியர் கல்லூரி,
எம். ஏ., எல். டி., சைதாப்பேட்டை
**முதல்வர்** **சென்னை-15.**

அன்புடையீர்,

இறைவன் திருவருளால், நிகழும் 26—6—'59 வெள்ளிக்கிழமை காலை 7-30 மணிக்கும் 9-30 மணிக்கும் இடையில்,

என் மகள்

**பெ. சாந்தகுமாரி**

என்ற நங்கைக்கும்

திரு. ம. சண்முகசுந்தர முதலியார் அவர்கள் மகன்

**ம. ச. முத்து**

என்ற நம்பிக்கும்

(M. A., M. Sc., Assistant Research Officer, Central Marine Fisheries Research Station, Tuticorin)

சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரிச் சூழலிலுள்ள எனது இல்லத்தில் நடைபெறும் திருமணத்திற்குத் தாங்கள் வந்து, மணமக்களை வாழ்த்துமாறு, நானும் என் மனைவி தனலட்சுமியும் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,

**மு. ரா. பெருமாள்**

## நிகழ்ச்சி நிரல்

26—6—'59 வெள்ளிக்கிழமை

மணவினை: காலை 7-30—9-30 மணி

வரவேற்பு: மாலை 5-30 மணி

நாட்டியம்:

**பொன்வயல் சுசீலா, சரோஜா**

**குறிப்பு:** பரிசு எதுவும் வழங்கற்க.

உ
திருவருள் துணை

## அறுபதாம் ஆண்டு நிறைவு மண அழைப்பிதழ்

*திருவாளர்......................அவர்களுக்கும்*

*அவர்களுடைய திருநிறை மனைவியார் அவர்களுக்கும் பேரன்புடையீர்! வணக்கம்.*

*எனது அறுபதாம் ஆண்டு நிறைவு நாளான விகாரி ஆண்டு பங்குனித் திங்கள் உ௰ரு-ம் நாள் (7-4-1960) வியாழக்கிழமை காலை 9மணிக்கு மேல் 10மணி அளவில் அன்பின் வடிவமும் இன்பப்பிழம்புமாக விளங்கும் முருகன் திருவருளைக் கொண்டு ஆ. தெக்கூரில் இறை வழிபாடு, மறை உருவேற்றல், நீரணி விழா, மணச் சடங்கு முதலியன நடைபெறும். நீங்கள் பேரன்புடன் வந்து, சிறப்பித்து, வாழ்த்தி, இன்பம் தருமாறும், இன்புறுமாறும் பணிவன்புடன் வேண்டுகின்றேன்.*

*அடியேன்,*
**கருமுத்து. சிவலிங்கம்.**

**கூட்ட அழைப்பு (1)** உ **19-ஆம் நூற்றாண்டு**

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

## சர்வ ஜன சபை, திருவண்ணாமலை

*நமது சங்கத்தின் மகாசபைக் கூட்டம் 9-ந்தேதி வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு அருணாஜலேஸ்வரர் கோயில் ஆயிரக்கால் மண்டபத்தில் நடைபெறும். அவ்வமயம், ஸ்ரீரங்கம் பிரமுகர் பிரம்ம ஸ்ரீ வடிவேல் செட்டியார் அவர்கள் அக்ராசனம் வகிக்க சம்மதித்துள்ளார்கள். வித்வசிரோன்மணிகள் பலர் பிரசங்கம் புரிவார்கள். ராஜா மடம் சுந்தர பாகவதர் அவர்கள் கதா காலக்ஷேபம் பண்ணுவார்கள். சுண்டல் பிரசாதம் விநியோகிக்கப்படும். ஆகையால் தாங்கள் அவசியம் விஜயம் செய்ய வேண்டுகிறோம். தங்கள் சந்தா பாக்கியையும் சுணங்காது அனுப்பி வைத்தால் உபகாரமாய் இருக்கும்.*

**விஸ்வேஸ்வரன்,**
*காரியதரிசி,*

கூட்ட அழைப்பு (2)

## தமிழ் மாணவர் மன்றம், கல்கத்தா-29.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" —மறை

திருவள்ளுவர் ஆண்டு 1990 விகாரி புரட்டாசித் திங்கள்
17-ஆம் நாள் (3—10—1959) சனிக்கிழமை

காலம்: மாலை 6-00 மணி இடம்: பா. த. சங்கம்

அன்புடையீர்

வணக்கம். முத்தமிழ்த் துறை சார்ந்த நந்தம் உயிரினுமினிய செந்தமிழின் மேன்மையெலாம், 'பெருக இவ்வையம்' என்றே, கைம்மாறு வேண்டாது முயன்று, நூல்களாக யாத்து வழங்கியுள்ளனர் தண்டமிழ்ப் புலவர்கள். பாயிரம்பாடிய பனம் பாரனார் முதல் இன்றைய அறிஞர்கள்வரை அனைவரும் கன்னித் தமிழ் மொழி, காலவெளியிலே வளர்ந்து, ஞாலத்திற் சிறக்க நற்பணிகள் பல கண்டுள்ளனர்.

பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு போல நவில்தொறும் நூனயம் இன்பம் பயக்கும். மன்ற முதலாவது ஆண்டுவிழாவிலே தமிழகத்தின் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டவரும், 'நமது தலை நகரம்' 'என் பிரயாண நினைவுகள்', 'அமெரிக்காவைப் பார்', 'பிரயாணம் ஒரு கலை', 'செட்டிநாடும் தமிழும், 'பண்டிதமணி,' 'வளரும் தமிழ்' மற்றும் பல நூல்களின் ஆசிரியருமான உயர்திரு. சோமலெ அவர்கள் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்த அன்புடன் இசைந்துள்ளார்கள்.

கூட்டத் துவக்கத்தில் மன்ற உறுப்பினர்களின் கருத்துப் பொழிவுகளும் நடைபெறவுள்ளன.

செல்வத்துள் எல்லாம் தலைசான்ற செவிச்செல்வம் பெற்றிட வருக என வாழ்த்தொலித்து வரவேற்கின்றோம்.

அன்புடன்,

நன்றி (ஒ-ம்) கி. சி. ரா. கிருஷ்ணன்

30—7—59 பொதுச்செயலாளர்.

"தமிழிலே பேசுவேன், தமிழிலே எழுதுவேன்,
சிந்தனை செய்வதும் தமிழிலே செய்வேன்" —பாரதி

# ஆனந்த விகடன் நாடக இலக்கியப் போட்டி

## பரிசளிப்பு விழா

**பேரன்புடையீர்,**

நாளது ஆவணி மாதம் 29ம் நாள் (14-9-61) வியாழக்கிழமை மாலை 5-30 மணிக்கு ஆனந்த விகடன் 25,000 ரூபாய் பரிசு நாடகப் போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெற்ற எழுத்தாளர்களுக்குப் பரிசுத் தொகை ஆனந்த விகடன் அலுவலகத்தில் நடைபெறும் விழாவில் நேரில் வழங்கப்படும். அமைச்சர் **திரு. சி. சுப்பிரமணியம்** அவர்கள் இவ் விழாவுக்குத் தலைமை வகிப்பார். டாக்டர் **பி. வி. ராஜமன்னார்** அவர்கள் பரிசுகளை வழங்குவார்.

தாங்கள் அவசியம் வந்து விழாவைச் சிறப்பிக்க வேண்டுகிறோம்.

தங்கள் அன்புள்ள.
**எஸ். எஸ். வாசன்**
ஆசிரியர், ஆனந்த விகடன்.

### நிகழ்ச்சி நிரல்

**14—9—61 வியாழன் மாலை 5-30 மணிக்கு**

தேனீர் விருந்து, தமிழ் வணக்கம், வரவேற்பு,
பரிசுகள் வழங்குதல், பாராட்டுரைகள்,
தலைவர் உரை, நன்றி உரை

# அழகப்பா கல்லூரிப் பேரவைத் தேர்தல்

மழையவன் கரங்கள்: விண்ண
மலரவன் நெஞ்சும்; பொன்னின்
இழையவன் எண்ணம்; வள்ளல்
இறைவனுக் கிறைவன்; அந்த
அழகனின் கொடையால் வந்த
அரங்கிடை எனை அமர்த்தக்
குழைவுளத் தோழர் வருக!
குறையிலா இளமை வருக!

**அன்புசால் மாணவப் பெருமக்களே!**

நம் கல்லூரிப் பேரவைக்கு முதலாண்டுச் சார்பாளனாய்ப் போட்டியிடும் என்னை, "எதனை எவன் முடிக்கும், என்றாய்ந்து அதனை அவன் கண்விடல்" என்னும் குறளுக்கு ஏற்ப நன்றாய்ந்து நன்வாக்கால் தேர்ந்தெடுப்பீர்.

தங்களை என்றும் மறவா நண்பன்,
**S. பாலசுப்ரமணியன் (பாலு)**
**முதலாண்டு (கலவியல்)**

கூட்ட அழைப்பு (3)

## தமிழ் இலக்கியக் கழகம், தில்லை

நாள் : 7—11—1951.
நேரம் : இரவு 8 மணி
இடம் : அண்ணாமலை நகர மண்டபம்
சொற்பொழிவாளர் : ம. பொ. சி.
பொருள் : "சிலம்பு காட்டும் செந்நெறி"

அனைவரும் வருக

**குறிப்பு :** அன்பர்களின் கேள்விகளுக்கு விடை கூற விருந்தினர் இசைந்துள்ளார். கூட்டம் இரவு பத்து மணிக்கு முடிவடையும். போக்குவரத்து வசதி உண்டு.

---

## புதுமனை புகுதல் அழைப்பு

நிகழும் கர வருஷம் பங்குனி மாதம் கச-ந் திகதி 27—3—'52 வியாழக்கிழமை காலை 9 மணி 8 நிமிஷம் தொடங்கி 9 மணி 34 நிமிஷத்துக்குள் வரும் அச்சுவினி நட்சத்திரமும் இடப லக்கினமும் கூடிய சுபதின முகூர்த்த வேளையில், காலஞ்சென்ற பிரபல வைத்தியர் ஸ்ரீமான் சிங்கமாப்பாணர் அவர்களின் மகனும் ஸ்ரீமான் சிற்றம்பலம் சோதிடர் வைத்தியர் அவர்களுடைய பெரு மகனுமாகிய சி. இராசகுல சூரியர் சோதிடரும் வைத்தியருமாகிய நான் சுன்னு கத்தில் (யாழ்ப்பாணம்-காங்கேசன்துறை ரோட்டுக் கருகாமையில்) அமைக்கப்பெற்ற புதிய இல்லத்திற் கிரகப்பிரவேசஞ் செய்ய நிச்சயித்திருப்பதால் அன்பு மிக்க உரித்தாளரையும் சினேகிதர்களையும் சமுகம் அளிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றேன்,

இங்ஙனம்,

சுன்னாகம்,
21—3—'53 } **சி. இராசகுலசூரியர், வைத்தியர்**

நீத்தார் கடன் (1)

உ

ஊர்க்காடு முூ. சுப.

## நீத்தார் கடன்

கர ஸு புரட்டாசி மீ 15உ

எங்கள் தாயார் மீனுட்சி அம்மையார் நெடுநாள் தேக அசௌக்கியமாயிருந்து குணத்துக்கு வராததால் 6-9-'01-ல் சிவலோக பதவி அடைந்தார்கள். வருகிற 18-9-01-ல் சவண்டி வைக்கப்பட்டிருக்கிறது.

முத்துக்கருப்பன் ஆசாரி,
மீனுட்சிசுந்தரம் ஆசாரி,
முத்து ஆசாரி.

நீத்தார் கடன் (2)

## நீத்தார் கடன்

தூத்துக்குடி,
10-6-1956

என் மனைவி பல ஆண்டுகளாக நோய்வாய்ப்பட்டிருந்தாள். உயிரி உதவப்பட்டும் பலனளிக்காது அவள் மாரடைப்பின் காரணமாக நேற்று முற்பகல் 10 மணிக்குப் பாளையங்கோட்டை நகராண்மைக் கழக மருத்துவச் சாலையில் இறைவன் திருவடி நிழலை எய்தினள். 12-6-'56 அன்று சவச் சடங்குகள், இந்நகரில் நடைபெறும்.

முத்துசாமித் தேவர்.

வரவேற்பிதழ்களிலும் தமிழ்ச் சொற்கள் முன்னை விட மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன. அதற்குச் சான்ருகப் பின்வரும் இதழ்களைக் காண்க:

**வரவேற்பிதழ் (1)**

**ஒய். எம். சி. ஏ. பட்டி மன்றம்**

எஸ்பிளனேடு, சென்னை-1.

**10—3—'59 செவ்வாய்க்கிழமையன்று நடைபெற்ற பட்டிமன்றப் பதினுன்காம் ஆண்டு நிறைவு விழாவின்போது**

ஆராய்ச்சித்துறை வல்லுநர்

## திரு. மயிலை சீனி வேங்கடசாமி

அவர்கட்கு

**மன்றத்தினர் மகிழ்ந்து படித்தளித்த**

# பாராட்டு வாழ்த்து மலர்

**தமிழகம் பெற்ற பெறற்கரிய பெட்டகமே !**

வருக! வருக! வணக்கம்!

இன்று தமிழ்ப் பெருமக்கள், தமிழ்ப் பேரறிஞர்கள் முன்னிலையில் நடைபெறும் எங்கள் மன்றத்தின் ஆண்டு நிறைவு விழாவிலே தங்களைப் பாராட்டும் பேறுபெற்றமைக்குப் பெரிதும் மகிழ்ச்சி அடைகிருேம் தகுதிமிக்க தமிழ்ப் பேராசிரியராகிய தாங்கள் கலந்து கொள்ளும் இவ்விழா நிகழ்ச்சி, மன்ற வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தக்கதெனப் பெருமிதம் கொள்ளுகின்ருேம்.

**புதுமை வழிகண்ட புலவர் திலகமே !**

தமிழ் ஆராய்ச்சித் துறையில் மற்றவர்கள் ஈடுபடாத புதிய பாதைகளைத் தங்களுக்கே உரியனவாக

வகுத்துத் தாங்கள் புரிந்த ஆராய்ச்சி முடிவுகள் அற்புதமானவை. தாங்கள் எழுதியுதவிய கிறித்தவமும் தமிழும், பௌத்தமும் தமிழும், சமணமும் தமிழும், தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், மறைந்து போன தமிழ் நூல்கள் முதலிய அரிய ஆராய்ச்சி நூல்கள் இலக்கியச் சோலையிலே என்றும் வாடாத நறுமண மலர்களாகும். அண்மையில் 'சமணமும் தமிழும்' என்னும் இலக்கியத்துக்கு ஆயிரம் ரூபா பரிசு தந்து தங்கள் அருமை பெருமைகளைப் போற்றிய தமிழ் வளர்ச்சிக் கழகத்தினரை நாங்கள் உளமாரப் பாராட்டுகின்றோம்: மத்திய அரசியலாரும் தங்கள் மாபெரும் புலமையை வியந்து பரிசளிக்கும் நன்னாளை ஆர்வமுடன் எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

**எளிமையில் இன்பங் காணும் ஏந்தலே!**

உழைப்பால் உயர்ந்த தாங்கள், எளிமைக்கு இருப்பிடமானவர்; அன்பின் திருவுருவமானவர்: ஆராய்ச்சியின் வடிவமாக அமைந்தவர். பல ஆண்டுகளாக 'சௌபாக்கியம்,' செந்தமிழ்ச் செல்வி,' 'தமிழ்ப் பொழில்,' 'கலைக் கதிர்,' 'ஈழ கேசரி' முதலிய இதழ்களில் தாங்கள் இனிமையும் எளிமையும் பொருளாழமும் மிக்க கட்டுரை விருந்து அளித்து வந்திருக்கிறீர்கள். பழங்காலத் தமிழ் மக்களின் சிற்பத்திறன், கட்டடக் கலையறிவு, ஓவியச் சிறப்பு ஆகியவற்றைப் பற்றிய தங்கள் அரிய கட்டுரைகள், தற்காலத் தமிழ் மக்களின் மனக்கண்ணில் பழந் தமிழகத்தின் படப்பிடிப்பாக விளங்குகின்றன. தமிழ் வரலாற்றுத் துறைக்குத் தாங்கள் புரிந்துள்ள தொண்டுகள் தமிழ் மக்களின் உள்ளங்களில் என்றென்றும் பசுமையுடன் இருக்கும் என்பதில் துளியும் ஐயமில்லை.

**நுண்மாண் நுழைபுலம் வாய்ந்த நல்லறிஞரே!**

ஒரு பழங் கோயில் தங்கள் கண்ணிற்பட்டால் போதும், அது கட்டப்பட்ட காலம், கட்டிய மன்னன், கட்டிய முறை, வரலாற்றில் அதன் இடம், அங்கு இடம் பெற்றுள்ள கல்வெட்டுக்கள், அவற்றின் சிறப்புச் சிறப்பு ஆகியவற்றை ஆராய்ந்து அனைவரும் ஒப்புக் கொள்ளும் வகையில் அரிய உண்மைகளை வெளிப் படுத்தி வருகிறீர்கள். இம்முயற்சியில் மெய்வருத்தம் பாராமல், பசி நோக்காமல், கண் துஞ்சாமல், காத தூரமாயினும் கால் நடையாகவே சென்று வரலாற்றுச் சின்னங்களை ஆராயும் தங்கள் அரிய பண்பினை எண்ணி யெண்ணி மகிழ்கிறோம்.

**நடுநிலை தவறாத நல்லறச் செல்வரே!**

தாங்கள் நீண்ட ஆயுளும், நோயற்ற வாழ்வும் பொருந்திப் பைந்தமிழ் மொழிபோல் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றோம். தங்கள் முதிர்ந்த அனுபவத்தின் பயனாக மேலும் பலப்பல ஆராய்ச்சி நூல்களை இயற்றித் தமிழ் மக்களின் இலக்கியப் பசியை அகற்றுமாறு வேண்டுகின்றோம். வணக்கம்.

எஸ்பிளனேடு,<br>சென்னை,<br>10—3—'59.

தங்களன்புள்ள,<br>**ஒய். எம். சி. ஏ. பட்டி மன்றத்தினர்**

1951இல் எழுதப்பெற்ற ஒரு வரவேற்பிதழிலும் மிகுதியான வட சொற்கள் கலந்திருப்பதற்குச் சான்று:

**வரவேற்பிதழ் (2)**

**தமிழ்ப் பெரியார் திரு. வி. கலியாணசுந்தர முதலியார்**

*அவர்களுக்கு*

**சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தினர்**

*வாசித்தளிக்கும்*

## உபசாரப் பத்திரம்

*அன்பு நிறைந்த ஐயா,*

*வணக்கம்*

*புத்தாண்டுப் புதுநாளான இன்று, தமிழகத்தின் முதுபெரும் புலவராக விளங்கும் தங்களது தரிசனம் கண்டு நாங்கள் புத்துணர்ச்சி பெறுகிறோம் புளகாங்கிதம் அடைகிறோம். எங்களது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய தங்களை எங்கள் சங்கத்தின் கௌரவ அங்கத்தினராகப் பெறும் பாக்கியத்தை எண்ணி மகிழ்ச்சியடைகிறோம். நன்றி கூறுகிறோம். பிள்ளைப் பிராயத்திலுள்ள எங்கள் சங்கம் வளர்ந்து பெருகி வலுப் பெறுவதற்கு தங்களது ஆசியையும் அபிமானத்தையும் ஆலோசனையையும் விரும்புகிறோம்; வேண்டிக்கொள்கிறோம்.*

*தமிழுக்கும் தமிழருக்கும் தாங்கள் செய்துள்ள சேவை சொல்லில் அடங்காது. தமிழ்ப் பத்திரிகை உலகில், அன்னிய மொழி அமிதமாகப் பெருகி, தமிழோசை மலினப்பட்டிருந்த காலத்தில், தாங்கள் தமிழை வளம்பெறச் செய்தீர்கள்; தங்கள் தமிழ் மொழி வளமும் வலுவும் பெற்று வளர்ந்தது. அதனால் நாங்களும் வளர்ந்தோம்,*

தாங்கள் தமிழைமட்டும் வளர்க்கவில்லை; தமிழர்களின் நெஞ்சில் தேசிய உணர்ச்சியையும் வளர்த்தீர்கள். தங்கள் எழுத்துக்கள் தமிழ் நாடெங் கும் தமிழோசையையும் சுதந்திர கோஷத்தையும் ஒலிக்கச் செய்தன; தாங்களும் தமிழ் நாடெங்கும் சென்று தமிழோசையைப் பரப்பினீர்கள். தங்கள் தமிழோசையின் எதிரொலியாக, எண்ணற்ற தேச பக்தர்களும் தமிழ்த் தொண்டர்களும் நம் நாட்டில் உருவானார்கள்,

தங்களது இலக்கிய சேவை தமிழ் வளர்ச்சியின் ஏணியேற்றம்; தங்களது தேசபக்தனும், நவசக்தி யும் தமிழ்ப் பத்திரிகை உலகில் இரு சகாப்தங்கள். வாழ்க்கைத் துணையின் பெருமை தங்களால் எங்க ளுக்குத் தெரிந்தது. முருகனின் அழகு உங்கள்சொல் லோவியத்தில் பதிந்தது: சைவத்தில் சமரசம் கண்ட தாங்கள் அரசியலிலும் சமரசம் காண விழைந் தீர்கள். நாட்டு மக்கள் அனைவரும் பொதுமையும் புதுமையும் கொண்ட நவசக்தி வாழ்வு வாழ வேண்டும் என்பதற்காகத் தாங்கள் அரும்பாடு பட்டீர்கள்.

தங்களது அரசியல் ஞானம், நேர்மையான சமுதாய நோக்கம், பண்பட்ட நூலாக்கம், கோவை யுறப் பேசும் மணிப்பேச்சு, கவிதை தோய்ந்த உள்ளம்—எல்லாம் தமிழுக்குப் பெருமை தேடியது மட்டுமல்லாமல், எங்களுக்கு மூல மந்திரமாகவும் ஞான பாடமாகவும் இன்றும் விளங்கி வருகின்றன என்பதைப் பணிவுடன் சொல்லிக் கொள்கிறோம்.

ஈன்ற பொழுதில் உவந்ததைவிட தமிழன்னை தங்களைக் கண்டு இன்று பெரிதும் உவக்கிறாள். தமி ழன்னையின் தவப்புதல்வரான தாங்கள் ''தந்தை மகற்காற்றும் உதவி''யாய், இன்றைய இலக்கிய

சந்ததியான எங்களுக்கு அரிய அறிவுச் செல்வத்தை அளித்திருக்கிறீர்கள்.

எங்கள் பரம்பரையின் பிதாமகனுக விளங்கும் தங்களுக்கு நாங்கள் என்ன கைம்மாறு செய்யப் போகிறோம். தாங்கள் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து தமிழ்மொழியை மேலும் வளப்படுத்த வேண்டும் என்பதே எங்கள் பிரார்த்தனை.

தங்கள் ஆசியை விழையும்,

க. சித்திரை, கர ஆண்டு 14-4-1951

**சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தினர்.**

தூய தமிழ் நடையில் எழுதப்பெறும் வரவேற் பிதழ்களுக்குச் சான்றாக, சிலவற்றைக் காண்போம்:

**வரவேற்பிதழ் (3)**

உ

குருபாதம்

தருமபுர ஆதீனம் ஆவணிமூலத் திருநாளன்று
திருக்குறள் பொருட்பால் உரைவளம் வெளியீட்டு விழாவில்
தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்
சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்
உயர்திருவாளர் **ரா. பி. சேதுப்பிள்ளை, பி.ஏ., பி.எல்.**
அவர்களுக்கு
"சொல்லின் செல்வர்" என்ற பட்டம் வழங்கியபோது
ஆதீனக்கல்லூரி முதலிய கல்வி நிலையத்தார் அளித்த

## பாராட்டுரை

**அறிவின் கடலுக்கு அமைந்த சேதுவே!**

இயல்பாக உருள்கின்ற உருளையைத் தட்டிவிட் டால் அதிகமாகச் சுழலும்: இயற்கையாக அலையெழும்

குளத்தில் நம் கையசைப்பும், கடுங்காற்றசைப்புங் கலந்தால் அலை சற்று அதிகமாகும். எப்பொழுதும் இயற்கையை அநுபவிக்கும் ஒருவனுக்கு, ஒரே சமயத்தில் வேனிற் பருவத்தையும், வேய்ங்குழலோசையையும், வான்மதியையும், வளிரிளங் காற்றையும் காட்டினால் அவன் உள்ளம் இயற்கையைக் கொஞ்சம் அளவு கடந்து அநுபவிக்கும். இது பழக்கத்தில் கண்டது. கை தட்டி ஆர்ப்போசையை அதிகமாக்க அதிகமாக்க, பாடகனுக்கும், பேச்சாளனுக்கும் உணர்ச்சியும் அதிகமாகும். ஆனால் அது ஒரு காலத்தில்—ஒரு சமயத்தில் மட்டும் நிகழ்வது. எப்பொழுதும் கலைஞனது உணர்ச்சியைத் தூண்டிவிடும் ஒரு வழிதான் பட்டமும் பதவியும் அளித்துப் பாராட்டுவது. இதனையறிந்து எங்கள் குருமகா சந்நிதானம் தங்களுக்குச் "சொல்லின் செல்வர்" என்னும் பட்டம் தந்தருளியதைக் கண்டு நாங்கள் பாராட்டுகிறோம்.

**தமிழகம் தந்த தனிப்பெரும் புலவ!**

அறிவுள்ள குழந்தையைத் தந்தை பாராட்டினால் தாய் மகிழ்வாள். தாய் பாராட்டினால் தந்தை மகிழ்வான். இருவருமே சேர்ந்து பாராட்டினால் அக்கம் பக்கத்திலிருக்கும் அனைவரும் மகிழ்வர். அறிவும், ஆராய்ச்சி வன்மையும் அமைந்த தங்களைத் தந்தையாகிய அரசியலும் பாராட்டுகிறது. ஆன்ம வளர்ச்சியின் தாயாகிய எங்கள் ஆதீனமும் பாராட்டுகின்றது. ஆகவே, அக்கம் பக்கத்து உறவின் முறையாராகிய நாங்களும் தங்களைப் பாராட்டி மகிழ்வடைவதில் தடையேதும் இல்லை.

**எதுகை மோனை எழில்நடை வல்லோய்!**

தமிழ்நாட்டில் புலவர்களை இரண்டு நிலையங்கள் போற்றின. ஒன்று அரண்மனை, மற்றொன்று அரன்

மனை. அரண்மனை அயலவர் கையில் சிக்கிய காலத்து அந்தப் பணிகளை அரன்மனைகளே நடத்தின. அத்தகைய அரன்மனைகளில் சிறந்த மனைதான் எங்கள் தருமபுர ஆதீனம். எண்ணிறந்த புலவர்களுக்கு அது ஏற்றங் கொடுத்தது. அத்தகைய புலவர்கள் இன்று தமிழகத்தின் அறிவு வீதிகள் தோறும் பவனி வருகின்றனர். அப்படி உலாவருவோர் வரிசையில் தங்கள் பெயர் இன்று தலைமையாகப் பொறிக்கப் பெற்றிருப்பதைக் கண்டு மாணவர்களாகிய எங்கள் உள்ளம் தனிப் பெருமை யடைகிறது.

**சுருங்கச் சொல்லி விளங்க வைப்போய்!**

பட்டமும் பண்பும், கலையும் பொருளும், அறிவும் பயனும் தக்க இடத்தை அடைந்துவிட்டன. தண் தமிழைச் சுவைத்துக் கொண்டிருக்கும் தங்களுக்கே "சொல்லின் செல்வர்" என்ற பட்டம் உரியது என்று நாங்கள் உளமாரப் பாராட்டி மகிழ்கிறோம்.

தருமபுர ஆதீனம்,
9-9-51

**ஆதீனக் கல்வி நிலையத்தார்.**

**வரவேற்பிதழ் (4)**

## வரவேற்பிதழ்

அறிவெட்டாத் தொல்லரிய பழமையோடு ஆக்க வளம் பெற்றிலங்குத் தமிழினிலே, புதுக்கலைகள் தவழ்ந்திலகி வீறுபெறத் தமிழ்நலமுங் கலைவளமு மொருங்கோங்குந் தகையராய், அகன்றுழ்ந்த அறிவொட்பம், ஆன்ற அறநூற்றிட்பம் இவற்றோடு, **"மொழிநலம் பேணார் முன்னேற்ற விரைவு நலமுணரார், நாட்டினலம், நமதாக்கம் இரண்டில்லை—ஒன்றேயாம்"** என்ற ஒப்பற்ற நெறி நின்று, **கோவை பூ. சா. கோ. கலைக்கல்லூரி**

தமிழ்த் துறைவழி விரிவுரையாளராகப் பணியாற்று கின்றவரும், "தமிழ்க்கடல்" **மறைமலை அடிகளார்** நெறி நின்று ஒல்லும் வகையெலாந் தனித்தமிழ் இயக்கத் திற்கு நல்லாதரவு தருகின்ற துறைபோந்து எழுத்தா லும், பேச்சாலும் நற்றமிழாட்சிக்கு ஏற்றம் நல்கி வருகின்ற கற்ருர் ஏற்றும் பெற்றியுடையராம் அறிவு சால் **முனைவர் மு. வ.** அவர்களின் நன்மாணக்கருமாய **பேராசிரியப் பெருந்தகை திரு. ம. ரா. பொ. குருசாமி** அவர் களே, வருக! வருக!! வருக!!! என்று வாழ்தொலித்து வரவேற்கின்ருேம்.

பிறப்பொக்கும் எவ்வுயிர்க்கும் எனும் நன்னெறிக் கண் நின்று அறவினை, அறிவுவினை, அரசியல் வினை இம்மூன்றினையும் வள்ளுவர் வாய்மொழி விளக்கி யருளி, தெள்ளுதமிழ்ச் சொற்றிறத்தாலே துள்ளும் பகை முடித்துக் கொள்கை நிறைவடைய நாற்றிசை யும் நந்தம் இனிய தமிழால் உயிருளந்துடித்து எழுச்சி யுறுமாறு செய்த "தமிழ்த் தென்றல்" திரு. வி. க. அவர்களின் மறைவினை நினைந்து வருந்தி நின்ற அன்பர் கட்காக ஓர் அறிவொளி விளக்கக் கல்விப் பெருங் கோயிலைத் தோற்றுவிக்க முற்பட்ட தமிழ்ப் பெருந் தகையாருடன் சேர்ந்து, தாங்களும் அறப்பணி இது வெனக் கொண்டு, மெய்வருத்தம் பாராது, பசி நோக்காது, அருமையுங்கருதாது, அவமதிப்புங்கொள் ளாது ஒல்லும் வகையாற் பணி முடித்தமை கண்டு மகிழா நிற்கின்ருேம்.

தமிழ் உலக முதற்ருய் மொழிகளின் **சீன, ஆரிய** மொழிகளின் அசைநிலை, விகுதிநிலைத் தன்மைகளையும், **சித்திய, சேமிய** மொழிகளின் கொளுவுநிலை, உயிர்த் திரிவுநிலைத் தன்மைகளையும், **அமெரிக்க ஆப்பிரிக்க** மொழிகளின் தொகுதிநிலை, பாலிசைவுநிலைத் தன்மை

களையும் ஒருங்கே பெற்றது தமிழ் என்பதாக **ஒப்பியல் இலக்கணப்** பெருந்தகையார் கண்ட கூற்றினை அனை வரும் அறிதற்கும், மொழியறந் திறம்பாது கொண்டும் கொடுத்தும் கலைச் சொற்களை அமைத்து அழகும், அறிவும் விளக்கமுறுதற்கும் அறிவியல் ஏடாம் **கலைக் கதிரின்** வழி நலம் விளைப்பது கண்டு களிப்பெய்து கின்றோம்.

இடத்தாலும், காலத்தாலும் வேறுபாடுற்று, உருச் சிதைந்தும், ஒலிகுலைந்தும், வழுமலிந்தும், மரபு இறந்தும், மயக்கமும் நகையும் தோன்றப் பிழையுற்ற நிலைமாற்றுதலில் புலவர் குழாத்துடன் ஒருங்கு நின்று, வரம்பு இகவா யாப்புறவுற்ற நடைவகையில், **கட்டளைக் கலி, கட்டளை வெண்பா, கட்டளை வஞ்சி** என அளவறுத்த அடிகளால் **ஆய கட்டளைத்** தமிழில், வழுவற்ற செஞ் சொற்களால் மொழி இயல் முடிபு பிழையாமல், திரிபற்ற தெளிவுடைய நடையை ஏற்றமுந் தோற்ற முஞ் சிறக்கத் தமிழுலகிற் கையாள்வது கண்டு **''நீவிர் வாழ்க வாழ்கவே''** என்று வாழ்த்துகின்றோம்.

தமிழ்க் கடலுள் திட்பமுடன் ஊறித் திளைத்து, உளம், மொழி, மெய் ஒன்ற, மெய்மையும், இனிமையும் கலந்திட இயல்பாய்ச் சார்ந்து, உட்பொருளுணர்ந் தெழில் வளங்கண்டேற்றமுடன் தமிழறிவு திரம்பும் சொல்லேருழவர்களாக அனைத்துத் தமிழக மாணவர் கள் விளக்கமுறுதற்கென **வெண்பொன் உருள் கலன்** ஒன்றுடன் அமைந்த சொற்பொழிவுப் போட்டியினைக் கண்டும், ''நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம் யாநலத்து உள்ளதூஉம் அன்று'' எனும் மறைதரு பொருளோர்ந்து, **''நாவலர் மன்றம்''** என்ற சொற் பயிற்சிக்கூடமொன்றினைச் செவ்விதின் அமைத்திட்ட முயற்சி கண்டும் வியக்கின்றோம்.

''எழுத்தின் திறனறிந்தோ இன்சொற் பொருளின்
அழுத்தந் தனிலொன் றறிந்தோ—முழுத்தும்
பழுதற்ற முத்தமிழின் பாடற்கு உரைஇன்று
எழுதத் துணிவதே யான்''

என்று குறித்த பெறலரும் புலவர் பெருமானாகிய **அடியார்க்கு நல்லார்** போன்று, தாங்களும் தமிழ்க்காதல் பற்றித் தயக்கம் தவிர்ந்து, **இளங்கோவடிகள்** நல்கிய **''சிலப்பதிகாரம்''** என்னும் ஒற்றுமை காட்டும் நற்பெருங் காப்பியந் தன்னிலே தோய்ந்து அதனுற்பெற்ற பேரின் பத்தைப் பெறுக இவ்வையம் என்றே, ''உரிமை-உறவு'' எனும் நெறியறத்தாற்காட்டிச் **''சிலப்பதிகாரச் செய்தி''** உரைத்தமைக்கு என்னே கைமாறு செய்யவல்லேம்?

''எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு மான்ற பெருமை தரும்'' என்பதற்கொவ்வ, அன்பு, அறிவு, பணி எனுங் குறிகொண்டு செந்தமிழின் திறங் கூறித் தெளிவுரைகள் வழி இன்பத்தமிழாம் எழிற் பூங்காவிற்கெமையிட்டுச் செல்ல வருக! வருகவே!! என்று வரவேற்கின்றோம்.

**வெல்க தமிழ்! வளர்க தமிழ்ப் பணி!**

கல்கத்தா—29,
8—6—1958

அன்புடன்,
**தமிழ் மாணவர் மன்றத்தார்.**

**வரவேற்பிதழ் (5)**

# முத்துப் பாடல்கள்
## வெளியீட்டு விழா
### இந்நூலியற்றிய பேராசிரியர்
### *மயிலை சிவமுத்து* அவர்கட்கு

# நன்றி பாராட்டு வாழ்த்து மலர்

**மணியரசர் வழிவந்த மாண்புமிகு பெரியீர்!**

வணக்கம். வாழ்க. இன்று வெள்ளம்போல் திரண்டு வந்திருக்கும் அறிஞர் பெருமக்களிடையே தங்கள் உள்ளத் தடாகத்தில் மலர்ந்த குழந்தைக் கவிதைகளை முத்துப்பாடல்கள் என்னும் பெயரில் வெளியிடும் வாய்ப்பினைப் பெற்றமைக்கு நாங்கள் பெருமிதம் அடைகின்றோம்; பேரின்பம் கொள்கின்றோம். எங்கள் முயற்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்த தங்களுக்கு என்றும் மறவா நன்றி பாராட்டுகின்றோம்.

**அறிவுக் கடலே! அன்புக் களஞ்சியமே!**

சென்னை மாணவர் மன்றம் என்னும் திருப்பெயரை அறியாதார் இன்று ஒருவரும் இரார். சென்ற கால் நூற்றாண்டுக்கு மேலாக அம்மன்றம் பாப்பா வகுப்புமுதல் கல்லூரி வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியரின் மொழிவளமும், கலைநலமும் கருதிப் புரிந்துவரும் தொண்டுகள் அளவில்லாதவை. மன்றத்தின் இன்றைய உயர்வுக்கு முழுமுதற் காரணமாக விளங்கும் தாங்கள் மன்ற வளர்ச்சிக்கே தங்கள் வாழ்வை அர்ப்பணித்திருக்கிறீர்கள்.

**புலவர் திலகமே! பொதுநலச் செம்மலே!**

மன்றக் கட்டடத்தில் எப்போதும் தங்களைச் சில குழந்தைகள் வட்டமிட்டுக்கொண்டே இருக்கிறார்கள். ஏன்? அவர்கள் வாய்க்கினிய தின்பண்டங்கள் அளிக்கிறீர்கள் என்பதற்கு மட்டுமா? இல்லை. இல்லை. அவர்கள் காதுக்கினிய பாடல்களும், கருத்துக்கினிய கதைகளும் கூறுவதைக் கேட்பதற்காகவும் உங்களை மொய்த்துக் கொள்ளுகிறார்கள்.

**கொஞ்சும் கவிபாடும் குழந்தை நண்பரே!**

இன்றைய அரும்பே நாளைய மலர். தற்காலக் குழந்தைகளே பிற்காலத் தலைவர்கள். நல்ல குழந்தைகள் நாட்டின் செல்வங்கள். அவர்களுக்காகத் தாங்கள் **நித்தில வாசகங்கள்** போன்ற பாடப் புத்தகங்களும், நித்திலக் கதைகள், நல்ல எறும்பு, நல்ல குழந்தை போன்ற பலப் பல அருமையான கதைப் புத்தகங்களும் எழுதியுள்ளீர்கள். மழலைச் செல்வங்களுக்காகத் தாங்கள் பாடிய பாடல்கள் எல்லாம் அவர்களுடன் கொஞ்சிக் குலவிப் பாடிய அனுபவப் பாடல்கள்; தேனிலே ஊறிய தீந்தமிழ்க் கவிதைகள்.

**எல்லார்க்கும் நல்லவராம் இயல்புடைய பெருந்தகையீர்!**

மழலைத்தேன் ஊறும் நாவிலே நடனமாடும் தங்கள் பாடல்களை மன்றப் போட்டிகளிலே குழந்தைகள் தங்கள் நிலாமுகம் ஒளிவீச, பிஞ்சுக் கைகால்களை அசைத்துப் பாடி ஆடுவதை இன்றைக்கெல்லாம் பார்த்துக்கொண்டே இருக்கலாம்போல் தோன்றும். 'மாமி சுட்ட பிட்டின்' பேர் சொன்னாலே நாவில் நீர் சுரக்கும். 'கொஞ்சிக் கொஞ்சிப் பேசும் பஞ்சவர்ணக் கிளியே!' என்று நீங்கள் கிளியை அழைக்கும் பைந்தமிழ்ப் பாடல் மழலை மணிகளுக்கு மறைமுகமாக நல்ல நீதிகளைப் புகட்டுகின்றது. 'இன்பமுள்ள எறும்பே! எங்கள் கட்டிக் கரும்பே!' என்றுகூறி எறும்புகளுக்கும் தாங்கள் இனிய தோழனாக விளங்குகிறீர்கள்.

**திரு. வி. க. போற்றிய தீந்தமிழ்க் கவிஞரே!**

'நுண்மாண் நுழைபுலம்' மிக்க தங்கள் விளம்பர மற்ற தமிழ்ப் பணிகளைக் குறித்துத் திரு. வி. க. அவர்களே பலபடப் பாராட்டிக் கூறியுள்ளார்கள். இன்று தாங்கள் தமிழாசிரியர்கள் தந்தை, குழந்தைகளின் தோழர், மாணவர்களின் மணிவிளக்கு என அனைவ

ராலும் கொண்டாடப்படுகிறீர்கள். இங்குச் சென்னைக் குழந்தை எழுத்தாளர் சங்கச் சார்பில் தமிழகத்துப் பேரறிஞர் உயர் நீதிமன்ற நீதிபதி மாண்பு மிக்க ஏ. எஸ். பி. அய்யர் ஐ. சி. எஸ். அவர்கள் இனிய தலைமை ஏற்க, தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவரும் **'நண்பன்'** இதழாசிரியரும் ஆகிய உயர்திரு **மீ. ப. சோமசுந்தரம்** ('சோமு) அவர்களால் தங்கள் நூல் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. அறிஞர்கள் பலர் பாராட்டுரை வழங்கு கின்றார்கள். அன்பர்கள் பலர் வாழ்த்துகின்றார்கள். அவ்வாழ்த்தொலியில் நாங்களும் கலந்து கொள்ளு கின்றோம். தாங்கள் நீண்ட ஆயுளும் நோயற்ற வாழ்வும் பொருந்தி எல்லா வளங்களும் நிறைந்து வாழ இறைவன் இன்னருள் புரியுமாறு வேண்டு கின்றோம். தங்கள் முதிர்ந்த அனுபவத்தின் பயனாக மேலும் பலப்பல குழந்தை இலக்கியங்கள் எழுதி உதவ வேண்டுமென விழைகின்றோம்; வணக்கம்; வாழ்க.

தங்கள் அன்புள்ள,
**சித. இராமநாதன்.**
புக்ஸ்(இந்தியா) பிரைவேட் லிமிடெட்

சென்னை,
1—2—1959

ஆவணங்களிலும், கவிதைகளிலும் நல்ல தமிழ் இடம் பெற்று வருகிறது. இவற்றுக்கும் சான்று தருவோம்:

திருத்தணிகையில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுநாள்

## அன்னம்பாலிப்பு நிதி ரூ. 7,000

முருகப்பெருமானுக்குரிய குன்றுதோறாடலில் ஒன்றாய்த் திகழ்வதும், முருகப்பெருமான் வள்ளி யம்மையாரைத் திருமணம் செய்துகொண்டு எழுந் தருளிய பெருமையுடையதும், சூரபன்மன் வேடுவர்

ஆகியவருடன் முருகப்பெருமான் போர்த்தொழில் செய்து கோபம் தணிந்து வீற்றிருந்தமையின் "செறுத்தணி'' என்று காரணப் பெயர் பெற்றதும் காஞ்சி மாநகர்க்கு அண்மையில் இருப்பதால் மிகவும் சிறப்பாகக் கருதப்பெறுவதும், மலர்களில் தாமரையும், ஆறுகளில் கங்கையும், பதிகளில் காஞ்சிபுரமும் சிறந்து விளங்குதல் போல மலைகளில் சிறந்த மலையாக விளங்குவதும், சிவபெருமான் திருக் கயிலை மலையை விரும்பியிருத்தல் போல முருகப் பெருமான் விரும்பி வீற்றிருப்பதும், இந்திரன் நாடோறும் முருகப்பெருமாற்கு முப்போதும் சாத்தி வழிபடும் பொருட்டுக் காலையில் ஒன்றும், நண்பகலில் ஒன்றும், மாலையில் ஒன்றுமாக மூன்று நீல மலர்கள் மலரும் இந்திர சுனையுடையதும், மலையைத் தொழின் பாவநீக்கம் தருவதும், சுனையில் மூழ்கி வழி படுவோர்க்கு முருகன் இருக்கும் உலகம் தருவதும் ஐந்து நாட்கள் தங்கியிருந்து முருகன் திருவடிகளைத் தஞ்சம் என்று வழிபடும் தவத்தோர்க்கு விரும்பிய பேறுகள் எல்லாம் தருவதும், ஒரொரு தருமஞ் செய்யின் பலப்பலவாகப் பெருக்குவதும், பிரமன் அகத்தியர், இந்திரன் முதலியவர்கள் வழிபட்டுப் பேறு பெற்ற தலமாய் விளங்குவதுமான **திருத்தணி** கையில் அந்தணர் அருந்தவர் ஏழைகளுக்கு ஆண்டு தோறும் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு நாளில் அன்னம்அளித்தற் பொருட்டுத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால்** இத்தருமம் நிறுவப்பெற்றது. இது '**திருத்தணி**கையில் **ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் நினைவுநாள்** அன்னம்பாலிப்பு **நிதி**' எனப் பெயர் பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 7,000 (ரூபா ஏழாயிரம்.) இது ஆண்டொன்றுக்கு ரூ. 100-க்கு

ரூ. 3 வீதம் வட்டி தரக்கூடிய அரசியல் கடன் தாள் களில் முதலீடு செய்யப் பெற்றுள்ளது. 3% கன்வர்ஷன் லோன் ஆப் 1946 சர்க்கார் கடன் பத்திரம் எண் சிஏ, 204022—ரூ. 500; சிஏ. 201024 ரூ.500 சிஏ. 207109—ரூ. 1,000; சிஏ. 209972—ரூ. 5,000 ஆகக் கூடுதல் ரூ. 7,000. இந்நிதி நம்மாலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்களாலும் பரிபாலனம் செய்யப்பெற்று வரும்.

3. ஆண்டுதோறும் இம்முதற் பொருளினின்று கிடைக்கும் வட்டித் தொகை முழுவதும், ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் சிவப்பேறு பெற்ற வைகாசி அமரபக்ஷம் திருதியை நாளில் திருத்தணிகையில் அந்தணர் அருந்தவர் ஏழைகளுக்கு அன்னம்பாலிப்பு நிகழ்த்தப் பயன்படுத்தப்பெறும்.

4. ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டி வரவுக்கு ஏற்பவும், கால விலைக்கு ஏற்பவும், நம்மால் தயாரிக் கப்பெறும் திட்டப்படி அன்னம்பாலிப்பு நடத்தப் பெற்றுவரும்.

5. இவ்வருமானம் வேறு எம்முறையிலும் பயன்படுத்தப் பெறமாட்டாது. இம்முதற் பொருள் நம் பேரிலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்கள் பேரிலும் இருந்துவரும். இம் முதற்பொருள் அரசிய லாரால் திரும்பியளிக்கப்பெறின் அதிக வட்டி தரக் கூடிய அரசியல் கடன் தாள்களில் முதலீடு செய்யப் பெறும்.

திருப்பனந்தாள்
14—10—1958 } (ஒ-ம்) காசிவாசி அருள்நந்தித் தம்பிரான்

தமிழகப் புலவர் குழுவின் அமைப்பாளர்
முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்
அவர்களுக்குச்
செங்கற்பட்டில் 28 9—1968ல் நடந்த
குழுவின் வெள்ளிவிழாக் கூட்டத்தில் படித்தளித்த

## பாராட்டு வாழ்த்துப் பா

1. பொன்னிதருந் திருவளமும் வரலாற்றுப் பெருவளமும்
பொலிய நிற்கும்
நன்னகராம் திருச்சிதந்த தமிழகத்தின் தனித்தலைவ!
நற்பேச் சாள!
மன்னுசிறை புகுந்தன்று வாளொலிஎன் றின்றுரைக்க
வாகை பூண்டோய்!
என்னருமை அண்ணலே! திரு.விசுவ நாதா! நீ
இனிது வாழி!

2. 'நம்மகவை அறுபதிலே தண்டமிழ்க்குத் தொண்டு
நலம்' என் றெண்ணிச் [செயல்
செம்மையுறத் தமிழகத்தின் புலவர்குழு நிறுவி, அதன்
செவிலித் தாயாய்
இம்மியள வெங்களுக்குச் செலவின்றி இயக்கிவரும்
எந்தம் அண்ணல்!
எம்விசுவ நாதா! நின் திறமைமிகப் பெரிதம்ம!
இனிது வாழி!

3. ஒவ்வொருகூட் டத்தினுக்கும் முடங்கலொன்றை எனக்
ஊக்கும் செம்மால்! [கெழுதி
ஒவ்வொருகூட் டந்தனையும் அதுநடக்கு மிடம்விரைந்தே
ஒழுங்கு செய்வோய்!
ஒவ்வொருகூட் டத்தினையும் ஒழுங்காக நேரத்தில்
ஊக்கி வைப்போய்!
இவ்விதத்தில் செயலாற்றும் எம்விசுவ நாதா! நீ
இனிது வாழி!

4. பெருங்குடும்பம் நிறுவிவைத்த அறங்களெலாம்
பெருகச் செய்வோய்! [பிறழாமல்
திருச்சியிலே உயர்பள்ளி நிறுவியின்று நடத்திடுவோய்!
செல்வம் தேடி
இருநிலத்தில் புலவர்குழு நிலைத்திருக்கக் கட்டடமும்
இருக்க வேண்டிப்
பெருமுயற்சி செய்துநிற்போய்! எம்விசுவ நாதாநீ
பிறங்கி வாழி!

**சந்த விருத்தம்**

வாழி வாழி விசுவ நாத ஏந்தல் வாழி வாழியே!
வாழி வாழி நின்றன் மனைவி மக்கள் வாழி வாழியே!
வாழி வாழி நந்தம் புலவர் குழுவும் வாழி வாழியே!
வாழி வாழி தமிழும் உலகில் வளம்பெருக்க வாழியே!

18, முத்து முதலி தெரு
சென்னை-7.
28—9—1968

அன்புள்ள,
**அ. கி. பரந்தாமனர்**
செயலாளர்.

உயர்திரு கா. **அப்பாதுரை** எம். ஏ., எல். டி.
அவர்களுக்குச்

**சென்னை ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றத்தாரால்**
**2–2–1960 அன்று நடைபெற்ற**
அம் மன்றத்தின் பதினைந்தாம் ஆண்டு நிறைவு
விழாவின்போது அன்போடு அளிக்கப்பட்ட

# பாராட்டு இதழ்

**விழுமிய திறமைகள் கெழுமிய பெரியீர்**

வணக்கம், வருங்காலத் தமிழகத்தை
உருவாக்கும் இக் காலத் தலைவர்களில் தலை

சிறந்த ஒருவராய், அழகு ததும்பும் எழுத்தோவியங்களை அடுக்கடுக்காக இயற்றித் தரும் அருஞ்சிறப்பு அமைந்தவராய், பகுத்தறிவுப் பாதையில் தமிழகத்தை அழைத்துச் செல்லும் பொன்னுன பணியில் பெருந் திறமை வாய்ந்தவராய் ஒளி வீசித் திகழும் தங்களை, மனமார வரவேற்று வாயாரப் பாராட்டி அன்போடு போற்றி மகிழும் நல் வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது பற்றி நாங்கள் மட்டற்ற மகிழ்ச்சி எய்துகின்றோம். செங்கதிரோன் வரவைக் கண்டதும் செந் தாமரை மலர்வதுபோல, தண்மதியின் இன் முகத்தைப் பார்த்ததும் அல்லிமலர் அலர்வது போல, சங்க இலக்கியச் செல்வத்தைக் கையி லெடுத்ததும் புலவர் பெருமக்களின் உள்ளம் பூரிப்பது போலத் தங்களுடைய இன்ப வரவைக் கண்டதும் எங்களுடைய நெஞ்சங்கள் புன்னகைப் பூந்தோட்டங்களாக மாறுவது இயற்கையே அல்லவா? தாயின் வரவு கண்டு மகிழாத சேய்கள் இருக்க முடியுமா? தந்தை யின் இன்சொல் கேட்டுப் பூரிக்காத தனயர் கள் தான் இருக்க முடியுமா?

**மொழிகள் பல அறிந்த முத்தமிழ்ப் புலவரீர்,**

விண்ணென விரிந்து நின்று கடலென ஆழ்ந்து நிற்கும் தங்களுடைய பன்மொழிப் புலமையை எண்ணும்போது பூரிப்பும் பெருமையும் ஒரே நேரத்தில் எங்களுடைய சிந்தையைக் களவாடிச் சென்று விடுகின்றன. தாய் மொழியாம் தமிழ் மொழியிலும் உலக மொழியாம் ஆங்கிலத்திலும் தேர்ந்து

தெளிந்த புலமை படைத்தவராகத் திகழ்வ தோடு நில்லாமல், வடமொழி இலக்கியச் செல்வங்களிலும் ஆழ்ந்து தோய்ந்த பெருமை தங்களுக்கு உண்டு. செம்மொழிகள் எனத் தகுந்த இம்மும் மொழிகள் மட்டுமன்றி, நன்மொழிகளாம் வேறு பல மொழிகளிலும் தங்களுக்கு நற்பயிற்சி இருக்கின்றது. தெலுங்கு, மலையாளம், கன்னடம், இலத்தீன், கிரீக்கு, ஜெர்மன், பிரெஞ்சு ஆகிய பல மொழி களிலும் தங்களுக்கு நற்பழக்கம் உண்டு. பன் மொழிப் புலவர் என்னும் நன்மொழியால் தங்களை இன்மொழி கூறிப் புகழ்ந்து மகிழ் வது இயற்கையே அன்றோ!

**நூல்கள் பல இயற்றிய நுண்ணறிவாள,**

கதை, கட்டுரை, நவீனம், வரலாறு, அறி வியல், நாடகம், தத்துவம், பொருளாதாரம் முதலிய பல்வேறு துறைகளைப் பற்றியும் தாங்கள் மிக இனிய—மிக அரிய—மிக உயர்ந்த நூல்கள் பலவற்றை இயற்றித் தந் திருக்கிறீர்கள். நூற்றுக்கு மேற்பட்ட இந்நூல் களில் வருங்காலத் தமிழகம், சேரன் வஞ்சி, குமரிக் கண்டம், தென்மொழி, இன்பத்துள் இன்பம், வள்ளுவர் நிழல், அறிவுலக மேதை பெர்னாட்ஷா, ஷேக்ஸ்பியர் கதைகள், உலக இலக்கியங்கள் ஆகிய நூல்கள் சிறப்பாகக் குறிக்கத்தக்க செம்மையும் செழுமையும் மிகுந்தன வாகும்.

தாங்கள் தமிழர் சமுதாயம் முழுவதற் குமே, அது செல்ல வேண்டிய பாதையைச் சுட்டிக் காட்டும் பேராசிரியராகவும் பே

ரொளி வீசித்திகழ்கிறீர்கள். இவ்வாறெல்லாம் சீரும் சிறப்பும் பண்பும் பயனும் மிக்க பணிகளை ஆற்றிவரும் தாங்கள், நீண்ட நெடுங்காலம் நன்கினிது வாழ்ந்து நற்றமிழ் மக்களை வாழ்விக்க வேண்டுமென மனமுவந்து வாழ்த்துகிறோம்.

★

தமிழ்ப் பற்றும் தமிழ்ப்பணியும் சமயங்களைக் கடந்தது. கிறித்தவர் தமிழைக் காண்போம்:

**"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது"** (திருக்குறள் 45)

திருமண நாள்:
**22-5-1968**

சீர்மிகு செல்வன்: சீர்மிகு செல்வி:
**ஞா. தாவீது செபஞானம் ஐ. சரோசினி கிளாடிசு**

திருவள்ளுவராண்டு 1999 வைகாசித்திங்கள் 9ஆம் நாள்
அன்புநிறைநண்பர் ஞா. தாவீது அவர்களின்
மன்றல் மகிழ்வுப் பெரு விழாவில்
விருப்புடன் வழங்கும்

# வதுவை வாழ்த்தோலை

**தமிழரசாய்த் துலங்கும் இலக்கிய ஏந்தலே!**

அன்பு மலர்கள் பூத்துக் குலுங்கும் இன்பச் சோலையாம் திருமண வாழ்வில் திளைத்திடும் நீவிர், இல்லறமென்னும் நல்லறத்தில் நாளும் நிவந்தோங்க உளமுவந்து வாழ்த்துகிறேன். **"வினையே ஆடவர்க்கு உயிரே"** என்னும் நற்றமிழ் மொழிவழி ஊரும்உலகும் உய்யும் முறையில் உயரிய

வாழ்வினை மேற்கொள் வீராக. "அன்பின் வழியது உயிர்நிலை" என்னும் வள்ளுவ நன் மொழிக் கேற்பப் பண்பார்ந்த நெறியில் பீடு நடை போட்டுப் புகழொளியுடன் மிளிர் வீராக.

**அமிழ்தினு மினிய அன்பாய் இலங்கும் ஏந்திழையே!**

பெண்மையின் பெருமை முழுமையுறும் தண்மை பொருந்திய இல்லறச் செவ்வியினை ஏற்று மகிழும் இந்நாளில், "மனைக்கு விளக் கம் மடவார்" என்னும் பொன் மொழிக்குப் புதிய ஒளியூட்டும் வகையில் பொலிவுற வழுத்துகிறேன். மாசகற்றும் ஆசிரியப் பணிக்கு அணியாய் விளங்கும் நீவிர், "நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்" என்னும் பாவேந்தரின் மேவிய மொழிக்கு ஓவிய மாய்த் திகழ்வீராக. "இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை" என்னும் சொற்றொ டருக்குத் தக்கதோர் எடுத்துக் காட்டாகத் துலங்குவீராக!

**இன்ப அன்பில் இணைந்துள்ள நன்மணத்தீர்!**

மன்றலின்வந்து மணத்தவிசேறி வென்றி நெடுந்தகை வீரனும் ஆர்வத்து இன்துணை அன்னமுமாய் விளங்கும் நீங்கள், "ஒன்றிய போகமும் யோகமும் ஒத்தார்" என்ற கம்பரின் கற்பனை உணர்விற்கு உயிரூட்டுய்த் தழைத்தோங்குக. அன்பு வழியில் இருமை கெடுத்து ஒருமை கூட்டும் திருவாழ்வில், எல்லாம் வல்ல இறைவனின் நல்லருளால், கல்வி, நன்மக்கள், செல்வம், கவின், மதி,

இளமை, வாழ்நாள், நல்விதி, பெருமை, தேற்றம், நலிவின்மை, வலிமை, வெற்றி, நெல், இசை, நுகர்ச்சி என்னும் பேறு பதினாறும் பெற்றுச் சிறந்தொளிர்வீராக, சொற்பாலமுதும் சுவையுமாகவும், விரியும் பூவும் பொலியும் மணமுமாகவும், மணியும் ஒளியுமாகவும், பைந்தமிழும் பொருளு மாகவும் இணைந்தினிது வாழ்வீராக. செம் புலப்பெயல் நீர்போல் அன்புடை நெஞ்சங் கலந்து, கருத்தொருமித்துப் பெருவாழ்வு பெறுவீராக.

35, சிவன்கோவில் வடக்கு வீதி, பாளையங்கோட்டை } அன்பன், **பா. வளன் அரசு**

உணவு வகைகட்கு இந்நாளில் வழங்கப்பெறும் தமிழ்ப் பெயர்களை உணவு நிரல் ஒன்றில் காண்போம்.

ஓம்

வாலாஜாபாத் இந்துமத பாடசாலை (1916)
வள்ளலார் மாணவர் இல்லம்
பள்ளியின் மேல் பகுதிப் புதுக் கட்டிடத்தைச் சென்னை மாநிலக் "கல்வி-நிதி அமைச்சர் **மேதகு, சி. சுப்பிரமணியம்** பி.ஏ.,பி.எல், எம்.எல்.ஏ., அவர்கள்
திறப்பு விழா ஆற்றியபோது நடந்த

## விழா விருந்து

**29—11—1953 ஞாயிறு உணவு இனங்கள்**

**காலைச் சிற்றுண்டி**

இட்டலி — பல காய்ப் பருப்புக் குழம்பு
நெய்ப் பொங்கல் வெங்காயத் துவையல்
பக்கவடை — வெண்ணெய் — எண்ணெய்

## பகல் உணவு

1 மைசூர்ப் பாகு
2 உளுந்து வடை
3 கஞ்சி வடிக்காத சோறு
4 வெங்காயத் தயிர்பச்சடி
5 பச்சைமிளகாய் இனிப்பு பச்சடி
6 விளாம்பழம் பச்சடி
7 கருணைக்கிழங்கு வில்லை வற்றல்
8 கோசுக்கீரைக் கொந்துக் கறி
9 உருளைக்கிழங்கு உலைத்த கறி
10 சீமைக்கத்தரி முளைத்த பயறு கூட்டு
11 புடலங்காய்க் கடலைமாப் பிட்டு
12 வாழைக்காய் வெங்காய வதக்கல்
13 பச்சைச்பூசுணை பால் கடையல்
14 கத்தரிக்காய்ப் பருப்புக் குழம்பு
15 சாம்பல் பூசுணை மோர்க் குழம்பு
16 கடைந்த பருப்பு
17 உருக்கு நெய்
18 தேங்காய்த் திருவுப் பச்சடி
19 பன்னீர் மிளகு நீர்
20 பயறுதேங்காய்ப் பாயசம்
21 இல்லத்தில் உறைத்துப் பெருக்கிய மோர்
22 சாத்துக்குடி பழத்தோல் துவையல்
23 கமலாக்கனித் தோல் துவையல்
24 வாழைக்காய்த் தோல் துவையல்
25 கருணைக்கிழங்குத் தோல் துவையல்
26 நெல்லித் துவையல்
27 எலுமிச்சை ஊறுகாய்
28 கடாரங்காய் ஊறுகாய்
29 மலை வாழைக் கனி
30 கமலாக் கனி
31 சாத்துக்குடிப் பழம்
32 ஆப்பிள் பழம்
33 சீமை இலந்தைக் கனி

கும்பாபிஷேக இதழ்களில் பாடல்களே மிகுதியாக இருந்த காலம் மாறிவிட்டது. சென்ற நூற்றுண்டில் வெளியான கும்பாபிஷேக இதழ்களில் பின்வருவது போன்ற வாசகம் இருந்தது.

ஸ்ரீமத் அகண்டாகார நித்ய வியாப ஸச்சிதா
னந்த ஸ்வரூப சுத்த ஷாட்குண்ய பரிபூரண பரங்
கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் தமது தர்ம

பத்தினியாரும் லோகமாதாவுமாகிய பராசக்தியா ரோடியைந்து ஸ்ரீசாம்ப மூர்த்தியாய் ஆன்ம கோடிகள் அதிரிசியராகிய தம்மைத் திரிசியராகக் கண்டு எளிதில் உபாசித்துப் போகமோட்சங்களைப் பெற்றுய்ய வேண்டிப் பூலோகத்தில் எண்ணில்லாத பல புண்ணிய ஸ்தலங்களிலே தமது பரிவாரங்கள் புடைசூழ அப் பராசக்தியாரோடு கோயில்கொண்டு வீற்றிருந்தருளுவார்.

அத்தகைய புண்ணிய ஸ்தலங்களுள்ளே, நீர் வளம் நிறைந்ததும் நிலவளம் செழித்ததும் ஏனைய பல வளங்கள் பொலிந்ததும், பாண்டி நாடே பழம் பெரும்பதி என அகில லோகத்தாராலும் புகழப் பெற்றதும், சமய குரவர்களால் பாராட்டப் பெற்ற பெருஞ் சிறப்பு வாய்ந்ததும், ஸ்தல விசேஷம், தீர்த்த விசேஷம், மூர்த்தி விசேஷம் என்ற முச் சிறப்புகளும் ஒருங்கே அமையப் பெற்றதும், கண்ணுதற் பெருங் கடவுள் கழகமோடமர்ந்து பண் ணுறத் தெரிந்தாய்ந்த பசுந்தமிழை வளர்த்ததும், எமபெருமானுடைய அற்புதத் திருவிளையாடல்கள் பல நிகழ்ந்த பெருமை வாய்ந்ததுமான மதுரையம் பதியைத் தனக்கு முதன்மையாகக் கொண்டதும், எந்நாட்டிலும் சிறந்த பொன்னுடுமாகிய செந் தமிழ்ப் பாண்டி வளநாட்டிலே கீழ்த்திசையில் வில்வாரண்ய க்ஷேத்திரமாகிய சாக்கோட்டையும், தென்கிழக்கில் திருவாடானையும், தெற்கில் கண்ட தேவியும், தென்மேற்கில் சமிவன க்ஷேத்திரமாகிய கோவிலூரும், மேற்கில் மயூரகிரியாகிய குன்றுக்குடி யும், வடமேற்கில் சத்தியகிரியாகிய திருமய்யமும், வடக்கில் கைலாசநாதபுரமும், வடகிழக்கில் திருப் பெருந்துறையாகிய ஆளுடையார் கோயிலும் ஆகிய சிவக்ஷேத்திரங்களைக் கொண்டு நடுநாயகமாக விளங்குவதும், மற்றும் சகல நலன்களும் சம்பூர்ண மாய் அமையப்பெற்றதுமான கோட்டையூர் என்ற

மாபெரும் நகரத்தில் இரத்தின தன மகுட வைசிய ராகிய நகரத்தார்களால் சிவாகம முறைப்படி கல் திருப்பணி, கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், சோபா மண்டபம், துயஸ்தம்ப மண்டபம் அணியொட்டிக் கால் மண்டபம், உற்சவ மண்டபம், விமானம், இராச கோபுரங்களும், சிற்ப சாஸ்திரப் படி வியப்பாக அமைக்கப்பெற்ற ஆலயத்தில் ஸ்ரீ மீனுக்ஷியம்பிகை சமேத ஸ்ரீ சோமசுந்தரேசுவரர்க் கும் கணேச ஸ்கந்த முதலிய பரிவார தேவர்கட்கும் நிகழும் பிரமாதி ௵ தைமீ 8உ ஞாயிற்றுக்கிழமை பூர்வபக்ஷம் ஏகாதசிதிதி ரோகிணி நக்ஷத்திரம் கும்ப லக்கினம் அமிர்தயோகம் சாத்தீக வேளையும் கூடிய சுப தினத்தில் உதயாதி நாழிகை $4\frac{1}{4}$க்கு மேல் 7 நாழிகை (8-15 மணிக்குமேல் 9-30 மணி) அளவில் சுப முகூர்த்தத்தில் அஷ்டபந்தன மகாகும்பா பிஷேகம் நடைபெறுவதால் அன்பர்களனைவரும் வந்து தரிசித்துப் பேரானந்தப் பெருவாழ்வு பெற்றுய்யும் வண்ணம் விரும்புகின்றோம்,

இனி, அண்மையில் நிகழ்ந்த கும்பாபிஷேகம் ஒன்றைப்பற்றிய அழைப்பிதழைக் காண்போம்:—

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

## திருத்தென்குடித்திட்டைச் சிவாலயக்

## கும்பாபிஷேக அழைப்பு

இத்திருத்தல சிவாலயம் மிகப் பழமையுற் றிருந்ததால் முழுதும் பிரித்துத் தளமுயர்த்தி, பசு பதிநாதர் திருக்கோயில், மூலத்தானம், இடை மண்டபம், முகமண்டபம், மகாமண்டபம், சோபன மண்டபம், நந்தி, பலிபீட துவத்தம்ப மண்டபம், அலங்கார மண்டபம், வாகன மண்டபம், மணி

மண்டபம், யாகசாலை மண்டபம், பாகசாலை மண்டபம், கிணறு, செட்டியார் கட்டளை, திருக் கருவூல உளத்துறை மண்டபம், திருநிறைமண்டபம் திருமண மண்டபம், திருமுறை மண்டபம், திருப் பள்ளித் தரும மண்டபம் ஆகியவைகளும்; நீராழிப் பத்தி, பிரகாரப்பத்தி, திருமாளிகைப்பத்தி, திரு மஞ்சணக் கிணறு, முதற்றிருமதில், இரண்டாம் பிரகாரம், இரண்டாம் திருமதில், உலகநாயகியார் திருக்கோயில் கருவறை. அர்த்த மண்டபம், பிரகாரப் பத்திகளும், குஞ்சரமுகவர் கோயில், வல்லி குஞ்சரியுடன் குமரவேள் கோயில், திருமகள் கோயில், சிவகாமி சுந்தரியுடன் திருவம்பலவர் கோயில், வைரவர் கோயில், துவார கணபதி கோயில், துவாரகந்தர் கோயில், சண்டேசர் கோயில், திருமுகைக் கோயில், திருநீற்றுக் கோயில் ஆகிய திருக்கோயில்களும்; குடவரை, விமான கோபுரங் களும் மிக்க வுறுதியுடன் பொற்பணியிலுஞ் சிறந்த கருங் கற்பணிகளாக, சிற்ப நுண்முறையே பொற் புறப் புதுத் திருப்பணிகள் செய்தும், சிவசந்நிதித் திருக்குளம், திருத்தேர்வீதி, திருநந்தவனம், செழும் பொழில்கள், திருப்பணியாளர் உறையுள்கள், சிவப் பணியாளர் விடுதிகள், ஆவுறைநிலையம், பசுபதி நிலையம், சிவநேச நிலையம், சித்தாந்த வித்தியா சாலை, ஆசிரியர் விடுதி, மாணவர் உணவுச்சாலை, மாணவர் மன்னு நன்னிலையம், குமரப்பன் குளம் ஆகிய அணிபெற வமைக்கப் பெற்றுமுள.

இத் திருக்கோயிலின்கண் ஆன்மாக்களுய்யும் பொருட்டு சிவலிங்கத் திருமேனி கொண்டு செஞ் சடையப்பராய் என்றும் இனிதா யொளிரும் பசுபதிப் பெயரிய தனிமுதற் கடவுளர், நலமெலாம் அருளும் உலகநாயகியார், குஞ்சர முகவர், குமரவேள், சண்டேசராகிய மூர்த்திகளுக்கும், சுற்றுத் தெய்வங்களுக்கும், நிகழும் சுர ஆண்டு சித்திரை

**மேடரவி ஏழாந்திகதி வெள்ளிக்கிழமை** வளர்மதி ஈரேழுடன் அஸ்தமீன், அமிர்தயோகம் நல்வேளை கூடும் நன்னாள், **கதிரெழுகடிகை அ௫-க்கு மேல் கக மணி 9-24 முதல் 10-24**-க்குள் மிதுனலக்ன நன் முகூர்த்தத்தில் **மாபெருஞ்சாந்தி** என்னும் **மஹாகும்பாபிஷேகம்** (குடநீராட்டு) நடைபெறும்.

ஆறணியுஞ் செஞ்சடையார்க் கன்பு பூண்டொழுகு திருநீறணியும் நெற்றியோர் யாவரும் வந்து குழுமி சிவ மஹாயாகாதிகளையும் மாபெருஞ் சாந்தியையும் ஐம்பெருமூர்த்திகளின் திருவுலாச் சிறப்பையும் கண்ணாரக் கண்டு, "யாவர்க்கு மேலாம் அளவிலாச் சீருடையான்" அருணலம் பெற்றின்புற வேண்டுகிறேன்.

திருச்சிற்றம்பலம்.

| | |
|---|---|
| தேறினார் வழுபடுந் தேவத்தானம், திருத்தென்குடித்திட்டை. விகிருதி, பங்குனி, கஉ | இங்ஙனம், **இராம குமரப்ப செட்டியார் மகன், சிவநேசன் இராமசாமி.** |

ஆதீனங்கள் வழங்கும் பட்டங்களைப்பற்றிய குறிப்புக்களிலும் புதிய உரைநடையின் சாயலைச் சிறிதளவு காணலாம்.

ஸ்ரீலஸ்ரீ

**சுப்பிரமணிய பண்டார சன்னதி அவர்கள்** — திருவாவடுதுறை, தஞ்சாவூர் ஜில்லா

ஆதீனகர்த்தர்,

**திருவாவடுதுறை மடம்.**

உ

சிவமயம்

மஹா புருஷச் செல்வச் சிரஞ்சீவி டாக்டர்-வித்துவான் நமது மா. இராசமாணிக்கம் பிள்ளை அவர்களுக்கு சர்வாபீஷ்ட சித்திகள் உண்டாவதாக.

தமிழுலகத்தில் உங்களுடைய தமிழ் நூல் ஆராய்ச்சி வன்மையையும், பெரிய புராண முதலிய

சைவநூல் ஆராய்ச்சியையும்பற்றி அறிஞர்களுடன் கலந்து ஆலோசித்து,

"சைவ வரலாற்று ஆராய்ச்சிப் பேரறிஞர்" என்னும் சிறப்புப் பெயரை, நமது ஆதீனத்தின் சார்பிலே திருவெண்ணெய்நல்லூரில் நடைபெறும் சித்தாந்த சைவ மாநாட்டிலே விஜயதசமியாகிய இன்று உங்களுக்கு மகிழ்வுடன் வழங்கிய இச் செய்தியை இதன் மூலம் தெரிவிக்கலாயிற்று.

இனி, இச்சிறப்புப் பெயரும், ஏனைச் சிறப்புப் பெயர்களுடன் தமிழகத்து வழங்குவதாகுக. மேன் மேலும் "தொண்டர்சீர் பரவும் பேறு சிவஞானத் துடன் உங்களுக்கு வாய்ப்பதாகுக" எனச் சிவ லோகம் பாவனையுடன் ஸ்ரீ ஞானமா நடராசரைச் சிந்தித்திருக்கிறோம்.

மெய்கண்டான் யாண்டு 728 }
கர புரட்டாசி–24 } **நமச்சிவாயம்**

**மணிப்பிரவாள நடை**

இவ்வாறெல்லாம் தமிழ்ச் சொற்கள் நாளுக்கு நாள் மிகுதியாகப் பயன்பட்டு வருகின்றன. எனினும் மாணவர் பலர் மணிப் பிரவாள நடையிலேயே— கொச்சைத் தமிழும் பச்சை ஆங்கிலமும் சிதைந்த வட மொழியும் சேர்த்து—பேசியும் எழுதியும் வருகின்ற னர். தமிழ், வடமொழி, இந்தி, ஆங்கிலம் ஆகிய பல மொழிகளை அவர்கள் பள்ளியில் கற்று வருவது இதற்கு ஒரு காரணமாக இருக்கக்கூடும்.

மாணவர் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வதற் குச் சான்றாகப் பின்வரும் பகுதிகளைக் காண்க:

(1) "டேய் ராமானுஜம், நான் நாஷ்டாவுக்கே உன் வீட்டுக்கு வருவதாயிருந்தேன். ஜோலி ஜாஸ்தி யாக இருந்ததால், நான் வர லேட்டாகி விட்டது."

(2) "பஸாருக்குப் போய் ஸிக்ஸ் பைஸாக்கு புஷ்பம் வாங்கிண்டு ஜல்தி வந்திடு."

முதற் பகுதியில் நாஷ்டா என்பதற்குச் சிற்றுண்டி என்றும், ஜோலி என்பதற்கு வேலை என்றும், ஜாஸ்தி என்பதற்கு மிகுதி என்றும், லேட் என்பதற்கு நேரங் கழித்து என்றும் சொன்னால் பண்டிதர் துணையின்றியே எந்த மாணவனுக்கும் பொருள் புரியும். இதைப் போன்றே இரண்டாம் பகுதியிலுள்ள சொற்களுக்குப் பதிலாக "கடைக்குப் போய் ஆறுகாசுக்குப் பூ வாங்கிக்கொண்டு விரைவில் வா" என்றால் தமிழ் மக்கள் எல்லோருக்கும் விளங்கும், அரிய கருத்துக்களை எளிதாகக் கூறும் தெளிவான சொற்கள் தமிழ் மொழியில் இருக்க மேற்கூறியவாறு பேசுவது கனியிருக்கக் காய் கவர்வது போன்றதாகும். "தமிழ்ப் பாதுகாப்பு நூற்றிரட்டு" எனும் நூலைச் சென்னைத் தமிழ்ப் பாதுகாப்புக் கழகம் வெளியிட்டிருக்கிறது; தூய தமிழில் எழுத விரும்பும் மாணவர்க்கு இது மிகவும் பயன் படும்.

ஒரு சிலர் தமிழ்ச் சொற்களுக்குப் பதிலாக வட சொற்களைப் பயன்படுத்தி வருகின்றனர். "சுதேசமித்திரன்" இப்போது நல்ல தமிழில் வெளி வருகிறது. இந்த இதழ் ஆசிரியர் திரு. சி. ஆர். சீனிவாசன் 29-4-51-இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ்த் திருவிழாவில் நிகழ்த்திய தலைமைப் பேருரையின் சில பகுதிகளை ஈண்டுத் தருவோம்.

> 1915-ஆம் ஆண்டில் நான் "சுதேசமித்திரன்" காரியாலயத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன். தமிழ் மணம் வீச ஆரம்பித்தது. ஆழத்தில் அமுங்கிக் கிடந்த தாய் பாஷைப் பற்று படிப்படியாக மேலே ஏற ஆரம்பித்தது. காவிரி நதியில் கோடை காலத்தில் நீர் ஓட்டம் காணாது

ஊற்றுக் கண்டபடி நீர் இறைப்பார்கள். இறைக்க, இறைக்க நீர் சுரக்கும், தண்ணீருக்கும் தனி ருசி, தெவிட்டாத பானம். ''மித்திரன்'' பண்ணையில் நான் பெற்ற அனுபவமும் இதையொத்திருந்தது. அலாதி அதிர்ஷ்டமும் சேர்ந்துகொண்டது. சுப்பிரமணிய பாரதியின் சகவாசம் அது. புதுவையிலிருந்து ''மித்திர''னுக்கு விஷயதானம் செய்து வந்தார். அவர் ஆண்ட எழுதுகோல் தெய்வீக சக்தி வாய்ந்தது. சுலப நடை, சொல் நயம், அறிவுக்கொத்த வாறு விசாலிக்கும் கருத்துக்கள், குழந்தைகள் கண்டு களிக்கவும், வயதேறியவர் வழிபடவும் அவருடைய பேனா நர்த்தனம் செய்தது.''

* * *

''அனுக்கிரகம் இருந்தால் எதுவும் சாத்தியமெனலாம். நந்தன் ஸ்வப்பனாவஸ்தையில் பயிர் எழுப்பவில்லையா? ஆனால் சங்கல்ப சுத்திவேண்டும். இதுவே உருவாக காலமாயிற்று. அதை அறிவுறுத்த விரும்புகிறேன். தாய் பாஷையை உதாசீனம் செய்தவர்கள் தோஷம் தங்களையே தீண்டும் என்பதை அனுபவத்தில் அறிந்து கொண்டனர்.''

முந்திய பகுதிகளில் உரைநடை படிப்படியாக வளர்ந்து வந்ததெனை எடுத்துக் கூறினோம். பண்டைய உரையாசிரியர்களும் அவர்களைப் பின்பற்றிப் பிற் காலத்தில் எழுதியவர்களும், திரிசொல், திசைச்சொல், வடசொற்களைக் கையாண்டிருக்கின்றனர் என்பதையும், இச்சொற்களை எடுத்தாண்டவர்கள் தொல் காப்பிய இலக்கண வரம்புக்குட்பட்டிருந்தனர் என் பதையும் விரிவாகச் சொன்னோம். எனினும், வட மொழிப் பற்றுடையார் சிலர், வரம்பு கடந்து அம் மொழிச் சொற்களை வழங்கி மணிப் பிரவாள நடையை உண்டாக்கியதைப் பின்னர் ஆராய்ந்தோம். ஆங்கிலம்

முதலான மேனுட்டுமொழிச்சொற்கள் தமிழில் கலந்ததையும் இவற்றையெல்லாம் தமிழன்பர்கள் கடிந்து வந்ததையும் குறிப்பிட்டோம். இந்தப் பகுதியில், இருபதாம் நூற்ருண்டில் முற்பகுதி கழிந்த பின்னர்த் தனித்தமிழ் இயக்கம் தலையெடுத்ததை விளக்கியுள்ளோம்; அடுத்த காற்பகுதியில் இந்த இயக்கம் பெரிதும் வளர்ந்து, இப்போது தமிழகமெங்கும் நிலவி வருவதையும் தக்க சான்றுகளால் எடுத்துக் காட்டியிருக்கிரும்: இந்நூற்ருண்டின் இறுதியில், தமிழ் மக்கள் அனைவரும் எழுத்திலும் பேச்சிலும் தனித் தமிழையே பயன்படுத்துவர் என்பது தெரிகிறது.

தனித்தமிழ் இயக்கம் ஒரு மொழிக்கு எதிராகவோ, ஒரு வகுப்பாரின் பேரிலுள்ள வெறுப்பாலோ ஏற்பட்டிருப்பதாகக் கருதுபவர்களின் கூற்றையும் இனி ஆராய்வோம். மந்திரி என்ற சொல்லுக்குத் தனித் தமிழ் "அமைச்சர்" என்பதாம். திருவள்ளுவர் "படைகுடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும் உடையான் அரசு" என்றுதான் கூறியுள்ளாரேயன்றி, "படைகுடி கூழ் மந்திரி சபை......" என்று கூறிஞரல்லர். "பாஷை" என்பதைத் தனித் தமிழில் மொழி என்று இயம்புகின்ருேம். கவியரசர் சுப்பிரமணிய பாரதியார் "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்குங் காணும்" என்றுதான் பாடியிருக்கிருர். "யாமறிந்த பாஷைகளிலே......" என்று அவர் பாடவில்லையே? மொழி பெயர்ப்பு என்ற சொற்ருெடர்தான் தமிழ் வழக்கு; "பாஷை பெயர்ப்பு" அல்லவே?

வருஷம் என்பதற்குப் பதிலாக ஆண்டு என்ற தனித் தமிழ்ச் சொல் உளது. "யாண்டு பலவாக நரையில வாகுதல்" என்ற பிசிராந்தையின் வாக்குமுதல் பல

நூற்றுண்டுகளாக **யாண்டு** எனும் சொல் வழங்கி வருகிறது. பண்டைக்கால முதல் "பல்லாண்டு" கூறி வாழ்த்துவதே தமிழர் பண்பாடு அல்லவா? நாள் எனுஞ் சொல்லிருக்க **தினம்** எனும் வடசொல் வேண்டுமா? நாளும் கோளும், நாள் நட்சத்திரம், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் என்ற சொற்றொடர்களில் **நாள்** எனுஞ் சொல்லுக்குப் பதிலாக **தினம்** என்னும் சொல்லைப் பயன்படுத்தினுல் இனிமையாயிருக்குமா?

இன்னும், "இயல் **இசை** நாடகம்" என்றுதானே முத்தமிழைச் சான்றேர் சிறப்பித்திருக்கின்றனர். "இயல் **சங்கீதம்,** நாடகம்" என்று கூறுவது வழக்கு அன்று. சேவை என்னும் வடசொல்லைத் 'தொண்டு' என்று குறிப்பிடுகிறேம். "தொண்டர் தம் பெருமை சொல்லவும் அரிதே" என்னும் சொற்றொடர் பண்டைக் காலத்தே தமிழ் நாட்டில் எழுந்த ஒன்று.

மேலும் **நதி** என்னும் வட சொல்லுக்குப் பதிலாக **ஆறு** என்று எழுதினுல், பலருக்கு வியப்பாக இருக்கிறது. "**ஆற்றில்** ஒருகால் சேற்றில் ஒருகால்" என்பதே தமிழ் வழக்கு ஆகும். "ஆறு கடக்கு மட்டும் அண்ணன் தம்பி, ஆறு கடந்தபின் நீ யாரோ நான் யாரோ?" என்பது ஒரு பழமொழி. "ஆற்றங்கரை", "ஆற்று மணல்" என்ற சொற்களே சிற்றூர்களில் இன்றும் வழங்குகின்றன. தமிழகத்தில் பல மாவட்டங்களில் ஆத்திரம்பட்டி (**ஆற்று** ஓரம் பட்டி) எனும் பெயருடைய ஊர்களும் உள்ளன. ஆனுல் சேதுப்பிள்ளை அவர்கள் சொல்லியிருப்பதுபோல "தமிழ்ப் பெயரினும் வடமொழிப் பெயரே சிறப்புடைத்தென்று எண்ணி திருவாடானையை, (திரு ஆடு ஆனை) ஆடு — அஜம், ஆனை-கஜம் என்று திரித்து அஜகஜபுர என்றும்,

ஆனந்தத் தாண்டவபுரம் என்பதை ஆனை தாண்டு புரம் என்றும் மொழிபெயர்த்தனர். மயிலாடுதுறை என்ற அழகிய பெயரை வடமொழிப் பெயராக்க நினைத்து மாயூரபுரம் என்று திரித்துக் கூறி நாளடைவில் மாயவரம் என்று மாள்வதற்கு வரம் கேட்டு நிற்கும் ஊராக்கிவிட்டனர்.

பெண்களை, மகளிர் என்று அழைப்பதே மரபு. ஆனால், ஸ்திரீகள் என்று சொல்லுவதும், ஸ்ரீகள் என்று எழுதுவதும் வழக்கமாகிவிட்டது. தமிழகத்தில் சிலருக்கு. எனினும் இச்சொல் தெலுங்கில் ஒருபோதும் வழக்கொழியவில்லை. ஆந்திர **மகளிர்** என்பதே ஆந்திர **மகிளா** சபையாகச் சென்னையில் உருமாறியிருக்கிறது.

தமிழ்ச் சொற்களின் வரலாறு இவ்வாறிருக்க, தூய தமிழில் ஒருவர் பேசினாலும் எழுதினாலும் அவரை நாத்திகர் என்றும், பிராமணருக்கு எதிரி என்றும், இந்தியா, "இந்தி", காங்கிரசு ஆகியவற்றிற்கும் எதிரி என்றும் மக்களில் பலர் எண்ணும்படியான ஒரு சூழ்நிலையைச் சிலர் செய்துவிட்டனர்.

சிலர் சில கூட்டங்களில் பேசும்போதும் சிலருக்கு எழுதும்போதும் தூய தமிழ் நடையைக் கைக்கொள்வதும், ஏனையோரிடம் பேசும்போதும் அவர்கட்கு எழுதும்போதும் பிறமொழிச் சொற்களைக் கலந்து பயன்படுத்துவதும் "கொள்கை"யாகக் கொண்டிருக்கிறார்கள். இவர்களை நோக்கி,

"மாறி மாறிச் செல்லுங் காலம்
அதற்குப் போடாதே தாளம்"

என்று சொல்லத் தோன்றுகிறது

# 6. மறுமலர்ச்சி நடை

## எளிய நடை

இருபதாம் நூற்றாண்டில் அரசியல் இயக்கம் வலுவடைந்ததால், ஆங்கில மொழி கற்றவரும் தமிழ் மொழிக்குத் தொண்டாற்ற முனைந்தனர்; மக்களின் எல்லாப் பகுதியினரும் கல்வி கற்கத் தொடங்கினர்; நாகரிக வளர்ச்சியின் பயனாகத் தமிழ் மட்டும் அறிந்தவர்களும் அறிவு நூல்களிலுள்ள செய்திகளைத் தெரிந்து கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. இவற்றின் விளைவே எளிமையான நடையில் எழுத வேண்டுமென்ற இயக்கம் ஆகும். இதை மொழித் துறையில் தோன்றிய மறுமலர்ச்சி என்று சொல்லலாம். இந்த மறுமலர்ச்சியில் எத்தனையோ புதிய படைப்புக்கள் தமிழ் உரைநடையில் மலர்ந்திருக்கின்றன. புதுமையை நாடும் தமிழ் மக்களுக்குச் சிறுகதை, நாவல், விஞ்ஞான நூல், கட்டுரை போன்ற வெளியீடுகளின் வரலாறே மறுமலர்ச்சியின் கதையாகும். இவ்வெளியீடுகளைப் பற்றிப் பிறிதொரு கட்டுரையில் இந்நூலில் விரிவாக ஆராய்வோம். மறுமலர்ச்சி இயக்கத்தின் அடிப்படைக் காரணங்களைப் பற்றியும், மறுமலர்ச்சி எழுத்தாளர் சிலரைப்பற்றியும், மறுமலர்ச்சி நடையைப் பற்றியும், மறுமலர்ச்சியால் மொழிக்கு ஏற்பட்டிருக்கும் நன்மை தீமைகளைப்பற்றியும் இப்பகுதியில் கூறுவோம்.

## நோக்கம்

"பேசுகின்ற மொழிக்கும் எழுதுகின்ற மொழிக்கும் வேறுபாடு மிகக் குறைவாக இருக்கவேண்டும்; பொதுமக்களுடைய நடையையே மொழி வல்லுநரும் கையாள வேண்டும்: வழக்கிலுள்ள சொற்களையே

அவர்கள் பயன்படுத்த வேண்டும்; அப்போதுதான் அவ் அறிஞருடைய அறிவு நாட்டு மக்களுக்குப் பயன் படும்" என்பதை மறுமலர்ச்சி இயக்கத்தின் நோக்கம் என்று உரைக்கலாம். இக்கருத்தைப் பின்வரும் வரி களில் இந்தியக் குடியரசுத் தலைவராக இருந்த டாக்டர் இராசேந்திரப்பிரசாத்விளக்கமாகத் தெரிவித்துள்ளார்கள்.

The theme, style and vocabulary of every language should be as near as possible to the tongue of the common people.

மேற்கூறிய கருத்து ஓரளவு ஏற்றுக் கொள்ளத் தக்கதே; எளிய நடை வேண்டியதுதான்: ஆனால் எளிமை மட்டும் போதியதாகாது. இனிமையும், அழகும் இருக்க வேண்டும்.

## சுப்பிரமணிய பாரதியார் 1882—1921

கவியரசர் சுப்பிரமணிய பாரதியாரே உரைநடை எழுதுவதில் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் என்று பலர் கருதுகின்றனர்; சிட்டுக் குருவியைப்பற்றி அவர் எழுதி யிருப்பதில் ஒரு பகுதி வருமாறு;

> "சிறிய தானியம் போன்ற மூக்கு; சின்னக் கண் கள்; சின்னத் தலை, வெள்ளைக்கழுத்து. அழகிய மங்கல வெண்மை நிறமுடைய பட்டுப் போர்த்த வயிறு; கருமையும் வெண்மையும் இவை கலந்த சாம்பல் நிறத்தலாகிய பட்டிற் போர்த்த முதுகு; சிறிய தோகை; துளித்துளிக் கால்கள். இத்தனையும் சேர்த்து ஒரு பச்சைக் குழந்தையின் கைப்பிடியிலே பிடித்துவிடலாம். இவ்விதமான உடலைச் சுமந்து கொண்டு என் வீட்டிலே இரண்டு உயிர்கள் வாழ் கின்றன.

**வ. ரா.**

மறுமலர்ச்சி எழுத்தாளருள் வ. ராமசாமி அய்யங்கார் குறிப்பிடத்தக்கவர். எழுதுவதைத் தொழிலாகக் கொண்டவருள் அவரே முதல்வர் ஆவார். அவருடைய உரைநடையையே பல எழுத்தாளர்கள் எடுத்துக்காட்டாகக் கொள்ளுகின்றார்கள். ந. பிச்சமூர்த்தி. கு. ப. ரா., சிட்டி, புதுமைப்பித்தன் (சொ. விருத்தாசலம்) பி. எஸ். ராமையா, ந. சிதம்பர சுப்பிரமணியன் இளங்கோவன், க. நா. சுப்பிரமணியன், பி. எம். கண்ணன் ஆகியோர் இவரைப் பின்பற்றுபவருள் சிலர் எளிய நடையில் சிறிய வாக்கியங்களைப் பொருத்தமான நடைமுறைச் சொற்களில் துடிதுடிப்பாக எழுதி வ. ரா. பொதுமக்களின் ஆதரவைப் பெற்றார். அவர் புதிய கருத்துக்களை வெளியிட்டதும் அவருடைய வெற்றிக்குக் காரணமாக இருக்கலாம். குறி சொல்லுகிற குறத்திகள், கடைத் தெருவிலுள்ள கடைகாரிகள், வண்டிக்காரச் செல்லமுத்து, கிராமக் கணக்குப்பிள்ளை, டபேதார், போலீசுக்காரர்—இவர்களை எல்லாம் நம் முன்னால் கொண்டுவந்து நிறுத்திவிடும் தன்மை வ. ரா. வின் எழுத்துக்கு உண்டு. **நடைச் சித்திரம்** என்ற நூலில் ஒரு பகுதியைக் காண்க:

> "தங்கத்தை உருவாக்கிவார்த்த விக்கிரகத்தைப்போல இருப்பான். அகன்ற நெற்றி, செந்தாமரைக் கண்கள், சுவாமி விவேகாநந்தரைப்போல தலை, பூமியில் ஒரு நிமிஷமும் தரிக்காமல் ஓடிக்கொண்டிருக்கும் கால்கள், ஓயாத நாக்கு, ஸயன்ஸ்காரர்கள்கூட விளக்கத்தோடு பதில் சொல்ல முடியாத கேள்விகள், பம்பரம்போல் விநாடியில் தூங்கும் குணம், சொன்னதை வேதமாக நம்பும் தன்மை—இவை எல்லாம் சேர்ந்ததுதான் ராமு."

"மணிக்கொடி"யின் முதல் இதழில் வ.ரா. எழுதினார்.

> "பாரதி பாடியது மணிக்கொடி; காந்தி ஏந்தியது மணிக்கொடி; சுதந்திரப் போராட்டத்தில் பல்லாயிரம் வீரர்களை ஈடுபடச் செய்தது மணிக்கொடி. மணிக்கொடி பாரத மக்களின் மனத்திடை ஓங்கி வளரும் அரசியல் லட்சியத்தின் நுனி, முனை, கொழுந்து."

வ ரா. வின் நடையைப் பற்றித் தி. ஜ. ர. எழுதியுள்ள பின்வரும் பகுதியிலிருந்து பின்னவரின் நடையையும் அறிந்து கொள்ளலாம்.

> "வ. ரா. முத்துக் கோத்ததுபோல் எழுதுவார். கண்ணில் ஒத்திக் கொள்ளலாம். அவர் எழுதும் கட்டுரை கதைகளைப் பல சமயம் "பைண்டு" செய்த நோட்டுப் புத்தகங்களிலேயே எழுதுவார். என்றாலும், அதில் ஓர் அடித்தல் திருத்தல் இருக்காது. இத்தன்று, இக்கனைக்களை அதிகமாகப் போட அவருக்குப் பிடிக்காது. அவைகளுக்குப் பதிலாக "கமா" என்ற நிறுத்தல் அடையாளத்தை ஏராளமாகச் சொரிந்துவிடுவார்...வ. ரா. சொற்சிற்பி அல்ல; கருத்துச் சிற்பி."

வ. ரா. சந்திகள் இல்லாமல் எழுத வேண்டுமென்று கட்சி கட்டினார்; வாழைபழம், கோழிகுஞ்சு என்று எழுதினார்.

மறுமலர்ச்சி எழுத்தாளர்களுள் சொற்சிற்பிகளும் உள்ளனர். இவர்களிற் பலர் எதுகை மோனை இவற்றின் உதவியால் அலங்காரச் சொற்களைப் புனைவர். இவர்களுடைய நடை வீறுபெற்று விளங்குகிறது. இவர்கள் சொல்வளத்தை அள்ளி வழங்குகின்றனர். இவர்களிற் சிலர் சொல்லம்பு எய்பவர். வேறு சிலர் முற்காலக் கருத்தை இக்கால முறையில் தரும் பணியில் ஈடுபட்டிருப்பவர்.

**நாமக்கல் வே. இராமலிங்கம் பிள்ளை**

இவர் எழுதிய, "அவனும் அவளும்" என்னும் தமிழ் நூல் செய்யுள் நடையாயினும் தமிழ் மொழி விருப்பினர் யாவரும் பொழுது போக்குவதற்காகப் படிக்க ஏற்ற சொல்லோவியம்.

"கூந்தலை மேகமென்றால்
மேகத்தில் கருமை கொஞ்சம்
சந்திர வதனம் என்றால்
சந்திரன் மறுநாள் தேய்வான்..."

என்பதுபோன்ற சிறப்பான பகுதிகள் அமைந்துள்ளன.

**"இலக்கிய இன்பம்"** என்னும் உரைநடை நூலும் இவரால் எழுதப்பெற்றது. "தாவாரம் இல்லை..." போன்ற செய்யுட்களின் பொருட்சிறப்பினை. ஓரளவு இலக்கணம் துணைபுரியும் வண்ணமும், தெளிவாக எழுதியுள்ளார்.

**பாரதிதாசன்**

புலவன் எண்ணிய எண்ணங்களின் ஆழத்தைப் பொதுமக்களும் எளிதில் உணர்ந்து வீறுகொள்ளும் வகையில் கவியரசர் பாரதியாரைப்போல் தமிழ்ச் செய்யுள் யாப்பில் மறுமலர்ச்சி நடையைப் போற்றி வளர்த்தவர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் ஆவார். இவர் தம்முடைய பாடல்களில் தம் காலத்திற்கேற்ற புதிய புதிய உவமைகளைப் படைத்து வழங்கிய திறம் படித்து மகிழத்தக்கதாகும். இவரைப் பற்றிப் பிறிதொரு கட்டுரையில் விரிவாகக் கூறுவோம்.

**சி. என். அண்ணாதுரை**

தம் எழுத்தாலும், பேச்சாலும் தமிழ் மக்களின் பேராதரவைப் பெற்றிருப்பவர் பேரறிஞர் சி. என். அண்ணாதுரை ஆவார். இவருடைய சொற்பொழிவு

களைப் பற்றியும் நாடகங்களைப் பற்றியும் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி எழுதியிருப்பதாவது-

"அவர் சொற்பொழிவுகள் சிலவற்றை நான் கேட்டிருக்கிறேன். "சொற்பொழிவு என்றால் இது வல்லவா சொற்பொழிவு. தட்டுத் தடுமாறி சொற்களுக்குத் திண்டாடி நிற்பதை யெல்லாம் சொற்பொழிவு என்கிறோமே" என்று எண்ணத் தோன்றும்."

"ஆனால், பேச்சும் பிரசங்கமும் சொற்பொழிவும் உடனுக்குடனே காற்றிலே போய்விடுகின்றன. கூட்டத்துக்கு வருகிற ஜனங்களில் நூற்றுக்கு, ஐம்பதுபேர் ஒரு காதினால் வாங்கி, இன்னொரு காதினால் விட்டுவிடுகிறார்கள்.

பேச்சைக் காட்டிலும் எழுத்து அதிக வலிமை யுடையது. ஆனால், பேச்சு எழுத்து எதுவும் நாடகத்துக்கு அருகிலும் வராது. ஜன சமூகத்தை உண்மையில் சீர்த்திருத்த விரும்புவோன் கையாள வேண்டிய சாதனம் நாடகமேயாகும்.

நடிக்கக்கூடிய நாடகத்தை எழுதும் ஆற்றல் மிகவும் அரியது. அந்த ஆற்றல் திரு. அண்ணாத் துரையிடம் பூர்ணமாக அமைந்திருக்கிறது என் பதை "ஓர் இரவு" நாடகத்தில் கண்டு மகிழ்ந்தேன்"

இனி, அண்ணாவின் பேச்சைக் கேட்போம்:

"வெடித்துக் கிடக்கும் வயல், படர்ந்து போகும் நிலையில் உள்ள விளக்கு, பட்டுக்கொண்டே வரும் நிலையில் உள்ள மரம், உலர்ந்து கொண்டு வரும் கொடி, வற்றிக்கொண்டிருக்கும் குளம்-இவைபோல சமுதாயத்தின் நிலையும் நினைப்பும் நடவடிக்கையும் ஆகிவிடும்போது, இந்த அவல நிலையைப் போக்கி யாக வேண்டும் என்ற ஆர்வமும், போக்க முடியும் என்ற நம்பிக்கையும், போக்கக்கூடிய அறிவாற்றலும் கொண்டு ஒருசிலர் முன் வருகிறார்கள், அறிவுப்

பண்ணைக்குப் பணியாற்ற. அவர்களை நாடு வர வேற்பதில்லை—நையாண்டி செய்யும்; மதிப்பளிப்ப தில்லை—மாச்சரியத்தை வாரி வீசும்; துணை புரிவ தில்லை—தொல்லை தரும். எனினும், அந்த ஒரு சிலர் ஓயாது உழைத்து, சலிப்பு, கோபம், வெறுப்பு, பகை எனும் உணர்ச்சிகளுக்குப் பலியாகிவிடாமல், புன்ன கையும் பெருமூச்சும் கலந்த நிலையில் பணிபுரிந்து, பட்டமரம் துளிர் விடும்வரை, படர்ந்து போக இருந்த விளக்கு மீண்டும் ஒளிவிடும் வரையில் பாடு பட்டு வெற்றி கண்டு மறுமலர்ச்சி உண்டாக்கி வைக்கிறார்கள்.''

வினைச் சொல்லைச் சொற்றொடரின் முன்னே அமைத்துப் புதிய தமிழ்நடையை 'அண்ணா' பரப்பி இருக்கிறார்; வினாவுக்கு விடையாக மற்றொரு வினாவை விடுக்கும் தொல் காப்பிய மரபைச் சட்ட மன்றத்தில் முதலமைச்சர் அண்ணா கையாண்டிருக்கிறார்.

**நாரண துரைக்கண்ணன்**

இவர் "பிரசண்ட விகடன் ஆசிரியராக இருந்தவர் ஜீவா என்னும் பெயரால் தமிழகத்துக்கு அறிமுகமான தலைசிறந்த எழுத்தாளர்: "உயிரோவியம்" என்ற பெயர்பெற்ற நாடகத்தையும், ஏராளமான சிறு கதை களையும் எழுதியிருப்பவர். டால்ஸ்டாயின் அன்னகரினா என்ற நாவலை, "சீமாட்டி கார்த்திகேயினி" எனத் தமிழாக்கியிருக்கிறார்.

**பி. ஸ்ரீ.**

ஆழமான படிப்புக்கும் உழைப்புக்கும் சான்றாக விளங்குபவர். சாகித்திய அகடமிப் பரிசு பெற்றவர். இவரது நடையில் தனிப்பண்பு ஒன்றுளது. எழுவாய், பயனிலை, அவற்றோடு சேர்ந்த சொற்கள் எனும் இவை களை வேண்டுமென்றே இடம் மாற்றி வருகின்றார்.

இவரது கம்பர் காவியம் பற்றிய பல கட்டுரைகளில் இத்தன்மை மிளிருதல் காணலாகும்.

**திருப்பாவை** எனும் வைணவ நூலினுக்கு எளிய நடையில் சித்திரத் திருப்பாவை என உரை வகுத்துள்ளார். இற்றை நாளில் கம்பன் காவியச் சோலையில் சுற்றித் திரிய விரும்பும் மாணவர் எவரும் பி. ஸ்ரீ. யை நினைவு கொள்ளாதிருக்க இயலாது. ஏனெனில், அக்காவியத்தை எளிய நடையில் வெளியிடும் வன்மை பெற்ற வள்ளல் இவர் என்போம்

இவர் நடைக்குச் சான்ருக ஒரு பகுதியைத் தருவோம்:

> ''திருப்பதிக்குச் சங்ககாலப் பிரசித்தியும் உண்டு; வேதகாலப் பிரசித்தியும் உண்டு என்பர். அன்றுதொட்டு இன்றுவரை எத்தனை அரசியல் புரட்சிகள், படையெடுப்புக்கள், சரித்திர மாறுதல்கள் - தென்னிந்தியாவிலும்தான். திருப்பதியோ கி. பி. 1310-இல் தென்னிந்தியாவிலே பெருங் குழப்பம் விளைத்த முஸ்லிம் படையெடுப்பினுலும் பாதிக்கப்படாமல் இன்றளவும் இந்தியாவின் அசையாத பக்திக் கோட்டையாகவும் இந்து தர்மத்தின் அற்புத அரணுகவும் திகழ்கிறது. வடநாடும் தென்னுடும் ஒருங்கே தொழ நிற்கும் திசை விளக்காகவும் ஒளிர்கின்றது திருமலை...
>
> அந்த உலகத்திலே, அந்தக் காலத்திலே. போட்டி பூசல்களுக்கும் இடமில்லை; உயர்வு தாழ்வுகளுக்கும் இடமில்லை. அம் மனநிலையில் கர்மம் எல்லாம் கைங்கரியமாகும்; கைங்கரியமெல்லாம் பிரார்த்தனையாகும்; பள்ளித்தலங்களும் ஆராய்ச்சித் தலங்களும் கோயிலாகும். முக்திச் சுவையிலும் பக்திச் சுவை அமுதமாய்த் தித்திக்கும்.''

திவ்ய பிரபந்த சாரம்-ஆழ்வார்களுடைய கருத்துப்பற்றிய திறனாய்வு நூல்.

துள்ளித் திரிகின்ற காலத்திலே (இது அடிப் படைக் கல்வித் திட்டத்தைப் பற்றியது)

கிளைவ் முதல் ராஜாஜி வரை

ஔவை, ஆண்டாள், பாலகாண்டம், சுந்தர காண்டம் போன்ற பல நூல்களை இவர் எழுதியுள் ளார்.

## பெ. தூரன் (பி.1908)

காட்டு வழிதனிலே, பூவின் சிரிப்பு போன்ற கட்டுரை நூல்களும், உரிமைப்பெண், பிள்ளைவரம் என்ற சிறுகதை நூல்களும், குழந்தை உள்ளம், பாரம் பரியம் என்ற உள நூல்களும், கருவில் வளரும் குழந்தை என்னும் விஞ்ஞான நூலும் ஏராளமான கவிதைகளும் எழுதியுள்ளார். இவரது 'பாரதி தமிழ்' என்னும் நூலைப்பற்றிப் பின்னர் விரிவாகக் கூறுவோம்.

## கி. சந்திரசேகரன்

இவர் தம் தந்தையாரான வி. கிருஷ்ணசாமி ஐயர் வரலாற்றைச் சிறப்பாக எழுதியுள்ளார். பச்சைக் கிளி, கண்ணில்லாத கபோதி என்பவை இவரது சிறு கதைகளில் குறிப்பிடத்தக்கவை.

## கல்கி

ஏற்கெனவே தமிழ் நூல்களைப் படிக்காத பல்லா யிரவரைத் தமிழைப் படிக்கும்படி செய்த பெருமை கல்கிக்கு உண்டு. பழந்தமிழ்நாட்டு வரலாற்றுச் சிறப்பு களையும் நிகழ்கால அரசியல் கொந்தளிப்புகளையும் கொண்டு அரும் பெரும் கதைகள் பலவற்றைச் கல்கி

எழுதியிருக்கிறார். சமூக நாவல்கள் சிலவற்றையும் அவர் புனைந்துள்ளார். தமிழ்நாட்டு சர் வால்டர் ஸ்காட் என இவரைச் சிறப்பித்துள்ளனர். இவருடைய தொடர்கதைகள் அநுமார் வால்போல் நீளமாக உள்ளன. இதற்கு இவர் பொறுப்பாளியா, வாரந் தவருமல் பொறுமையாகப் படித்த வாசகர்கள் பொறுப்பாளியா என்பது எண்ணுதற்குரியது. நூலாக வெளியிடும்போது, பத்திரிகையில் வெளிவந்த பகுதியில் சிலவற்றைக் குறைத்தும், மாற்றியுமிருந்தால் நலமாக இருந்திருக்கும்.

இவரது கட்டுரைகள் பேச்சு வழக்குத் தமிழில் நகைச்சுவையுடன் அமைந்துள்ளன. இவர் உரிய சொல்லே உரிய இடத்தில் அமைத்து எழுதுகின்ருர். பாத்திரங்களை எடுத்துப் படம் பிடித்து அப்படியே அவர்களை, படிப்பவர்களின் கண்முன் கொண்டுவந்து நிறுத்தும் ஆற்றல் இவருக்கு உண்டு.

அரசியல் கருத்துக்களைப் படிப்பவர் மனங்கொளு மாறு தெளிவாகவும், சுவையாகவும் கட்டுரைகளில் எழுதும் வன்மை மிக்கவர்.

நாவல்களில் பார்த்திபன் கனவு, பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம், சோலைமலை இளவரசி சிறுகதைத் தொகுப்புகளில் கணையாழியின் கனவு, வீணைபவானி, சாரதையின் தந்திரம், ஏட்டிக்குப் போட்டி, மாடத்தேவன் சுனையும் சிறப்பானவை.

காந்தியடிகளின் மறைவின்போது கல்கி எழுதிய கட்டுரை தனிச் சிறப்புடையது. நகைச் சுவையாகவே எழுதும் இவர், தம் மனம் நொந்தும் பிறர் மனம் உருகவும் இங்கே எழுதுகிருர்:

## சத்தியம் செத்ததோ?

கண்களே! கண்ணீர் பெருக்குங்கள்! ஒரு துளிக் கண்ணீர் பாக்கியுள்ள வரையில் கண்ணீர் பெருக்குங்கள்! கருணமூர்த்தியான காந்திமகானின் புனிதத் திருமுகத்தை நீங்கள் இனிக் காணமாட்டீர்கள்! அவருடைய தாமிரவர்ணத் திருமேனியைப் பார்க்கமாட்டீர்கள்!

செவிகளே! நீங்கள் செவிடாகித் தொலையுங்கள். வேதத்தையும் வேய்ங்குழலின் கீதத்தையும் நிகர்த்த அந்தப் புண்ணியனின் அமுத மொழிகளை நீங்கள் இனிக் கேட்கவே முடியாது.

நாவே! உனக்கு அழுது புலம்ப இன்னும் சக்தி இருந்தால் அழுது புலம்புவாய்! இத்தனை காலமும் தினம் தினம் பத்து நூறு ஆயிரம் தடவை எந்த மகாத்மாவின் திருநாமத்தைச் சொல்லி வந்தாயோ அந்த மகாத்மா இந்தப் பூவுலகத்தைவிட்டுப் போய் விட்டார். அழு! அழு! புலம்பி அழு!

நெஞ்சே! ஏன் துடிக்கிறாய்? இதயமே ஏன் இப்படித் தவிக்கிறாய்? "ஆத்மாவுக்கு மரணமில்லை" என்பதை மறந்துவிட்டாயோ? ஆத்மாவுக்கு மரணமில்லையென்றால், மகாத்மாவுக்கு மரணம்உண்டோ?

விரல்களே! ஏன் இப்படி நடுங்குகிறீர்கள்? அவருடைய திருநாமத்தை எத்தனையோ ஆயிரம் தடவை எழுதியிருக்கிறீர்களே? இப்பொழுது என்ன தயக்கம்? ஏன் நடுக்கம்? அந்தக் கொலை பாதகனின் துப்பாக்கி பிடித்த கை நடுங்கவில்லையே? அந்தச் சண்டாளன் விரல்கள் தடுமாறவில்லையே? சரியாகக் குறி பார்த்துச் சுட்டானே?

சத்தியமே! நீ செத்துப் போனாயோ? தர்மமே! நீ மாண்டு போனாயோ? கடவுளே! நீ என்ன செய்

கிறாய்? எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு சாட்சியாக விளங்குகிறாயோ? எந்தக் கோர்ட்டில் போய் நின்று சாட்சி சொல்லப்போகிறாய். பகவானே? சத்தியம் செத்துப்போன பிறகு உன்னுடைய சாட்சியைத்தான் யார் நம்பப் போகிறார்கள்?

சர்வசித்தி வருஷமே! நயவஞ்சகப் படுபாதக வருஷமே! நீ பிறந்தது முதல் என்னவெல்லாமோ எங்களுக்கு காரியங்களைச் சாதித்துக் கொடுத்து வந்தாயே? உன்னை அடிக்கடி புகழ்ந்து வந்தோமே. இந்த மாதிரி கடைசியில் பெரிய கல்லாகத் தூக்கி எங்கள் தலையில் போட்டுவிட்டாயே? இதற்காகத் தானா இவ்வளவு நாளும் வெற்றிக்கு மேலே வெற்றி அளிப்பதுபோல் பாசாங்கு செய்து வந்தாய்? சர்வ சித்தி வருஷமே! நீ சர்வ நாசமடைவாய்!

* * *

இந்த மாநிலத்தில் அவ்வப்போது வெவ்வேறு இடங்களில் மகாபுருஷர்கள் தோன்றியிருக்கிறார்கள் கடவுளின் உண்மை சொரூபத்தைக் கண்டு உலகுக்கு உணர்த்தியிருக்கிறார்கள். மனித குலம் உய்ய நல்ல வழியைக் காட்டியிருக்கிறார்கள். மானிடர்கள் உயர நற்போதனை செய்திருக்கிறார்கள்.

பிறந்த நாட்டின் விடுதலைக்காக மகத்தான தியாகங்களைச் செய்து போராடி வெற்றி பெற்ற தீரர்கள் உலகிலே இருந்திருக்கிறார்கள்.

விஸ்தாரமான பிரதேசங்களை ஒரு குடையின் கீழ் ஆண்ட மன்னாதி மன்னர்கள் பலர் உலக சரித்திரத்தில் புகழ் பெற்றிருக்கிறார்கள்.

பெரும் சேனைகள் திரட்டிக்கொண்டு மாநிலம் அதிரும்படியாகப் படையெடுத்துச் சென்று தேச

தேசங்களையெல்லாம் கைப்பற்றி வெற்றிக் கொடி நாட்டிய வீரர்கள் பலரும் உலகிலே வாழ்ந்திருக்கிறார்கள்.

அவர்களில் யாருடைய மரணத்தின்போதும் உலகம் இந்தவிதமாகக் கலங்கியது கிடையாது. வடதுருவத்திலிருந்து தென்துருவம் வரைக்கும் அமெரிக்காவிலிருந்து ஆஸ்திரேலியா வரைக்கும் உள்ள மக்கள் இவ்விதமாக எந்த நாளிலும் பதை பதைத்தது கிடையாது.

புதுடில்லியில் அரசு புரிந்த எந்த பாதுஷாவும் சக்கரவர்த்தியும் மரணத்திற்குப் பிறகு இவ்விதம் பத்துலட்சம் மக்கள் பின்னோடு கதறிக்கொண்டு தொடர்ந்து வர மயான பூமிக்குச் சென்றதில்லை. சகல தேச மக்களாலும் இந்த விதமாகக் கௌரவிக்கப்பட்டதில்லை.

*    *    *

சென்ற முப்பது வருஷங்களாகக் காந்தி மகானுடைய வாழ்க்கையைச்சுற்றி நம்மில் லட்சக்கணக்கானவர்களின் வாழ்க்கை சுழன்று வந்திருக்கிறது.

காந்தி சொன்னார்; கதர் அணிந்தோம். காந்தி சொன்னார்; காங்கிரஸில் சேர்ந்தோம். காந்தி சொன்னார்; மதுவிலக்குப் போர் நடத்தினோம். காந்தி சொன்னார்; தீண்டாமையை ஒழித்தோம். காந்தி சொன்னார்; "ரகுபதிராகவ" பாடினோம். காந்தி சொன்னார்; சட்டசபையைப் பகிஷ்கரித்தோம். காந்தி சொன்னார்; மஞ்சள் பெட்டியில் வோட்டுப் போட்டோம். காந்தி சொன்னார்; சிறை புகுந்தோம்; அடிபட்டோம்; நூல் நூற்றோம்.

"மகாத்மா காந்திக்கு ஜே!" என்ற கோஷத்தைச் சென்ற முப்பது வருஷத்தில் முப்பதினாயிரம் தடவை கோஷித்தோம்.

அவருக்கு நாம் செலுத்தக்கூடிய நன்றி என்ன இருக்கிறது? என்ன இருக்க முடியும்? என்ன செய்தால்தான் நமது நன்றிக்கடன் தீரும்?

* * *

அன்பே தகளியாகவும், அஹிம்சையே நெய்யாகவும், என்புருக்கும் தியாகமே இருதிரியாகவும் கொண்டு ஓர் அமர தீபத்தை—அழியாத சத்திய விளக்கை—மகாத்மா காந்தி ஏற்றி வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்.

அந்த சத்திய தீபத்தைத் தினம் தினம் போற்றி வழிபடுவோம்; காற்றும் புயலும் அதை அணைத்து விடாமல் பாதுகாப்போம்.

காந்திமகான் ஏற்றிவைத்த அமர தீபத்தின் ஒளியிலேயே நமது காரியங்களையெல்லாம் செய்வோம். இதுவே அந்தப் புண்ணிய புருஷருக்கு நாம் செலுத்தக்கூடிய சொற்ப கைம்மாறாகும். மகாத்மா காந்திக்கு ஜே!

கல்கி, பிப். 8, 1948

## இக்காலத்துச் சிங்களவர் சிலர், பல நாட்களுக்கு நீராடாமல் இருப்பர்*

---

இதற்கு ஓர் அருமையான காரணத்தை The Ceylon Antiquary and Literary Register என்ற இதழில் படித்தேன். அது வருமாறு:

"ஞாயிறன்று குளித்தால் உடல் அழகு குன்றும்;
திங்களன்று குளித்தால் உடல் அழகு மேலும் சிறப்படையும்;
செவ்வாயன்று குளித்தால் நோய் பெருகும்;
புதனன்று குளித்தால் செல்வம் பெருகும்;
வியாழனன்று குளித்தால் சண்டை, சச்சரவு ஏற்படும்;
வெள்ளியன்று குளித்தால் குழந்தைகள் உயிர் நீப்பர்;
சனிக்கிழமை குளித்தால் நலமுண்டாகும்"

என்ற நம்பிக்கை சிங்களவரிடம் இருந்து வருகிறது.

இலங்கைக்குச் சென்றவர் இதை அறிவர்: இதை மறைமுகமாக "கல்கி" பின்வருமாறு தெரிவிக்கிருர்:—

"தமிழர்களைப்போல் பழங்காலச் சிங்களவர்கள் குளிப்பதில் மிக்க பிரியமுள்ளவர்கள் போலும். பாழடைந்து கிடக்கும் ஒவ்வொரு விஹாரத்திலும் இறங்கிக் குளிக்க வசதியாகச் சிறிய கல்குளங்கள் இருக்கின்றன. இவற்றில் சில தாமரைப்பூ வடிவ மாக அழகிய சிற்பத் திறமையுடன் அமைந்திருக் கின்றன."

## மறுமலர்ச்சி இயக்கம்

"இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்"

என்ற பாரதியாரின் கனவை நனவாக்கிய பெருமை மறுமலர்ச்சி எழுத்தாளர்க்கு உண்டு. மறுமலர்ச்சி இயக்கம், நம் மொழிவளர்ச்சிக்கு மிக்க இன்றியமையா ததென்பதும், அதனுல் தமிழ் மொழி பயனடைந் திருக்கிற தென்பதும் மறுக்க முடியாத உண்மைகள். மறுமலர்ச்சி எழுத்தாளர் இல்லாவிடில் சங்க இலக்கி யங்கள், காவியங்கள் பிரபந்தங்கள் மட்டுமே தமிழில் கிடைக்கும் நூல்களாக இருக்கும். அறிவு நூல்களும் பொழுது போக்கு நூல்களும் வெளிவந்திரா. சிறு கதை, நடைச் சித்திரப் பொழுபோக்குக் கட்டுரைகள், இலக்கிய விமர்சனம், ஓரங்க நாடகங்கள் ஆகிய புதிய துறைகளில் நூல்கள் எழுதி, இவர்கள் தமிழ் கூறும் நல்லுலகை ஒரு "கலக்கு கலக்கி" இருக்கின்றனர்.

எனவே, மறுமலர்ச்சித் தமிழ், பிறமொழி கலந்த தமிழாக ஆகிவிடாமல் பார்த்துக் கொள்வது தமிழ் மக்களின் கடமை. "மாடு அவனை இஸ்திக்கினு போயி டுச்சு," "மஹா. உத்கிருஷ்டமான பாவனு பிரகர்ஷம்.

இதோ காணப்படும் வாக்கியங்களில் ஜாஜ்வல்யமான காந்தியோடும் ஸ்பஷ்டமாகவும் விகசித்து நிற்பவை நாம் காணலாம்," என்பவற்றைத் தமிழ் என்று நாம் எவ்வாறு ஏற்றுக் கொள்ள இயலும்? "வெண்ணை," "தலகாணி" "கல்கண்டு" என்ற மறுமலர்ச்சித் தமிழும் நமக்கு வேண்டுவதில்லை.

> "அவரை அன்று டின்னருக்கு இன்வைட் செய்திருந்தேன். அன்றைக்கு என் குக் ஆப்சன்ட் ஆகிவிட்டான். நான் எப்படி மானேஜ் பண்ணுவது? அவரோ பன்க்சுவலா வந்துவிட்டார். ரிசீவ் பண்ணுமல் என்ன செய்வது? ஹோட்டலில் மீல்ஸ் ஆர்டர் பண்ணினேன்."

என்று பேசுவோரும் இருக்கின்றனர்.

தமிழ் மொழியில் சிறப்பானதொரு முடங்கல் எழுத விரும்பிய மாணவன் ஒருவன் தன் ஆர்வ மிகுதியால்,

> "Next Vacation—லே Beautiful Tamil—லே ஒரு letter drop பண்ணுகிறேன்," என்று கூறினும்.

இத்தகைய கீழ்நிலையினின்றும் தமிழைக் காப்பாற்ற வேண்டுவது நம் கடமையாகும்.

பேசுவது போல எழுத வேண்டும் என்று சிலர் "கச்சை கட்டுகிறுர்கள்." இது ஓரளவுக்குத்தான் இயலும். வேற்று மொழிகளிலும், பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் வேறுபாடுகள் உள்ளன. சான்ருக ஆங்கிலேய நண்பர் ஒருவர் 1952 ஆகஸ்ட் திங்களில் எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி வருமாறு:

> Your High Commissioner Mr. B. G. Kher appeared on the televisi on screen as one of the contributors to a programme called WEEK

END MAGAZINE. The speech was happily phrased and highly effective, though Mr. Kher twicc used the curious word "felicitate" when he mant "thank." He was of eourse strictly correct; but the word is seldom used in ordinary peech.

பேசுவதற்கும், எழுதுவதற்கும் எல்லா மொழிகளிலும் வேறுபாடு இருந்து வருகிறது. கிரீசு, நார்வே ஆகிய நாடுகளில் பேச்சு மொழியைத் தாய்மொழி (Mother tongue) என்றும், எழுத்து மொழியை மாமியார் மொழி (Mother-in-law tongue) என்றும் சொல்லுகிறார்கள்!

பேசுவது போல எழுதுவதும், எழுதுவது போலப் பேசுவதும் தவறான முறைகளாகும். இதற்குச் சான்றாக ஒரு நிகழ்ச்சியைத் தெரிவிப்போம்:—

யாழ்ப்பாணத்திலிருந்து தமிழகத்துக்கு வந்ததும் ஒரு புலவர், தனுசுகோடி ரயில் நிலையத்தில் தாம் சந்தித்த ஒரு வழிப்போக்கரை,

**'சோறு எங்கே விற்கும்?'** என்று கேட்டாராம்: அதற்கு அவர்,

**'சோறு தொண்டையில் விக்கும்'** என்று மறுமொழி கூறினாராம்!

பேச்சு, கேட்ட அளவில் மக்கள் மறந்துவிடக் கூடியது. எழுத்து, பிற்காலத்தவர்க்கும் பயன்படுவது. எழுத்தை மக்கள் ஆறுதலாகப் படித்து ஆராய்வர். எனவே பேச்சும் எழுத்தும் ஒரு நிலையில் இருக்க வேண்டுமென எதிர்பார்ப்பது அறிவுடைமையாகாது.

சொற்பொழிவுகளில்—பல அன்பர்கள் சாதாரண பேச்சு வழக்கிற் போல—இலக்கணப் பிழைகளோடு

பேசுவதாலேயே, தமிழ்ச் சுருக்கெழுத்து முறை வெற்றி பெறவில்லை என்று சுருக்கெழுத்து அறிஞர்கள் கருதுகின்றனர்.

பேசுவதுபோல எழுத வேண்டுமென்ற இயக்கம் சீனவில் 1917-இல் தொடங்கியது. அது இலக்கிய வளர்ச்சியையே தடைசெய்து விட்டதாம்.*

**சில பண்பாடுகள்**

மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் சங்க இலக்கியங்களைப் புது நோக்குடன் காண்கின்றனர். "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்ற இலக்கண நெறிக்கு ஏற்பப் புதிய நூல்களையும் அவர்கள் யாத்திருக்கின்றனர். அவர்கள் தம் நூல்களில் அருமையான சொற்கோவையையும், அடுக்குச் சொற்களையும் பயன்படுத்தி வருகின்றனர். அவர்களிற் பலர் நிரல்பட அமைத்து எழுதி வருவதும் பாராட்டுக்குரியது. எதுகை, மோனை இவற்றை மிகுதியாகப் பயன்டுத்துவோரும் அவர்களில் உள்ளனர். மரபில் வந்த உவமைகளைப் புதுமெருகிட்டு ஆளும் வழக்கமும் பரவி வருகிறது. சான்றாகப் பின்வரும் உவமைச் சொற்றொடர்களைக் கூறுவோம்:

சொல்லும் பொருளும் போல,
மலரும் மணமும் போல,
பருந்தும் நிழலும் போல,
நகமும் சதையும் போல,
குரங்கின் கையில் அகப்பட்ட பூமாலைபோல.

---

* After the write - as - you - speak movement, few genuine writers emerged—International P. E. N. Bulletion of Selected Books—March 1952.

ஆனல், இவற்றை மிகுதியாகப் பயன்படுத்துவது சரியன்று. "வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல்" அருமையாகக் கையாளுவதே சாலச் சிறந்தது.

படிப்பவர் மனத்தில் பதியும்படி பொருத்தமான உவமைகளைக் கூறுபவர்களில் "மாயாவி" குறிப்பிடத்தக்கவர். சான்ருகப் பின்வரும் உவமைகளைக் காண்க.

> ''பருந்தைக் கண்டு கூண்டுக்குள் பதுங்கிக் கொள்ளும் குருவி. அது தூரத்தில் சென்றுவிட்டதை அறிந்தால் தலையை நீட்டிப் பார்க்கிறதல்லவா? சூதாட்டமும் அவ்வாறே. மறுபடி என்னிடம் மெல்லத் தலை தூக்கிற்று.''

> ''புண்ணின்மீது எப்பொருள் பட்டாலும் வேதனை ஏற்படுகிறது. பட்டது கோலாக இருந்தால் நாம் சீறி விழுகிருேம். மருந்தாயிருந்தால் பொறுத்துத்தானே ஆகவேண்டியிருக்கிறது.''

சு. குருசாமி "காமு" என்ற நாவலில் கூறும் பின்வரும் உவமையையும் குறிப்பிடலாம்;

> ''ரயில் பல நிலையங்களில் நின்றது. சில நிலையங்களில் சிறிது அதிக நேரம்கூட நின்றது. அதுபோல அவனுடைய மனம் நின்ற நிலையங்களும் உண்டு. சில விஷயங்களைப்பற்றிச் சிந்திக்கும்போது அவனுடைய மனம் நிலைத்தது; நின்றது; நின்று கொண்டேயிருந்தது.''

லா. ச. ராமாமிருதம் (லா.ச.ரா.) உவமைகளின் நயத்தாலும், சொல்லடுக்காலும் புகழ்பெற்றவர். "ஜனனி" என்ற கதைத் தொகுப்பில் இந்த ஆற்றல்களைச் சிறப்பாகப் பயன்படுத்தியுள்ளார்.

மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் அடைமொழிகளைக் கங்கு கரையின்றிப் பயன்படுத்தி வருகின்றனர். தமிழ்

மொழிக்கு எழுத்தாளர் கொடுக்கும் அடைமொழிகளை எண்ணிப் பாருங்கள்:

அருந்தமிழ்
இமயத்தின் எல்லை கண்ட தமிழ்
இன்பத்தமிழ்
இன்றமிழ்
என்றுமுள செந்தமிழ்
உயிர்த்தமிழ்
கன்னித்தமிழ்
கோதில்தமிழ்
சங்கத்தமிழ்
சிந்தனை செறிந்த தமிழ்
செந்தமிழ்
தண்டமிழ்
தனித்தமிழ்
தன்னேரிலாத தமிழ்
தீந்தமிழ்
தெய்வத்தமிழ்
தென்தமிழ்
தேனினும் இனிய தமிழ்
தேன்பொழியும்தமிழ்
நற்றமிழ்
பழந்தமிழ்
புதுமைத்தமிழ்
பைந்தமிழ்
மழலைத்தமிழ்
முத்தமிழ்
வண்டமிழ்
வீரத்தமிழ்

சொற்செட்டை விரும்பாத பல எழுத்தாளர்கள் 'உலகம்' என்பதை ஆழிசூழ் உலகம் என்றே சொல்லுவர்.

வீண் அடைமொழி வேண்டுவதில்லை. கம்பி நீட்டுதல், கழுத்தறுத்தல், கிள்ளுக்கீரை போன்ற மரபுச் சொற்றொடர்களைப் பயன்படுத்துவதும் தமிழ் மரபு. இவை முறையே மறைவது, ஏமாற்றுதல், மிக அற்பமானது என்ற பொருளில் வழங்குகின்றன. இவை போலவே, வாழையடி வாழையாக, மாடமாளிகை கூடகோபுரம் போன்ற அருஞ்சொற்றொடர்களையும் எந்தத் தமிழ் நூலிலும் காணலாம். இரட்டைக் கிளவிகளும் தமிழில் மிகுதி. சான்றாக, குசு குசு, சிலு சிலு, வெடு வெடு என்பவற்றைக் குறிப்பிடலாம். இணைமொழிகளும் உள்ளன. எடுத்துக்காட்டாக,

உற்றார் உறவினர்
உண்டியும் உறையுளும்
கண்ணீரும் கம்பலையும்
வாழ்வு தாழ்வு
குப்பை கூளம்

போன்ற சொற்றொடர்களைக் கோவைக்காகப் பயன் படுத்துவது வழக்கமாயுள்ளது.

இவை இயற்கையாக எழுத்தாளர்க்கு நினைவுக்கு வருமாயின் இவற்றைப் பயன்படுத்தலாம். அப்போது, பழம் நழுவிப் பாலில் விழுந்து அதுவும் நழுவித் தம் வாயில் விழுந்ததாக நூலைப்படிப்பவர் எண்ணுவர். தகாத இடங்களிலோ, மிகுதியாகவோ கையாண்டால் படிப்பவர் பொறுமை இழப்பர்; நூலில் குற்றங் காண்பதற்கு எளிதாகிவிடும்.

மேற்கோள்கள் காட்டுவதும் இந்நாளில் மிகுந்து வருகிறது. திருக்குறளை எடுத்து ஆளாத ஆசிரியரே இன்றைய தமிழ் உலகில் இல்லை எனலாம். ஒரே பொருளுடைய பல சொற்களைப் (SYNONYMS) பயன்

படுத்துவதும் வழக்கமாகிவிட்டது. கம்பர் தம் இராமாயணத்தில் "கண்டனன் கற்பினுக்கு அணியை" என்று கூறியிருப்பதுபோல, கருத்துக்களை அழுத்தமாகத் தெரிவிப்பதற்காக, பயனிலைகளை முதலிலும், எழுவாய், செயப்படு பொருள்களைப் பின்னரும் வைப்பது இப்போது வழக்கில் மிகுதியும் பரவிவருகிறது. இதற்குச் சான்றாக தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் எழுதியிருப்பதைப் பார்ப்போம்:

> "(முருகன்) வேலேந்தி நிற்கும் அழகே ஒரு தனி அழகுதான். "ஏலம் வைத்த புயத்தில் அணைத்தருள் வேலடுத்த சமர்த்தையே" பார்த்துக்கொண்டிருக்கலாம் பல மணி நேரம்; நினைத்துக்கொண்டிருக்கலாம் பல வருஷ காலம்; பாடிக்கொண்டே இருக்கலாம் பல்லாயிரம் தரம்."

சிலர் ஒரு சொல்லையே அடுத்தடுத்துப் பயன்படுத்தும்போது.

> "துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
> துப்பாய தூஉ மழை"

என்ற குறள் என் நினைவுக்கு வருவதுண்டு. இக்குறளில் ஒருசொல் அடுத்தடுத்துப் பயன்படுத்தப் பெற்றிருந்தாலும், ஒவ்வோரிடத்திலும் அதன்பொருள் மாறுபடுகிறது. மற்றொரு சான்று தருவோம், "**காயத்தில் ஏற்பட்ட காயத்துக்கும் காயம் மருந்தாகுமா?**" இச்சொற்றொடரில் முதல் காயம் உடம்பையும், அடுத்த காயம் தழும்பையும் மூன்றாவது காயம் பெருங்காயத்தையும் குறிக்கும். இவ்வாறு பல பொருள்களைக் குறிக்கும் சொற்களும் இருப்பதுபோல ஒரு பொருளைக் குறிக்கும் பல சொற்களும் இருப்பது தமிழ்மொழியின் சிறப்பு.

முன்சொன்ன கருத்தையே மீண்டும் மீண்டும் திருப்பிச் சொல்லும் இயல்பு சில நூலாசிரியர்களிடம்

இருக்கிறது. பள்ளி ஆசிரியர்கட்கு இது தகும். நூலாசிரியர்கள் தாம் சிறப்பாகக் கருதும் கருத்தைப் படிப்பவர் நன்முக உணரும்படி செய்யலாம். ஆனுல் படிப்பவர் அலுத்துப் போய்விடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். ஒரு கருத்திலிருந்து அடுத்த கருத்துத் தானே ஏற்படும்படி, சொற்ருெடர்கள் ஒன்றன்பின் ஒன்ருய் அமையவேண்டும்*

நூல்களை அறிவு நூல்கள் என்றும் உணர்ச்சி நூல்கள் என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். எது உணர்ச்சி ஊட்டுகிறதோ அதுதான் இலக்கியம், எது உணர்ச்சி ஊட்டவில்லையோ அது இலக்கியம் அன்று என்றும் அறிஞர் கூறுவர். எனவே விரைவான நடையில், உணர்ச்சி ததும்பும்படி மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் எழுதிவருவது மகிழ்ச்சிக்குரியது. உணர்ச்சியை எழுப்ப அவர்கள் பயன்படுத்தும் சொற்ருெடர்கள் ஈண்டுக் குறிப்பிடத் தக்கவை:

*ஆஹா! என்ன அழகு!*
*என்ன காம்பீரியம்!*
*ஆ! என்ன கோரம்!*
*என்ன கொடுமை!*
*ஹோ! என்ன பயங்கரம்!*
*சீ! என்ன அவலம்!*

நூல்கள் ஊட்டுகின்ற உணர்ச்சி நல்லதாகவும் இருக்கலாம்: தீயதாகவும் இருக்கலாம். சர் வால்டர் ஸ்காட்(Walter Scott) என்னும் ஆங்கில நாவலாசிரியர் "தீய கதைகளைப் படிப்பதிலும் தீமை செய்யக்கூடிய

---

*Writer, mind your mannerisms Such minor annoyances as inverted sentences, the omisson of "and", ellipses, under-hypenating over hypenating, excessive use of leaders, fancy phrasing, elaborately plain phrasing quickly turn into major irritants and before you know it you would have lost a reader and earned a critic.

—SATURDAY REVIEW (New York)

வேறு எதுவும் கிடையாது'' என்று தெரிவித்திருக்கிறார். ரஸ்கின் (Ruskin) என்னும் பேரறிஞர் நல்ல இலக்கியத்தை மருந்துக்கும் தீய இலக்கியத்தை நஞ்சுக்கும் ஒப்பிட்டிருக்கிறார். ''மருந்து வேலை செய்தாலும் செய்யலாம்; செய்யாமல் இருந்தாலும் இருக்கலாம். ஆனால் நஞ்சோ ஒருநாளும் வேலை செய்யாமல் இருந்து விடாது. அதுபோல் நல்ல இலக்கியங்கள் நன்மை செய்தாலும் செய்யலாம்; செய்யாமல் இருந்தாலும் இருக்கலாம். ஆனால் தீய இலக்கியங்களோ ஒருநாளும் தீமை செய்யாமல் இருந்து விடா'' என்று ரஸ்கின் கூறி இருக்கிறார். ஆகையால் எந்த நூலிலும் கருத்து சிறப்பாக இருக்க வேண்டும்.

கருத்து சிறப்பாக இல்லாமல் நடைமட்டும் சிறப்பாக இருந்தால் போதியதாகாது. கருத்து இல்லாத எழுத்து பதர் நெல்லைப் போன்றதாகும். நல்ல கருத்துக்களை தம் நாவல்களிலும் கதைகளிலும்—இடையே செருகும் ஆற்றல் ''லக்ஷ்மி'' என்னும் டாக்டர் திரிபுர சுந்தரியிடம் உண்டு. இவருடைய கதையில், பாத்திரங்களின் வாயிலாக இவர் விஞ்ஞான முன்னேற்றத்தைத் தெரிவித்து வருகிறார்.

கருத்தைக் கொடுக்கின்ற நடையும் சிறப்பாக அமைந்தால்தான் எழுத்து வலிமை பெறும். அழகற்ற நடையில் அரிய கருத்தைத் தெரிவித்தால், அந்த முயற்சி வீணாகிவிடும். அது விழலுக்கு இறைத்த நீரே. தச்சன், மரத்தைப் பொறுக்கி எடுத்து இழைக்கிறான். பிறகு வண்ணம் தீட்டிப் பளபளப்பாக்கிக் கண்ணாடி போல் செய்கிறான். எழுத்தாளரும் அவ்வாறே சொற்களை அழகுறப் பயன்படுத்த வேண்டும்.

மறுமலர்ச்சி எழுத்தாளர் பலர் நகைச்சுவையாக எழுதி வருவதை யாம் வரவேற்கிறோம். ''இடுக்கண்

வருங்கால் நகுக" என்பதே வள்ளுவர் வாக்கு. நகைச்சுவை தரமானதாக இருக்க வேண்டும். அது பிறர் மனத்தைப் புண்படுத்தக் கூடாது.

சில எழுத்தாளரின், "ஹாஸ்ய ரஸத்தில்" தமிழ் படும்அவதி சொல்லி முடியாது. அவர்கள் ஒரு சிலருக்கே தெரிந்த சொற்களையும், பிறமொழிச் சொற்களையும் போட்டு மொழியை "ரொப்பி" விடுகிறார்கள். "சொல்பம்" "கல்பனை," "ஒத்தன்" (ஒருவன்,) "எடக்கு" (இடக்கு) "நோப்பாளம்" (என்ன பொருளோ?) "ஒஸ்தி", "ஸ்நேகிதர்," "லக்ஷோபலக்ஷம்," 'ஷட்டகர்' போன்ற சொல்லாட்சிகளை இவர்களது தமிழ் நடையில் அடிக்கடி காணலாம்.

திப்புசுல்தான் காலத்தில்தான் இப்போதிருந்து வரும் முறையில் நீதி மன்றங்களும், நிலவரி பற்றிய ஆட்சிமுறையும் நிறுவப்பட்டன: நமூனு, தாசில்தார், சிரேஸ்தார், பிர்க்கா. தஸ்தாவேசு, நசர், நதீர், காணிக்கை, அமீனு, பசலி, சர்க்கார், சாவி, கஜானு, சிப்பாய், ஜமாபந்தி, முசாபரி, பங்களா ஆகிய பெர்சிய மொழிச் சொற்கள் தமிழிலும் வழங்கி வருகின்றன.

மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் "ஐவேஜ்," "பல்டி," "டேரா," "ஷரத்து," "ஹோதா," "ஜரூர்," "ஜாலக்," "ஜாப்தா" முதலிய இந்தி மொழிச் சொற்களையும், கௌல், ஜாரி செய்தல், பைமாஷ், தர்க்காஸ்து, யாதாஸ்து, புறம்போக்கு, தர்ஜ்மா, தண்டல், அயன், தக்களீ, ஹுஜூர், ஜமீன், ஜமீன்தார், தர்பார், கச்சேரி, அமுல், இருசால், முசாபுரி, இனும், சபாஷ், வகையறு, மசாலை, திவான். பேஷ்கார், கஸ்பா (உள்ளூர் சான்று; கஸ்பாஹெட்மேன் = உள்ளூர் ஹெட்மேன்) "நபர்," "நமூனு, "ஜவாப்," முதலிய உருது, அரபுச்

சொற்களையும், "அங்குரார்ப்பணம்," "அபிலாஷை," "தத்ரூபம்," "அபஜயம்," என்னும் வடசொற்களையும், "சமன்," "ஆபீஸ்," "ஸ்டேஷன்," "எசன்சு" (ESSENCE) முதலிய ஆங்கிலச் சொற்களையும், "துருப்பு," "ரசீது," "பொத்தான்", "பாதிரி" முதலிய போர்ச்சுக்கீசியச் சொற்களையும், "மேசை (MENZA) முதலிய இலத்தின் சொற்களையும். இடையிடையே எழுதி வருகிறார்கள். இன்னும் சிலர் "இஸ்திக்கிட்டு போனான்," "அவன் மட்டும் ஒஸ்தியா?" "அதுக் கோசரம் சொன்னேன்," "ஆஹா! ஊஹூ" என்று கொச்சை நடையில் எழுதுகிறார்கள். மற்றும் சிலர் ஆர்ச் (Arch) வளைவு, ஷாப்பு (Shop)க் கடை, கேட் (Gate) வாசல். கவர் (Cover) கூடு, நடுச் சென்டர் (Centre), பாசக்கயிறு (வடமொழியில் பாசம் என்பது கயிறு), சூர்கத்தி (சூரி என்பது இந்தி மொழியில் **கத்தி** என்று பொருள்படும்), கியூவரிசை (கியூ Queue என்பதற்கு ஆங்கிலத்தில் வரிசை என்று பொருள்) பிரதி ஞாயிறுதோறும், என்று இருமொழிச் சொற்களைச் சேர்த்து ஒரு சொல்லாகப் பயன்படுத்தி வருகிறார்கள். வேறு சிலர் **காக்கையைக்** "காக்காய்" என எழுதுவர். பறவை எப்படிக் காயாக மாறிவிடும்? பன்மைக்குப் பதிலாக ஒருமைப் பயனிலையைப் பயன் படுத்துவோரும் உள்ளனர். "ஏமாற்றிவிட்டான்" என்பதற்கு "**டபாய்த்து விட்டான்**" என்றும், "பொய் சொன்னான்" என்பதற்குக் "**கப்சா விட்டான்**" என்றும் இழிவழக்குகளைக் கலந்துசிலர் எழுதி வருகின்றனர்.

"ஜோப்படி அடித்தான்", அபேஸ் பண்ணிட்டான். தடபுடல் என்பன போன்ற கொச்சைச் சொற்களையும் and என்பதைக் குறிக்க ஆங்கிலத்தில் பயன்படும் '&' என்ற குறியையும் சில எழுத்தாளர்கள் தமிழில் பயன்

படுத்தி வருகின்றனர். இன்னும் சிலர், I, II, என்ற ஆங்கில எண்களையும் பயன்படுத்தி வருகின்றனர். சான்றாக, ராஜராஜ சோழன் II என்பதைக் குறிப்பிடலாம். ராஜ ராஜ சோழன்—(2) என்று எழுதுவது பிழையாகாது; இரண்டாம் ராஜ ராஜ சோழன் என்று எழுதுவதே சாலச் சிறந்தது.

ஈழநாட்டு எழுத்தாளர் சிலர் கரத்தை (வண்டி) அலவாங்கு (கடப்பாறை), கமிசு (முழுக்கைச் சட்டை), குருசு (Cross) போன்ற போர்ச்சுக்கீசிய சொற்களையும் கந்தோர் (அலுவலகம்), கதிரை (நாற்காலி), இஸ்திரி (Ironing), லாச்சி (விளாச்சி, Drawer), பிக்கான் (கோடறி Pickaxe), அலுமாரி (Almirah), வெந்தீசு (ஏலம் Auction) போன்ற டச்சு மொழிச் சொற்களையும் கையாண்டு வருகின்றனர்.

சொற்களைச் சந்தி கூட்டி எழுதுவதே தமிழ் மரபு. எனினும், ஓரளவேபடித்தவர்களும் பொருளைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தால் மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் பிரிக்கக் கூடாத இடங்களிலும் சந்திகளைப் பிரித்து எழுதி வருகிறார்கள். வேறு சிலர் சில எழுத்துக்களுக்கிடையே இடம் விட்டு எழுதுவர். பொருள் எவ்வளவு மாறுபடுகிறது என்பதைக் காண்க:

1. "பிராமணர்கள் சாப்பிடுமிடம்"
   "பிராமணர் கள் சாப்பிடுமிடம்"
2. "அந் நியமனம்"
   "அந்நிய மனம்"
3. "நல்ல திட்டம்"
   "நல் லதிட்டம் (நல்+அதிர்ஷ்டம்)
4. "சமஸ்தானம்" (தனி அரசு)
   "சம ஸ்தானம்" (சமமான இடம்)
5. "செவ்வாய்" - செவ்வாய்க்கிழமை
   "செவ் வாய்" - சிவந்த வாய்

6. "தலைவிதிவசம் — தலை + விதி + வசம் (தலைவிதிப்படி)
தலைவி + திவசம் (மனைவியினது திவசம்)

வந்த தாய், அந்த மான்

அம் மணம், பல கைகள்

என்ற சொற்கள் பிரித்து எழுதினால் ஒரு பொருளை யும் சேர்த்து எழுதினால் பிறிதொரு பொருளையும் தருகின்றன.

"அது வருகிறது" என்றும், "அவை வருகின்றன" என்றும் எழுதுகிறோம்; இவற்றை அது வருகிறது, அவை வருகின்றன என்று சொன்னால் இலக்கணப்படி பிழை இல்லை. இலக்கணத்தைப் போலவே (Usage) மரபும் முக்கியம். வழக்கொழிந்த சொற்கள்—சான்றாக, யான் வருவல் (வருவேன் என்பதற்கு) என்பது போன்றவை —வேண்டுவதில்லை. மரத்திலிருந்து கீழே விழும் இலைச் சருகை ஒட்டவைப்பது போலத்தான் இந்த முயற்சி. வால் என்பது வடசொல் எனத் தவறாகக் கருதிய சிலர் நாயின் தோகை என்று எழுதுகிறார்கள். இப்பொழுது வழக்கில் தோகை, மயிலிறகைக் குறிக்கிறது. முகம் என்பதற்கு மூஞ்சி என்பதே தனித்தமிழ்ச் சொல் எனக் கருதுவர் சிலர், இது இழிவான பொருளில் இப்போது பயன்படுத்தப் பெற்று வருகிறது. எனவே தனித்தமிழ் என்ற பெயரால், மொழியின் தனித்தியங்கும் தன்மையைக் (Indlviduality) கெடுக்கக்கூடாது. வண்டிக் கணக்கான வடசொற்கள் தமிழிற் கலந்து விட்டன. அவை அனைத்தையும் நீக்குவது என்பது இயலாது. பிற மொழிச் சொற்களைத் தமிழ் மரபு கெடா வண்ணம் மாற்றியமைப்பதே முறை. பென்சில், சைக்கிள் என்பன போன்ற பல ஆங்கிலச் சொற்கள் தமிழில் இரண்டறக் கலந்து, பொது மக்கள் நாவில் தழும்பேறிவிட்டன. இவற்றை மாற்ற இனி முயல வேண்டுவதில்லை. யாரோ ஒருவர் வேடிக்கை

யாகச் சொன்னது போல, இச்சொற்கள் தமிழ் மொழியிற் புகுவதை தடை செய்ய வேண்டுமானால், பென்சிலும் சைக்கிளும் வெளிநாட்டிலிருந்து சென்னைத் துறைமுகத்திற்கு வந்தவுடன், பண்டிதர்களை அழைத்து அப்பொருள்களுக்குத் தனித் தமிழ்ச் சொற்கள் அமைக்கச் செய்து, அதன் பின்னரே அவற்றைக் கப்பலை விட்டு இறக்கியிருக்க வேண்டும்.

சங்க இலக்கியத்தை நமது மொழிக்கு அடிப்படையாக வைத்து, காலத்துக்கேற்றபடி இன்றியமையாத சொற்களைத் தமிழிலும் ஏற்றுக்கொள்ளுவதே சாலச் சிறந்தது.

## இருபோக்குகள்

மறுமலர்ச்சி எழுத்தாளரிடம் இருந்துவரும் இரு போக்குகளைப் பற்றி வாரம் என்னும் இதழில் "குயிலன்" எழுதியிருப்பதை ஈண்டு குறிப்பிடுவது பொருந்தும்.

> "ஒன்று முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளாய், பின்னைப் புதுமைக்குப் பெயர்த்துமப் பெற்றியனாய்" விளங்கும் அகப்பொருளுக்கு அதாவது ஆண்பெண் உறவு வளர்ச்சிக்குப் புது மெருகிட்டு, பல்வேறு வண்ணந் தீட்டி, சிறுகதைகள் என்ற பெயரிலும் நாவல்கள் என்ற பெயரிலும் இலக்கியச் சந்தையிலே உலவவிடும் ஒரு போக்கு. இவர்களுக்கு வாழ்க்கையில் வேறு சம்பவங்கள் நிகழ்வது கண்ணுக்குத் தெரிவதில்லை. மற்றொரு போக்கு முற்போக்கு இலக்கியம் என்ற பெயரில் நடப்பதாகும். இது தமிழ்நாட்டு மண்ணில் முளைக்க முடியாத பயிர் என்பது ஒரு சாராரின் அபிப்பிராயமாக இருந்து வருகிறது. இவர்களுடைய அகராதியிலே இது வெளிநாட்டில் முளைக்க வேண்டும்... கடைசிப் பட்சமாக வட இந்தியாவிலிருந்தாவது வர வேண்டும். அப்படியிருந்தால்தான் அதை முற்

போக்கு என்று முத்திரையிடுவார்கள். தமிழ் என்றுலே மாற்றுக் குறைந்துவிடும். இந்த அபாய மான போக்கு எங்கு போய் முடியுமென்பதை சம்பந்தப்பட்ட தோழர்கள் உணரவேண்டும்.''

## முடிவுரை

மறுமலர்ச்சி எழுத்தாளர் பலர் ''குஜிலிக்கடை'' நூல்களையே இயற்றியிருப்பதாகவும் இலக்கண நெறி யைப் பின்பற்றவில்லை என்றும் புலவர்கள் குறை கூறி வருகின்றனர். இதைப்பற்றிப் பேராசிரியர் வையா புரிப் பிள்ளை பின்வருமாறு எழுதியுள்ளார்.

''இலக்கணம் என்பது காலத்துக்குக் காலம் மாறுவது. ஒரு காலத்துக்குத்தோன்றிய இலக்கணம் பின் வருங்காலம் முழுமைக்கும் ஒரு மொழியை நெறிப்படுத்துதல் இயற்கைக்கு விரோதம். இந்த உண்மையை உணர்ந்து, (பொருளின் திட்பம், நெளிவு முதலியவற்றையே முக்கியமாகக் கொண்டு ஒருவன் தனது ஆத்ம குணம் தோன்றவும், தனது நோக்கம் நிரம்பவும்) வசனத்தை அமைத்தலே தமிழின் மறுமலர்ச்சிக்கு அறிகுறியாகும்.

வாக்கியங்களால் அமைந்த தொடரின் (paragraph) அமைதியும், சொல்லக் கருதிய பொருளைப் பாகுபடுத்தி முறைப்பட விரிக்கும் நெறி யும் வசன நூல்களில் முக்கியமாகக் கவனிக்கத் தக்கன. இவ்வாறு பல வழியிலும் திருந்திய செம்மை யான வசன நூல்களை இயற்றிய மறுமலர்ச்சியைப் பேணி வருவோமாக.''

மறுமலர்ச்சியின் எழில் தரும் காட்சி தமிழன்பர் கட்குப் புதிய நம்பிக்கையை ஊட்டுகின்றது.

''குணம்நாடிக் குற்றம் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்''

என்ற குறள் வழி நடப்போமாக.

# 7. சொற்பொழிவு

*''ஆர்த்தசபை நூற்றொருவர்: ஆயிரத்தொன்றாம்புலவர்;*
*வார்த்தை பதினாயிரத்தொருவர்''*

*—ஔவையார்*

பெரும்பாலும், சமயத்தைப் பற்றிய உபந்நியாசங்கள், கதாகாலட்சேபங்கள் ஆகியவை தொன்று தொட்டுத் தமிழ் நாட்டில் நிகழ்ந்து வந்திருக்கின்றன. சைவ சமயத்தைப் பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ அடிகோலியவர் **ஆறுமுக நாவலரே** என்று சொல்லலாம். இவர் தமது பெரிய புராண வெளியீட்டில் அமைந்த சூசனப் பகுதிகளில் சொற்பொழிவுகளில் கடைப் பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகளை வரையறை செய் திருக்கிறார்.

## அரசியல் இயக்கம்

அரசியல் தலைவர்கள் தங்கள் கருத்துக்களுக்கு மக்களுடைய ஆதரவைப் பெறுவதற்காகத் தங்கள் திட்டங்கள் கொள்கைகள் ஆகியவற்றை மக்களுடைய தாய் மொழிகளில் தெரிவிக்க முன்வந்தனர். இந்த முயற்சிக்கு அடிகோலியவர் காந்தியடிகள். சொன்ன தோடு நிற்காமல் தாம் குஜராத்தியில் எழுதியும் பேசியும் அடிகள் தம் சீடர்களுக்கு வழி காட்டினர். எனவே, இந்திய மொழிகளின் உரைநடை வளர்ச் சிக்கு அரசியல் தலைவர்களும் தொண்டாற்றியுள்ளனர்.

பாரதியாருடைய பாடல்களால் நாட்டுப் பற்று தமிழ் மக்களிடையே நாளொரு மேனியும்

பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்தது போலவே பல அறிஞர்களுடைய பேச்சு வன்மையாலும் அரசியல் இயக்கம் மக்களுடைய ஆதரவைப் பெற்றது. தமிழ் மக்களின் மனத்தைக் கொள்ளைகொண்டவர் இருவர்—ஒருவர் வ. உ. சிதம்பரம் பிள்ளை; மற்றொருவர் திரு. வி. க. முன்னவர் தென்னாட்டுத் திலகர். பின்னவர் காந்தீயத்தை வடவேங்கட முதல் தென்குமரி வரை பரப்பிய பெரியார்.

**திரு. வி. க.**

திரு. வி. க. அரிய சொற்பொழிவுகளை நிகழ்த்திய ஆற்றல் நிறைந்த மூதறிஞர். அவர் தமிழரின் அறிவு இமயம். கேட்போரை மட்டுமின்றிக் கேளாரையும் வேட்பிக்கும் ஆற்றல் திரு. வி. க. வின் பேச்சில் இருந்தது.

பல ஆண்டுகளுக்கு முன் புதுச்சேரியில் திரு. வி. க. பேசியபோது அக்கூட்டத்திலிருந்த கவியரசர் சுப்பிரமணிய பாரதியார் திரு. வி. க. வின் பேச்சைக் கேட்டுக் கைகொட்டி மகிழ்ந்த காட்சியினைப் பாரதிதாசன் பாடக் கேட்போம்:—

"புதுவையிலே கலியாண சுந்தரனார் ஆற்றிய
சொற்பொழிவில் தூய
மதுவையள்ளி மலர் பெருக்கி வண்டுகட்கு
விருந்தாக்கி மயக்குதல் போல்
பொதுவினர்க்குச் சிலப்பதிகாரச் சுவையை
நடையழகைப் புகலும் போதில்
இதுவையா பேச்சென்பேன் பாரதியார்
கைகொட்டி எழுவார் வீழ்வார்."

திரு. வி. க. எழுதிய, "தமிழ்த் தென்றல்" "இளமை விருந்து," "உள்ளொளி" என்பவை அவரது சொற்பொழிவுகளின் தொகுப்புக்களேயாம்.

**சத்தியமூர்த்தி**

திரு. எஸ். சத்தியமூர்த்தி பேச்சுக்கலையில் ஒரு மன்னராக விளங்கினார்; ஆங்கிலத்தைப் போலத் தமிழிலும் சிறப்பாகப் பேசிய சிலருள் அவர் தலை சிறந்தவர்; தமிழ் இலக்கிய அறிவும் தமிழ்மொழிப் பற்றும் தமிழ்நாட்டுப் பற்றும் அவருக்கு மிகுதியாக இருந்தன. தேர்தல் காலங்களில் தமிழில் அரிய ஆழ்ந்த சொற்பொழிவுகளைக் கணக்கற்ற கூட்டங்களில் ஆற்றிய பெருமை அந்நாளில் அவர்க்கே உரியது. கூற வேண்டுங் கருத்துக்களை நிரல்பட அமைத்துப் பேசுந் திறன் அவரிடம் மிக்கிருந்தது. **சத்தியமூர்த்தி பேசுகிறார்** என்ற நூல் அவர் பல இடங்களில் நிகழ்த்திய சொற்பொழிவுகளின் தொகுப்பு ஆகும்.

**ஈ. வே. ரா.**

பெரியார் ஈ. வே. ரா. ஐம்பது ஆண்டுகளுக்குமுன் அரசியல் மாநாட்டில் ஆற்றிய பேருரை குறிப்பிடத் தக்க ஒன்று. பல்லாயிரம் பேச்சுக்களாலும், "விடுதலை" என்னும் நாள் இதழ் வாயிலாகவும் இவர் மொழிப் பணி புரிந்துள்ளார். தமிழ் எழுத்துக்களைத் திருத்தம் செய்ய முன்வந்த முதல்வர் இவரேயாவார்.

**வரதராசுலு நாயுடு**

டாக்டர் வரதராசுலு நாயுடு பல சொற்பொழிவுகள் வாயிலாக அரசியல் கருத்துக்களைப் பொதுமக்களிடம் பரப்பியிருக்கிறார்; சிக்கலான அரசியல் பிரச்சினைகளை எளிய தமிழில் தெளிவாகவும் விளக்கமாகவும் அழுத்தமாகவும் தெரிவிக்க முடியும் என்பதை உறுதிப்படுத்தியவர் என்று இவரைச் சொல்லலாம்.

**ராஜாஜி**

"ராஜாஜி" என்றவுடன் அவருடைய உவமைகளே நினைவுக்கு வருகின்றன. மணிக் கணக்காகப் பேசினுலும், உவமைகள் வாயிலாக அரிய பெரிய செய்திகளை, படியாதவரும் தெரிந்து கொள்ளும்படி செய்வதில் இவர் இணையற்று விளங்கி வருகிறார். தமிழ்ச் சொற்களின் வரலாறு, அமைப்பு, புதிய சொற்களின் ஆக்கம் ஆகியவற்றில் இவருக்கு அளவுகடந்த ஈடுபாடு உண்டு.

பிறர் காணுத நுண்ணிய வேறு பாடுகளை அறிந்து சொற்செட்டுடன் தெளிவுபடுத்தும் பேராற்றல் பெற்ற மாமேதை ராஜாஜி.

**பிறர்**

மாகனம் சீனிவாச சாஸ்திரியாரும் தம் முதுமைக் காலத்தில் தமிழில் இனிய சொற்பொழிவுகள் செய்து வந்தது ஈண்டுக குறிப்பிடத் தக்கது. அரசியல் செய்திகளைப் போலப் பொருளாதார நுட்பங்களையும் எளிய நடையில் யாவர்க்கும் புரியும்படி எடுத்துரைத்தவர் டாக்டர் ரா. க. சண்முகம் செட்டியார்.

சி. பி. சுப்பையா, சி. என். அண்ணுதுரை, ம. பொ. சிவஞான கிராமணியார், கி. ஆ. பெ. விசுவநாதம், ப. ஜீவானந்தம், (ஜீவா) சி. சுப்பிரமணியம், சேலம் சுப்பிரமணியன், சா. கணேசன், முகவை இராச மாணிக்கம், முத்துராமலிங்கத் தேவர், சின்ன அண்ணுமலை, செங்கல்வராயன் ஆகியோரும் அரசியல் சொற்பொழிகள் வாயிலாக, உரைநடையில் மக்க

---

* முகவை—இராமநாதபுரத்துக்கு முகவை என்று பெயர் உண்டு. கடலில் ஆறு புகும் இடத்தைப் புகார் என்று அழைத்த தமிழ் மக்கள் கடலுடன் முகக்கும் இடம் எனும் பொருளில் இவ் ஊரை முகவை என்று அழைத்தனர்.

ருடைய ஆர்வம் மிகுதியாவதற்கு உதவியுள்ளார்கள். இவர்கள் தமிழ்நடைக்குத் தந்த மதிப்பைவிட, கருத்துக்களுக்கே மிக்க மதிப்பினை அளித்தனர். ஆதலால், இவர் தம் நடைகளில் பிறமொழிச் சொற்கள் மிகுதியாகக் கலந்திருக்கின்றன. எனினும், இவர்களுக்கு மிகுதியான இலக்கியம் ஆர்வம் இருப்பது பாராட்டுக்குரியது.

**அண்ணு**

ஸ்டாலின் மறைவுக் கூட்டத்தில் அறிஞர் சி. என். அண்ணுத்துரை 8—3—1953-இல் ஆற்றிய சொற்பொழிவில் ஒரு பகுதியை இங்கே காண்க;

> ''காட்டரசனுகிய ஜார் மன்னன் ஆண்ட நாட்டில், ரசபுட்டின் சூழ்ச்சிகள் மலிந்த ரஷ்ய நாட்டில், சுயநலக் கழுகுகள் வட்டமிட்ட நாட்டில், அரும்புமீசை ஸ்டாலின் 'கூனர்களை நிமிர்ந்து நடக்கச் செய்வேன்; குருடர்களுக்குப் பார்வை கொடுப்பேன். கோழையை வீரனுக்குவேன்' என்று உறுதி பூண்டான். அதன்படியே ரஷ்யாவை ஒரு லட்சிய நாடாக்கிவிட்டான். அதனுல், மற்றவர்கள் கண்டு பொருமைப்படக்கூடிய ஒரு பூங்காவாக ரஷிய நாடு இன்று விளங்குகின்றது.
>
> புன்முறுவல் பூத்த ஏழையின் முகத்தில், புதிதாகத் தோன்றிய தொழிற்சாலையிலிருந்து கிளம்பும் புகை மண்டலத்தில் காடு, மேடு, கரம்பு கழனியாக்கப்பட்ட இடத்தில் ஸ்டாலினைக் காணலாம். அவர் இறந்துவிட்டாரென்றுலும் அவருடைய இலட்சியங்கள் உலகில் என்றும் நிலைத்து நிற்கும்.''

அண்ணுவின் தமிழைப்பற்றி 'அண்ணு தமிழும் முற்காலத் தமிழும்' (சுப. ஞானவடிவேலன்) முதலிய ஓரிரு நூலும் ஆங்கிலத்திலும் தமிழிலும் நூறு கட்டுரைகளும் வெளிவந்துள்ளன.

அண்ணாவின் குரல், பல நூறாயிரம் மக்களைத் தட்டி எழுப்பிய குரல், இவர் எழுத்து, திராவிட நாடு, காஞ்சி இதழ்கள், தமிழரின் மறுமலர்ச்சி, ஏ, தாழ்ந்த தமிழகமே!' என்ற நூல்கள் ஆகியவற்றின் வாயிலாக, தமிழ் மொழிப் பணியில் பலரை ஈடுபடச் செய்தது.

தெளிவு, காரண காரிய விளக்கம், கேட்பவர்களை மகிழ்வித்தல், தேர்ந்தெடுத்த சொற்றொடர்களைக் கையாளுதல், பழந்தமிழ் இலக்கிய மேற்கோள்கள், இரயில் பயணத்திலும் இரவெல்லாம் கண்விழித்துப் பதிஞயிரக்கணக்கான நூல்களைப் படித்த பின்னணி, ஓசை நயம், வருணனைத் திறம், அடுக்குத் தொடர், இரட்டைக்கிளவி, எதுகை மோனை, தமிழ்நாட்டுத் தொடர்புடைய உவமைகள், பிறர் மனத்தைப் புண் படுத்தாமை, பெருந்தன்மை ஆகிய ஆற்றல்களால் அண்ணா ஒப்பற்ற பேச்சாளராக விளங்குகிறார்.

பல நூறாயிரம் மக்கள் முன்னிலையில் காலை 4 மணிக்கு நடைபெறும் இருபதாவது கூட்டத்தில், அழகு தமிழில் இந்தத் திறமையை அண்ணா காட்டு கிறார். பத்துப்பேர் மட்டுமே இருக்கும் செய்தியாளர் பேட்டியிலும் ஆங்கில மொழியிலும் நுட்பமான பொருளாதாரக் கொள்கைகளை அரசின் சார்பாக வாதாடும்போதும் இந்த இயல்புகளை இவர் நிலை நாட்டுகிறார்.

அண்ணாவின் நடையே இளந்தமிழர் பின்பற்றும் முன் மாதிரியான நடையாக இருக்கிறது; கான மயி லாடக் கண்டிருந்த வான்கோழி தானும் ஆடினாற் போலவே அம்முயற்சிகள் உள்ளன. மூக்குப்பொடி போட்டுப்பேசிப் பழகியவர்களும் தோற்றுவிட்டனர்?

இருபதாம் நூற்றுண்டில் தமிழ் உணர்ச்சியை ஊட்டியவர் மூவர்—பாரதியார், மறைமலையடிகள், அண்ணு.

அண்ணுவின் ஆட்சியில் உலகத் தமிழ் மாநாடும் கருத்தரங்கும் கூடின. உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஏற்பட இருக்கிறது. சென்னை இராச்சியம் என்ற பெயர் சட்டப்படி 'தமிழ்நாடு' என மாற்றப் படுகிறது. திருக்குறள் ஏற்றம் பெறுகிறது. வள்ளுவர் ஈராயிரம் ஆண்டு விழா கொண்டாடப்பெறுகிறது. வீடுதொறும் நூலகம் அமைய வேண்டும் என்பதும் பூசை அறைபோன்று நூலக அறையையும் திட்டமிட்டு ஒவ்வொருவரும் வீடு கட்ட வேண்டும் என்பதும் அண்ணுவின் கருத்து.

**கல்கி**

தலைசிறந்த எழுத்தாளர் என்ற அளவில் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி புகழ் பெற்றிருந்தார். ஒருமுறை கல்கி, டி. கே. சி., ம. பொ. சி. மூவரையும் ஒருங்கே சொற்பொழிவாற்ற அழைத்திருந்தபொழுது இவர்களை அறிமுகப்படுத்தியவர் "இன்று மும்மணிகள் பேசுவார்கள்" என்று கூறினர். அதை அடுத்துப் பேசவந்த கல்கி,

> "மும்மணிகள் பேசுவார்கள்" என்று அறிவித்தார்கள். ஒருவர் ரசிகமணி (டி.கே.சி.) மற்ருெருவர் கிராமணி (ம. பொ. சி.), மூன்ருவது மணியாக இருக்க நான் ஒரு பெண்மணியாகக்கூட இல்லையே'!

என்று கூறினர்.

எழுத்தில்போலப் பேச்சிலும் நகைச்சுவை நிரம்பியிருந்ததை இவரிடம் கண்டோம்.

தூய தமிழ்நடையில் தம் கருத்துக்களை அனைவரும் புரிந்துகொள்ளுமாறு, மணிக்கணக்கில் பேசும் ஆற்றல் வாய்ந்தவர் சிலரும் நமது தமிழகத்தில் இருக்கின்றனர். அவருள் நாவலர் நெடுஞ்செழியன், பேராசிரியர் அன்பழகன், கலைஞர் கருணாநிதி, கவிஞர் கண்ணதாசன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்.

மேற்கூறப் பெற்ற அரசியல் சொற்பொழிவாளர்களைப் போலவே சமயத் துறையிலும் இருவகைப் பேச்சாளர் இருந்து வருகின்றனர். சைவசமயச் சொற்பொழிவாளருட் பெரும்பாலோர் இயலும்வரை தூய தமிழிற் சொற்பொழிவாற்றுவதைக் காணலாம். அவருள் மறைமலை அடிகள், விபுலானந்த அடிகள், சபாபதி நாவலர், மறை திருநாவுக்கரசு, எம் வயிரமுத்து, ந. ஈசான்ய சிவாசாரியார், தூ. சு. கந்தசாமி முதலியார், குலசேகரப்பட்டினம் வீர. சிவசுப்பிரமணியம், ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, வித்துவான் பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார், திருவாசகமணி பாலசுப்பிரமணியம், சச்சிதானந்தம் பிள்ளை, பாலகவி வே. இராமநாதன் செட்டியார் என்போர் குறிப்பிடத்தக்கவர். குன்றக்குடி அடிகளாரின் புகழுக்கெல்லாம் அவருடைய நாவன்மையே காரணம் எனலாம்; சித்பவானந்த அடிகள், கிருதாரி பிரசாத், கிருபானந்தவாரியார் ஆகியோர் வடமொழி கலந்த தமிழில், மக்களிடையே சமய உணர்ச்சியைப் பரப்பியுள்ளனர்.

வைணவம் முதலிய பிற சமயத்தவருள் பலர் பிறமொழிக் கலப்புள்ள நடையிலேயே சொற்பொழிவு செய்து வருவது கண்கூடு. அவ்வச் சமய நூல்களில் வடசொற் கலப்பு மிகுந்திருப்பதே காரணமாகும்.

'ஆங்கிலத்தில்தான் பேசிப் பழக்கம்; எனக்குத் தமிழில் பேச வராது' என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அரசின் பிற அலுவலர்களும் கூறிப் பெருமைப்பட்ட காலம் மறைந்துவிட்டது. இவர்கள் இந்நாளில் தமிழில் சிறந்த சொற்பொழிவுகள் நிகழ்த்தி வருகின்றனர். இவர்களுள், கல்வித்துறைத் தலைவர் நெ. து. சுந்தரவடிவேலு, போலீசு அலுவலர்களான பரமகுரு, எஸ். எம். டயசு, மாவட்ட ஆட்சித் தலைவர் லெட்சுமிகாந்தன் பாரதி குறிப்பிடத் தக்கவர்.

## ஞானியாரடிகள்

உள்ளத்தே தோன்றிய எண்ணங்களைக் கோவையாக எடுத்துரைக்கும் பேச்சுத் திறனும் எழுத்துத் திறனும் ஓரளவேனும் பெற வேண்டுமென்ற அவா தமிழர் பல்லாயிரவரிடம் இருக்கிறது. சொல் இனிமையும் கருத்தழகும் நிறைந்த சொற்பொழிவுகளே இந்த ஆசைக்கு வித்திட்டன. இத்தகைய சொற்பொழிவாளருள் திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகள் தலை சிறந்து விளங்கினர். இவருடைய கந்தர் சட்டிச் சொற்பொழிவுகள் சிறப்புடையன.

பண்டிதமணி அவர்கள் ஒருமுறை கூறியதிலிருந்து ஞானியாரடிகளின் பேச்சுத்திறன் தெரியவரும்; "சிறிய பொருளையும் மிக விரிவாக எழுதுவதற்கும் பேசுவதற்கும் ஆங்கில மொழி தகுதியுடையதென்று பலர் கூறக் கேட்டிருக்கிறேன். திரு. ஞானியாரடிகளுடைய சொற்பொழிவைக் கேட்டபின் அத்தகுதி மொழிக்கு உரியதன்று என்பதும் பேசுவோரைப்பற்றியதென்பதும் அறிந்துகொள்ளலானேன்." ஞானியாரடிகளைப் பின்பற்றி—ஆனால், மிக்க உணர்ச்சியோடு—

மணிக்கணக்கில் இக்காலத்தில் குன்றக்குடி அடிகளார் சொற்பொழிவாற்றி வருகிறார்.

இந்நூற்றாண்டில் இலக்கியப் பேச்சாளர்களுள் பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை குறிப்பிடத் தக்கவர். அவர் சொல்லின் செல்வர். அவருடைய பேச்சு காதுக்கு இனிமை தரும். பேச்சை அவர் ஒரு கலையாக வளர்த்திருக்கிறார். சொற்களைச் செவ்வையாக உச்சரிப்பதோடு, நிறுத்த வேண்டும் இடங்களில் நிறுத்துவதும், குரலை உயர்த்துவதும் தாழ்த்துவதும் அவர் இயல்பு. எதுகை மோனை முதலிய கவினிய சொல்லின்பம் திளைக்கும் சொற்றொடர்களை அவர் சொல் மாரியில் நனைந்தார் செவ்விதின் நினைவு கொள்வர். ஆழ்ந்த நூல் பயிற்சியால் அறிந்த இலக்கியச் சொற்களை மிகுதியாகக் கையாண்டு அவற்றைத் தமிழக மெங்கும் தம் சொற்பொழிவுகள் வாயிலாக அவர் பரப்பியிருப்பது பாராட்டுக்குரியது.

இலங்கையில் தலைசிறந்த பேச்சாளராக விளங்குபவர் முதலியார் சின்னத்தம்பி அவர்கள். இவர் கவர்ச்சி மிக்க சொற்பொழிவுகளை ஆற்றவல்லவர்; சிறந்த மொழி பெயர்ப்பாளரும் ஆவார். இவரிடம் சொல் வளம் மிகுதியாக உண்டு.

**நடேசப் பிள்ளை**

இலங்கையில் சிலகாலம் அமைச்சராக இருந்த இவர் அமைதியான தெளிவான குரலில் ஆற்றொழுக்குப் போன்ற நடையில் அரிய கருத்துக்களைத் தெரிவித்தார். ஆங்கிலப் புலமையோடு தமிழ்ப் புலமையும் நிரம்பப்பெற்று, தமிழர் பண்பாட்டின் சிறந்த ஓர் ஒளிவிளக்காக இவர் திகழ்ந்து வந்தார். தாம் சொல்லவிருக்கும் செய்திகளை முறைப்படி அமைத்துப்

பேசும் இயல்பு இவரிடம் இயற்கையாகவே அமைந்திருந்தது. யாழ்ப்பாணத்தவரும் ஏனைய தமிழரும் செவ்விதின் புரிந்துகொள்ளக்கூடிய தெளிவான நடையில் பேசிய அறிஞருள் இவர் ஒருவர்.

இவர் ஒன்பதாவது தமிழ் இசை விழாவில் நிகழ்த்திய பேருரையின் ஒரு பகுதி வருமாறு:—

> "தமிழிசைச் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல்...பழைய தமிழ் உருப்படிகள் புதிய மெருகு பெறுகின்றன. புத்தம்புதிய இசைப்பாடல்கள்வெளி வந்து கொண்டிருக்கின்றன......முத்தமிழ் முழக்கத்தை மீண்டும் தமிழகத்திற் கேட்குங் காலம் பிறந்துவிட்டது.........சினிமாத்துறையில் தமிழ் மொழிக்குப் பொருந்தாத வகையில் இந்துஸ்தானி மெட்டுகள் புகுத்தப்படுகின்றன...இதைத் திருத்தத் தமிழிசைச் சங்கம் முயற்சி எடுத்தால் நற்பயன் விளையும். இச்சங்கத்தின் வாயிலாகத் தமிழகம் எங்கும் தமிழிசை வழங்குவதற்கு ஏழிசையாய் இசைப் பயனுயுள்ள இறைவன் அருள்புரிவானுக."

**மீனுட்சிசுந்தரனர்**

பெரும்பாலும் சொற்பொழிவுகள் வாயிலாகவும், ஓரளவு தம் எழுத்தாலும் மொழிப்பணி ஆற்றியுள்ள புலவர் தெ பொ. மீனுட்சி சுந்தரனர் ஆவார். அவருடைய பேச்சின் ஒரு பகுதி வருமாறு:—

> "தமிழ் என்று நாம் இன்று நினைப்போமானுல், திருவள்ளுவரின் திருக்குறள்தான் நினைவுக்கு வருகிறது. திருக்குறளே தமிழனின் கருவூலம். உலகத்திற்குத் தமிழனுடைய கொள்கையை எல்லாம் திரட்டிச் சுருக்கமாகச் சொல்லவேண்டுமானுல், இந்தச் சிறிய நூலை எடுத்துக் கையிலே கொடுத்து விடலாம். இதுதான் நம்முடைய கொள்கை. இது

தான் நம்முடைய அரசியல். இதுதான் நம்முடைய அறவாழ்வு. இதைத்தான் நாங்கள் பேரின்பம் என்று போற்றுவது. நாங்கள் இந்த நாட்டிலே வாழ்ந்து கண்ட உண்மைகள், நாங்கள் எந்த குறிக்கோளுக்காக வாழ்கிறோமோ அந்தக் குறிக்கோள் இதுதான் என்று சொல்லிவிடலாம்.''

**கி. வா. ஜ.**

கம்பன் காவியம், சங்ககால இலக்கியம் இவற்றைச் சொல்லோவியங்களால் எடுத்துக்கூறும் வன்மை பெற்ற அறிஞர் கி. வா. ஜகந்நாதன்; சொல்மாரி என்ற சொற்றொடருக்கு இவர் இலக்கியமாக விளங்குகிறார். இவ்வாறு சிறப்புப் பெற்ற மற்றோர் அறிஞர் ஒளவை சு. துரைசாமிப் பிள்ளை ஆவார். பத்துப் பாட்டுச் சொற்பொழிவுகளில், ''திருமுருகாற்றுப் படை'' பற்றிய பேச்சை, இவரது பேச்சுக்குச் சான்றாகக் கொள்ளலாம்.

ஏனையோருள் அ. ச. ஞானசம்பந்தன், ந. சஞ்சீவி, திருமதி இராதா தியாகராசன், திருமதி செளந்தரா கைலாசம், திருமதி புலவர் குழந்தை அம்மாள் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

**சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்**

சொற்பொழிகளைக் கேட்க வேண்டுமென்ற விருப்பம் மக்களிடையே மிகுந்திருக்கிறது; இந்த விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகத் திரைப்படங்களிலும் சொற்பொழிவுகள் சேர்க்கப்படுகின்றன. இதற்காகவே நீதிமன்றத்துக் காட்சிகள் பல படங்களில் புகுத்தப்படுவதை நாம் அறிவோம். இதன் விளைவாக, பேச்சுக்கலையிலும் எழுத்துக் கலையிலும் இன்று பயனற்ற வெற்றுரைகளே மிகுதியாக உள்ளன. ''சுருங்கச் சொல்லி

விளங்க" வைக்கும் முறை மிகவும் வேண்டற்பாலது இந்த இலக்கண வரம்புக்கு இலக்கியமாக விளங்கியவர் காந்தியடிகள்.

கன்னி மேயோ என்ற ஆங்கில அம்மையார் இந்தியாவைப் பற்றி இழிவான முறையில் ஒரு நூலை வெளியிட்டார். அதைப் பற்றிக் காந்தியடிகள் இரத்தினச் சுருக்கமாகத் தம் கருத்தை எழுதினார். "அது ஒரு சாக்கடைப் பரிசோதகரின் நூல்; அதை இந்தியர் அனைவரும் படிக்கவேண்டும்; அயல் நாட்டார் அதைப் படிக்கக் கூடாது" என்பது காந்தி வாக்கு (It is a drain inspector's report; a book that every Indian and no foreigner must read.)

19з8-இல் காங்கிரசுத் தலைவர் தேர்தலில் டாக்டர் பட்டாபி சீத்தாராமையா தோல்வியுற்றார்; சுபாஷ் சந்திர போஸ் வெற்றியடைந்தார். இதைக் குறித்துத் தலைவர் பலர் விரிவான அறிக்கைகளை வெளியிட்டனர்; காந்தியடிகள் கூறியதெல்லாம் இதுதான்:—"பட்டாபியின் தோல்வி என் தோல்வி". படியாதவர்க்கும் இதன் பொருள் விளங்குமன்றோ?

1942-இல் கிரிப்ஸ் திட்டம் வெளியாயிற்று. இரண்டாம் உலகப்போர் அப்போது நடைபெற்றுக் கொண்டிருந்தது; பர்மாவிலும் மலாயாவிலும் பிரிட்டிஷ் படைகள் தோல்வி மேல் தோல்வி அடைந்து வந்தன. போரின் இறுதியில் இந்தியாவுக்கு அரசியல் விடுதலை தருவதாகக் கிரிப்ஸ் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இத்திட்டத்தைப்பற்றி அடிகள் கூறியதைக் கவனிப்போம். "அது பின் தேதி போட்ட உண்டியல்; வங்கியிலும் பணமில்லை" (A post-dated cheque on a crashing bank)

அதன் பிறகு, இந்திய அரசியல் சிக்கலைத் தீர்க்கப் பிரிட்டிஷார் செய்ய வேண்டுவன பற்றிப் பத்திரிகையில் அறிஞர் பலர் பத்தி பத்தியாய் எழுதினர். அடிகள் சொல்லியது இரண்டே சொற்கள் (Quit India) "வெள்ளையனே வெளியே போ" என்பது இச்சொற்றொடரின் பொருள். இது கல்வியறிவில்லாத மக்களும் பொருள் புரிந்து கொள்ளக்கூடிய ஒரு சொற்றொடர். காந்தியடிகளின் வெற்றி இரகசியமே, சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் ஆற்றல்தான். மிகுதியாகப் பேசுபவரைக் குறிக்கும் "அதிகப் பிரசங்கி" என்னுஞ் சொற்றொடர் எப்பொருளில் நம் நாட்டில் வழங்கி வருகிறது என்பதையும் நாம் அறிவோம்.

## சொல்வன்மை

பேச்சாளர்க்கும் எழுத்தாளர்க்கும் சொல்வன்மை இன்றியமையாது வேண்டப்படும். மாறுபட்ட கருத்துடையவரைப் பல்லோர் முன்னிலையில் இழிமொழி பொழிவதே இக்காலத்தில் சொல்வன்மையாக இருக்கிறது. வள்ளுவர் கூறிய சொல்வன்மை இது அன்று; அது அறஞ் செறிந்ததாய், பொருள் பொதிந்ததாய் இன்பத்தோடு இயைந்ததாய் இருத்தல் வேண்டும் என்பது அவர் கருத்து.

சொற்பொழிவாளர்க்குப் பயன்படும் பின்வரும் பகுதியையும் குறிப்பிடுவது பொருந்தும்:—

> நல்ல பிரசங்கிக்கு நல்ல பாஷா ஞானம் வேண்டும். ஒழிந்த வேளைகளில்...அகராதியைப் பார்த்து ...ஒரு புது வார்த்தையோ அல்லது ஒரு பழைய வார்த்தைக்குப் புது அர்த்தமோ தெரிந்துகொள்ளலாம்.
>
> (சத்தியமூர்த்தி பேசுகிறார்)

**சொற்பொழிவுதான்!**

பலருடைய பேச்சுக்களில் சொல்லோட்டம் மிகுந்திருக்கும்; கேட்பதற்கு அவை இனிமையாக இருக்கும்; பேச்சு முடிந்த பிறகு அச்கூட்டத்திலுள்ளவர்களைக் கேட்டால், பேச்சாளர் என்ன பேசினார் என்பதை ஒருவராலும் சுருக்கமாகச் சொல்ல இயலாது. பேச்சாளரைக் கேட்டால் **சொற்** பொழிவுதானே? பொருட்பொழிவு அல்லவே என்று சுவையாகக் கூறுவர்.

சொற்பொழிவில் கருத்துக்களும் மிகுதியாக இருக்க வேண்டுமானால், அவற்றை எழுதிப் படித்தலே நன்று பேச்சாளர் ஆழ்ந்து சிந்திக்க இந்த முறை உதவுகிறது. பேச்சு நூலுருவாக வெளிவரவும் இது பயன்படும். இவ்வகை நூல்களுக்கு எடுத்துக்காட்டாக, பல்கலைக் கழக ஆதரவில் நிகழும் ஆராய்ச்சிச் சொற்பொழிவுகளைக் கூறலாம்.

சாசனம், சரித்திரம், இலக்கியம் பற்றிக் கவிமணியின் மேடைப் பேச்சுக்கள் **கவிமணியின் உரைமணிகள்** என்னும் நூலில் தொகுக்கப்பெற்றுள. வையாபுரிப் பிள்ளை அவர்கள் முன்னுரையில் கூறுயிருப்பது போல,

> ''பேச்சுத் திறமையென்றால் சரமாரியாக வாக்கியங்களைப் பொழிந்து தள்ளுவதல்ல. கேட்போரது அறிவிற்படாதவாறு கருதிய சொற்களையும் பொருள்களையும் அடுக்கிக் கூறுவதுமல்ல. படாடோபமான சொல்லடுக்குகளை எதுகை மோனைகளில் அமைத்து முழக்கித் தள்ளுவதுமல்ல. இனிய எளிய சொற்களால் கேட்போர் உளங்கொள்ளுமாறு, நேர்பட, முறைப்பட விளக்கிச் சொல்வதே, பேச்சு என்று சொல்வதற்குரிய தகுதி வாய்ந்தது.

கவிமணியின் மேடைப் பேச்சுக்களில் இந்த இயல்பை நன்கு காணலாம்.''

டாக்டர் உ. வே. சாமிநாத ஐயருடைய **சங்ககாலத் தமிழும் பிற்காலத் தமிழும்** என்ற ஆராய்ச்சிநூல், அவருடைய 10 சொற்பொழிவுகளின் தொகுப்பே யாகும். **சேதுநாடுந் தமிழும்** என்பது ரா. இராகவ ஐயங்கார், மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பேசியதாகும்.

இலக்கிய விழாக்கள் இப்போது மிகுதியாக நடைபெறுகின்றன. இங்கே நிகழ்த்தப்பெற்றும் சொற்பொழிவுகள் நூல் வடிவில் வெளியாகியுள்ளன. திரு. வி. க. டாக்டர் மு. வ. நூல்கள் பல இவ்வகையில் சேரும்.

பத்துப்பாட்டு, நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை, அகநானூறு ஆகிய இலக்கியங்களைப்பற்றிய சொற்பொழிவு நூல்கள் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடுகளில் சில. இவை ஒவ்வொன்றிலும் உரிய இலக்கியத்தைப் பற்றிய மாநாடொன்றில் வேறுபட்ட அறிஞர் பலர் நிகழ்த்திய சொற்பொழிவுகள் ஒருங்கே தரப்பட்டுள்ளன. சொற்பொழிவுகள் தமிழ் உரைநடையை வளர்த்திருப்பதற்கு இந்நூல்கள் சான்றாக மிளிர்கின்றன.

**பேச்சுக்கலை நூல்கள்**

இவ்வகை நூல்களுள் குறிப்பிடத் தக்கவை:— **சிறந்த பேச்சாளர்கள்** (தொடர்பன்), **அன்புப் போர், பேச்சுக் கலை** (அன்புப்பழம் நீ, வீரராகவன்) **மேடைக்கலை**...(ஆ. முத்துசிவம்) ஆகியவை. **மேடைத் தமிழ்** என்னும் பெருநூலைக் குலோத்தாராக டி. எம். தெய்வசிகாமணி ஆச்சாரியார் இயற்றியுள்ளார். தமிழ் மேடைக்கேற்ற ஆங்கில அரும்பத அகராதி விளக்கம் சேர்க்கப்பட்

டிருப்பது இந்த நூலின் தனிச் சிறப்பு; பேச்சுத் துறையைப் பற்றி இத்தகைய நூல் தமிழில் வெளி வந்திருப்பது பாராட்டுக்குரியது.

**பேச்சுக்கலை மன்றங்கள்**

கல்லூரிகளிலுள்ள மாணவர் மன்றங்களும், சிறு நகரங்களிலுள்ள தமிழ்ச் சங்கங்களும், சென்னை ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றமும் இளைஞர்களைத் தமிழிற் சிறந்த பேச்சாளராக்கும் பணியைச் செம்மையாகச் செய்து வருகின்றன. இவ்வாறு பயிற்சி பெற்றவர் களே சிறந்த பேச்சாளராக விளங்கி வருகின்றனர்.

**சுருக்கெழுத்து***

சொற்பொழிவுகள் இலக்கிய வளர்ச்சிக்கு நிலை யான பணி ஆற்றப் பேருதவி செய்வது சுருக்கெழுத்து, தமிழ்ச் சுருக்கெழுத்து முறை, இன்னும் போலீசாரின்

---

I don't know whether there is any vernacular half so difficult as Tamil from a Stenographer's point of view. The language is peculiar with its endless terminations of words and what is more, the language as spoken differs considerably from the written one. It was my ambition to tackle it in spite of difficulties and I have done what I could with the resources I had garnered for long as a result of my study of the various systems in vogue in America. It is heartening to learn that the Tamil Reporters in the Lcgislature at Madras who practice Mr. Srinivasa Rao's system have begun to cooperate and improve the system.

—P. G Subramnia Ayyar. Inventor of Shorthand in several Indian anguages, in an article in the 1953 Official Souvenir of the Madras Shorthand Writers' Association.

(Diamond Jubsilee)

உடைமையாகவே இருந்து வருகிறது. தமிழில் சுருக்கெழுத்துப் பயிற்சி உடையவர் குறைவாக இருந்ததால், தமிழறிஞர் பலரது பேச்சுக்கள் காற்றில் பறந்து விட்டன. தமிழ்ச் சுருக்கெழுத்து முறை போதிய அளவு பரவாததால், தங்கள் பேச்சு பத்திரிகைகளில் வெளிவர வேண்டும் என்பதற்காகவே பலர் இன்றுங் கூட ஆங்கிலத்தில் பேசி வருகிறுர்கள்.

போலீசாருக்காகவே தமிழில் சுருக்கெழுத்து முறை 1910-இல் அமைக்கப்பெற்றது. பிட்மன் முறைப்படி, சுருக்கெழுத்தைத் தமிழுக்கேற்ப ஆக்கியவர் வேலூரில் போலீசுப் பயிற்சிக் கல்லூரி ஆசியராக இருந்த எம். சீனிவாசராவ் ஆவார். Tamil Shorthand Instructor என்னும் இந்த நூல் கிடைத்தற்கருமையாக இருக்கிறது. ராட்லரின் தமிழ் அகராதியைப் பக்கம் பக்கமாகப் படித்து, சொற்களின் ஒலி முறையை ஆராய்ந்து இந்நூல் எழுதப் பெற்றது.

பி. ஜி. சுப்பிரமணியஐயர் என்பவர் **தமிழ் சுருக்கெழுத்து போதினி** ஒன்றை வெளியிட்டுள்ளார். சட்ட சபைத் தேவைக்கேற்ப மாறுதல்கள் செய்யப் பெற்றிருப்பது போலவே, அறிஞர்களுடைய பேச்சுக்களையும் தமிழில் சுருக்கெழுத்தில் குறிப்பதற்குப் பொருத்தமாக, சுருக்கெழுத்து முறை பற்றிய ஓரிரு நூல்கள் 1959 இல் வெளிவந்துள்ளன. மேனுடுகளில் போல, இங்கும் சுருக்கெழுத்துப் பயிலும் பழக்கத்தைச் சிறு வயதிலேயே புகட்ட வேண்டும். இத்துறைகளில் தமிழறிஞர்களும் அரசியலாரும் தமிழ்ப் புலமையுள்ள மாணவரும் ஆர்வங் காட்டுவார்களாக!

# 8. நாடகம்

'இலக்கியம் அனுபவத்தின் கனி: அதில்பிழிந்து
எடுத்த சாறே நாடகம்.'' — மோலியர்

நாடகம் தமிழ் மொழியோடு இணைந்துவிட்ட ஒரு நற்கலை. தமிழ் என்று சொல்லும்போதே அது இயல், இசை. நாடகம் ஆகிய மூன்று கலைப் பகுதிகளையும் உள்ளடக்கி நிற்கின்றது. இப்படிப்பட்ட மூன்று பெரும் பிரிவுகளாக மொழியை வேறு யாரும் வகுத்ததில்லை. இது நமது தமிழ் மொழிக்கே உரிய தனிச் சிறப்பு. டி. கே. சண்முகம்

## முன்னுரை

மக்கள் பொழுதுபோக்குக்காக நடத்தும் செயல் வகைகளில் நாடகமும் ஒன்று. காண்பவருக்கு வெறும் காட்சியாக மட்டும் இருந்துவிடாமல், அறிவுக்கு இன்பந் தருவது அதன் சிறப்பியல்பு.

உயர்ந்த படிப்பினைகளைக் கொண்ட நாடகங்கள் ஒரு சமுதாயத்தை மேம்பாடு அடையச் செய்யும். நாகரிகத்தை வளர்க்கும்; ஐம்புலன்களின் வாயிலாக அறிவைத் தரும்: அன்றாட வாழ்விலுள்ள தீய இயல்புகளின் கொடுமைகளையும் நல்லியல்புகளின் நலன்களையும் படம்பிடித்துக் காட்டும்; நிகழ்காலத்தை ஊடுருவிப் பார்க்கும். இத்தகைய நல்ல ஓவியங்களையே உலகெங்குமுள்ள மக்கள் ஆரவாரத்தோடு வரவேற்

கிறார்கள். இந்த நூற்றாண்டில் இலக்கியத்திற்காகக் கொடுக்கப்பெற்ற நோபல் பரிசுகளில் ஏராளமான பரிசுகள் நாடகங்களுக்கே வழங்கப்பெற்றுள்ளன.

பழங்காலமுதலே நாடகம் முத்தமிழில் ஒன்றாக இருந்துவந்திருக்கிறது. * சிலப்பதிகாரத்திற்கு, "முத்தமிழ்க் காப்பியம்" என்றும் பெயர் வழங்கி வருகிறது. அது நாடகமும் விரவியது. சிலம்பு நாடகப் பாணி—பாமுறை—நாடக அமைப்பு—உரையாடல்—ஆழ்ந்த கருத்துக்கள் இவற்றைத் தன்னகத்தே பெற்று—சிறப்பாக அமைந்துள்ளது. இடைக் காலத்தில், நாடகம் சமயப் பிரசாரத்திற்கு மிகவும் பயன்பட்டது. தெருக்கூத்துக்களில் அல்லி அரசியின் கதை, நல்ல தங்காள் கதை, அல்லி அர்ஜுனா, சுபத்ரா பரிணயம், பவளக்கொடி, வள்ளி திருமணம் இவையாவும் பெயர் பெற்றவை. கட்டபொம்மன் கதையும். தேசிங்கு ராஜன் (தேஜ் சிங்கு) கதையும், தமிழகத்தின் புகழ் பெற்ற தெருக் கூத்துக்கள்; வரலாற்றுத் தொடர்புடையவை. அவற்றில் பாட்டுக்களே மிகுதியான இடம் பெற்றுள்ளன.

## ஆங்கில முன்மாதிரி

மேனாட்டுக் கல்வி பரவி வந்ததன்பயனாக ஷேக்ஸ்பியர், ரசீன், மோலியர் போன்ற பிறநாட்டு அறிஞர்கள் எழுதிய நாடகங்களைத் தழுவி எழுதப்

---

* "நாடகம்" கிரேக்க மொழியிலேயே தொடங்கியது என்பாருமுளர். இக்கூற்றின் உண்மை ஒருபுறமிருக்க, இம்மொழியில் நாடகங்கள் சிறந்து விளங்குகின்றன என்பதில் தடையில்லை. கிரேக்க நாடகங்களைப் பற்றி அறிய விரும்புவோர்க்கு, கீழ்க்காணும் நூல் பயன்படும்.

• "THE COMPLETE GREEK DRAMA (ed by W J. Oates and Eugine O'Neill) Random House—2 vols.

பெற்ற தமிழ் நாடகங்கள் சென்ற நூற்றாண்டில் நடித்துக் காட்டப் பெற்றன.

ஷேக்ஸ்பியருடைய நாடகங்களை முன்மாதிரியாக வைத்துத் தமிழில் நாடகம் இயற்றிய முதல்வர் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை ஆவார்கள்; "மனோன்மணியம்" என்பதே அந்த நாடகத்தின் பெயர். லிட்டன் பிரபு எழுதிய "ரகசியப்பாதை" என்னும் கதையினைத் தழுவிச் செய்யுள் வடிவத்தில் ஆசிரியப்பாவில் இந் நாடகம் எழுதப் பெற்றிருக்கிறது.

19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் உரை நடையில் தமிழ் நாடகங்கள் தோன்றலாயின. நாடக இயல் என்ற இலக்கணத்தை வகுத்த பரிதிமாற் கலைஞர் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் புதுமையில்—வடமொழி நாடகங்களை அடிப்படையாக வைத்து—சில நாடகங்கள் எழுதினர். அவர் எழுதிய "மான விஜயம்", "ரூபாவதி கலாவதி" முதலிய நாடகங்களில் செய்யுளும் உரை நடையும் கலந்து வந்துள்ளன. சிலவற்றில் அழகிய பழமொழிகளையும் எதுகை, மோனை, அழகு, அணி ஆகியவற்றையும் இனிமையான தமிழையும் காணலாம்.

கலைஞர் ஆனந்த குமாரசாமியின் தந்தையான சர். முத்துக்குமாரசாமி என்பார் அரிச்சந்திரன் என்ற தமிழ் நாடகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார். பிற்காலத்தில் நாடகநூல் எழுதிய ஏனையோருள் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராயிருந்த கிங்ஸ்பரி என்பார் குறிப்பிடத்தக்க ஒருவர். விபுலானந்த அடிகள். 'மதங்க சூளாமணி" என்ற அரிய நாடகத் தமிழ் நூலினை வெளியிட்டு அழியாப்

புகழ்பெற்றார். இவர் இயற்றிய ஏனைய நாடகப் பகுதிகள்: புறநானூற்றில் ஒரு காட்சி, பாவலர் விருந்து, புத்தர் சரித்திரத்தின் ஒரு பகுதி.

### சம்பந்த முதலியார்

ஆங்கிலத்தில் கற்ற அறிஞர் சிலர் நல்ல தமிழ் உரை நடையில் நாடகங்கள் எழுதத் தலைப்பட்டனர். நாடகத்திற்கு இவ்வகையில் புத்துயிரளித்த பெருமை நீதிபதி பம்மல் சம்பந்த முதலியாருக்கு உரியதாகும். பாட்டின்றிப் பேச்சாகவே நாடகம் அமையலாம் என்பதை உறுதிப் படுத்தியவர் இவரே. இவர், பேச்சு நடையாகவே, நாடகங்களை எழுதியுள்ளார். புராணங்களும் இதிகாசங்களுமே நாடக உலகில் நிறைந்து இருள் சூழ்ந்திருந்தபோது சரித்திரம், சமுதாயம் ஆகிய நாடகங்களை எழுதி நடித்து நாடக உலகிலே ஒளி பரப்பியவர் இவரே ஆவார். இவருடைய நாடகங்களுள் தலைசிறந்தது, "மனோஹரன்" என்பது. இவர் எளிய நடையைக் கையாண்டிருப்பதும் குறிப்பிடத் தக்கது. இவர் ஆங்கில நாடகங்கள் பலவற்றை மொழி பெயர்த்திருக்கிறார். சமுதாய நாடகங்களைத் தமிழில் ஆக்கிய சிறப்பும் இவரைச் சேரும். இவர் 50-க்கு மேற்பட்ட நாடகங்களை எழுதியுள்ளார். உரை நடையில் எழுதி அச்சிடப்பெற்ற முதல் நாடகம் இவர் எழுதிய "லீலாவதி-சுலோசன" என்னும் நாடகமேயாம்.

### மறுமலர்ச்சி

இந்த நூற்றாண்டில் நாடகம் எழுதியவருள் முக்கியமானவர் ஜே. ஆர். ரங்கராஜு. இவர் எழுதியவற்றை நாடகமாக ஆக்கியவர் 'நாடக மறுமலர்ச்சித் தந்தை' என்ற சிறப்புப் பெயர்பெற்ற

எம். கந்தசாமி முதலியார் (எம். கே. ராதாவின் தந்தை) ஆவார்.

பேராசிரியர் கா. நமச்சிவாயமுதலியார் "கீசகன்", "பிரித்விராஜன்" என்னும் இரு நாடகங்களை இனிய தமிழ் நடையில் எழுதியுள்ளார். கரந்தைக் கவியரசு ஆர். வேங்கடாசலம் பிள்ளை செந்தமிழ் நடையில் எழுதியுள்ள சிலப்பதிகார நாடகம், மணிமேகலை நாடகம் என்பன கற்றோர் உள்ளங்களைக் கவர்வன.

திருவனந்தபுரம் தி. இலக்குமணப் பிள்ளை எழுதியுள்ள நாடகங்களில் சிறுபகுதி உரைநடையில் இருக்கிறது. கு சா. கிருஷ்ணமூர்த்தி எழுதிய, "அந்தமான் கைதி" என்னும் நாடகத்தின் கதைப்போக்கும் நடையும் நன்முக அமைந்துள்ளன. மறுமலர்ச்சி நாடகங்களுள் மேலும் சில குறிப்பிடத் தக்கவை; வாழ முடியாதவர்கள், முள்ளில் ரோஜா, தொழிலாளி, கைதி, எதிர்பாராதது, பலிபீடம், தொழிலாளி, சிறைச்சாலை, மறுமணம், லங்கேசுவரன் இவை மனித இயல்புகளைப் புதுமையான முறையில் படம்பிடித்துக் காட்டுகின்றன.

193 -இல் 'தேசபக்தி' என்ற தேசிய நாடகம் தமிழர் உளளங்களைக் கவரும் வகையில் டி. கே எஸ். சகோதரர்களால் நடிக்கப்பட்டது. இது வெ. சாமிநாத சர்மா இயற்றியது; பாணபுரத்து வீரன் என்னும் தலைப்பில் எழுதப்பெற்றது.

சரசலோசனச் செட்டியார், சிவ. குப்புசாமிப் பிள்ளை ஆகியோரும் சில நாடகங்களை எழுதியுள்ளனர். சி. ஆர். மயிலேறு ஷேக்ஸ்பியர் ஆக்கிய, "ஒதெல்லோ" என்ற சிறந்த நாடகத்தைத் தமிழில் வெளியிட்டுள்ளார். நாடகத் தொடர்பான கற்பனைக் கதை

களையும் இவர் எழுதியுள்ளார்; வானொலி நாடகங் களிலும் நடித்துள்ளார். அ. மு. பரமசிவானந்தம் என்னும் தமிழ்ப் புலவர், 'இந்திய முதற் சட்டம்' என்னும் அரிய நாடக நூலை எழுதியுள்ளார்.

சுந்தானந்த பாரதியார் ஐம்பதுக்கு மேற்பட்ட நாடகங்களை எழுதியிருக்கின்றார். பேராசிரியர் கே. சாமிநாதன், வழக்கறிஞர் வி. சி. கோபாலரத்னம் ஆகியோரும் இளம் எழுத்தாளர் பலரும் நாடக வானில் நிலவுகின்றனர். இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் கணபதிப் பிள்ளை, "இரு நாடகங்கள்" என்ற நூலை எழுதியுள்ளார்.

### சங்கரதாஸ் சுவாமிகள் 1867 - 1922

தமிழ் நாடக மேடை அழிந்துவிடாமல் காப் பாற்றிய பெருமை இப்பெரியாரைச் சேரும். இவ ருடைய நாடகங்களை நடித்த அவ்வை டி. கே. சண் முகம் அவர்கள் கூறுவது போல*:—

> சுவாமிகள் சுமார் நாற்பது நாடகங்கள் எழுதி யிருக்கிறார். நாடகத்திற்காக அவர் எடுத்துக் கொண்ட கதைகள் பெரும்பாலும் அம்மானைப் பாடல்களாக நம்முடைய தாய்மார்கள் சுவையோடு படித்து வந்த பழங்கதைகள்தாம்.
>
> **அபிமன்யு சுந்தரி, பவளக்கொடி, சீமந்தனி, சதியநுசூயா, பிரகலாதன், சிறுத்தொண்டர், வள்ளி திருமணம், சத்தியவான் சாவித்திரி, சதி சுலோசனா**—இப்படி எல்லாம் நமக்குத் தெரிந்த நாடகங்கள். இவைகளைத் தவிர வடமொழி நாடக மாகிய **மிருச்சகடியையும்**, ஷேக்ஸ்பியரின் **ரோமியோ ஜூலியத், சிம்பலைன்** ஆகிய நாடகங்களையும்.

---

* நாடகக் கலை, சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்ற வெளியீடு, 1967

**மணிமேகலை, பிரபுலிங்கலீலை** ஆகிய தமிழ்க் காப்பிய கதைகளையும் சுவாமிகள் நாடகமாக்கி இருக்கிறார்.

சுவாமிகளின் நாடகங்களில் வெண்பா, கலித் துறை, விருத்தம். சந்தம், சிந்து, வண்ணம், ஓரடி, கும்மி, கலிவெண்பா, தாழிசை, கீர்த்தனை இப்படிப் பலவகைப்பட்ட பாடல்களும் சிறுபகுதி உரையாடல் களும் நிறைந்திருக்கும். அப்போது உரைநடை அதிகமாக வராத காலமாதலால், பெரும்பகுதி பாடல்களாகவே இருக்கும்.

இப்பொழுதெல்லாம் அந்த நாடகங்களை நீங்கள் பார்க்க நேர்ந்தால், 'என்னையா! எடுத்ததற் கெல்லாம் பாட்டுத்தானா?' என்று கேட்பீர்கள். நாடகங்களில் பாட்டு மிகக் குறைவாகவே இருக்க வேண்டுமென்று கருதப்பெறும் காலம் இது.

* * *

''தமிழ் நாடகக் கலை என்று சொன்னவுடனே நமக்கு முதலில் நினைவுக்கு வருபவர் **தவத்திரு சங்கர தாஸ் சுவாமிகள்** ஆவார். நாடகக் கலை வளர்ச்சிக் காகப் பலவகைகளில் பாடுபட்டவர்கள் கடந்த ஒரு நூற்றாண்டு காலத்தில் பலர் உண்டு. ஆனாலும, சுவாமிகள் புரிந்துள்ள தொண்டைச் சீர்தூககிப் பார்த்தால், எல்லாவற்றையுமவிட மகத்தானதாகத் தோன்றுகிறது.

நம் தமிழ் மொழியிலும் சிறந்த நாடகங்கள் இருந்தன என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்லு கிறார்களாயினும், இன்று வழக்கிலில்லை. இது ஒரு பெருங்குறையாகவே இருந்து வருகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தென்பாண்டி நாட்டில் தோன்றிய சுவாமிகள் சிறந்த நாடகங்கள் பலவற்றை எழுதி அரங்கேற்றி யும் தாமே நடித்துக் காட்டியும், பிறர்க்குப் பயிற்சி யளித்து நடிக்கவைத்தும் தமிழ் நாடக அரங்கில்

ஒரு புத்தொளியை யுண்டாக்கி வைத்து இந் நன் முயற்சியில் வெற்றி கண்டுவிட்டார். தமிழில் நல்ல நாடகமில்லை; நடிகர்களில்லை என்ற குறையை, சுவாமிகள் தம் அரும் பெருஞ்சாதனையால் பெரு மளவு போக்கிவிட்டார். இன்று தமிழகத்தின் தென் பகுதியில் நடிக்கப்பட்டுவரும் பெரும்பாலான நாட கங்கள் சுவாமிகள் இயற்றித் தந்த நாடகங்களே. இன்று பிரபல்மாயுள்ள பெரிய நடிகர்கள் பலர் சுவாமிகளின் மாணவர்கள்; மாணவர்களின் மாண வர்கள் என்றால் மிகையாகாது. ஆகவே, தமிழ் நாடக உலகில் கடந்த அறுபதாண்டு காலத்தை **சங்கரதாஸ் சுவாமிகள் சகாப்தம்** என்று தாராள மாகச் செல்லலாம்.

இவ்விதம் தமிழ் நாடகக் கலைக்குப் புதுவாழ்வு அளித்த சங்கரதாஸ் சுவாமிகளுக்கு நம் நன்றி யுணர்ச்சியைத் தெரிவிக்கும் முறையில் **சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றம்** அவர்களுடைய நூற் றாண்டு விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடிச் சிறபபு மலரொன்றும் வெளியிட முற்பட்டது.

மேற்கண்ட பகுதி தமிழ் நாடக மேதை சங்கர தாஸ் சுவாமிகள் நூற்றாண்டு விழா மலர், காணிக்கைப் பகுதியிலிருந்து எடுக்கப்பெற்றது. இந்த மலர் அவ்வை தி. க. ஷண்முகம் அவர்களுடைய முயற்சியால் சென்னை சங்கர தரஸ் சுவாமிகள் நினைவு மன்றத்தாரால் 1967-ல் வெளியிடப் பெற்றிருக்கிறது.

இவ்வெளியீடு தமிழ் நாடகம் பற்றிய ஒரு கலைக் களஞ்சியமாகத் திகழ்கிறது. சுவாமிகளின் புலமையை யும் பணியையும் பற்றிய எல்லா விவரங்களும் இம்மல ரில் அடங்கியுள்ளன.

சுவாமிகள் வாழ்ந்த காலத்தில் உடன் வாழ்ந்த நாடகாசிரியர்கள், கவிராயர்கள், நடிக நடிகையர்,

இசைவாணர்கள், நாடகக் கம்பெனிகளின் உரிமையாளர்கள் பற்றிய செய்திகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

சுவாமிகளுக்குப் பின்னும் நடந்துவரும் நாடகக் கம்பெனிகள், நாடகாசிரியர்கள் குறித்தும் விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. பழம் பெரும் நடிகர்களின் உருவப்படங்கள், அவர்கள் போட்டுள்ள வேடங்களுடன் பெயர்ப் பட்டியல், பழைய நாடக ஆசிரியர்கள், இன்றைய நாடகாசிரியர்களின் உருவப் படங்களுடன் கூடிய பெயர்ப் பட்டியல், அவர்கள் எழுதியுள்ள நாடகங்களின் பட்டியல் ஆகியவை இம்மலரிலுள்ள சிறப்பான அம்சங்களாகும்.

**வானொலி நாடகங்கள்**

இப்போது வானொலியில் அடிக்கடி நாடகங்கள் ஒலி பரப்பப்படுகின்றன. இவை பொழுதுபோக்குக்காக எழுதப்பட்டவை. குறித்த நேரத்தில் முடிவடைய வேண்டியதிருப்பதால் அளவில் சிறியதாக இருப்பது இவற்றின் சிறப்பியல்பு. இக்காலத்து நாடகங்கள் அனைத்தையும் போல, வானொலி நாடகங்களும் உரைநடையிலேயே அமைந்துள்ளன.

சில ஆண்டுகளுக்குமுன்னர் நாடகங்கள் அனைத்தும் மேடைமீதேறி நடிக்கப் பெற்றன. இப்போது வானொலி பரவி விட்டதால் நாடகத் துறையில் புதியதாக ஒரு கிளை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லலாம். மேடைமீது நிகழும் நாடகங்கள், நாம் காணும் நாடகங்கள்; வானொலி நாடகங்கள், நாம் கேட்கும் நாடகங்கள். அமெரிக்காவில் போல் நம் நாட்டிலும் டெலிவிஷன் என்னும் தொலைக் காட்சி பரவி விட்டால் வானொலி நாடங்களைக் கேட்பது மட்டுமின்றிப் பார்க்கவும் இயலும். அதன் பயனாய் இரு

வகை நாடகங்களுக்குமுள்ள வேறுபாடு நீங்கும். "நடிப்பதற்காக அல்ல" என்ற தலைப்புடன் வெளிவரும் நாடகங்களைப் படித்துத்தான் பயனடையலாம்: அதற்கு வேண்டும் கல்வியறிவு இல்லாதவர்கள் கேள்வி வாயிலாக—வானொலி நாடகங்களைக் கேட்டு—அந் நாடகங்களைச் சுவைக்கலாம்.

வானொலிக்காக எழுதும் நாடகங்களில் நடிகரின் எண்ணிக்கை குறைவாக இருக்கவேண்டும். இன்றியமையாத நடிகர்களையே, நாடகம் எழுதும்போது பயன்படுத்த வேண்டும். ஏராளமான குரல்கள் இருந்தால், நாடகத்தைக் கேட்பவர்களுக்கு யாருடைய குரல் என்று அறிவது கடினமாக இருக்கும், நாடகத்தில் பங்கு பற்றுவோர் அனைவர்க்கும் பணம் கொடுக்க வேண்டுவதால், வானொலி நிலையத்தாரும் குறைந்த நடிகர்களுடன் அமைக்கும் நாடகங்களையே விரும்புவர்.

வானொலிக்கென்று நாடகம் எழுத முயலுவோர் தவறாது வானொலி நாடகங்களைக் கேட்பது நலம் பயக்கும். நாடகத்தைக் காட்சிகளாகப் பிரித்து அமைத்துக்கொள்ள வேண்டியது இன்றியமையாதது. 500 சொற்கள் உள்ள ஒரு கதையை முதலில் அமைத்துக் கொண்டு, பிறகு அந்த நாடக நிகழ்ச்சியின் கால அளவுக்குத் தகுந்தபடி அதை எழுத வேண்டும். குறித்த நேரத்தில்தான் ஒரு நிகழ்ச்சி முடிவடைய வேண்டும் என்பதற்காக வானொலி நாடகங்களில் தேவையில்லாத உரையாடல்களைச் சேர்ப்பது சரியன்று.

### ஓரங்க நாடகங்கள்

வானொலி நாடகங்கள் — பெரும்பாலானவை— ஓரங்க நாடகங்களேயாகும். மக்களுடைய வாழ்க்கை

யில் நிகழ்ச்சிகள் மிகுதியாக இருப்பதால் நாடகத்தைப் பார்க்க அவர்களுக்குச் சிறிதளவுதான் ஓய்விருக்கிறது. நீண்ட நாடகங்களைப் பார்க்கும் பொறுமையும் இக் காலத்தவர்க்கு இல்லை. தமிழ் வளர்ச்சிக் கழகச் செய லாளரும், தமிழ்க் கலைக் களஞ்சிய ஆசிரியருமான பெரியசாமித்தூரன் ஓரங்க நாடகங்கள் சிலவற்றை எழுதியிருக்கிறார். நகைச்சுவை அரசர் என். எஸ். கிருஷ்ணன் தமிழ்நாடெங்கும் நடத்தி வந்த "கிந்தனார்", "ஐம்பதும் அறுபதும்" முதலிய ஓரங்க நாடகங் கள் தமிழர் உள்ளங்களைக் கவர்ந்தவையாகும். அவை இனிய எளிய தமிழ்நடையில் சீர்திருத்தக் கருத்துக் களை மக்கள் உள்ளங்களில் பதியச் செய்தன.

"சுகி" என்னும் புனைபெயர் கொண்ட எழுத் தாளர் நாடகங்களும் இயற்றியுள்ளார். "காதல் பல விதம்" என்பது இவரெழுதிய ஓரங்க நாடகங்களுள் ஒன்று. இலக்கியத்தைப் போலவே, வாழ்க்கையும் பல கோணங்களை உடையது என்பதை ஆசிரியர் இந்நாட கத்தில் படம் பிடித்துக் காட்டியுள்ளார்

## மொழிபெயர்ப்பு நாடகங்கள்

பிறமொழி நாடகங்கள் தமிழில் அண்மையில் மிகுதியாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. வடமொழி யில் நாடகம் தலைசிறந்து விளங்குவதாக அம்மொழி அறிவுடையோர் சொல்லுகின்றனர். வடமொழியின் சிறப்பைப்பற்றி நாள்தோறும் பலர் பிரசாரம் செய்து வந்தபோதிலும் பண்டிதமணி கதிரேசச் செட்டியார், மறைமலை அடிகளார் போன்ற சிலரே வடமொழியி லுள்ள நாடக நூல்களைத் தமிழில் மொழிபெயர்த் துள்ளனர். இவ்வாறு தக்க புலமை உடைய தமிழ் அறிஞர் மொழி பெயர்க்கும் பணியில் ஈடுபட்டால்,

வேற்று மொழி நாடகங்களைத் தமிழ் மட்டும் அறிந்தாரும் சுவைக்க இயலும்,

தமிழ் நாட்டு மக்களைக் கவர்ந்த முற்போக்கு நாடகங்களில் ப. நீலகண்டன் எழுதிய 'முள்ளில் ரோஜா', 'நாம் இருவர்', எஸ். வி. சகஸ்ரநாமம் எழுதிய பைத்தியக்காரன்: ரா.வேங்கடாசலம் எழுதிய பெண், மனைவி; நாரண துரைக்கண்ணன் எழுதிய உயிரோவியம்; நா, சோமசுந்தரம் எழுதிய இன்ஸ்பெக்டர்; திருவாரூர் தங்கராசு எழுதிய ரத்தக்கண்ணீர்; எஸ், டி. சுந்தரம் எழுதிய மனிதனும் மிருகமும், 'கல்கி' கிருஷ்ணமூர்த்தியின் கள்வனின் காதலி முதலியவற்றையும் குறிப்பிடலாம்.

**அண்ணா**

நாடகத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுள் டி. கே. எஸ். சகோதரர்கள், எம். ஆர். ராதா, சி.என். அண்ணாதுரை ஆகியோர் தமிழ் நாடகக் கலை, மறுமலர்ச்சி பெறப் பாடுபட்டு வருகின்றனர். அண்ணாதுரை பல நாடகங்களை எழுதியுள்ளார். தங்கு தடையின்றி வேகமாக வரும் நடையும், அடுக்குச் சொற்களும் இவர் நாடகங்களில் மிகுதியாயிருப்பவை எனலாம். இந்நாடகங்களில் முக்கியமானவை "வேலைக்காரி", "ஓர் இரவு". "நீதிதேவன் மயக்கம்" என்பவை. வேலைக்காரியில் சொற் சாதுரியமான உரையாடல்கள் மிகுதி; ஓர் இரவு, கதைப் பின்னல் மூலம் விறுவிறுப்பு நிறைந்தது இந்நாடகங்களின் உரைநடை உயர்ந்த நிலையில் இருக்கிறது; சீர்திருத்தக் கருத்துக்களைத் தருவதும் அவற்றின் சிறப்பியல்பு. இந்நாடகங்களின் தமிழ்நடை அனைவரும் புரிந்து கொள்ளக்கூடிய நல்ல தமிழ்நடை என்பது குறிப்பிடத்தக்கது.

எம். ஆர். ராதா காட்சி, ஒப்பனை, விளக்கு, ஆடை, இசை இன்றியே அன்றாடச் செய்திகளை வசனமாக வைத்துக்கொண்டு, "ரத்தக் கண்ணீர்" போன்ற பிரசார நாடகங்கள் நடத்தி வெற்றி பெற்றிருக்கிறார். நடிப்பின் இன்றியமையாமையை இவரது நாடகங்களில் காண்கிறோம். இவரது தமிழ்நடை பாமர மக்கள் உள்ளத்தை மிகவும் கவர்வதாகும். இந்த நாடகங்கள் சிலரைப் புண்படுத்துகின்றன.

டி. கே. எஸ். குழுவினர் சிறந்த முறையில் நாடகங்கள் நடத்தியும், நாடகக் கழகம் அமைத்தும், நாடக நூல்களுக்குப் பரிசு வழங்கியும் நாடகக் கலையின் மறுமலர்ச்சிக்குப் பேருதவி புரிந்துள்ளனர். இவர்தம் நாடகங்களை, "காணாத கண் என்ன கண்ணே, கண்ணிமைத்துக் காண்பார்தம் கண் என்ன கண்ணே" என்று சொல்லலாம்.

**காதல் நாடகங்கள்**

காதலையே சிறப்பாக வைத்து நாடகம் எழுதுவதில் வல்லுநராக விளங்குபவர் காதல் ஆசிரியர் அரு. இராமநாதன். இவர் டி. கே. எஸ். குழுவினர் நடத்திய நாடகப் போட்டியில் பரிசு பெற்றவர். இவர் நகைச்சுவை நிறைந்த நாடகங்களை எழுதியுள்ளார். இவருடைய நாடக நூல்களுள் வானவில் என்ற சமூக நாடகம் மிகச் சிறப்பானது. பெண்ணின் வாழ்க்கையே ஒரு வானவில். வானவில்லில் பல நிறங்களும் கலந்திருப்பதுபோல், அவள் வாழ்க்கையிலும் காதல், கடமை, தாய்மை, பாசம், தியாகம் என்ற பல உணர்ச்சிகளும் கலந்தேயிருக்கும் என்ற கருத்துப்பட ஆசிரியர் இந்நூலில் எழுதியுள்ளார். இவர் எழுதிய ராஜராஜ சோழன் என்ற நாடகம், தமிழ் நாடகக்

கலைக்குக் கடந்த சில ஆண்டுகளில் புத்துயிரளித்த பெருஞ் சிறப்புக்கு உரியது. வரலாற்றுச் சிறப்பைத் தெரிவிப்பதோடு, மொழியார்வத்தையும் வளர்க்கும் இத்தகைய நாடகங்களைத் தமிழ் மக்கள் வரவேற்று மகிழ்வர்.

## புதுமுறை நாடகங்கள்

பொய்யான வேடிக்கைக் கதைக் கூற்றுக்களும் (FARCE) தமிழ் மொழியில் இயற்றப்பட்டிருக்கின்றன. நாடக அரங்கில் ஆடத் தகுந்தவையும், அறையிலிருந்து படிக்கத் தகுந்தவையும் உண்டு. "நடிப்பதற்காக அல்ல" என்ற தடை ஆணையோடு. தூய தமிழில், சில நாடகங்களும் நூல் உருவில் வெளிவந்துள்ளன. படிப்பதற்காகவே எழுதப்பட்டிருப்பதால் இவற்றில் நடை சிறப்பாக உள்ளது. இவற்றுள் ஒன்று, "மனைவியின் உரிமை" என்ற நூல்; இதன் ஆசிரியர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் சென்றகாலத் தமிழ் மொழியின் தூய்மை, வருங்காலத் தமிழ் மொழியின் செம்மை, நிகழ்காலத் தமிழ் மக்களின் மொழியறிவு இவற்றைக் கருத்திற் கொண்டு இலக்கிய நடையில் எழுதியுள்ளார்.

படிப்பதற்கென்றே நாடக நூல்கள் எழுதப்பட்டு வருவது வரவேற்கத்தக்கது. ஏன் எனின், வேற்று மொழிகளிற் போலத் தமிழில் நாடக நூல்களை வாங்கிப்படிப்பவர் மிகுதியாயில்லை. கதை நூல்களைப் போன்று நாடக நூல்கள் விற்பனையாவதில்லை. டி. கே. எஸ். குழுவினர் நடித்த "மனிதன்" என்ற நாடகத்தைப் பல்லாயிர மக்கள் கண்டு களித்துள்ளனர். ஆனால், இந்நாடக நூலை வாங்கியவர் ஒரு சிலரே யாவர். இந்த நிலை மாறினால்தான் சமூகத்தின்

நிலையை உயர்த்தும் நோக்கத்தோடு காலத்திற்கேற்ற கருத்துக்களும் கலையழகும் நிறைந்த நாடகங்களை எழுதத் தமிழறிஞர் முன்வருவர்.

டி. கே. எஸ், சகோதரர்கள் "தமிழ்ச் செல்வம்" என்ற நாடகத்தையும் நடித்துள்ளனர். பிறர் அறியாது மறைந்து கிடந்த தமிழ்ச் செல்வங்களை மக்கள் மன்றத்தில் நடித்துக் காட்டும் இப்புதிய முயற்சி பாராட்டுக்குரியது. சிலப்பதிகாரம், திருக்குறள், புறநானூறு, அகநானூறு இவற்றில் ஊடுருவிச் செல்லும் சிறந்த கருத்துக்களின் விளக்கமே இந்த நாடகம். இதை கி. ஆ. பெ. விசுவநாதம் தொகுத்துள்ளார்.

இந் நாடகத்தின் ஒரு பகுதி வருமாறு:—

**தலைவன் :** ஆருயிரே, என்மீது வீணுகக் குற்றம் சொல்லாதே. நான் எந்தப் பெண்ணையும் கண்ணெடுத்தும் பார்த்ததில்லை. பிரிந்தது முதல் இதுவரை **உன்னையே நினைத்துக்கொண்டு ஓடோடி வந்திருக்கிறேன் கண்ணே?**

**தலைவி :** என்ன! என்ன! என்னை **நினைத்துக் கொண்டு** வந்தீர்களா!

**தலைவன் :** என்ன இது! மீண்டும் அழுகிருயே?

**தலைவி :** என்னை '**நினைத்தேன்**' என்ருல் என்ன பொருள்? **நினைவு** என்பது எப்பொழுது வரும்; மறந்த பிறகுதானே? நீங்கள் என்னை **மறந்து** விடுவீர்கள், அப்புறம் திடீர் திடீரென்று **நினைப்பு** வரும்—அப்படித்தானே. மறக்காமலிருந்தால் நினைப்புக்கே இடமில்லையே? என்னை மறந்த சமயத்தில் யாரை **நினைத்தீர்களோ?**

**தலைவன் :** அடி அன்னமே! உன்னை **மறப்பதா?** அது என் உயிரையே **மறப்பது** போலல்லவா?

உலகில் உன்னையே நான் அதிகமாக நேசிக்கிறேன் என்பது உனக்குத் தெரியாதா?

**தலைவி :** உன்னையே அதிகமாக நேசிக்கிறேன் என்றால், கொஞ்சமாக நேசிப்பது யாரையோ? அவர்கள் எத்தனை பேரோ? எங்கிருக்கிறார்களோ?

**தலைவன் :** தங்கமே! இப்படிக் குற்றம் கண்டுபிடித்தால் நான் என்ன செய்வது? என் உள்ளத்தில் உன் ஒருத்திக்குத்தானே இடமுண்டு. இந்த உடலில் உயிர் இருக்கிறவரையில் இந்தப் பிறவியில் நான் உன்னைக் கைவிடமாட்டேன்.

**தலைவி :** கண்ணாளா, இந்தப் பிறவியில் என்னைக் கைவிடுவதில்லை என்று சொன்னீர்களே! அப்படியானால் அடுத்த பிறவியில் யாரை அடையத் தவம் செய்கிறீர்களோ?

"பச்சையப்பர்" என்ற நாடக நூலினை டாக்டர் மு. வரதராசனார் இயற்றியுள்ளார். இது அங்கமே இல்லாத நாடகம். இவருடைய நாடகங்களிலும் நாவல்களிலும், இவர் ஆங்கில முறையைத் தழுவிச் சில சொற்களைப் புது முறையில் எழுதி வருகிறார். சான்று.

எழுந்திரு' மா.
யாரு' டா.

"பச்சையப்ப"ரில் காட்சி 7–இல் சில இடங்களில் ஆங்கிலத்தை ஆசிரியர் அப்படியே தந்திருக்கிறார். உரிய பகுதிகளின் கருத்தைத் தமிழிலும் தந்திருந்தால் ஆங்கிலம் அறியாத மக்களும் படித்துப் பயனடையலாம். இந்த நூலைப் படித்தபோது, முஸ்லீம்கள் சிலர் அறபுத் தமிழ் (ARAB TAMIL) எழுதுவது என் நினைவுக்கு வந்தது. இது தமிழ் மொழியை அறபு எழுத்துக்

களால் எழுதுவதாகும். இந்த நூல்களை அறபு எழுத்துத் தெரியாத தமிழர் படித்தறிய முடியாது.

தமிழ்நாட்டில் நாடக மேடைகள் புராணக் கதைகளில் பிறந்தன; நாடோடிக் கதைகளில் தவழ்ந்தன; சமூகக் கதைகளில் நடமாடின; இப்போது அரசியல் பிரசாரம் செய்து வருகின்றன. இந்த மாறுதல்களில் வியப்பொன்றுமில்லை.; ஆனால், நாடகத்தின் நோக்கம் எதுவாயிருப்பினுஞ் சரி, கலைச்சுவை குன்றலாகாது.

**முடிவுரை**

நாடகத் துறைபற்றி அறிஞர் பலரின் கருத்தோவியங்கள் தாங்கிய அழகிய இதழ் ஒன்றைப் பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தார் வெளியிட்டிருக்கின்றனர். இது போன்ற முயற்சிகள் பெரிதும் வரவேற்கத்தக்கவை. இந்த இதழில் ஒரு கட்டுரையில் "அகிலன்" எழுதியிருப்பது போல, "மொழிப்பற்றும் நாட்டுப் பற்றும் கொண்ட எழுத்தாளர்கள், நடிகர்கள், அரசாங்கம் இவ்வளவும் இருந்தால்தான் நாடக இலக்கியம் நம்மிடம் உயரும். அப்போதுகூட எல்லா நாடகங்களுமே இலக்கிய நாடகங்களாக இராது; அது அவசியமுமில்லை. நாடகத் தோட்டத்தில் சில வாடா மலர்களும் பூக்க வேண்டுமென்பதுதான் என் ஆசை."

'நாடகக் கலை' என்ற நூலில் நடிகர் அவ்வை டி. கே. சண்முகம் தமிழ் நாடகக் கலையின் வளர்ச்சி வரலாற்றையும் நடிகனின் தகுதிகளையும் மிக விரிவாகவும் ஆழமாகவும் ஆராய்ந்துள்ளார். 1935 வரையிலும் கூட தமிழ் நாடகம் என்பது பெரும்பாலும் பாடலாகவே அமைந்திருந்ததை அவர் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்:—

'அதோ கேளுங்கள் சபையோர்களே! இப்படியாகத்தானே அரிச்சந்திர மகாராஜனுகப் பட்டவன் நாடு நகர முதலானதுகளை விசுவாமித்திர முனியிடம் கொடுத்துவிட்டுக் காசிக்கு வரும் வழியில் அநேக துயரையடைந்து காசிநகர்க் கோபுரந் தோன்றக் கண்டு தன் பத்தினிக்குத் தெரிவித்துக் கரங் கூப்பித் தொழுகிறவிதங் காண்பீர்கள் கனவான்களே!'......

இதுதான் பழங்கால நாடக வசனம். இதற்குப் பொது வசனம் என்று பெயர். நாடக விளக்கத்துக்காகக் கட்டியக்காரன் இதைப் பேசுவான். இவ்வாறு பேசப்படும் நீண்ட பொது வசனங்களைத் தவிர பெரும்பாலும் பாடல்கள்தான். பண்டைக் காலந் தொட்டு நாடகத் தமிழ், இசைத் தமிழோடு சேர்ந்தே வளர்ந்து வந்திருக்கிறது.

அபூர்வமாகச் சில இடங்களில் பாடலின் கருத்தை யொட்டி வசனமாகவும் சில வரிகள் பேசுவதுண்டு.

'கேளாய் பெண்ணே சந்திரமதி! லோகத்திலுள்ளவர்கள் செய்யும்படியான சகல பாவங்களையும் போக்கத் தக்கதாகிய திவ்ய மகிமை பூண்ட இந்தக் காசி நாடு வந்தோம் பாராய் பெண்ணே!'

அவ்வளவுதான். உடனே, 'கரங்குவிப்பாய் மயிலே, இதோ காசி காணுது பார் குயிலே' என்று மீண்டும் பாடத் தொடங்கிவிடுவான் அரிச்சந்திரன்.

இதுகாறும் கூறியவற்றை நோக்க, தமிழ்நாடகம் பல துறைகளிலும் முன்னேறியிருக்கிறது என்பதை அறியலாம். ஆனுல் நாடகத்தைக் காண்பவரின் குறைகளை அவர்களுக்கு வலியுறுத்தும்படி நாடகம் எழுதும் சிறந்த முறையைத் தமிழ் நாடக ஆசிரியர்கள் மிகுதியாகக் கையாளவில்லை. உலகியலில் மக்க

விடையே காணப்படும் வேண்டாத குணப் பண்புகளை எடுத்து நன்கு புலப்படுத்திச் சிரிக்கவைத்துக் கண்டிக்க அவர்கள் முன்வர வேண்டும். சீரிய கருத்துள்ள நாடகங்களால் சிந்திக்கும் ஆற்றல் பெருகுவதாக.

நமது நாடகங்களில் காட்சியமைப்புக்கள் குறைந்து கதை அம்சம் பெருக வேண்டும். திரையே இல்லாமல் காட்சியே இல்லாமல் வெறும் நடிப்புள்ள நாடகங்களும், அயல் நாடுகளில் நடிக்கப்படுகின்றன.

நமது நாட்டில் நாடகக் குழுக்கள் பல இடங்களுக்குச் சுற்றுலாச் செல்லும்போது, எல்லா இடங்களிலும் குறிப்பிட்ட சில நாடகங்களையே நடித்து வருகின்றன. பிரிட்டிஷ் நாடகக் குழு ஒன்று 1950-51இல் இந்தியாவில் பயணஞ் செய்தபோது, அந்தந்த நகரங்களிலுள்ள பல்கலைக் கழகங்களில் அந்த ஆண்டில் பாடமாக இருந்த ஷேக்ஸ்பியர் நாடகங்களையே நடித்துக் காட்டினர்.

ஆங்கிலத்தில் வெளிவருவதைப் போலச் சமுதாயத்தை ஒட்டிய குடும்ப நாடகங்கள், நல்ல தமிழ் நடையில் வெளிவருதல் வேண்டும்.

பாரிசு நகரத்திலும் மேல் நாடுகளில் ஏனைய நகரங்கள் சிலவற்றிலும் சிறந்த நாடக அரங்குகளை ஆங்காங்குள்ள நகராண்மைக் கழகங்கள் தம் செலவில் கட்டியுள்ளன. தமிழகத்திலும் நகராண்மைக் கழகங்கள் நாடகக் கலைக்கு உதவி புரிய முன்வர வேண்டும். 75 லட்சம் ரூபாய் செலவில், டில்லியில் ஒரு தேசிய நாடக அரங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. நாட்டின் பல இடங்களில் நாடக அரங்குகள் அமைக்க கவி இரவீந்திரர் நூற்றுண்டு விழாவையொட்டி அரசாங்கமே ஏற்பாடு செய்து வருவது மகிழ்ச்சிக்குரியது. வாழ்க நாடகக்கலை!

## 9. திரைப் படங்கள்

நாடகத்தை நடிக்கும்போது, உரிய ஊரிலும் அதன் சுற்றுப்புறத்திலுமுள்ள மக்கள் மட்டுமே அதைக் கண்டு களிக்க இயலும்; பல்லாயிரக்கணக்கான மக்கள் நாடகத்தைக் கண்டு மகிழவும் நாள்தோறும் நடித்து நடித்து, நடிகரின் உடல் நலிவடைவதைத் தடுக்கவும் நாடகங்கள் படமாக்கப்பெற்று வருகின்றன.

### கலையும் பண்பும்

அமெரிக்காவில் திரைப்படம் எடுக்கும் முதலாளி ஒருவர், பெர்னார்டுஷா எழுதிய நாடகம் ஒன்றைப் படம் பிடிக்க விரும்பினார். நாடகத்தின் உரிமையைப் பெறுவதற்காக அவர் ஷாவுக்குக் கடிதம் எழுதினார். இவ்வளவு பணம் வேண்டும் என்று ஷா கண்டிப்பாகச் சொன்னார். படமுதலாளி, அந்தத் தொகையில் ஒரு பகுதியையே குறைக்க முயன்றார். தொகையைச் சிறிது குறைத்தால்தான் தாங்கள் வாங்க இயலுமென்று குறிப்பிட்டு மீண்டும் ஷாவுக்கு எழுதினார்.

"தாங்கள் உரிமை தந்தால், பெருந்திரளான மக்களுக்குத் தங்கள் நாடகங்களைப் பார்க்கும் பேறு கிடைக்கும்; தாங்கள் கொடுக்கவில்லையென்றால், அத்தகைய வாய்ப்பு அவர்களுக்கு எங்கே ஏற்படப்

போகிறது? அது படமாக வெளிவருமாயின், கலையுலகுக்கும் பெருந்தொண்டாக விளங்கும்" என்று பாராட்டியிருந்தனர். ஷா, அவ்வளவு எளிதில் மசிகிறவரா? "தாங்கள் கலையையே பெரிதாகக் கருதுகிறீர்கள் நான் பணத்தையே பெரிதாகக் கருதுகிறேன். என்ன செய்வது!" என்று பதில் எழுதிவிட்டார்.

படம் எடுப்பதில் அமெரிக்காவுக்கு அடுத்தபடி இந்தியாவே சிறந்து விளங்குகிறது. இந்தியாவில் உருவாகும் படங்களில், இந்தி மொழிக்கு, அடுத்தபடியாக மிகுதியான படங்கள் தமிழ் மொழியில் எடுக்கப்படுகின்றன. எனவே, பொது மக்களுடைய தமிழ் அறிவை வளர்ப்பதற்கோ அல்லது கெடுப்பதற்கோ திரைப்படம் பேராற்றல் பெற்றிருக்கிறது.

திரைப் படங்களைக் காட்டும்பொழுது தொடக்கத்தில் அப்படங்களைப் பற்றிய அமைப்பு விவரங்களை எழுதித் திரையிற் காட்டுகின்றனர். நடிகர்கள். நடிகைகள், கதை, வசனம், இசை அமைப்பு, பின்னணி இசை, நடனம், ஆடை அலங்காரம், காட்சி அலங்காரம், ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு முதலிய தமிழ்ச் சொற்களைக் கண்டு மக்கள் மகிழ்கின்றனர்.

பொருத்தமான தமிழ்ச் சொற்களைக் காட்டுதற்கு இதுவரை ஒருவரும் முயலாதது விந்தையாயிருக்கிறது. எனவே, இனி ஆக்கும் படங்களிலே தமிழை மாசுபடுத்தும் இந்த ஆங்கிலச் சொற்களுக்குப் பதிலாகத் தமிழ்ச் சொற்களை இடும்படித் தமிழ்ப் படங்களை ஆக்குவோர்களை வேண்டிக் கொள்ளுகிறோம். இத்துறையிற் கருத்துச் செலுத்தியுள்ள ஈழநாட்டு தமிழறிஞர் க. பொ. இரத்தினம் பொருத்தமான தமிழ்ச் சொற்களை கீழே தருகிறார்:

| | | |
|---|---|---|
| ஆர்கெஸ்ட்ரா | — | கூட்டியம் பல்லியம் |
| எடிட்டிங் | — | பதிப்பு |
| டைரக்டர் | — | நெறியாளர், பணிப்பாளர் |
| டைரக்ஷன் | — | நெறிப்படுத்தல், நெறிப்பாடு. பணிப்பு |
| தியேட்டர் | — | படமாளிகை |
| பிக்சர்ஸ் | — | படங்கள் |
| புரொடக்ஷன் | — | ஆக்கல், தயாரிப்பு |
| புராஸஸிங் | — | பதப்படுத்தல் |
| புரொட்யூஸர் | — | ஆக்குநர் |
| போட்டோகிராபி | — | ஒளிப்படவியல், ஒளிப்படப்பிடிப்பு |
| மேக்–அப் | — | கோலப்புனைவு, ஒப்பனை |
| ரிகார்டிங் | — | பதிவு |
| ரிகார்டிஸ்ட் | — | பதிவாளர் |
| லைட்டிங் | — | ஒளியமைப்பு |
| லாபரேடரி | — | ஆய்கூடம் |

சில ஆண்டுகளுக்கு முன்வரையில் திரைப்படங்களில் பாட்டு மிகுதியாக இருந்தது. "35 பாட்டுக்கள் இப்படத்தில் உள்ளன" என்று விளம்பரம் செய்த காலமும் உண்டு. இப்போது திரைப்படங்களில் பாட்டுகளின் எண்ணிக்கை குறைந்துவிட்டது. "வசனம்" சிறப்பாக அமைந்திருக்கிறதா என்பதைப் பொது மக்கள் கூர்ந்து ஆராய்ந்து வருகின்றனர். "வசனம்" எழுதியவர் யார் என்று கேட்பது, தமிழ் மக்களிடத்தில் வழக்கமாகி விட்டது. "வசனம்" நன்றாக இருந்தால் அதை மனப்பாடம் செய்வதற்காக, மீண்டும் மீண்டும் ஒரு படத்தைப் பார்க்கச் செல்லுவதும் இளைஞர்களுக்கு இயல்பாகி விட்டது. படம் பார்த்து முடிந்ததும், "பாட்டுப் புத்தகம்" மட்டுமின்றி "வசனப் புத்தகத்"தையும் கேட்டு விலைக்கு வாங்குவதையும் நாள்தோறும் பார்த்து வருகிறோம்.

'பேசும் படம்' என்னும் திங்கள் வெளியீட்டில் ஒவ்வோர் இதழிலும் ஒரு படத்தின் "வசனம்" வெளி வருகிறது. இந்த வசனங்களுக்காக, பழைய இதழ் களைப் பேணி வைப்பவர் பலர். "சேற்றிலே செந்தா மரை இல்லையா? குப்பையிலே குண்டுமணி இல்லையா?" என்ற சொற்றொடர்களை மனனம் செய்து சொல்லும் அன்பர்கள் மிகப் பலர் உளர். வசனத்தால் புகழ் அடைந்த படங்களுள் கண்ணகி, மந்திரி குமாரி, வேலைக்காரி, காதலி, ஓரிரவு, பராசக்தி முதலியன சில.

"வசனம்" எழுதிப் புகழ்பெற்றவர்களுள் எஸ். டி. சுந்தரம், சக்தி டி.கே, கிருஷ்ணசாமி, ஏ.எஸ். ஏ. சாமி, இரா. வேங்கடாசலம் ஆகியோர் குறிப்பிடத்தக்க வர்கள். 'வாழ்க்கை' எனும் படத்திற்கு வசனம் எழுதிய ப. நீலகண்டன் "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர்..." என்ற குறளை இடையே சேர்த்திருக்கிறார்; இத்தகைய முயற்சிகள் பாராட்டத் தக்கவை. வசனங்களில் புரட்சியான நடையைக் கையாண்டவர் என்று சொல் லத்தக்கவர் "இளங்கோவன்".

அண்ணாதுரை, மு. கருணாநிதி ஆகியோர் வசனம் எழுதிப் பெரும்புகழ் அடைந்துள்ளனர். அண்ணாதுரையின் வசனம் கருத்துக்கள் நிறைந்தது; சொல்லமைப்புக்களில் சிறந்தது. கருணாநிதியின் வசனம் இளமையின் துடிப்புக்கு எடுத்துக் காட்டாக விளங்குவது. உள்ளத்தைத் தொடும் உணர்ச்சி மிகுந்த உயிருள்ள நடையை அவர் எழுத்துக்களில் காண் கிறோம். கதைக்கு ஏற்றபடி வசனம் அமைப்பதிலும் அவர் இணையற்று விளங்குகிறார். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், அண்ணாதுரை, கருணாநிதி ஆகி யோரின் வசனங்கள் அவர்களுடைய கருத்துக்களை

ஏற்றுக்கொள்பவர் மகிழும்படியும், ஏற்றுக்கொள்ளாதார் வெருளும்படியும் அமைத்துள்ளன!

வசனம் எழுதுபவர் தம் விருப்பப்படி எழுதப் படம் எடுப்பவர்கள் இசையவேண்டும்: அவர்களுக்குப் பெரு மதிப்புத் தரவேண்டும்; அப்போதுதான் படம் சிறப்பாக உருவாகி மக்களின் ஆதரவைப்பெறும் என்று இத்தாலியில் படத்துறையில் ஈடுபட்டுள்ள அறிஞர் ஒருவர் கூறியிருக்கிறார்.

வசனத்தின் சிறப்பு, நடிகர்கள் அதைச் சொல்லுவதில்தான் இருக்கிறது. தமிழ்ப் படங்களில், சொற்களை உச்சரிப்பதைப்பற்றி ஒருவரும் அக்கறை காட்டுவதில்லை. இந்நிலை மாறவேண்டும். படங்களில், நல்ல உச்சரிப்பைக் கேட்டால் அன்றாட வாழ்வில் நன்றாக உச்சரிக்கும் பயிற்சி மக்களுக்கு ஏற்படும்; மொழிப் பற்று உண்டாகும். அது மட்டோ? தமிழ்ப் படங்களைப் பார்க்கும் பிறமொழியாளரும் தமிழ் மொழியை அறிந்துகொள்ள, தமிழ்ப் படங்கள் உதவும். சான்றாக, சிங்களவர் தமிழ்ப் படங்களையே பார்த்து மகிழுகின்றனர்; எனவே நமது படங்களில் பேசப்படும் தமிழைத்தான் அவர்கள் கற்றுக்கொள்ள இயலும். (தமிழ்ப் படங்களைப் பின்பற்றியே சிங்களவர்கள் நாடகங்கள் அமைத்து நடிப்பது வழக்கம்.)

திரைப்படங்கள் எடுக்கப்படும் ஆலிவுட்டில் உச்சரிப்புச் சரியாக இருக்கிறதா என்பதைக் கவனிக்க, அலுவலர்கள் உள்ளனர். இந்த அமைப்பிலும், தமிழில் படம் எடுப்பவர்கள் ஆலிவுட்டைப் பின்பற்ற வேண்டுமென்பது நமது விருப்பம்.

வசனம் எழுதுபவர்களில் பலர் பிறர் எழுதிய கதைகளை ஒட்டியே தம்முடைய வசனத்தை எழுதுகின்றனர்; இந்தியப்படங்களில் வங்கமொழிப் படங்களி

லேயே சிறந்த கதைகள் உள்ளன: தமிழில் நல்ல கதைகளும் படமாக எடுக்கப்படும் முயற்சி தொடங்கியிருக்கிறது. தலைசிறந்த பல கதைகள்படமாக வெளிவரவேண்டுமென விரும்புகிறோம். தக்க கதைகள் கிடைத்தில என்று படத் தொழிலில் முனைந்துள்ளோர் குறை கூறி வருகின்றனர்.* இக்குறையைப் போக்கும் முறையில் காலத்துக்கேற்ப புதிய கதைகளை எழுதித் தமிழ் எழுத்தாளர் திரைப்படங்களின் வாயிலாகவும் தமிழ் வளரத் துணை புரியவேண்டுமெனக் கனவு காண்கிறோம்.

வசனங்கள் முன்னைவிட இப்போது கவர்ச்சியாக அமைந்துள்ளன. சிறந்த கருத்துக்களைச் சுருங்கிய அளவில் வெளிப்படுத்துவதே வசனம் எழுதுபவர்களின் குறிக்கோளாக இருந்து வருகிறது. கேட்பவர்களின் கருத்தை—தொடக்க முதல் இறுதிவரை...ஒருநிலையாக ஈர்க்கும் நகைச்சுவையும் சொல்லோட்டமும் வசனங்களின் சிறப்பியல்புகளாக உள்ளன. சொல்ல விரும்பும் கருத்துக்களை ஓரளவே நேரடியாக வெளிப்படுத்தி எஞ்சியவற்றைச் சூழ்நிலையால் மறைமுகமாகப் புலப்படுத்துவது திரைப்பட வசனத்தில் வழக்கமாகிவிட்டது. உவமைகள் மிகுதியாகக் கையாளப்படுகின்றன. சிலப்பதிகாரத்தில் கானல்வரியில் சில இடங்களில் வருவதுபோல, ஒரு கருத்தை வலியுறுத்த "ஒருபொருண்மேல் மூன்றடுக்கி வருதலை"த் திரைப்படக்

* Stories and not stars make a film great I think India is lacking in cnntemporary writers. The producer cannot all the time be digging into the works of old writers to search out his themes. Strong themes are lacking because there is no one to write them. That is why the producers go in for fantastic nonsense filled with sex. There is nothing else to take its place.—Dilip Kumar in an interview to CEYLON PICTURE-GOER, September, 1952.

கதைகளில் காண்கிறோம். இரு பொருள் தரும் சொற்களைப் பயன்படுத்துவது நகைச் சுவை பயக்கிறது; ஆனால் அவற்றுள் ஒரு பொருள் கீழ்த்தரமாக இருப்பதைக் குறிப்பிடாமலிருக்க இயலவில்லை. ஒரு நடிகர் ஒரு சொற்றொடரை தொடங்குவதும் அதை மற்றொருவர் முடிப்பதும்—ஆஸ்கார் வயில்டு எழுத்தைப் பின்பற்றி—தமிழில் வசனம் எழுதுவோர் வெற்றியாகக் கையாண்டிருக்கும் முறை. ஆங்கிலச் சொற்றொடர்களை இடையிடையே புகுத்துவதும் எதுகை மோனைக்காக வடசொல்லைச் சேர்ப்பதும் இத்தகையதே.

## "டப்பிங்" (DUBBING)

"டப்பிங்" முறையில் உள்ள குறைபாடுகளையும் இங்கே சுட்டிக் காட்டுவோம். "டப்பிங்" என்பது ஒரு மொழியில் எடுத்த படத்தையே பிற மொழியிலும் தனிப் படமாகப் பயன் படுத்துவதற்காக, பல மொழிகளை ஒரே நடிகர்களைக் கொண்டு பேசச் செய்வது ஆகும். இதிலுள்ள கோளாறினால், நீலக்கடல் (BLUE LAGOON), கௌரவம் (AAN) போன்ற படங்களில் வாய் அசைவது தெரிகிறதே தவிர, என்ன பேசுகிறார்கள் என்று தெரிவதில்லை. உரையாடல் தமிழ் மக்களுக்கு விளங்கவில்லை. தமிழ்மொழியை நன்றாகத் தெரிந்தவர்களைக் கொண்டே பேசச் செய்வதுதான் சரியான முறை. இவ்வாறு செய்யாவிட்டால், படத்தொழில்—தமிழ்ப் பாட்டுக்களில் இந்தி மெட்டைப் புகுத்தியதோடு அமையாமல்—தமிழ் உரைநடையையும் கெடுக்க முயலுகிறது என்ற குற்றம் ஏற்படும்.

இசைக் கொலையையும் தமிழ்ப் படங்களில் இடையிடையே காணலாம். கீர்த்தனைகள் என்ற பெயரால் கண்டவாறு வெளிவரும் கேடான பாடல்களுக்குத் திரைப்படங்களில் இடம்தரும் வழக்கம் நீங்கவேண்டும்.

திரைப்பட வசனங்களிலிருந்து இரண்டு மேற்கோள்கள் காண்க;

## மோகன சுந்தரம்

**பீமராவ்** :—ஸார்!

**மோகன முதலியார்** :—ஸார் என்னய்யா ஸார்? ஐயான்னு தமிழிலே அழகா சொன்ன என்னய்யா?

**பூபதி** :—நீங்க உள்ளே வந்த வேளே, சமயம் சந்தர்ப்பம் தெரியாம விளேயாடறது எப்படியிருக்குன்ன?

**லீலா** :—எப்படியிருக்கு?

**பூபதி** :—வென் ரோம் வாஸ் பர்னிங் நீரோ வாஸ் பிடிலிங் என்ற மாதிரி.

**லீலா** :—அப்படின்ன?

**பூபதி**:—அவ்வளவுதான? ரோமாபுரி என்கி றநகரம் தீப்பிடிச்சு எரியும்போது, நீரோ என்றவன் நிம்மதியா பிடில் வாசிச்சுக்கிட்டிருந்தானும்.

**லீலா** :- இங்கிலீஷிலே இவ்வளவு பெரிசை தமிழிலே சின்னதா, தாடிபத்தி எரியும்போது பீடிக்கு நெருப்பு கேட்டாப் போலேன்னுவாங்க.

## பராசக்தி

முத்தெடுக்கப் போய் கிளிஞ்சல் பொறுக்கிய கதையாயிற்று. தங்கையின் வீட்டிலே களிப்புத் தவழும். உற்சாகம் ஊஞ்சலாடும்; மகிழ்ச்சி தாண்டவமாடும் என்றெல்லாம் எண்ணி வந்தேன்; ஆனல் அங்கே வேதனே விளேயாடிற்று.

# 10. செய்தித் தாள்கள்

இந்நூற்றாண்டில் நாள் இதழ்களும், வார, திங்கள் வெளியீடுகளும் மிகுதியாகப் பெருகியுள்ளன. நூல்களைப் படிப்பவர்களைவிட, இதழ்களைப் படிப்பவரே மிகப்பலராக இருக்கின்றனர். எனவே செய்தித் தாள்களில் தமிழ் உரைநடை எத்தகைய இடம் பெற்றிருக்கிறது என்பதை ஆராய்வோம்.

ஓரளவு எழுதப் படிக்கத் தெரிந்த மக்களிடையே அரசியல் உணர்ச்சியை எழுப்புவதற்காகப் பத்திரிகைகள் தோன்றின. இக்காரணத்தால் இவற்றில் பாட்டுக்கள் மிகுதியான இடம் பெறுவதில்லை; அரசியல் கருத்துக்களைத் தரும் செய்திகளும் கட்டுரைகளுமே சிறப்பாக வெளிவந்து கொண்டிருக்கின்றன.

''என்னை வசனம் மட்டும் நித்தமும் எழுதென்று
சென்னைத் தினசரியின் ஆசிரியர் செப்புகின்றார்
பாட்டெழுத வேண்டாமாம் பார்த்தீரா அன்னவரின்
பாட்டின் பயனறியாப் பான்மையினை''

என்று சுப்பிரமணிய பாரதியார் தம் அனுபவத்தைப் பாடியுள்ளார்.

## பேசுவதுபோல எழுதுவது

முன்னர்க் கூறியபடி, ஓரளவு எழுதப் படிக்கத் தெரிந்தவர்க்கெனவே அவை ஏற்பட்டபடியால், நாள் இதழ்கள் மக்களில் சிலர் பேசுகின்ற முறையைப் பின்

பற்றியே எழுதி வருகின்றன. பிறமொழிச் சொற்களும் இவற்றில் அளவுகடந்து காட்சி தருகின்றன. இதற்கு ஒரு காரணம் செய்திகள் வேற்றுமொழியில் கிடைப்பதாகும். அன்றாட அவசரத்துக்காக, உடனே ஒரு சொல்லைக் கண்டு பிடித்து அச்சிட்டு அச்சு நகல் சரி பார்க்கப்பட வேண்டும். எனவே, அங்குள்ள ஆசிரியர்கள் தமக்குத் தோன்றிய (சில சமயங்களில் தவறான) கலைச் சொற்களைப் பயன்படுத்துவாராயினர். முன்னர் இவ்வாறு செய்ததற்கு நியாயம் இருந்திருக்கலாம். கலைச் சொற்கள் மிகுதியாக ஆக்கப்பட்டிருக்கும் இந்நாளில் பொருத்தமற்ற கலைச் சொற்களையும் தவிர்க்கக்கூடிய சொற்களையும் தொடர்ந்து பயன்படுத்துவது தவறு.

## இலக்கணப் பிழைகள்

தமிழ் நாள் இதழ்கள் பலவற்றில் இலக்கணப் பிழைகளை நாள்தோறும் காணலாம். இதற்கு காரணம் உரிய இதழ்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் பலரின் புலமைக் குறைவேயாகும். ஆங்கில நாள் இதழ்களில் ஆங்கிலப் பேராசிரியராக இருப்பவர்கள் ஆசிரியராக இருந்து வருகிறார்கள். அதுபோல, தமிழ்ப் பேராசிரிராக இருந்து ஓய்வு பெற்றிருப்பவர்களைத் தமிழ் இதழ்களின் ஆசிரியராக யாராவது நியமிப்பார்களா? அந்த நன்னாள் அண்மையில் இல்லைபோலும்! ஆங்கிலப் பத்திரிகைகளில் மொழி அறிவு மிக்கவரே பதவியிலிருந்து வருகின்றனர்.

தமிழ்ப் பத்திரிகைகளில் ஆசிரியர் குழுவில் இடம் பெற மொழி அறிவு என்னுந் தகுதி வேண்டுவதில்லை. ஏன், தமிழ்தானே..."ஈங்கிவற்றில் ஏதுமிலார் தமிழினிலே ஏடெழுதிப் பிழைக்க வந்தார்" என்று கூறுவது இவ்விடத்தில் பொருத்தமாகக் காணப்

படுகிறது. கவிதை, நாடகம், பத்திரிகை, அச்சகம்— இவ்வாறு மொழித்துறையில் ஈடுபட்ட அனைவரும் "மொழிப் பயிற்சி'' உடையவர்களாயிருத்தல் இன்றியமையாதது. பாரதிதாசன் பாடலும் ஈண்டு கவனிக்கத் தக்கது:

''இலக்கணமும் இலக்கியமும் தெரியாதான்
[ஏடெழுதல் கேடுநல்கும்
தலைக்கணையில் நெருப்பிட்டுத் தலைவைத்துத்
[துயில்வதுபோல் பகைவனைப் போய்
நிலைப்புற்ற தமிழ் ஏட்டில் ஆசிரியனுக்குவது நீங்க
[வேண்டும்
கலைப்பண்பும் உயர்நினைப்பும் உடையவரே
[ஏடெழுதும் கணக்காயர்கள்!''

தமிழ் இதழ்கள் பலவற்றிலுள்ள குறைபாடுகளைப் பற்றித் திரு. வி. க. குறிப்பிடுகையில்,

''தமிழைப்போல் உயர்ந்தமொழி
தரணியெங்கும் கண்டதில்லை
தமிழரைப்போல் மொழிக்கொலையில்
தலைசிறந்தோர் எவருளரே!''

என்று உள்ளம் நொந்து, நெஞ்சம் குமுறியிருக்கிறார்.

ஆங்கில மொழியில் வெளிவரும் சிறந்த நாள் இதழ்கள் ஒவ்வொன்றிலும் அதன் உரிமையாளர் ஸ்டைல் புக்(STYLE BOOK)* என்னும் ஒரு நூல் வெளியிட்டிருக்கின்றனர். இன்ன இன்ன சொற்களை எந்த எந்த இடங்களில் பயன்படுத்தலாம்? இலக்கணப் பிழைகளை எவ்வாறு தடுக்கலாம்? தி (THE) என்னுஞ் சொல்லை எங்கே சேர்க்கலாம்? எங்கே சேர்க்கக் கூடாது? என்பதையெல்லாம் இச்சிறு நூல் வரையறுத்திருக்

* STYLE BOOK gives Rules of Composition for the use of Editors, Copy Readers, Operators and Proof-Readers. Such books are not for sale, though copies usually may be obtained by persons interested.

கிறது. இந்நூலிற் கூறப்பட்டிருக்கும் வரம்புகட்கு உட்பட்டே ஒவ்வொரு நாளும் அந்த நாளிதழ் உருவாகிறது. தமிழ் இதழ்களுக்கும் இத்தகைய வரம்பு நூல் இன்றியமையாதது.

தமிழ் மொழியில் உள்ள இலக்கிய அமைதியை இலக்கண உருவமாக எடுத்துக்காட்டாமல், கசப்பான மருந்தைத் தேனில் குழைத்துத் தருவதுபோல, **பயிலுந் தமிழ்** என்னும் நூலில் ஆசீர்வாதம் ஞானப்பிரகாசம் தந்திருக்கிறார். தமிழில் நூல்கள் எழுத விரும்பும் ஒவ்வொருவரும் இந்நூலைப் படித்துப் பயனடையலாம். இந்நூல், ஏனைய பல நல்ல நூல்களைப் போலவே யாரால் எங்கு வெளியிடப்பட்டது என்பது தெரியவில்லை. 1962 இல் யாழ்ப்பாணத்தில் அச்சிடப் பெற்றதாக மட்டும் ஒரு குறிப்பு இருக்கிறது.

எல்லோருக்கும் விளங்கும் சொற்கள் இருக்க, பிற சொற்களே தமிழ் இதழ்களில் பயன்படுத்தப்பட்டு வருவதும் வருந்தத் தக்கது. அனைவர்க்கும் பொருள் தெரிந்ததும் யாவரும் புரிந்துகொள்ளக் கூடியதுமான **நாய்** என்ற சொல் இருக்க அதற்குப் பதிலாக **சுவாஹம்** என்ற சொல்லைப் பயன்படுத்தி அதற்கு விளக்கம் தரும் முறையில் "நாய்" என்று பிறைக் கோடுகளுக்குள் (Within Brackets) அச்சிடுவது வேண்டப்படாதது. பழமையான ஒரு நாள் இதழில் இத்தகைய சொற்களைக் காணலாம். ஹேஷ்யம், மகஜர், ஜெயம், அபஜெயம், குஷி, சால்ஜாப்பு, சஹஜம், சிலாக்கியம், ஜரூர், முஸ்தீபு, அதிபர், பேஷ், பைசல், ஜவாப், ஷரத்து, பிரமுகர், ஆஜர், சம்பாஷணை, பக்ஷீஸ், பந்தோபஸ்து, பஜார், சௌக்கிதார், கிஸான், மஸ்தூர், பர்தா, ரயத், சன்னது, சன்யாஸி, தாக்கீது, பக்ஷம், ஜம்பம், யக்ஞம், ரீதி, ஜீகிஞ, வஜா, ஹானி,

தேசப் பிரஷ்டம், ரேஷன், ஹைகோர்ட்டு, மஹஜர் என்னுஞ் சொற்களையும் பல இதழ்களில் காணலாம். "குதிரை அக்கிர்ஸ்தானத்தில் வந்தது" போன்ற தலைப்புக்களையும் ஒரு தமிழ் இதழ் தருகிறது. உரிய தமிழ்ச் சொல் இல்லாத இடத்தில் பிறமொழிச் சொல்லை அருமையாகப் பயன்படுத்துவது தவருகாது. சான்ருக "நகராண்மைக்கழகப் பெருந்துணைவேந்தர்" என்ற வாய்கொள்ளாத சொற்ருெடருக்குப் பதிலாக "மேயர்" என்னுஞ் சொல்லைப் பயன்படுத்துவது நலம். ஆனல், இதை முன்மாதிரியாகக் கொண்டு குதிரைக்கு குர்ரம் என்ருல், ஆனைக்கு அர்ரம் என்ற அளவிற்குச் செல்லலாகாது.

"வரவேற்புக்கு வந்தனம் கூறுகையில் டி. கே. சி. ஆனந்த பாஷ்யம் சொரிந்தார்" என்று ஓர் இதழில் ஒரு முறை குறிப்பிட்டிருந்தது. இன்னும்,

> "சாத்தூர்—கோவில்பட்டி ரோட்டில் 13-6-52ல் சென்ற பொன்னுத்தாயி என்ற ஸ்திரீயின் கழுத்திலும் காதிலும் இருந்த ஆபரணங்களை பறித்துக் கொண்டு ஓடியதாகச் சண்முகத் தேவன்மீது தொடரப்பட்ட கேசில் எதிரி குற்றவாளி இல்லையென்றும் ருஜூவாகியதால் எதிரியை டிஸ்சார்ஜ் செய்யும்படி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார். எதிரி அரஸ்ட் செய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்தான். இந்த கேசில் பிராசிக்யூசன் தரப்புக்கு அட்வகேட் N. V. இராமய்யர் ஆஜராஞர். இவ்வூர் மாஜி டவுன் காங்கிரஸ் கமிட்டி பிரசிடென்ட் ஸ்ரீ வேலாயுதம் பிள்ளையும் இந்தக் கேசில் ஒரு விட்னசாக விசாரிக்கப்பட்டார்."

என்பது போன்ற நடையில் செய்திகள் வெளிவருகின்றன. "தஞ்சை டெல்டாவுக்கு மேட்டூர் அணை ஜலம் —பிப் 11-ந் தேதி வரை இந்த சப்ளை நீடிக்கும்"

என்ற செய்தித் தலைப்புகளையும் தமிழ் இதழ்களில் காணுகிறோம்.

நில நன்கொடை என்னும் தூய தமிழ்ச் சொற்றொடர் இருக்க, பூமிதான யக்ஞம் என்ற சொற்றொடரைச் சில இதழ்கள் பயன்படுத்துகின்றன. பிரிவினையாகாத இந்து குடும்பம் என்பதற்கு அவிபக்த ஹிந்து குடும்பம் என்றும் குறிப்பிடுகின்றன. "கல்தா கொடுத்தான்", "சவால் விடுத்தான்" என்னும் கொச்சைச் சொற்கள் பல தமிழ் நாளிதழ்களிலும், வார இதழ்களிலும் தாராளமாக வெளிவந்து கொண்டிருத்தல் தமிழ் நடை வளர்ச்சிக்கு ஊறு செய்வதாகும். ஆசிரியர், உபாத்தியாயர் என்ற தென்மொழி வடமொழிச் சொற்கள் இருக்க, "வாத்தியார்" என்ற சொல்லைச் சில இதழ்கள் பயன்படுத்துவது ஏனோ?

திரு வி.க. அவர்களால் தமிழ் இதழ் வளர்ச்சியில் பெரியதொரு மாறுதல் ஏற்பட்டது. உணர்ச்சி, விறுவிறுப்பு, வேகம், நடையின் போக்கு இவற்றாலும் தீப் பொறி பறக்கும் எழுத்துக்களாலும், "நவசக்தி" "தேச பக்தன்" என்னும் இதழ்கள் வாயிலாக உறங்கிக் கிடந்த தமிழ் மக்களைத் தட்டி எழுப்பி, அரிய முறையில் அரசியல் இயக்கத்திற்குத் திரு. வி. க. பணியாற்றினார். இந்த "ரிவொலுயூசனை" சக்சஸ்புல் ஆக்கவேண்டும் என்பது போன்ற தமிழைப் பத்திரிகைகள் எழுதிக் கொண்டிருந்த போது, உரிய சொற்களைத் தமிழாக்கி வெளியிட்டவர் திரு. வி. க. இவ்வாறு பத்திரிகைகள் வாயிலாக இவர் ஆற்றிய தமிழ்ப் பணி போற்றற் குரியது: ஈடு, இணை இல்லாதது. கருத்துக்களைத் தொகுத்து ஒரு கவர்ச்சியான தலைப்பிட்டு, அவற்றை வகைசெய்து பல உட்பிரிவுகள் ஏற்படுத்தி ஒவ்வோர் உட்பிரிவையும் பின்பு விளக்கி எழுதுகின்ற அவரது

முறை சிறப்பானது. சிறு சிறு சொற்றொடர்கள்: அலசி விளக்கும் பாங்கு; அருந்தமிழ்ச் சொற்கள்— இவற்றையும் திரு. வி. க. நடத்திய இதழ்களில் காணலாம்.

## ஆசிரியர் குறிப்புக்கள்

தமிழில் இன்று வெளிவரும் நாள் இதழ்கள் சில வற்றிலிருந்து ஆசிரியர் குறிப்புக்களை இங்கே தருவோம். முதல் குறிப்பு, "தினமணி"யிலிருந்து எடுக்கப் பட்டது. இது பல்லாயிரம் தமிழ் மக்களால் நாள் தோறும் படிக்கப்படும் இதழ். இப்பகுதியிலிருந்து "தினமணி"யின் தமிழ் நடையை ஓரளவு அறியலாம்.

### தினமணி 21—11—51

### மணிக் குண்டு

மணியை அறிவிக்கும் குண்டு சுடுவது சென்னை நகரில் நெடுநாளைய பழக்கம். அதைச் சுட்ட பீரங்கிக்கும் கிராக்கி வரவே யுத்த காலத்தில் அது நின்றுவிட்டது. பகீரத முயற்சி செய்து ஒரு பீரங்கியை இப்போது வரவழைத்துள்ளனர். விரைவில் மணிக்குண்டு போடுவார்கள் என்று தெரிகிறது. பழக்கத்தைப் புதுப்பிக்கையில், நெடுநாள் இருந்தது போல, இரவு எட்டு மணிக்குப் போடுவதுதான் மிகச் சிறந்ததாயிருக்கும். இடைக்காலத்தில் தோன்றிய 4-மணிக் குண்டு ஏற்பாடு அவ்வளவு சிறந்ததல்ல; வேலைக்கால இரைச்சலில் நகரின் பல பகுதிகளில் அது கேட்கவே இல்லை. இரவில் எட்டு மணிக்குப் போடுவதால் பலவகை அனுகூலமுண்டு, கடற்கரையில் இருப்பவர்களும் கடிகாரம் இல்லாத மற்றவர்களும் காலாகாலத்தில் வீடு திரும்ப வேண்டும் என்ற எச்சரிக்கையாகவும் இருக்கும். தவிர முன்னெல்லாம் சென்னை நகரில் சம்பிரதாய

*மாக குண்டு சப்தம் கேட்டுத்தான் இராச் சாப்பாட்டுக்குப் போவார்கள்; அதனுல்தான் "தண்ட சோற்று ராமா. குண்டு போட்டு வாடா" என்ற பழமொழிகூட வந்தது என்று நினைக்கிறேம். அதை மதித்தாவது எட்டு மணிக் குண்டாக வைத்துக் கொள்ளலாமே?*

அடுத்த குறிப்பு, "தமிழ்நாடு" என்னும் நாள் இதழிலிருந்து எடுக்கப்பட்டது. இது தமிழ் வளர்த்த மதுரையிலிருந்து 1951 முதல் 1968 வரை வெளிவந்தது. இவ்விதழில் நல்ல தமிழ்ச் சொற்கள் பயன்படுத்தப் பட்டன.

## தமிழ்நாடு 4—3—60

## அன்னைக்கு அருகதை இல்லையா?

*கல்லூரிப் பாடமொழியாக ஆங்கிலமே தொடர்ந்து இருக்கவேண்டுமென்று கேரளப் பல்கலைக் கழக ஆட்சிக் குழு முடிவு செய்துள்ளது. ஆங்கிலம் உலகமொழி என்பதையும், அறிவின் கருவூலமாக அது விளங்குவதையும் யாரும் மறுப்பதற்கில்லை. எனினும், ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர், அதன் வாயிலாகவே உயர் நிலைக் கல்வியறிவைப் பெறவேண்டும் என்னும் வற்புறுத்தல் காரணமற்றதென்பது நடுநிலை நின்று ஆராய்வார்க்கு நன்கு புலனுகும்.*

*பல்கலைக் கழகப் பாட மொழியாக இருக்க ஆங்கிலமே தகுதியுடையதென்றும், அதன் மூலமே இன்றைய கலை, விஞ்ஞான அறிவைப் பெறமுடியுமெனவும் சிலர் துணிந்து கூறுகின்றனர். இது உண்மையானுல், மற்றெல்லோரைக் காட்டிலும் ஆங்கிலேயர்கள் கலை, விஞ்ஞானத் துறைகளில் முன்னேறி இருக்கவேண்டும். ஆனுல், நேரடியாக*

நாம் காண்பதென்ன? ஆங்கிலத்திற்கு மாறாகத் தமது தாய்மொழியில் தொடக்க முதல், பல்கலைக் கழகம்வரை கல்விபெறும் உருசியர்கள் இன்று விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் முன்னணியில் நிற்கின்றனர். மேலும், தமது தாய் மொழியையே பல்கலைக் கழகப் பாட மொழியாகக் கொண்டுள்ள செருமனியர், பிரெஞ்சுக்காரர், இத்தாலியர், சப்பானியர் முதலியோர் ஆங்கிலேயர்க்கு எவ்வகையிலும் தாழ்ந்துவிடவில்லை.

இவற்றினின்றும் பல்கலைக் கழகப் பாடங்களைக் கற்பிக்கத் தாய்மொழியினும் ஆங்கிலமே சிறந்தது என்ற வாதம் அடிப்படை அற்றது என்ற உண்மை தெற்றெனப் விளங்கும்.

இனி, ஆங்கில ஆர்வலர் கூறுவதைப்போல், அம்மொழியில் கல்வி பெறுபவர்களே சிறந்த அறிஞர்களாக முடியும் என்பது உண்மையாயின், கடந்த இருநூற்றாண்டுகளாக இந்தியா எண்ணற்ற உலகப் புகழ் வாய்ந்த வல்லுநர்களைத் தோற்றுவித்திருக்க வேண்டும். ஆயின், இது நடைமுறையில் ஏன் நிறைவேறவில்லை? இன்று விஞ்ஞானம், தொழில் நுணுக்கம், பொருளாதாரம் போன்றன அடைந்துள்ள வியத்தகு முன்னேற்றத்திற்குப் பாரதம் போதிய அளவு ஆக்கம் அளித்துள்ளதா? சர். சி. வி. இராமனைத் தவிர, இந்நாட்டில் எத்தனை பேர் புதிய விஞ்ஞானச் சாதனைகளுக்காக நோபல் பரிசு பெற்றனர்? நடுநிலை நின்று பார்ப்போர் எதிர் மறையிலேயே இவ்வினாக்கட்கு மறுமொழி யளிக்க வேண்டியுள்ளது.

வருந்தத்தக்க இக்குறைபாட்டிற்குக் காரணம் தாய்மொழியை விலக்கி, ஆங்கிலத்தைப் பாட மொழியாக நாம் ஏற்றுக்கொண்டதேயாகும்.

ஏனெனில், அயலவர் மொழியில் அறிவைப் பெறு வோர், தாமாகச் சிந்திக்கும் கற்பனைத் திறனை வெகு வாக இழந்துவிடுதல் தவிர்க்க முடியாதது. ஆதலின் எவ்வகையால் நோக்கினும், பிறர்மொழியினும் தாய்மொழியே கல்வித் துறைக்கு ஏற்றதென்பது நன்கு புலப்படும்.

ஆயின், பல்வேறு மொழிகள் வழங்கும் பாரதத்தில் ஆங்கிலத்தை அகற்றிவிட்டால் ஒரு மாநிலத்தைச் சேர்ந்த பல்கலைக் கழகங்களில் பயில் வோர், மற்ற பகுதிகளில் கற்றவரோடு கருத்துக் களைப் பரிமாறிக்கொள்ள முடியுமா என்று சிலர் ஐயுறுகின்றனர். ஆனால், இத்தகைய அச்சத்திற்குச் சிறிதும் காரணமில்லை. ஏனெனில் தாய்மொழிபாட மொழியாயினும், ஆங்கிலம் தொடர்ந்து பள்ளி களிலும், கல்லூரிகளிலும் கற்பிக்கப்படும் ஆதலின், அதில் போதிய பயிற்சி பெற்ற பட்டதாரிகளும் அறிஞர்களும் மற்றவர்களுடன் கலந்துரையாடவும், கருத்தைப் பரிமாறிக்கொள்ளவும், உலக வல்லுநர் களின் புதிய சாதனைகளை ஆங்கிலத்தின் வாயிலாகப் படித்துணர்வதிலும் எத்தகைய இடர்ப்பாடும் இருக்காது. எனவே, தாய்மொழிக்கு உரிய இடத்தை இனியும் மறுத்து வருதல் பொருத்தமானதெனத் தோன்றவில்லை.

''தமிழ்நாடு'' என்னும் பெயரோடு தமிழில் பத்தி ரிகை தொடங்கிய டாக்டர் வரதராசலு நாயுடுவின் மொழிப் பணியைப்பற்றி முன்னொரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளோம். வ. ரா. கூறியதுபோல, 'பண்டி தர்கள் கூடினால் விளங்காத தமிழ், இங்கிலீஷ் படித்த தமிழர்கள் கூடினால் விளங்காத இங்கிலீஷ்—இந்தக் கட்டுப்பாடான குறும்புத்தனத்தைத் தவிடுபொடி யாக்கிய ஏகபோக பாக்கியமும் பாத்தியமும் வரத ராசுலு நாயுடு அவர்களுக்கே உரித்தானதாகும்.

பாமரத் தமிழுக்குப் பெருமையும் பொலிவும் பலமும் உண்டு, என்பதை நிலைநாட்டிய புண்ணியத்தை எவரும் நாயுடு அவர்களுடன் பங்கு போட்டுக்கொள்ள முடியாது."

இதே காலத்தில் "குடியரசு" பத்திரிகையை ஈ. வே. ரா. தொடங்கினார். இவரது கருத்துக்கள் எதுவாயிருப்பினும், இலக்கியத் தொண்டினை மறைக்கவோ, குறைக்கவோ நாம் விரும்பவில்லை. சாதிக் கொடுமை, மூட பக்தி, தீண்டாமை, வலியார் மெலியாரைத் துன்புறுத்தல், கிளிப்பிள்ளை வேதாந்தம், திண்ணைத் தத்துவம் போன்ற பொருள்களைப்பற்றிச் சீர்திருத்தக் கட்டுரைகள் எழுதிய சிறப்பு இவருக்கே உரியது. ஏனையோருள், "தினமணி" ஆசிரியர் ஆ. நா. சிவராமன், "சுதந்திரச் சங்கு" ஆசிரியர் சங்கு சுப்பிரமணியம் ஆகியோருடைய பணியையும் நினைவிற் கொள்ளலாம்.

'தினமணி', 'தினசரி' இதழ்களின் ஆசிரியராக இருந்த திருவாளர் டி. எஸ். சொக்கலிங்கம் தமிழ் நாட்டுப் பத்திரிகைத் துறையில் நீண்டகால அனுபவம் மிக்கவர். அவருடைய நடைக்குச் சான்றாக, பின்வரும் பகுதியைத் தருவோம். இப்பகுதி, "எனது ராஜி நாமா" என்ற நூலிலிருந்து எடுக்கப் பெற்றிருக்கிறது.

> "பிரான்சில் ஜெர்மனியர் பருந்து பாய்ச்சல் விமானங்களை உபயோகித்தார்கள் என்ற செய்தியைத் தமிழ் பத்திரிகைகளில் நீங்கள் படித்திருப்பீர்கள். படிப்பவர்களுக்கு இந்த வாக்கியத்தில் புதிதாக எதுவும் இருப்பதாக தெரியாது. ஆனால், பத்திரிகைக்காரர்களுக்குத்தான் அதிலுள்ள கஷ்டம் தெரியும். யுத்தம் நடக்கிற வேகத்தில் எத்தனையோ புது புது

வார்த்தைகளும் சொற்றொடர்களும் சிருஷ்டியாகின்றன. இவையெல்லாம் தாய் பாஷை பத்திரிகைக்காரர்களின் தலையில் வந்து விழுகின்றன. தந்திகள் எல்லாம் ஆங்கிலத்தில் வருவதால் ஆங்கிலப் பத்திரிகைகளை நடத்துபவர்களுக்கு, மொழிபெயர்க்க வேண்டிய சிரமம் எதுவும் கிடையாது. வந்த வார்த்தைகளை அப்படியே போட்டுவிடலாம். தமிழ் பத்திரிகைகள் அதை மொழிபெயர்த்தாகவேண்டும். சாவகாசமாக யோசித்து ஒரு தமிழ் வார்த்தையை கண்டு பிடிக்கலாம் என்ற பேச்சுக்கோ இடமில்லை. அன்று வந்த செய்திகள் அன்று மாலை பத்திரிகையில் போயாக வேண்டும். அதற்குள்ளாக வார்த்தையை கண்டுபிடிக்கவேண்டும். அவ்வளவு அவசரம், எனவே புதிதாக ஒரு வார்த்தை வந்துவிட்டால், பத்திரிகை ஆபீசில் ஏற்படும் பரபரப்பைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. ஒவ்வொருவரும் மூளையை ஓட்டுவார்கள். ஒவ்வொருவர் ஒவ்வொரு வார்த்தையைச் சொல்லுவார். எல்லாவற்றையும் பார்த்து அவற்றில் எது பொருத்தமானதென்று தோன்றுகிறதோ அது அன்றைய பத்திரிகையில் வரும். DIVE-BOMBERS என்றவார்த்தைக்குப் பருந்து பாய்ச்சல் விமானங்கள் என்ற தமிழ்ப் பெயரைக் கேட்டபின்பு அது பொருத்தமாயிருக்கிறதென்று அநேகர் ஒப்புக் கொள்ளலாம். ஆனல், அந்த வார்த்தை பத்திரிகை நிலையங்களில் எவ்வளவு வேலையைக் கொடுத்தது என்பது வெளியிலுள்ளவர்களுக்குத் தெரியாது.''

இனி, 'தனி அரசு' என்னும் நாளிதழின் தலையங்கம் ஒன்றைக் காண்போம்:

**தனி அரசு 14—8—59**

**தமிழில் மேற்கல்வி**

கல்லூரித் தமிழ்க்குழு தேர்ந்தெடுத்துள்ள ஆறு பாடப் புத்தகக் குழுவினையும் அரசாங்கம் அங்கீ

கரித்துவிட்டது. இந்த ஆறு குழுக்களும் வரலாறு, அரசியல், பொருளாதாரம், நிலநூல், தத்துவம், ஐரோப்பிய தத்துவம் (துணைப்பாடம்) ஆகிய ஆறு பாடங்களுக்குமான பாடப் புத்தகங்களை மொழி பெயர்க்கும் பணியில் ஈடுபடும். 1960—61 முதல் கோவை அரசினர் கல்லூரியில் கலைப் பட்டப் படிப்பு (பி. ஏ.) தமிழ் மூலம் போதிக்கப்படவிருப்பதை யொட்டியே இந்த ஏற்பாடுகளாகும். கோவைக் கல்லூரியில் இது அடுத்த ஆண்டு சோதனைத் திட்ட மாகச் செயலாற்றி இனிப் படிப்படியாக ஏனைய கல்லூரிகளிலும் பாடங்கள் தமிழில் கற்றுத் தரப்படும்.

அரசாங்கத்தின் இம்முயற்சியை நாம் முன்னரே வரவேற்றிருந்தோம். தாய்மொழி மூலம் கல்வி கற்ப தால் நாட்டிற்கும், கற்பவர்க்கும் பெரும் பயன் விளையும் என்பதைச் சொல்லித் தெரியவேண்டாம். பிறமொழியில் கற்பதால் சிந்தனையோட்டம் தடைப் படும் என்றும் எளிதில் கற்பவற்றையுணர்ந்து தெளிய இயலாதென்பதும் அறிஞர் கூற்று.

காலக் கொடுமையாலும் நம்முடைய பிற்போக் கினாலும் நாம் மேற்கல்வி கற்று உலகின் ஏனைய நாடு களுக்குச் சமதையாக நிற்கப் பிறமொழியில் கல்வி கற்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். நம் தாய் மொழி ஆங்கிலத்தைப்போல் வளராததால் அறிவுச் சுரங்கத்தைத் தோண்ட, ஆங்கிலம் மூலமே கற்க வேண்டிய சூழலும் இருக்கிறது. இத்தனை காலமும் தமிழை வளர்க்கும் பணியில் கவனம் செலுத்துவார் யாருமில்லை. தமிழில் ஆங்கிலத்தில் உள்ள அறி வியல், மருத்துவம், விஞ்ஞானம், பொருளியல், தத்துவம் இன்னும் ஏனைய பொருள்கள் குறித்த நூல்கள் வெளிவரவில்லை. அப்படி வெளியிடுவதற் குரிய ஊக்கமும், ஆதரவும் தருவார் இல்லை.

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் (திருநெல்வேலி) போன்ற பொது அமைப்புக்களும், இதர தமிழ்ச் சங்கங்களும் தமிழறிஞர்களும், ஆசிரியப் பெருமக்களும் உலகின் கலையனைத்தையும் தமிழில் கொணரப் பல காலமாகப் பெருமுயற்சி செய்ததன் விளைவாக இன்று அரசாங்கம் தமிழை வளர்க்கத் துணிந்திருக்கிறது. கலைத்துறையில் ஈடுபாடு கொண்ட மேற்சொன்னவர்கள் தவிர, விஞ்ஞானத் துறையிலிருந்தவர்கள் அன்றும், இன்றுங்கூடத் தமிழை வளர்க்க முன்வரவில்லை. காலஞ்சென்ற மேதை அ. இராமசாமி (சேலம் கல்லூரி முதல்வர்) சில ஆண்டுகளுக்கு முன்னால் தமது கல்லூரியில் தமிழ் மூலம் கலைப் பாடங்களைக் கற்பிக்க முயன்று சரியான ஆதரவு இல்லாததால் அது கைவிடப்பட்டது.

தேவையான இடங்களில் பிற மொழிச் சொற்கள் தமிழில் வந்து கலப்பதால் தவறு இல்லை. ஆனால் வலிந்து தமிழ்ச் சொல்லிருக்கப் பிற சொற்களைக் கலப்பதுகூடாது என்றே அனைவரும் கூறுவர்.

மேலும் ஆங்கிலச் சொல்லுக்குச் சரியானதாகப் புரியாத வடமொழிச் சொல்லைப் பயன்படுத்துவதற்குப் பதில், வழக்கிலில்லாததும் புரியாததுமான தமிழ்ச் சொல்லைப் புகுத்துவதே நியாயமானதுங்கூட. அப்போதுதான் தமிழ் வளர்க்கப்பட முடியும். இதில் வெறிக்கே இடமில்லை.

முதன் முதலாகத் தமிழர் வரலாற்றில் சிறந்த பணிக்கென முற்பட்டுள்ள இந்த அறிஞர்கள் தமிழ் வளர்ச்சியை மட்டும் முன்னிறுத்து அதனை வளர்க்கும் முறையில் தமிழில் பாடங்களை மொழிபெயர்க்க வேண்டும். ஏனென்றால் முதலில் ஏதேனும் கோணல் வருமானால் அது முற்றிலும் கோணலாகிவிடும், இவற்றை நன்கு உணர்ந்து பாடப் புத்தகங்களை

நல்ல தமிழில் குழுவில் இடம்பெற்றுள்ள அறிஞர்கள் தருவர் என நம்புகிருேம், இல்லேயேல் நாட்டின் எதிர்கால அறிஞர் மட்டுமல்லாது, தமிழ் வளர்ச்சி யில் தளராது பாடுபட்டுவரும் தி. மு. கழகத்தின் இன்றைய ஊழியர்களும் கண்டனக் குரல் எழுப்பும் நிலே ஏற்படும் எனப் பணிவோடு தெரிவிக்கிருேம்.

தமிழகத்துக்கு வெளியே இருந்து வெளிவரும் நாள் இதழ்கள் வீரகேசரி, தினகரன், ஈழகேசரி தமிழ் முரசு, தமிழ் நேசன், ரசிக ரஞ்சனி. இவை தமிழ் நாட்டில் வெளியாகும் பல நாளிதழ்களேவிடச் சிறந்த தமிழ் நடையில் வெளிவந்து கொண்டிருப்பது கடல் கடந்த தமிழர்களின் மொழிப்பற்றுக்குச் சான்ருகும். புதிய எழுத்தாளர்களே இவை ஊக்குவிக்கின்றன.

ஏராளமான நாள் இதழ்கள் தமிழில் வெளிவந் துங்கூட, அவற்றின் தரம் உயர்ந்ததாக இல்லே. தமிழில் வெளிவரும் எல்லா நாள் இதழ்களேயும் படித்தால்கூட ஆங்கிலத்தில் வெளிவரும், ஒரு இதழி லுள்ள செய்திகள்கூடத் தெரிந்துகொள்ள இயலாது. வயிறு புடைக்க விருந்துண்டவன் பங்கீட்டு அரிசியை உண்ண வேண்டிய நிலேதான், ஆங்கில நாள் இதழைப் படித்தவன் தமிழ் நாள் இதழைப் படிக்கும்போது ஏற்படுகிறது. நமக்கு எவ்வளவுதான் தமிழ் மொழி வெறி இருப்பினும் இந்த உண்மையை ஒப்புக் கொண்டேயாக வேண்டும்.

## இலக்கிய இதழ்கள்

பத்திரிகைகள் முழுவதும் அரசியல் மயமாக இருந்த காலத்தில் ஒரு சில இதழ்கள் இலக்கியத்திற்கும் இடம் தந்தன. "ஊழியன்" என்னும் வார இதழில் வெளிவந்த ஆசிரியர் குறிப்புக்களில் இருந்தது

போன்ற தூய தமிழை, இனிய நடையை, அழகான கருத்துக்களை வேறு எந்த இதழிலும் யான் இதுவரை படித்ததில்லை. இந்த இதழின் ஆசிரியர் தமிழ்க்கடல் ராய. சொக்கலிங்கனாரின் தமிழ்ப்பற்று மிகவும் பாராட்டுக்குரியது. காரைக்குடியிலிருந்து வெளிவந்த மற்றொரு இதழ், "குமரன்" என்பது. பேராசிரியர் சேதுப் பிள்ளையின் கட்டுரைகள் பல, "குமரனில்" வெளியாகிப் பின்னரே நூலாக உருப்பெற்றன.

இலக்கிய இதழ்களுள் மதுரைத் தமிழ்ச் சங்கச் சார்பில் வெளிவரும் **செந்தமிழும்**, சைவ சித்தாந்த சமாஜத்தின் வெளியீடான **சித்தாந்தமும்** சிறப்பாகக் குறிப்பிடத் தக்கன. **செந்தமிழின்** முதற் பதினைந்து தொகுதிகளில் மு. ரா. கந்தசாமிக் கவிராயர், ரா. இராகவ ஐயங்கார், து. அ. கோபிநாத ராவ், வெ. ப. சுப்பிரமணிய முதலியார், மகா வித்துவான் கணேசய்யர் ஆகியோரது ஆராய்ச்சிக் கட்டுரைகள் உள.

கரந்தைத் தமிழ்ச் சங்கம் நடத்திவரும் **தமிழ்ப் பொழில்** 'பொழிற் றொண்டர்' என்ற பெயரில் சிறந்த ஆராய்ச்சியாளரும் ஞானியாரடிகளின் மாணவருமான க. வெள்ளை வாரணர் எழுதும் இலக்கியக் கட்டுரைகளையும் வேறு பலர் எழுதும் சொல்லாராய்ச்சிக் கட்டுரைகளையும் நல்ல தமிழில் வெளியிட்டு வருகிறது. திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் நடத்திவரும் '**செந்தமிழ்ச் செல்வி**' தமிழ்ப் புலவர் பலரின் கட்டுரைகளுடன் திங்கள் தொறும் தோன்றி வருகிறது.

கோவையிலிருந்து வெளிவரும் **கலைக்கதிர்** என்ற திங்கள் ஏடு அறிவியல் கட்டுரைகளைப் பெற்றுச் சிறப்பாக அமைந்துள்ளது. தமிழார்வம் மிக்க கல்லூரி

மாணவர்களின் மனத்தைக் கவரும் பண்புடன் தெள்ளிய தமிழ் நடையில் 'கலைக்கதிர்' வெளிவருகிறது. புதிய நூல்களைப் பகுதி பகுதியாக வெளியிடுவதும் இந்த இதழின் சிறப்பு.

வார இதழ்களும் தமிழில் மிகுதியாக வெளிவருகின்றன; இவை தமிழ் மக்களின் பேராதரவைப் பெற்றுள்ளன. எனினும் "ஆத்துக்கு", "அமக்களம்" "தண்ணி", "நேத்து" என்ற சொற்களையும், அப்போது என்பதை 'அப்ப' என்றும் பெண் பிள்ளை என்பதை 'பொம்புளப் பிள்ளை' என்றும் எழுதும் இதழ்களும் உள. இந்த நிலை இப்போது சிறிது சிறிதாக மாறி வருகிறது.

வடசொற்களையும் கொச்சையான நடையையும் பயன்படுத்தும் தமிழ் இதழ்களுக்கு, மகாத்மா காந்தியடிகளைவிடச் சிறந்த வழிகாட்டியை நாம் குறிப்பிட இயலாது. அவர் நடத்திய 'நவஜீவன்' வாயிலாக இத்தகைய போக்குக்களைத் தடை செய்ய அவர் முயன்றார். குஜராத்தி மொழியில் தாம் எழுதிய அனைத்திலும், தூய நடையையே அடிகள் கையாண்டார் என்பதையும் இங்கே தெரிவிக்க விரும்புகிறோம்.*

இலக்கிய நலன் ஆய்தல்பற்றிய இதழ் ஒன்று தமிழ்நாட்டில் 1928-இல் தோன்றி, சில ஆண்டுகள் மட்டும் வெளிவந்து பின்னர் நின்றுவிட்டது. இச்சிறந்த இதழ் "கலா நிலையம்" என்ற பெயருடன்

* In this connection, Mahatma Gandhi's services to Gujarathi literature must not be overlooked. He wrote chaste Gujarati in all his works, especially NAVAJIVAN and thus indirectly discouraged, though partially, he modern trend of writers to use Sanskrit words copiously—A. M. P. Karai, Asst Ed., Bomday Chronicle in SOUTH INDIAN JOURNALIST, Special annual Number Nov. 1952.

சேஷாத்திரி என்பவரால் வெளியிடப்பெற்றது. இவ் இதழ் கம்பராமாயணக் கட்டுரைகளையும், நைடதம், மதங்க சூளாமணி உரைகளையும் தாங்கி வாரந்தோறும் இலக்கியப் பணி புரிந்து வந்தது. மறைந்துபோன இதழ்களுள் மேலும் குறிப்பிடத் தக்கவை; யாழ்ப் பாணத்துக் கலா நிலையத்தார் வெளியிட்ட "ஞாயிறு" வை. கோவிந்தன் நடத்திய "சக்தி" ஆகியவை.

"நல்வழி" என்னும் உடல்நலக் குறிப்புக்கள் அடங்கிய இதழும் வெளிவந்து கொண்டிருக்கின்றது. "பிரசண்ட விகடன்" வாயிலாக நாரண துரைக்கண் ணன் எழுதிய கட்டுரைகள் தமிழ் மக்களால் பெரிதும் படிக்கப்பட்டு வந்தன.

"பொன்னி" என்னும் இதழ் தனித் தமிழில் சில காலம் வெளிவந்தது. பின்னர் இந்த இதழில் வெளி வந்த எழுத்தாளர் பேட்டி சிறப்பாக அமைந்திருந் தது. தனித் தமிழ் இயக்கம்பற்றி இந்த இதழில் பல அறிஞர்கள் சில ஆண்டுகளுக்குமுன் எழுதினார்கள். அவற்றின் பகுதிகளையே இந்நூலில் முன்னொரு பகுதி யில் தந்தோம். புதிய எழுத்தாளர்களை அறிமுகப் படுத்திய பணியில் "பொன்னி"க்கும் பங்கு உண்டு. தருமபுர ஆதீனத்தார் வெளியிட்டுவரும் "ஞான சம்பந்தம்" என்னும் இதழும், திருப்பனந்தாள் ஆதீ னத்தாரின் "குமரகுருபர"னும், வாலாஜாபாத் இந்து மத பாடசாலையினரின் "குருகுலம்" என்னும் இதழும் நல்ல தமிழில் வெளி வருவனவாகும்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த **ஈழகேசரி** கணேசய்யர் அவர்களுடைய அகநானூற்று உரையை வெளியிட்டிருக்கிறது. இலக்கியக் கட்டுரைகளும், செய்திகளும், நூல் மதிப்புரைகளும், எழுத்தாளர்

வரலாறும் ஈழநாடு இதழில் வாரந்தோறும் வெளிவருகின்றன.

தமிழ்மொழிப் பணி செய்யும் ஆங்கில இதழ்களையும் இங்கே குறிப்பிட வேண்டும். பேரறிஞர் J. M. நல்லசாமிப் பிள்ளை அவர்களை ஆசிரியராகக்கொண்ட **சித்தாந்த தீபிகை** என்னும் இதழ் அரிய தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தும், தமிழரது மொழி இலக்கணம் சமயம் தத்துவம்பற்றிக் கட்டுரைகள் வெளியிட்டும் பல ஆண்டுகள் தொண்டாற்றிற்று. இப்போது இலக்கிய, தமிழர் வரலாறு ஆகிய துறைகளைப்பற்றிய அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளுடன் 'Tamil Culture' என்னும் ஆங்கில இதழ் சென்னையிலிருந்து வெளிவருகிறது; இவ்வகையில் தனிநாயக அடிகளார், ஆ. சுப்பையா ஆகியோரது பணி போற்றற்குரியது; தமிழர் அனைவரும் அவர்களது முயற்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் தருவார்களாக.

"பூஞ்சோலை" என்னும் சிறுவர் இதழ் இலக்கணப் பிழை இல்லாத எளிய நடையில் சிந்தனைக்குச் சிறந்த விருந்தெனப் புகழ்பெற்ற கட்டுரைகளுடன் வெளி வந்தது.

சென்னையிலிருந்து வெளிவரும் "தாருல் இஸ்லாம்" என்ற பத்திரிகை முஸ்லிம் அறிஞர்களால் வெளியிடப்பட்டு வருகிறது. இவ்விதழில் முஸ்லிம் சமயம் பற்றிய செய்திகள் மட்டுமின்றி, அரசியல் பொருளாதாரச் செய்திகளும் இடம் பெறுகின்றன. இதன் ஆசிரியர் தாவுத்ஷாவும் இவரது மகன் அப்துல் ஜபாரும் தமிழ்ப்பற்று மிக்கவர்கள். 'சௌபாக்கியம்' ஆண்டு மலர் சிறந்த கட்டுரைகளுடன் செந்தமிழ் நடையில் மகளிர்க்காக வெளிவருகிறது.

ஸ்ரீ லங்கா என்ற மாத இதழ் இலங்கை அரசாங்கச் செய்திப் பகுதியினராலும் கிராம நலம் தமிழக அரசினராலும் செந்தமிழில் வெளியிடப்பட்டு வருகின்றன: இவ்விதழ்களில் இலக்கியச் சார்புடைய கட்டுரைகளும் இடம் பெறுகின்றன.

விருதுநகரிலிருந்து வெளிவந்த "தமிழ்த் தென்றல்" என்ற இதழிலும் இடையிடையே நல்ல இலக்கியக் கட்டுரைகள் வெளிவந்தன. இது வி. வி. இராமசாமி அவர்களை ஆசிரியராகக் கொண்ட மாத வெளியீடு. இவ்விதழில் தொடர்ந்து வெளிவந்த மொழியாராய்ச்சிக் கட்டுரைகள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை.

கல்கி, ஆனந்தவிகடன், அமுதசுரபி, தீபாவளி மலர்களும், சிங்கப்பூர் 'தமிழ் முரசு' ஆண்டு மலரும், தில்லி தமிழ்ச் சங்க வெளியீடான சுடரும் பாராட்டத் தக்க இலக்கியப் பணியாகவும் இலக்கியச் சோலையாகவும் சித்திரப் பூங்காவாகவும் விளங்குகின்றன. மறுமலர்ச்சி இலக்கியத்தின் வளர்ச்சியை அறிய உதவும் அளவு கோலாகவும் காட்சி தருகின்றன.

இலக்கிய இதழ் என்றதுமே தமிழன்பர் பலருக்கு "கலைமகள்" தான் நினைவுக்கு வரும். இது பிரஜோத் பத்தி, தை மாதத்தில் (1932 சனவரி) தொடங்கிற்று. முதல் இதழில் பின்வரும் சட்டுரைகள் இருந்தன.

| | | |
|---|---|---|
| *வாழ்த்து | ... | ரா, இராகவையங்கார் |
| கலைமகள் வாழ்த்து | ... | கி. வா. ஜகந்நாதன் |
| முன்னுரை | ... | உ. வே. சாமிநாத ஐயர் |

* முதல் இதழில் வாழ்த்து என்ற சொல்லையும், இரண்டாவது இதழில் வணக்கம் என்ற சொல்லையும் பயன்படுத்திய கலைமகள் இன்று?

மகாபலிபுரம் ... க. அ. நீலகண்ட சாஸ்திரி
செடிகளும் மிருகங்களின் தொண்டும் ... எம். எஸ். சபேச ஐயர்
செந்நிறப்பூ ... பி. என். அப்புசாமி
பூச்சி மகாநாடு ... டி. கே. விசுவநாத ஐயர்
பாம்புகள் ... எம். ஏகாம்பரநாத ஐயர்
மிருகங்களின் தோல் ... எம். கிருஷ்ணன்
தமிழ் வேந்தரின் இமயப் படையெடுப்பு ... மு. இராகவையங்கார்
உ. வே. சாமிநாத ஐயரவர்கள் ... இராமச்சந்திர ஐயர்
சைவ சமயம் ... எஸ். அனவரதவிநாயகம் [பிள்ளை
தமிழ் வசனம் ... ஸ்ரீ
நாமும் வள்ளுவரும் ... டி. கே. சிதம்பரநாத [முதலியார்
அச்சு வித்தையின் வரலாறு ... எஸ். வையாபுரிப் பிள்ளை
சென்னை அரசியல் முறை ... டி. சிவராம சேதுப்பிள்ளை
சங்கராந்தி தேவன் பிறந்த நாள் ... கார்க்கியர்
மாதர் பகுதி ... விசாலாட்சி அம்மாள்
சிறுவர் பகுதி ... லக்ஷ்மி அம்மாள்
குறிப்பும் திரட்டும்
மதிப்புரை


பல்வேறு வகைப்பட்ட பொருள்களைப்பற்றிக் கட்டுரைகள் வெளிவந்த இந்த இதழில் இப்போது சிறுகதைகளே பெரும்பகுதியான இடம் பெறுவது தமிழ் இலக்கிய வளர்ச்சியின் இன்றைய போக்குக்குச் சான்றாக விளங்குகிறது. கலைமகள் நல்ல தமிழில் உயர்ந்த இலக்கியத்திற்குப் பணியாற்ற வேண்டு

மென்பதே நமது விருப்பம். வயது என்பதை வயசு என்றும், மனம் என்பதை மனசு என்றும் எழுதுவது கலைமகளின் மரபாக இருந்து வருகிறது. சொத்துப் பத்து, மந்திரி கிந்திரி போன்ற துணைச் சொற்கள் இலக்கிய இதழில் காணப்படுவதும் பொருத்தமாகத் தோன்றவில்லை.

"செய்தி என்றால் என்ன?" என்று ஓர் அன்பர் இதழ் ஆசிரியர் ஒருவரைக் கேட்டாராம்: அதற்கு இதழ் ஆசிரியர், "நாய் மனிதனைக் கடித்தால் அது செய்தியாகாது; ஏனென்றால் அது சாதாரணமாக நடைபெறுகின்ற ஒரு நிகழ்ச்சி. ஆனால் மனிதன் நாயைக் கடித்தால் அது ஒரு பெரிய நிகழ்ச்சியாக எங்களால் கருதப்படும்" என்று விடை கூறினாராம். அதுபோலவே தமிழ் இதழ்களின் ஆசிரியர்களுக்கு ஒரு புலவர் தமிழைப்பற்றிப் பேசினால் அது செய்தி யாகாது; ஆனால் ஓர் அரசியல் அறிஞர் தமிழைப்பற்றி ஏதாவது கூறிவிட்டால் உடனே அது பரபரப்பான செய்தியாகிவிடும்.

ஒரு மொழியின் வளர்ச்சி அம்மொழியிலுள்ள சொல் வளத்தைப் பொருத்தது. சொல்வளம் இருப் பதுமட்டும் போதியதாகாது; அச்சொற்களைப் பல்லாயி ரவர் அறிந்திருத்தலும் இன்றியமையாதது. இதை யொட்டியே ரீடர்ஸ் டைஜஸ்ட் போன்ற ஆங்கில மொழி இதழ்களில் Increase Your Word Power என்ற பகுதி வெளிவருகிறது. தமிழ் இதழ்களிலும் இத்தகைய பகுதி ஒன்று இருந்தால், அரிய சொற்களைப் பலரும் அறிய உதவியாக இருக்கும்.

தமிழ் மொழித்துறையில் அவ்வப்போது ஏற்படும் மாறுதல்களைத் தெரிவிக்கும் இதழ் தமிழில் இல்லாதது

ஒரு குறையாகும். ஆங்கிலத்தில் இத்தகைய இதழ்கள் மிகுதியாக உள்ளன. "இந்தியன் பி. இ. என்."* Indian P.E.N.) என்ற பெயருடன் உலக எழுத்தாளர் குழுவின் இந்தியக் கிளை, மொழித்துறை நிகழ்ச்சிகளை ஒரு திங்கள் இதழில் வெளியிட்டு வருகிறது. "ஆந்திர சாஹித்ய பரிஷத்"தும் "பரிஷத் பத்ரிகா" ஒன்றை வெளியிட்டு வருகிறது. தமிழ் மொழியிலும் இத்தகைய வெளியீடாக, 'பாரதி' சிலகாலம் வெளி வந்தது.

எழுதி முடித்து, ஆனால் வெளிவராதிருக்கும் நூல்களைப் பகுதி பகுதியாகத் தம் இதழ்களில் அச்சிடும் திங்கள் இதழ்களும் தமிழ் மொழியில் தோன்றுதல் வேண்டும்.

"Books of the Month and Books to Come" என்பது போன்ற திங்கள் இதழ்கள் ஆங்கில மொழியில் வெளி வருகின்றன, வெளிவரவிருக்கும் நூல்களைப் பற்றிய செய்திகளை இவ்விதழ்கள் முன்கூட்டித் தருகின்றன. மக்களின் வாழ்க்கை, எண்ணங்கள்—இவை இலக்கியத்தில் எவ்வாறு இடம் பெறுகின்றன என்பதையும் இந்த இதழ்களின் வாயிலாக அறியலாம். ஒவ்வொரு

---

* P. E. N. —Poets, Philosophers
Editors, Essayists
Novelists, Newspapermen.

பி. இ. என். என்னும எழுத்துக்கள் கவிஞர்கள், தத்துவ ஞானிகள், இதழ் ஆசிரியர்கள், கட்டுரையாளர்கள், நாவல் எழுதுவோர், செய்தித் தாளில் பணியாற்றுபவர்கள் ஆகியோரைக் குறிப்பிடுவது ஆகும். எனினும் இலக்கியத்துறையில் பணியாற்றும் எழுத்தாளர் அனைவரும் இக்குழுவின் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்படுகின்றன. மொழி பெயர்ப்பாளர்களும் இக்குழுவில் உள்ளனர். இது 1921-இல் தொடங்கப்பெற்றது. இலக்கிய நலங் கருதிப் பல நாடுகளிடையே நல்லுறவை நிலைநாட்டவும். பேச்சு—எழுத்து உரிமைகளைக் காக்கவும் இக் குழு பாடுபடுகிறது. அரசியற் கிளர்ச்சியில் "பி. இ. என்." ஈடுபடுவதில்லை. பிறநாட்டு எழுத்தாளருடன் நட்புக் கொள்வது, இக் குழுவின் உறுப்பினராயிருந்தால் எளிதாகும்,

திங்களிலும் பலப்பல துறைகளில் வெளியாகும் நூல்களைப்பற்றிய குறிப்புக்கள் இந்த ஏட்டில் உள்ளன. நூல் மதிப்புரைகளையும் காணலாம். நூலை உருவாக்கும் ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர், விற்பவர் ஆகியோருடைய அலுவல்களைப் பற்றியும் இவற்றின் வாயிலாக அறியலாம். புகழ்பெற்ற எழுத்தாளர்கள், நூல் மதிப்புரை எழுதுவோர் ஆகியோரின் வாழ்க்கை வரலாறு, சிறப்பியல்புகள் பற்றிய சிறு கட்டுரைகளும் இந்த இதழ்களில் வெளிவருவதுண்டு. இந்த அடிப்படையில் தென்னிந்திய மொழிகளைப்பற்றி புத்தக நண்பன் என்னும் இதழ் 1958 முதல் வெளிவருவது மகிழ்ச்சிக்குரியது. நூலகம் என்ற இதழும் தமிழில் வெளிவருகின்றது.

பிழையான பாடல்கள் தமிழகத்தில் மலிந்து கிடக்கின்றன. இவற்றை அச்சிட்டுப் பரப்பியவை தமிழ் நாள் இதழ்களே: தமிழ் மொழிப் புலமை உடையவர்கள் தமிழ் இதழ்களில் இல்லாமையே இதற்குக் காரணம். ஆசிரியர் குழுவில் ஒருவராவது யாப்பிலக்கணம் தெரிந்தவராக இருக்கவேண்டும்.

செய்தியாளர்கள் உலக விவகாரங்களைப்பற்றியும், கல்வி, சமயம் முதலியவற்றைப் பற்றியும் சிறந்த நூல்களை எழுதி வருவதைப் பல நாடுகளில் காணுகின்றோம். இவ்வகையில் தமிழ்நாட்டுப் பத்திரிகையாளருள் அ. நா. சிவராமனின் பணி பெரிது.

அமெரிக்காவில் தலைசிறந்த நூலாசிரியர்களாக விளங்கும் ஜான் கந்தர், வால்டர் டுராண்டி, வர்ஜினியா கௌலிஸ், வின்சண்ட ஷியன் ஆகியோரெல்லாம் செய்தி இதழ்களுடன் தொடர்பு கொண்டவர்களே என்பதை இங்கே தெரிவிப்பது பொருந்தும்,

இத்தாலியில் நாள் இதழ்களில் மூன்றும் பக்கத்தில் ஓரளவு இலக்கிய நடையில் கட்டுரைகள் வெளிவருவதையும் இங்குக் குறிப்பிடலாம். இதைப்பற்றி பி. எம். பாசினெட்டி என்ற புகழ்பெற்ற இத்தாலிய எழுத்தாளர் குறிப்பிட்டிருப்பதையும் கீழே காண்க,*

செய்தி இதழ்களில் ஈடுபட்டிருப்பவர்கள் மன உறுதி கொள்வார்களானல் தமிழ் மொழி மேன் மேலும் வளருவதற்கு அவர்கள் பேருதவியாக இருக்கலாம். "பொன்னி" எழுத்தாளர் பேட்டியில் கல்கி கிருஷ்ணமூர்த்தி குறிப்பிட்டதுபோல:

> இந்தியாவில் தமிழ்ப் பத்திரிகைகளுக்குச் செல்வாக்கு மிகுதி. மற்ற பத்திரிகைகளைவிட நம் தமிழ்ப் பத்திரிகைகளின் வாசகர்கள் மிகப்பலர். வங்காளத்தில் அதிக விநியோகமுள்ளனவாகக் கொள்ளப்படும் "ஆனந்த பசார்", "யுகாந்தர்" ஆகிய சில பத்திரிகைகளே உள்ளன. வங்கநாட்டைக் காட்டிலும் தமிழ்நாட்டில் மக்கள் தொகை குறைவாக இருந்தும்கூடப் பல பத்திரிகைகள் அந்நிலையை எய்தி உள்ளன. இவை தணிக்கைக் கணக்குகளிலிருந்து நன்ருக வெளியாகியிருக்கின்றன. பத்திரிகை உலகுக்கும் இப்போதைக் காட்டிலும் நல்ல எதிர் காலம் இனி உண்டு. தமிழ் நாட்டில் புதிய

---

* The "third page" of the daily newspapers is traditionally devoted to literary articles and travel pieces... Italian writers don't live on their books, and they must depend on newspapers and on periodicals that pay, when they dont depend on film—scripts. These articles are a kind of half—literary, half—personal essays; there are writers who keep a sort of public diary.

P. M. Pasinetti in his article
THE INCREDIBLE ITALIANS.

பத்திரிகைகள் போட்டிக்கு வந்து முன்னேறியும், பழைய பத்திரிகைகளின் வளர்ச்சி தடைபடவில்லை. வாசகர்கள் தொகை அந்த அளவுக்குப் பெருகி வருகிறது.

'நவமணி' முதல் இதழில் (10-9-1960) கி. வா. ஜகந்நாதன் எழுதியிருப்பது இங்கே குறிப்பிடத்தக்கது:

இன்று சங்கம் இல்லை. மன்னர்கள் இல்லை. தமிழை வளர்க்கப் பத்திரிகைகள் இருக்கின்றன. அரசாங்கமும் வளர்க்க முன்வந்திருக்கிறது, ஆனால், அது நின்று நிதானமாகத்தான் வேலை செய்யும். பத்திரிகைகளோ அருவி வேகத்தில் வேலை செய்கின்றன.

ஆகவே தமிழை வளர்க்கும் பொறுப்பைப் பத்திரிகைகள் இன்று மேற்கொண்டிருக்கின்றன. புது வெள்ளம் வரும்போது அதில் எல்லாம் வரும்: தெளிந்த பிறகுதான் நீர் நல்லது என்று சொல்ல இயலும். இதுவரையில் எதையும் விரைவிலே சொல்லிவிட வேண்டும் என்று பத்திரிகைகள் போட்டிபோட்டன. உரைநடையில் எழுதும் பழக்கமும், வாசிக்கும் பழக்கமும் வந்துவிட்டன. இனிப் போகப் போவதில்லை.

இனிமேல் உரைநடையில் இலக்கியங்கள் உருவாக வேண்டும். அதற்கு ஏற்றவகையில் பத்திரிகைகள் சிந்தித்து ஆவன செய்ய வேண்டும். சங்கம் வளர்த்த தமிழை, இந்தக் கால முறைப்படி வெவ்வேறு துறைகளில் பத்திரிகைகள் வளர்க்கவேண்டும். இப்போது வளர்ந்தது போதாது; பரப்பும் ஆழமும் ஒருங்கே அமைந்து வளர வேண்டும்; வளரத்தான் போகிறது. ஏன்? வளர்ந்துதான் வருகிறது.

# 11. வானொலி

பத்திரிகைகளுக்கும் வானொலிக்கும் மிகுதியான ஒற்றுமையுண்டு. ஒன்று எழுதப்படுவது, மற்றொன்று பேசப்படுவது. எனவே வானொலி, தமிழ் மொழியினுடைய வளர்ச்சிக்கு எத்தகைய உதவி செய்திருக்கிறதென்பதை இனி, ஆராய்வோம்.

வானொலி என்பது தூய தமிழ்ச் சொல். இந்திய வானொலி நிலையத்தார் அச்சிடும் தமிழ் நிகழ்ச்சி இதழுக்கு இப்பெயரே கொடுக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறிருந்தும் திருச்சி—சென்னை வானொலி நிலையங்களின் அறிவிப்புக்களில், "ஆல் இந்தியா ரேடியோ" என்ற ஆங்கிலச் சொற்றொடரையோ அல்லது "ஆகாசவாணி" என்றோ தான் ஒலிபரப்பி வந்தனர்; 1959 முதல் அவற்றுடன் சேர்த்து 'வானொலி' என்றும் கூறி வருகின்றனர்,

"நமஸ்காரம்" என்ற சொல் வானொலி நிலையங்களில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. "வணக்கம்" என்பதே உரிய தமிழ்ச் சொல்லாகும். பல்லவர் காலத்தில்தான் "நமஸ்காரம்" தமிழகத்தில் நுழைந்தது. நாயக்கர் காலத்தில், அது "தாஸானுதாஸன்" ஆயிற்று. முஸ்லிம் ஆட்சியில் "சலாம் ஆலேகும்" என்ற வணக்கச் சொல்லும், ஆங்கில ஆட்சியில் "குட் மார்னிங்"கும் வழக்கச் சொற்களாயின. இப்போது

"ஜெய்ஹிந்த், ஜெய் பாரத்" என்ற சொற்றொடர்கள் தமிழ் நாட்டிலும் பரவியிருக்கின்றன. இனி சீனர் ஆட்சி இந்நாட்டில் ஏற்பட்டால் "சங் புங் சங்" போன்ற ஒலியில் ஒரு சொற்றொடர் ஏற்படலாம். ஆட்சி மாற்றத்தால் எந்தச் சொல் பரவினாலும் "வணக்கம்" என்பதே தமிழர் பண்பாட்டின் அறிகுறியாக நிலைத்து நிற்கும்.

வானொலி நிலையங்கள், ஒரு மொழியின் கண்ணுள்ள சொற்களைச் சரியான முறையில் உச்சரிப்பதற்குப் பொதுமக்களைப் பயிற்சி செய்யும் நிலையங்களாக விளங்குவது உலக இயல்பு. ஆங்கில மொழியை நன்றாக உச்சரிக்க வேண்டுமென்ற அவாவுடையோர் அனைவரும் பி. பி. சி. என்னும் லண்டன் வானொலி நிலையத்து நிகழ்ச்சிகளைக் கேட்டுப் பயனடைவர். தமிழைப் பொறுத்த வரையில் வானொலி நிலையங்களில் நடைபெறுகின்ற தமிழ் நிகழ்ச்சிகளைக் கேட்பவர்கள் அந்த நிலையத்தாரின் ஒலி உச்சரிப்புக்களைப் பற்றிப் பாராட்டக் கூடிய நிலை இப்போதுதான் ஏற்பட்டிருக்கிறது. தமிழ்மொழியினுடைய ஒலியமைப்புக்கே முற்றிலும் மாறுபட்ட முறையில் "ரஜம், பாயாஜம்" என்பது போன்ற ஒலிகளை எழுப்புகின்ற சிறப்பும் நமது வானொலி நிலையங்களுக்குச் சில ஆண்டுகளுக்குமுன் இருந்தது.

வானொலி வெளியீடுகளில் "சென்னை" என்பதற்குப் பதில் "மதருஸ்" என்றும், "பின்னணி இசை" என்பதற்கு "ஐந்தர ஐக்கிய சம்மேளனம்" என்றும் "தொடக்கம்" என்பதற்கு "ஸ்வாகதம்" என்றும் அச்சிட்டு வருகின்றனர். இசைத்தட்டு, இசைப்பயிற்சி என்னுஞ் சொற்றொடர்களைப் பயன்படுத்தி வருவதோடு, "இசைத் தட்டு ஸங்கீதம்" என்பது போன்ற

தமிழையும் வானொலி நிலையத்தார் வளர்த்து வருகின்றனர். தமிழ்ப் பாடல்களுக்கு வானொலியில் போதிய சிறப்புத் தராத அன்பர்களிடம் வேறு எதை எதிர் பார்க்க முடியும்? செய்தி அறிக்கைகளில் பிறமொழிச் சொற்களை—அவற்றுக்கு ஏற்ற தமிழ்ச்சொற்கள் இருந்தும்—பயன்படுத்தி வருகின்றனர்.

வானொலி இதழில், பி. பி. சி. வெளியிடும் "லிசனர்?" என்னும் இதழில் வெளிவருமாப்போல கட்டுரைகளும், கலைஞர்களைப்பற்றிய குறிப்புக்களும் ஒலி பரப்பப்பட்ட நூல் மதிப்புரைகளும், நேயர் கருத்துக்களும் அச்சிடப்பட வேண்டும்.

வானொலியில் ஒலி பரப்பப்படும் இசை நிகழ்ச்சிகளைப் பொது மக்களும் கேட்டு இன்புறுகின்றனர். ஆனால், வானொலியில் ஒலி பரப்பப்படும் சொற்பொழிவுகளைப் பொது மக்கள் கேட்பதில்லை. எந்த உணவு விடுதிக்குச் சென்றாலும் இந்த உண்மை விளங்கும். பேச்சு என்றதும் அங்கு வைக்கப்பட்டிருக்கும் வானொலிப் பெட்டி நிறுத்தப்பட்டுவிடும். ஆகையால் பேச்சுக்களைப் பொறுத்த வரையில் அவற்றின் தரத்தைக் குறைக்கலாகாது. அமெரிக்காவில் பல்கலைக் கழகங்களுக்கென்று தனியாக வானொலி நிலையங்கள் உள்ளன. இவையும், நேஷனல் பிராட்காஸ்டிங் கார்ப்பரேஷன் போன்ற நிலையங்களும் அறிஞர்களை அழைத்து உலக நிகழ்ச்சிகளைப்பற்றி விவாத மேடை அமைத்து அந்நிகழ்ச்சிகளை நூலாக வெளியிடுகின்றன.* பல்கலைக் கழகங்களுக்கென்று தனி வானொலி நிலையங்கள் இல்லாத நிலையில் நம் நாட்டிலுள்ள நிலையங்களும் இந்த முறையைப் பின்பற்றலாம்.

* University of Chicago
Round Table Discussion on World Affairs.

**உரிமை**

வானொலியில் சொற்பொழிவு நிகழ்த்திஞல் அந்தச் சொற்பொழிவின் உரிமை, முதல் இரண்டு வாரங்களுக்கு மட்டுமே அந்த நிலையத்தாருக்கு உண்டு. அதற்குப் பிறகு பேச்சை வெளியிடும் உரிமை பேசியவருக்குத்தான் உண்டு. இந்த ஏற்பாடு பல நாடுகளில் இருந்து வருகிறது. ஆஞல் இதைப்பற்றித் தவருன ஒரு முறையை இந்திய வானொலி நிலையங்கள் பின்பற்றி வருவதால் தலைசிறந்த அறிஞர் சிலர் இந்திய வானொலி நிலையங்களில் பேசுவதற்கு இசைவதில்லை.

செய்தித் தாளுக்கு இருப்பது போலவே வானொலி நிலையங்களுக்கும் "ஸ்டைல் புக்" என்னும் வரம்பு நூல் வெளிநாடுகளில் இருந்து வருகிறது. அறிவிப்பாளர்களும், பேச்சாளர்களும் இந்த வரம்புக்கு உட்படுகின்றனர். தமது மொழியின் தரத்தைக் குறைக்கக் கூடாதென்பதில் கண்ணுங் கருத்துமாய் இருந்து வருகிருர்கள். இத்தகைய மொழியார்வம் வானொலி நிலையங்களில் பணியாற்றும் தமிழர்களுக்கு இருந்தும், நிலைய அலுவலகக் கொள்கைகள் இடையூருக இருந்து வருகின்றன.

குருடரும் ஊமையரும் மட்டுமே உள்ள கூட்டத்தில் சொற்பொழிவாற்றுவதே வானொலிப் பேச்சு என்று ஓர் அறிஞர் கூறியிருக்கிருர். பேச்சைப் படிப்பவர்க்கு அதிலுள்ள செய்திகள் தெரிந்திருக்கலாம்; ஆஞல், கேட்பவர்க்கு அவையாவும் புதியவை. ஒவ்வொரு கருத்தையும் புதிதாகக் கேட்டு அதை உணர்ந்துகொள்ள அவர்களுக்குச் சில விஞடிகள் வேண்டும்.

பேச்சு என்று குறிக்கப்பெற்றதும், கட்டுரையைப் படிக்கும் நிகழ்ச்சிகளாகவே அவை முடிகின்றன. சில குறிப்புக்களையோ அல்லது முழுப் பேச்சையுமேகூட, ஒலிபரப்புங் கருவியின்முன் வைத்துக் கொள்ளலாம். ஆனால், சொல்லுகிற முறையில் வேறுபாடு இருக்க வேண்டும். சுவை நிறைந்த உரையாடல்போல— இரண்டு, மூன்று நண்பர்களுடன் பேசிக் கொண்டிருப்பதுபோல—வானொலிப் பேச்சு அமைய வேண்டும். முக்கியமான செய்திகளையும், பெயர்களையும் மீண்டும் சொல்ல வேண்டும்.*

வானொலிப் பேச்சுக்களில் பேசுபவர் பெயரை அறிவிப்பது மட்டும் போதியதாகாது. அவர் யார் என்ற அறிமுகமும் வேண்டும். உரிய பேச்சின் தலைப்புக்கும் அவர்க்கும் என்ன தொடர்பு என்பதும் அறிவிக்கப் பெற வேண்டும். இல்லாவிடில், அடுத்த நிலையத்து நிகழ்ச்சிகளைக் கேட்கவே மனம் நாடும்.

கேட்போர் சிந்தையில் கருத்துப் பதிய வேண்டுமானால், வானொலியில் பேசுவோர் ஆறுதலாகப் பேச வேண்டும். ஏனெனில் ஒரு நூலிலோ ஓர் இதழிலோ பேச்சை அல்லது கட்டுரையைப் படிக்கும் அன்பர்கள் அதைமீண்டும்மீண்டும் படித்து விளங்கிக்கொள்ள இயலும். ஆனால், வானொலியில் கேட்கும் பேச்சை இவ்வாறு நன்றாகப் புரிந்து கொள்ளுவது இயலாது. எனவே, வானொலியில் சொற்பொழிவு செய்பவர்கள் தாங்கள் இன்ன பொருளைப்பற்றிப் பேசப் போகிறோமென்பதை முன்னுரையில் தெளிவாகத் தெரிவிக்க வேண்

* What is important from the point of view of broadcasting is the realisation that a word is primarily a sound and and not an arrangement of letters.—SOMANATH CHIB, formerly Director of Programmes A. I. R.

டும். உரிய செய்திகளை விரிவாகவும் விளக்கமாகவும் கூறவேண்டும். ஒரு சில செய்திகளை மட்டுமே தெரிவிப்பதும் நன்று. கடைசியாக ஒரு தொகுப்புரையும் கூறவேண்டும். இதைப்பற்றி, வாஞெலித் துறையில் நிறைந்த அனுபவம் பெற்ற சோமு (மீ. ப. சோமசுந்தரம்) கூறியிருப்பதாவது:

> ஆம். ரேடியோப் பேச்செல்லாம் எழுதிப் படிக்கிற காரியந்தான். நேருக்கு நேராக இருந்து ஒரு விஷயத்தை எடுத்துச் சொல்லுவது போன்ற ஒரு நேசம் அதில் இருக்க வேண்டும்.
>
> நிரடான வாக்கியங்கள் வந்தால், மீண்டும் ஒரு முறை படித்துப் பாக்கலாம் என்ற வசதி காற்றிலே இல்லை! அரிய கருத்துக்களும்கூட எளிய முறையிலே தான் வரவேண்டும். ஆழமும் அகலமும் கருத்திலே இருந்து சொல்லிலே சுருக்கமும் நெருக்கமும் இருந்தால் கேட்கிறவர் அதிலேயே நின்று யோசனை பண்ணுவதற்குள் அடுத்த வாக்கியம் ஓடிவிடுமே! இலக்கியச் சொற்பொழிவுகளிலோ சொல்லவே வேண்டாம். நிரடான செய்யுளை எடுத்துச் சொல்வதற்கு, நிரடான வார்த்தையே கையாண்டால் ரேடியோ மூலமாகக் கேட்பவருக்கு ஒன்றுமே புரியாதல்லவா?
>
> இன்ஞெரு முக்கிய விஷயம்; பேசுபவரின் குரலும் உச்சரிப்பும், நயமும் தெளிவும் கூடியிருக்க வேண்டும். ஒரு 'உறவு' அவற்றிலே தொனிக்க வேண்டும்.
>
> இத்தனைக்கும் மேலாகப் பேச்சின் நேரம். எந்தப் பேச்சையும் ஒரு அளவுக்கு மேல் கேட்க மனம் ஒப்புவதில்லை. இதனாலேயே பெரும்பாலும் பேச்சுக்களின் நேரம் பத்து அல்லது பதினைந்து நிமிஷமாக வரையறை செய்யப்பட்டிருக்கிறது.

சென்னை—திருச்சி நிலையங்களில் நூல் மதிப்புரைகள் தக்கவர்களால் நிகழ்த்தப்படுகின்றன. பல பொருள்களைப்பற்றிய உரையாடல்கள் இடையிடையே இனிய தமிழ் நடையில் அமைந்து கேட்போரை மகிழ்விக்கின்றன. இரு நிலையங்களும் தோன்றிய காலத்தில் அவை வெளியிட்ட அறிவிப்புக்களில் இருந்த தமிழ் நடையைவிட இன்று நாம் அந்த நிலையங்கள் வாயிலாகக் கேட்கும் தமிழ் நடை பெரும்பாலும் தமிழ்ச் சொற்களாக இருந்துவருவது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். இந்த நடை மேலும் வளர்ச்சி பெற்று விரைவில் அனைவரும் விரும்பத்தக்க இனிய தமிழ் நடையாக மாறுமென எதிர்பார்க்கிறோம்.

லண்டன் வானொலியில் வாரந்தோறும், தமிழ் ஓசை என்னும் கதம்ப நிகழ்ச்சியை ஒலி பரப்புகின்றனர். லண்டன் வானொலி நிலையத்திலும், இலங்கை வானொலி நிலையத்திலும் தமிழ்ப் பகுதித் தலைவராக விளங்கிய சோ. சிவபாத சுந்தரம் வானொலி வாயிலாகத் தமிழ் வளர்க்க முயன்றதை இங்கு நன்றியறிதலோடு குறிப்பிட விரும்புகிறோம். 'ஒலிபரப்புக் கலை' என்ற இவரது அரிய நூல் தமிழ் இளைஞர் அனைவருக்கும் பெரிதும் பயன்படும்.

'அமெரிக்காவின் குரல்' (Voice of America) என்ற வானொலியின் தமிழ்ப் பணியும் பாராட்டுக்குரியது. ரேடியோ சிங்கப்பூரும் 'ரேடியோ மலேயா'வும் மாஸ்கோ வானொலி நிலையமும் நல்ல தமிழில் பல நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி வருகின்றன.

வானொலியில் பலதடவைகள் பேசிய அறிஞர்கள் தங்கள் பேச்சுக்களைத் தொகுத்து நூல் வடிவில் வெளியிடுவதும் மரபாகிவிட்டது. ரேடியோவில் அண்ணா, 'வானொலியில் ம. பொ. சி.' 'வானொலியில்

கி. ஆ. பெ. விசுவநாதம் போன்ற நூல்களை இதற்குச் சான்று காட்டலாம். டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் இயற்றிய "முன்பனிக் காலம்", நீதிபதி எம். எம். இஸ்மாயில் இயற்றிய "உலகப் போக்கு" ஆகியவையும் வானொலிச் சொற்பொழிகளேயாம். டாக்டர் மு வரதராசன், பேராசிரியர் முத்து. இராசாக் கண்ணனார், ந. சஞ்சீவி ஆகியோர் வானொலியில் பேசிய பேச்சுக்கள் பலவும் நூலாக வந்துள்ளன. எனவே, வானொலி வாயிலாகவும் இந்த நூற்றாண்டில் தமிழ் உரைநடை வளர்ந்து வருகிறது.

இலக்கிய வாசகங்களை எப்படிப் படிப்பது, பாட்டுக்களை எப்படிப் பாடுவது என்பனவற்றை, வானொலியில் கற்றுக்கொடுக்கலாம். எங்கெங்கு நிறுத்தி, அழுத்தி, உரத்த குரலில் படிக்கவேண்டும் என்பதையெல்லாம் விளக்கலாம்.

கதை, நாடகம், குழந்தைகளுக்கான பேச்சு, கிராம நிகழ்ச்சி ஆகியவற்றை வானொலிக்கு எழுதுகின்ற முறை—பத்திரிகைக்கு, நூல்களுக்கு எழுதும் முறையினின்றும் — முற்றிலும் வேறுபட்டது. இவ்வகையில் எழுத்துப் பயிற்சி கொடுக்கும் பள்ளிக்கூடங்கள் நம் நாட்டில் ஏற்படவேண்டும். பத்திரிகைக் கல்வியைத் தமிழில் புகட்டும் கல்லூரிகூட இன்னும் அமையவில்லையே!

# 12. விளம்பரம்

நாம் விளம்பர காலத்தில் வாழ்கின்ருேம். காலையில் எழுந்து ஏதாவது ஓர் இதழைப் படித்தால் அதில் ஒரு பகுதி விளம்பரமாகவே இருக்கிறது. சாலை வழியாக நடந்து சென்ருல் இருபுறமும் சுவர்களில் விளம்பரங்கள் மிகுந்துள்ளன. படம் பார்க்கப் போனுல் அங்கேயும் விளம்பரங்கள் நம்மை விட்ட பாடில்லை. இலங்கை வாஞெலியைக் கேட்டுக்கொண்டிருந்தால் இடையிடையே விளம்பர அறிக்கைகளும் நம்முடைய கவனத்தை ஈர்க்கின்றன. ஆகையால் விளம்பரங்களில் எத்தகைய தமிழ் நடை கையாளப் படுகிறது என்பதை நாம் ஆராய்வது சாலப் பொருந்தும்.

பல ஆண்டுகளுக்குமுன் விளம்பரங்கள் முற்றும் வடமொழி நிறைந்த நீளமான வாக்கியங்களில் இருந்து வந்தன. அக்காலத்தில் விளம்பரங்களை அச்சிடுவது அருமையாக இருந்தது. ஏதாவது ஒரு செய்தியை எல்லோருக்கும் அறிவிக்கவேண்டுமாஞல் தமுக்கடித்து (பறை போட்டு) அறிவிப்பது வழக்கமாக இருந்தது. இவ்வாறு அறிவிப்பவர்கள் மூச்சுக் கூட விடாமல் சொல்லிக்கொண்டே போனுல் அது வெற்றிகரமான விளம்பரமாகக் கருதப்பட்டது. யான் ஏட்டுப்பள்ளியில் படித்த காலத்திற் பின்வருவது

போன்ற ஒரு பறையைக் கேட்டதாக நினைவு:

> மண்ணுடு ஒழித்து விண்ணுடு ஏகிய அண்ண லாம் ஸ்ரீமான் எஸ். ஜி. கிட்டப்பா அவர்களே புனர் ஜன்மம் கொண்டாரென பூபுகழ்போற்றும் புண்ணிய விநோதன் சி. எஸ். ஜெயராமன் நடித்த கிருஷ்ண லீலா நாடகம் இன்றிரவு நடைபெறும். இது சமயம் தவறினுல் மறுசமயம் வாய்ப்பது அரிது. அடாது மழை பெய்தாலும் விடாது நாடகம் நடத்தப் படும்.

முடி திருத்தும் நிலையங்களில் இப்போது காணப் படும் விளம்பரங்களிலிருந்து தமிழ் நடையில் ஏற்பட் டிருக்கும் மாறுதல்களை அறியலாம். துணி வெளுக்கும் கடைகளில் உள்ள பலகைகள் பெரும்பாலும் ஆங்கிலத் தமிழிலேயே உள்ளன. "ஆடு நரியாகவும், அறிச் செண்டாகவும் சலவை செய்து தரப்படும்" என்ற அறிவிப்பையும் ஓர் இடத்தில் கண்டோம்.

இக்காலத்தில் வெளிவரும் விளம்பரங்களில் சில முன்னைவிட நல்ல தமிழில், ஓரளவு சுருக்கமாகவும், தெளிவாகவும் பட்டியல்போல அமைந்துள்ளன. விளம்பங்களில் பல செய்திகளையும் அறிந்துகொள்ளு கிறேம். சான்ருக இந்த விளம்பரத்தைப் பாருங்கள்:

**பஸ் வரிகள்**

**அமுலில் உள்ளவை**

| | |
|---|---|
| மோட்டார் உருபுகளின் இறுக்குமதி வரி | 94 1/2 சத வீதம் |
| பெட்ரோல் தேசீயவரி காலன் ஒன்றுக்கு | ரூ. 0--15-0 |
| டயர், ட்யூப்புகளுக்கு தேசீய வரி | 30 சத வீதம் |
| விற்பனை வரி ரூபாய் ஒன்றுக்கு | ரூ. 0-0-9 |

| | | |
|---|---|---|
| 30 பேர் உட்காரக்கூடிய ஒரு மோட்டார் பஸ்ஸுக்கு டாக்ஸேஷன் வரி | ரூ, | 3,600–0–0 |
| ஸ்டாண்டு வாடகை வருஷம் ஒன்றுக்கு | ரூ. | 300–0–0 |
| ஆகமொத்தம் எல்லா வரிகளும் | ரூ, | 12,000 |
| தினசரி வரி (சராசரி) | ரூ. | 33 |

இந்த வரி ஒரு பஸ்ஸின் ஒரு வருஷத்திய மொத்த வருமானத்தில் 40 சத வீதமாகும்.

வேறு எந்த தொழிலிலிருந்தும் இவ்வளவு அதிக வரி மத்திய சர்க்காருக்கும் சென்னை ராஜ்ய சர்க்காருக்கும் கிடைப்பதில்லை. மேலும் வரி சுமத்த யத்தனிப்பவர்கள், நிதானிக்க வேண்டும்.

...பஸ் டிரான்ஸ்போர்ட் லிமிடெட்

பிற மொழியில் எழுதப்படும் விளம்பரங்களைத் தமிழ் எழுத்தில் அச்சிட்டு வெளியிடும் திருப்பணியில் ஈடுபட்டிருக்கும் அன்பர்களும் இக்காலத்தில் மிகுதியாக உள்ளனர். அவர்கள் வெளியிடும் விளம்பரங்களுக்குச் சான்றாக ஒன்றைக் காண்க:

தந்தி : EXHIBITON டெலிபோன் : 86294 & 85932

**அகில இந்திய**

**காதி ஸ்வதேசி, கைத்தொழில்**

**பொருட்காட்சி**

**காங்கிரஸ் மைதானம் தேனாம்பேட்டை, மதருஸ்-6**

1952 ஹு டிசம்பர் மீ 18வ ஆரம்பம்

பிரசித்திபெற்ற

**நவாப் ராஜமாணிக்கம் கம்பெனியாரின்**

**நாடகங்கள்**

**வசீகரமான பல்வேறு இதர காட்சிகள்**

ஜெயன்ட் வீல், மெர்ரி–ரவுண்ட், சேரோ பிளேன், கிணற்று வியூக்கத்தில் பிராணுபாயமான சைக்கிள் சவாரி, மெழுகு மாடல் மற்றும் பேசும் பொம்மைகள்.

**பிரவேசக் கட்டணம்: அணு 5**

காட்சி நேரம்

**தினசரி மாலை 2 மணி முதல் இரவு 9 மணி வரை**

ஆர்கனைசர்

**அகில இந்திய காதி, கைத்தொழில் பொருட்காட்சி**

சாலைகளிலே செல்லும்போது நாம் பார்க்கும் விளம்பரப் பலகைகளிலும் மேலே குறிப்பிட்ட விளம் பரத்திற் போலவே தமிழ்ச் சொற்களை எண்ணிவிடுவது எளிது. இன்னும் சொல்லப் போனுல் பலகைகளில் தமிழ்ச் சொற்கள் மருந்துக்குக்கூட இரா, சான்முக மூன்றைத் தருவோம்;—

**பஞ்சாயத்து போர்டு பஸ் ஸ்டாண்டு**
**ஐஸ் கூல் டிரிங்க் ஸ்டோர்**
**மெஜுரா ரெடிமேட் ஜுவல்லரி எம்போரியம்**

போர்டிங் அண்டு லாட்ஜிங் அவுஸ் என்று தமிழ் எழுத்துக்களில் எழுதிவிட்டால், அதுவே தமிழ் என்று எண்ணிவிடுகிறோம். போர்டிங் அண்டு லாட்ஜிங் அவுஸ் என்பதை "உணவுவிடுதி; தங்கும் இடம்" என்று எழுதலாம். ஆனுல், இதையே ஆங்கில எழுத்துக்களில்,

**UNAVU VIDUTHI**
**THANKUM ITAM**

என்று எழுதினுல், ஆங்கிலேயர் எள்ளி நகைப்பர் அன்றோ? அல்லது அவர்களுக்குத்தான் அவை புரியுமா?

வணிகர்கள் தாங்கள் பொருள் விற்றதற்கு அடையாளமாகத் தரும் பட்டியலிலும் மிகுதியான பிறமொழிச் சொற்களை விலையில்லாமல் வழங்குவர். அந்தப் பட்டியல்களில் "வி. வரி அலாதி" என்று வேறு அலாதியாக எழுதியிருப்பார்கள்.

இவ்வாறு தமிழர் என்று தங்களைச் சொல்லிக் கொள்ளும் சிலர் ஒல்லும் வகையாலெல்லாம் தமிழைக் கொலை செய்து வந்தபோதிலும், ஒரிருவராவது தூய தமிழில் விளம்பரங்களை வெளியிட்டுவருவது மன அமைதியைத் தருகின்றது.

## திருச்சிராப்பள்ளி நகராட்சி

### ஏல அறிவிப்பு

1—8 1952 முதல் 31—3—1953 வரை உள்ள காலத்துக்கு கீழ்க்கண்ட குத்தகைகள் 25—7—52 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஆணையரால் (கமிஷனரால்) நகராட்சி அலுவலகத்தில் (முனிசிபல் ஆபீசில்) எல்லோரும் அறிய ஏலம் விடப்படும். ஏலக் கட்டுப்பாடுகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

1. காந்தி சந்தை
2. மீன் சந்தை
3. சிறைச்சாலை வண்டிப்பேட்டை
4. தேவர் மண்டபம்
5. தெப்பக்குளத்தில் இன்பப் படகுகள்
6. பேருந்து (பஸ்) வாடகை
   உந்து (டாக்ஸி) நிலையங்கள்.

**கட்டிக் கரும்பு போன்ற அன்பும்**

**வெல்லப் பாகு போன்ற சொல்லும்**

**சர்க்கரைப் பொங்கல் போன்ற பண்பும் கொண்ட**

**தமிழக முதலமைச்சர் பேரறிஞர் அண்ணுவுக்கு**

**எங்களது இனிய நல்வாழ்த்துக்கள் !**

*பொங்கும் கங்கைபோல்*

*பாடும் காவிரிபோல்*

*என்றென்றும் வாழ்க! வாழ்கவே!!*

★

## கலேக் கதிர்

*கலேயின் களஞ்சியம் சிந்தனைச் செல்வம்*

* *கண்ணுக்கு விருந்து*
* *கலேநலம் மிக்கது; எழில் மிகப் பெற்றது.*
* *பார்த்தால் படிக்கத் தூண்டும்; படித்தபின் பாதுகாக்க எண்ணம் வரும்.*

**ஆண்டுச் சந்தா ஆறு ரூபாய்**

**கலேக்கதிர்**

**பீளமேடு : : கோயமுத்தூர்**

*மற்ெருரு வகை விளம்பரங்கள் நீதி மன்றத்தில் நடைபெறும் வழக்குகளே ஒட்டியவை. இவற்றில் கட்சிக்காரர்களின் பெயர்கள் மட்டும் தமிழில் இருக்கும்.*

## நோட்டீஸ்

டி. மு. கோர்ட்டு

ஒ. எஸ். நெம்பர் ... ஆப் 48.
ஐ. ஏ. நெம்பர். ... ஆப் 52.

சண்முகம் பிள்ளை என்ற சண்முக சுந்தரம்பிள்ளை — வாதி

முதுகுளத்தூரிலிருக்கும் சுப்பையா பிள்ளை மகன் காசிலிங்கம் — 2-ம் பிரதிவாதி

இந்த நிம்பரில் பைனல் டிக்கிரி பாஸ் செய்ய வேணுமாய் மனு கொடுத்து 20—2—53ல வாய்தா ஏற்பட்டிருக்கிறது.

9—2—53. } ஏ. அனந்தநாருயண ஐயங்கார்,
வாதி வக்கீல்.

இந்நாளிலும்—1968 இறுதியிலும் மணிப்பிரவாளத்தில் விளம்பரங்கள் வருகின்றன. சான்று தமிழ்ப் பேராசிரியர் தெ. பொ. மீ. வெளியிட்ட விளம்பரம் வருமாறு:

## மதுரை சர்வகலாசாலை

அறிவிப்பு

சர்வகலாசாலை ஆராய்ச்சி பெலோஷிப்புகள் (University Research Fellowships)

உதவித் தொகையுடன் மற்றும் உதவித் தொகை இல்லாத ஸ்டுடேண்ட்ஷிப்புகளுக்கு (Stipendiary and Non-stipendiary studentships) விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இவை இந்த சர்வகலாசாலையைச் சேர்ந்தவை.

**யோக்கியதாம்சங்கள்:**

1. ஸ்டுடேண்ட்ஷிப் புகளுக்கு: முதல் அல்லது இரண்டாவது வகுப்பு மாஸ்டார்ஸ் டிக்ரி ஒன்று.

2. ஃபெலோஷிப் புகளுக்கு: போஸ்ட் - கிராஜுவேட் டிக்ரி ஒன்று.

சுய விலாசம் எழுதி 20 பைசா தலை ஒட்டிய உறை ஒன்றை இணைத்து வேண்டிக்கொள்வதன் மூலம் ரிஜிஸ்டிரார் மதுரை சர்வகலாசாலை மதுரை-2 அவர்களிடமிருந்து நிர்ணய விண்ணப்ப பாரத்தை பெறலாம்.

விண்ணப்பங்கள் பெறுவதற்குக் கடைசி தேதி

**1968 ஜுலை 10ந் தேதி**

சர்வகலாசாலை கட்டிடம் மதுரை-2. 12-6-1968.

**ஆர். பெருமாள்,**
ரிஜிஸ்டிரார்

இந்த நடையை எதிர்த்து இந்நூலாசிரியர் செய்த கிளர்ச்சியின் பயனாய்ப் பின்வருமாறு விளம்பரங்களை வெளியிட வேண்டிய சூழ்நிலை தெ. பொ. மீ. க்கு ஏற்பட்டது:

## மதுரைப் பல்கலைக் கழகம்

மதுரை

### ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

1968—69 ஆண்டிற்கு மதுரைப் பல்கலைக் கழகத்திற்குத் தேவையான உட்புறம் துணியுள்ள தாள் கூடுகள் (CLOTH - LINED COVERS) வழங்க முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 31—8—68 தேதி 3 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளியின் வரையறைக் கூறுகளுக்கு (Details) பல்கலைக் கழகப் பதிவாளருக்கு எழுதவும்.

பல்கலைக் கழகக் கட்டிடம்
மதுரை—2.
8—8—68

**இரா. பெருமாள்**
பல்கலைக் கழகப்
பதிவாளர்.

இந்திய அரசியலாரின் அலுவலகங்கள் அடிக்கடி விளம்பரங்களை வெளியிடுகின்றன. பாமர மக்களுக்காக இவை வெளியிடப்பட்டபோதிலும் எளிய நடையையோ சுருங்கிய சொற்களையோ வடமொழிப் பயிற்சி இல்லாதவர்கள் புரிந்துகொள்ளக் கூடிய முறையையோ மேற்கொண்டு இவை எழுதப்படுவதில்லை. எடுத்துக்காட்டாக பின்வரும் விளம்பரத்தைக் காண்க:

## துண்டுப் பிரசுரம்

**பூரணமானதும் சரியானதுமான விலாசம் சீக்கிரமானதும் பத்திரமானதுமான தபால் விநியோகத்திற்கு உத்திரவாதம் அளிக்கிறது.**

i. சாதாரணமாக தாலுக்கா அல்லது ஜில்லாக்களில் துவங்கி விலாசதாரருடைய பெயருடன் முடிக்கும் வழக்கமான தவறுதல்களைத் தவிர்க்கவும்.

ii சரியான விலாசம் இப்படி எழுதப்பட்டிருக்கும்.

1. விலாசதாரரின் பெயரை முதலில் எழுது.

2. அவரை அடையாளம் கண்டுபிடிக்க ஏதுவாக இருக்கும் அவருடைய தொழில், பார்க்கும் உத்தியோகம், தகப்பனுர் பெயர் போன்ற விபரங்களை எழுது.

3. அவரது வீட்டின் கதவிலக்கம், வசிக்கும் தெருவின் பெயர் அல்லது பிரதேசத்தின் பெயர்.

4. பிறகு அவர் வசிக்கும் கிராமம் அல்லது நகரத்தின் பெயர்.

5. கடைசியாக தபாலாபீஸின் பெயரை எழுத வேண்டும். இதை ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களில் எழுது. அதன்கீழ் கோடு கிழிக்கவேண்டும்.

இடைக்குறியிட்ட அடைப்புகளில் தாலுக்கா அல்லது ஜில்லாவின் பெயரை எழுத வேண்டும்.

6. பிரதேச விநியோக எண்கள் கொடுக்கப் பட்ட தபால் ஆபீஸ்களுக்கு பொருள்களை விலாச மிட்டு அனுப்பும்பொழுது சரியான தபால் பிரதேச விநியோக எண்களை எழுத வேண்டும். உ-ம். மதறாஸ்—1. மதறாஸ்—2. பங்களூர்-1. பங்களூர்-2. போன்றவை.

iii. சுலபமாக விநியோகம் செய்யக்கூடிய தபால்களை தபால் விலாசங்கள் எழுதும்போது நேரிடும் மிகச் சிறிய விடுதல்களினால் தபால் விநியோகம் செய்வதில் மிகக் காலதாமதம் நேரிட ஏதுவாகின்றது என்பதை நீங்கள் ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

iv. எப்பொழுதும் விலாசம் எழுதும்பொழுது கவனமாகவும் தெளிவாகவும் மெதுவாகவும் மையினாலும் எழுது.

v. திருத்தப்பட்ட விலாச மாறுதல்கள் எழுதுவதற்கு வசதியாக விலாசம் எழுதும்பொழுது வரிக்கு வரி போதுமான இடம் விட்டு எழுதவும்.

vi. கீழே காண்பிக்கப்பட்டுள்ள மாதிரி விலாசங்களைத் தயவு செய்து பாருங்கள். நன்றாக நீங்கள் கவனித்தால் நீங்கள் தவறுதல் செய்யமாட்டீர்கள்.

STAMP

**ஸ்ரீ. என். ராமசாமி அய்யர்,**
போலீஸ் சப் இன்ஸ்பெக்டர்,
25, பைக்ராப்ட்ஸ் ரோடு,
TRIPLICANE,
MADRAS-5.

STAMP

**திரு செ. அழகப்பன் என்ற இராமன்,**
புதுமனை 2-ஆம் வீதி,
இராயவரம்,
திருச்சி மாவட்டம்.

## அரசினர் பேருந்துகளில் தமிழ் மணம் கமழ்கிறது

**வள்ளுவரின் பொன் மொழிகள் ஒவ்வொரு பேருந்திலும் இடம் பெற்றிருக்கின்றன. மற்றும் பேருந்து செல்லும் இடங்களும் சிறப்பாகத் தமிழில் எழுதப்பட்டுள்ளன.**

| | இதுவரை | | இனிமேல் |
|---|---|---|---|
| 1. | கெல்லீஸ் | 1. | கில்லியூர் |
| 2. | பாரிஸ் | 2. | பாரி முனை |
| 3. | மயிலாப்பூர் | 3. | மயிலை |
| 4. | அடையார் | 4. | அடையாறு |
| 5. | ஆர்ட்ஸ் காலேஜ் | 5. | கலைக் கல்லூரி |
| 6. | தி. நகர் | 6. | தியாகராயநகர் |
| 7. | தண்டையார்பேட் | 7. | தண்டையார்பேட்டை |
| 8. | ஹைகோர்ட் | 8. | உயர்நீதி மன்றம் |
| 9. | மந்தவெளி | 9. | மந்தைவெளி |
| 10. | தக்கர் சத்திரம் | 10. | தாக்கர் சத்திரம் |
| 11. | ரெட் ஹில்ஸ் | 11. | புழலேரி |
| 12. | சோழவரம் | 12. | சோழபுரம் |
| 13. | திருவொத்தியூர் | 13. | திருவொற்றியூர் |
| 14. | நேப்பியர் பார்க் | 14. | நேப்பியர் பூங்கா |
| 15. | ஐ. சி. எஃப். | 15. | இணைப்புப் பெட்டி தொழிற்சாலை |
| 16. | டோல்கேட் | 16. | சுங்கச்சாவடி |
| 17. | ஹாமில்டன் ப்ரிட்ஜ் | 17. | அமில்டன் பாலம் |
| 18. | கஸ்டம் ஹவுஸ் | 18. | துறைமுகம் |
| 19. | கடற்கரை எஸ்டேட் | 19. | பட்டினப் பாக்கம் |
| 20. | விவேகானந்தா ஹவுஸ் | 20. | விவேகானந்தர் இல்லம் |
| 21. | மவுண்ட் ரோட் | 21. | மவுண்ட் சாலை |
| 22. | டெப்போ | 22. | பணிமனை |
| 23. | இன்ஸ்பெக்ஷன் | 23. | ஆய்வுக்காக |
| 24. | டிரைவிங் ஸ்கூல் | 24. | ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி |
| 25. | ஐலண்ட் க்ரவுண்ட் | 25. | பூம்புகார் நகர் |
| 26. | வெஸ்ட் மெட்ரூஸ் நெய்பர்ஹுட் | 26. | அறிஞர் அண்ணா நகர் |

**வெளியிட்டோர் :**

**தமிழக அரசு போக்குவரத்துத் துறை**

இலங்கையில் விளம்பரங்களில் ஒரு சில செந்தமிழில் உள்ளன. நாம் தரும் விளம்பரம் இலங்கைப் போலீசுத் துறையினரால் வெளியிடப்பெற்றது.

## எல்லோரும் நடந்து செல்லும்பொழுது கவனிக்க வேண்டியவை

1. கால்நடைப் பிரயாணிகளிற்கு என்று ஒதுக்கப்பட்ட இடங்களாலும், வீதியின் இரு பக்கங்களிலுள்ள மேடைகளிலும், அபாயமில்லாத இடங்களாலும் செல்லவும்.

2. வீதியில் ஏறுமுன் இடது பக்கமும் வலது பக்கமும் பார்த்துப் பின் இடதுபக்கம் பார்த்துக் கொண்டு செல்லவும்.

3. ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கத்திற்கு அபாயமில்லாத இடமாய்ப் பார்த்து அதன் வழியே செல்லவும்.

4. நல்ல தருணம் பார்த்து மறுபக்கத்திற்குப் போக எத்தனிக்கவும்.

5. மறுபக்கம செல்லும்பொழுது போக்குவரத்தில் கவனம் செலுத்தவும்.

6. ஒரு வாகனத்தின் பின் இருந்து மற்றொரு வாகனம் செல்லும் பாதையில் கவனமாக இறங்க வேண்டும்.

7. வீதி வழுக்கலாயும் ஈரமாயுமிருக்கும் பொழுது அதிக கவனமெடுக்க வேண்டும்.

8. ஓடிக்கொண்டிருக்கும் வாகனத்திலிருந்து இறங்குவது அல்லது ஏறுவது மிகவும் அபாயமான செய்கை என்பதை உணரலாம்.

9. டிராம் வண்டியிலிருந்து இறங்கு முன்னும் ஏறப்போகு முன்னும் போக்குவரத்தைக் கவனிக்கவும்.

10. வாகன நெருக்கத்தில் சிக்கினுல் மனம் பதருதே! அங்கிங்கு ஓடாதே!!

11. சிறு பிள்ளைகளிற்கு மறுபக்கம் செல்ல உதவி செய்ய ஆயத்தமாயிரு.

இலங்கை அரசியலாரின் "ஏயர் சிலோன்" நிறுவனத்து விளம்பரத்தில் ஒரு பகுதியைத் தருவோம்:

''ஸ்கை மாஸ்ரர்'' சேவை
கிழமைக்கொரு விசை
சலார்விகிதம்

| | போக | போகவர |
|---|---|---|
| கொழும்பிலிருந்து பம்பாய்க்கு ரூ. | 254·00 | 453·00 |

நீட்டி நிமிர்ந்து சயனஞ் செய்யக்கூடிய ஆசனங்கள் ''ஸ்கைமாஸ்ரர்'' சேவையிலுண்டு.

சைவச் சாப்பாடோ அல்லது மச்ச மாமிசஞ் சேர்ந்த சாப்பாடோ வழங்கப்படும்.

"நாளையெனத் தாழாதீர்: நமக்கெனத் தேடுமின்" "ஆடம்பர வாழ்வு கொண்டுவரும் தாழ்வு" என்பன போன்ற எதுகைமோனை நிறைந்த சொற்ருெடர்களோடு இலங்கையில் தேசிய சேமிப்பு இயக்கத்திற்குப் பிரசாரம் செய்யப்பட்டது.

இலங்கையில் தமிழ் விளம்பரங்களைக் கண்டபோது தமக்கேற்பட்ட கருத்துக்களை ஏ. கே. செட்டியார் தெளிவாக எழுதியிருக்கிருர்:

இலங்கையில் யுத்தப் பிரசாரங்களுக்குக்கூட நல்ல தமிழைக் கையாளுகிறார்கள்.

புல்லை அழித்து நெல்லை விதை
பெண்பாலரும் பெரும் பயிர் செய்யலாம்
கமத்தொழிலாற்றிக் காப்போம் நாட்டை

என்று அழகான தமிழ் எழுத்தில் எழுதப்பட்டிருக்கும் விளம்பரங்களை கொழும்பு நகரம் முழுதும் பார்க்கலாம். ஆனால் தமிழ் வளர்க்கும் இதே நாட்டில்,

''கோச்சிவரும் கவ்நம்''
''நிலம் அலப்பவர்''

போன்ற தமிழ்ப் பலகைகளையும் நாம் பார்க்கிறோம்.

தமிழ் நாட்டிலும் விளம்பரங்களில் இதுபோன்ற தவறுகளை ஆயிரக்கணக்கில் நாள்தோறும் சுவரொட்டிகளிலும், படமாளிகைகளிலும், நாள் இதழ்களில் காணுகின்றோம். இத்தகைய பலகைகளை ஓரளவு தமிழ் தெரிந்தவர்கள் தான் எழுத வேண்டுமென்று சட்டம் ஏற்பட வேண்டும். உரிய பலகைகளைத் தக்க அலுவலர் சரிபார்த்த பிறகுதான் அதைத் தொங்கவிடும் உரிமையைக் கொடுப்பதென்ற வழக்கத்தையும் நகராண்மைக் கழகங்களும், நாட்டாண்மைக் கழகங்களும் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். விளம்பரப் பலகைகளைத் திருத்தி எழுதுவதற்கென்று நாடெங்கும் உலா வர ஒரு குழுவை நியமித்தாலும் நன்று. அந்த நாள் வந்தால் விளம்பரப் பலகைகளில் தூய தமிழைக் காணலாம். அவற்றைப் படிக்கும் அன்பர்களிடையே தமிழ் உணர்ச்சி பெருகும்.

# 13. சமயமும் தமிழும்

''அளவிலும், சுவையிலும் தமிழிலுள்ள திருப் பாடல்கள் போல், பிற இலக்கியங்களில் இல்லை. எனவே மொழிநூல் முறையில் எத்துணை வழு வுடையதாய் இருப்பினும், ஆங்கிலம் வணிகத்தின் மொழி என்றும், இலத்தீன் சட்டத்தின் மொழி என்றும், கிரேக்கம் இசையின் மொழி என்றும், ஜெர்மன் தத்துவத்தின் மொழி என்றும், பிரெஞ்சு தூதின் மொழி என்றும், இத்தாலியன் காதலின் மொழி என்றும் கூறுவது ஒரு புடை ஒக்குமெனின் தமிழ் இரக்கத்தின் மொழி எனக் கூறுவது இனிது பொருந்தும். பத்தியின் மொழி எனலுமாம்.''

—தனிநாயக அடிகள்

பண்டுதொட்டுத் தமிழிலக்கியத்தில் இரண்டு சிறப்புக்களைக் காண்கின்றோம். ஒன்று தமிழ் நூல்கள் எல்லாவற்றிலும் தெய்வமணம் கமழ்வதாகும். மற்றொன்று தமிழ் ஒரு சமயத்தாருக்கு உரிய மொழி யாக இன்றி எல்லாச் சமயத்தாராலும் பேணிவளர்க்கப் பட்டு வந்திருப்பதாகும்.

தமிழ்மொழி மதங்களையெல்லாம் கடந்து நிற்கின்றது. குறிப்பிட்ட எந்த ஒரு மதத்திற்கும் உரியதாகத் தமிழ்மொழி விளங்கியதில்லை. சைவம், வைணவம் ஆகியவற்றோடு சமண, பௌத்த சமய நூல் களும் தமிழில் மிகுதியாக வெளிவந்துள்ளன.

அவற்றிற்குப் பிறகு தோன்றிய இஸ்லாம், கிறித்தவம் முதலிய மதத்தவருடைய நூல்களும் தமிழாக்கப்பட்டிருக்கின்றன. சீறாப் புராணம், முகையதீன் புராணம் போன்ற இலக்கியச் சுவை நிறைந்த தீந்தமிழ்க் காவியங்கள் முஸ்லீம்களால் தமிழில் இயற்றப்பட்டிருக்கின்றன. திருக் குர்ஆன், ஹதீது ஸல் (நபிகள் நாயகம் அவர்களின் திருவாய்மொழிகள்), ஆகியவை இஸ்லாமிய சமயம்பற்றித் தமிழில் எழுந்துள்ளன.

முஸ்லீம் எழுத்தாளர் பலரைப் பற்றி இந்நூலில் வேறுசில இடங்களில் குறிப்பிட்டிருக்கிறோம். தாவூத் ஷா, அப்துல் ஜபார், அப்துல் ரஹீம், ஆர். பி. எம். கனி, எம். எம். உவைஸ், முஸ்தாபா உசைன், டி, எஸ். ஏ. ரசூல், இலங்கை எஸ். எம். கமாலுதீன், மதுரை எம். கே. எம். காதிரு முகைதீன், அப்துல் வஹ்ஹாப், மணவை முஸ்தாபா ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர் ஆவர்.

பௌத்த மதத் தொடர்பால் விகாரம், தூபம், காபி, சமணர் போன்ற பாலி மொழிச் சொற்கள் தமிழில் வழங்கி வருகின்றன. இஸ்லாமிய சமயத் தொடர்பால் தமிழில் வழங்கும் சொற்களும் மிகப் பல. இவை பெரும்பாலும் அரசாங்க நிருவாகம், நீதிமன்ற அலுவல் பற்றியவை எனலாம். ஒருசில சொற்களை மட்டும் இங்கே குறிப்பிடலாம்:

> ஷராப், தண்டா, தாக்கீது, ஜவ்வாது, கல்தா, இருஸால், சால்ஜாப்பு, அமீனு, காப்ரா, ஹர்த்தால், ஆப்காரி, கொசரு, மாமூல், அனுமத்து, அலக் (அலாக்கு), குலாப், (பன்னீர்), கசரத், அந்தாஸ், அயன், பயாஸ்கோப், திவாலா, தாசில்தார், தர்வான், ஜப்தி, அபேஸ், தஸ்தாவேஜ், அல்பனத்தி ஆஜர், ஜமாபந்தி, தஸ்திக்.

தமது சமய நூல்கள் அறபு மொழியில் இருப்பதாலும் முஸ்லீம் நாடுகளுக்கு யாத்திரை செல்லும்போது அந்த மொழி பயன்படுமாதலாலும் முஸ்லீம்கள் பலர் அறபு மொழியையும் பயிலுகிறார்கள். இதன் விளைவாக அவர்களில் சிலருடைய உச்சரிப்பிலும் அறபு மொழி தொனிப்பதைக் காணலாம்:

| | |
|---|---|
| ஸ்கூல் | இஸ்கூல் |
| பருப்பு | பரிப்பு |
| இருக்கிறது | இக்கிது |
| பிள்ளை | பிள்ளாய் |
| சொல்லத் தெரியாது | செல்லத் தெரியாது |
| அப்பா | வாப்பா |
| உன் அம்மா | ஓம்மா |

இஸ்லாமியத் தமிழுக்கு எடுத்துக்காட்டாகப் பின் வரும் பகுதியை தருவோம்:

1. புகழ்வோரின் புகழ் அனைத்திற்கும் புகலிடம் நீயே, பெருஞ் சிறப்புக்களின் உண்மையான நிலைக் களமாகிய பேரிறைவா!

சலவாத்து எனும் மென்காற்றை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் அதிகாரம் பெற்ற ஞானவான்கள் மீதும் வீசச் செய்!

[நாயகம் (ஸல்) அவர்களால் நேர்வழி காட்டப் பெற்றிருப்பது சிறந்த சௌபாக்கியமாகும். அந்த பாக்கியத்திற்கு அழைத்துச் செல்லும் அதிகாரம் பெற்றுள்ள ஆத்ம ரத்தினங்களாகிய ஷெய்குமாரர்களை அருளித் தந்த இறைவனுக்கு நன்றி செலுத்திக்கொண்டு, ஞானவான்களென்னும் அந்த ஜோதிகளை துதி செய்வது நமது கடமையல்லவா?

பதின்மூன்றும் நூற்றாண்டில் தோன்றிய மணிப்பிரவாள நடைப் போக்கு பதினேழாம் நூற்றாண்டு வரை செல்வாக்குடன் திகழ்ந்தது, தமிழிலும் மலை

யாள மொழியிலும் மணிப்பிரவாள நடை நூல்கள் எழுந்தன; ஆனால் கன்னடத்திலும் தெலுங்கிலும் தோன்றவில்லை. இந்நடையில் பல நூல்கள் பிறந்தன. ஸ்ரீ புராணம் என்பது சமணர்கள் இயற்றிய மணிப் பிரவாள நூல்களில் சிறந்தது. இந்நடைக்கு ஒரு எடுத்துக்காட்டு:

> கேளீர் குமாரர்காள், யான் பகவானுடைய மூலதாஸன்; நாகலோகத்து வஸிப்பேன்; 'நமக்கு பக்தராகின்ற இந்தக் குமாரர்கட்கு வேண்டும் விபரங்களைக் கொடுப்பாயாக' என்று பகவான் அருளிச் செய்ய, யான் உங்கட்கு வேண்டும் விபரங் களைத் தருவான் வேண்டி வந்தேன். போதுவீராமினே (ஸ்ரீ புராணம்-ஆதி புராணம்)

கிறித்தவப் பெருமக்கள் தமிழுக்கு ஆற்றிய தொண் டினைத் தமிழுலகம் நன்கு அறியும். 'கிறித்தவமும் தமிழும், என்ற ஒரு தனி நூலையே மயிலை சீனிவேங்கட சாமி திறம்பட எழுதியுள்ளார். ஐரோப்பியர் காலம் என்ற பகுதியில் நாமும் ஓரளவு குறிப்பிட்டுள்ளோம்.

அகராதிகளும், பாட நூல்களும், மொழிபெயர்ப்பு நூல்களும் வெளிவருவதற்குக் கிறித்தவப் பெருமக்கள் செய்துள்ள உதவிக்குக் கங்கு கரையில்லை. புதிய புதிய துறைகளிலே தமிழ் நூல்கள் வெளிவதற்குச் சென்னை கிறித்தவ இலக்கியக் கழகம், புதுச்சேரி மிஷன் அச்சகம் தூத்துக்குடி தமிழ் இலக்கியக் கழகம் ஆகியவை அரும் பாடுபட்டு வருகின்றன. தனிநாயக அடிகள், செய்ராக் அடிகள், எப். எக்ஸ். சி. நடராசா, ரெவரன்டு அருள் தங்கையா ஆகியோர் இன்றளவும் சிறந்த முறையில் தமிழ்ப் பணியாற்றி வருகின்றனர். ஆகவே சமயம் என்னும் சிறையில் சிக்கிக் கிடக்காமல் தமிழ்மொழி காலத்தோடு முன்னேறி வருகிறது.

ஏனைய கிறித்தவப் பெருமக்களுள் தூத்துக்குடி ஏ. சி. பால் நாடாரின் தொண்டு சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. எச். ஏ. கிருஷ்ணப்பிள்ளை யாத்த ரட்சண்ய யாத்ரிகம் (Translation of John Bunyan's Pilgrim's Progress), ரட்சண்ய மனோகரம், ரட்சண்ய சமயநூல். ரட்சண்ய குறள் என்பனவும் சிறந்த படைப்புக்கள்.

இந்நாளில் வழங்கும் கிறித்தவர் தமிழுக்கு ஒரு சான்று தருவோம்.

**பாளையங்கோட்டைத்**

**தூய சவேரியார் பங்குக் கோவிலின்**

**நூற்றாண்டு நிறைவு விழாவை யொட்டி**

*ஆலயத்தில் புதிதாக அமைந்துள்ள*

**திருபலிபீட அபிசேக விழாவுக்கு வருகை தந்துள்ள**

**மதுரைப் பேராயர் *திரவியம் ஆண்டகை* அவர்களுக்குப்**

*பணிவன்புடன் படித்து வழங்கும்*

## வரவேற்பு வாழ்த்திதழ்

**சீர்பெருகச் செயலாற்றும் பேராயப் பெருந்தகையே !**

*ஏற்றமிகு ஏந்தலாகவும் அருளறம் பூண்ட அண்ணலாகவும் பெரும்பயன் தரும் திருப்பணி புரியும் தங்களை வரவேற்பதில் பாளைமாநகர் பெரு மகிழ்வு கொள்கிறது; பெருமிதம் அடைகிறது. அலைகடல் கடந்து கலை பல கற்றுத் தேர்ந்த விற்பன்னராக விளங்கும் தாங்கள், இறையரசு செழிக்கவும் மறைமுரசு முழங்கவும் முறையாகத் திட்டங்கள் தீட்டி வருவது அறிந்து பெரிதும் இறும் பூது எய்துகிறோம். அன்பு தழைத்தோங்கவும்*

பண்பு வாழ்வு நிவந்தோங்கவும் விழைகின்றோம். மருங்காபுரியின் மணிவிளக்காக மிளிரும் தாங்கள், மாமதுரைப் பேராயராகப் பொறுப்பேற்ற ஓர் ஆண்டில், மாண்புமிக்க அருளறங்கள் தக்க வகையில் பெருகியிருப்பது குறித்து நன்றி பாராட்டுகிறோம். ஆலயத் திருப்பணிக்கு ஊக்கமும் ஆக்கமும் தந்தமைக்கு நன்றி செலுத்துகிறோம். எல்லாம் வல்ல இறைவனின் நல்லருளால் தாங்கள் நீடிய ஆயுளும் கூடிய ஆற்றலும் பெற்று அருளாட்சி செலுத்துமாறு விரும்பி வாழ்த்தி, இறையை வழுத்துகின்றோம். கோவில் திருப்பலிபீட அபிசேகப் பெருவிழாச் சடங்குகளை நிறைவேற்றியருளிய தங்களுக்கு எங்கள் உள்ளார்ந்த அன்பு மலர் தூவி மகிழ்கின்றோம்.

பாளையங்கோட்டை,
28—7—1968.

தங்கள் அன்பையும்,
அருளாசீரையும்
நாளும் போற்றும்,
**பங்குக் கத்தோலிக்கர்.**

இனி கடந்த சில ஆண்டுகள் இந்து சமயத் தொடர்புடன் வெளிவந்திருக்கும் இதழ்கள் நூல்கள் பற்றிக் குறிப்பிடுவோம். 'திருக்கோயில்' என்னும் திங்கள் இதழ் 1958 முதல் சிறந்த முறையில் பயனுள்ள ஆராய்ச்சிக் கட்டுரைகளுடன் தல விளக்கக் குறிப்புக் களுடனும் இந்த அற நிறுவனக் குழுவினரால் வெளியிடப்பெற்று வருகிறது. தல புராணங்கள் இதுவரை செய்யுளிலேயே செய்யப்பட்டு வந்தன. ஆனால், இப்போது உரை நடையிலும் இதுபோன்ற நூல்கள் வெளிவரத் தொடங்கிவிட்டன. வைணவத் தலங்களைப் பற்றி உரைநடையில் நூல்கள் வெளிவந்தது, இந்த நூற்றாண்டில்தான். காசி, சிதம்பரம், திருவாரூர் மதுரை ஆகிய தலங்களைப் பற்றித் தருமபுர ஆதீனத்தார் வெளியிட்டுள்ள நூல்களும் தஞ்சை, பழநி

போன்ற ஊர்களிலுள்ள கோயில்களின் வரலாற்றையும் சிறப்பையும் பற்றி ஜே. எம் சோமசுந்தரம் பிள்ளை விரிவாக எழுதியுள்ள நூல்களும் குறிப்பிடத்தக்கவை; அவருடைய நூல்கள் இனிய நடையும், இலக்கிய மேற்கோளும், கல்வெட்டுச் சான்றுகளும் கொண்டவை. கதிர்காமத்தைப் பற்றி முதலியார் குல சபாநாதன் நல்ல தமிழ் நடையில் ஒரு சிறு நூல் யாத்துள்ளார். இராமேசுவர யாத்திரை என்னும் நூல் புலவர் தண்டபாணி தேசிகரால் எழுதப் பெற்றிருக்கிறது. தக்க புலவர்களைக் கொண்டு, இந்து அற நிறுவனக் குழு பல தலங்களுக்கு வழிகாட்டி நூல்களை வெளியிட்டிருக்கிறது.

வள்ளலார் இராமலிங்க அடிகளின் திருவருட்பாப் பாடல்களை, ஆ. பாலகிருஷ்ணப் பிள்ளை அரும்பாடு பட்டு வசனப் பகுதி, கீர்த்தனைப் பகுதி, திருமுகப் பகுதி முதலான 12 பகுதிகளாக அழகுறப் பதிப்பித்திருக்கிறார். ஆராய்ச்சிக் குறிப்புக்களோடும் விரிந்த பாயிரங்களோடும் பல்வகை அநுபந்தங்களோடும் இருப்பது இப்பதிப்பின் சிறப்பு.

தலங்களைப்பற்றிப் புராண அடிப்படையிலேயே நூல்கள் வெளிவந்த காலம் மலையேறிவிட்டது; கலையுணர்வுடனும் சுவைபடவும் தமிழகத்துக் கோயில்களைப் பற்றி 'கலெக்டர்' பாஸ்கரத் தொண்டைமான் வேங்கடம் முதல் குமரிவரை என்ற பெயரில் நான்கு தொகுதிகள் எழுதியுள்ளார்.

தமிழ் வளர்ச்சியில் முன்னோர் பங்கும் முடியுடை மூவேந்தர் பங்கும் நாடு நன்கறிந்தவையே. அதற்குப் பின்னர் செந்தமிழ் வளர்ப்பதையும் தங்களுடைய தலையான கடமையென்று எண்ணித் தமிழ் வளர்ச்சியில் ஆதீனங்கள் ஈடுபட்டன,

தருமபுர ஆதீனத்தை நோக்குவோம். திருமுறை நூல்கள் பலவற்றை வெளியிடும் பணியை இவ் வாதீனத்தார் மேற் கொண்டுள்ளனர். புலவர் தண்டபாணி தேசிகரின் பேருழைப்பின் பயனாகத் தருமபுர ஆதீனத்தார் "திருக்குறள் உரைவளம்" என்னும் சீரிய நூல் ஒன்றைச் சிறந்த முறையில் தமிழ கத்திற்குத் தந்திருக்கின்றனர். பல உரைகளை ஒருங்கே காணும் அரிய வாய்ப்பு என்று இதைக் குறிப்பிடலாம். பெரிய எழுத்துக்கள்; அழகிய அச்சு; நல்ல கட்டடம். வருங்காலத்தில் தமிழ் நூல்கள் எவ்வாறு பதிப்பிக்கப் பட வேண்டுமென்பதற்கு ஒரு முன்மாதிரி. புலவர் கல்லூரி ஒன்றை நிறுவியும், மாநாடுகள் பலவற்றைக் கூட்டியும், தருமபுர ஆதீனத்தார் தமிழுணர்ச்சியை நாட்டில் பரப்பி வருகின்றனர்.

திருவாவடுதுறை ஆதீனத்தார் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்கும், மகாமகோபாத்தியாய சாமிநாத ஐயருக்கும் பிற புலவர்கட்கும் பேரா தரவு காட்டி வந்ததைத் தமிழ் மக்கள் நன்கு அறிவர். கணபதி, முருகன், ஆடவல்லான், பன்னிரு திரு முறைகள், திருவாசகப்பதிப்பு முதலிய சிறந்த நூல்கள் இந்த ஆதீனத்திலிருந்து வெளிவந்திருக்கின்றன.

திருப்பனந்தாள் காசி மடத்தின் தலைவர்கள் தமிழ்க் கல்விக்காகப் பல பரிசுகளை நிறுவியிருக்கின் றனர். தமிழ்ப் புலவர்களின் தொகை மிகுதியாவதற் காகத் தமிழ்க் கல்லூரியையும் நிறுவியுள்ளனர். இவர்கள் செய்துவரும் தமிழ்ப்பணி பொன்னெழுத்துக் களால் பொறிக்கத்தக்கது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்கு ஒரு லட்சம் ரூபாய் வரை கொடுத்துப் பல வகையான பரிசுத் திட்டங்களையும் மலிவான விலைக்கு நூல் வெளியீடு, சைவ சித்தாந்தச் சொற்பொழிவு,

தமிழ் மாணவர்க்கு உதவிச் சம்பளம் வழங்குதல் போன்ற ஏற்பாடுகளையும் செய்துள்ளனர். தமிழ் இலக்கியம், இலக்கணம், இசை என்று இவைகளைக் கற்க முன் வருவோரை ஊக்குவதற்காகப் பரிசுகள் ஏற்படுத்தியுள்ளனர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் வித்துவான் தேர்வில் முதல் தகுதி பெறுபவர்க்கு ஆண்டுதோறும் ஓராயிரம் ரூபாய்ப் பரிசு நிறுவியவர்களும் இவர்களே. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக் கம்பராமாயணப் பதிப்புக்கு நிதி வழங்கியுள்ளனர். இம்மடத்தினர் இந்தி மொழியில் திருக்குறளை மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளனர். கல்கத்தா பல்கலைக் கழகத்தில் தமிழ்ப்பரிசுத் திட்டம் ஏற்படுத்தியிருக்கின்றனர்; வடநாட்டுப் பல்கலைக் கழகங்களிலும் தமிழைப் பரப்பும் முயற்சி பாராட்டத் தக்கது. திருக்குறள் முழுவதையும் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் சலவைக் கல்லில் பொறித்திருக்கும் இவர்களுடைய பணியும் போற்றுதற்குரியது.

வடமொழியோடு தமிழிலும் புலமை பெற்றவரும் சூரியனார்கோயில் ஆதீனத்துத் தலைவராக இருந்தவருமாகிய சிவாக்கிர யோகிகளும் அவர் சீடர்களும் சமய நூல்களை வெளியிட்டும் பரப்பியும் குறிப்பிடத்தக்க பணி புரிந்துள்ளனர். இங்கிருந்த சில நூல்களும் சுவடிகளும் கறையானுக்கும் கால வெள்ளத்துக்கும் இரையாயின.

குன்றக்குடி ஆதீனத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம் ஞானப்பிரகாச முனிவர் செந்தமிழ்ச் சிறுநூல்கள் பலவற்றை இயற்றியுள்ளார். இந்த ஆதீனத்துக்கு உட்பட்ட கோயில்களில் தமிழிலும் அர்ச்சனைகள் செய்யப்படுகின்றன. பாராளு மன்றத்தில் இந்தி, அரசாங்க அலுவல்களிலும் நீதிமன்றங்களிலும் ஆங்கிலம், இசை

நிகழ்ச்சிகளில் தெலுங்கு, கோயில்களில் வடமொழி என்றால் தமிழுணர்ச்சி நிறைந்த இளைஞர்கள் ஆத்திர மடைவது இயல்புதானே?

ஸ்தல புராணங்களை, ஹிந்து, ஜைன, இஸ்லாம், கிறிஸ்தவ சமய நிறுவனங்கள் பல நூல்களாக வெளியிட்டுள்ளன. குரானின் ஒரு பகுதி தமிழ் உரையுடனும் அரபி மூலத்துடன் பெரிய நூலாக வெளியிடப் பெற்றிருக்கிறது. ராஜாஜியின் கீதை மொழி பெயர்ப்பு 'கைவிளக்கு' என்ற தலைப்புடன் வந்துள்ளது.

சென்னை இராமகிருஷ்ண மடம், புதுச்சேரி அரவிந்த ஆசிரமம், சைவ ஆதீனங்கள், சென்னை கிறித்தவ இலக்கியக் கழகம்—இவை பல நூல்கள் வெளிவரக் காரணமாக உள்ளன.

ஆசார்ய ஸ்வாமிகள் உபந்நியாசங்கள் 1957—58 என்ற நூல் படிக்கத் தகுந்தது; இக்காலத்திற்கு ஏற்ற விளக்கங்களை, பழமையின் அடிப்படையில், இந் நூலின்கண் காணலாம்.

இராமகிருஷ்ண மடத்தினர் தமிழில் ஓர் இதழும் பல நூல்களும் வெளியிட்டுள்ளனர். தமிழ்ப் பற்று மிக்க பலர் இந்த மடத்தின் தொடர்பு உள்ளவர் ஆவர். விவேகானந்தர் நூற்றாண்டு விழாவையொட்டி ரா. கணபதி, சுவாமிகளின் விரிவான வரலாற்றைத் தமிழில் தந்திருக்கிறார்.

மா பாரதத்தைப் பற்றியும் இந்தியாவில் நிலவும் பல்வேறு சமயங்களைப் பற்றியும் பலரும் பாராட்டும் ஆதாரமான பெரு நூல்களை அ. லெ. நடராசன் எழுதியுள்ளார்.

இஸ்லாம் மகாவீரர், நபிகள் நாயகம், இயேசுகிறிஸ்து என்பன. இவர் எழுதிய இந் நூல்கள் ஒவ்வொரு

மதத்தாரும் பிற மதங்களை அன்புக் கண்ணோட்டத்துடன் தெரிந்து கொண்டால் உலகில் பூசலுக்கு இடமில்லை என்ற கருத்தில் அமைந்துள்ளன.

தித்திக்கும் திருமறை என்ற நூலை அப்துல் வஹ்ஹாப் உணர்ச்சி ததும்ப எழுதியிருக்கிறார்.

சைவ இலக்கிய வரலாறு என்ற சிறந்த நூலை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் வெளியிட்டுள்ளனர்.

தலங்களைப்பற்றி இலக்கிய நடையில் இ. மு. சுப்பிரமணியப்பிள்ளை, ராயசொ, பாலூர் கண்ணப்ப முதலியார், ம. இராதாகிருஷ்ணப்பிள்ளை முதலிய பலர் எழுதியுள்ளனர். வெள்ளைவாரணரின் பன்னிரு திருமுறைகள் ஆராய்ச்சிக் குறிப்புக்கள் நிறைந்த அரிய படைப்பு.

சென்னை இராமலிங்கர் பணிமன்றம், முத்திங்களிதழ் வெளியிட்டும் கருத்தரங்குகள் நடத்தியும் கிரிதாரி பிரசாத் போன்றோரின் சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்தும் இராமலிங்க அடிகளின் கருத்துக்களைப் பரப்பி வருகிறது. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு என்னும் ஆராய்ச்சி-வரலாற்று நூலை ம.பொ.சி. எழுதியிருக்கிறார்.

அருள், ஆங்கிலத்தில் வெளியிடும் சைவ சித்தாந்தம் என்பவையும் குறிப்பிடத்தக்க இதழ்கள்.

சமய நிலையமாகத் தமிழ் நாட்டில் இயங்குகின்ற அரவிந்த ஆசிரமத்தைப்பற்றியும் இங்குக் குறிப்பிட வேண்டும். இந்த ஆசிரமத்தில் தமிழுக்கு உரிய இடம் இல்லை. இதனால் தமிழுக்குத் தீங்கு நேரிடுமென்று அஞ்சவேண்டுவதில்லை.

வ. வே. சு. ஐயர் வாழ்ந்தது புதுச்சேரியில்; பாரதி பாடியது புதுச்சேரியில். பாரதிதாசன் இருந்தது புதுச்சேரியில். புதுச்சேரி வானொலி நிலையமும் தேசிகப் பிள்ளை, பட்டாபிராமன் செட்டியார், சுந்தர சண்முகனார், கவிஞர் வாணிதாசன் முதலிய பலரும் தமிழ்ப் பணி புரிகின்றனர்.

எனவே, ஆயிரம் அரவிந்த ஆசிரமங்கள் தோன்றினாலும் புதுச்சேரியில் தமிழுணர்ச்சி குன்றாது. அரவிந்த ஆசிரமத்தைப்பற்றி நாம் குறைகூறினாலும், வங்க மொழிமீது நாம் வசைபாடவில்லை! பிரெஞ்சு மொழியைப் பின்னணியில் வைக்க வேண்டுமென்று நாம் பிதற்றவில்லை. இவைஉலகின் சிறந்தமொழிகளுள் சில. இவற்றைப் படித்துத் தமிழர் பயன் பெறலாம். இம் மொழிகள் அடைந்திருக்கும் உயர்ந்தநிலைக்கு எடுத்துக் காட்டாக; "தமிழே! நீயும் வளர்க" என்று வாழ்த்துவோம். இவ்விரு மொழிகளும் புதுச்சேரியில் நின்று நிலவுக! ஆம். வங்க மொழி வாழ்க. பிரெஞ்சு மொழி வாழ்க. வங்கமும் பிரெஞ்சும் வாழ்ந்தால் போதுமா? தமிழும் வாழ வேண்டாமா? "தானும் வாழவேண்டும், பிறரையும் வாழவிடவேண்டும்" என்பதுதான் தமிழனின் பண்பாடு.

# 14. உரைநடை நூல்கள்

இந்த நூற்றாண்டில் உரைநடை நூல்கள் மிகுதியாகத் தமிழில் வெளியாகியுள்ளன. பல்வேறு பிரிவுகளிலும் உரைநடை எந்த அளவு வளர்ச்சிபெற்றிருக்கிறதென்பதை இக் கட்டுரையில் பார்ப்போம்.

**சிறுகதை**

எல்லா நாடுகளிலுமே வாழையடி வாழையாகப் பாட்டிக் கதைகள் வழங்கிவந்துள்ளன எனினும், "சிறுகதை" தமிழுக்கு ஒரு புதுத் துறையேயாகும்; விரிந்து செல்லும் நாவல்களைப் படிப்பதற்கு மக்களுக்கு நேரம் கிடைப்பது அரிதாக இருப்பதால், இந்த நூற்றாண்டில் சிறுகதை இலக்கியம் பெருவளர்ச்சி அடைந்திருக்கிறது. நல்ல கதைகளுக்கு நம் நாட்டு வார இதழ்கள் பரிசு கொடுத்து வருதல், கதைகள் பெருகியதற்கு ஒரு காரணமாகும். சிறுகதை வரைவதில் புகழ்பெற்ற ஆசிரியர்களின் கதைகள் தொகுப்பு நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன. ராஜாஜி குட்டிக் கதைகள், புதுமைப்பித்தன் கதைகள், ரகுநாதன் கதைகள் என்பனவற்றைச் சான்றாகக் குறிப்பிடலாம்.

தமிழ்நாட்டில் சிறுகதை இலக்கியம் தோன்ற வழி காட்டியவர், பல்லோர் பாராட்டுக்குரிய கம்ப ராமாயண ரசனை என்னும் அரிய ஆங்கில நூலை வெளியிட்ட அறிஞர் வ. வே. சு. வரகனேரி வேங்கடேச

சுப்பிரமணிய ஐயர் (1881-1925) ஆவார். கமலவிஜயம், குளத்தங்கரை, அரசமரம் முதலிய கதைகள் அவர் எழுதியவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

இன்பச் சுவையைக் கூறும் கதைகளே மிகுதியாக எழுதப்படுகின்றன. இவற்றிற்கு மாருக ஆழமும் அமைதியும் நிறைந்த கதைகள் பலவும் உள்ளன. குடியின் கேடு, தீண்டாமை விலக்கு ஆகியவற்றை அடிப் படையாகக் கொண்டு ராஜாஜி எழுதியுள்ளார்.

கி. வா. ஜகந்நாதன், த. நா. குமாரசாமி ஆகியோருடைய கதைகள் இலக்கியப் பண்புடன் ஒளிர் கின்றன. கல்கி, நாடோடி, மகரம் நகைச்சுவையுடன் கதைகள் எழுதியுள்ளார்.

'மொப்பசான்' (Mapaussant) என்னும் பிரெஞ்சு அறிஞர் எழுதிய கதைகளைப் போன்று தமிழிலும் எழுத இயலும் என்பதைச் செயலிற் காட்டியவர். 'புதுமைப் பித்தனே'யாவார். இவர் எழுதியுள்ள கதைகள் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவன. இவர் கதைகளின் பேச்சு, போக்கு எல்லாம் நாள் தோறும் நிகழ்வனவாகவே இருக்கும். இந்த முறை யைப் பின்பற்றி இவர் பெருவெற்றி அடைந்தார். இவரைப்போன்று லா. ச. இராமாமிர்தமும் சிதம்பர ரகுநாதனும் எழுதி வருகின்றனர். 'சுகி'யின் நகைச் சுவை நிறைந்த கதைகள் 'பூச்சரம்' என்ற தொகுப்பு நூலாக வெளிவந்துள்ளன. கதைப் போக்கையும் நகைச்சுவையுமையும் இவர் தமது கட்டுரைகளிலும் வானொலி நாடகங்களிலும்கூட வெற்றியாகக் கையாண் டிருக்கிருர். இவரது நாவல்களில், விதி வழியே, ஆடை

வலை, இன்ப வேலி, துணைப் பறவை என்பவை குறிப்பிடத்தக்கவை.

கதை எழுதுபவர் பட்டியலைக் கொடுப்பதென்றால், பெரியதோர் அகராதியை யான் வெளியிட நேரிடலாம். எனவே, சில பெயர்களோடு நிறுத்திக் கொள்ளலாம். விந்தன், 'சசி', சோமு, தி. ஜ. ர., பி. எஸ். ராமையா, தேவன், குமுதினி, சாவி, கு. ப. இராஜ கோபாலன், குகப்ரியை, ரா. ஆறுமுகம் இலங்கை எழுத்தாளர்களான புதுமை யோலன், சொக்கன், ஈழத்துச் சோமு, கணேசலிங்கன், அருள் செல்வநாயகம் 'இலங்கையர்கோன்'.

பெரும்பாலான கதைகள் பொழுதுபோக்குக்கே பயன்படுவனவாகும். அவை என்றும் நிலைத்திருக்கத் தக்க முறையில் மக்கள் உள்ளங்களைக் கவரும் பொருட் சிறப்புடையன அல்ல என்று கூறுதல் தவறாகாது. ரயிலில் பிரயாணம் செய்யும்போது பொதுமக்களும், வீட்டுக்கு விலக்கான போது பெண்களும் பொழுது போக்குக்காகப் படிப்பதற்கும்தான் அவை பயன் படுகின்றன. பொழுது போக்குக்காக எழுதப்படும் சிறுகதை வளர்ச்சியால் மக்கள் ஏனைய துறைகளில் தக்க கவனம் செலுத்தாது விட்டனர்; எழுத்தாளரும் வேறு துறைகளில் மொழியை வளப்படுத்த முன் வரவில்லை,

சங்க இலக்கிய நூல்களுக்குப் பதவுரை, பொழிப்புரை, விசேடவுரை ஆகியவற்றை எழுதி, புலமையை நாடிச் செல்வோருக்குப் பயன்படும் வண்ணம் அவற்றை வெளியிடும் முறை சில தலைமுறைகளாக இருந்து வந்திருக்கிறது. அவ்வாறின்றி அந்த இலக்கியங்களில்

கண்ட செய்திகள் ஒன்றிரண்டை அடிப்படையாக வைத்துக் கதைபோல எழுதுகின்ற புதிய முறையைக் கையாண்டு கி. வா. ஜ.வும், மு. வ.வும் வெற்றி கண்டுள்ளனர். தமிழ் மொழியின் இன்றைய நிலையை யுணர்ந்து, நல்ல கதைகளை ஆக்க மேலும் பல அறிஞர்கள் முற்பட வேண்டும்,

வங்கமொழியில் ரவீந்திரநாத் தாகூர் கதைகளை எழுதினார். தனது பேராற்றலாலும், உலகியலறிவாலும், பூந்தோட்டம் போன்ற கதைகளை வழங்கினார். மக்களுடைய மன நிலையைத் தம் திறமையால் அறிந்து இக் கதைகளில் தாகூர் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார். தமிழ் அறிஞர்களும் இவ்வாறு கதைகள் எழுதத் தொடங்கினால், அவற்றைப் படிக்கும் பொது மக்களும் அறிவு பெறுவர்; நடையும் நன்முறையில் வளர்ச்சி பெறும்.

எப்போதுமே கதைகளுக்கு மிகுந்த ஆதரவு இருக்கிறது. குழந்தைகள் மட்டுமல்ல. மற்றவர்களும் "கதை" வேண்டுமென்று கேட்கிறார்கள். திரைப் படம் எடுக்கும் முதலாளிகள் நல்ல கதைகளுக்காக அலைகிறார்கள். வானொலி நிலையத்தார் கதைகளைத் தேடிப் பிடிக்கிறார்கள். வார, மாத இதழ் ஆசிரியர்களும் 'கதைகளை எழுதி அனுப்புங்கள்' என்று ஓயாமல் எழுத்தாளர்களை வேண்டுகின்றனர். ஆஸ்திரியாவில் உள்ள பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் கதை கேட்டால் ஒரு குறிப்பிட்ட இலக்கத்தை டெலிபோனில் கூப்பிடுவார்கள். அங்கிருந்து ஒருவர் குழந்தைகளுக் கதைக்கு சொல்லுவாராம். ஆகையால் கதைகளில் புதிய பொருள் இல்லாவிட்டாலும் பழைய கருத்துக்களைத் தெரிவிக்க எழுத்தாளர் கையாளும் போக்கில் ஒரு புதுமை இருக்கவேண்டும்,

**நாவல்**

நாவல்கள் எல்லாக்காலத்திலும், எல்லா நாடுகளிலும் மக்களுடைய உள்ளத்தைக் கவர்ந்திருக்கின்றன. அவற்றின் விற்பனையும் மிகுதி. இல்லாவிட்டால் பின் வருவது போன்ற செய்திகள் வழங்குமா?

> விக்டர் ஹ்யூகோ என்ற பிரஞ்சு நாவலாசிரியர் ஒரு புதிய நாவல் எழுதினார். அது வெளியானதும் அது எப்படி விற்பனையாகிறது என்பதை அறிய மிக்க ஆவலாக இருந்தார். ஆகையால், அந்த நாவலை வெளியிட்ட பிரசுராலயத்தாருக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் வேறு ஒன்றும் எழுதாமல் " ? " என்று ஒரு கேள்விக்குறியைப் போட்டு அனுப்பியிருந்தார். "விற்பனை எப்படி" என்று பொருள். பிரசுர கர்த்தர்கள், அதைப் பார்த்து விட்டு, பதிலுக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அதில் " ! " என்பதாக ஓர் ஆச்சரியக்குறி மாத்திரம் இருந்தது. "ஆச்சரியமான விற்பனை" என்பது கருத்து.

நாவலென்னும் புதுவகை இலக்கியத்தைத் தமிழுக்குத் தந்தவர் மயூரம் வேதநாயகம் பிள்ளை, அவர் எழுதிய பிரதாப முதலியார் சரித்திரத்தைப்பற்றி இந்நூலில் முன்னரே கூறியுள்ளோம்.

சாமுவேல் ஜான்சனின் முறையையும், கோல்ட்ஸ்மித்தின் நடையையும் பின்பற்றி இந்நூலை இவர் வகுத்தனர் என்பர். காலத்தாலும் தன்மையாலும் முதன்மையும் பெருமையும் படைத்த இந்நூல் ஒரு சிலரால் தங்களுடைய விருப்பு வெறுப்புக்கேற்ப மாறுபட்ட முறையில் வெளியிடப்பட்டிருப்பது வருந்தத்தக்கது.

நடையை அந்தந்த நிலையிலேயே வைத்துப் போற்றிப் பாதுகாப்பது இலக்கிய ஆராய்ச்சி நூல்களை

எழுதுவார்க்குப் பயன்படும். இந்நூலாசிரியரின் இடைவிடாத கிளர்ச்சியால் நலம் விளைந்துளது. வேதநாயகருடைய நூலினை ஆக்கியோர் பதிப்பித்த முதற்பதிப்பில் சிறிதும் வழுவாது பதிப்பித்து அருமையாக வெளியிட்டிருக்கும் தூத்துக்குடி தமிழ் இலக்கியக் கழகத்தின் செயல் பாராட்டுக்குரியது. இந்நூல் தமிழ் மாணவர் ஒவ்வொருவரும் இன்றியமையாது படிக்க வேண்டிய நூலாகும். "விஸ்தாரப் பிரசங்கம், அன்னவஸ்திர பூஷணாதி விஷயங்கள், அதிரூப லாவண்ணியம், நிரக்ஷரகுக்ஷிகளாய்" போன்ற பிற நூல்களில் காண்டற்கரிய சொற்றொடர்களை இந்நூலில் பல இடங்களில் காணலாம். "பிள்ளை பெற்றவளைப் பார்த்து மலடி மூச்சுவிட்டது போல்", "அவப்பொழுதிலும் தவப்பொழுது", "அரைப்படிப்பைக் கொண்டு அம்பலமேறுவதுபோல்" போன்ற பழமொழிகளும் இதில் மிளிர்கின்றன.

வேதநாயகம் பிள்ளைக்குப் பிறகு நாவல் எழுதியவர்களுள் (கமலாம்பாள் சரித்திரம் இயற்றிய) ராஜம் ஐயரும், (மோகனாங்கி இயற்றிய) திருக்கோணமலை தி. த. சரவண முத்துப்பிள்ளையும், (பத்மாவதி சரித்திரம்) எழுதிய மாதவையரும், (யாழ்ப்பாணத்து வீரசிங்கன்) கதை எழுதிய சீ. வை. சின்னப்பா பிள்ளையும் குறிப்பிடத் தக்கவர்கள். அல்லி அரசாணி மாலை சென்ற நூற்றாண்டில் பெண்களை இன்புறுத்திற்று.

வடுவூர் துரைசாமி ஐயங்கார், ஆரணி குப்புசாமி முதலியார், பொன்னுசாமிப் பிள்ளை, கோதைநாயகி அம்மையார், ரங்கராஜு, அகிலன், பி. எம். கண்ணன், லக்ஷ்மி ஆகியோருடைய நாவல்களைத் தமிழ் மக்கள் விரும்பிப் படித்து வருகின்றனர்.

பொன்னுசாமிப்பிள்ளை வரைந்த ஞானாம்பிகை படிப்போர்க்கு நல்லொழுக்கத்தைக் கற்பிப்பது.

கல்கி எழுதியுள்ள சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன் போன்ற நாவல்கள், மிக எளிய நடையில் எழுதப்பட்டுள்ளன. அவை மக்கள் பொழுது போக்குக்கே பெரிதும் பயன்படுவன. அத்தியாயங்களைச் சுவையான நிகழ்ச்சிகளுடன், நல்ல கட்டங்களில் முடித்து. படிப்பவரின் ஆர்வத்தைப் பன்மடங்காக்கும் ஆற்றல் கல்கிக்கு உண்டு; சில சிக்கல்களைத் தம் கதைகளில் புகுத்திப் பிறகு அவற்றை விடுவிப்பதும் அவர் கையாளும் முறைகளுள் ஒன்று.

த. நா. குமாரசாமி சேனுபதி, சாண்டில்யன், ஜானகிராமன், ஜெகசிற்பியன், வேம்பு ஆகியோருடைய நாவல்களும் ஆயிரக்கணக்கான தமிழ் மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டிருக்கின்றன.

நாவல்களிலும் நல்ல நடையை ஆங்கில ஆசிரியர்கள் கையாண்டு வருகின்றனர். ஆனால் தமிழில் நாவல் எழுதுபவர் பலர் இச்சீரிய முறையை ஏற்றுக்கொள்வதாகத் தெரியவில்லை. 'வெறுமென', 'கொண்டா', என்பவை போன்ற கொச்சைச் சொற்கள் தமிழ் நாவல்கள் பலவற்றில் காட்சி தருகின்றன. 'தகத்துள்ள', 'ஆகர்ஷித்' என்பன போன்ற பிறமொழிச் சொற்களும் சில நாவல்களில் மிகுதியாயுள்ளன.

தமிழில் வெளிவந்துள்ள நாவல்களுள் அரபுக் கதைகளை யொட்டிச் சிலவும் ஆங்கிலத்திலுள்ள துப்பறியும் நாவல்களை யொட்டிச் சிலவும் எழுதப் பெற்றிருக்கின்றன. தமிழில் எழுதப்பெற்ற நாவல்களைவிட வங்காளி, மராத்தி முதலியவற்றிலிருந்து மொழி பெயர்க்கப் பெற்ற நாவல்களின் எண்ணிக்கையே மிகுதி.

மராத்தி நாவலாசிரியரான காண்டேகர் தமிழ் அன்பர்களின் உள்ளங்களில் நிலையான இடம் பெற்று விளங்குகிறார்; விறுவிறுப்பான நடை, உயர்ந்த சிந்தனை, தெளிந்த அறிவு, காலத்துக்கேற்ற கருத்து இவையே அவரது வெற்றிக்குக் காரணம் எனலாம். அவருடைய முறையை இப்போது தமிழ் நாவலாசிரியர் பலர் பின்பற்றி வருகின்றனர். அதாவது, ஆக்கியோன் தானே கதையைச் சொல்லிக்கொண்டு செல்லாமல், பாத்திரங்கள் வாயிலாக நமக்குக் கதையைத் தெரிவிக்கிறார். நாவலில் வரும் பாத்திரங்கள் படிப்பவருடன் நேருக்கு நேர் பேசுவதுபோல் காட்சி தர இந்த முறை பயன்படுகிறது.

தலைசிறந்த எழுத்தாளருள் ஒருவரான அகிலன் நூற்றுக்கு மேற்பட்ட சிறு கதைகளையும் பல நாவல்களையும் எழுதியிருக்கிறார், அமராவதிக் கரையில், புயலுக்குப் பின், ஆண் பெண் என்ற கதைகளும் **சினேகிதி, நெஞ்சின் அலைகள், பெண், பாவை விளக்கு** என்னும் நாவல்களும் சிறந்தவை. அன்றாட நிகழ்ச்சிகளை ஆதாரமாகக் கொண்டு சமூகத்திலுள்ள குறைபாடுகளைக் கண்டிப்பது இவர் இயல்பு. "சிநேகிதி"யில் வஞ்சம் நிறைந்த உலகில் நேர்மைக்கு எடுத்துக்காட்டாக ஒரு நாராயணசாமியையும், அவனுடைய அன்பின் அழுத்தப் பிடியில் சிக்கித் திணறும் ஒரு லலிதாவையும் படம் பிடித்துக் காட்டுகிறார்.

தமிழில் முதல் நூலாக எழுதப்பெற்ற நாவல்களுள் இலக்கிய நடையில் கு ராஜவேலுவும் டாக்டர் மு. வ. வும், பல நூல்களை எழுதியிருக்கின்றனர். இவர்களுடைய கதைகளின் போக்கு ஆற்றொழுக்குப் போன்றிருக்கிறது. சங்க இலக்கியங்களை எளிய நடையில் எழுதி வழிகாட்டிய டாக்டர் மு. வ. இயற்றி

யுள்ள 'கள்ளோ? காவியமோ?' தமிழ் மொழியின் சிறப்பை விளக்குவது: தமிழர்க்குப் பெருமை தருவது; கருத்து வளம் நிறைந்தது. இதே ஆசிரியர் இயற்றிய 'செந்தாமரையும் கலைநயம் படைத்த ஒரு நெடுங் கதை. இவரது நடை பெரும்பாலும் தனித்தமிழில், எளிய முறையில் இயங்குவது. இவருடைய 'அந்த நாள்' இரண்டாம் உலகப்போர் நிகழ்ச்சிகளைப் பின் னணியாக வைத்து எழுதப்பெற்றது; போரைப் பற்றி அறிஞர் கருத்துக்களை அழகாகச் சுவைபடக் கூறுவது.

கேலியும் கிண்டலுமாக எழுதிப் புகழ்பெற்றிப் பவர் விந்தன். வாழும் மக்களின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டும் இயல்பு இவருக்குக் கைவந்த கலையாக உள்ளது.

சுந்தர ராமசாமி, நாஞ்சில் நாட்டுத் தமிழில் மலையாளச் சொற்களைக் கலந்தும் திருவிதாங்கூர் ஆட் சியைப் பற்றிய சுவையான நிகழ்ச்சிகளைப் பின்னணி யாகப் புனைந்தும் எழுதிவருகிறார்.

ஜானகிராமன் தஞ்சாவூர் மண்ணையே தம் நடையில் பெயர்த்து வைக்கிறார். இவ்வாறே வி. எஸ். சுப்பையாவின் சுவைமிக்க படைப்புக்களில் திருநெல் வேலிப் பேச்சுத் தமிழும் அரசாங்க அலுவல்களில் பெற்ற அனுபவங்களும் இடம் பெறுகின்றன.

சிறு சிறு சொற்றொடர்களை ஆண்டும் வாழ்க்கைக் கட்டங்களைச் சுவையுடன் எழுதியும் வருவது ஒரு கலை. முத்துக்காளத்தி, காளத்திநாதன். சிவ அரசன் என்ற பல பெயர்களில் ஓர் எழுத்தாளரே எழுதிவருவது போலத் தோன்றுகிறது. எழுத்துத் துறையில் பெரு வெற்றி பெற்றுள்ள இவர் ஓர் அரசாங்க அலுவலராக் இருக்கக்கூடும்.

ஒவ்வொரு மனிதனும் இரணியனாக மாறி வருகிறான் என்ற கருத்தில் இடிந்த கோபுரம் என்ற நாவலை கு. இராஜவேலு எழுதியுள்ளார்.

இலக்கிய மணமும் வரலாற்றுக் கருத்தும் நிறைந்த நாவல்கள் பலவற்றை தீபம் ஆசிரியர் நா. பார்த்தசாரதி படைத்திருக்கிறார்.

புகழ்பெற்ற சிறுகதை எழுத்தாளர் செ. கணேசலிங்கம், ஈழத்து மலைநாட்டுத் தோட்டத் தொழிலாளர் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டு சாயம் என்ற கதை எழுதியுள்ளார். ரஷ்ய மொழியில் பெயர்க்கப் பெற்றுள்ள சிறுகதைத் தொகுப்பு, இப் பெயரில் அமைந்து இந்தக் கதையுடன் தொடங்குகிறது.

இவருடைய நீண்ட பயணம் இலங்கையில் சாகித்திய அகடாமிப் பரிசு பெற்றது; யாழ்ப்பாணத்துத் தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டம் பற்றியது. கொழும்பு மாநகரிலுள்ள நடுத்தர வகுப்பின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டும் நாவல் ஒன்றையும் இவர் எழுதியுள்ளார். இதன் பெயர் சடங்கு. சடங்கு என்ற சொல்லுக்கு யாழ்ப்பாணத் தமிழில் திருமணம் என்று பொருள்.

தமிழ் நாவல் இலக்கியம் என்ற பெயரில் திறனாய்வு நூலும் ஈழநாட்டிலிருந்து வெளி வந்திருக்கிறது. டொக்டர் கைலாசபதி எழுதியுள்ள இந்நூல் பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது. தமிழின் வீரக் கவிதை என்ற இவரது நூல் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழக அச்சகத்தாரால் 1968-ல் அச்சிடப் பெற்றிருக்கிறது.

'ஜெகசிற்பியன்' எழுதிய திருச்சிற்றம்பலம், தமிழ் இளைஞர் உள்ளங்களைக் கவர்ந்த நூல்களுள் ஒன்று.

ஜெகசிற்பியன் எழுதிய 'நந்திவர்மன் காதலி' பல்லவ அரசன் நந்திவர்மன் என்பவனைப்பற்றி நந்திக் கலம்பகம் என்ற நூலினை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட நாவல். த. நா. குமாரசாமியின் 'அன்பின் எல்லை,' அரு. இராமநாதனது 'நாயனம் சௌந்திர வடிவு,' மாயாவியின் 'வாடா விளக்கு', மு. வரதராசனாரின் 'அகல் விளக்கு,' சாண்டில்யனின் 'ஜலமோஹினி,' பி. எம். கண்ணனின் 'அன்பே லட்சியம்,' ஜெயகாந்தனின் அரிய படைப்பான 'ஒருபிடி சோறு,' எல்லார்வியின் 'பூங்குளம் பண்ணையார்' முதலியவை படிக்கத்தகுந்தவை. தமிலனின் 'கிராம மோஹினி' படித்தவர்கள் கிராமத்திற்குச் சென்று வாழ நேர்ந்தால் எவ்வளவு பிரச்னைகளை அவர்கள் சமாளிக்க வேண்டியிருக்கிறது என்பதை விளக்கும் சுவையான நாவல். மலிவுப்பதிப்பு வரிசையில் பழைய நாவல்கள் சில வெளியாகியுள்ளன. ஆனந்தவிகடன் மாணவர் திட்டத்தின்படி வெளியிடப்படும் சிறு கதைகள் பல கருத்துக்களைக் கொண்டனவாயும் நல்ல நடையில் எழுதப்பட்டனவாகவும் உள்ளன.

### வாழ்க்கை வரலாறு

நாவல், சிறுகதைகளுக்கு அடுத்தபடி வாழ்க்கை வரலாற்று நூல்களும் தமிழில் பெருகி இருக்கின்றன, இதுவரை தமிழில் இயற்றப்பெற்ற நூல்கள் புலவர், அரசர், சமயத் தலைவர், பெருமக்கள். கலைஞர், போர் வீரர் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகள் ஆகும். இவை தமிழ் உரை நடையை ஓரளவு வளம்பெறச் செய்திருக்கின்றன.

வ. ரா. இயற்றியுள்ள **மகாகவி பாரதி** என்னும் நூல், கவியரசர் சுப்பிரமணிய பாரதியாருடைய வாழ்க்கை

வரலாறு; வ. ரா. வின் எழுத்துத் திறமை அனைத்தையும் இதில் நன்றாகக் காணலாம் டாக்டர் சாமிநாத அய்யர் இயற்றிய "மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் சரித்திரம்" எளிய நடையில் எழுதப்பெற்ற விரிவான வாழ்க்கை வரலாறு. உலகியலை விளக்கும் பல அரிய நூல்களைத் தனித்தமிழில் எழுதிய ('பஞ்சாமிர்தம், ஆசிரியர்) மாதவையா, சித்தார்த்தர் என்னும் புத்தர் வரலாற்றை எழுதியுள்ளார். 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்' என்ற நூலை, திரு. வி. க. இயற்றி யுள்ளார். வெ. சாமிநாத சர்மா 'கார்ல் மார்க்ஸ்' பற்றி ஒரு நூலை ஆக்கியுள்ளார். காந்தி, தாகூர், பெர்னாட்ஷா வரலாறுகளை டாக்டர் மு. வ. எழுதி யிருக்கிறார். டாக்டர் மா. இராசமாணிக்கம் மிகப் பல நூல்களை எழுதியிருக்கிறார்; அவற்றுள் சிறப்பாக எண்ணத்தக்கவை முசோலினி, தென்னாட்டுப் பெரு மக்கள், இந்திய அறிஞர் இருவர் முதலியவை. இவை நல்ல தமிழில் கட்டுரையாக்கத்திற்கென்றே எழுதப் பெற்றுள்ளன.

இஸ்லாமிய திலகங்கள் என்னும் சிறந்த நூலில் அப்துற் றஹீம், இஸ்லாமிய அறிஞர் பதின்மரின் வரலாறுகளைத் தருகிறார். "மாமன் வீட்டில் மாடுகள் மேய்த்து உண்டிக்காக அண்டி வாழ்ந்த" துருக்கியை வாழவைத்த கமால் ஆத்தாதுர்க், "கட்டிட நிர்மாணக் கலை பயின்று, சுதந்திரமாளிகையைக் கவின்பெற ஆக்க ஈரேழாண்டுகள் சிறையிலே வெள்ளையரை எதிர்த்து உழன்று, இன்று உலகிலேயே இரண்டாவது பெரிய முஸ்லிம் நாடான இந்தோனேசியாவின் முதல் தலைவராக இருக்கும் சுகர்ணோ" ஆகியோர் வரலாறு களும் இந்நூலில் உள்ளன; இது சொல்லோட்டம் நிறைந்தது.

அணித்தே உயிர்நீத்த பெருமக்களைப்பற்றி அவர்களோடு நெருங்கிப் பழகும் வாய்ப்புப் பெற்றவர்கள் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை எழுதி வருவது நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. "நான் கண்ட மகாத்மா" என்னும் நூலில் தி. சு. அவிநாசிலிங்கம் அவர்கள் தமிழ்நாட்டுப் பின்னணியோடு தாம் அநுபவத்தில் கண்ட செய்திகளையும், இளைஞர்க்குப் பயன்படும் சிறுசிறு நிகழ்ச்சிகளையும் தந்திருக்கிறார்.

இத்தகைய மற்றொன்று புதுமைப்பித்தனின் வாழ்க்கை வரலாறு. தம் நண்பரைப்பற்றிச் சிதம்பர ரகுநாதன் எழுதுகிறார்:

> "புதுமைப்பித்தன் வெடிக்க வெடிக்கச் சிரிப்பார். அவரது சிரிப்பு வெறும் மகிழ்ச்சியின் அறிகுறியாக மட்டும் விளங்குவதில்லை. சமயங்களில் தம்முடன் பேசிக் கொண்டிருக்கும் எதிர் நபரின் அறிவை அளந்து பார்க்கும் அளவுகோலாகவும், எதிரி விடுத்த கேள்விக்கு என்ன பதில் அளிப்பது என்பதை, அடுத்துச் சிந்திக்கும் முயற்சியை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் மறைக்கும் திரையாகவும் பயன்படும்............புதுமைப்பித்தனுக்குச் சாப்பாட்டைவிட, பேச்சில்தான் பிரியம் அதிகம்: அதைவிட வெற்றிலை, காப்பி, பேச்சுத் துணைக்கு ஆள் — இத்தனையும் இருந்துவிட்டால், ...... ..............அவர் திருநெல்வேலித் தமிழிலேயே திருநெல்வேலிப் பண்போடு பேசுவார். 'ராசா'; 'அவுஹ', 'வந்தாஹ' 'மேசை'—இது போன்ற திருநெல்வேலி உச்சரிப்பே அவரது பேச்சில் ஒலிக்கும்."

மா. சு. சம்பந்தம் எழுதியிருக்கும் '**திருச்சி விசுவநாதம்**' என்ற வாழ்க்கை வரலாறு சுவைமிக்க சிறு

சிறு குறிப்புக்கள் பலவற்றைச் சேகரித்துத் தொகுத்த பெரியதொரு நூலாகும்.

வ. உ. சி., கட்டபொம்மன் வரலாறுகளை எழுதி அவர்கள் பெருமையைத் தெரியும்படி செய்தவர் ம. பொ. சிவஞான கிராமணியார் ஆவார். கட்டப் பொம்மன் வரலாற்றில் ஓர் இடத்தில், "ஊமைத் துரையின் வாய் பேசவில்லை; வாள் பேசியது" என்று ம. பொ. சி. எழுதியிருக்கிறார். இந்த வரிகள்,

"வாயினாற் பேசலல்லால்
வாளினாற் பேசலுற்றேன்"

என்று சீவகசிந்தாமணியில் நாமகளிலம்பகத்தில் வரும் வரிகளுடன் ஒப்பிடத்தக்கன. இத்தகைய அரிய கருத்துக்களைப் பெருங்காப்பியங்கள் வாயிலாக அறியக் கூடிய தமிழர் விரல்விட்டு எண்ணத்தக்க ஒரு சிலரே. ஆகையால் பல்லாயிர மக்களுக்கு இலக்கிய ஆர்வமும் மொழிப்பற்றும் ஏற்படும்படி செய்யும் ம. பொ. சி.க்குத் தமிழகம் நன்றிசெலுத்தக்கடமைப்பட்டிருக்கிறது. 'கப்பலோட்டிய தமிழன்,' 'வீரபாண்டிய கட்டப் பொம்மன்' என்னும் இவரது இரு நூல்களும் ஏனைய மொழிகளிலும் வெளிவர வேண்டும். இவருடைய நூல்களுள் 'வானொலியில் ம. பொ. சி.' 'தமிழன் குரல்,' 'சுதந்திரப் போரில் தமிழகம்' என்பவையும் குறிப்பிடத்தக்கவை. அரசியல் மாநாடு நடத்துவதற்கு முன்னதாக இலக்கிய மாநாடு ஒன்று கூட்டுவது என்ற வழக்கத்தைத் தமிழகத்தில் ஏற்படுத்திய சிறப்பும் ம. பொ. சி.க்கு உண்டு. 'தமிழ் முரசு,' 'செங்கோல்' என்னும் இதழ்களில் 'ஞானம்' என்ற புனைப் பெயரில் ம. பொ. சி. இலக்கியக் கட்டுரைகளையும், சொல்லாராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதி வருகிறார்.

'மருதிருவர்' என்னும் அரிய ஆராய்ச்சி நூலில் பெரிய மருது, சின்ன மருது ஆகியோரின் வாழ்க்கைச் சிறப்புகளைத் தக்க சான்றுகளோடு வரலாற்றுச் செல்வர் ந. சஞ்சீவி, வீரம் செறிந்த நடையில் தந்திருக்கிறார்.

தமிழ்ப் புலவர் பலருடைய விரிவான வரலாறுகளை அனவரத விநாயகம் பிள்ளையும் (இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரையினரான) சோமசுந்தர தேசிகரும் எழுதியுள்ளனர். இசைப் புலவர் பலருடைய வாழ்க்கை வரலாறுகளும் வெளிவந்துள்ளன. சை. சி. நூற் பதிப்புக் கழகத்தார் தமிழறிஞர் வரலாறுகளை வெளியிட்டுள்ளனர்.

இறுதியாக, வாழ்க்கை வரலாறுகளிலுள்ள ஒரு குறைபாட்டைச் சுட்டிக் காட்டுவோம். பெரும்பாலும், வாழ்க்கை வரலாறுகள் அனைத்தும் ஒரே உயர்வு நவிற்சியாக—வெறும் பாராட்டாக—அமைந்துள்ளன. எந்தப் பெரியவரைப் பற்றியும் கருத்து வேற்றுமைக்கு இடமுண்டு. ஆகையால் வாழ்க்கை வரலாறுகளை எழுதுபவர்கள் தாம் சிறப்பிக்க எடுத்துக்கொள்ளும் அறிஞரின் குறைபாடுகள் இரண்டொன்றைச் சுட்டிக் காட்டுவது நலம். கத்தோலிக்கர்களுக்கு மதத் தலைவராக விளங்குபவர் போப். அவர் பல ஆண்டுகளுக்கு ஒரு முறை பெரிய பாதிரிமார்களின் குழுவைக் கூட்டுவர். இக்குழுவுக்கு (Synod of Cardinals) என்று பெயர். இக்கூட்டத்தில் இறந்துபோன பாதிரிமார்கள், ஏனைய அறிஞர்கள் ஆகியோருள் தலைசிறந்தவர்க்கு 'அடிகள்' (Saint) என்று சிறப்புச் செய்வது பற்றி விவாதம் நடைபெறும். இவ்வைபவத்திற்கு அர்ச்சய சிஷ்யப் பட்டம் கொடுத்தல் (Canonization) என்றும், (Beatification Ceremony) என்றும் சொல்லுவ

துண்டு. உரிய சிறப்புக்கு, இறந்துபோன பாதிரி அல்லது மதகுரு ஆகியோரின் தகுதி, தகுதியின்மை இரண்டையும் ஆணிவேறு, அக்கு வேறாக அலசி விவாதிப்பது, இன்னும் வாடிகன் அரசில் வழக்கமாக உள்ளது. உரிய பட்டத்திற்கு உழைப்பவர்க்கு (Promoters of the cause) என்றும், எதிர்த்து வாதாடுபவர்க்கு (Devil's advocate) என்றும் பெயர்கள் உண்டு. வாழ்க்கை வரலாறுகளிலும் இத்தகைய நடுநிலை ஆராய்ச்சி வேண்டும். 'அவர்கள் பெருமையைக் குறைக்கவும் வேண்டாம். உண்மையை மறைக்கவும் வேண்டாம்' என்பதே நம் கருத்து.

வாழ்க்கை வரலாறு எழுத விரும்புபவர்க்குப் பயன்படும் குறிப்பு ஒன்றையும் ஈண்டுத் தரலாம். இந்நூல்களில் மிகுதியான செய்திகள் இருக்கலாம்: அவை சுவைபடக் கூறப் பெறவேண்டும். உண்மையான நிகழ்ச்சிகளைக் கூறுவது மட்டும் போதியதாகாது; தாம் எடுத்துக்கொண்ட அறிஞரைப்பற்றி ஆசிரியர் உணர்ச்சியோடும் உற்சாகத்தோடும் எழுத வேண்டும். ஏராளமான விவரங்களிலிருந்து, பயன்படும் சில குறிப்புக்களை மட்டும் பொறுக்குவதிலேயே அவர் தம்முடைய திறமையைப் பயன்படுத்த வேண்டும்.

புதிய ஒரு முறையில் படங்களுக்கும் ஆதாரமான தாள்களின் நகலுக்கும் முக்கியத்துவம் கொடுத்து, பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றை, ரா. அ. பத்மநாபன் 'சித்ர பாரதி' என்னும் நூலை எழுதியுள்ளார். பாரதிதாசன் வாழ்க்கை வரலாற்றை அவர் மைந்தர் 'குயில்' இதழ்களில் வெளியிட்டுள்ளார். இத்தகைய நன் முயற்சிகள் பெரிதும் வரவேற்கத்தக்கவை,

**தன் வரலாறுகள்**

ஆங்கிலத்தில் வெளிவருவதுபோலத் தமிழிலும் தன் வரலாற்று நூல்கள் வெளிவந்திருக்கின்றன. வ. உ. சி. சுயசரிதை, அரசவைக் கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை எழுதியுள்ள "என் கதை", டாக்டர் தி. செ. சௌ. இராஜனின் "நினைவு அலைகள்" சுத்தானந்தரின் "ஆத்ம சோதனை" ஆகியவை இத் துறையில் எழுந்த நூல்களிற் சில. திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள் தலைசிறந்த ஒரு நூல்; ஒவ்வொரு இளைஞரும் படித்துப் பயன்பெறத் தக்கது.

டாக்டர் சாமிநாத ஐயர் ஆக்கிய "என் சரிதம்" இப்புதிய வகையில் சிறந்த நூலாக விளங்குகிறது. எளிமையான தமிழ் நடைக்கு இந்நூல் வழிகாட்டி எனலாம். இலக்கியக் களஞ்சியமாக விளங்கும் இந் நூல், தமிழ் மரபு கெடாதபடி எழுதப் பெற்றிருக்கிறது. வனவாசம் என்ற பெயரில், கண்ணதாசன் சுவைபட எழுதியுள்ள தன் வரலாறு, விறுவிறுப்பான நடையில் கதைபோல அமைந்துள்ளது.

நாட்குறிப்புக்களும் நூலாக வெளிவரத் தொடங்கியுள்ளன. 200 ஆண்டுகட்கு முன் ஆனந்த ரெங்கப் பிள்ளை எழுதி வைத்திருந்த நாட்குறிப்புக்கள் நம் காலத்திலேயே வெளிவந்திருப்பதும், இந்நூற்றுண்டில் தமிழ் உரைநடை வளர்ச்சியடைந்திருப்பதற்குச் சான்றாக உள்ளது.

வேற்று மொழியிலிருந்தும் தன் வரலாறுகள் தமிழாக்கப்பட்டிருக்கின்றன. காந்தியடிகளின் "சத்திய சோதனை", ஜவஹர்லால் நேருவின் வரலாறு, கிருஷ்ண ஹதிசிங் எழுதிய "விதி என்ன செய்யும்" என்பவை நூல்களாகவும், வின்சர் கோமகனின்

அநுபவங்கள் கட்டுரை வடிவிலும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன.

## குழந்தை இலக்கியம்

குழந்தைகளுக்கென்று பல நூல்கள் எழுதப்பட்டு வருவது இன்றைய தமிழ் இலக்கிய வரலாற்றில் குறிப் பிடத்தக்க வளர்ச்சியாகும். குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா, கல்வி கோபாலகிருஷ்ணன், கௌசிகன், பூவண்ணன், சண்முக சுப்பிரமணியம், தம்பி சீனி வாசன் ஆகியோர் நல்ல நூல்கள் பலவற்றை எழுதி வருகின்றனர். குழந்தை எழுத்தாளர் சங்கம் ஒன்று ஏற்பட்டு நல்ல முறையில் பணியாற்றி வருகின்றது. மறைமலை அடிகள் தாம் இயற்றிய "சிறுவர்க்கான செந்தமிழ்" என்னும் நூலில் சிறுவர்க்குரிய நாட் கடன்களையும், கதைகளையும் எழுதியுள்ளார். இந் நூலின் உரிய பகுதிகளை மீண்டும் பதிப்பித்துத் தமிழ்ச் சிறுவர்களிடையே பரப்பலாம்.

குழந்தைகளுக்காக எழுதுபவர்கள் குழந்தை களின் இயல்புகளை எடுத்துக் கூறும் நூல்களைக் கற்றுப் பயனடைய வேண்டும். குழந்தைகளுடைய இயல் புக்கும் வாழ்க்கை அனுபவங்களுக்கும், உணர்ச்சி களுக்கும் ஏற்ப நூல்கள் அமைய வேண்டும். ஈ. த. இராஜேஸ்வரி அம்மையார் எழுதிய "குழவி உள்ளம்", பெ. தூரன் எழுதிய "குழந்தை உள்ளம்" ஆகிய மூல நூல்களும், இத்தாலியக் கல்வி மேதையான மாண்டி சோரி அம்மையார் எழுதிய "குழந்தைமை ரகசியம்" என்னும் மொழி பெயர்ப்பு நூலும் இவ்வகையில் தமிழில் கிடைக்கும் சிறந்த உளவியல் நூல்களாக உள்ளன.

அச்சில் வெளிவருபவற்றை நம்புகின்ற இயல்பு சிறுவர்களுக்கு உண்டு. ஆகையால் அச்சுப் பிழை என்பது குழந்தைகளுக்கான வெளியீடுகளில் இருக்கவே கூடாது. இலக்கணப் பிழைகளும் குழந்தைகளுக்கான வெளியீடுகளில் இருப்பது வருங்காலத்தில் நமது இலக்கியத்திற்கே முற்றுப்புள்ளி வைத்துவிடக்கூடும், குழந்தைகளுக்காகத் தமிழில் நூல்கள் தோன்றுவதற்கு முன்னரே வேறு மொழிகளில் குழந்தை இலக்கியம் வளர்ச்சியடைந்துவிட்டதால் இத்துறையில் இப்போது வெளிவருபவை பெரும்பாலும் மொழி பெயர்ப்பாகவே உள்ளன. இதைத் தடுக்க இயலாது. ஆனால் தமிழில் வெளிவரும் நூல்கள் தமிழ்ப் பண்பாட்டுக்குப் பொருந்துவனவாகவும், நமது மக்களுடைய வாழ்க்கைச் சூழ்நிலைக்கு ஏற்றனவாகவும் இருக்க வேண்டும். சிறுவர்களுடைய பொது அறிவு பெருகுவதற்கும் இந்த நூல்கள் துணை செய்ய வேண்டும். பிறநாட்டுக் கருத்துக்களையோ, பிறநாட்டு நிகழ்ச்சிகளையோ கூறும்போது இயன்ற அளவு விளக்கக் குறிப்புக்களையும் தரவேண்டும். கொலை, கொள்ளை ஆகியவை குழந்தை உள்ளத்தைக் கெடுப்பன என்பதை உணர்ந்து "நல்ல நண்பர்கள்" என்ற உயர்ந்த நூலை எழுதிய கவிஞர் அழ. வள்ளியப்பாவின் முயற்சி போற்றத்தக்கது.

## அரசியல் நூல்கள்

வெ. சாமிநாத சர்மா முயற்சியால், அரசியல் சாத்திர நூல்கள் தமிழில் தலையெடுத்தன. கிரீஸ், ருஷ்யா முதலிய நாடுகளைப்பற்றி இவர் எழுதியுள்ள நூல்களும் நம் தேசீயக் கொடி போன்ற பல சிறு நூல்களும் முக்கியமாகக் குறிப்பிடத் தக்கவை: பத்திரிகை படிப்பவர்க்கு மிகவும் பயன்படுபவை. இவரைப் பின்

பற்றிப் பலர் இப்போது அரசியல் தொடர்புடைய நூல்களை எழுத முன் வந்திருக்கின்றனர். ஐக்கிய நாடுகளின் குழுவைப்பற்றிப் பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை அரிய நூல் ஒன்றை இயற்றியிருக்கின்றார். அண்ணாத்துரை, கல்கி, ம. பொ. சி., எஸ். எஸ். மாரிசாமி, ஏ. ஜி. வெங்கடாச்சாரி. ஏ. என். சிவராமன் ஆகியோரும் அரசியல் நூல்கள் சிலவற்றை யாத்து, சிக்கல் மலிந்த பொதுப் பிரச்சினைகளைப் பற்றித் தம் கருத்துக்களைப் பரப்பி வருகின்றனர். இந்நூல்களில் உள்ள நடை பாமரர் பாராட்டுக்குரியது.

க. சந்தானம் எழுதிய செங்கோலும் ஜனநாயகமும் என்ற நூல் அரசியல் வாழ்வில் அமைந்த அனுபவத்தின் விளைவாக எழுதப் பெற்றது.

அரசியல் கருத்துக்களைப் பல நூல்களில் ராஜாஜி எழுதியுள்ளார். "ஊருக்கு நல்லது" என்னும் சிறு நூல் வயது வந்த கிராம வாசிகள் எழுதப்படிக்கக் கற்றபின் படிக்க உதவும். "ராஜாஜி மலர் 2—கட்டுரைகள்" என்பது அவரது அரிய கட்டுரைகளின் தொகுப்பு: பொது அறிவை வளர்த்துக் கொள்ள விரும்புவார்க்கு இன்றியமையாதது. தமிழில் விஞ்ஞான பாடங்களைப் புகட்ட இயலும் என்பதைக் காட்ட "தமிழில் முடியுமா?" என்னும் நூலையும் இரசாயன சாஸ்திரத்தை ஆங்கிலம் தெரியாத பழைய காலத்து மனிதருக்கும் விளங்க வைக்கலாம் என்பதைக் காட்ட "திண்ணை ரசாயன"த்தையும் ராஜாஜி எழுதியுள்ளார்.

திருவாணன் எழுதிய ராஜதந்திரக் கலை; இந்நூலாசிரியர் இயற்றிய 'நீங்களும் தூதுவர் ஆகலாம்' என்பனவும் குறிப்பிடத் தக்கவை.

**பொருளாதார நூல்கள்**

பொருளாதாரத் துறையிலும் தமிழில் சில நூல்கள் வெளிவந்துள்ளன. இவற்றைத் தந்தவர்கள் ஆ. முத்தையா, ஓ. ஆர். கிருஷ்ணசாமி, சீ. சீ. இராமசாமி, அ. நா. சிவராமன் ஆகியோர். டாக்டர் பா. நடராசன், "வேளாண்மைக் கடன்" என்ற நூலை வெளியிட்டுள்ளார்: பல இதழ்களில் அன்றாடப் பொருளாதாரப் பிரச்சினைகளைப் பற்றியும், வெளிநாட்டு வாணிபத்தைப் பற்றியும் பல கட்டுரைகளை இவர் எழுதி வருகின்றார்.

கட்டுரைகள் வாயிலாகச் சிக்கலான பொருளாதாரப் பிரச்சினைகளைப் பாமர மக்களும் அறியும்படி எழுதிய சிறப்பு டாக்டர் ரா. க. சண்முகம் செட்டியாரைச் சேரும்.

'செல்வமும் சுதந்திரமும்' 'பொதுமக்களும் பொருளாதாரமும்' (க. சந்தானம்) என்பன அடிப்படையான பொருளாதாரத் தத்துவங்களையும் நம் நாட்டின் பொருளாதார நிலைமையையும் எடுத்துக் கூறுகின்றன.

பொருளாதாரக் கலையின் உயிர்நாடிகளாக உள்ள பொருள்களின் உற்பத்தி, அவற்றின் பங்கீடு, வருவாய் இன்ன பிறவற்றைப் பற்றியும் வங்கி, இன்சூரன்ஸ் குழு பங்கு மார்க்கெட் ஆகியவற்றைப் பற்றியும் அனைவரும் எளிதில் அறியும்படி தமிழ் மக்களுக்கு விளக்கிக் கூறும் "பொருளாதார நூல்" ஒன்றை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் வெளியிட்டுள்ளனர்.

கூட்டுறவு இயக்கத்தைப் பற்றி ஆ. முத்தையா அ. அருளம்பலம் (கூட்டுறவு அல்லது ஐக்கிய வாழ்வு—

அ. அருளம்பலம்—திருமகள் அழுத்தகம்: சுன்னுகம்) ஆகிய இருவரும்—தனித்தனியே—தமிழில் நூல்கள் எழுதியிருக்கின்றனர். "பொருளாதார நூல்", "கூட்டுறவு அல்லது ஐக்கிய வாழ்வு" ஆகிய நூல்கள் வெளிவந்திருப்பது தமிழர் பலருக்குத் தெரியாது. இது போலவே "தருக்க சாஸ்திரச் சுருக்கம்" என்ற நூலை நல்லூர், சுவாமி ஞானப்பிரகாசர் எழுதியிருக்கிறுர்.

## இசை நூல்கள்

தமிழ் இசை இயக்கம் 1942 இல் தொடங்கியது. அதன் பயனுக மறந்தும் மறைந்தும் போன தமிழ்ப் பாடல்கள் புத்துயிர் பெற்றன. இசைத் தமிழின் வரலாறு, சிறப்பு—இவைபற்றிப் பல வெளியீடுகள் வெளிவரலாயின. இவற்றை வெளிக் கொணர்ந்தமைக்கு அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தாரும், சென்னைத் தமிழ் இசைச் சங்கத்தாரும் பாராட்டுக் குரியர். "பாணர் கைவழி" என்பது தஞ்சை ஜோதி பாண்டியன் எழுதிய ஆராய்ச்சிக்கட்டுரை. விபுலானந்த அடிகளின் "யாழ்நூலை"ப் பற்றி முன்னரே குறிப்பிட்டிருக்கிறேும், பொன்னையா பிள்ளையும் பெ. தூரனும் இசைத்தமிழ் நூல்கள்சிலவற்றை ஆக்கியுள்ளனர். இசைத்தமிழ்ப் புலமையில் இணையற்றவரும் அணித்தே இவ் உலகு நீத்தவருமான திருவனந்தபுரம் இசைத் தமிழ்ச் செல்வர் தி. இலக்குமணப்பிள்ளை உயர்ந்த கருத்துக்களை இசைத் தமிழ் நூலிற் பரப்பியுள்ளார். கோதண்டபாணி பிள்ளை ஆக்கியுள்ள 'பழந்தமிழ் இசை' குறிப்பிடத்தக்க ஆராய்ச்சியாகும்.

தமிழ் இசை வெள்ளிவிழா மலர் பயன்மிக்க கட்டுரைகளுடன் கூடிய ஆராய்ச்சிக் கருவூலமாகும்.

**கலை**

ஓவியம், சிற்பம் முதலிய கலைகளைப் பற்றி விளக்கமாக ஒன்றும் தமிழில் வெளிவந்ததாகத் தெரியவில்லை. இந்நிலையில் கலாநிலையம் க. நவரத்தினம் "தென்னிந்தியச் சிற்ப வடிவங்கள்" என்னும் அரிய ஆராய்ச்சி நூலை இயற்றியுள்ளார். இது தமிழ் மக்களுக்குப் பெருமை தருவது. தமிழகச் சிற்பக்கலை பற்றி பல அரிய செய்திகளை ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் தம் நூல்களில் வெளியிட்டுள்ளார்.

வாணமாமலையின் எழுத்துக்கள் நாட்டுப் பாடல்களையும், பண்பாட்டையும் பற்றியவை. நாணயங்கள், சாவகம், தாமரை, தமிழ் நாட்டு விளக்குகள் என்ற சிறந்த நூல்களையும் இவர் தமிழகத்திற்கு வழங்கியிருக்கிறார்.

ராகவன் எழுதியுள்ள கப்பற்கலை என்னும் நூல் அரிதின் முயன்று சேகரித்த செய்திகளின் தொகுப்பாக அமைந்து சிறந்து விளங்குகிறது.

போர்க் கலையைப் பற்றிய நூல் ஒன்றும் தமிழில் வெளிவந்துள்ளது. ஸ்டார் பிரசுர வெளியீடாகிய "நம் போர்ப் படைகள்" என்னும் நூல் இவ்வகையில் வெளிவந்துள்ள ஒரே நூல் எனலாம். இந்நூலில் தரை கடல் விமானப் படைகளைப் பற்றி இளைஞர்கள் அறிய விரும்பும் செய்திகள் உள்ளன. சமையற்கலை பற்றிப் பல நூல்கள் வந்துள்ளன.

கலையைப் பற்றிய இப்பகுதியை முடிக்குமுன் ஒரு செய்தியைக் குறிக்கவேண்டும் தமிழர்களின் கலைப் பெருமையை உலகமறியச் செய்தவர் ஆனந்த குமாரசாமி. அவர் கலையைப் பற்றி ஆக்கிய நூல்கள் ஒன்றேனும் இன்னும் தமிழாக்கப் பெறவில்லை, அவருடைய

வரலாறும், தமிழில் வெளிவந்ததாகத் தெரியவில்லை. நமது நடனக்கலை, விக்கிரகங்களின் சிறப்பு ஆகியவை பற்றியும் ஆங்கிலத்தில் இருப்பவைபோலத் தமிழில் நூல்கள் தோன்றவில்லை.*

**தொழில்**

அச்சுக் கலை பற்றிய அரிய நூலொன்றும் தமிழில் வெளிவந்திருக்கிறது. இக் கலையின் ஆற்றலை இந்நாளில் யாவரும் அறிவர். இதன் தோற்றம், வளர்ச்சி, மேம்பாடு, இன்றைய நிலை பற்றிய விவரங்களையும், அச்சடித்தல், அச்சுக் கோத்தல் போன்ற தொழில் நுட்பங்களையும் கையெழுத்துப்படி அச்சு நூலாக உருவம் பெறும் வரை ஏற்படும் பல்வேறு நிகழ்ச்சிகளையும் நிரல்பட அமைத்தும் இந்நூலில் மா. சு. சம்பந்தம் தந்திருக்கிறார்.

'கவின் அச்சுக்கலை' என்ற ஒரு நூலும் தமிழில் வெளிவந்திருக்கிறது.

'தையற்கலை' 'கடிகார ரிப்பேர்', பஞ்சாலைத் தொழில், நெய்வேலி போன்ற நூல்கள் தொழில் துறையில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள ஆர்வத்துக்கு அறிகுறியாக உள்ளன. பிற தொழில்களைப் பற்றித் தமிழில் நூல்கள் வெளிவர வேண்டும்.

பெரிய தொழில் நிறுவனங்கள் தங்கள் ஊழியர்க்காகவும் தொழில் விளம்பரத்துக்காகவும் நடத்தும்

---

* The other mind-A study of Dance and Life in South India—Beryl De Zote (Dance Critic of the Daily Telegraph: Victore Gollancz London 1953. இது பந்தணைநல்லூர் நடனம் பற்றிய அரிய ஆராய்ச்சி நூல்.

ICONOGRAPHY—Gopinatha Roa, 4 volumes.

SOUTH INDIAN BRONZE IMAGES—Krishna Sastry and Ganguly

இதழ்களில் (HOUSE JOURNALS) தமிழுக்கு இடம் தரவேண்டும்.

காளிதாசன் எம். பாலசுப்பிரமணியம், எம். ஏ. என்பார் 'உதவாத இரும்பும் உதவும்' என்ற நூலை எழுதியுள்ளார், இது இரும்பு எஃகுத் தொழில்பற்றியது; (The Story of Scrap by Edwin E. Barringer) என்னும் நூலின் மொழி பெயர்ப்பு; குப்புசாமி நாயக்கர் என்ற வணிகரால் வெளியிடப்பெற்றது. சேலத்து இரும்பு என்ற நூலும் வெளிவந்திருக்கிறது.

இவ்வகையில் குறிப்பிடத்தக்க மற்ருெரு மொழி பெயர்ப்பு நூல் பல்லாயிரம் படிகள் விற்றுள்ள 'நீங்களும் உங்கள் மோட்டாரும்' என்பது, முதநூலாக எழுதப்பட்ட 'நவமணிகள்'—வயிரம் முதலிய இரத்தினங்கள் பற்றிய பெரிய நூல்; சிறந்த நூல்; பல்லாண்டு முயற்சியால் டி. எஸ். வைத்தியநாதனுல் எழுதப் பட்டு திருவாவடுதுறை ஆதீனத்தாரால் அழகுற அச்சிடப்பட்டு அன்பளிப்பாக மட்டும் வழங்கப்படுகிறது.

## வழிச்செலவு நூல்கள்

வழிச்செலவு நூல்கள் தமிழில் மிகக் குறைவு. டாக்டர் மு. வ. வாஞெலியிற் கூறியது போல,

> ''அறிஞர்கள் வெளிநாட்டில் சுற்றுப் பயணம் செய்யும்போது, அல்லது வெளிநாட்டில் சில காலம் தங்கியிருக்கும்போது, தாம் கண்டவை கேட்டவைகளை எல்லாம் விடாமல் குறிப்பெடுத்து வைத்து நூல்கள் எழுதவேண்டும். அந்த நூல்கள் இரு வகையில் பயன்படும். ஒன்று வெளியுலகத்தைப் பற்றிய பரந்த அறிவு வளர்வதற்குப் பயன்படும். மற்ருென்று அடுத்தாற்போல் வெளிநாட்டிற்குச்

செல்வோர்க்கு வழிகாட்டியாகவும் துணையாகவும் விளங்கும்.''

'சென்னை மாநகர்' என்ற சிறந்த நூலை மா. சு. சம்பந்தம் எழுதியுள்ளார். ஆங்கிலத்திலும் இந்திய மொழிகள் சிலவற்றிலும் இத்தகைய வழிச்செலவு நூல்கள் மிகுதியாக உள்ளன, மாமல்லபுரத்தைப் பற்றிக்கூட ஆங்கில நூல்களைப் படித்தே தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில் தமிழ் மக்கள் சில ஆண்டுகளுக்கு முன் வரையில் இருந்து வந்தனர். அந்த நிலை மாறி உலக நாடுகள் பலவற்றைப்பற்றித் தமிழ் நூல்கள் இப்போது வெளி வந்திருப்பது குறிப்பிடத் தக்கது.

இத்தகைய வளர்ச்சிக்கு அடிகோலியவர்கள் திரு. வி. க., ஏ. கே. செட்டியார் ஆகியோராவர். தமிழ்ப் பெரியார் தம் இலங்கைச் செலவைக் கட்டுரையாக எழுதினார்கள்; உலகம் சுற்றிய தமிழர் பல நூல்கள் வாயிலாகத் தமிழ் மக்களுக்கு உலகத்தைப் படம் பிடித்துக் காட்டினார். இவர் நகைச்சுவையோடு எழுதும் இயல்புள்ளவர். இத்தாலியைப்பற்றி இவர் பின்வருமாறு எழுதுகிறார்;—

''மார்க்கோனியும், மக்ரோனியும் பிறந்தது அந்த நாட்டில்தான். மார்க்கோனியை உங்களுக்குத் தெரியும். அவர் காலஞ்சென்ற ஒரு விஞ்ஞான நிபுணர், மக்ரோனி என்பது ஓர் உணவுப் பொருள். இத்தாலியர் ஏழை முதல் பணக்காரர் வரையில் தினந்தோறும் விரும்பியுண்ணும் உணவு.''

இலங்கையைப்பற்றிக் குல சபாரத்தினம், சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், டாக்டர் வரதராசன், கல்கி, பகீரதன் ஆகிய பலர் விரிவாக எழுதியுள்ளார்கள். தருமபுர ஆதீன வெளியீடான நேபாள

யாத்திரை நல்ல தமிழில் அமைந்துள்ளது. அ. மு. பரமசிவானந்தம் இயற்றிய 'தமிழன் கண்ட மலேயா' பகீரதன் எழுதிய 'வட இந்திய யாத்திரை' என்னும் நூலும், 'நாரதர்', ஆனந்த விகடன்' இதழ்களில் சி. த. காந்திமதி எழுதிய பிரயாணக் கட்டுரைகளும், 'தமிழ்நாடு' நாளிதழில் தி. மாணிக்கவாசகம் எழுதிய கட்டுரைகளும் 'கலைக்கதி'ரில் ஜி ஆர். தாமோதரன் எழுதிய கட்டுரைகளும், பல இதழ்களில் டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார், பேராசிரியர் ந. சஞ்சீவி ஆகியோர் வரைந்துள்ள பயணக் கட்டுரைகளும் தமிழ் உரைநடைக்கு அழகு செய்வன. திருக்கேதார யாத்திரை என்னும் நூலை அவிநாசிலிங்கம் செட்டியார் தந்திருக்கிறார்.

ஜி. டி. நாயுடுவின் நாட்குறிப்பை ஆதாரமாக வைத்து எழுதப்பட்டுள்ள 'நான் கண்ட உலகம்' என்னும் நூலும், சம்பத்குமார் இயற்றிய கனவு உலகம் என்ற சிறு நூலும் பழங்குடி மக்களைப்பற்றிப் பிலோ இருதயநாத் எழுதிவரும் சிறு கட்டுரைகளும் இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த அடியார் ஒருவர் பீஜித் தீவுகளைப்பற்றி எழுதிய கட்டுரைகளும் சுவையான பல அனுபவங்களைக் கூறுகின்றன. சோ. சிவபாதசுந்தரம், இலக்கிய அடிப்படையில் ''மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில்'' என்ற வழிச் செலவு நூலைப் புதுமுறையில் மிகச் சிறப்பாக எழுதியுள்ளார். இவர் 'புத்தர் அடிச்சுவட்டில்' என்னும் பெருநூலும் ஆக்கியுள்ளார்.

உலகச் செலவு செய்பவர் சிலர் அயல்நாட்டுத் தொடர்பாலும், அயல்மொழிப் பயிற்சியாலும் தமிழைச் சீர்தூக்கிப் பார்த்துத் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குத் துணைசெய்து வருகின்றனர். இவர்களுள்

குறிப்பிடத் தக்கவர் தனிநாயக அடிகள் ஆவார். இவர் தமிழ் மொழியின் தனித் தன்மையையும் தொன்மையையும் தரணியெங்கும் பரப்ப வேண்டுமென்னும் தொண்டுள்ளம் படைத்தவர்: 'தமிழ்த் தூது' என்னும் தூய தமிழ் நூலில் இவர், தம் அனுபவங்களைத் தெரிவித்துள்ளார்.

மீ. ப. சோமசுந்தரம், மேரி மாசிலாமணி, சி. சுப்பிரமணியம், எஸ் என். சொக்கலிங்கம், நெ. து. சுந்தரவடிவேலு, கலையன்பன் இராமன், மணியன் ஆகியோர் நூல்களும் பயண நூல்களில் குறிப்பிடத் தக்கன. தமிழில் வெளிவந்துள்ள பயணக் கட்டுரைகளை வாசகர் வட்டமும் ஏ. கே. செட்டியாரும் இரு தொகை நூல்களாகத் தொகுத்துள்ளனர்.

## நீதி நூல்கள்

நீதி நூல்கள் பண்டுதொட்டுத் தமிழில் செய்யுள் வடிவிலேயே அமைந்துள்ளன. இவற்றிற்கு விளக்கமான உரைகளும், உரைநடையில் புதிய நீதி நூல்களும் இளவழகனார், பழநிவேல் பிள்ளை ஆகியோரால் எழுதப் பெற்றிருக்கின்றன.

## வேளாண்மை

விவசாயம், தோட்டக்கலை, ஆடு வளர்ப்புபற்றிய நூல்களை ச. கு. கணபதி ஐயர் எழுதியுள்ளார். V. T. சுப்பையா முதலியார் விவசாய நூல் (மூன்று பகுதிகள்) தென் இந்தியப் பயிர்கள் ஆகியவற்றை எழுதியுள்ளார். 'பழத் தோட்டம்' 'உலோகங்களும் நாமும்' 'பூஞ்செடிகள்' என்ற நூல்களை மு. அருணாசலம் ஆராய்ந்து எழுதியுள்ளார். பேருழைப்புக்குப் பின் வெளியிடப்பட்ட இத்தகைய அரிய நூல்களுக்கு ஆதரவு தருவது தமிழ் மக்கள் கடமை.

**வரலாறு**

சோழ, பாண்டியர் வரலாறுகளை, கல்வெட்டுப் பேரறிஞர் சதாசிவப் பண்டாரத்தாரும் சோழர், பல்லவர் வரலாறுகளை டாக்டர் இராசமாணிக்கமும் நாயக்கர் வரலாற்றை அ. கி. பரந்தாமனாரும் விரிவாக எழுதியுள்ளனர்.

1968-இல் தஞ்சையில் சீருடனும் சிறப்புடனும் கொண்டாடப்பெற்ற இராசராசசோழனின் பிறந்த நாள் விழாவில் அம்மன்னரைப்பற்றிய விரிவான வரலாற்று நூலை, சா. கணேசன் வெளியிட்டுள்ளார். டாக்டர் கே. கனகசபாபதிப் பிள்ளை எழுதியுள்ள நூல்களும் பூலித்தேவர், கும்மந்தான் கான்சாகிபு போன்ற பல தமிழகத்து வீரர்களைப்பற்றியும் வேலூர் புரட்சி போன்ற நிகழ்ச்சிகளையும் நாட்டுணர்ச்சியுடனும் நல்ல தமிழிலும் தந்துள்ள ந சஞ்சீவியின் வெளியீடுகளும் குறிப்பிடத் தக்கன. பிற்காலத் தமிழக வரலாறும் விரிவாகத் தமிழிலும் பிற மொழிகளிலும் எழுதப்பட வேண்டும் இந்திய நாடென்றால் சிந்து கங்கைப் பெருவெளியென்று பிற நாட்டார் கருதுகின்றனர்.

கொங்கு நாட்டு வரலாற்றை இலக்கிய மணம் கமழ, புலவர் குழந்தை ஒரு பெரு நூலாக வெளியிட்டுள்ளார். பேராசிரியர் டாக்டர் மு. ஆரோக்கியசாமி 'நாமிருக்கும் நாடு' நல்ல தமிழில், இலக்கியம் முதலிய சான்றுகளோடு செம்மையாக எழுதப்பெற்ற ஒரு வரலாறு. இவரது கொங்கு நாட்டு வரலாறும் இத்தகையதே.

சிறந்த வரலாற்று நூல்கள் இல்லாமையால், வட வேங்கடமும் தென் குமரியும் தமிழகத்தின் எல்லைகள் என்பதைத் தமிழ்த் தலைவர்கள் சிலர்கூட, உறுதியாக

ஏற்றுக்கொள்ளவில்லை. எல்லைக் கிளர்ச்சியால் நாஞ்சில் நாடு தமிழ்நாடே என்பதை நிலைநாட்டும் நூல் ஒன்றை, 'சேர நாடும் செந்தமிழும்' என்ற பெயரில் செ. சதாசிவம் எழுதியுள்ளார்.

வேங்கடம் தமிழகத்தைச் சேர்ந்ததே என்பதை நீதிபதி வாஞ்சுவிடம் கொடுத்த அறிக்கையில் தமிழ் நாடு வட எல்லைப் பாதுகாப்புக் குழு தெளிவுபடுத்தி யிருக்கிறது. இந்த அறிக்கையில் கண்டுள்ள செய்தி கள் நூலாக வெளிவருவதுடன் பாட நூலாகவும் அமையுமானால் நலம் விளையும். 'தென்னாடு' என்னும் நூலில் கா. அப்பாத்துரை சிறந்த முறையில் தென்னாட்டு வரலாறு ஒன்றை எழுதியுள்ளார். தமிழ் நாட்டுப் போர்க்களங்கள் என்ற பெருநூலும் இவர் எழுதியதே; இவரது நூல்கள் இவருடைய அறிவின் பரப்பையும் உழைப்பின் பெருமையையும் நினைவூட்டு கின்றன; இவை ஒவ்வொன்றிலும் இவர் தரும் குறிப் புக்கள் பல தனி நூல்களாக விரிவாகவும் தெளிவாக வும் எழுதத் துணை செய்யும் தன்மையன. கிளைவ் முதல் ராஜாஜி வரை என்ற நூலில், பி. ஸ்ரீ. கடந்த 300 ஆண்டு வரலாற்றைக் கதைப் போக்கில் சுவைபட எழுதியுள்ளார். நாட்டு நடப்பு, மொழி வளர்ச்சி, சமுதாய முன்னேற்றம் முதலியவற்றைப்பற்றியும் அவர் விரிவாக எழுதியுள்ளார்,

ஈழநாட்டில் ஏறக்குறைய 250 ஆண்டுகட்கு முன் வாழ்ந்த மயில்வாகனப் புலவர் யாத்த 'யாழ்ப்பாண வைபவ மாலை' என்னும் உரைநடை நூலை முதலியார் குல சபாநாதன் ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் பதிப்பித் துள்ளார். யாழ்ப்பாண மன்னர்களின் வரலாற்றை ஆய்ந்தறிதற்குத் துணை செய்யும் இந்நூல் வரலாற்று நூல்களில் சிறப்பான இடம்பெறும்.

இலங்கையின் வரலாறு பற்றியும் சிறந்த நூல்கள் தமிழில் வெளிவர வேண்டும். ராபர்ட் நாக்ஸ் எழுதிய வரலாற்று நூல் புகழ் பெற்றது; இதனைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுதல் இன்றியமையாதது.

நாட்டு வரலாற்று நூல்கள் வெளிநாடுகளில் எழுதப்பெறும் முறையைப்பற்றியும் சிறிது ஆராய்வோம். ஏனைய நூல்களைப் போலவே, இந்நூல்களும் வாழ்க்கைச் சுவை தோன்ற எழுதப்பெறுகின்றன. மன்னர்கள் ஆட்சிக்கு வந்த ஆண்டு, போர்கள் நடந்த இடங்களைப்பற்றிய பட்டியல் இவைகளை மிகுதியாக அவை தருவதில்லை. வரலாற்று நூல்கள் உயிரோட்டம் உள்ளவையாகவும் ஆதாரத்துடன் எழுதப்பெற்றனவாகவும் உள்ளன. இவ்வகையான நூல்களை எல்லோராலும் எழுதிவிட இயலாது. நாட்டு வரலாற்றை உருவாக்குவதில் ஈடுபட்ட சிலரே எழுத இயலும். உரிய ஆதாரங்களைச் சேர்ப்பதற்குப் பெரும் பொருட் செலவும் ஏற்படும். இத்தகைய முயற்சிகளை வெளிநாடுகளிலுள்ள அற நிலையங்களும் பல்கலைக் கழகங்களும் ஊக்குகின்றன நம் நாட்டில் வெள்ளையரிடமிருந்து இந்தியருக்கு அதிகார மாற்றம், இந்தியாவில் இருந்த தனி அரசுகள் நாட்டின் பொது ஆட்சியுடன் இணைக்கப்பெற்றது பற்றிய வரலாறுகளை திரு. வி.பி. மேனன் எழுதுவதற்குக் காரணமாக இருந்தது அமெரிக்காவிலுள்ள ராக்பெல்லர் அறநிலையமே ஆகும்.

**முடிவுரை**

கோபாலகிருஷ்ணமாச் சாரியாரின் கம்பராமாயணப் பதிப்புப் போன்றவையே வெளிவந்த நிலைமை மாறி, புது வகையான உரை நூல்களும் இக்காலத்தில் வெளிவரத் தொடங்கியிருக்கின்றன. பதிப்பு முறையில்

இக்காலத்தில் சில மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. உரை என்பது கற்றுத் தேர்ந்தவர் சிலர்க்குப் பயன்படும் அளவில் நிற்காமல், கற்க முயல்வோர் பலர்க்கும் பயன்படுவதாக இருத்தல் வேண்டும். சீர்களை நன்கு பிரித்துப் பதிப்பிக்கவேண்டும். சீர்களில் அமைந்துள்ள சொற்களைப் பிரித்துச் செய்யுளைப் படிக்கும்போதே பொருள் விளங்கத்தக்க முறையில் அமைக்கவேண்டும். பதிப்பாசிரியர் தம் அறிவை மட்டுமன்றி அனுபத்தையுற் பயன்படுத்த வேண்டும். டாக்டர் ரா. க. சண்முகம் செட்டியார் பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில் சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதியுள்ளார்; இது கடுமையான சொற்களுக்கு மட்டும் பொருள் தருவது. தாம் சிலப்பதிகாரத்திற்கு உரை எழுத நேர்ந்ததைப்பற்றி, அந்த நூலின் முகவுரையில் சண்முகம் செட்டியார் கூறுகிறார்:

> ''ஆங்கிலத்திலுள்ள எல்லா இலக்கிய நூல்களும் சாமான்ய ஆங்கில மக்கள் வாங்கிப் படித்து அனுபவிக்கும் விதத்தில் அநேகம் பதிப்புக்களாக வெளியிடப்பட்டிருக்கின்றன. கல்வியில் தேர்ந்தவர்களுக்கென்று உயர்ந்த ஆராய்ச்சி உரைகளுடன் தனிப் பதிப்புக்கள் இருக்கின்றன. பொதுமக்களுக்கு பளன்படும் விதத்தில், தெளிவான உரையுடன் குறைந்த விலைக்கும அழகான ரூபத்திலும் பொது மக்கள் பதிப்புக்கள் ஏராளமாய் அச்சிடப்பட்டிருக்கின்றன. எல்லாப் பழந்தமிழ் இலக்கியங்களும் எளிய உரையுடன் பொதுமக்கள் பதிப்பாக ஒன்று போன்ற ரூபத்தில் (Uniform Edition) வெளியாக வேண்டுமென்று எனக்கு வெகுநாளாய் ஆசை உண்டு.''

இவ்வகையான எளிய உரைகள் வெளிவருமானால், சங்க இலக்கியங்கள் அனைவர்க்கும் பயன்படும்.

# 15. விஞ்ஞான நூல்களும் கலைச் சொற்களும்

தமிழில் விஞ்ஞான நூல்கள் எந்த அளவில் வெளி வந்துள்ளன? மேன்மேலும் விஞ்ஞான நூல்கள் தமிழில் வெளிவர எவ்வாறு முயலவேண்டும்? பிற மொழிகளில் விஞ்ஞான நூல்கள் எவ்வாறு எழுதுகிறார்கள்? விஞ்ஞான நூல்களின் வளர்ச்சிக்குக் கலைச் சொல்லாக்க வரலாறு என்ன? ஏனைய நாடுகளில் கலைச்சொல்லாக்க அலுவல் எவ்வாறு நடைபெறுகிறது? இக்கேள்வி களுக்கு இக்கட்டுரையில் விடைகூற முயலுவோம்.

தமிழில் வெளியாகியுள்ள விஞ்ஞான நூல்களை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று பொதுமக்க ளுக்காக எழுதப்பெற்றவை, மற்றொன்று பள்ளிக் கூடங்களில் பயன்படுவதற்காகப் பாடநூல்களாக எழுதப்பெற்றவை. பொதுமக்களிடையே விஞ்ஞான அறிவைப் பரப்புவதற்கு முன்வந்த நூல்களை முதலில் குறிப்பிடுவோம்.

1903-ஆம் ஆண்டில்தான் முதல் முறையாக, விஞ்ஞான நூலொன்று தமிழில் வெளியாயிற்று. இது "ரசாயன நூல்" என்னும் பெயரை உடையது. Rosco's Primer of Chemistry என்ற ஆங்கில நூலை இப்பெய ருடன் டி. பி. மாசிலாமணிப்பிள்ளை என்பார் தமிழாக் கினார். இந்நூல் இப்போது கிடைக்கவில்லை. இதன்

படி ஒன்றை ஆக்கியோரின் உறவினர் கலைப்புலவர் நவரத்தினம் இல்லத்தில் யாழ்ப்பாணத்தில் காணும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

விஞ்ஞான நூல் எழுதியிருப்பவருள் டாக்டர் தி. செ. சௌ. ராஜன், கேப்டன் சேஷாத்திரிநாதன், ராஜேஸ்வரி அம்மையார் ஆர். கே. விஸ்வநாதன், என். கே. வேலன், எஸ். எஸ். இராமசாமி, நடராசன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர். பொ. திருகூட சுந்தரம் பிள்ளை 'விஞ்ஞானப் பெரியோர்கள்,' 'விஞ்ஞானம் எதற்கு?' அப்பாவும் மகனும்,' 'தந்தையும் மகளும்,' 'அண்ணனும் தங்கையும்' என்ற நூல்களை எழுதியுள்ளார். 'குழந்தை எப்படிப் பிறக்கிறது?' 'விவாகமானவர்களுக்கு ஒரு யோசனை' என்ற நூல்களின் ஆசிரியர் என்ற அளவில் இவர் தமிழகத்திலுள்ள அனைவருக்கும் நன்கு அறிமுகமானவர். 'தாய்மை,' 'பத்து மாதம்' என்ற நூல்களை மருத்துவக் கண்ணோட்டத்தோடு டாக்டர் லக்ஷ்மி எழுதியுள்ளார். இந்த நூல்களும், டாக்டர் வேங்கடசாமி எழுதிய 'கர்ப்பஸ்திரீகளுக்கு சில யோசனைக'ளும் பலதரப்பட்ட மக்களுக்கும் அன்றாட வாழ்வில் பயன்படுபவை ஐன்ஸ்டனின் அரிய ஆராய்ச்சிகளைத் தமிழாக்கிய இராஜேசுவரி அம்மையாரின் உழைப்புப் பாராட்டத் தக்கது. வானொலி, அற்புத உலகம், அணுவின் கதை போன்ற நூல்களைப் பல ஆண்டுகளாகப் பெ. நா. அப்புசாமி எழுதியிருக்கிறார். இவருக்கும் ஜே. பி. மாணிக்கத்திற்கும் தமிழ் மக்களின் நன்றி உரியது.

ஹெய்ஸென்பெர்க் எழுதியுள்ள 'நியூக்ளியர் பிசிக்ஸ்' என்ற நூலையும், சர் ஜேம்ஸ் ஜீன்ஸ் எழுதிய 'மிஸ்டீரியஸ் யூனிவர்ஸ்' என்ற நூலையும் தமிழ்ப் பேரா

சிரியர் ந. சுப்பு ரெட்டியார் மொழிபெயர்த்துள்ளார். 'டெலிவிசன்' என்னும் தொலைக் காட்சி பற்றி மிகப் பெருநூல் ஒன்றையும் அவர் எழுதியிருக்கிறார்.

விஞ்ஞானம், பொறியியல் துறைகளில் சில நூல்களே வந்துள்ளன. ஜி. ஆர். தாமோதரன் தொகுத்துள்ள 'வான வெளிப் பயணம்,' 'ராக்கெட்' சந்திரனைப் பற்றி அறிய விரும்புபவர்க்குப் பயன் தரும். சிரஞ்சீவி எழுதிய 'பறக்கும் தட்டு' என்ற நூலும் குறிப்பிடத்தக்கது 'உங்கள் சைக்கிள்' சைக்கிளுக்கு பழுது நேர்ந்தால் அதை எவ்விதம் தீர்க்கவேண்டும் என்று அறிவிக்கிறது. 'நீங்களும் உங்கள் மோட்டாரும்' அகில உலகத் தொழிலாளர் சங்க வெளியீட்டின் மொழிபெயர்ப்பு. பல படங்களும் நிறைந்தது. பொறியியல் மாணவர்களுக்குப் பயன் தருவது. மாணிக்கவாசகத்தின் 'பஞ்சாலைத் தொழில்' இரண்டு பகுதிகளாக வெளியாகியிருக்கிறது,

உடல்நலம் பற்றிய நூல்களை வெளியிடுவதையே குறிக்கோளாகக் கொண்டு பூனாவிலிருந்து ஓரியண்டல் வாட்ச்மென் வெளியீட்டு நிலையத்தார் மேனாட்டு முறைப்படி பணியாற்றி வருகின்றனர். இவர்களுடைய வெளியீடுகளில் ஒன்றான "ஆரோக்கியமும் நீடித்த ஆயுசும்" என்ற மொழிபெயர்ப்பு நூல் தமிழில் எழுந்த மிகச் சிறந்த நூல்களுள் ஒன்று. உடல் நலத்தைப் பேணுவதற்குப் பயன்படும் பல கட்டுரைகளைக் கல்கியில் எழுதிவந்த வி. என். குமாரசாமி என்பவர் 'ஆரோக்கிய ரகசியம்' என்னும் நூலை இயற்றியுள்ளார். இந்த நூலில் உடல் அமைப்புப் பற்றிய செய்திகளையும், யோகாசனப் பயிற்சி பற்றிய விவரங்களையும் தெளிவாக எழுதியுள்ளார்.

கி. ஆ. பெ. விசுவநாதம் எழுதிய தமிழ் மருந்துகள் பயன்மிக்க அரிய செய்திகள் தாங்கியது.

'வானநூல்' சுந்தரமூர்த்தி என்பவரின் அரிய படைப்பு.

தமிழிலும் ஏனைய இந்திய மொழிகளிலும் விஞ்ஞான நூல்களைக் கற்பிக்க இயலாது என்ற தவருன கருத்தை நம்மவர்களே பரப்பி வருவது வெட்கப்படத் தக்கதாகும். ஆங்கில மொழி வாயிலாக இந்தப் பாடங்கள் இந்திய நாடெங்கும் கற்பிக்கப்பட்டது எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட விளைவே, இதன் பயனுக, நமது மொழியைக் குறைவு படுத்திப் பேசும் மனப்பான்மை இருந்துவருகிறது. இவ்வாறு பேசுவோர் இந்திய மொழிகள் வாயிலாகவே விஞ்ஞான நூல்களைக் கற்பிக்கவேண்டுமென்று 1834-லேயே ஆங்கிலேய அறிஞர் பலர் கருதினர் என்பதையும், ஒரு வாக்குக் கூடியதாலேயே, ஆங்கிலம் வாயிலாக விஞ்ஞானக் கல்வி புகட்டப்பட்டதென்பதையும் அறியார்.

1947 முதல் உயர்நிலைப் பள்ளிகளில் எல்லாப் பாடங்களும் தமிழ்மொழி வாயிலாகவே கற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றன. இதன் விளைவாக பாடத் திட்டத்தை ஒட்டி எழுதப்பெற்ற விஞ்ஞான நூல்கள் தமிழில் வெளிவந்துள்ளன. இவை தேர்வுகளில் வினுக் களுக்கு விடை எழுதமட்டுமே பயன்படுகின்றன. விஞ்ஞானச் செய்திகளை அறிய விரும்பும் பொதுமக்க ளுக்கு இவை ஒரு சிறிதும் பயன்படுவதில்லை.

அறிவின் எல்லைகள் நாளுக்குநாள் விரிந்து கொண்டே வருவதாலும், ஆராய்ச்சித் துறைகள் பல்கிப் பெருகி வருவதாலும், விஞ்ஞானம் போன்ற

அறிவியல் துறைகளில் தமிழ்மொழி வளர்ச்சியடைய வேண்டுவது இன்றியமையாதது. இலக்கியத் துறையில் நிகரற்ற உயர்வினை அடைந்துள்ள தமிழ் மக்களின் நாகரிகத்திற்கு இதுவோர் தாழ்வேயாகும். தமிழிலோ ஏனைய இந்திய மொழிகளிலோ விஞ்ஞான நூல்களை எழுதுவது கடினம் என்ற தவறான கருத்தை விஞ்ஞானிகள் சிலர் பரப்பியிருக்கின்றனர். ஆனால், வங்க மொழியில் விஞ்ஞான நூல்கள் மிகுதியாக வெளிவந்திருப்பதை இவர்கள் அறியவில்லை போலும்! செகதீசச் சந்திர போசு போன்ற விஞ்ஞானிகளும் வங்க மொழியில் உரைநடையை நன்றாக எழுதும் ஆற்றல் படைத்த (விஞ்ஞானிகளல்லாத) ஏனையோரும் இத்தகு நூல்களை எழுதியுள்ளனர்.*

புதிய கலைச்சொல் ஒன்றைப் பயன்படுத்தும் பொழுது முதல் முறையில் ஆங்கிலத்திலும் அதை எழுதி, பின்னர் அதே சொல் வரும்பொழுதெல்லாம் தனியே தமிழ்ச் சொல்லை மட்டும் குறிப்பிடுவது ஒரு நல்ல முறையெனலாம்.

---

* "Scientists in this country view with some apprehension all premature attempts to replace English as a medium for teaching of advanced scienees and for the communication of results of scientific investigations, by one of the Indian languages. There is much scope for the popularisation of science text books suited for schools.

Dr. Bose continued, "In Bengal, we have a recovd of good science-writing by men like Jagadish Chandra Bose. All of them were not scientists by profession, but they were all masters of Bengali prose. Flexibility in the expression of fine shades of meaning and precision of expression are matters of slow growth in a language."

—Dr. D. M. Bose, Director, Bose Institute, Calcutta, in his presidential address at the 40th session of the Indian Science Congress at Lucknow on January 2, 1953. (Extract from THE HINDU, Jan 3, 1953, Morning Edition).

வெளிநாட்டார் விஞ்ஞான நூல்களை எழுதும் முறையையும் இங்கே தெரிவிப்பது பொருந்தும். உரிய நூலுக்குத் தொடர்புடைய விஞ்ஞானப் பகுதியை, அறிந்தவர் ஒருவரும், மொழித் துறையில் பயிற்சி யுடைய ஒருவரும் ஆகிய இருவரும் சேர்ந்து கூட்டாகவே இத்தகைய நூல்களை எழுதுவது வழக்கம். இந்த முறையைத் தமிழ் எழுத்தாளர்களும் பின்பற்றினுல்தான் தமிழில் வெளிவரும் விஞ்ஞான நூல்கள் சிறப்பாக அமையும். விஞ்ஞானக் கருத்து, படிப்பவருக்குத் தெரிய வேண்டும் என்பதுதான் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும். இலக்கியச் சிறப்பையோ நடை அழகையோ பெரிதாக எண்ணி, கருத்து விளக்கம் தடைப்பட விடலாகாது.

மேனுடுகளில் விஞ்ஞான நூல்கள் இருவகையாக எழுதப்படுகின்றன. ஹக்ஸ்லி, டிண்டால் போன்றவர்கள் பொது மக்களுக்காக எளிய நடையில் அந்தந்த மொழியில் அமைக்கப்பெற்ற கலைச் சொற்களுடன் விஞ்ஞான நூல்களை எழுதுகின்றுர்கள்.* இதனுல்வேற்று மொழி அறிவில்லாத மக்களும் விஞ்ஞான அறிவுபெற வழி ஏற்பட்டிருக்கிறது. மற்ருெரு வகையான நூல்கள் மாணவர்க்கும் ஆராய்ச்சியாளர்க்கும் பயன்படும் வகையில் எழுதப்பெறுகின்றன. இவ்வகை நூல்களில் பல நாடுகளிலும் வழங்கும் பொதுவான கலைச் சொற்கள் (International Technical Terms)* பயன்படுத்தப்படுகின்றன. இவ்வகைக் கலைச்சொற்களோடு விஞ்ஞானம் படித்த மாணவர் பிற்காலத்தில் வேற்று மொழிகளில் வெளிவரும் ஆராய்ச்சி நூல்களைப் படிப்பது எளிதாகும். பிரெஞ்சு, ஜெர்மன், போன்ற மொழிகளிலே விஞ்ஞான ஆராய்ச்சி பற்றிய புத்தம்

* Science for the Citizen; Mathematics for the Millions.

புது நூல்களும் திங்கள் இதழ்களும் வெளிவருகின்றன. அந்த மொழிகளை அறியாதவரும் புதிய ஆராய்ச்சிகளை அறிந்து கொள்வதற்கு ஏற்ற முறையில் சில நூல்கள் பிரெஞ்சு ஜெர்மன் மொழிகளிலும் வெளி வந்துள்ளன.

விஞ்ஞான நூல்கள் தமிழில் மேலும் பெருகு வதற்கு இடராக இருப்பது நம் மொழியில் கலைச் சொற்கள் இல்லாமையேயாகும். உரிய பொருள் நம் நாட்டில் கண்டு பிடிக்கப்படும்போது அல்லது தோன்றும்போது ஏற்ற சொற்களும் அமைந்துவிடும் நம் நாட்டில் கண்டறியப்படாத பொருள்களுக்குப் பல சொற்களைச் சேர்த்தே புதுப் பெயர்களை ஆக்க வேண்டும். 'நெய்' என்னும் பொருள் நம் நாட்டில் இருக்கிறது; மேலை நாடுகளில் இத்தகைய ஒரு பொருள் இல்லை. குளிர் நிறைந்த நாடுகளாக இருப்பதால் அங்கே 'நெய்' வேண்டுவதில்லை அல்லவா? பொருள் இல்லாததால், 'நெய்' என்னுஞ் சொல்லும் அந்த நாடு களில் இல்லை. Ghee என்னும் சொல் பிற்காலத்தில் ஏற்பட்டது; அது வெளிநாடுகளில் வழக்கில் இல்லை. அந்த நாட்டு மக்கள் 'வெண்ணெய்'யையே அறி வார்கள். ஆதலால் நெய்யைக் குறிப்பதற்கு 'உருக்கிய வெண்ணெய்' (Melted Butter) என்றே அவர்கள் இன்றும் சொல்லி வருகிறார்கள். முருங்கைக்காய் மேனாட்டில் இல்லை; எனவே அதற்கு ஆங்கில மொழி யில் சொல் இல்லை. அதன் உருவத்தைப் பார்த்து Drum Stick என்று ஆங்கிலத்தில் பெயரிட்டனர்.

வெண்டைக்காய், அதன் உருவத்தால், மென் மையால் Lady's finger ஆயிற்று. அவல் என்பதை Beaten Rice என்றும் பொறி என்பதை Puffed Rice (ஊதிப்போன அரிசி) என்றும் கூறுவர். ஆகையால்

நம் நாட்டிலும் கலைச் சொற்களை ஆக்கும்போது தமிழ் மட்டுமே அறிந்த மக்களுக்குப் புரியும்படி கலைச் சொற்களை அமைப்பதே அறிவுடைச் செயல் ஆகும். 'ஆக்சிஜன்' என்றோ 'கான்ஸ்டிடூயன்ட் 'அசெம்பிளி' என்றோ தமிழ் எழுத்தில் எழுதினால் இச்சொற்கள் ஆங்கிலம் அறிந்த தமிழ் மக்களுக்கு மட்டுமே பயன்படும்.

Aeroplane என்பதைக் குறிக்க **பறவைக் கப்பல்** என்ற தமிழ்ச் சொல் வழங்கி வருகிறது. பொதுமக்கள் பறவையைப் பார்த்திருக்கிறார்கள்; கப்பலையும் பார்த்திருக்கிறார்கள். இரண்டையும் இணைத்துப் **பறவைக் கப்பல்** என்ற சொற்றொடர் ஆக்கியுள்ளனர்.

கலைச் சொல்லாக்கம் பற்றி நாவலர் இரா. நெடுஞ்செழியன் 1953-ல் கூறிய கருத்தை இங்கே தருவோம்:-

''தமிழ் மொழி வேர்ச் சொற்கள் உடையது. வேர்ச் சொற்கள் இல்லாத மொழிகள்தான் பிற மொழிகளிலிருந்து சொற்களைக் கடன் வாங்க வேண்டும்.

சான்றாக, ஒரு வேர்ச் சொல்லைப் பார்ப்போம். மூங்கில், ஆதிகாலத்திலிருந்து தமிழ்நாட்டில் இருந்து வருகிறது. முதலில் தமிழர்கள் முகத்தலளவைக்காக மூங்கிலின் இரு கணுக்களுக்கிடையே வெட்டி, அதை 'படி' என்று அழைத்தார்கள்; அதையே குறுக்கே இரண்டாகப் பிளந்து, ஏட்டுச் சுவடியின் மேல் உரைக்குப் பயன்படுத்தி, அதையும் 'படி' என்று அழைத்தனர். அந்தக் சுவடியை விரித்துப் படிப்பதற்கும் 'படி' என்று சொன்னார்கள்; ஏறிப்போகின்ற படிக்கட்டுகளிலும் மூங்கிலைப் பிளந்து பரப்பி அதையும் 'படி' என்று சொன்னார்கள். இவ்வாறு பல பொருள்களுக்குப் பயன்படும் இயற்கையோடு

இயைந்து வேர்ச் சொற்களை உடைய உயர் தனிச் செம்மொழி தமிழ் மொழியேயாகும்.

முதன்முதலில் ஆகாய விமானத்தைப் பார்த்தான் தமிழன், அது பறவை போல் பறந்தும் கப்பலைப்போல் அமைப்பிலும் இருந்ததால் அதைப் பறவைக் கப்பல் என்று பாமர மக்களும் சொல்லத் தொடங்கினர். தமிழ்மொழி இங்கு ஆட்சி மொழியாக இருந்திருந்தால் 'சைக்கிள்' என்ற சொல் தமிழ் நாட்டில் தெரிந்திருக்க இயலாது. பிற நாட்டுப் பொருள்கள் நம் நாட்டுக்கு வரும்போது, அதற்கு உரிய தமிழ்ப் பெயர் ஏற்படவேண்டும். பொருள்கள் இறக்குமதியைக் கட்டுப்படுத்த ஒரு டாரிப் போர்டு இருப்பது போல, கலைச் சொற்களுக்கும் ரா. பி. சேதுப்பிள்ளை, இ. மு. சுப்பிரமணிய பிள்ளை, சச்சிதானந்தம் பிள்ளை போன்றோர் கொண்ட ஒரு குழு இருக்கவேண்டும். சைகிள் வெளிநாட்டிலிருந்து துறைமுகத்தில் இறக்குமதியான உடனேயே, இவர்கள் அதை முதலில் பார்த்து அதற்கு 'ஈருருளி' என்ற தமிழ்ப் பெயரை வைத்து, ஒவ்வொரு சைகிளிலும் 'ஈருருளி' என்று ஒரு சீட்டை அச்சிட்டு ஒட்டினால் துறைமுகத்திலிருந்து சைக்கிள் கடைக்குப் போன உடனே 'ஈருருளி' என்று வியாபாரி சொல்லுவான். தெருவில் அதை ஒட்டிக்கொண்டு போவதைப் பார்த்துக் குழந்தைகளும் பெண்களும் கூட 'ஈருருளி' என்று சொல்லுவார்கள். இவ்வாறு அந்தச் சொல் பரவும். தமிழில் கலைச் சொல்லாக்கத்துக்கு வழி இதுவே (தமிழ் ஆட்சிமொழி மாநாடு, சென்னை, டிசம்பர் 1953.)

"தமிழில் கலைச்சொற்களே கிடையாது" என்று சொல்லுகின்ற பெருமக்கள் நூற்றுக்கணக்கில் உள்ளனர். இவ்வாறு குறை கூறுகின்ற அன்பர்கள் தமிழகத்தில் கலைச் சொற்கள் ஆக்குவதற்கு நடைபெற்

றிருக்கின்ற முயற்சிகளைப் பற்றி அறிய முயலவில்லை. பிறநாடுகளில் எந்த முறையில் கலைச் சொற்கள் உருவாக்கப்படுகின்றன என்பதையும் அறிய முயன்றிருந்தால் அன்பர்கள் குறைகூறுகின்ற திருப்பணியில் ஈடுபடமாட்டார்கள். தமிழில் கலைச் சொற்கள் தோன்றிய வரலாற்றை முதலில் கூறுவோம்.

1931—1932-ல் சென்னை அரசாங்கம் கலைச் சொற்கள் சிலவற்றைத் தமிழில் வெளியிட்டது. இவற்றில் ஓரிரு சொற்களே தமிழ்ச் சொற்களாக இருந்தன. ஆகையால், 1936-இல் புதிதாகக் கலைச் சொற்கள் ஆக்கும் பணியை சென்னை, அண்ணமலை, திருவாங்கூர்ப் பல்கலைக் கழகங்களின் பொருளுதவியுடன் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் தொடங்கியது. விபுலானந்த அடிகளும் ராஜாஜியும் இம் முயற்சிக்குப் பேருதவி செய்தனர். 1938-இல் தமிழ்க் கலைச் சொற்களின் பட்டியல் ஒன்றை இச்சங்கத்தார் வெளியிட்டனர். **கலைச் சொற்கள்** என்னும் இந்த நூலுக்கு முன்னுரை எழுதிய ராஜாஜி இது ஒரு முதற்படிதான் என்று குறிப்பிட்டிருக்கிறார். இந்த நூல் தமிழில் நூல்கள் எழுத வல்லார்க்கு மிகவும் பயன்படும். இது சிறந்த முயற்சி: நல்ல சொற்களை உடையது. இந்தச் சொற்களை ஆசிரியர்கள் பாடங் கற்பிக்கும்போது தாராளமாகப் பயன்படுத்த வேண்டுமென்ற ஆணையை அதே ஆண்டில் சென்னை அரசாங்கம் பிறப்பித்தது. 1940-இல் சென்னையில் அமைச்சரவை மாறியது; சென்னை மாகாணத்திலுள்ள எல்லா மொழிகளுக்கும் பொதுவான கலைச் சொற்களைப் புதிதாக ஆக்கவேண்டுமென்ற முயற்சியும் தொடங்கிற்று. 1946-இல் மீண்டும் காங்கிரசு ஆட்சி ஏற்பட்டது. தமிழிலேயே கலைச் சொற்கள் இருக்க வேண்டுமென்ற கிளர்ச்சி நடை

பெற்றது. அதன் பயனுக அரசாங்கக் கலைச்சொற் கழகத்தில் தக்க தமிழ்ப் பெரியார்களை அமைச்சர் அவினுசிலிங்கம் செட்டியார் சேர்த்துக் கொண்டார். "நல்ல தமிழ்ச் சொற்களே வெளிவரும்" என்ற உறுதி மொழியை 28—10—46-இல் சென்னை அரசாங்கம் கொடுத்தது. இவற்றின் பயனுக ஓரளவு நல்ல தமிழ்ச் சொற்களை ஆக்கி வெளியிட்டுள்ளனர்.

இலங்கை அரசினர் மொழி விசாரணைக் குழு ஒன்றை நியமித்துள்ளனர். இக்குழுவினர் வழக்கில் இருக்கும் சொற்களைச் சேகரித்து வழக்கில் இல்லாத சொற்களுக்கும் புதியசொற்களை ஆக்கியும் விஞ்ஞா ஞானத் துறைகள் அனைத்துக்கும் கலைச் சொற்களை ஆக்கி யுள்ளனர்; தமிழ் மரபு சிதையாமலும் இசைநயம் குறையாமலும் இலக்கண வழுவின்றியும் இவை ஆக்கப் பட்டிருப்பதால், புதிதாகப் படிப்பவர்க்கு இவை சில சிலசமயம் வியப்பூட்டும். இப்பெரு முயற்சி மிகவும் பாராட்டுதற்குரியது. உடலின் உறுப்புக்களைப் பற்றிப் பல வண்ணப் படங்களுடன் தமிழில் அழகிய சிறு நூல் ஒன்றை இவர்கள் ஜப்பானில் அச்சிட்டு வெளியிட் டுள்ளனர். தமிழ்ப் பற்றுடைய ஒவ்வொருவரும் காண வேண்டிய நூல் இது.

பிறமொழியிலுள்ள கலைச்சொற்களைப் பயன் படுத்துவதை குறைத்தால் அந்த இடத்தில் தானுகவே நம் மொழியில் கலைச்சொற்கள் அமைந்துவிடும், இது இந்தோனேசியாவில் அனுபவ வாயிலாகக்கண்டறிந்த உண்மை. அந்த நாட்டில் 1942 முதல் 1945 வரை சப்பானியருடைய ஆட்சி நடைபெற்றது. அப்போது டச்சு, ஆங்கிலம் ஆகிய மொழிகள் தடை செய்யப் பெற்றிருந்தன. அதன் பயனுக அந்த மூன்று ஆண்டு களில் இந்தோனேசிய மொழி பெருவளர்ச்சி அடைந்

தது. டச்சு மொழியில் வழங்கிய சொற்களுக்குப் பொருத்தமான சொற்கள் இந்தோனேசிய மொழியிலும் அமைந்தன.

இந்தியாவில் வழங்கும் எல்லா மொழிகளுக்கும் பொதுவான கலைச் சொற்களின் பட்டியல் ஒன்றை உருவாக்க ஒரு முயற்சி நடைபெற்று வருகிறது. இதுவும் வன்மையாகக் கண்டிக்கத் தக்கதாகும். பொதுவான சொற்கள் வழங்க வேண்டுமென்றால் ஏனைய நாடுகளிலும் வழங்கும் கலைச்சொற்களையே பயன்படுத்தலாமே? இதற்கு ஒரு சான்று கூறுவோம். அராபியர் தரையிலேயே உட்கார்ந்து, கைகளைப் பயன்படுத்தியே உண்ணுவர். எனவே, TABLE FORK போன்ற சொற்களுக்கு அரபுமொழியில் சொற்கள் கிடையாது. சிரியா, எகிப்து, மெசபடோமியா ஆகிய நாடுகள் யாவும் அரபு மொழியையே பேசினாலும் கூட, TABLE என்ற சொல்லுக்குச் சிரியாவில் இத்தாலியச் சொல்லையும், எகிப்தில் கிரேக்கச் சொல்லையும், மெசபடோமியாவில் பெர்சியச் சொல்லையும் பயன் படுத்துகின்றனராம்,

ஆங்கில மொழியில் ஒவ்வொரு சொல்லும் எப்படி ஏற்பட்டதென்பதைப்பற்றிப் பெரிய வரலாறு உண்டு. சான்றாக COCK TAIL என்ற சொல் எப்படி உண்டாயிற்று என்பதைப்பற்றிய ஆராய்ச்சிகளை ஒரு தனி நூலாகவே வெளியிடலாம். விஞ்ஞானச் சொற்கள் அவ்வப்போது உரிய கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட போது அமைந்தன. எடுத்துக் காட்டாக, 1879-இல் டெலிபோன் கண்டுபிடிக்கப்பட்டது. 'டெலிபோன்' என்ற பெயர்ச் சொல்லும் அப்போதுதான் ஏற்பட்டது. உரிய வினைச்சொல் (TO TELEPHONE) 1886-இல்தான் உருவாயிற்று. எனவே கலைச் சொற்கள்

தமிழ் மொழியிலும், காலப்போக்கில் தானே அமையும்? ஒரு முழுக்கிலேயே முத்து எடுத்துவிட முடியுமா?

கடற்படை பற்றிய சொற்கள் தமிழில் இல்லை. வேற்று மொழிகள் பலவற்றிலும் இந்தத் துறையில் உரிய சொற்கள் இல்லை. அதற்குக் காரணம், அந்த மொழிகளின் வளக் குறைவு அன்று. கப்பல் சாத்திரம் பற்றிய சொற்கள் ஆங்கிலத்தில் மட்டுமே இருக்கின்றன எனின் அந்த மொழி பேசுவோர் கடல் வாணிபத்திலும், கடற் படை வல்லமையிலும் சிறந்து விளங்குவதே காரணம். ரஷ்ய மொழி உட்பட ஏராளமான மொழிளில் ஆங்கிலத்திலுள்ள கலைச் சொற்களையே கடற்படை அலுவல்களுக்கும் பயன் படுத்தப்படுகின்றன. இதைப் போலவே 'கோல்ப்,' 'கிரிக்கட்' பற்றிய சொற்களும் ஆங்கிலத்திலிருந்தே வேற்று மொழிகளுக்குச் சென்றுள்ளன.

நிலக்கரியும் எஃகும் மிகுதியாயுள்ள இங்கிலாந்தில் பழங்களே இல்லை எனலாம். இதன் பயனாக, பழங்களைப் பற்றிய சொற்கள் பழங்கள் மிகுதியாக உள்ள ஸ்பெயின் நாட்டிலிருந்து கடன் வாங்கப்பட்டவையே. சான்றாக ஒன்று கூறுவோம். கிச்சிலிப் பழத்தை ஆங்கிலத்தில் 'ஆரஞ்சு' என்பர், ஸ்பானிய மொழியில் இச் சொல் NORANGE என வழங்குகிறது. A NORANGE என்ற சொற்கள் ஆங்கிலதில் AN OR ANGE என்று கையாளப் பெற்றன. நிற்க, 'ஆரஞ்சு' என்ற சொல்லை 'ஆறஞ்சு' என்று எழுதினால், அதை நல்ல தமிழ்ச் சொல்லாகக் கொள்ளலாம். ஒரு பழத்தை இரு கூறாகப் பிய்த்துப் பாருங்கள். ஒரு பகுதியில் 6 சீத்துகளும் மற்றொரு பகுதியில் 5 சீத்துகளுமே பெரும்பாலும் காணப்படும். ஆறும் ஐந்தும் 'ஆறஞ்சு' தானே!

சட்டங்களில் பயன்படுத்தப்படும் சொற்களையும் நீதி மன்றங்களில் வழங்கும் சொற்களையும் ஆராய்வோம். லத்தீன் சொற்களையே ஐரோப்பிய மொழிகள் யாவும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. ஏன்? பல நூற்றுண்டுகளாக ஐரோப்பிய நாடுகளில், லத்தீன் மட்டுமே எழுத்து மொழியாயிருந்தது. வேறு மொழிகள் அக்காலத்தில் பேச்சு மொழியாகவே இருந்தன. அதனால் சட்டம் வகுப்பதில் வல்லுநரான ரோமர்கள் சட்டங்களை லத்தீன் மொழியிலேயே எழுதுவாராயினர்.

பத்திரிகைகளின் தலைப்பில் சுருங்கிய இடத்தில் பல சொற்களை வெளியிட இயலாததால், அவ்வப்போது வேண்டும் புதுச் சொற்களை அமெரிக்கப் பத்திரிகைகள் ஆக்கிக் கொள்ளுகின்றன. சான்றாக, 'யுனெஸ்கோ' "UNESCO (United Nations Educational Scientific & Cultural Organization), 'பவ்' Pow(Prisoner of war) என்ற சொற்களையும் கூறலாம். இன்னும் 'Japanese' என்பதற்கு Japs, Very Important Person என்பதற்கு VIP என்பன போன்ற சுருக்கமான எழுத்துடைய சொற்களையும் அமைத்துள்ளனர். இவ்வாறு, அன்றட அவசரத் தேவைக்காக விரைவாகப் புதுச் சொற்களை ஆக்கி மொழியை வளப்படுத்தி வருவது பாராட்டுக்குரியது.

சில சொற்களை ஒரு சொல்லுக்கு முன்னே, பின்னே சேர்த்துப் புதிய சொற்கள் ஏற்படுத்துவது ஆங்கில மொழியில் கையாளப்படும் ஒரு வழக்கம். சான்று:

**Prefix** De-ration; un-lawful

**Suffix** Cavalcade, Arcade, Brigade, Esplanade, Marmalade, Parade, Lemonade.

சில பொருள்களை விற்கும் வணிகர்கள் அவ்வப் போது உண்டான புதுப் பொருள்களுக்குப் பெயரிடு வாராயினர். Vaseline, Linotype, Thermos போன்ற சொற்கள் இவ்வாறு உண்டான சொற்களுள் சில. மேலும் வணிகர், தாம் விற்கும் பொருளுக்கு அடை யாளமாக வைக்கும் பெயர் (Trade Mark) பற்றி நீதி மன்றங்களில் வழக்குகள் ஏற்பட்டன. பால்தூள் தயாரித்த ஒருவர் தம் பொருளுக்கு MILK என்று பெயரிட்டு உரிமை கேட்டார். நீதிமன்றத்தார் அதை மறுத்தனர்! உடனே அவர் MILK என்ற சொல்லில் உள்ள எழுத்துக்களைத் தலைகீழாகமாற்றி KLIM என்று ஒரு சொல் அமைத்தார். இந்தச் சொல் பால்தூளைக் (Powderd Milk) குறிக்கவும் பயன்படுகிறது. அமெரிக்க வானிலை ஆராய்ச்சி நிலையத்தார் 1926-ல் சில நகரங் களில் ஒரு புதுவகையான இயற்கை நிலையைக் கண்டனர். புகை மேகம் இரண்டும் கலந்த நிலை இருந்ததாம். உடனே அந்த நிலைக்கு SMOG என்று பெயரிட்டனர். இச்சொல் SMOKE FOG என்ற இரு சொற்களின் புணர்ச்சி. இவ்வாறே 'ரேடியோ' 'டெலிகிராம்ஸ்' என்ற சொற்களிலிருந்து Radiogram என்ற சொல்லும் Hydro Electricity என்பவற்றி லிருந்து HYDEL என்னும் சொல்லும் பிறந்தன. வழக்கிலிருந்த ஒரு சொல்லில் ஒரு பகுதியை வெட்டி விட்டு (Clipping or Back formation) புதுச்சொல் அமைத்தனர். சான்று, Photograph என்பதிலிருந்து photo என்ற சொல் ஏற்பட்டது. சொற்களின் தோற்றம், வரலாறு, அவற்றை முதலில் பயன்படுத் தியவர் பற்றிய ஆராய்ச்சிகள் பிற நாடுகளில் மிகுதி யாக உண்டு, இவ் விவரங்களை மொழியாராய்ச்சி இதழ் களில் (Philological journals) காணலாம்,

மருத்துவர்கள் ஆக்கிய சொற்களும் உண்டு. சான்றாக இரண்டைத் தருவோம்.

TB Tuberculosis
TPR Temperature, Pulse, Respiration

இதழ்களில் வேடிக்கையான பகுதிகளை எழுதுபவர்களும், திரைப்படக் கதையாசிரியர்களும், விளம்பரங்களை எழுதிக் கொடுப்பவர்களும்கூட பிற மொழிகளில் சொல்லாக்க அலுவலில் முனைந்துள்ளனர். எனவே, கலைச் சொல்லாக்கம் ஒரு சிலராலோ, ஒருசில நாட்களிலோ நடைபெற முடியாது.

இலங்கையில் ரப்பர், தேயிலைத் தோட்டங்களில் பயன்படுத்தப்படும் கலைச் சொற்கள் சிலவற்றைத் தருவோம்.

| | |
|---|---|
| Sifting | —சல்லடை |
| Driers | —அடுப்பு |
| Packing | —பெட்டி அடைப்பு |
| Fixing Chest | —பெட்டி சரிக்கட்ட |
| Stencilling | —விலாசம் அடிக்க |
| Stitching Tets | —படங்கு தைக்க |
| Plucking | —கொளுந்து |
| Field weight | —மலை நிறுவை |
| Made Tea weight | —காய்ச்சிய தேயிலை நிறுவை |
| Cootch & wildgrowth | —அருகு காட்டுச் செடி |
| Mossing & Ferning | —பாசிமீளுப்புல் |
| Tipping | —மட்டக் கொளுந்து |
| Weeding | —புல் வெட்டு |
| Collecting Prunings | —மாறு அரிப்பு |
| Burying Prunings | —மாறு புதைப்பு |
| Holing | —குழி வெட்டு |
| Filling | —குழி மூடுதல் |
| Lopping | —குழை வெட்டு |

இவைபோலப் பல தொழில்களிலும் நாள்தோறும் வழங்கிவரும் சொற்களைத் தொகுக்க வேண்டும். அது சிறந்த தமிழ்ப் பணியாகும்

கலைச் சொல்லின் பொருளுக்கேற்ப தங்கள் மொழியிலேயே சப்பானியர் உரிய சொற்களை அமைத்துக் கொள்ளுகின்றனர். சான்று:

| ஐரோப்பிய மொழிகளில் வழங்கும் சொல் | சப்பானில் வழங்கும் சொல் | சப்பானிய மொழியில் அச் சொல்லின் பொருள் |
|---|---|---|
| Railway | Tetsu-do | இருப்புப் பாதை |
| Battery | Den-chi | மின்கலம் |
| Barometer | Sei-u-kei | வெயில்-மழை அளவு கருவி |
| Asbestos | Seki-men | கல் பஞ்சு |

இந்திய நாடு முழுவதற்கும் பொதுவாகச் சில கலைச் சொற்களை எல்லா மொழிகளிலும் பயன்படுத்த இந்திய அரசு முயன்று வருகிறது. இது, தமிழர் ஏற்க இயலாது என்பது கீழ்க்காணும் 'கலைச் சொற்களி'னின்றும் தெரியவரும்.

| | | |
|---|---|---|
| RAILWAY | — | தூப சகட மார்க |
| WATERWAY | — | ஜல பாதை |
| FISHERY | — | மச்ச க்ஷேத்திரம் |
| TIE | — | கண்டக் லங்கோடு (கண்டக் கழுத்து, லங்கோடு—கோவணத் துணி.) |

கலைச்சொல்லாக்கம் என்பது மிகப் பெரிய பணியென்பதும்; போதிய கலைச் சொற்கள் இல்லாத குறை

நமது தமிழ் மொழிக்கு மட்டும் சிறப்பாக உரிய தனை அன்று என்பதும், புதிய கலைச்சொற்களை ஆக்குவதற்கு தகுந்த வளம் ஏனைய மொழிகளைப்போல தமிழ் மொழியிலும் இருக்கிறது என்பதும், இன்றியமையாத இடங்களில் பிற மொழிகளிலிருந்து கலைச் சொற்களை எடுத்துக்கொள்ளலா மென்பதும் இதுவரை கூறியவற்றால் விளங்கும். ஆங்கிலத்தில் புதுச் சொற்களின் பட்டியல்களும் இடையிடையே வெளிவருகின்றன.* தமிழறிஞர்களும் வாதாடுவதை விட்டொழித்து கலைச் சொல் ஆராய்ச்சியில் ஈடுபடுவார்களானால் தமிழ் மொழி மேலும் வளம் பெறும்.

கலைச்சொல் குழுவினர் முன்னுள்ள கேள்விகள் எது தமிழ்ச்சொல்? தமிழ் ஆட்சி மொழி என்றால் என்ன பொருள்? என்பவையாகும். ஒரு சிலருடைய கருத்து என்னவெனின், ஆங்கிலச்சொற்களை அப்படியே தமிழில் எழுதிவிட்டால் போதும் என்பதாகும். சான்றாக, கவர்னர், கலெக்டர் என்பனவற்றை யெல்லாம் அப்படியே தமிழில் எழுதிவிடலாம் என்பது அவர்களுடைய கருத்து. வேறு சிலருடைய கருத்து அந்தச் சொல்லில் உள்ள பொருளுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்களைப் புதிதாக உருவாக்க வேண்டும் என்பது. இவ்வாறு சிலர் கலெக்டர் என்ற சொல்லுக்கு 'தண்டல் நாயகம்' என்ற தமிழ்ச் சொல்லை உண்டாக்கி யுள்ளனர். இதுவே பெருவழக்காகத் தமிழகமெங்கும் வழங்கி வந்தது. ஆனால் ஒரு அமைச்சர் இதைப் பற்றி மிகவும் வருத்தப்பட்டார், "தண்டல் நாயகம் என்றால் வரி வாங்குபவர் என்று பொருள். இன்று கலெக்டர்களுக்கு வரி வசூல் செய்வதா முக்கிய வேலையாக இருக்கிறது? மக்களுடைய நலங்கருதி அந்த

* Dictionary of New Words in English—Paul C. Berg Allen Unvin.

மாவட்டத்தில் நடைபெறும் பலவகையான பொதுச் செயல்களுக்கெல்லாம் அவர் பொறுப்பாக இருக்கின்றார். மாநில அரசியலாரின் பிரதிநிதியாகவும் அவர் அந்த மாவட்டத்தில் பணியாற்றுகின்றார். அமைச்சர்களை வரவேற்பதும், மாவட்டங்களுக்குள் அவர்கள் செய்யும் சுற்றுப் பயணத்திற்கு ஏற்பாடு செய்வதும் கலெக்டர்களுக்கு இப்போது முக்கியமான பணியாக ஆகிவிட்டதே. அப்படியிருக்க முன்னொரு காலத்தில் அவர்கள் செய்துவந்த வேலைகளில் முக்கியமாக இருந்த வரிவசூலையொட்டி அவர்களுடைய பதவிக்கே பெயர் அமைத்து தண்டல்நாயகம் என்ற சொல்லை உருவாக்கியுள்ளனர். அதைக் கேட்கும் பொழுது என் காதிலே ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவது போலிருக்கிறது" என்றார் அந்த அமைச்சர். மாவட்ட ஆட்சித் தலைவர் என்ற சொல்லே இப்போது வழங்கி வருகிறது.

புதிய சொற்களை உண்டாக்கினால் அந்தச் சொற்களுக்குப் பொருள் என்னவென்பது பற்றி நீதிமன்றங்கள் முடிவு செய்வதில் குழப்பம் ஏற்பட்டு அதனால் மக்களுடைய வாழ்க்கையில் பல இன்னல்கள் ஏற்படும் என்ற கருத்தையும் சிலர் வலியுறுத்தி வருகின்றனர். மக்களுக்கு விளங்கும் மொழியில் ஆட்சி நடைபெற வேண்டியது நோக்கமானால் நல்ல தமிழில் தான் புதிய சொற்களை உருவாக்க வேண்டுமென்பது படித்த இளைஞர்களுடைய கருத்து. மக்களுடைய ஆதரவும் ஓரளவு இந்தக் கருத்துக்கு இருந்துவருகிறது. வெளிநாட்டிலிருந்து பல பொருள்கள் நம் நாட்டிற்கு வருவதால் அந்தப் பொருள்களுடனேயே சொற்களும் வருகின்றன. நம் நாட்டிலுள்ள சாதாரண மக்களுக்கும் நூற்றுக்கணக்கான ஆங்கிலச் சொற்கள்

தெரியும். திருநெல்வேலி மாவட்டத்தில் இரயில் நிலையத்திலிருந்து பல மைல்களுக்கு அப்பாலுள்ள ஒரு சிற்றூரில் வாழும் ஒருவன் ஒரு சைக்கிளைப் பயன் படுத்துகிறான் அல்லது ஒரு சைக்கிள் கடையை வைத்திருக்கிறான். அதன் பயனாக அவனுக்கு ஏராளமான ஆங்கிலச் சொற்கள் தெரிந்துவிடுகின்றன. சைக்கிள் பங்சர் ஆகிவிட்டது. பிரேக் சரியில்லை, வீல் மாற்ற வேண்டும், போக்ஸ் கம்பி கெட்டுவிட்டது, பெடலும் சீட்டும் மாற்றவேண்டும். ஸ்டாண்ட், காரியர், செயின், ஹாண்டில் பார், டைனமோ லைட், டயர், டியூப்—இப்படி எத்தனையோ சொற்கள் மழைக்குக் கூடப் பள்ளிக்கூடத்தில் ஒண்டாதவனுக்கு, எழுதப் படிக்கத் தெரியாதவனுக்குத் தெரிந்துவிடுகின்றன. இத்தனைச் சொற்களுக்கும் தமிழாசிரியர்கள் தமிழ்ச் சொற்களை உருவாக்கிவிடுவார்கள். ஆனால் மக்களிடத்திலே அவர்கள் புதிதாக உருவாக்கும் சொற்கள் பரவி விடுமா? பரவினாலும் அந்தச் சொற்கள் புரியுமா என்பது ஒரு புதிராக இருக்கின்றது.

குழப்பமும் கருத்துவேறுபாடும் தொடர்ந்து இருக்குமென்றும் பிறகு இந்தியை புகுத்தலாமென்றும் சிலர் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். கலைச்சொற்களுக்கு ஸ. ஷ. ஜ. போன்ற எழுத்துக்களை, தேவைப்படுமிடத்துத் தங்குத்தடையின்றிப் பயன் படுத்துவதில் தவறு ஒன்றுமில்லை. இலக்கிய நூல்களிலுங் கவிதைகளிலும் அந்த எழுத்துக்களை நீக்கித் தமிழின் ஒலி நயத்தைப் பேணும் அளவிலேயே நாம் நமது தமிழ் ஆர்வத்தை அடக்கிக் கொள்ளுவது நலம் பயக்கும்.

இவ்வளவு சிக்கலான நிலையில் அரசினரும், இளைஞர் உலகும், தமிழாசிரியர்களும், தொழில் தலைவர்களும், தமிழ் மொழியை ஆட்சி மொழியாகக்

கொண்டுவருவதில் ஆர்வமுள்ள அரசியல் தலைவர்களும் ஒன்றுகூடி ஒருவருக் கொருவர் விட்டுக்கொடுத்து ஓரளவு நியாயமான உடன்பாட்டுக்கு வந்து ஆக்க வேலைகளிலே ஈடுபடுவார்களானால் தமிழுக்கு வாழ்வு உண்டு. இல்லையேல் நாம் ஆக்கவேலைக்கு உதவாதவர் களாக வாய்ச்சொல் வீரராக மட்டும் அமைந்து விடுவோம்.

# 16. மொழிபெயர்ப்பு

நாள்தோறும், நாழிகைதோறும் அறிவு நூல்கள் பல நாடுகளில், பிறமொழிகளில் வெளிவந்த வண்ணமாக உள்ளன. வேறுபட்ட துறைகளில் முன்னெட்டிச் செல்லும் உலக நாடுகளுடன் போட்டியிட வேண்டுமெனின், புதிய அறிவுச் செல்வத்தை நாமும் பெற வேண்டும். எனவே மொழிபெயர்ப்பு வாயிலாக நமது மொழியை வளம்பெறச் செய்வது மிகவும் இன்றியமையாதது. நமக்கு மருத்துவர், பொறியியற்கலை வல்லுநர் ஆசிரியர்கள் ஆகியோர் எத்துணைப் பேர் வேண்டுமோ அவ்வளவு மிகுதியாக மொழிபெயர்ப்பாளர்களும் நமக்கு வேண்டும். ஆங்கில மொழியை நன்கு பயின்ற ஒவ்வொருவரும் ஒரு நூலை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்ப்பாராயின் எத்துணைச் சிறந்த பணியாக இருக்கும்?

தத்துவ சாத்திரம், சமய இலக்கியம் இரண்டும் நீங்கலாக ஏனைய எல்லாப் பொருள்களையும் பற்றித் தமிழில் பிற மொழிகளிலிருந்து நூல்கள் மொழிபெயர்க்கப்பட வேண்டும், சிறப்பாக, புதிய கண்டுபிடிப்புக்களைப் பற்றி நாம் செவ்வையாக அறிந்துகொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே இவ்வகை நூல்களை மொழி பெயர்ப்பவர்கள் மொழியறிவு நிரம்பப் பெற்றவர்களாக இருப்பதோடு

விஞ்ஞானம், பொறியியற்கலை ஆகிய நூல்களில் நல்ல புலமையும் அறிவுத் துறையில் பேரார்வமும் உடையவர்களாகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் மொழி பெயர்க்கப்படும் நூல்கள் சிறந்து விளங்கும்.*

மொழிபெயர்ப்பாளர் சிலர் ஆங்கிலச் சொல்லைத் தமிழில் அப்படியே எழுதுகின்றனர். FRANCE (பிரான்சு) என்பது போன்ற சொற்களை அப்படியே தமிழில் எழுத விருப்பமுள்ள அன்பர்கள், "எப்" (F) என்னும் எழுத்தைத் தமிழிற் சேர்க்கவும் முயன்றனர். ஒவ்வொரு மொழியிலும் சில எழுத்துக்கள் இருப்பதும் வேறு சில எழுத்துக்கள் இல்லாதிருப்பதும், அந்தந்த மொழியின் சிறப்பு. பர்மிய மொழியில் 'ர' கரகம் கிடையாது; 'ழ' தமிழின் தனிச் சிறப்பு: நான்கு வகை 'க' இருப்பது இந்தியின் இயல்பு. சப்பானிய மொழியில் ல சீன மொழியில் ற வங்க மொழியில் வ ஆகிய எழுத்துக்கள் இல்லை. ஆகவே ஒரு மொழியிலுள்ள எழுத்துக்கள் ஏனைய மொழிகளிலும் இருத்தல் வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறான கருத்தாகும்.

சில சொற்களை இரு மொழிகளிலும் வழக்காற்றுச் சொற்களாகி விட்டன. சான்றாக.

---

* In the first place it is not merely a knowledge of English that is required of the translator; but he should also be a good scholar of the subject which is being translated. We should have efficient medical practitioners if books on medical science are to be translated, good engineers if books on engineering are to be translated and first grade scientists if scientific books are to be translated. The spirit of the subject-matter has to absorbed by the translator if the books translated are to be of any use......With the rapidly developing modern literature on technical and scientific subjects, the translator must keep pace with the requirements of modern knowledge—Sri A. Ramasamy Mudaliar in an address to the Secondary School Teachers' Association, Mayavaram on 31-3-'53.

| | |
|---|---|
| வங்கி | Bank |
| ஈரங்கி | Hearing |
| கிருஸ்ணுயில் | Kerosine Oil |
| ஆஸ்பத்திரி | Hospital |
| உயில் | Will |
| சீசன் | Season |
| வில்லன் | Villain |
| சுலோகம் | Slogan |
| டம்ளர் | Tumbler (குவளை, லோட்டா போகணி) |
| போத்தல் | Bottle |
| லாந்தர் | Lantern |
| பாதை | Path (Foot path) |
| கமான் "Come on" வளைவு | Welcome Arch |
| சிமிட்டி விளக்கு | Chimney |
| கிறுக்கு | Crack |
| (பற்று வரவு) கலம் | Column |
| கார்க்கு, காரக்கு | Cork |
| திருக்கு | Trick |
| அண்டிமென் | On demand |
| கண்புறம் | Confirm |
| ராஸ்கல் | Rascal |

தவறணை என்னும் சொல் ஆங்கிலச் சொல்லாக இருந்தாலும் இலங்கையில் சாராயத் தவறணை எனத் தமிழ்ச் சொல் போன்று வழங்கி வருகிறது. தவறு களுக்கு அணையாக இருப்பது தவறணை என்றும் எனவே இது தூய தமிழ்ச் சொல் என்று சொற்

போரிடுவோரும் உள்ளனர். ஆங்கிலச் சொற்கள்—ஒன்றிரண்டு—மருவி வழங்கும் போது, தமிழில் மாறு பட்ட பொருளுடன் விளங்குன்கிறன. RANK என்னும் ஆங்கிலச் சொல் 'ராங்கி' என்னும் வசைக் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

Power energy capacity என்ற சொற்களை 'சக்தி' என ஒரே சொல்லில் தமிழில் தருவதை விட விசை, ஆற்றல், திறன் (கொள் அளவு) எனலாம்.

ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்க்கும் போது உரிய சொல்லின் ஆழ்ந்த பொருளைக் கொடுக்காமல் மேலெழுந்த வாரியாக ஒரு கருத்தைப் பல மொழி பெயர்ப்பாளர்கள் தெரிவித்து வருகின்றனர். சான்றாக policy, principle, creed, Doctrine, Idea என்ற ஆங்கில சொற்கள் எல்லாவற்றுக்கும் கொள்கை என்ற தமிழ்ச் சொல்லையே பலர் பயன்படுத்தி வருகின்றனர். ஆனால் இவை ஒவ்வொன்றும் கருத்தில் வேறுபட்டவை. நுண்ணிய கருத்தைத் தெரிவிக்க வேண்டுமானால் மொழிபெயர்ப்பாளர்கள் இரு மொழிகளிலும் ஆழ்ந்த பயிற்சி உடையவராக இருக்க வேண்டும்.

ஆங்கில மொழிக் கலப்பால், பிறமொழிகளிலி ருந்து சொல்லுக்குச் சொல் மொழிபெயர்க்கும் தவறான முறை தமிழகத்தில் பரவியிருக்கிறது. இவ்வழுவுக்குச் சான்றாகப் பின்வருவனவற்றைக் கூறுவோம்:

'அருவி' என்னும் நல்ல தமிழ்ச் சொல் இருக்க, 'நீர் வீழ்ச்சி' என்னும் சொற்றொடரைச் சிலர் பயன் படுத்தி வருகின்றவர். இது WATERFALLS என்னும் ஆங்கிலச் சொற்றொடரிலுள்ள சொற்களின் நேர் மொழி பெயர்ப்பாகும், இதைப் போன்றே FILMFANS ASSOCIATION என்பதற்கு 'சினிமா விசிறிகள் சங்கம்' என்று சிலர் மொழிபெயர்த்து வருகின்றனர்.

ஆங்கிலச் சொற்றொடரிலுள்ள FANS என்னும் சொல் 'FANATICS' என்னும் சொல்லின் சுருக்கம் என்பதை அவர்கள் அறியவில்லை போலும். இதைப் போலவே From time to time என்பதற்கு 'காலத்துக்கு காலம்' என்றும் Light house என்பதற்கு வெளிச்ச வீடு என்றும் தவருக மொழி பெயர்த்து வருகிருர்கள். இவற்றுக்கு முறையே 'படம் பார்ப்பவர்கள் கழகம்' 'அவ்வப்போது அல்லது இடையிடையே', 'கலங்கரை விளக்கு" என மொழி பெயர்ப்பதே பொருந்தும். 'All the three lectures' என்பதை 'எல்லா மூன்று சொற்பொழிவுகளும்' என்று தமிழ்ப் படுத்தும் மொழி பெயர்ப்பாளர்களும் இருக்கிருர்கள். 'மூன்று சொற்பொழிவுகளுமே' என்று மொழிபெயர்ப்பதே சரியாகும். Strike the iron while it is hot என்பதைச் 'சூடாயிருக்கும் போதே இரும்பை அடித்துக்கொள்' என்று சிலர் மொழி பெயர்த்து வருகின்றனர். 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்று இதை மொழி பெயர்த்திருந்தால், படிப்பவர் பொருளை எளிதில் உணர்ந்து கொள்வர். 'Between the devil and the deep sea' என்பதை 'இரு நாய்களுக்கிடையே அகப்பட்ட எலும்பு போல' என்று மொழி பெயர்ப்பதே பொருந்தும். இன்னும் சிலர் TOOK PART என்பதற்கு 'பங்கெடுத்துக் கொண்டனர்' என்றும், Did not take much time என்பதற்கு 'அதிக காலம் எடுத்துக் கொள்ளவில்லை' என்றும் Beware of thieves திருடர்கள் ஜாக்கிரதை Spit here துப்பு இங்கே push தள்ளு என்று தமிழில் எழுதி வருகின்றனர். இவற்றிற்குப் பதிலாக 'ஈடுபட்டனர்; கலந்து கொண்டனர்' என்ற சொற்களையும் 'நெடு நேரம் ஆகவில்லை' திருடர்கள் இருக்கக்கூடும் கவனமாக இருக்கவும். இங்கே துப்புக. தள்ளுக. என்று குறிப்பிட்டால், தமிழ் மரபு கெடாது.

பழமொழிகளைப் பிற மொழிகளிலிருந்து தமிழாக்கும்போது தமிழில் உள்ள பொருத்தமான பழமொழிகளைக் குறிப்பிடுவதே நலம்.

பல சொற்களுக்குப் பண்டைத் தமிழ் இலக்கியங்களிலிருந்து பொருத்தமான சொற்களைப் பொறுக்கி இக்கால நூல்களில் கையாளலாம். சான்றாக, Irrigation என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு ஏற்ற 'நீர்க்கால் யாத்தல்' என்ற சொற்றொடர் பரிமேலழகர் உரையிலும் யாழ்ப்பாணத்துப் பாலபாட புத்தகங்களிலும் காணப்படுகிறது. பன்மொழிப் புலவர் கா, அப்பாத்துரை ஆக்கியுள்ள கழகத் தமிழ்க் கையகராதி (தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு) என்னும் நூலில் ஆங்கிலச் சொற்கள் பலவற்றிற்கு நல்ல தமிழ்ச் சொற்கள் கொடுக்கப் பட்டுள்ளன.

நாளிதழில் வெளிவரும் மொழிபெயர்ப்பில் ஏற்படும் சிக்கல்கள் பல பொருளைத் தராமல், ஆங்கிலத்திலிருந்து சொற்களைப் பெயர்த்துத் தமிழில் எழுதுவதால், படிப்பவர்க்கு ஒரு தடை உண்டாகிறது. இதைப் பற்றி, மலேசிய நாளிதழான தமிழ்நேசன் ஆசிரியர் முருகு சுப்பிரமணியம் பயன்மிக்க ஒரு கட்டுரையை இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கில் படித்தார். தமிழ் வழங்கும் நாடுகள் அனைத்திலும் ஒரே வகையான கலைச் சொற்களைக் கையாளுவதே சாலச் சிறந்தது என்பதையும் இவர் வற்புறுத்தியிருக்கிறார்.

ஒரே கருத்தை இருவிதமாக மொழிபெயர்ககலாம் என்பதற்கு எடுத்துக் காட்டாக, பின்வரும் பகுதிகளைத் தருவோம்.

| ஆங்கிலத்தில் வந்த செய்தி | இந்திய வானொலி நிலைய மொழிபெயர்ப்பு | இலங்கை வானொலி நிலைய மொழிபெயர்ப்பு |
|---|---|---|
| The Flags were half-mast | கொடிகள் அரைக் கம்பத்தில் பறந்தன | கொடிகள் தாழப் பறந்தன |
| He unveiled the portrait | அவர் படத்தைத் திறந்து வைத்தார் | அவர் படத்தைத் திரை நீக்கம் செய்தார் |
| No. 10, Downing Street | டவ்னிங் தெரு 10-ம் நம்பர் | டவுனிங்குச் சாலைப் பத்தாம் இலக்கம் உள்ள மாளிகை |
| He placed a wreath | பூச் செண்டுகளை வைத்தார் | மலர் வளையங்களைக் காணிக்கையாக வைத்து மரியாதை செலுத்தினர் |
| The new scheme must be with-drawn | புதிய திட்டம் வாபஸ் பெறப் பட வேண்டும் | புதிய திட்டம் கைவிடப்பட வேண்டும் |
| Nehru opened the Conference | நெஹ்ரு மஹாநாட்டைத் திறந்து வைத்தார் | மாநாட்டை நேரு தொடங்கி வைத்தார் |
| We fail to follow their activities | அவர்களுடைய நடவடிக்கைகளை நாம் கவனிக்கத் தவறுகிறோம் | அவர்களுடைய செயல் முறைகளை நாம் கவனிப்பதில்லை |

ஆங்கிலத்திலிருந்து சொல்லுக்குச் சொல் மொழி பெயர்ப்பது தவறான முறையாகும். இத்தகைய தவறுக்கு எடுத்துக்காட்டாக ஒரு பகுதியைக் காண்க. இப் பகுதியிலிருந்து 'இலங்கைத் தமி'ழையும் அன்பர்கள் ஓரளவு அறியலாம்.

**''தெண்டிந்துப் பார்க்கும்வரை உங்கள் அதிர்ஷ்டத்தை நீங்கள் அறியமாட்டீர்கள்**

கொழும்புத் திட்டக் காட்சியின் ஸ்தாபகர்கள் அக்காட்சி சம்பந்தமாக ஒரு சுவீப் பந்தயத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். இதற்கான ஒழுங்குகள் பொதுத் திறை சேரியிலுள்ள நிதிக் கட்டுப்பாட்டதிகாரியால் செய்யப்பட்டு வருகின்றன.

ரிக்கெற் ஒன்றின் விலை ரூபா இரண்டு ஆனால் 100 ரிக்கெற்றுக்களைக் கொண்ட புத்தகங்களை வாங்கும் போது ஒரு புத்தகத்தை, 190- ரூபா வீதம் பெற்றுக் கொள்ளலாம். டிசம்பர் மாதம் 1-ந் திகதி தொடக்கம் 1952-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15-ந் திகதிவரை திறைசேரி, கச்சேரிகள், காரியாதிகாரிகளின் கந்தோர்கள், தபாற் கந்தோர்கள், ரெயில்வே நிலையங்கள் என்பனவற்றில் ரிக்கெற்றுகள் விற்பனை செய்யப்படும், காட்சியின் கடைசித் தினத்தன்று பொது மக்கள் மத்தியில் சீட்டு இழுக்கப்படும்.

'ரயிலில் செல்லவேண்டும்' அல்லது 'ரயில் ஏற வேண்டும்' என்பதற்கு இலங்கையிற் பலர் 'நாங்கள் 6 மணி கோச்சை எடுக்கவேண்டும்' என்று கூறுவர்! இது 'Take the train' என்பதன் சொற் பெயர்ச்சி.

மொழிபெயர்க்கும்போது சிலர் வடசொற்களைப் புகுத்துவதும் வருந்தத்தக்கது. சான்றாக, இரண்டைக் கூறுவோம். 'Moral Re-Armament' என்பதற்கு 'ஒழுக்கச் சீரமைப்பு' என்னும் நல்ல சொற்றொடர் இருக்க 'தார்மீக புனருத்தாரணம்' என்றும், Hindu Religious Endowments Board என்பதற்கு 'இந்து சமய அற நிலையப் பாதுகாப்புக் கழகம்' என்னும் நல்ல தமிழ்ச் சொற்றொடர் இருக்க 'ஹிந்துமத பரிபாலன சபை' என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

மொழிபெயர்ப்புத் துறையிலும் காலத்திற்குத் தகுந்த மாறுதல்கள் ஏற்படுவது இயல்பு. இதற்குச் சான்ருகச் சில மேற்கோள்களைத் தருவோம். இவை விவிலிய நூலின் மொழிபெயர்ப்புப் பற்றியவை.

| நாவலர் மொழி பெயர்ப்பு | இந்திய-இலங்கை ஆகமக் கழகத்தார் 1950இல் பதிப்பித்த விவிலிய நூல் மொழிபெயர்ப்பு |
|---|---|
| "யெகோவாவே என்னை மேய்ப்பவர்" எனக்குக் குறைவில்லை...நான் மரண நிழலின் பள்ளத்தின் வழியாய்ச் செல்லும்பொழுதும், நீர் என்னோடிருக்கிறதினாலும், உமது கோலும் தண்டமும் என்னைத் தேற்றுகிறதினாலும் நான் எத்தீமைக்கும் பயப்படேன். | கர்த்தா என்மேய்ப்போராயிருக்கிருர். நான் தாழ்ச்சியடையேன்...நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன். தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர். உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும். |

அரசியலாரின் அறிக்கைகள் தமிழில் வெளிவரும் போது யாமர மக்களுக்கும் புரியும்படி சிறு சிறு வாக்கியங்களில் அமைவதே சாலச் சிறந்தது. இந்த அறிக்கைகள் வழக்கறிஞர்களால் ஆங்கிலத்தில் எழுதப் படுவதால் அந்த நடையிலேயே தமிழிலும் மொழி பெயர்க்கப்படுகின்றன.

தமிழில் வெளியாகியிருக்கும் நேரடியான மொழி பெயர்ப்பு நூல்களைப் பற்றிக் குறிப்பிடுமுன் தழுவல் நூல்களைப் பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறோம். தழுவல்களில் மிகப் பல குறைகள் உள்ளன; மூன் மாதிரியாக உள்ள நூல்களில் இருக்கும் சிறப்புக்களைத் தழுவல் நூல்களில் காண்பதரிது. எனவே ஒன்று பிற

மொழி நூலை மொழிபெயர்க்க வேண்டும்; அல்லது முதல் நூலாகத் தாமே எழுத வேண்டும்.

இனித் தமிழில் வெளியாகியிருக்கும் மொழி பெயர்ப்புகளைச்சிறிது கவனிப்போம். ஏராளமான மொழிபெயர்ப்பு நூல்கள் வெளிவந்திருக்கின்றபோதி லும் ஒரு சிலவற்றில் மட்டுமே மொழிபெயர்ப்பு நன்ருக இருக்கிறது. வென்டல் வில்கி எழுதிய 'ஒரே உலகம்' என்ற நூலை, தி. ஜ. ர. தமிழில் தந்துள்ளார். இது நல்ல தொண்டு. காந்தியடிகளின் கட்டுரைகளை 'காந்தி மலர்' என்ற பெயரில் பல பெரு நூல்களாக வே. ராமசாமி, ஆ. லெ. நடராஜன் ஆகியோர் தமிழுல கத்துக்கு ஈந்துள்ளனர். இவையும் நல்ல மொழி பெயர்ப்புக்கள். த. நா. குமாரசுவாமி பல நூல்களை மொழிபெயர்த்திருக்கிருர். தமிழாக்கத்திற்கு இவரைத் தக்க எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம், சிறு சிறு சொற்ருெடர்களில் அழகாக மொழிபெயர்க்கும் முறையை தாகூரின் 'ஜாவா யாத்திரை'யில் இவர் கையாண்டு வெற்றி கண்டுள்ளார். விவேகானந்தரின் நூல்கள் பலவற்றை விபுலானந்த அடிகள் இனிய தமிழில் சிறப்பாக மொழிபெயர்த்துத் தந்திருக்கிருர். இராமகிருஷ்ணர்,விவேகானந்தர் ஆகியோர் கொள்கை களையும், வாழ்க்கை வரலாற்றையும் விளக்கும் பல நூல்களை இராமகிருஷ்ண சங்கத்தார் மொழிபெயர்த் துள்ளனர். விவேகானந்தரின் 'கல்வி'யை தி. சு. அவிஞசிலிங்கம் தமிழாக்கியுள்ளார். காந்தீயத்தைப் பற்றிய பல நூல்களை வேங்கடராசலு ரெட்டியார் சிறப்பான முறையில் தமிழில் தந்திருக்கிருர். மொழி பெயர்ப்பு நூல்கள் தமிழில் மிகுதியாக வெளிவருவ தற்குப் புதுமைப் பதிப்பகத்தார், சக்தி காரியாலயத் தார், நவயுகப் பிரசுராலயத்தார் முதலிய பல நிலை

யங்கள் துணை செய்திருக்கின்றன. வள்ளுவர் பண்ணை கால்டுவெல்லின் திராவிடமொழிகள் ஒப்பிலக்கணத்தைத் தமிழில் வெளியிட்டிருக்கிறது. பெர்ட்ரண்டு ரசலின் 'விஞ்ஞானமும் சமுதாயமும் சி. ஈ. எம் ஜோடு இயற்றிய நாகரிகத்தின் கதை என்பவற்றை ஆ. நடராசன் தமிழில் தந்திருக்கிறார். மு. ரா. பெருமாள் முதலியார் மொழிபெயர்த்துள்ள சில நூல்கள் நல்ல மொழிபெயர்ப்புக்கு அடையாளமாக உள்ளன, அவையாவன: 'இந்திய வரலாற்றுச் சுருக்கம்', 'நமது இந்தியா'. 'வேலை, செல்வம், கூலி'.

நூற்றுக்கணக்கான துறைகளில் தமிழகத்தைப் பற்றி அறிந்துகொள்ள ஆங்கில மூலங்களையே நாம் நாட வேண்டியதிருக்கிறது, எனவே அவற்றைத் தமிழாக்குதல் பலருக்கும் பயன்படும்.

ஆண்டுதோறும் தமிழில் வெளிவருவனவற்றுள் 100-க்கு 82 மூல நூலாகத் தமிழில் எழுதப் படுபவை; எஞ்சிய 18 நூல்கள் மட்டுமே மொழிபெயர்ப்பு. அவற்றுள்ளும் 10 நூல்கள் சிறுகதை, நாவல் ஆகியன. எனவே அறிவுத் துறையில் தமிழில் மொழிபெயர்ப்பு நூல்கள் மிகக் குறைவு, இந்த நிலை மாற வேண்டும்.

ஆங்கிலம் போலவே இத்தாலி, பிரெஞ்சு, ரஷ்ய மொழி நூல்களும் நேரிடையே தமிழில் மொழிபெயர்க்கப்படவேண்டும். இந்திய மொழிகளுக்கும் இது பொருந்தும். எனவே தமிழ் ஆர்வமுள்ளவர் சிலரேனும் இம்மொழிகளையும் பயில வேண்டும்.

சைமன் காசிச் செட்டி (1807—1860) ஈழ நாட்டுத் தமிழறிஞர். இலக்கியம், வரலாறு பற்றிப் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளும் நூல்களும் ஆங்கிலத்தில்

எழுதியவர். இவர் பல அகராதிகளை வெளியிடுவதற்குக் கையெழுத்துப் பிரதிகளை வைத்திருந்தாரெனக் கேள்வி. இவை கிடைக்குமாயின், வெளியிடுதல் தமிழர் கடமையாகும். இவர் தமிழ்ப் புலவர் வரலாற்றுச் சுருக்கம் ஒன்றை 1859-இல் ஆங்கிலத்தில் வெளியிட்டார் Tamil plutarch என்னும் இந்த நூலைத் தக்க அடிக் குறிப்புக்களோடு தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் பதிப்பித்திருக்கிறார்.

கே. என். சிவராஜ பிள்ளை ஆங்கிலத்தில் தமிழிலக்கிய வரலாற்றை எழுதியுள்ளார். தமிழிலக்கிய வரலாறு ஆங்கிலத்தில் ஆக்கிய எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளைக்கும் தமிழகம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறது. தமிழ் மொழி வளர்ச்சியில் பெரிதும் ஈடுபட்டிருக்கிறவரும் யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியராக இருப்பவருமான ஜே. வி. செல்லையா ஆங்கிலத்தில், பத்துப்பாட்டைப் பாடல்களாக மொழிபெயர்த்துள்ளார். இந்நூலில் தமிழர் வாழ்க்கை முறையைப் பற்றிய பல குறிப்புக்கள் உள்ளன. இலக்கண நூல் ஒன்றை எழுதிய ஜி. யு. போப் ஐயரைத் தமிழ் மக்கள் நன்கு அறிவர். கோ. வடிவேலு செட்டியார் பார்வையிட்டு வெளிவந்துள்ள நாலடியார் என்னும் நூலில் ஒவ்வொரு செய்யுளுக்கும் அதன் அதன் கருத்தை விளக்கும் ஆங்கில மொழிபெயர்ப்பும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஐசெக் தம்பையா என்பார் தாயுமானவர் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். வ. வே. சு. ஐயர் திருக்குறளையும் கம்பராமாயணத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். தமிழ் கற்க விரும்பும் வெளிநாட்டாருக்குப் பயன்படும் நூல் ஒன்றை பிரிட்டிஷ் பொருட்காட்சி நிலையத்தார் வெளியிட்டுள்ளனர். ஜான்

லாசரஸ் நன்னூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார்.

உதகமண்டலத்தில் தமிழ் இலக்கணப் பள்ளி நிறுவியும், ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் தமிழாசிரியராக இருந்தும் டாக்டர் ஜி. யு. போப் செய்த பணிகள் பல; திருவாசகத்தையும் திருக்குறளையும் மொழிபெயர்த்தும் 'Tamil hand book' என்ற நூலை 1855-இல் வெளியிட்டும் அவர் தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம் பெற்றிருக்கிறார்.

வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதரின் சிலப்பதிகாரம், திருக்குறள் மொழிபெயர்ப்புகளும் இவ்வகையில் மேலும் குறிப்பிடத்தக்க நூல்களாகும், யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள மல்லாகத்தைச் சேர்ந்த கனகசபைப் பிள்ளை (1855-1906) இயற்றிய "1800 ஆண்டுகளுக்கு முன் தமிழர்" என்னும் ஆங்கில நூலும் ரெவரண்டு எச். ஆர். ஹாய்சிங்டன் என்னும் அமெரிக்கர் மொழி பெயர்த்துள்ள தத்துவக் கட்டளையும் சிவஞான போதமும், டி. பி. கிருஷ்ணசாமி என்பாரின் 'நீதி நூல்கள் பத்து' என்னும் நூலும் தமிழர் பெருமையைப் பிறநாட்டு மக்களும் உணர உதவியுள்ளன.

தமிழ்மொழியில் வெளிநாட்டார் கடந்த சில ஆண்டுகளாக அக்கறை காட்டத் தொடங்கியுள்ளனர். ஆகையால் உலக மொழிகளிலெல்லாம் தமிழின் சிறப்பை, தமிழ் இலக்கியத்தின் மேன்மையை வெளியிடக்கூடிய ஆற்றலைத் தமிழர் ஒரு சிலரேனும் பெற வேண்டும். அதுவே சிறந்த பணி. தமிழ் வளர்க்கும் முறை, தமிழ்த் தாய்க்குச் செய்யும் தொண்டு, 'தமிழ் வாழ்க' என்று அஞ்சல் அட்டையிலும் சுவரிலும் எழுதினால் மட்டும் தமிழ் வளர்ந்துவிடாது என்பதை

வாய்ப்பு நேரும்போதெல்லாம் வற்புறுத்திக் கூற வேண்டும். Indian Antiquary. Siddhanta Deepika போன்ற இதழ்களில் வெளியான (தமிழ் இலக்கியங் களின்) ஆங்கில மொழிபெயர்ப்புக்களைத் திரட்டி Two Thousand Years of Tamil Literature என்னும் தொகை நூலாக ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை வெளியிட்டுள்ளார். இதுபோன்ற நூல்களை, வெளிநாடுகளுக்குக் கல்வி பயிலவோ ஊர் பார்க்கவோ செல்லும் அன் பர்கள் தாங்கள் படிப்பதோடு மற்றவர்களிடமும் பரப்புவது தமிழ்ப் பற்றாகும்.

மொழிபெயர்ப்பின் தேவைக்கேற்பப் புதிய சொல்லாக்க முயற்சிகளைச் செய்துள்ள கா. அப்பாத் துரையார், கீ. இராமலிங்கனார் போன்ற பலரின் உழைப்பும் ஊக்கமும் பாராட்டுக்குரியது.

இறுதியாக, மொழிபெயர்ப்பாளருக்குப் பயன் படும் அறிவுரையைக் கூறலாம்.

இலங்கை அரசியலாரின் தலைமைத் தமிழ் மொழி பெயர்ப்பாளரான குல சபாநாதன் ஒருமுறை வானொலி யிற் கூறியதுபோல,

> 'மொழிபெயர்ப்பாளருக்கு இரு மொழியிலும் போதிய அறிவு இருத்தல் அவசியம். சந்தர்ப்பத் துக்கு ஏற்றவாறு மொழிபெயர்ப்பைத் திறம்படக் கையாண்டு வெற்றி பெறலாம். ஆங்கில மொழியி லுள்ள வார்த்தைகளைத் தமிழில் மொழிபெயர்த்து அமைத்துவிட்டால் அது சிறந்த மொழிபெயர்ப் பாகிவிட மாட்டாது. சில சொற்களைச் சேர்த்தலும் விலக்குதலும் நிலை மாற்றுதலுஞ் செய்யவேண்டும். சில வாக்கியங்களையே மாற்றியமைக்கவும் நேரிடும். அங்ஙனம் செய்தாற்றான் சிறந்த மொழிபெயர்ப் பைத் தமிழ் நெறிப்படச் செய்தல் கூடும். இக்

காலத்திலுள்ள மொழிபெயர்ப்பாளருக்கு ஏற்படும் கஷ்டங்கள் பலவுள. சர்வதேச ஸ்தாபனங்களின் வெளியீடுகளை விரைவில் மொழிபெயர்க்க வேண்டும். புதுச் சொற்கள் தோன்றும்போது அவற்றைக் குறித்துக் கொள்ளவேண்டும்.

தமிழ் நூல்கள் சிலவற்றைப் பிற மொழிகளில் தர தேசிய நூல் அமைப்புக்குழு ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி விஞ்ஞானக்குழு ஆகியவை முயன்று வருகின்றன. பிற மொழிகளிலுள்ள நூல்களைத் திராவிட மொழிகளிலும், திராவிட மொழிகளிலுள்ள நூல்களைப் பிற மொழிகளிலும் தருவதற்காக, போர்டு அற நிலையத்தார் தென் மொழிகள் புத்தகக் கழகம் நிறுவியுள்ளனர். இக்கழகம் பல நூறு மொழி பெயர்ப்புக்களைப் தமிழில் தந்திருக்கிறது, இத்தகைய பணிகளால்

'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்.'

என்ற சுப்பிரமணிய பாரதியாரின் கனவு நனவாகும்.

# 17. ஆராய்ச்சி நூல்கள்

ஆராய்ச்சி நூல்கள் என்னும் இப்பகுதியில் முதலாவதாக உரை நூல்களைப்பற்றிக் கூறுவோம். உரை காணும் முறையில்தானே இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர் முதலிய பெருமக்கள் இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபடுவாராயினர்?

சங்க இலக்கியங்களுக்கு இந்நூற்றாண்டில் மிகப் பல உரைகள் வெளிவந்துள்ளன. முட்டுப்பட்ட கருத்துக்களைத் தெளிந்து விளக்கிப் பொருள்கூறி ஐயப்பாடுகளை நீக்குவதற்கே உரைகள் வெளிவரவேண்டும். இந்த முறையில் பழைய இலக்கியங்களுக்கு விரிவான விளக்க உரை எழுதியிருப்பவர்கள் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர், ந. மு. வேங்கடசாமி நாட்டார், ஔவை துரைசாமிப்பிள்ளை, இளவழகனார், புலவர் அரசு, சு. ஆ. இராமசாமிப் புலவர், புலியூர்க்கேசிகன் ஆகியோர்.

உரை நூல்களே அன்றிப் பெருங்காப்பியங்களின் சுருக்கப் பதிப்புக்களும் இக்காலத்தில் வெளிவந்துள்ளன. ஏனைய நாட்டினர் தம் மொழிகளிலுள்ள வளமான இலக்கியங்களுக்கு நயமுடைய சிறு நூல்களை வெளியிட்டு வருகின்றனர். தமிழிலும் சில நூல்களுக்கு அத்தகைய பதிப்பைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வெளியிட்டு வருகின்றனர். சித்தாந்த கலாநிதி ஔவை துரைசாமிப் பிள்ளை அவர்கள் அடிக்

குறிப்புகளுடன் ஆராய்ச்சி முகவுரையோடும் சிலப்பதிகாரச் சுருக்கத்தையும் ஏனைய நூல்களையும் இயற்றியுள்ளார். விடுபட்ட கதைப் பகுதிகள் சிலவற்றையும் உரைநடையில் எழுதித் தொடர்பு படுத்தியுள்ளார். சேர வரலாறு பற்றிய செய்திகள் மிகுந்த ஒரே நூலாகிய பதிற்றுப்பத்துக்குச் சொற்பொருள், கருத்து, விளக்கம், இலக்கணக் குறிப்பு, ஒப்பு முதலியன யாவும் அமைந்த சிறந்த உரையையும் இவர் எழுதியிருக்கிறார்.

திருக்குறளுக்கு இத் தலைமுறையில் உரை எழுதியோர் மிகப்பலர். அவருள் கோ. வடிவேலு செட்டியார், குப்புசாமி முதலியார், திரு. வி. க, ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். மு. வரதராசனார் இயற்றியுள்ள திருக்குறள் தெளிவுரை எளிய நடையில், குறள் கருத்துக்களைச் சுருங்கத் தருவது. வ. சுப. மாணிக்கமும் இத்தகைய நூலொன்றை வெளியிட்டுள்ளார்.

இக்காலத்தில் வெளிவந்திருக்கும் ஆராய்ச்சி நூல்கள்-இலக்கிய ஆராய்ச்சி, மொழி ஆராய்ச்சி, வரலாற்று ஆராய்ச்சி-என மூவகைப்படும். முதலில் இலக்கிய ஆராய்ச்சியைப்பற்றிக் கூறுவோம்.

மறைமலை அடிகள் இயற்றிய 'முல்லைப் பாட்டு ஆராய்ச்சி' இக்காலத்தில் இயற்றப்பட்ட ஆராய்ச்சி நூல்களுள் தலைசிறந்தது; தெளிவான கருத்துக்கள் நிறைந்தது. 'நெடுநல்வாடை' என்னும் இனிய ஆராய்ச்சி நூலைக் கோதண்டபாணிப் பிள்ளை எழுதியுள்ளார். செ. வேங்கடராமன் செட்டியார் எழுதியுள்ள 'புனையா ஓவியம்' பெறலரும் பரிசில் என்ற இலக்கிய ஆராய்ச்சி நூல்கள் குறிப்பிடத்தக்கவை.

மாணிக்கவாசகப் பெருமான் அருளிய திருவாசகம் சைவர்கள் மட்டும் அன்றி மேனாட்டு அறிஞரும் போற்றும் உயர்ந்த நூல். 'திருவாசகத்திற்கு உரு காதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்று சொல்வதுண்டு. இவ்வரிய நூலுக்குப் பண்டிதமணி கதிரேசச் செட்டியார் உரை யெழுதியுள்ளார். இது பிழையில்லாத உரை; நெடுங்காலம் வாழத்தக்கது. இந்நூலில் விளக்க உரையும் (குறளில் அதிகார வைப்பு முறைபோன்று, பதிகவைப்பு முறையும் பாராட்டத் தக்கன. சொற்களுக்கு நயம் எழுதியிருப்பதும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இந்நூலில் உள்ள தமிழ் நடை கற்பாருக்கு இன்பம் தரும் செந்தமிழ் நடையாகும். திருவாசகத்திற்கு உரை எழுதியிருப்பவர்கள் கா. சுப்பிரமணிய பிள்ளை, நவநீத கிருஷ்ண பாரதியார், மகா வித்துவான் தண்டபாணிதேசிகர் முதலிய பலர்.

ஔவை துரைசாமிப் பிள்ளை யாத்த 'மணிமேகலை ஆராய்ச்சி', ரா. பி. சேதுப்பிள்ளை இயற்றிய 'ஊரும் பேரும்', இராசமாணிக்கனார் ஆக்கிய 'பெரிய புராண ஆராய்ச்சி', டாக்டர் வ. சுப. மாணிக்கம் எழுதியுள்ள 'வள்ளுவம்', பெ. தூரனின் 'பாரதி தமிழ்' என்பவை குறிப்பிடத்தக்க ஆராய்ச்சி நூல்கள் எனலாம். சோமசுந்தரபாரதியார், தேவநேயப்பாவாணர் ஆகியோர் எழுதியுள்ள ஆராய்ச்சி நூல்கள் தமிழர் உள்ளங்களுக்கு வீறு அளித்துக் கிளர்ச்சி ஊட்டுவனவாகும். மு. வரதராசனாரின் 'திருவள்ளுவர் அல்லது வாழ்க்கைவிளக்கம்' என்பது ஓர் அருமையான நூல். அவர் எழுதிய 'ஓவச் செய்தி' என்னும் நூலில் தமிழ் இலக்கியச்செய்திகளுக்கு காலக் கண்கொண்டு சிறந்த முறையில் பொருள் கூறியுள்ளார். 'விருந்து புறந்தருதல்', 'தலைவன் பிரிந்த

காலத்துத் தலைவி மயங்குதல்' ஆகியவற்றிற்கு அன்னார் கூறியிருக்கும் காரணங்கள் படித்து இன்புறத் தக்கன. 'சங்ககாலத் தமிழ் மக்கள்' என்னும் நூலும் இவ்வகையைச் சேர்ந்த அரிய இலக்கியக் கருவூலம். இந்நூலின் ஆசிரியரான வெள்ளைவாரணனார், தொல்காப்பியத்தில் ஒவ்வொரு இயலுக்கும் சுருக்கமான உரை எழுதியுள்ளார். டாக்டர் சி. இலக்குவனாரின் 'தொல்காப்பிய ஆராய்ச்சி' செறிவும் விளக்கமும் உடையது.

ந. சுப்பு ரெட்டியார், தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை நூல் என்ற ஆராய்ச்சியை வெளியிட்டுள்ளார்.

தமிழ் வரலாற்று இலக்கணம், டொக்டர் ஆ. வேலுப்பிள்ளை இயற்றியது. இவர் மொழிநூல் பெரும் புலவராகிய பரோவின் மாணவர் ஆவார். இந்நூல் ஆராய்ச்சித் துறையில் குறிப்பிடத்தக்க திறனாய்வு.

டாக்டர் ச. வே. சுப்பிரமணியம் எழுதியுள்ள இலக்கணத்தொகை, இத்துறையில் அரிய வெளியீடு. இலக்கணக் கொள்கைகளை காலவறையறைப்படி இவர் தொகுத்துக் கூறியுள்ளார்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை கந்தபுராண தட்சிண காண்டத்துக்கு எழுதியுள்ள உரை, மிகப் பெரு நூலாகவும் ஆசிரியரின் புலமைக்குச் சான்றாகவும் விளங்குகிறது.

சிற்றிலக்கியங்களாகிய சதகம், உலா, தூது, அந்தாதி, கலம்பகம், பரணி, பிள்ளைத்தமிழ் முதலியவை பற்றிப் பல ஆராய்ச்சி நூல்கள், ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் பயன்படும் வண்ணம் அண்மையிற்

பல்கலைக் கழக ஆசிரியர்களான செயராமன், இளவரசு ஆகியோரால் எழுதப்பெற்றிருக்கின்றன.

இலக்கியத் துறையில் பல அரிய கட்டுரைகள், தென்மொழி என்னும் தனித் தமிழ் இலக்கிய ஏட்டில் திங்கள் தோறும் வெளிவருகின்றன. இவற்றைச் சுவடி கட்டிப் பாதுகாத்துத் தமிழ் உணர்ச்சியைப் பல தமிழாசிரியர்கள் ஊட்டிவருகின்றனர். தனித் தமிழ் உணர்ச்சி ஆக்க வழியில் அமைய, இந்த ஏடு கடந்த சில ஆண்டுகளில் பெரும்பணி புரிந்து வருகிறது.

இலக்கிய நலன் ஆய்தல் என்னும் துறையும் தமிழில் வளர்ந்து வருகிறது. இதை வ. வே. சு. ஐயர் தொடங்கி வைத்தார். இப்போது அ. ச. ஞானசம்பந்தம், ரா. ஸ்ரீ. தேசிகன், மார்க்கபந்து சர்மா, சிதம்பர ரகுநாதன், பேராசிரியர் அ.சீனிவாசராகவன் ஆகியோர் கட்டுரைகள் வாயிலாகவும், நூல்கள் வாயிலாகவும் இலக்கிய நலன் ஆய்ந்து வருகிறார்கள்.

இலக்கிய நலன் ஆய்வதோடு ஆராய்ச்சி நூல்கள் சிலவற்றையும் எழுதியவர் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை ஆவார். பலர் கூறுவதையே தாம் ஏற்றுக் கொள்ளாமல் மரபுக்கு மாறுபட்டபல கருத்துக்களை துணிந்து கூறும் ஆற்றல் இவருக்கு உண்டு. இவர் எழுதியுள்ள 'இலக்கிய விளக்கம்' ஏ. வி. சுப்பிரமணிய ஐயர் எழுதிய 'தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி—பண்டைக் காலமும் இடைக் காலமும்' என்னும் நூல்கள் மாறுபட்ட கருத்துடையவரும் படிக்க வேண்டுவன.

தொல்காப்பியம் பற்றி க. வெள்ளைவாரணரின் ஆய்வு நூல் 'தொல்காப்பியப் புதுமை' என்னும் (டாக்டர் வ. சுப. மாணிக்கம் ஆக்கிய) கட்டுரைத் தொகுதி ஆகியனவும் பல புதிய கருத்துக்களைத் தெரிவிக்கும் அரிய நூல்கள்.

இனி மொழியாராய்ச்சியைப்பற்றிக் குறிப்பிடு வோம். பிறமொழிப் பயிற்சியோடு தமிழை ஆராய்ந்த பலர் தாம் கற்ற இரண்டு மொழிகளை ஒப்புநோக்கி, இலக்கியச் செறிவு, சொன்னயம், பொருணயம் முத லியவற்றை ஆராயத் தலைப்பட்டனர். சூரிய நாராயண சாஸ்திரியார், எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளை கா. சுப்பிரமணியப் பிள்ளை, வி. செல்வநாயகம் ஆகியோர் தமிழ்மொழி வரலாற்றை எழுதியுள்ளனர். டாக்டர் மு. வரதராசன் மொழி நூல் ஒன்றை எழுதி யுள்ளார். மொழியின் தோற்றம், வகை, வரலாறு, அடிச்சொற்கள், குழந்தை மொழி, சொல்லும் பொரு ளும் முதலிய தலைப்புக்களில் தமிழ் மொழியின் அமைப்பினை மொழியாராய்ச்சி முறைப்படி இந்நூல் விளக்குகிறது. உலக மொழிகளைப் பற்றி டாக்டர் சி. அகத்தியலிங்கம் ஒரு நூல்வரிசை எழுதியுள்ளார்.

தேவநேயப்பாவணர் எழுதிய 'திராவிடத் தாய்' என்னும் நூல் ஏனைத் திராவிட மொழிகளை ஒப்பு நோக்க, தமிழ் மொழியின் சிறப்பையும், பழமையை யும், நல்ல தமிழ் நடையில் தெரிவிப்பதாகும்.

தமிழண்ணல் எழுதியுள்ள **மொழிவழிச் சிந்தனைகள்**, மொழி வளர்ச்சிக் குறிப்புக்களை இலக்கிய நலன் ஆய்வுக் கண்ணோட்டத்துடன் தருவது. மொழித் துறையில் ஆர்வம் மிக்கவர் அனைவர்க்கும் இது பெரிதும் பயன்படும்.

வரலாற்று ஆராய்ச்சி நூல்களைக் காண்போம். பெரும் புலவரான சி. கே. சுப்பிரமணிய முதலியார் 'மாணிக்கவாசகர் பெருமை' என்ற ஆராய்ச்சி நூலை இயற்றியிருக்கிறார். தி. வை. சதாசிவப் பண்டாரத்தார் பாண்டியர் வரலாற்றையும், பிற்காலச் சோழர் சரித்

திரத்தையும் விரிவாகவும் ஆதாரமாகவும் ஆராய்ந்துள்ளார். சதாசிவப் பண்டாரத்தாரின் எழுத்துக்கள் அன்னாருடைய பேருழைப்புக்குச் சான்றாக மிளிர்கின்றன. அடுத்தடுத்த பதிப்புக்களில், முன்பதிப்பு அச்சான பின்னர் வெளியான வரலாற்று உண்மைகளையும் ஆராய்ச்சி முடிவுகளையுங் கொண்டு தக்க திருத்தங்கள் செய்துள்ளார்.

தமிழர் சரித்திரம், தமிழகம், தமிழ் இந்தியா போன்ற நூல்களை அறிஞர் ந.சி. கந்தையா பிள்ளையும், தமிழரின் பூர்வ சரித்திரமும் சமயமும் என்ற நூலை சுவாமி ஞானப் பிரகாசரும், இந்தியர் வரலாறு என்ற நூலை எஸ். கே. கோவிந்தசாமி பிள்ளையும், குமரிக் கண்டம் அல்லது கடல் கொண்ட தென்னாடு என்ற அரிய வரலாற்று நூலைப் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையும் தந்துள்ளனர்.

டாக்டர் மா. இராசமாணிக்கனார் பல்லவர் வரலாறு, மொஹஞ்சொதரோ அல்லது சிந்துவெளி நாகரிகம் போன்ற பல நூல்களை எழுதித் தமிழ்த் தொண்டு புரிந்துள்ளார். இவை தமிழ் மக்களின் நாகரிகத்தையும் வரலாற்றையும் அறிய உதவுகின்றன.

இந்நூலாசிரியர் மாவட்டங்களைக் குறித்து விரிவாகப் பெருநூல்கள் எழுதியுள்ளார். இதைத் தொடர்ந்து இத்துறையில், சில வரலாற்று நூல்களும் வெளிவந்துள்ளன. புலவர் குழந்தை இயற்றிய கொங்கு நாட்டு வரலாறு, சிறந்த நூல்களுள் ஒன்றாகும். க. பொ. இரத்தினம் எழுதியுள்ள ஈழநாடும் தமிழும் குறிப்பிடத்தக்க இலக்கிய முயற்சி எனலாம்.

நாம் இதுவரை கூறிய மூவகை ஆராய்ச்சிகளிலும் இன்று தமிழில் வெளிவந்துள்ள நூல்களுக்கு ஆங்கில இலக்கிய ஆராய்ச்சிமுறை பெரிதும் உதவியாக இருந் திருக்கிறது. ஆங்கிலப் புலவர்கள் எழுதிய இலக்கி யங்களையும் ஆங்கில அறிஞர்கள் எழுதிய ஆராய்ச்சி களையும் படித்துப் பயின்ற தமிழ் அறிஞர்களுக்கு அவர் களைப்போலவே தமிழ் இலக்கியங்களை ஆராய்தல் வேண்டும் என்ற வேட்கை உண்டாகி வளர்ந்திருக் கிறது. அம்முறையில் தமிழ் இலக்கியங்களுக்கு ஆங்கில நன்மக்கள் காட்டிய வழியில் இலக்கிய ஆராய்ச்சி நடைபெற்று வருகின்றது.

ஆங்கிலேயர் வரலாற்று நூல்களை எழுதும்போது பல்வேறு வகைகளில் கிடைக்கும் கடிதங்கள் நாட் குறிப்புகள் நூல்கள் ஏனைய ஆதாரங்கள் ஆகியவற்றை எல்லாம் ஒருங்கே சேர்த்துக்கொள்ளுகின்றனர். உரிய நூலைப்பற்றி அறிந்த பெருமக்கள் பலருடன் அவற் றைப்பற்றி விவாதிக்கின்றனர். இத்தகைய முறைகளை வரலாற்று நூல் எழுத விரும்பும் தமிழறிஞர்கள் பின் பற்றுவார்களாக.

சிறந்த ஆராய்ச்சி நூல்களை எழுதுவதற்கு இவ் வளவு முயற்சி வேண்டியதிருக்கிறது. ஆனால், நம் நாட்டில் ஒரு சிலர் தாம் படுத்திருக்கும் சாய்வு நாற் காலியில் அமர்ந்தவாறே ஆராய்ச்சியாளராகி விடு கின்றனர். என்னே அவர் தம் அறியாமை!

### தொகுப்பு நூல்கள்

தொகுப்பு நூல்கள் சிலவும் அண்மையில் உருவாகி யுள்ளன. இவ்வகை நூல்கள் தமிழிலக்கியத்தில் சங்க கால முதற்கொண்டே இருந்துவருகின்றன. பத்துப் பாட்டு, எட்டுத்தொகை என்பவை தொகுப்பு நூல்

களே; அகநானூறும், புறநானூறும் காலத்தாலும் இடத்தாலும் பிறவற்றாலும் வேறுபட்டு வாழ்ந்த புலவர்களின் கருத்துக்களின் தொகுப்பு நூல்களே; இவையாவும் செய்யுள் நடையில் உள்ளன. இக் காலத்துத் தொகுப்பு நூல்கள் உரைநடையில் வெளி வந்திருப்பது சிறப்பாகக் கவனிக்கத்தக்கது. பண்டித மணி கதிரேசச் செட்டியாரின் அறுபதாமாண்டு விழா வில் வெளியான 'மணி மலர்', 'கிங்ஸ்பரி நினைவு மலர்' திருவள்ளுவர் திருநாட் கழக வெளியீடான 'திருவள் ளுவர் நினைவு மலர்', பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தார் தொகுத்த 'வ. உ. சிதம்பரம் பிள்ளை மலர்' சென்னை புத்தகாலயச் சங்கத்தார் வெளியிட்டுள்ள 'முதியவன் 'விருந்து', 'விபுலானந்தர் நினைவுமலர்', 'இலங்கைத் தமிழ் விழா மலர்' ஆரிய திராவிட பாஷாபிவிருத்தி சங்க வெள்ளிவிழா மலர், பேராசிரியர் முத்துசிவனார் நினைவு மலர், தென்காசி திருவள்ளுவர் சங்க வெள்ளி விழா மலர், 'கரந்தைக் கட்டுரைகள்' (கரந்தை வெள்ளிவிழா மலர்), புதுவைக் கல்விக் கழகத்தார் வெளியிட்ட 'வெள்ளி விழா மலர்' ஆகியவையும் ரா. க. சண்முகம் செட்டியாருக்கு அவருடைய 60-ஆம் ஆண்டு நிறைவு விழாவில் அன்பளிக்கப்பட்ட மலரும் தொகுப்பு நூல்களுள் முக்கியமான சில. வளர்ந்து வரும் தமிழிலக்கியத்தின் முழு விளக்கமாக இம் மலர்கள் அமைந்திருக்கின்றன; தமிழறிஞர்கள் பல கோணங்களில் நின்று காணும் இலக்கிய மலர்ச்சியாக இவை காட்சி தருகின்றன.

தென்னிந்திய சைவ சித்தாந்தநூற்பதிப்புக்கழகத் தின் 1,008-ம் நூல் வெளியீட்டு மலர், ரா. பி. சேதுப் பிள்ளை மணிவிழா மலர், மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை மலர், தருமைக் கனகாபிஷேக மலர் ஆகியவை

சிறந்த முறையில் அமைந்து கருத்துக்கு விருந்துநல்கு கின்றன.

அரசியல் துறையிலும் இலக்கியத் துறையிலும் உயர்நிலை அடைந்துள்ள பெருமக்களைப்பற்றிக் கட்டுரைகள் தொகுத்து வெளியிடும் முயற்சி அண்மையில் தொடங்கப் பெற்றிருக்கிறது. இந்தத் துறையில் வெளிவந்த முதல் நூல், முல்லை முத்தையா தொகுத்த 'புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்' என்பது. இதைத் தொடர்ந்து பெரியார் இராமசாமி, அறிஞர் அண்ணுதுரை, தலைவர் ம. பொ. சி., தலைவர் காமராஜ் முதலிய நூல்கள் வெளிவந்துள்ளன.

தொகுப்பு நூல்களைப் பதிப்பிப்பவர்களுக்குப் பயன்படும் ஒரு சிறு கருத்தைக் கூறி, இக்கட்டுரையை முடிப்போம். இவை ஒரு தலைவரைப்பற்றியோ ஒரு நூலைப்பற்றியோ அமைவதால், ஒரு கட்டுரையில் தெரிவிக்கப்பெற்ற செய்திகள் அம்மலரின் ஏனைய கட்டுரைகளிலும் காணப்படுகின்றன. எனவே அம் மலர்கள் கூறியது கூறலாக அமைகின்றன. வேறுபட்ட பகுதிகளில் யார் யார் எதைப்பற்றி எழுதுவது என்பதைப் பதிப்பாசிரியர் முன் கூட்டி வரையறை செய்ய வேண்டும். வைப்பு முறையை முடிவு செய்வதிலும் அடிக் குறிப்புக்கள் கொடுப்பதிலும் பதிப்பாசிரியரின் பொறுப்பு மிகுதியானது.

திறனாய்வு நூல்களில் 'பாட்டும் தொகையும்' என்ற தலைப்பில் மர்ரே கம்பெனியார் வெளியிட்டிருக்கும் நூல் குறிப்பிடத் தகுந்தது. பத்துப்பாட்டும் எட்டுத் தொகையும் பாடிய புலவர் பெருமக்களைப் பற்றிய அகராதி முதலிலும் பாடப் பெற்றவர்களைப் பற்றிய அகராதி அதனை அடுத்தும் இடம் பெற்றுள்ளன: சொல்-தொடர்விளக்கமும் தரப்பட்டுள்ளது.

பழந்தமிழ்ப் பாடல்களிலிருந்து தெரியவரும் மக்களின் பழக்க வழக்கங்களைப் பற்றிய குறிப்பும் ஒவ்வொரு நூலிலும் உள்ள உவமைகளும் (அடிக் குறிப்புக் களுடன்) தரப்பெற்றுள்ளன. சங்க இலக்கியங்களின் பதிப்பை இக்கம்பெனியாரும் பாரி நிலையத்தாரும், நன்முக அச்சிட்டுள்ளனர்.

பிஎச். டி. பட்டத்துக்கு ஆங்கில மொழியில் கொடுக்கும் ஆராய்ச்சிக்கட்டுரைகளைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிடும் முறையும் பரவி வருகிறது. இவ்வாறு வெளி வந்துள்ள நூல்களுள் குறிப்பிடத் தக்க ஒன்று, டாக்டர் மொ. அ. துரை அரங்கனாரின் சங்ககாலச் சிறப்புப் பெயர்கள்.

திருவாவடுதுறை ஆதீனத்தார் அரிய நூல்களை வெளியிட்டு வருகின்றனர்; கணபதி முருகன் ஆடவல் லான் திருவாசகம் என்னும் பதிப்புக்கள் பல நூல்களில் கிடைக்கும் அரிய குறிப்புக்களும் விளக்கங் களும் நிறைந்துள்ளன.

ஸ்பெயின் நாட்டில் பிறந்த ஹீராஸ் பாதிரியார் (இ. 1955) திராவிடப் பண்பாடு வரலாற்றுக் காலத் துக்கு முற்பட்ட தொன்மையுடையது என்ற வாய்மை யையும் அந்நாகரிகம் மத்தியதரைக்கடல் நாடுகளி லெல்லாம் பரவியிருந்த மாண்புடையது என்பதையும் தமது அரிய ஆராய்ச்சிகளால் அறிஞர் உலகம்போற்ற ஆங்கிலத்தில் பல பெரு நூல்கள் எழுதி நிலைநாட்டி யிருக்கிறார். பல்லவர் பற்றியும் விசயநகரப் பேரரசு பற்றியும் இவர் செய்த ஆராய்ச்சிகள் தென்னக வரலாற்றுக்கு ஒளியும் உரமும் தருவன.

20-ஆம் நூற்றாண்டில் தமிழ் வளர்ச்சி ஆராய்ச் சிக்கு ஒரு பெரிய கலங்கரை விளக்கமாகத் திகழ்பவர் இலங்கை கத்தோலிக்கப் பாதிரியாராகிய தனிநாயக

அடிகள். இவருடைய குறிப்பிடத்தக்க பணி உலகத் தமிழ் மா நாட்டைக் கூட்டியதாகும் தமிழ்க் கலையின் சிறப்புக்களை அயல்நாட்டினர் அறியுமாறு இலத்தின், கிரேக்கம், ஸ்பானியம், ஆங்கிலம் முதலிய மொழிகளைக் கற்றுணர்ந்தவர். உலக நாடுகள் பல வற்றையும் சுற்றிப் பார்த்து ஆங்காங்குள்ள தமிழ்ச் சுவடிகளின் அருமை பெருமையையும் தமிழ் நாகரிகக் கூறுபாடுகளையும் ஆராய்ந்து வெளிப்படுத்துவதில் தலைசிறந்து விளங்குபவர். பிறமொழி இலக்கியங் களோடு ஒப்பிட்டு, தமிழிலக்கியத்தின் சிறப்புக்களை எண்பித்துக் காட்டுவதில் இணையற்றவர்; சங்ககால இலக்கியத்தில் இயற்கைநலம் பற்றியும் பழந்தமிழகத் துக் கல்வி முறைகளைப்பற்றியும் சிறந்த ஆராய்ச்சி செய்துள்ளார்.

இன்று தமிழ்நாட்டில் வாழும் தமிழ்ப் புலவர் களுள் சிந்தாமணிச்செல்வர் மகாவித்துவான் வேணு கோபாலப்பிள்ளை (பி. 1896) தலை சிறந்தவர் ஆவார். காரணம் அவரது ஆழ்ந்த இலக்கண புலமையும் சிறந்த பதிப்பாசிரியத் திறனுமேயாகும். தஞ்சைவாணன் கோவை (விளக்கக் குறிப்புரை), யாப்பருங்கல விருத்தி, யாப்பருங்கலக் காரிகை, குசேலோபாக்கியானம், இறையனார் அகப்பொருள், தொல்காப்பியம் சொல் லதிகாரம் (நச்சினார்க்கினியர் உரை), சித்தர் ஞானக் கோவை, அரிச்சந்திர புராணச் சுருக்கம் ஆகிய வற்றைத் திருத்தம் செய்து அருஞ்சொற்பொருள் அகராதி முதலிய பிற்சேர்க்கைகளுடன் புலவர் உலகம் மதிக்குமாறு இவர் பதிப்பித்திருக்கிறார். உரைநடை நூல்களும் மொழிபெயர்ப்பு நூல்களும் எழுதியிருக் கிறார். பாட நூல்களில் நல்ல தமிழ் காணப்படுவதற் குரிய பெருமை இவரையே சேரும்.

கம்பராமாயணத்தின் கிஷ்கிந்தா காண்டம் சுந்தரகாண்டம் வசனமாக, திருச்சிற்றம்பல தேசிகர் பதிப்பைத் தழுவி 'கம்பராமாயண வசனம்' என்ற பெயரில் மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை வெளியிட்டிருக்கிறார். நளவெண்பாவுக்கு ஒரு விளக்கமும் இவர் வெளியிட்டுள்ளார்.

19-ஆம் நூற்றாண்டில் எழுதி முடிக்கப்பெற்ற 'மதனவித்தார நூல்' (கடிகை முத்துப் புலவர்) சங்குப் புலவரால் பதிப்பிக்கப் பெற்றிருக்கிறது. வீரமார்த் தாண்ட தேவரது 'பஞ்சதந்திரப் பாடல்' முன்னரே வெளியிடப்பட்டபோதிலும் புது உரையுடன் வெளி வந்திருப்பதால் இது எல்லோரும் விரும்பிப் படிக்க வேண்டிய நூல். தாண்டவராய முதலியார் மொழி பெயர்த்த உரைநடை நூலான பஞ்சதந்திரத்திற்கும் இப்பாடல்களுக்கும் வேறுபாடுகள் உண்டு.

இலக்கிய ஆராய்ச்சி, சோழர் வரலாற்று ஆராய்ச்சியில் ஈடுபாடுடைய திருச்சிற்றம்பலம் மு. அருணாசலம் பல துறைகளில் நூல்களை யாத்துள்ளார்.

உலகத் தமிழ் மாநாட்டு மலர், உலகத் தமிழ் மாநாட்டுப் பொருட்காட்சிக் கையேடு—இவ்விரண்டும் எண்ணற்ற அரிய ஆராய்ச்சிகளுள்ள கருவூலங்களாகும். தமிழகப் புலவர்க் குழு, உலகத் தமிழ் மாநாட்டில் வெளியிட்ட தமிழியற் காட்சிகளும் இத்தகைய சிறப்புடையது.

## 18. அகராதி

இந்திய மொழிகளில் தமிழிலேயே அச்சுநூல் முதலில் வெளிவந்தது; அகராதி வெளிவந்ததும் தமிழில்தான். 1679-இல் தமிழ்-போர்ச்சுகீசிய அகராதி அண்டம் டி புரொயன்கா என்ற பாதிரியாரால் வெளியிடப்பட்டது. 1706-இல் தரங்கம்பாடிக்கு வந்த பார்த்தலோமியஸ்ஜீகன் பெய்க்கு என்றஜெர்மானியர் சேர்த்திருந்த குறிப்புக்களைப் பயன்படுத்தி பப்ரீசியஸ் என்ற ஜெர்மானியர் 1719-இல் தமிழ்-ஆங்கில அகராதியை உருவாக்கினார்.

இத்தாலியரான பெஸ்கி 1819-இல் சதுரகராதி வெளியிட்டார். அதன் விரிவு 1824-இல் ரிச்சர்டு கிளார்க் என்பவரால் சென்னையில் கோட்டைக்குள் இருந்த ஒரு கல்லூரியால் வெளியிடப்பட்டது.

1838-இல் யாழ்ப்பாணத்துக்கு வந்த சில பாதிரிகள் மானிப்பாய் அகராதி என்ற பெருநூலை 58,500 சொற்களுடன் அச்சிட்டனர். 1840-இல் சிறுசொற் பலபொருள் விளக்கம் என்ற அகராதியை விசாகப் பெருமாள் அய்யர் வெளியிட்டார். இதற்கிடையே 1842-இல் தொகுக்கப்பட்ட வின்ஸ்லோவின் ஆங்கில-தமிழ் அகராதி பல திருத்தங்களுடன் 1852-இல் வெளியாயிற்று.

ராட்லர் என்பார் 1834-இல் தமிழ்-ஆங்கில அகராதியை இருபகுதிகளாகச் சென்னையில் அச்சிட்டார்,

1869-இல் தரங்கம்பாடியில் டியோடர்லேன் என்ற ஜெர்மானியர் தமிழ்-ஆங்கிலம்-ஜெர்மன் மொழிகளில் முதல் ஆயிரம் சொற்கள் என்ற நூலை 1869-இல் வெளியிட்டார்.

1870-இல் சென்னை அரசாங்க மொழிபெயர்ப்பாளர் விசுவநாதப்பிள்ளை தமிழ்-ஆங்கில அகராதி ஒன்றைப் பொதுமக்களுக்காகத் தொகுத்தார். 1897-இல் தரங்கம்பாடியிலிருந்து மற்றொரு அகராதி வெளியாயிற்று. இது பப்ரீசியஸ் அகராதியின் அடிப்படையில் அமைந்தாலும் இலக்கணக் குறிப்புக்கள் விரிவான முறையில் இப்பதிப்பில் தரப்பட்டன. யாழ்ப்பாணத்து நீதிபதி கதிர்வேலுப்பிள்ளை முயன்று உருவாக்கியதைக் கொண்டு 1910-இல் மூன்று பகுதிகளில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் தமிழ்ச் சங்க அகராதி என்ற தலைப்பில் தமிழுக்குத் தமிழ் அகராதி ஒன்றை அச்சிட்டனர்.

20-ஆம் நூற்றாண்டில் முதல் தடவையாக சங்க இலக்கியங்கள் நமக்குக் கிடைத்தன. இதன் விளைவாகப் புதிய அகராதி தேவைப்பட்டது. அகராதிகளில் சொற்களின் வேர் போன்ற குறிப்புக்களும் வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. இதன் விளைவாக 1926 முதல் 1936 வரை அறிஞர் பலர் பெரிதும் முயன்று, சென்னைப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக தமிழ் ஆங்கிலம்-தமிழ்-அகராதியை (தமிழ் லெக்சிகன்) பிற்சேர்க்கை உள்பட ஏழு பகுதிகளாக வெளியிட்டனர். சாண்ட்லர் என்னும் பாதிரியார் இதற்கான திட்டத்தை வரைந்தார். பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை பதிப்பாசிரியராக இருந்தார்.

1779-இல் ஜான் கிறிஸ்டியன், பிரெய்த்தாபுட் என்பவர் வெப்பேரியில் ஓர் அகராதியை அச்சிட்டார்.

1831-இல் பாரிசில் பிளின் என்பார் பிரெஞ்சு-தமிழ் அகராதியையும், 1842-இல் ரெவரன்டு நைட், ரெவரன்டு ஸ்பால்டிங் இருவரும் பள்ளிக்கூடங்களுக்கான சிறு அகராதியை யாழ்ப்பாணத்திலும், 1846-இல் லத்தீன்—தமிழ் அகராதியை ,டுபே மொசே இருவரும் புதுச்சேரியிலும்; ரெவரன்டு பெர்சிவல் 1860 அளவில் ஓர் அகராதியையும், 1888-இல் ஆங்கெட்டில் ஓர் அகராதியையும், 1897-இல் ஸ்கேபர், பெய்சன்ஹெறர்ஸ் இருவரும் தரங்கம்பாடியில் ஓர் அகராதியையும் வெளியிட்டனர். இவை யாவும் பிறநாட்டார் தமிழை உச்சரிக்கத் தெரிந்துகொள்ளவும், சில அடிப்படையான தமிழ்ச் சொற்களைப் புரிந்துகொள்ளவும், விவிலிய நூலை மொழிபெயர்க்கவும், குறிஞ்சி நிலப் பகுதிகளில் வாழும் மக்களைக் கிறிஸ்தவ மதத்தில் சேர்க்கவும் பயன்படுமாறு ஏற்பட்டவை.

லெக்சிகன் தமிழிலக்கிய நூல்களைப் பயிலுபவர்க்காகவும் கிளை மொழிகளை ஆராய விரும்புபவர்க்காகவும் தொகுக்கப்பட்டது.

இன்றைய நிலையில் ஆட்சியைத் தமிழில் நடத்தவும், விஞ்ஞான நூல்களைத் தமிழில் கற்பிக்கவும் பயன்படக்கூடிய புதிய அகராதி தேவையாக இருக்கிறது. தக்க அகராதிகள் இப்போது கிடைத்தில.

இக் குறையைப் போக்கச் சென்னைப் பல்கலைக் கழகத்தார் ஓர் அகராதியை வெளியிட்டுள்ளனர். இதை உருவாக்கிய பெருமை டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார்க்கும் கா. அப்பாத்துரைக்கும் உரியன.

வளர்ந்து வரும் அறிவியல் தேவைகளுக்கும் தமிழைப் பல்கலைக் கழகப் பயிற்சி மொழியாக்கவும் இன்னும் விரிவான ஒரு அகராதி தேவை.

பல மொழிகளிலிருந்து தமிழில் நூல்கள் மொழி பெயர்க்கவேண்டியிருப்பதால் ஐரோப்பிய மொழிகள் முக்கியமான இந்திய மொழிகள் ஆகிய ஒவ்வொன்றி லிருந்தும் நேர் மொழிபெயர்ப்பாகத் தமிழ் அகராதி கள் வெளிவரவேண்டும்.

தமிழ் அகராதிக் கலை என்னும் ஆராய்ச்சி நூலை, புதுச்சேரிப் புலவர் சுந்தரசண்முகனுர் 524 பக்கங்கள் அளவில் இயற்றியுள்ளார். இந் நூலில், இந்நாள் வரை வெளிவந்துள்ள அகராதித் துறை நூல்களைப் பற்றிய விவரங்களை இவர் கூறியுள்ளார்.

1. தமிழ் அகராதிக் கலையின் தோற்றமும் வளர்ச்சியும். 2. சேந்தன் திவாகர நிகண்டைப் பற்றிய விரிவான விளக்கம். 3. பிங்கலம் முதலிய பிற நிகண்டுகளைக் குறித்த விவரங்கள். 4. பதினேழாம் நூற் ருண்டுமுதல் வெளிவந்துள்ள அகர வரிசையில் உரை நடையில் பொருள் கூறும் அகராதிகளின் பட்டியலும் அவற்றின் நிறை குறைகளும். 5. சொற்பொருள் பற்றிய மொழியாராய்ச்சி- ஆகிய ஐந்து பகுதிகளாக இந்நூலை எழுதியுள்ளார். கால ஆராய்ச்சிக் குறிப்புக் களும் சொல்லாராய்ச்சிக் குறிப்புக்களும் பயனுள்ள நூற்பட்டியல்களும் உள்ளன.

## 19. கடிதங்கள்

சில ஆண்டுகளுக்கு முன் தமிழ் மக்கள் ஒருவர்க் கொருவர் 'கடிதம்' எழுதிக்கொண்டனர்; இப்போது அவர்களிற் பலர் 'முடங்கல்' தீட்டிக்கொள்கின்றனர். பொருள் தெரியாமலே இச்சொல்லைப் பயன்படுத்து வோரும் இருத்தல் கூடும்; இந்த 'முடங்கல்' இன்ன தென்பதை ந. மு. வேங்கடசாமி நாட்டார் வாயிலாக அறிவோம்:

> "பல்லாயிர ஆண்டுகளாகப் பனுவல்களும், ஆவணங்களும், பிறவும் இந்நாட்டிலே பனையோலை யில் தீட்டப் பெற்று வந்தன. ஓரிடத்திலிருந்து பிறிதோரிடத்திற்குச் செய்தி தெரிவிக்க வேண்டின் அதைப் பனையோலையில் எழுதிச் சுருள் செய்து, காப் பிட்டு, ஏவலாளர் முதலாயினார் கைகொடுத்துச் செல்லவிடுவது வழக்கம். அதனை ஓலையென்றும், முடங்கலென்றும் கூறுவர். ஓலையில் எழுதப்படுதலின் ஓலையென்பது பெயராயிற்று; இலை என்னும் பொரு ளுடைய் பத்திரத்தில் வரையப்படுதலின் பத்திர மென்பது பெயராயினாற் போலப் பிற்காலத்தே ஓலை யென்பது மங்கலமல்லாத செய்தி வரைந்ததாகப் பொருள் படுவதாயிற்று. செய்தி வரைந்த ஓலையை வளைத்துச் சுருள் செய்தலின், அது முடங்கல் எனவும் பெயர் பெறும். முடங்கல் வளைதல்."

## செய்யுள் வடிவில் கடிதங்கள்

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர்த் தமிழ்ச் சான்றோர் கடிதங்களையும் செய்யுள் வடிவில் எழுதி வந்தனர். மாதவி கோவலனுக்கு எழுதிய சோகக் கடிதத்தைச் சிலப்பதிகார அடிகளில் காணலாம். சீவக சிந்தாமணியில் குணமாலை சீவகனிடம் கொடுத்த கடிதம் இடம் பெறுகிறது. பதினோன்றாம் சைவத் திரு முறையில் திருமுருகப் பாசுரத்திலும் முடங்கல் வடிவத்தில் ஓர் அகவற்பா அமைந்திருக்கிறது. இது கடிதம் எழுதும் முறையைக் கற்பிக்கவல்லது. சீட்டுக் கவி எழுதும் வழக்கமும் எங்கும் பரவியிருந்தது; இது ஒரு தொழிலாக மாறிப் பிறகு வழக்கொழிந்தது.

## கடித இலக்கியம்

அரிய கடிதங்களைத் தொகுத்து ஆங்கிலேயர் நூலுருவில் வெளியிட்டிருக்கின்றார்கள். விவேகானந்த அடிகள் உலகச்சமய மாநாட்டிற்குச் சென்றது முதல் இந்தியாவுக்கு மீளும்வரை தாம் ஆங்காங்குக் கண்ட மக்களின் பழக்க வழக்கங்களையும் பலநாட்டுச் செய்தி களையும் இந்தியாவிலிருந்த தம் நண்பர்களுக்குப் பல கடிதங்களாக எழுதினார். அவை இன்று நூல் வடிவத் தில் வெளியாகியுள்ளன. ஜவஹர்லால் நேரு தம் மகளுக்கு எழுதிய கடிதங்களே உலக வரலாறு என்னும் நூலாக உருவாகி இருக்கின்றன. அதைப் பின்பற்றி, சத்தியமூர்த்தி தம் மகளுக்கு அனுப்பிய கடிதங்களும் நூலாக வெளிவந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. வ. வே. சு. ஐயர் 'பால பாரதி' என்னும் இதழில் எழுதிய ராஜகோபாலன் கடிதங்கள் தமிழ்நாட்டின் கலையை யும், பண்பாட்டையும் தெரிவிப்பன. ராய. சொ. எழுதியுள்ள 'காதற் கடிதங்கள்' என்னும் நூலும்

சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. 'அன்னைக்கு' என்ற தலைப்புடைய சிறுநூல் ஒன்றில் பழைய தமிழகமாகிய தாயிடமிருந்து சேய் கற்க வேண்டிய அனுபவ அறிவுரைகளை எழிலின் கடிதங்களாக டாக்டர் மு. வ. விளக்கியிருக்கிறார். தம்பிக்கு, தங்கைக்கு, நண்பர்க்கு என்ற நூல்களும் இவ்வகையில் எழுந்தவையே. மறைமலையடிகள் இயற்றிய 'கோகிலாம்பாள் கடிதங்கள்' என்ற நூலும் சுவாமி சுத்தானந்த பாரதியார் எழுதிய 'வீரத் தமிழருக்கு ஆவேசக் கடிதங்க'ளும் அப்துற்—ரஹீம் எழுதிய அன்புள்ள தம்பியும் இத்துறையில் வெளிவந்த தமிழ் நூல்களுள் சில. 'கடிதம் எழுதுவது எப்படி' என்ற நூலை லிப்கோ பதிப்பகத்தார் வெளியிட்டுள்ளனர்.

கடிதம் தனிப்பட்ட இருவர் தங்களுக்குள் எழுதிக் கொள்வது. எனவே மனத்தில் தோன்றும் வேறுபட்ட எண்ணங்கள் அதில் இடம் பெறலாம். படிப்பவருக்கு உற்சாகமூட்டுகின்ற முறையில் கடிதம் உருவாக வேண்டும். நேரே பேசுவதுபோல இருக்க வேண்டும். தெளிவும் அன்புகனிந்த நடையும் அரிய செய்திகளும் கடிதத்திற்கு இன்றியமையாதன.

சிறுசிறு சொற்றொடர்களில் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத வேறுபட்ட செய்திகளையும் சில கடிதங்கள் தருகின்றன. இவ்வகைக் கடிதங்களை விரும்புபவர் மிகப்பலர். வாழ்வில் ஏற்படும் சிறு நிகழ்ச்சிகள்......அடுத்த வீட்டு நாய்க்குட்டிக்கு என்ன பெயர் வைத்திருக்கிறார்கள்? எதிர் வீட்டு ஏகாம்பரம் சிகரெட் குடிப்பதை நிறுத்திவிட்டானா? — இருவருடைய காதல் எந்தக் கட்டத்தில் இருக்கிறது என்பது போன்ற கேள்விகளுக்குக் கடிதங்களில் விடை எதிர்பார்ப்பவர்கள் பலர் இருக்கிறார்கள்.

தாம் படித்த சுவையான பகுதிகளை, அந்த இதழ்களிலிருந்து வெட்டி ஒரு குறிப்புடன் வைத்து அதையே கடிதமாக எழுதும் வழக்கம் இப்போது பரவி வருகிறது. அலுவல்கள் மிகுதியாக உள்ளவர்களுக்கும் அரசியல் அலுவலகங்களுக்கும் எழுதும் கடிதங்கள் சுருக்கமாக இருக்க வேண்டும். இன்றேல் அவை எழுதியும் பயனில்லாமல் போகலாம்.

இனி, சில கடிதங்களைத் தருவோம்:

(1)

முன்னாள் மேயர்,
சு. இராமசுவாமி நாயுடு

அண்ணாமலை நகர்
20—12—'54

அன்பினுமினிய நண்பர் திரு. ஐயங்கார் அவர்களுக்கு வணக்கம்.

அன்று நாம் எல்லோரும் ஒருங்கு கூடி அளவளாவிப் பேசிக்கொண்டிருந்த ஞான்று தாங்கள் இசைந்து இல்லக்கிழத்திக்கு உடல் நலம் முழுதும் குணமான பின்னர் விரைந்து, விழைந்து தங்களுடைய குலத்திற்கு ஏற்ற அருமையான, இனிமையான, சுவை மிகுந்த வெள்ளை அப்பம் என்ற பணியாரத்தைச் செய்து தந்து எங்கள் அனைவரையும் உண்டு மகிழச் செய்வதாக உறுதி கூறினீர்கள். அந்த நிகழ்ச்சியை எங்கள் நண்பர் குழுவினர் அனைவரும் ஒருமித்த கருத்தினராய் எதிர்நோக்கி நிற்கின்றார்கள். மேலும் இங்குள்ள பல நண்பர்கள் தத்தம் குலத்திற்கு ஏற்றவாறு சிறப்பாக அமைகின்ற பல தின்பண்டங்களைத் தந்தவண்ணமாக இருக்கின்றனர். அந்தச் சூழ்நிலையிலே தங்களுடைய வெள்ளை அப்பம் என்ற அந்தத் தூய பணியாரம் என்று வருமென்று தத்தம் நாக்குகளைத் தீட்டிய வண்ண

மாகவே காட்சியளிக்கின்றனர். இம்மட்டோடு நில்லாமல் இன்று காலையிலே நடைபெற்ற எங்களுடைய தனிப்பெரும் கூட்டத்திலே என்னுடைய உயிரினுமினிய உண்மை நண்பர் திரு. எம். பி. தாமாதரனார் அவர்கள் முன் மொழிய, கூடியிருந்த பேராசிரியப் பெருங்குழுவினர் அனைவரும் வழி மொழிய ஒருமித்தக் கருத்துடன் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தங்களுக்கு நினைவூட்ட வேண்டிய அதிகாரத்தையும் எனக்குத் தந்து இக் கடிதத்தை எழுதுமாறும் பணித்தார்கள். ஆகவே இந்த நல்ல செய்தியைத் தாங்கள் நன்கு அறிவதோடு மட்டுமில்லாமல், எங்களுடைய வருகை எப்பொழுது ஏற்படும் என்பதை நீங்கள் இப்பொழுது முதல் எதிர்நோக்கி நின்று அந்த நல்ல வாய்ப்பினை நீங்கள் பயன்படுத்தி இன்பம் உறுதல் வேண்டும் என்று விரும்பி நிற்கும் உங்கள் மாவட்டத்தினைச் சேர்ந்த நண்பன்.

இராமசுவாமி நாயுடு.

## (2)

உயர்திருவாளர் தமிழ்க்கோமான் டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்களுக்கு,

வணக்கம் பல. இன்று காலை என் நண்பர் பால் நாடார் அவர்களும் நானும் பெரும் வருத்தத்துடன் தென்காசியைவிட்டுப் புறப்பட்டோம். இன்னும் பல நாட்கள் தங்கள் அடியில் அமர்ந்து தமிழ்த் தேனைப் பருகியிருக்கக்கூடாதா என்று எங்கள் இருவருக்கும் எண்ணமாயிருந்தது. ஆனால், தமிழ்த் தாயின் திருத்தொண்டுதான் என்னை இங்கே மீண்டும் இழுத்தது. நேற்றைய நாள் என்னுடைய வாழ்க்கையில் மிகவும் சிறந்ததொரு நாள். தமிழ் நூல்களிலிருக்கும் சுவையை நுகர்வதுடன் தங்கள்

அன்புக்கும் நட்புக்கும் ஆளாயினேன் என்று உணர்ந்த ஒரு பெரும் நாள். எனக்குத் தமிழறிவோ இல்லை. தமிழ்ப் பெருங்கடலின் கரையில் நின்று விளையாடும் சிறுவனே யான். என் விளையாட்டைத் தாங்கள் கண்டு மகிழ்வதுபற்றி எனக்கே மகிழ்ச்சி. தாங்கள், தமிழ் நாட்டில் என்னைப்போன்றோர்க்கு அறிவும் ஆற்றலும் ஊட்டி வருவதால் நாங்கள் பெருமை கொள்கிறோம். தங்களை இறைவன் திருவருள் தமிழ் நாட்டிற்கு இன்னும் பல ஆண்டு களாக காத்தருளவேண்டும்.

நேற்றுத் தங்களோடு இருந்த மற்றும் நண்பர் களுக்கும், விருந்தோம்பிய தங்கள் உறவினர்க்கும், என் நன்றியையும் அன்பையும் தெரிவிக்கின்றேன். தங்கள் இல்லம் பண்டைத் தமிழ் வள்ளல்களின் இல்லம்போல் தமிழன்பர்களுக்கு உறைவிடமாய் இருக்கிறது. அவர்களோடு நானும் சேர்ந்து அடிக்கடி தங்களைப் பார்த்துத் தங்களிடம் பாடம் கேட்க வேண்டுமென்பதே என் பெரும் ஆவல்.

திருவருள் துணைபுரிக!

**தமிழ்ச் சிறுவன்**

தனிநாயகன்

## (3)

## அறிவிப்பு

**61, ஆச்சாரப்பன் தெரு,**

அன்புடையீர், **சென்னை—1.**

எங்கள் தந்தையார் திரு. M. **சக்கரவர்த்தி நயினார்** (முத்தமிழ் நிலையம், குடிசைத் தொழில் பதிப்பகம் உரிமையாளர்) சிலநாள் உடல் நலமின்றி இருந்து 28—2—'65 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10–30 மணிக்கு அருகர்பதவி அடைந்தார். மறுநாள் க்ஷீரசஞ்சயனம் நடந்தேறியது. அதை முன்னிட்டு

நாளது குரோதி ஆண்டு மாசித் திங்கள் 27-ந் தேதி (10—3—'65) புதன்கிழமை அன்று காலை 10மணிக்கு சென்னை, கிருஷ்ணப்ப நாய்க்கன் குளக்கரையில் தசாவசு நடத்த பெரியோர்களால் நாள் நிச்சயிக்கப் பட்டுள்ளது.

சென்னை-1. இங்ஙனம்,
தேதி: 1—3—'65 **மே. சு. பரதன்**
**மே. ச. அப்பாண்டைராஜன்**

## (4)

**இராமன்** (கலை அன்பன்),
இராமச்சந்திரபுரம்,

அன்புடையீர்,

எனது வாழ்வில் ஒளிபரப்பி மறைந்த அன்பு மனைவி திருமதி **மெய்யம்மை** கடந்த 1—12—'61 வெள்ளிக்கிழமையன்று எதிர்பாராத வகையில் ''கரொனரிதிராம் பொசிஸ்'' என்னும் நோயின் காரணமாகக் காலமானதையொட்டித் தாங்கள் தெரிவித்த அனுதாபத்திற்கு மிகவும் நன்றியுடையவனாக இருக்கிறேன்.

## (5)

### பரிவுக் கடிதங்கள்

**மு. வரதராசன்** சென்னை-30
தமிழ்ப் பேராசிரியர் 16—1—'53.

அன்னையாரின் பிரிவுச்செய்தி அறிந்து வருந்தினேன். இயற்கை பொல்லாதது; மனித உணர்ச்சிகளை அறியாதது; இரக்கம் அற்றது.

ஆறுதல். அன்புள்ள,
**மு. வரதராசன்**

(6)

சென்னை,
21—1—'53.

அன்புடையீர்,

தங்கள் தாயார் இறந்த செய்தியறிந்து வருத்த முற்றேன். அறிவறிந்த மைந்தனை ஈன்ற தாய் இறைவன் தாள் சேர்ந்து மாறிலா இன்பத்தில் மலர்க.

அன்பன்,
**ரா. பி. சேதுப்பிள்ளை**

(7)

உங்கள் நேற்றைக் கடிதம் எங்களை மிகவும் திடுக்கிடச் செய்து உள்ளத்தை வருத்தியது. உங்கள் அருமைத் தந்தையார் காலமான செய்தி நெஞ்சத்தை நீராய் உருக்கிற்று. உங்களையெல்லாம் பெற்று வளர்த்து நன்னிலையில் வைத்துத் தமது கடமையை நன்கு செய்து முடித்த நுங்கள் தந்தையாரான பெரியார் திருவடி நிழலில் அமர்ந்து ஆறுதல் எய்திப் பேரின்பம் நுகர்ந்திருப்பாராக. பிறப்பும் இறப்பும் நம்முடைய ஆற்றலில் அகப்படாமல் நடத்தலால் நாம் செய்யக்கூடியதொன்றுமில்லை!

உங்கள் குடும்பத்தார் அனைவருக்கும் எங்கள் ஆறுதல் மொழிகளைத் தெரிவியுங்கள்.

அன்புமிக்க,
**மறைமலை அடிகள்**

## (8)

இரா. நெடுஞ்செழியன்
கல்வி-தொழில் அமைச்சர்

செயின்ட் ஜார்ஜ்
கோட்டை
சென்னை-9.
செப்டம்பர் 27, 1967.

அன்புடையீர்,

திருவாவடுதுறை ஆதீனத்தலைவர் அருட்டிரு சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள், நாம் யாரும் எதிர்பாராத நேரத்தில் இயற்கை எய்தினார் என்ற துயரச்செய்தி கேட்டு உள்ளம் நொந்தேன். சமயச்சீர்மைக்கும், தமிழ் இலக்கியச் செழுமைக்கும் அவர் அயராது பாடுபட்டு வந்ததை நாடு அறியும்; நல்லோர் உணர்வர். அவரது மறைவு சைவத்திற்கும் செந்தமிழுக்கும் மாபெரும் இழப்பாகும். கையறு நிலையில் கண்ணீர் வடித்து நிற்கும் ஆதீனத்து அன்பர்களுக்கு எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

## (9)

சின்னமுத்தம்பாடி,
மதுரை மாவட்டம்,
16—11—'53

அன்புடையீர்,

தங்கள் அருமைத் தாயார்—அன்பிற் சிறந்த அன்னையார்—இறவாத இன்ப நிலையை எய்திய செய்தியை இன்று அறிந்தேன்.

'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனிசிறந்தனவே' என்பதல்லவோ கவிஞன் குரல்? அகந் தோய்ந்த அன்பினுடைய எல்லையைத் தாய்மையிற்தானே காண முடிகிறது. சுருக்கமாகச் சொன்னால் அன்புப் பண்பே தாய்மைப்

பண்பு. பக்தியிற் சிறந்த பாவலர்களும் கூட தாயினும் நல்லன் என்று ஆண்டவனைப் பாராட்டி யுள்ளார்கள். அங்ஙனம் எண்ணத்தாலும், உணர் வாலும் அன்பினைச் சொரிந்து அரவணைத்து ஆதரவு நல்கும் அருமை அன்னையை இழந்து அயர்ச்சி அடைந்துள்ள தங்கட்கு எமது பரிவுரை உரியதாகுக.

அன்னையின் ஆன்மா சாந்திநிலையை எய்த பிரார்த்திப்போமாக.

**கிருஷ்ணசாமி.**

## (10)

இந்நூலாசிரியர் இலங்கையிலிருந்தபோது அவருக்குக் குன்றக்குடி அடிகளார் எழுதிய கடிதம்.

குன்றக்குடி,
13-12-1952.

அன்பிற் சிறந்த இலக்குமணச் செட்டியார் அவர்களுக்கு எல்லா நன்மைகளும் பெருக அண்ணு மலை அண்ணலின் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

தமிழ் மொழியினுடைய தரம் குறைந்து வருகிறது, அங்ஙனம் பலர் செய்கின்றார்கள் என்று நாம் பல மேடைகளில் பேசியதுண்டு. ஆனால் தமிழ கத்தில் இக்கருத்தினை ஏற்பாரோ, ஆதரிப்பாரோ அதிகமாக இல்லை. ஓரிரண்டு பழங்காலத் தமிழ்ப் புலவர்களே ஆதரித்தனர். எனினும் கடல்கடந்த இலங்கையிலே கன்னித் தமிழன்னையின் வளம்-தரம் பூரணமாகவே இருக்க எண்ணுகின்ற அன்பர்கள் மிகுந்திருப்பது குறித்து மட்டற்ற மகிழ்ச்சி. புதுமை யின் போர்வையிலே எளிமை என்ற பெயராலே தமிழின் தரம் குறைக்கப் பெறுதல் முற்றிலும் விரும்பத்தக்கதல்ல. இதனை உணர்ந்து தமிழன் பர்கள் வேண்டுவன செய்வார்கள் என்று நம்பு

கின்றோம். நமது அன்பர் திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் இலங்கை வந்துள்ளார்கள். அவர்கள் பல்கலைச் செல்வர், பாண்பாட்டுருவினர், பேரருளாளர், தொண்டின் நலங்கனிந்த செல்வர். அவர்களை இலங்கை நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளும் என்று நம்புகின்றோம். அந்த முயற்சியில் தாங்களும் ஈடுபட்டிருப்பது குறித்து அளப்பற்ற மகிழ்ச்சி. இளமை நலமும், அறிவு வளமும், தமிழார்வமும், தொண்டாற்றுதலில் பெருவிழைவுங் கொண்ட தங்களை நினைத்துப் பெரிதும் மகிழ்கின்றோம். வளர்க தங்கள் வாழ்நாள். மற்றவை தங்கள் கடிதங்கண்டு. என்றும் வேண்டும் இறவாத இன்ப அன்பு.

**தெய்வசிகாமணி.**

## (11)

## 1938-இல் ஒரு நண்பருக்கு அறிஞர் அண்ணா எழுதிய இரங்கற் கடிதம்

தங்களுடைய திருக்குமாரன் மறைந்த செய்தி கேட்டு மனம் ஒடிந்தேன். தங்களுக்கு அருமருந்தாக விளங்கிய அருமை மகன் மறைந்து விட்டான், ஆம்; இதனை மறுக்க எவரால் முடியும்? குறுநடையும் புன்முறுவலும் மழலையும் தங்களுக்கு யாழாகவும், குழலாகவும், நாதமாகவும், நர்த்தனமாகவும் இருந்தன. இதயம் பூரிப்பிலே பிணைந்தது. விழியிலே களிப்புக் கூத்தாட, மொழியிலே மகிழ்ச்சி மிளிர தங்கள் திருக்குமாரனைக் கண்டு களித்து வந்தீர்கள். ஆனால்.........

புயலால் பூம்பொழில் அலைந்துபட்டதுபோல, பெருங் காற்றால் விளக்கு அணைந்ததுபோல, சுழலிலே சிக்கிய கலம் பாறையிலே மோதுண்டு தூளானது

போல, மகன் மறையவும், தங்களின் மனம் ஆறாத் துயரெனும் ஆழியில் வீழவுமாயிற்று. இவ்விரு நிகழ்ச்சிகளும் என்னுடைய மனதைத் துயர்க் கடலில் ஆழ்த்துகின்றன. என்ன என்பது இக் கோரத்தை.

இயற்கை இயற்கை என்று எண்ணற்ற முறை இயம்பினாலும், என்மகனே என்மகனே என்று தங்களுடைய இதயத்தினின்று எழும் சோக ஒலி எப்படிக் குறைந்திட முடியும்? புத்திர சோகத்தை விடக் கொடியது வேறொன்றுமில்லையே; அந்தச் சோகத்தில் தாங்கள் ஆழ்ந்திடக் கேட்டு மனம் வெதும்புகின்றேன். தங்களுக்கு ஆறுதல் கூறும் எண்ணத்தை முந்திநின்று முறியடிக்கிறது எனது சோகம். என் செய்வது? என் செய்வது? என்பதன்றி வேறோர் மொழியும் வழியும் அறியாது திகைக் கின்றேன். என் செய்வது? என் செய்வது?

## (12)

**C. SUBRAMANIAM**
Minister For Finance

Fort St. George
MADRAS,
*18—11—1959.*

அன்புடையீர்,

இத்திங்கள் இதழான தங்கள் 'குருகுலம்' வள்ளுவன் மலர்' எனப் பெயர்கொண்டு வெளி வருவது வரவேற்கத்தக்கது.

நம் மாநிலக் கல்வி இயக்குநர் திரு. சுந்தர வடிவேலு அவர்களின் ஒரே புதல்வன் தன் பத்து வயது நிரம்பாச் சிறு பிராயத்தில் எதிர்பாரா விதமாக இம்மண்ணுலகை விட்டு விண்ணுலகு எய்தியது நெஞ்சம் குமுறும் செயலாகும்.

வள்ளுவனை நான் நன்கு அறிவேன். மிகவும் சுறுசுறுப்பும் அறிவாற்றலும், இரக்க குணமும் நிறைந்தவன். பொய்யில் புலவராகிய திருவள்ளுவர் பெயரைத் தன் மகனுக்குச் சூட்டிய இவன் தந்தை அப்பெரியாரின்—

**தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து**
**முந்தி இருப்பச் செயல்**

என்னும் பொன்மொழிக்கேற்ப வள்ளுவனைப் படிக்க வைத்தார். அவனும், அவ்வேத வாக்கியரின்—

**மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை**
**என்நோற்றான் கொல்எனும் சொல்**

என்னும் பாடலுக்கு ஏற்ப வகுப்பில் முதல்வனாக இருந்தான். திருக்குறளை அநேகமாகப் பூராவும் மனப்பாடம் செய்து ஒப்பிக்கவல்லவன்.

பிரிந்த ஆன்மா சாந்தியடையவும், புண்பட்ட பெற்றோர் நெஞ்சம் ஆறுதலுறவும் கடவுள் அருள் பாலிப்பாராக.

தங்களன்புள்ள,
**சி. சுப்பிரமணியம்.**

## (13)

ஔவை துரைசாமிப் பிள்ளை தம் மாணவரான யாழ்ப்பாணத்தவர் ஒருவர்க்கும் தமிழ்நாட்டுப் பெண் ஒருவர்க்கும் நடந்த திருமணத்தின்போது மணமகளின் தந்தைக்கு எழுதியது:

மணமகன் கடலாற் பிரிக்கப்பட்டாராயினும் கருத்தால் அன்பால் கவின்றிய நடையால் நம்மிற் பிரிந்தாரல்லர்.

திருமணத்துக்கு வந்து மணமக்களைக் கண்டு வாழ்த்தும் பேறு கிடைக்கின்றிலேன். ஆயினும்,

என் மனக்கினிய மணமக்கள் நீடிய நாளும் சூடிய புகழும் கூடிய பெருகும் செல்வமும் நன்மக்கட் செல்வமும் பெற்றுப் பெருஞ் சிறப்பெய்துக எனக் குற்றாலத் தமர்ந்துறையும் கூத்தப் பெருமானை வணங்கி வழிபடுகின்றேன்.

## (14)

7, புதுப்பேட்டை வடக்குத் தெரு,
சிதம்பரம்.

அன்புடையீர்,

*11—6—1956-இல் தில்லையில், இறைவனருளால் இனிது நிகழ்ந்த எங்கள் திருமணத்துக்குத் தாங்கள் அன்புடன் வாழ்த்து அனுப்பியதற்கு எங்கள் உளம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*

**பவுனும்பாள்—இராசமாணிக்கம்**

## (15)

### பிறந்த நாள் விழா அழைப்பு

*மதுரை, 1—6—'55*

*என்னருஞ் செல்வன் எழில் மிகுங் கண்ணன்*
**இன்றுட னாண்டு ஒன்றினை யெய்தும்*
*அறுகாம் சிறுவன் ஆல்போற் றழைக்கப்*
*பெரியீர்! ஆசிகள் பெய்திட வாரும்.*

**பு. இராஜண்ணன்,**
*மதுரை மாவட்டப் பொது நூல்நிலையம்*

* 10—6—55 வெள்ளிக்கிழமை.

## (16)

மு. கருணாநிதி,
பொதுப்பணி அமைச்சர்

தமிழக அரசு
தலைமைச் செயலகம்
சென்னை-9
9—8—1967

அன்புடையீர்,

தமிழ் நாடக மறுமலர்ச்சிக்கு உதவிய மேதைகளில் தலையாயவர் சங்கரதாஸ் சுவாமிகள். தேனினும் இனிய தெள்ளு தமிழ் வசனங்களாலும், தீஞ்சுவைப் பாடல்களாலும் தமிழர் நெஞ்சங்களைக் கொள்ளை கொண்டவர். அவரால் நாடகத்தமிழ் வளர்ந்தது; செழித்தது. அவ்ரால் பயிற்றுவிக்கப் பட்ட பலர் நாடறிந்த கலைஞர்களாயினர். அவரது நினைவைப் பசுமையாகப் போற்றுவது தமிழ் மொழியின் வளர்ச்சியிலும் செழுமையிலும் சிந்தை செலுத்துவோரின் சீரிய கடமையாகும்.

முத்தமிழ்க் கலையரசரின் நூற்றாண்டு விழாவினைப் பாங்குறக் கொண்டாட, தமிழவேள் அவர்களின் தலைமையில் தகைசால் குழுவொன்று அமைக்கப்பட்டிருப்பது மிகவும் பொருத்தமாகும். குழுவின் விழுமிய முயற்சிகளுக்குத் தமிழ்ப் பெருமக்களின் ஒரு மனதான ஆதரவு கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. விழா சீரும் சிறப்போடும் நடந்தேறவும் சங்கரதாஸ் சுவாமிகளின் அருமை பெருமைகளுக்கு ஓர் உரைகல் என்று சொல்லத்தக்க வகையில் மலர் எழிலோடு வெளிவரவும் எனது நல் வாழ்த்துக்கள்.

அன்புள்ள
மு. கருணாநிதி

## (17)

## பிறந்தநாள் விழா வாழ்த்து

சுவாமி சுத்தானந்த பாரதி
புதுச்சேரி. 10—1—1942

அன்புள்ள சோமு. லெ. இலக்குமணஞ் செட்டியார் அவர்களுக்குச் சிவபெருமான் அருளால் மங்கலம் பொங்குக.

தங்கள் செல்வி சிகப்பிக்குப் புதுமை நடப்பது பற்றிப் பெருமகிழ்வு. சிகப்பி செந்திருபோல் நல் வழகும், கலைமகள்போல் நல்லறிவும், சிவகௌரி போல் புனித வாழ்வும், பவானிபோல் வீரமும், ஔவையார்போல் தமிழறிவும் ஓங்கி வாழ்க!

தாங்கள் புதுமை நன்னாளில் 'திருக்காட்சி' வழங்குவது மிக அரிய பணி. திருக்காட்சியே நமது தாயின் திருவடிவு.

எந்தாய் வாழ்க!
அன்பு வாழ்க!
சுத்தானந்த பாரதி

## (18)

## சிபார்சுக் கடிதம்

கோயம்புத்தூர்.

பேரன்புடையீர்!

வணக்கம், நலம்.

மூச்சு வாங்க நேரம் இல்லாமல் தங்களுக்கு வேலை நெருக்கம் மிகுந்திருக்கும். எனினும் தங்களுக்கு ஒரு துன்பம் தரலாமா? இதைக் கொண்டு வரும் இளைஞர் எனக்கு மிக வேண்டிய குடும்பத்தைச் சேர்ந்தவர். தகுதி நிறைந்தவர். தொழில் வேண்டும் என்பதே இன்று இவர்தம் நிலை. மற்றவை

நான் சொல்ல வேண்டுவதில்லை. தங்கள் அன்பும் ஆதரவும் இவர்க்குத் தேவை. வழிகாட்டுவீர்கள், உதவி புரிவீர்கள் என்ற நம்பிக்கை உறுதியாக உண்டு.

தாங்கள் அண்மையில் ஈடுபட்டிருக்கும் அலுவல்களைப்பற்றி அறிந்தேன். தங்கள் முயற்சிகள் யாவும் மகிழ்ச்சியும் வெற்றியும் பயப்பதாக.

தங்களன்புள்ள,
**கொடை அரசு**

## (19)

## திருமண வாழ்த்து

**இல. முத்துலிங்கம்**

கீழ் மறுவத்தூர்,
சோத்துப்பாக்கம் அஞ்சல்,
செங்கற்பட்டு மாவட்டம்,
26—10—1956

வணக்கம் பல. தங்கள் திருமண மடல்கிடைத்து மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன். ஆனால், மண நாளன்று எனக்குத் தேர்வு நடைபெற இருப்பதால், நான் வர இயலாமலிருப்பதைப் பொறுத்தருள்க.

தாங்கள் இருவரும் அன்பும் அறனும் உடையவராய்ப் பண்பும் பயனும் பெற்றுப் பல்லாண்டு வாழும் வண்ணம் இறைவனது இன்னருளை இறைஞ்சுகின்றேன்.

ஆலும் அரசும் அதிமதுர வாழையும்போல்
மேலும் குலம்வளர மேதினியில் எண்ணெழுத்தைக்
கற்றுணர்ந்து தேர்ந்து கருத்தொன்றுங் [காதலராய்ப்
பொற்புடனே வாழ்க பொலிந்து.

தங்களன்புள்ள,
**இல. முத்துலிங்கம்**

## (20)

தங்கள் அரும்பெறற் புதல்வனின் திருமண அழைப்புக் கிடைத்தது. மகிழ்ச்சி.

மணமக்களின் இல்வாழ்வில் அறமும்பொருளும் மல்கவும் இன்பம் பொங்கவும் வேண்டுமென்றும், இருவரும் நீடுழி வாழவேண்டுமென்றும் வள்ளி மணவாளனை இறைஞ்சி, வாழ்த்துகிறேன்.

அன்பன்,
**கி. வா. ஜகந்நாதன்.**

## (21)

### நன்றி நவிலல்

அன்புடையீர்,

என் தந்தையார் 'பெருஞ்சொல் விளக்கனார்' அ. மு. சரவண முதலியார் இறைவன் திருவடி அடைந்தமை அறிந்து தாங்கள் அனுப்பிய ஆறுதல் மொழிகளுக்கு நன்றி.

சென்னை,
21-3-59.

அன்புள்ள,
**அ. ச. ஞானசம்பந்தன்.**

## 20. பேச்சுவழக்கில் தமிழ்

பேச்சு மொழிக்கும், எழுத்து மொழிக்கும் வேறுபாடு மிகுதி. பேசுவதுபோல் எழுதுவதும் எழுதுவது போலப் பேசுவதும் தவருன முறை; பேசுவதுபோல் எழுத வேண்டுமென்ற இயக்கம் பிற மொழிகளிலும் வெற்றி பெறவில்லை; இக்கருத்துக்களை 'மறுமலர்ச்சி நடை' என்ற கட்டுரையில் சுட்டிக் காட்டினேம். மேலும், பேச்சுத் தமிழ் என்பது இன்னது என்பதை யாரும் திட்டவட்டமாக வரையறை செய்யவில்லை. பேச்சு வழக்கில் தமிழ்மொழி பல இடங்களில் பல வகையாகப் பேசப்பட்டு வருகிறது; இந்தக் கட்டுரையில் தக்க சான்றுகளுடன் இதை நிலை நாட்டுவோம்.

சில துணைச் சொற்களுடன் பேசுவது என்ற மரபு தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலும் நிலவி வருகின்றது. சான்ருக: காடுகரை, சம்பளம் கிம்பளம், வீடுகீடு, போலீசுகீலீசு, தோட்டந்துறை என்ற சொற்களைக் குறிப்பிடலாம். எழுதும்போதும் இவ்வாறு துணைச் சொற்களுடன் தமிழை எழுத வேண்டுமென்று ஒருவரும் சொல்லமாட்டார்களென்று நம்புகிறேம்.

கருவுறல் என்பது உண்டாய் இருக்கிருள் எனப் பொருள்படும். பேச்சு வழக்கில் இதைப் பிள்ளைத் தாய்ச்சி, வாயும் வயிறுமாய், முழுகாமல் இருக்கிருள், குளியாமல் இருக்கிருள், சினைப்படல், பயறு ஆதல் என்பர்.

"பேச்சுமொழியில்" — எழுதப்பட்ட இலக்கியம் சில உண்டு. சான்று: குறவஞ்சி, பள்ளு, காதல் முதலியன. பாரதிதாசன், பாரதி, ஆழ்வார் ஆகியோரும் பேச்சு வழக்குச் சொற்களை ஆண்டுள்ளனர்.

ஒரு கருத்தைத் தெரிவிக்க, பல மாவட்டங்களில் பல சொற்களைப் பயன்படுத்துகிறார்கள். **பெண் பூப்பு எய்திவிட்டாள்** என்பது நெல்லை வழக்கு. **மேஜராகிவிட்டாள்** என்று சொல்வது நாகரிக வழக்கு. **மனுசியாகிவிட்டாள்** என்று சொல்வோரும் உளர். **ருது ஆகிவிட்டாள்** என்ற சொற்றொடர்களையும் கேள்விப் பட்டிருக்கிறோம். **ஆளாகிவிட்டாள்** என்ற வழக்கும் உண்டு. **சடங்காகிவிட்டாள்** என்று செட்டி நாட்டில் சொல்வர். **பெண் பெரியவளாகிவிட்டாள்** என்பர் பலர். **புஷ்பவதியாகிவிட்டாள்** என்பர் சிலர். **சமைந்துவிட்டாள்** என்பர் தென்னார்க்காட்டு மக்கள்; **புத்தி அடைந்துவிட்டாள்** என்றும் அவர்கள் சொல்வார்கள். வட ஆர்க்காட்டில் **திரண்டுவிட்டாள்** என்ற சொற்றொடரைப் பயன்படுத்துவர். பேசுவது போல் எழுத வேண்டுமென்று சொல்லுகிற அன்பர்கள் இச்சொற்றொடர்களுள் எதைக் கையாள வேண்டுமென்று கருதுகின்றனரோ?

மற்றொரு சான்று தருவோம். மாமிசத்தை **கறி** என்று குறிப்பிடுவர் பலர். **கசாப்பு** என்று சொன்னால் வேறு பலருக்குப் புரியும், **மச்சம்** என்ற சொல்லே ஈழ நாட்டில் வழங்கி வருகிறது. **இறைச்சி** என்ற சொல் தென்பாண்டி நாட்டில் வழங்கி வருகிறது. **ஊண்** என்னும் தூய தமிழ்ச்சொல்லை மலையாள நாட்டவர் பயன்படுத்தி வருகின்றனர். **புலால்** என்ற சொல்லும் சில மாவட்டங்களில் வழங்கி வருகிறது.

விரைவாக என்ற சொல்லை, விரசலாய், வேகமாய், சுருக்கா, கெதியாய், சட்டுனு, சீக்கிரம், பொக்குனு,

சல்தியாய் என்றெல்லாம் ஊருக்கு ஒருமாதிரி கையாண்டு வருகின்றனர்.

கேழ்வரகு என்று சில மாவட்டங்களில் வழங்கும் பொருளை குரக்கன் என்று யாழ்ப்பாணத்திலும், ஆரியம் என்று சேலத்திலும் கேப்பை என்று பாண்டி நாட்டிலும், ராகி என்று திருச்சியிலும், கேவுரு என்று சில மாவட்டங்களில் பேச்சு வழக்கிலும் கூறுகின்றனர்.

ஒரே பொருள் பேச்சு வழக்கில் முரண்பட்ட கருத்துக்களைத் தருவதும் உண்டு. சுமார் என்ற சொல் 'நன்றாக இருக்கிறது' என்ற பொருளில் சென்னையிலும் அதற்கு மாறுபட்ட கருத்தோடு தென் மாவட்டங்களிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தூறுகிறது என்ற சொல் சிறிது சிறிதாக மழை பெய்கிறது என்ற பொருளை, பல இடங்களில் தருகிறது. சில இடங்களில் சரியாக உணவு செரிக்காமல் இடையிடையே மலம் கழிகிறது என்ற பொருள் இச்சொல்லுக்கு உண்டு. தமிழகத்தில் 'கர்மம்' என்ற சொல் 'தலைவிதி' என்ற பொருளில் வழங்கி வருகிறது. அதைச் சொல்லும் போதே தலையில் அடித்துக்கொள்ளுபவர்களைப் பார்த்திருக்கிறோம். மங்கலமற்ற முறையிலே இச்சொல் வழங்குவதால் இச்சொல்லிலிருந்து 'கருமாதி'' என்ற சொல்லும் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் கர்மம்'' என்னும் சொல்லுக்குச் சில இடங்களில் வேலை, தொழில் என்ற பொருள் உண்டு. இப்பொருளிலேயே ''கர்மம்'' என்ற சொல் யாழ்ப்பாணத்தில் வழங்கி வருகிறது. ''கருமமேகண்ணாயினார்'' என்பது பண்டை வழக்கும் ஆகும். ''செயற்குழு'' என்பதற்குக் 'கருமக் குழு என்ற சொற்றொடரே ஈழநாட்டில் வழங்கி வருகிறது.

பேச்சு வழக்கிலுள்ள சொற்களை எழுத்தில் கையாளுவதில் பிறிதொரு தொல்லையும் உண்டு. சில சொற்களுக்கு இலக்கிய வழக்கில் ஒரு பொருளும் உலக வழக்கில் அதை விடக் குறுகிய ஒரு பொருளும் வழங்கி வருகின்றன. சான்ருக இரண்டைக் கூறுவோம். விமானம் என்ற சொல் இலக்கிய வழக்கில் எல்லா வகையான போக்குவரத்துக் கருவிகளையும் குறிக்கும். ஆனல் உலக வழக்கில் இச்சொல் ஆகாய விமானத்தையே சுட்டுகிறது. நாற்றம் என்ற சொல் இலக்கிய வழக்கில் மலரின் நறுமணம், துர்நாற்றம் என்ற இரண்டையும் குறித்தாலும், உலக வழக்கில் இச்சொல் துர்நாற்றத்தை மட்டுமே குறிப்பிடுகிறது.

பேச்சு வழக்கு, எழுத்து வழக்குப்பற்றிய மாறுபட்ட கருத்துக்கள் ஒருபுறம் இருக்க, வழக்கிழந்த சொற்களைக் கோவைப்படுத்தி நூல்களாக வெளியிடும் வேலை தொடங்க வேண்டுமென்பதைத் தமிழ் அன்பர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிருேம். தமிழ்மொழியில் அருமையான சொற்கள் பேச்சு வழக்கில் மறைந்து கிடப்பதை அன்பர்களுக்கு நினைவூட்ட வேண்டுமென்ற வேட்கையில் சிறு பட்டியல் ஒன்றை இங்கே தருவோம்.

குறி எதிர்ப்பை என்னும் குறள் சொல், கொங்கு நாட்டிலும் நடுநாட்டிலும் பேச்சு வழக்கிலிருக்கிறது. 'விற்று வருதல்' என்னும் பொருளில் மாறி வருவேன் என்று கூறுதலை இன்னும் திருச்சிராப்பள்ளியில் கேட்கலாம். 'மாறி வருதல்' என்பது சிலப்பதிகாரக் காலத்தில் வழங்கிய சொற்ருெடர். வேறுபல பழமையான சொற்கள் சிதைந்த உருவில் பாமர மக்களிடையே கொச்சையாக வழங்கி வருவதும் இவை சில காலத்தில் இலக்கிய உலகிலிருந்து வழக்கொழிந்து விடுவதும் இயற்கையே. ஏனைய மொழியாளர்கள் இவ்வகை இலக்

இயத்தையும் வளர்த்துத் தங்கள் மொழியை வளப் படுத்தி வருகின்றனர்.

சேரநாடு மலைஉடைத்து; சோழநாடு சோறுடைத்து பாண்டி நாடு நல்ல தமிழ் உடைத்து என்பது ஆன்ஞேர் வாக்கு. எனவே, பாண்டி நாட்டில் வழங்கும் பேச்சுத் தமிழை முதலில் குறிப்பிடுவோம்.

## நெல்லைத் தமிழ்*

'இன்பத்தமிழ் பிறந்து ஏற்றமுடனே நன்கு இலங்கி' வளரும் நெல்லை வழக்குகள் பலவற்றை சுகி, புதுமைப் பித்தன் ஆகியோரும் வேறு பல எழுத்தாளர் களும் தங்களுடைய நூல்களில் கையாண்டிருக்கிறுர் கள். புலவர் என்ற ஒரு சாதியும் நெல்லையில் உண்டு. இம்மாவட்டத்தில் வாழுகின்ற 'கரையாளர்' என்னும் மரபினர் 'திரை அகழ்தல்' போன்ற தூய தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தி வருகின்றனர். 'ராசா', 'வந்தாஹ', 'அவுஹ' என்றுதான் நெல்லை மக்கள் உச்சரிப்பார்கள். எல்லாப் பெண்களையும், அவள் இவள் என்று அழைப்பதும் திருநெல்வேலி வழக்கு.

## நாஞ்சில் நாட்டுத் தமிழ்

திருவிதாங்கூர் மன்னரின் ஆட்சியில் இருந்த கன் னியா குமரி மாவட்டத்தில் நாஞ்சில் நாடு, ஒரு பகுதி.

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, டாக்டர் பா. நடராசன், நடிகர் டி. கே. சண்முகம் ஆகிய பெரு மக்களை நாஞ்சில் நாடு தந்திருக்கிறது. 1956 வரை இங்குள்ள மக்கள் மலையாள மொழியையும் கற்றதால் தமிழின் சிறப்பை நன்குணர்வர். அவர்களுடைய தாய் மொழி ஆர்வம் மேலோங்கி நின்றதாலேயே

* விரிவாக அறிய விரும்புவோர்: திருநெல்வேலி மாவட்டம் என்ற என் நூலைக் காண்க.

தாய்த் தமிழகத்துடன் இணைந்தனர். செந்தமிழே கொடு மலையாளம் என்பது அவர்கள் கருத்து. நாஞ்சில் நாட்டுத் தமிழர்கள் பேசுகின்ற தமிழில் 'ஓய்' என்னும் விளிச்சொல் மிகுதியாக இருக்கும். வா, போ என்பதற்கு 'வாடை' 'போடை' என்று அசைச் சொல் சேர்ப்பதும் அவர்கள் மரபு. மச்சான் என்பதற்குப் பெண்பாலாக மச்சாள் என்ற சொல்லைப் பயன் படுத்துவர்.

## யாழ்ப்பாணத் தமிழ்

தமிழ் மொழியின் தூய்மை, உச்சரிப்பு இவை பற்றி யாழ்ப்பாணத்தார் அக்கறை கொண்டுள்ளனர். தாமாக, மொழிக்கு மிகுதியாகப் பணி செய்யா விட்டாலும் அவர்கள் பழமையைப் பாதுகாத்து வந் திருக்கின்றனர். எனவே, குரோட்டன்சுச் செடி மாதிரி யாழ்ப்பாணத்தார் தமிழை வளர்க்கிறார்கள் என்று சொல்லுவதுண்டு.

## மலையாளத் தமிழ்

தமிழில் வழக்கில் இல்லாது இறந்து போய் மலை யாள மொழியில் இன்றும் வழங்கிவரும் அருந்தமிழ்ச் சொற்கள் சிலவற்றை இங்கே குறிப்பிடலாம்.

கோயிலகம் – அரண்மனை (கோ இல் அகம்)
தம்பிரான் - அரசன்
வாய்க்குரவை - மங்கலச் சடங்குகளில் பெண்கள் எழுப்பும் ஒலி (குரவைக் கூத்து)

இன்னும் மலையாளிகள் தம் அரசரைப்பற்றிப் பேசும் போது அவர் **திருமேனி** என்றே கூறுவர்; அரசர் உறங்கும் அறை **பள்ளி அறை**; அவர் துயிலுவது **பள்ளி உறக்கம்**; அவர் துயிலெழுவது **பள்ளி எழுச்சி**; அவர் குளிப்பது **நீராடல்**; அவர் எழுதும் கடிதம் **திருமுகம்**;

அவர் மணம் செய்வது திருத்தாலி சாத்தல்; அவர் பேசுவது திருவாய் மலர்ந்தருளல். இத்தகைய சொற்களெல்லாம் தமிழ் வழக்கொழிந்திருப்பதே தனித் தமிழ் இயக்கத்தின் தேவையை விளக்குவதாகும்.

## சென்னைத் தமிழ்

இஸ்துகிட்டு போ, சுதாரிச்சிகிறது, சும்மஞ்சிக்கும் குந்துங்க, அதுக் கோசரம், பிஹாசு, பந்தா, திராணி, திராபை, கம்மியாக்கு போன்ற இழிவான சொற்கள் சென்னையில் வழங்குகின்றன. இதைப்பற்றி, கி. வா. ஜகந்நாதன் கூறியிருப்பதைக் காண்க.

> 'இழுத்துக் கொண்டு' என்ற வார்த்தை செந்தமிழ் உருவத்தில் விளங்குகிறது. தமிழுக்குச் சிறந்த ழகரம்கூட அதில் இருக்கிறது. ஆனால், பேசும் பொழுது, அந்த வார்த்தையை அப்படியே உபயோகிப்பவர் இல்லை. சிலர் அதை, 'இழுத்திண்டு' என்று குறுக்கிவிட்டார்கள். வேறு சிலர், 'இளுத்திட்டு' என்று மாற்றிக்கொண்டார்கள். 'இளுத்துக்கிட்டு' என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள். 'இயுத்துக்கினு' என்று சென்னையில் சிலர் சொல்கின்றனர். ரிக்ஷாக்காரன் அதை 'இஸ்துக்கினு' என்று ஆக்கிவிடுகிறான். சென்னையை அடுத்துள்ள தெலுங்கு நாட்டினர் 'ஈட்ஸுகொனி' என்று சொல்வதற்கும், 'இஸ்துக்கினு' என்பதற்கும் வித்தியாசம் கொஞ்சம் தான்.

சில தலைமுறைகளாக நிலவிய இந்த நிலை மாறி, சென்னையில் செந்தமிழ்மணம் கமழ்ந்து வருவதுமகிழ்ச்சிக்குரியது.

## வைணவத் தமிழ்

வைணவர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்ளும் போது 'பரி பாஷை'களைப் பயன்படுத்துவார்கள். அவற்றுள் சில:

*சக்கரத்தாழ்வார் - தோசை*
*உய்யக் கொண்டார்-பழஞ்சோறு*
*கண்ணமுது-பாயசம்*
*சாத்தமுது - ரசம்*
*நெடி - சாம்பார்*
*திருமாளிகை-பிறந்தவீடு*
*குடிசை (சிறுகுடில்)-தன்னுடைய வீடு*
*சேவை சாத்தியாச்சா?-பார்த்து விட்டீர்களா?*
*ஏளப் பண்ணனும்-எழுந்தருளப்பண்ண வேண்டும்*
*அமுது செய்தாச்சா-சாப்பிட்டாச்சா*
*தனியன்-பாடல்*
*தெண்டம் சேவிச்சாச்சா-வணங்கியாச்சா*

பேச்சு வழக்கிலுள்ள வேறுபாடுகள் மேற்கூறியவற்றிலிருந்து தெளிவாகத் தெரியும். மொழிநூற் புலவர்கள் இவைபற்றி விரிவாக ஆராயவேண்டும்.

## 21. கவிதை

தமிழ்க் கவிதைப்போக்கில் ஏற்பட்டுள்ள மாறுதல்களை இக்கட்டுரையில் ஓரளவு சுட்டிக் காட்டுவோம்.

சங்ககாலப் பாடல்களில் உள்ளதை உள்ளவாறு கூறும் புலவரியல்பைக் காண்கின்றோம். இடைக்காலப் பாடல்கள் பெரும்பாலும் தோத்திரப் பாடல்களாகவே உள்ளன. இக்காலத்திலேயே சமணரும் பௌத்தரும் சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, நீலகேசி முதலிய நூல்களை இயற்றினர். இதன் பின்னர் பல சமயங்களும் வளர்ச்சியடைந்தன. அதையொட்டி கம்பராமாயணம், பெரியபுராணம், கந்தபுராணம் முதலிய சமய நூல்கள் தோன்றின.

ஆங்கில ஆட்சி தோன்றுவதற்கு முந்திய இரண்டொரு நூற்றாண்டுகளில் தங்களை ஆதரிப்பாரில்லா நிலையில் புலவர்கள் தலபுராணங்கள், சிறு பிரபந்தங்கள், (கலம்பகம், உலா, தூது, பிள்ளைத் தமிழ்) முதலியவற்றைப் பாடினர். இக்காலத்திலேயே வீரமாமுனிவர் தேம்பாவணி திருக்காவலூர்க் கலம்பகம் முதலிய கிறித்தவ சமயச் சார்புடைய நூல்களை வெளியிட்டார். இந்து சமயத்திலும், சமுதாயத்திலும் சீர்திருத்தம் தேவையென அறிந்து 19-ஆம் நூற்றாண்டில் இராமலிங்க அடிகள் அக்கருத்துக்களைப் பரப்பினார்.

இந்த நூற்றாண்டில் நாட்டு விடுதலை இயக்கம் பரவிற்று. அதை உயிர்நாடியாகக் கொண்டு சுப்பிர மணிய பாரதியார் ஏராளமான பாடல்களைப் பாடினார். பெண்ணுரிமைக் கிளர்ச்சி, தமிழ்மொழி வளர்ச்சி ஆகியவை பற்றியும் தமிழ் மக்களிடையே தம் பாட்டுக்களால் ஒரு புத்துணர்ச்சியை ஊட்டினார். நாடு, மொழி, கலை, தொழிலாளர் நலன் போன்றவை பற்றிய பாடல்கள் முன்னர் பக்திப் பாடல்கள் இருந்த நிலையை அடைந்து, பொது மக்கள் உள்ளங்களில் நிலையான இடம் பெற்றுள; இசை நாடக அரங்கு களிலும் பொதுக் கூட்டங்களிலும் இவை பாடப்படு கின்றன.

பாரதியாருக்குப் பிறகு சிறப்படைந்த அவருடைய மாணவராகிய பாரதிதாசன் தமிழ் வளர்ச்சி, கைம்பெண், மறுமணம், மாதர் முன்னேற்றம், கல்வி, மூடப்பழக்க வழக்கங்கள் என்பவை பற்றிப் பல பாடல் களையும் பாடியுள்ளார். தமிழ் மக்கள் இவற்றைப் பெரிதும் பாராட்டி வருகின்றனர். இவருடைய **அழகின் சிரிப்பு, குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு, பாரதிதாசன் கவிதைகள்** என்பவை மிகச் சிறந்த இலக்கியப் படைப் புக்கள்.

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் பாடல்களை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று மொழிபெயர்ப் புக்கள் மற்றொன்று அவருடைய சொந்தப் பாடல்கள்.

தமிழ் மரபு சிதையாமல் சிறப்பாக அமைந்து அவருடைய ஆசிய ஜோதியும் பிற மொழிபெயர்ப் புக்களும் தனிச் சிறப்புடன் விளங்குகின்றன. உள்ளதை உள்ளவாறே பாடிய கவிஞர் கவிமணி. கவி மணியின் பாணியை ஓரளவு பின்பற்றிப் பாடியுள்ள

வர்களுள் கவிமணியின் மருகர் குமாரசாமிப் பிள்ளையும், உமைதாணுப் பிள்ளையும் குறிப்பிடத் தக்கவர்கள்.

கவிஞர் திலகமாக விளங்கியவரும் 1953-இல் காலமானவருமாகிய நவாலியூர் சோமசுந்தரப் புலவர் ஒரு பெருங் கவிஞராவர். அவருடைய புகழ் ஈழத்துக்கு வெளியே பரவாமல் இருப்பது வருந்தத்தக்கது. அவர் 15,000-க்கு மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். "**ஆடிப் பிறப்பும் கத்தரித் தோட்ட வெருளியும்**" என்ற பாடல் மிகச் சிறப்பானது. **இலங்கைவளமும் தாலவிலாசமும், சிறுவர் செந்தமிழ்** என்பன அவருடைய சிறப்பான நூல்கள்.

நாமக்கல் இராமலிங்கனாரின் 'ஆடுராட்டே' 'கத்தியின்றி ரத்தமின்றி' முதலிய பாட்டுக்கள் மக்கள் உள்ளங்களை ஈர்த்தன.

புதுவைச் சிவப்பிரகாசம் மறுமலர்ச்சிப் பாடல்களையும், சங்கநூற் பாடற் செய்திகளைக் குறித்துக் கதைப் பாடல்களையும் எளிமையும் உணர்ச்சியும் ததும்பப் பாடியுள்ளார். பாரதிதாசனுடைய மாணவரல்லாத பலரும் அவரைப் பின்பற்றி, சிறந்த முறையில் கவிதைகள் இயற்றிவருகின்றனர். அவர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவர் முடியரசன். இவருடைய கவிதைகள் பல தொகுதிகளாக வெளிவந்து, பாராட்டுப் பெற்றிருக்கின்றன.

தமிழச்சி, கொடி முல்லை, தொடுவானம், எழிலோவியம் என்ற நூல்களை வாணிதாசன் ஆக்கியுள்ளார். இவரது சிறந்த கவிதைகள் 'வாணிதாசன் கவிதைகள்' என்ற தலைப்பில் தொகுக்கப்பெற்றுள்ளன.

கவிஞர் கண்ணதாசன் பாடல்களில் நல்ல உவமைகளும் சொல்லாட்சியும் கற்பனைத் திறனும் உள்ளன.

இவருடைய அரசியல்கோமாளித்தனம், கவிஞர் என்ற நிலையில் இவருடைய தகுதியை எடைபோடத் தடைக் கல்லாக இருக்கிறது.

இசைப்பாடல்கள் பலவற்றை இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் யாத்துள்ளார். திரைப்படங்கள் அரசியல் இயக்கங்கள் வாயிலாக, பைந்தமிழ்ப் பாடல் களைப் பரப்பியவர்களுள் இளம் வயதில் காலஞ்சென்ற பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் தமிழ் நெஞ்சங் களில் நிலைத்து வாழ்கிறார்.

சுத்தானந்த பாரதியார் ஆவேசப் பாடல்களை இயற்றியுள்ளார்; ச. து. சு. யோகி இயற்கைக் காட்சி களை இனிமையாகப் பாடியுள்ளார்: உடுமலை நாராயண கவி உள்ளத்தைக் கவரும் திரைப்படப் பாடல்களைப் பாடியுள்ளார். அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் பல துறைகளைப் பற்றி இனிய பாடல்களை இலக்கியச் சிறப்புடன் பாடியுள்ளார். இவர் சிறந்த விமர்சகராக வும் விளங்கி வருகிறார்.

சாலை இளந்திரையன் கவிதைகள் படித்தின்புறத் தக்கன. அன்னை நீ ஆடவேண்டும், இளந்திரையன் கவிதைகள் என்பன இவருடைய அருமையான படைப் புக்கள். புரட்சிக் கவிஞர் கவிதை வளம், புதிய தமிழ்க் கவிதை என்பன இவருடைய திறனாய்வு நூல்கள்.

கவிஞர் சுரதா கவிதைத்துறை பற்றி ஒரு இதழை வெளியிட்டு வருகிறார். திரைப்படப் பாடலாசிரிய ராயும் காவியம் இலக்கியம் என்னும் கவிதை ஏடுகளின் ஆசிரியராயும் இவர் புகழ் பெற்றிருக்கிறார்.

இதே நூற்றாண்டில் மற்றொருபால் பெரும் புலவர்கள் இலக்கண இலக்கிய அமைதி பொருந்தச்

செந்தமிழ் நடையில் அரிய செய்யுள் நூல்களைச் செய்துள்ளனர். பாரி வள்ளலின் கதையை விளக்கி ஏறத்தாழ 700 வெண்பாக்களையுடைய "பாரிகாதை" என்னும் நூலை மகா வித்துவான் ரா. இராகவ ஐயங்கார் செய்துள்ளார். பரிதிமாற் கலைஞரின் தனிப் பாசுரத் தொகையும் மொழிபெயர்ப்பேயாம். விபுலானந்த அடிகளும் சிறந்த ஆங்கிலப் பாடல்கள் சிலவற்றைத் தமிழாக்கியுள்ளார். வெள்ளகால் ப. சுப்பிரமணிய முதலியார் இனிய எளிய நடையில் வெண்பாக்கள் இயற்றியிருக்கிறார். அகலிகை வெண்பா, கோம்பி விருத்தம் என்னும் இவரது நூல்கள் தமிழ்ச் சுவையும் கவிச் சுவையும் நிறைந்தன. மில்டன் எழுதிய 'பாரடைஸ் லாஸ்ட்' என்னும் ஆங்கிலப் பாடல்களை சுவர்க்க நீக்கம் என்னும் பெயரில் இவர் தமிழாக்கியுள்ளார்.

எச். டி. கிருஷ்ணப்பிள்ளை "இரட்சண்ய யாத்திரிகம்" என்னும் நூலையும், உமருப்புலவர் "சீறாப் புராணம்" என்னும் நூலையும், திருவனந்தபுரம் சுந்தரம் பிள்ளை மனோன்மணியம் என்னும் அகவற்பாக்களையும், சோமசுந்தர பாரதியார் 'மாரிவாயில்' என்னும் சிறந்த சிறு காவியத்தையும் யாத்துள்ளனர். ஆங்கிலத்தில் வெளிவருமாப்போல LYRICS என்னும் வகையில் கவிஞர் 'சோமு' இளவேனில் என்னும் தொகுப்பில், பல சிறந்த பாடல்களை இயற்றியுள்ளார். தன் அனுபவத்தை நேருக்கு நேராகத் தெரிவிக்கும் முறையை இவர் கையாண்டிருக்கிறார்.

பெரியசாமித் தூரன் "இளந்தமிழா" என்ற தொகுப்பில் பல பாடல்களை இயற்றியுள்ளார். அவரது கீர்த்தனங்கள் இசை அரங்குகளைச் சிறப்பிக்கின்றன.

குழந்தைகளுக்கான பாடல்கள் இப்பொழுது தமிழில் மிகுதியாக வெளிவருகின்றன. இவற்றை

எழுதுவோருள் தலைசிறந்து விளங்குபவர் குழந்தைக் கவிஞர் அழ வள்ளியப்பா. 'மலரும் உள்ளம்' என்னும் இவருடைய நூல் எளிய நடையில் இனிய சொற்களில் உயர்ந்த கருத்துக்களைத் தரும் அழகிய தமிழ்க் கவிதைகள், கதைப் பாடல்கள், வேடிக்கைப் பாடல்கள், நீதிக் கதைகள் முதலியவற்றின் தொகுப்பு.

கி. வா. ஜகந்நாதன், மேகமண்டலம் என்ற தலைப்பில் தமது பாடல்களை வெளியிட்டுள்ளார். 'கவிபாடலாம்' என்ற இவருடைய நூல், கவிதை எழுத விழைவார்க்குப் பயன்படும். சுரபி, கொத்தமங்கலம் சுப்பு, திருலோக சீத்தாராம் ஆகியோரும் தமிழ்க் கவிதை வளர்ச்சிக்கும் நாட்டுப் பாடல்கள் பரவவும் உதவி வருகின்றனர். சிறந்த தாலாட்டுப் பாடல்களைத் தமிழண்ணல் இராம. பெரிய கருப்பன் தொகுத்து நூலாக வெளியிட்டுள்ளார்.

ஆறு. அழகப்பன் தமிழ் நாட்டில் வழங்கும் நாட்டுப் பாடல்களையும் தாலாட்டுப் பாடல்களையும் தேடித் தொகுத்து நூலாகப் பதிப்பித்துள்ளார்.

சிறந்த கவிஞராகப் புகழ் பெற்றுள்ள முடியரசன் இயற்றியுள்ள பாடல்கள் முடியரசன் கவிதைகள் என்ற பெயரில் வெளிவந்திருக்கின்றன. காப்பியங்களைப் படைத்தும் இவர் தமிழ் இலக்கியத்திற்கு ஏற்றம் தந்திருக்கிறார். பூங்கொடி, வீரகாவியம் என்பவை இவர் இயற்றிய காவியங்கள். காவியப் பாவை என்ற பெயரில் இசைப் பாடல்களையும் இவர் புனைந்துள்ளார்.

வளர்ந்து வரும் மற்றொரு கவிஞர் பல்லடம் மாணிக்கம். ஆயிரம்பூ என்ற பெயரில் இவருடைய கவிதைகள் வெளிவந்துள்ளன.

சிற்பி (பாலசுப்பிரமணியம்) எழுதிய நிலவுப்பூ சொல்லோட்டமும் நிரம்பிய உணர்ச்சியும் யாப்பு வகையில் புதிய வடிவங்களும் உடைய கவிதைத் தொகுதி. சிரித்த முத்துக்கள் இவருடைய சிந்தனை ஆற்றலுக்குச் சான்றுபகரும் கவிதைகளின் தொகுப்பு.

இந்த நூற்றாண்டில் உரைநடை இலக்கியம் வளர்ந்திருப்பது போலச் செய்யுள் நடை இலக்கியம் வளம் பெற்று வளரவில்லை என்ற கருத்தை யாரும் மறுத்தற் கில்லை. யாப்பிலக்கணத்தில் சிறந்த பயிற்சியுடையவ ராலேயே செம்மையான செய்யுள் நடை எழுத இய லும். இந்நாளில் அச்சிடப்படும் கவிதைகளில் பெரும் பான்மையான கவிதைகளில் எதுகை, மோனை சரியாக அமைவது அருமை; அப்பாடல்கள் யாப்பிலக்கணப் படி அமைவதுமில்லை. இவற்றிற்குக் காரணம் யாப் பிலக்கணப்பயிற்சிக் குறைவே. இதைப் போக்க உதவும் வகையில், கவிதை புனைய முயல்வோர்க்குத் துணையாக 'யாப்பதிகாரம்' என்ற நூலைப் புலவர் குழந்தை சிறப்பாக ஆக்கியுள்ளார்.

தமிழின் ஓசை நயத்தையும் இலக்கண மரபுகளை யும் பேச்சில் விட எழுத்தில் நன்கு கடைப்பிடித்தல் வேண்டும். அவ்வாறே, உரை நடையைக் காட்டிலும் செய்யுள் நடையில் இவற்றைப் பேண வேண்டியது இன்றியமையாததாகும்.

# 22. வெளிநாடுகளில் தமிழ்

'தேமதுரத் தமிழோசை' உலகெலாம் பரவ வேண்டுமென்று கவியரசர் சுப்பிரமணிய பாரதியார் கனவு கண்டார். அந்தக் கனவு அடுத்த தலைமுறைக்குள் நனவாகிவிடும் என்பதற்கான அறிகுறிகள் ஏற்பட்டுள்ளன.

**பிரிட்டன்** :—பாரதியார் பாடலிலுள்ள 'தமிழோசை' என்ற இனிய சொற்றொடரைத் தமிழ் நிகழ்ச்சிகளுக்குத் தலைப்பாக வைத்து ஒலிபரப்பிவரும் பிரிட்டனை முதலில் எடுத்துக்கொள்வோம். இந்த நாட்டின் ஆட்சிக்குள் இந்தியாவும் தமிழகமும் இருந்தமையால் பிரிட்டிஷார் பலர் தமிழ் நாட்டுக்கு வந்து தமிழ் மொழியைக் கற்றுப் பல்வேறு துறைகளில் மிகச் சீரிய பணியை ஆற்றி நமது இலக்கிய வரலாற்றில் நிலைத்த புகழை நிலைநாட்டிக் கொண்டிருக்கின்றனர். ஒரு சிறு கட்டுரையில் அவர்தம் தொண்டினைத் தொகுப்பது இயலாதது.

ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் 1884-இல் தமிழறிஞர் ஜி. யு. போப் தமிழாசிரியராக நியமிக்கப் பட்டு இறுதிநாள் வரை அங்குப் பணியாற்றினர். அவருக்குப் பிறகு ஆச்ஸ்போர்டுக்குத் தமிழ்த் தொடர்பு அறுந்துவிட்டது.

ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் இப்போது வட மொழிப் பேராசிரியராக உள்ள அறிஞர் பர்ரோ (Prof. Burrow, Boden Professor of Sanskrit, Oxford) திராவிடமொழிகளின் அகராதி ஒன்றைத் தொகுக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளார்.

பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்களில் தமிழுக்குச் சிறப் பிடம் தந்து வருவது லண்டன் பல்கலைக் கழகமே. இப் பல்கலைக் கழகத்துக் கீழை நாட்டு மொழிகள்—ஆப்பி ரிக்க மொழிகள் ஆகியவற்றுக்கான கல்லூரியில் (School of Oriental and African Studies, University of London) இண்டர் மிடியட் பி.ஏ., பி.ஏ., ஆனர்சுப் படிப்பு களுக்குத் தமிழையும் ஒரு பாடமாக எடுத்துப் பயில வசதி இருந்து வருகிறது. சில மாணவர் இங்கே தமிழ் மொழியைக் கற்று வருகின்றனர்.

சிவஞான போதத்தை மொழிபெயர்த்த ரெவ ரண்டு கார்டன் மத்தியூசு, டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரின் மாணவரும் ஆராய்ச்சியாளருமான M. S. H. தாம்சன், நெடுங்காலம் இங்கிலாந்தில் வாழ்ந்த சி. எஸ். கே. பதி, மொழி நூல் அறிஞரான டாக்டர் ஆஷர் ஆகியோர் இங்கே தமிழ்த் துறையில் பணி யாற்றிப் புகழ் பெற்றுள்ளனர். இப்போது தமிழ் விரிவுரையாளராக இருக்கும் ஜான் மார் என்ற இளைஞர் தமிழ்மொழிப் புலமையோடு தமிழ் இசை யறிவும் நிறைந்தவர்: 1954-55-ல் தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகங்களில் வந்து பயின்றவர்; தமிழ்ப்பற்று மிக்கவர், ரகுவீரா என்ற இந்திமொழி அறிஞர்—மொழி வெறியர்—தமிழின் ஆற்றலைக் குறைப்படுத்திக் கூறியபோது அவருக்குச் சவால் விடுத்தவர் இவரே தமிழ் வினைச் சொல்லில் தன்வினை பிறவினை என்னும் இரு கூறுகளும் இருப்பதால் புதிய சொல்லாச்சத்துக்கு

ஏற்ற மொழியாகத் தமிழ் இருக்கிறது என்பதையும் உறுதியாகக் கூறியவர் இந்த ஜான்மார்தான்.

பிரிட்டிஷ் மியூசியம், இந்தியா ஆபீஸ், ராயல் ஏஷியாட்டிக் சொஸைட்டி ஆகியவற்றின் நூலகங்களில் அரிய தமிழ் நூல்கள் உள்ளன. பிரிட்டிஷ் மியூசியத்திலுள்ள தமிழ் நூல்களின் பட்டியலை டாக்டர் பார்னட் வெளியிட்டுள்ளார்.

**அமெரிக்கா:**—கலிபோர்னியாப் பல்கலைக் கழகத்து மொழி நூற் பேராசிரியர் எமன்ே, ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்து அறிஞர் பரோவுடன் சேர்ந்து, திராவிட மொழிகளின் சொற்பிறப்பு (Etymological) அகராதியை உருவாக்கி யிருக்கிறார்.

வெளிநாடுகளில் வேலை பார்க்கும் அலுவலர்களுக்குப் பிற மொழிகளில் பயிற்சி தரும் திட்டம் ஒன்றுக்கு அமெரிக்க வெளிவிவகார இலாகா ஊக்கமளித்து வருகிறது. வாஷிங்டன் கரத்திலுள்ள வெளிநாட்டுப் பல்கலைக் கழகத்திலும் சென்னையிலுள்ள அமெரிக்க அலுவலகத்திலும் தமிழ்ப் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

மொழி இயல், ஒலிமுறை, சொற்பிறப்பு பற்றிய வரலாறு ஆகிய ஆராய்ச்சிகள் முறைப்படி தமிழ் மொழியில் தொடங்கியுள்ளன. இதற்குக் காரணமாக உள்ளவர்கள் அமெரிக்க நாட்டு ராக்பெல்லர் அறநிலையக் குழுவின் முயற்சியால் இந்தியாவுக்கு வந்துள்ள அறிஞர்களும் அக்குழுவின் உதவியால் அமெரிக்கா சென்று பயிற்சி பெற்றுள்ள தமிழ்ப் பேராசிரியர்களும் ஆவர்.

ஃபோர்டு அறநிலையக் குழுவினர் உதவியால் திராவிட மொழிகளில் நூல் வெளியிடும் ஒரு நிறுவனம்

அமைந்திருக்கிறது. இதன் விளைவாகத் தமிழிலிருந்து மலையாளம் தெலுங்கு கன்னட மொழிகளுக்கு நேரே பல நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன. இதற்கு முன்னர் ஆங்கில மொழியின் வாயிலாகவே மொழிபெயர்ப்பு வேலைகள் நடந்து வந்தன.

இந்தியானு, சிகாகோ, பென்சில்வேனியா பல்கலைக் கழகங்களில் தமிழ்த்துறை தொடங்கப் பெற்றிருக்கிறது. உலகத் தமிழ் மாநாட்டின் பின், இம் முயற்சிகள் பல பல்கலைக் கழகங்களில் பரவி வருகின்றன.

**மேற்கு ஜெர்மனி:**—தொல்காப்பியத்திலுள்ள சொல்லாக்க முறை, எழுத்தொலி ஆகியன பற்றி இருபது ஆண்டுகளாக ஆராய்ந்துள்ள டாக்டர் சி.ஆர். சங்கரன் என்னும் பேரறிஞர் 1959 முதல் பான் பல்கலைக் கழகத்தில் (Institute of Phonetics and Communications Research என்னும் பகுதியில் Richard Merton Visiting Professor) பணிபுரிந்து வருகிறார். தொல்காப்பியத்திலுள்ள ஆய்த ஒலி வடிவத்திலிருந்து வளர்ச்சியடைந்த முறைதான் இப்போது கணிதப் பேரறிஞர்கள் கூறும் Alpha Phnoid Theory of Mathematics என்பதை அவர் நிலைநாட்டியுள்ளார். இது ஒரு பெரிய புதையல் என ஜெர்மானியர் வியக்கின்றனர். சங்கரனைப் போற்றுகின்றனர்; தொல்காப்பியத்தைப் பேணுகின்றனர்.

Hermann Beythen என்ற ஜெர்மன் பாதிரியார் தமிழில் இலக்கணம் ஒன்றை எழுதியுள்ளார். அவர் தயாரித்த தமிழ் நூல்கள் யாவும் பெர்லினிலுள்ள பல்கலைக் கழகத்து செமினயில் வைக்கப்பட்டுள்ளன, மார்பர்க் பல்கலைக் கழகத்து வடமொழிப் பேராசிரியர் நோபெல் என்பவரிடம் பயிலும் மாணவர் சிலர் அவரிடமே தமிழ் மொழியையும் கற்று வருகின்றனர். பட்டினத்துப் பிள்ளையார் பாடல்களைப் பற்றி

H. Nau ஒரு நூல் எழுதியுள்ளார். (Prolegomena Zu Pattanathu Pillaiyar's Padal). W. Graefe *1942*-இல் நன்னூலை ஜெர்மன் மொழியில் ஆக்கியுள்ளார். ஆனால் இது இன்னும் அச்சிடப்பெறவில்லை.

**ஹாலந்து:**—லெய்டன் பல்கலைக் கழகத்து வட மொழிப் பேராசிரியராகிய F. B. J. Kuiper தமிழ் மொழியிலும் ஈடுபாடுடையவராயிருக்கிறார். தமிழ் ஒலி முறையைப்பற்றி அவர் ஆராய்ந்துவருகிறார்.

**செக்கோசுலவகியா :** — டாக்டர் கமீல் சுவலபில் (பி. *1925*) என்ற தமிழறிஞர் பிராஹா நகரிலுள்ள ஓரியண்டல் இன்ஸ்டிட்டியூட் என்னும் கீழைநாட்டு மொழித்துறை நிலையத்தில் திராவிட மொழிப்பிரிவின் தலைவராகப் பணியாற்றி வருகிறார். தமிழ் ஒலியே வழங்காத ஒரு நாட்டில் இருந்தவாறே தமிழ் மொழியைக் கற்று அதன் நுட்பங்களை உணர்ந்துள்ளார். தொல்காப்பியம் போன்ற நூல்களைப் பயின்றும், சிலப்பதிகாரம் போன்ற தமிழ் நூல்களை செக் மொழியில் பெயர்த்தும் இவர் புகழ் பெற்றவர். *1958*-இல் தமிழ் நாட்டுக்கு வந்திருந்து தமிழில் முழங்கினார். தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்று பல மேடைகளில் பாடினார். இவர் நற்றிணைச் சொற்றொடர் அமைப்பு ஆராய்ச்சியிலும் கம்பராமாயணச் செய்யுட்களைச் செக்மொழியில் தருவதிலும் முனைந்துள்ளார். அகநானூறு, நற்றிணை, குறுந்தொகைப் பாடல்களைத் தொகுத்து மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார்.

பிராஹாப் பல்கலைக் கழகத்தில் *1959* முதல் தமிழ்த் துறை ஏற்பட்டிருக்கிறது. *1965* முதல் கமில்சுவலபில் பேராசியராக இருந்து வருகிறார். யாரோஸ்லாவ்

வாசெக், தமிழிலுள்ள நாட்டுப் பாடல்களை ஆராய்ந்துள்ளார். ஜான்பிலிப்ஸ்கி கட்டப்பொம்மனது போராட்டத்தைப் பற்றியும் ஈழநாட்டுத் தமிழகத்தைப் பற்றியும் ஆராய்ச்சி நடத்தியுள்ளார்.

சுவலபிலின் மாணவர்கள் தமிழைப் பேசவும் எழுதவும் கற்கிருர்கள். தமிழ் இலக்கணம் பயில்கிருர்கள்; இலக்கண வரலாறு படிக்கிருர்கள்; தமிழ் இலக்கியம் கற்கிருர்கள். மேலும், மலையாளம் போன்ற பிற திராவிட மொழிகளையும் பயிலுகிருர்கள். ஒப்பு ஆராய்ச்சி நடத்துகிருர்கள். தென்னுட்டு வரலாறும் அறிகிருர்கள்.

இவர்கள் வெளியீடுகளில் சிறப்பானவை இரண்டு. க்வேட்டி யாஸ்மினு (முல்லை மலர்கள்) என்பது சங்கப் பாடல்களின் மொழிபெயர்ப்பு. 1957-இல் வெளியாயிற்று. பிஸ்ன் ஒக்னெனேட்டு (சிலம்புப் பாடல்) சிலப்பதிகாரத்தின் முழு மொழிபெயர்ப்பு.

சுப்பிரமணியபாரதி, பாரதிதாசன், கம்பன், அருணகிரி முதலிய தமிழ்க் கவிஞர்களது கவிதைகளும் செக் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. சுவலபில், சுவையான நாட்டுப் பாடல்களைச் சேகரித்து வைத்துள்ளார்.

**ரஷ்யா:**—ரஷ்யாவில் திராவிட மொழி ஆராய்ச்சியின் தந்தை ஏ. மெர்வார்த்தே (இ 1954) என்பவர். இவர் பெஸ்கியின் பரமார்த்த குரு கதைகளை ரஷ்ய மொழியில் மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கிருர். 'பேச்சுத் தமிழிலக்கணம்' என்ற நூலையும் 'தமிழ் மொழியில் உயிர்மெய் எழுத்துக்கள்' என்ற கட்டுரையையும் ரஷ்ய மொழியில் எழுதியுள்ளார். திருக்குறளின் சில பகுதிகளை மொழி பெயர்த்துள்ளார்.

இவரும், எஸ். ருதீன், எ. பியதி கோர்ஸ்கி ஆகியோரும் சேர்ந்து தமிழ்-ரஷ்ய மொழி அகராதியை உருவாக்கியுள்ளனர். மைக்கேல் ஆந்திரனோவ் என்பவர் ரஷ்ய-தமிழ் அகராதியை வெளியிட்டுள்ளார். 'தமிழ் மொழியில் வினைச்சொற்களின் வடிவ அமைப்பு' என்னும் ஆய்வுரையை இவர் வெளியிட்டுள்ளார்.

தமிழ் எழுத்தாளரும் ரஷ்யாவில் பணி புரிபவருமான பூர்ணம் சோமசுந்தரமும் ஒய். கிராஜோவ் என்ற ரஷ்யரும் தமிழ் இலக்கண நூல் ஒன்றை உருவாக்க முயன்று வருகின்றனர். நாலடியாரை எ. பியதி கோர்ஸ்கிம், சுப்பிரமணிய பாரதியார் நூல்களை ஐ. ஸ்மிர்னோவா என்ற பெண்மணியும் மொழிபெயர்த்துள்ளனர். ரஷ்யாவில் இலக்கிய வட்டாரங்களில் தமிழ் மணங் கமழத் தொடங்கியிருக்கிறது. லெனின்கிராடு பல்கலைக் கழகத்தில் தமிழுக்கு ஒரு துறை இருக்கிறது.

ரூடின் தன்னுடைய பெயரை 'செம்பியன்' என்று தமிழில் எழுதிவருகிறார். தமிழுணர்ச்சி மிக்க இவரைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் பாராட்டியுள்ளது. தமிழ்ப் பேச்சு வழக்குகளை ரஷ்யர் பலர் துருவிக் கொண்டிருக்கிறார்கள்.

உயர்தனிச் செம்மொழியாகிய தமிழுக்கு வரலாற்று அடிப்படையில் இலக்கண ஆராய்ச்சியை, மாஸ்கோவில் திராவிட மொழிக் குழுவினர் மேற்கொண்டுள்ளனர். உலகிலேயே முதன் முதலாக உருவாகும் இவ்வாராய்ச்சி தொன்றுதொட்டு வழங்கி வரும் தமிழ் மொழியின் வாழ்வு, வளர்ச்சி, மாற்றங்களை விவரிக்கும். காலந்தோறும் தமிழில் தோன்றியுள்ள இலக்கியம் இலக்கணம் கல்வெட்டு தொல்பொருள் குறிப்

புக்கள் பேச்சு மொழி ஆகியவற்றை அவ்வத்துறை வல்லார் வகுத்துள்ளனர்.

வரலாற்று முறைத் தமிழ் இலக்கணம், ஒலியியல் ஒலித்திரிபியல் சொல் வடிவியல் சொற்றொடரியல் என்பவை முப்பெரும் பகுதிகளில் இடம் பெறும்.

தமிழர் நாகரிக வளர்ச்சி, சமுதாய அமைப்பு, பண்பாடு, மொழிக்கொள்கை, தமிழின் எதிர்காலம் ஆகியவையும் சொற்களின் பகுதியுறுப்பு அட்டவணையும் திராவிட மொழிகளின் ஓரசை வேர்ச்சொல் ஒப்புமை அகராதியும் முன்னுரையில் இடம் பெறும்.

திராவிட மொழிகளை நன்கு அறியவும், உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் தம் மொழியைப் போற்றவும், பல வேறு நாடுகளுடன் தமிழர் உறவாடவும் இச்சீரிய பெரிய நூல் ஈடும் இணையுமில்லாத அளவில் வழிகோலும்; தமிழினத்திற்கும் அவர்தம் மொழிக்கும் ஏற்றம் தரும்.

**பிரான்ஸ்:**—ஐரோப்பிய நாடுகளில் வடமொழிக்கு ஒரு பேராசிரியக் கட்டில் ஏற்படுத்திய முதல்நாடு பிரான்ஸ். 1814-இல் பாரிசிலுள்ள College De Francais என்ற கல்லூரியில் வடமொழி ஆராய்ச்சி நடைபெற்றது. அதற்குப் பிறகு அங்குப் பேராசிரியராக வந்த புருனே என்ற அறிஞரும், அவருடைய மாணவர் அரிலும் தமிழ் மொழியைப்பற்றியும் சிந்திக்கத் தொடங்கினர். அதன் விளைவாகக் கீழை நாட்டு மொழிகளுக்கான தேசியக் கல்லூரியில் தமிழுக்கு ஒரு துறை ஏற்பட்டது. இங்கு ஜூலியன் வின்சீன் சிறந்த தமிழறிஞராக விளங்கினர். இந்திய மொழிகளின் தலைவர் பேராசிரியர் மெய்லூ 'தமிழிலக்கியத்தில் யவனம்' என்பதுபற்றி ஆராய்ந்துள்ளார்.

இக்கல்லூரியில் பல்லாண்டுகள் தொடர்பு கொண் டிருந்தவரும் புதுச்சேரியில் பணியாற்றி வருபவரு மான டாக்டர் பிலியோசா திருக்குறளையும் திருவாய் மொழியையும் பிரெஞ்சு மொழியில் தந்துள்ளார். தமிழ் இலக்கியம் பற்றிப் பலநூறு ஆராய்ச்சிக் கட்டுரைகள் வரைந்துள்ளார். Bibliotheque Nationale என்பது பாரிசிலுள்ள மிகப் பெரிய நூலகம். அங்கே காணப்படும் இந்தியச் சுவடிகளின் பட்டியல் ஒன்றைப் பிலியோசா வெளியிட்டுள்ளார்.

காரைக்காலில் பணியாற்றிய Lean SaintJean காரைக்கால் அம்மையார் பாடல்களையும், வேறு சில தமிழ் இலக்கியங்களையும் பிரெஞ்சு மொழியில் ஆக்கி யுள்ளார்.

பிரெஞ்சுக்காரரும் ஆப்பிரிக்க நாட்டில் அமைதி யாக அரும்பணி புரிந்து வந்தவருமாகிய டாக்டர் ஸ்குவைசர் என்னும் உலகப் பேரறிஞர் திருக்குறள் கீதையிலும் சிறந்தது என்ற கருத்தைத் தெரிவித்துள் ளார். ஆழ ஆய்ந்தும் நுணுகி உணர்ந்தும் கருத்துக் கூறிய இப்பெரியார் இதன்மூலம் தமிழுக்குப் பெருமை யைத் தேடித் தந்துள்ளார்.

**மலேசியா** :—கோலாலம்பூரிலுள்ள மலேயாப் பல் கலைக் கழகத்தில் தமிழுக்கு ஒரு பேராசிரியக் கட்டில் ஏற்படுத்தப்பட்டு, தமிழ்ப் பேராசிரியரே பல்கலைக் கழகத்து இந்தியக் கல்வித்துறையின் தலைவராக இருந்து வருகிறார். தமிழ் நூல்கள் அனைத்துமே இங்கு வாங்கி வைக்கப்பெற்றிருக்கின்றன. தமிழ், மலாய் இரு மொழிகளுக்கும் பொதுவாக உள்ள சொற்களைத் தொகுத்தல், தமிழ்-மலாய் அகராதி

உருவாக்குதல், மலாய் மொழியில் திருக்குறளை மொழிபெயர்த்தல் ஆகிய வேலைகளை இப்பகுதி செய்யத் தொடங்கியுள்ளது. தமிழ்த் துறை அமைய சிங்கப்பூர் தமிழர் பிரதிநிதித்துவ சபையும் அதன் தலைவர் கோ. சாரங்கபாணி (தமிழ் முரசு ஆசிரியர்) யும் காரணமாவர்.

இப்பல்கலைக்கழகத்துத் தமிழ்ப் பேராசிரியர் தவத்திரு தனிநாயக அடிகளார் உலகநாடுகளில் தமிழ்க் கல்வி ஆராய்ச்சி நிலைகள்பற்றி ஆங்கிலத்தில் அரியநூலை வெளியிட்டுள்ளார். முதலாவது உலகத் தமிழ் மாநாட்டைக் கூட்டியவரும் இவரேயாவர்.

**சிங்கப்பூர் :**—சிங்கப்பூரிலுள்ள நாங்யாங் என்ற சீனப் பல்கலைக் கழகத்திலும் தமிழ்த்துறை அமைக்க முயற்சி நடைபெற்று வருகிறது.

**முடிவுரை**

"பல நாடுகளில் நடைபெற்று வருகின்ற தமிழ்க் கல்வி தமிழாராய்ச்சி வேலைகளைப்பற்றி நமக்குத் தெரிவிக்கவும், அவர்களுக்குத் துணையாக இந்தியாவிலிருந்து தமிழ்ப் புலமையுடைய இளைஞர்களை அனுப்பி வைக்கவும் ஒரு நிறுவனம் அரசாங்க ஆதரவில் உடனடியாக ஏற்பட வேண்டும். இந்த முயற்சியை நம் மாநில அரசியலார் செய்ய வேண்டும்.

நம்எண்ணம் நிறைவேறி விட்டது. தமிழகஅரசும் இந்திய அரசும் வேண்டியதற்கிணங்க, ஐக்கிய நாடுகள் அவையின் கல்வி, கலை, அறிவியற் கழகம், உலகத்தமிழ் ஆராய்ச்சிமன்றத்தைச் சென்னையில் நிறுவுவதற்கு முன்வந்திருக்கிறது.

## 23. பல்கலைக் கழகங்கள்

இக்கட்டுரையில் பல பல்கலைக் கழகங்களில் தமிழ்க் கல்வி, தமிழ் ஆராய்ச்சி முதலியன எவ்வாறு நடைபெற்று வருகின்றன என்பதைக் குறிப்பிடுவோம். மொழி வளர்ச்சிக்காகப் பல்கலைக் கழகங்கள் செய்யத்தக்க பணியையும் கூறுவோம்.

**சென்னை**

இங்கு தமிழ் வித்துவான் தேர்வு பல ஆண்டுகளாக நடந்து வருகிறது. இத் தேர்வில் வடமொழியும் ஒரு பாடமாக இருந்தது; கா. நமச்சிவாய முதலியார் பாடத்திட்டக் குழுவின் தலைவராக இருந்தபோது, வடமொழிப் பயிற்சி வேண்டுவதில்லை என்ற முடிவு செய்யப்பெற்றது; இதன் விளைவாக, தனித் தமிழ்ப் புலவர்கள் தமிழகமெங்கும் பல்கிப் பெருகியுள்ளனர்.

சென்னை நகரில் நக்கீரர் கழகம் முதலியன மாலை நேரக் கல்லூரிகளில் தமிழ்ச் சிறப்பு வகுப்புக்கள் நடத்தி வருகின்றன. இத்தகைய வகுப்புக்கள் நடைபெறுவதற்கு மதுரைப் பல்கலைக் கழகத்தார் வாய்ப்பு நல்க வேண்டும்.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு ஆகிய மொழிகளுக்குப் பொதுவான சொற்களைத் தொகுத்து ஒரு அகராதியை வெளியிடும் வேலையைச்

சென்னைப் பல்கலைக் கழகத்தார் இனிது முடித்திருக்கின்றனர். பேராசிரியர் சேதுப் பிள்ளை அவர்களின் சீரிய தலைமையில் இதுபோன்ற ஆராய்ச்சி நூல்கள் வெளிவந்தன.

திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி ஏற்பட்டு 1969 முதல் செயல்பட இருக்கிறது.

சென்னைப் பல்கலைக் கழகத்தினரின் தமிழ்ப் பணியில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது தமிழ்ப் பேரகராதி (Lexicon) வெளியீடாகும். இது ரெவரண்டு ஜே. எஸ். சாண்டிலர், ரெவரண்டு ஏ. கி. கிளேடன் முயற்சியாலும் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் பேருழைப்பாலும் வெளிவந்தது. குறைபாடு இருப்பினும் இது, ஆராய்ச்சியாளர்க்கும் புலவர்க்கும் பெரிதும் பயன்படுகிறது. இந்நூலின் சில பகுதிகளின் படிகள் கிடைக்கவில்லை. திருந்திய முறையில், புதிய பதிப்பு வெளியிடப் பெறவேண்டும். புதிய சொற்களின் பட்டியலும் வெளிவரவேண்டும். பல்கலைக் கழக ஆதரவில் வேறுபல நூல்களும் வெளிவந்துள. இவற்றுள் நாலாயிரப் பிரபந்தத்தின் தமிழாக்கம் சிறப்பானது. ஆராய்ச்சித் துறையினர் எழுதி முடித்த பல நூல்கள் அச்சேறுமலே உள. அவற்றை விரைந்து அச்சிடுதல் இன்றியமையாதது.

சில குறிப்பிட்ட பொருள்களைப்பற்றி, தமிழ் உரை நடையில் நூல்கள் எழுதுபவர்களுக்கு இப்பல்கலைக் கழகத்தார் ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கி வருகின்றனர். சென்னைப் பல்கலைக் கழகத்திலுள்ள கல்லூரிகளில் பச்சையப்பன் கல்லூரியும், கோவை பி. எஸ். ஜி. கல்லூரியும், சிறப்பாகத் தமிழ்ப்பணியாற்றி வருகின்றன. இவ்வாறே ஈழநாட்டிலுள்ள கல்லூரிகளில் வட்டுக்

கோட்டையிலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரியின் பணி பொன்னெழுத்துக்களில் பொறிக்கத்தக்கதாகும்.

சைவநாயன்மாரைப்பற்றி டாக்டர் மொ. அ. துரைஅரங்கனாரின் ஆராய்ச்சி நூலும் இப் பல்கலைக் கழக வெளியீடுகளில் குறிப்பிடத்தக்கது. அவ்வப் போது, சிறந்த ஆராய்ச்சிச் சொற்பொழிவுகளையும் பல்கலைக் கழகத்தார் ஏற்பாடு செய்கின்றனர்.

கம்பராமாயணத்திலிருந்து பல கருத்துக்களைத் துளசிதாஸ் பெற்றிருப்பதை, சென்னைப் பல்கலைக் கழகத்து ஹிந்தி பேராசிரியர் டாக்டர் சங்கர ராஜ் நாயுடு 'கம்பரும் துளசியும்' என்ற நூலில் கூறி யுள்ளார். இந்நூல் உத்தரப் பிரதேச அரசாங்கத் தாரால் பாராட்டப்பெற்றது. பரிசும் வழங்கப் பெற்றது. வள்ளுவரும் கபீர்தாசரும், வள்ளு வரும் பிஹாரிலாலும் என்பவற்றை ஹிந்தியில் எழுதித் தமிழ்மொழியின் சிறப்புக்களை இவர் பிற மொழியாளர்க்குத் தெரிவித்துள்ளார். திருக்குறளை யும் இவர் ஹிந்தியில் மொழி பெயர்த்துள்ளார்.

## அண்ணாமலை

தமிழ்ப் பல்கலைக் கழகம் என்ற சிறப்பு அண்ணா மலைப் பல்கலைக் கழகத்திற்கே உரியது. இப் பல்கலைக் கழகத்தைத் தோற்றுவித்த டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார், தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் உலகறியச் செய்வதே இப் பல்கலைக் கழகத்தின் சிறந்த குறிக்கோளாக இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார். தமிழுக்கென்று ஒரு பேரா சிரியக் கட்டில் ஏற்பட்டது இப் பல்கலைக் கழகத்தி லேயே யாகும். அதன் பின்னரே தமிழ்ப் பகுதிக்குப் பிற பல்கலைக் கழகங்கள் பேராசிரியர்களை நியமித்தன.

இலக்கிய நூல்களைப் பார்ப்போம். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து வெளியீடுகளுள் 'சைவ இலக்கிய வரலாறு' மிக முக்கியமானது. இதை எழுதியவர் ஔவை துரைசாமிப் பிள்ளை. கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டு முடிய அமைந்த காவியப் பகுதியில் தோன்றிய சிறந்த சைவ இலக்கியங்களைப் பற்றிய செய்திகள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், பிறநாட்டார் யாத்திரைக் குறிப்புக்கள், ஆகியவை வரலாற்றுச் சான்றுகளோடு விளக்கப்பட்டிருக்கின்றன.

இப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பகுதியில் விபுலானந்த அடிகள், டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர், நாவலர் சோமசுந்தர பாரதியார், கா. சுப்பிரமணியபிள்ளை, மகாமகோபாத்தியாய பண்டிதமணி கதிரேசச் செட்டியார், தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், ரா. பி. சேதுப்பிள்ளை, மகாவித்துவான் ரா. இராகவய்யங்கார், சித்தாந்த காலநிதி ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, டி. வி. சதாசிவப் பண்டாரத்தார், டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் போன்ற பெரும் புலவர்கள் பணியாற்றியிருக்கின்றனர்.

தமிழ்ச் சிறப்பு வகுப்பு (Tamil Honours) ஏற்படுத்திய பெருமையும் இப் பல்கலைக் கழகத்திற்கே உண்டு; இவ்வாறே எம். ஓ. எல். கல்வியும் சிறப்பாகப் பயிற்றுவிக்கப்படுகிறது. புலவர் பயிற்சி பெறும் மாணவர்க்குச் சம்பளம் கிடையாது என்ற ஏற்பாடும் இங்கு உண்டு; மேலும், அவர்களுடைய உணவுமுதலிய செலவுகளுக்காக மாதம் ரூ. 25 வரை வழங்கித் தமிழ்க் கல்வியைப் பல்கலைக்கழகத்தார் ஊக்கி வருகிறார்கள். தமிழ்ப் பண்டிதர்களுக்கென ஆசிரியப் பயிற்சி வகுப்பும் இப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்று வருகிறது.

அகஸ்டின் மரியதாஸ்பிள்ளை என்னும் தமிழ் அறிஞரும் மொழிநூல் ஆராய்ச்சியாளருமாகிய பெரியாரின் நினைவாக, ஹிந்தி தவிர ஏனைய வட இந்திய மொழி பயிலுபவர்க்கு உதவிச் சம்பளம் வழங்கப் படுகிறது.

தமிழ்ச் சிறப்புப் பட்டம் பெற்றவர்கள் ஏதாவது ஒரு துறையில் இலக்கிய ஆராய்ச்சி செய்து எம். லிட், பிஎச். டி. போன்ற பட்டங்கள் பெறுவதற்கான வாய்ப்புக்களும் உண்டு.

1957-இல் தொடங்கப்பட்டிருக்கும் மொழியியல் துறை, ஒலி இயல் முதலியன பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டது. இந்திய அரசியலார் வழங்கியுள்ள மூன்று லட்சம் ரூபாயை மூலதனமாகக் கொண்டு, இந்தப் பகுதி தொடங்கப்பெற்றுப் பல்கலைக்கழக மானியக்குழுவின் பேருதவியால் வளர்ந்து வருகிறது. அறிவியல் முறைப்படி திராவிட மொழிகளையெல்லாம் ஆய்ந்து, திராவிடமொழி நூலை உருவாக்குவதும் அதே சமயத்தில் ஒரு முழு நிறைவான செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகராதி தொகுப்பதும் இத்துறையின் நோக்கமாகும். இப்பணிக்கு உரிய கருவி நூலாக, செந்தமிழ்ச் சொல்லியல் நெறிமுறைகள், தொகுக்கப் பெற்றுள.

பல இந்திய மொழிகளுக்கு அகராதிகள் உருவாகி வருகின்றன. பேச்சு மொழி பற்றிய பற்பல ஆராய்ச்சி நூல்கள் வெளி வந்துள்ளன.

இன்றளவும், சிறந்த புலவர்கள் பலர் இப் பல்கலைக் கழகத்துத் தமிழ் ஆராய்ச்சிப் பகுதியில் பணியாற்றி வருகின்றனர். இவர்கள் அர்த்த சாத்திரம் போன்ற நூல்களைத் தமிழாக்கியுள்ளனர்; தமிழ் வரலாறு, சோழர் வரலாறு முதலிய நூல்களை வெளியிட்டுளர். திருமுறைப் பதிப்பு, நூற்றாண்டு வாரியாக

இலக்கிய வரலாறு ஆகியவையும் வெளியிடப் பெற்றுள்ளன.

கம்பராமாயணத்தைச் செம்மையான முறையில் பதிப்பிக்கும் பெரும்பணியை இப்பல்கலைக் கழகத்து ஆராய்ச்சிப் பகுதியினர் இனிதே முடித்துள்ளனர். பாடபேதங்கள் அடங்கிய தொகுதிகள் பல வெளியாகியுள்ளன. தமிழ் நாட்டுப் பேரறிஞர் பலர் இப்பணியை மேற்பார்த்து ஊக்கி யிருக்கின்றனர்

வரலாறு, பொருளாதாரம், தத்துவ சாத்திரம், சைவசித்தாந்தம், கணிதம், பௌதிகம், தாவர நூல் ஆகியவற்றிலுள்ள அறிவுச் செல்வங்களைத் தக்க புலவர்கள் தமிழில் எழுதச்செய்து நூல்களாக இப் பல்கலைக் கழகத்தார் வெளியிட் டிருக்கின்றனர்.

தமிழ் இசை இயக்கத்துக்கு இப் பல்கலைக்கழகமே ஆணிவேர் என்பதைத் தமிழ்நாடு நன்கறியும். தமிழ் இசைப் பாடல்கள், பல தொகுதிகளாகவும் இசையறிவுடையோர் யாவரும் எளிதிற்பயின்று கொள்ளத்தக்க முறையிலும் விளக்கமான சுரதாளக் குறிப்புக்களுடன் வெளியிடப்பட்டுள. இன்றும் தக்க அறிஞர்களைக் கொண்டு தமிழ்ச் சிறப்புச் சொற்பொழிவுகள் அமைத்து, பல்கலைக் கழகத்தார் அச் சொற்பொழிவுகளை நூலாக வெளியிட்டுவருகின்றனர்.

ஆங்கில மொழியில் தமிழ் இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் இப்பல்கலைக் கழக இதழில் (Journal) வெளிவந்துள்ளன. இவற்றிலும் இராசா சர். அண்ணாமலை செட்டியார் அறுபதாம் ஆண்டு நினைவு மலரில் வெளியான தமிழ்த் தொடர்புடைய ஆங்கிலக் கட்டுரைகளையும் தொகுத்து, நூலாக வெளியிட்டால், தமிழின் மாண்பை அயலாருக்கு அறிவுறுத்த அது பயன்படும்.

திருக்குறள்—திருமந்திரம் ஆகிய நூல்களைப்பற்றிய ஆராய்ச்சி தொடங்கியிருக்கிறது. வள்ளலார் நூல்களைப் பதிப்பிக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. தமிழில் வெளியாகியுள்ள எல்லா நூல்களைப் பற்றிய அட்டவணையைத் தொகுக்கும் வேலையும் நடைபெற்றது.

**வேங்கடேசுவரா**

இங்கு தமிழ்த் துறைக்கு ஒரு பேராசிரியர் நியமிக்கப்பெற்றிருக்கிறார். இப்பதவியை ந. சுப்பு ரெட்டியார் வகித்து வருகிறார்.

**கேரளம்**

வள்ளல் டாக்டர் அழகப்பச் செட்டியார் அவர்களின் கொடையால் ஆராய்ச்சித்துறை ஒன்று இங்கு 1945 முதல் அமைந்துள்ளது. முதல் ஏழு ஆண்டுகள் இத் துறையின் தலைவராகப் பேராசிரியர் மு. இராகவ ஐயங்கார் இருந்தார்; சேரர் வரலாறுபற்றியும், தமிழ்—மலையாளத் தொடர்புபற்றியும், அடிப்படைச் செய்திகளைத் தொகுத்து அவர் இரு தொகுதிகள் வெளியிட்டார். ஹரிச் சந்திர வெண்பாவையும் பதிப்பித்தார். அவர்க்குப் பின், பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை மூன்றாண்டுகள் இத்துறையின் தலைவராக இருந்தார். சங்க இலக்கியங்களுக்கு அட்டவணை தொகுக்கும் மிகப் பெரியதொரு முயற்சியை அவர் தொடங்கினார்.

வையாபுரிப் பிள்ளையின் மாணவரும் அமெரிக்காவுக்குச் சென்று மொழிநூற் கல்விகற்று, ஜார்ஜ் டவுன், மிச்சிகன் பல்கலைக் கழகங்களில் நாஞ்சில் நாட்டு வடசேரி பேச்சு மொழிபற்றிய ஆராய்ச்சிக்காக

இந்தியாரு பல்கலைக் கழகத்தின் டாக்டர் பட்டமும் பெற்ற வி. ஐ. சுப்பிரமணியம், வையாபுரிப்பிள்ளையை அடுத்து இத்துறையின் தலைவரானார். இவர் காலத்தில் சங்க இலக்கியத்தில் ஆளப்பெற்றுள்ள 2,70,000 சொற்களின் தொகுப்பு (சொல்லடைவு) வேலையில் அவற்றை ஆங்கில எழுத்தில் எழுதும் வேலையும் முடிவடைந்திருக்கிறது. தமிழ்மொழி வரலாற்றை நன்கு உணர இந்தத் தொகுப்புப் பெரிதும் பயன்படும்.

திருவனந்தபுரம் தமிழர் பேசும் மலையாள மொழியை 5000 சொற்களை அங்கு பேசுவது போல ஒலிப்பதிவு செய்தும் பல ஆராய்ச்சிகளைத் தமிழ்த் துறை டாக்டர் சுப்பிரமணியம் தலைமையில் செய்திருக்கிறது.

**டில்லி**

இங்கு பேராசிரியர் ஒருவரும் பல விரிவுரையாளரும் நியமிக்கப்பெற்றிருக்கின்றனர். நம் மாநில அரசியலார் பொருளுதவி வருகின்றனர். சிறந்த தமிழ் நூல்கள் உள்ளன.

**காசி**

இப்பல்கலைக் கழகத்தில் திருப்பனந்தாள் ஆதீனத்தாரின் பொருளுதவியால், தமிழ்க்கல்வி புகட்டப்பட்டு வருகிறது. தமிழக அரசு வழங்கிய நிதியை மூலதனமாகக் கொண்டு இங்கு ஒரு தமிழாசிரியர் நியமிக்கப்பெற்றிருக்கிறார்.

**கல்கத்தா**

இப்பல்கலைக் கழகத்து மொழிநூற் பேராசிரியரான டாக்டர் சுநீதி குமார் சாட்டர்ஜீ, (பி, 1890) என்பார் பன்மொழிப் புலவர்; கல்கத்தாவில் 1900-

ஆம் ஆண்டில் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சுப்பிரமணிய சுவாமியை வீதிவழியே உலாவரச்செய்த போது 'திருப்பெரும் துறை உறை சிவபெருமானே' என்றுபாட, இவர்க்கு அதைக்கேட்டுத் தமிழ்மொழியில் ஆர்வம் எழுந்தது. இன்று சிறந்த தமிழறிஞராக இருக்கிறார்; நன்னெறி முருகன் என்று தன் பெயரைத் தமிழில் எழுதுகிறார். 'பாரத மொழிகளின் இலக்கிய வரலாறு' என்ற பெருநூலைப் பல மொழிகளில் எழுதியுள்ளார். அவற்றில் உலக மக்களுக்குத் தமிழ் மொழியை அறிமுகப்படுத்தியிருக்கிறார்.

இப்பல்கலைக் கழகச் கல்லூரிகளில் சில நூறு தமிழ் மாணவர் தமிழ்ப் பாடம் எடுத்துப் பயிலுகின்றனர்.

**விசுவபாரதி**

இங்கு சிறந்த தமிழ் நூல் நிலையம் இருக்கிறது.

**இலங்கை**

இங்கு ஒரு தமிழ்த்துறை இருந்துவருகிறது. பல்கலைக் கழகத் தமிழ் வெளியீடு ஒன்றும் வெளிவரவில்லை; சிறந்த தமிழ்ப் புலவர்கள் பலர் இப் பல்கலைக் கழகத்தின் ஏனைய துறைகளிலும் உள்ளனர். திருக்கோணமலையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைந்து வருகிறது.

**முடிவுரை**

ஐரோப்பியப் பல்கலைக் கழகங்களில் அரிய தமிழ் ஓலைச்சுவடிகள் இருக்கின்றன. நமது பல்கலைக் கழகங்கள் ஐரோப்பாவுக்குத் தமிழ்ப் பேராசிரியர்களை அனுப்பிச் சிறந்த நூல்களை ஆராய்ந்து அட்டவணை தொகுக்க வேண்டும்.

திராவிட மொழிகளைப்பற்றிய மொழி நூல்கள் வெளியிடுதல், டாக்டர் சாமுவேல் பூஷ்கிரீன் இயற்றிய மருத்துவ நூல்களின் புதிய பதிப்பைக் கொணர்தல் போன்ற அலுவல்களிலும் பல்கலைக் கழகங்கள் ஈடுபடலாம்.

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழருடைய மொழி, பழக்கவழக்கங்கள், சமுதாயக் கொள்கைகள், வாழ்க்கை முறை, கட்டிடக்கலை, இன்னபிற பரவியிருப்பதைப்பற்றி ஆதாரமான நூல்கள் வெளிவர வேண்டும்.

## மொழிநூற் கல்வி

மொழி நூலாராய்ச்சியில் அமெரிக்கப் பல்கலைக் கழகங்கள் உலகுக்கே எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. அமெரிக்கர்கள் அவர்களுடைய மொழிநூல் முறையைப் பரப்புவதற்காகவும், பிறநாடுகளுடன் நல்லுறவு கொள்ளுவதற்காகவும் சில குறிப்பிட்ட பல்கலைக்கழகங்களில் சில மொழிகளைக் கற்பித்து வருகின்றனர். இதன் பயனாக இன்னும் சில ஆண்டுகளுக்குள் உலகிலுள்ள எந்த மொழியையும் கற்றுக்கொடுக்கக்கூடிய ஒரு பல்கலைக்கழகமேனும் அமெரிக்காவில் இருக்கும்.

அமெரிக்கருடைய மொழிநூல் முறையைப் பரப்பும் முயற்சியை ராக்பெல்லர் அறநிலையத்தார் இந்தியாவில் பெரும் பொருட்செலவில் செய்துவருகின்றனர். இதற்கென ஒரு மொழிநூற் கல்லூரியை பூனாவில் டெக்கான் கல்லூரியில் நிறுவியுள்ளனர்: அமெரிக்க மொழிநூல் அறிஞர்களும், இந்திய மொழிகள் பலவற்றின் அறிஞர்களும் இங்கே வந்து சில குறிப்பிட்ட காலங்களில் கல்வி பயின்று பெரும்பயன் அடைந்து

வருகின்றனர். இவ்வாய்ப்புகளைத் தமிழர்கள் பயன் படுத்திக் கொள்வார்களாக.

1953-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பூனு பல்கலைக் கழகத்தார் இந்திய மொழிகளின் வளர்ச்சி வகைகளை அறிவதற்கான மாநாடு ஒன்றைக் கூட்டினர். அம்மா நாட்டைப்பற்றித் தெரிவித்து நான் வேண்டிக்கேட்டுக் கொண்டுங்கூட, தமிழ்ப் பேராசிரியர்கள் கலந்து கொள்ளாதது வருந்தத்தக்கது. அந்த மாநாட்டின் பயனாக டெக்கான் கல்லூரித் தலைவர் டாக்டர் கத்ரே இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் சென்று அங்குள்ள பல நிலையங்களுடன் தொடர்பு கொண்டு அக் கல்லூரியைப் பெரியதொரு ஆராய்ச்சி நிலையமாக ஆக்கியுள்ளார். பூனுபல்கலைக் கழகத்தில் மொழிநூல் கல்விக்கென எம் ஏ. படிப்பும் தொடங்கப் பெற்றிருக் கிறது. மொழிநூல் பற்றிய ஒரு இடைக்காலப் படிப்பை ராக்பெல்லர் அறநிலையத்தாருடைய உதவி கொண்டு அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் தொடங்க வேண்டு மென்று ஒரு அறிக்கையை யான் பூனுவுக்குச் சென்றும் ராக்பெல்லர் நிறுவனத்து டைரக்டர் கில்பார்ட்ரிக்கைச் சந்தித்தும் 1956 இறுதியில் வெளியிட்டுள்ளேன்.

இதன் பயனாக மொழிநூல் துறையில் எம்.ஏ. படிப்பு 1960 முதல் அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தில் தொடங் கப் பெற்றிருக்கிறது மொழிநூல் ஆராய்ச்சிக்கு ஒரு தனிப்பகுதி தொடங்கப்பட்டு, ஏனைய திராவிடமொழி களிலும் ஆசிரியர்கள் நியமிக்கப் பெற்றுள்ளனர். வங்கமொழிக்கு ஒரு பேராசிரியக் கட்டிலை அங்கு வங்க அரசாங்கம் நிறுவியிருக்கிறது.

வரலாற்று அடிப்படை தமிழ் அகராதி தயாரிக்கும் பெரியதொரு பணியையும் இத்துறையினர் மேற் கொண்டிருக்கின்றனர்.

## 24. அரசினரும் தமிழும்

"பாலைவனம் சோலைவன மாக வேண்டும்;
பசுங்கிளிகள் அங்கிருந்து பாட வேண்டும்;
சாலைகளிற் பலதொழிலும் பெருக வேண்டும்;
சபைகளிலே தமிழெழுந்து முழங்கவேண்டும்"

—கவிமணி.

மொழி தன்னுடைய இயல்பால், அதைப் பேசும் மக்களுடைய முயற்சியால் சிறப்படையும்; வளரும்: உயர்நிலை எய்தும். அரசினரின் ஆணைகளால் மட்டும் ஒரு மொழி வளர்ச்சியடைந்துவிட இயலாது. ஆனால், அரசினரின் செயல்கள் எந்த மொழியின் வளர்ச்சியையும் ஓரளவு தடைப்படுத்தும்; அதைப் போன்றே அரசினரின் ஆதரவு இருப்பின், ஒரு மொழியின் வளர்ச்சி வேகம் மிகுதியாகும். தமிழ்மொழி சிறந்த நிலையடைய அரசினர் செய்ய வேண்டுவன பற்றியும் இக்கட்டுரையில் கூறுவோம்.

மொழி வழியாக நாடு அமைந்து விட்டதால் தமிழ் ஆட்சிமொழியாக ஏற்பட்டிருக்கிறது. அரசினருக்குக் கிடைக்கும் தமிழ்க் கடிதங்களுக்குத் தமிழிலேயே மறுமொழி அனுப்புவது என்ற ஏற்பாடு ஓரளவு சிறு அலுவலகங்களில் படிப்படியாக அமுலுக்கு கொண்டு வரப்படுகிறது.

சட்டமன்ற நடைமுறை பற்றிய நூல்கள் தமிழில் வெளிவர வேண்டும். இத்துறையில் தமிழில் பல குறிப்புக்களைச் சில ஆண்டுகளுக்குமுன் ஜே. சிவசண்முகம் பிள்ளை சேகரித்துள்ளார்; இதைத் தொகுத்து நூலாக்குவது நலமாக இருக்கும்.

திருச்சி மாவட்டத்தில் பல ஆண்டுகளாகத் தமிழ் ஆட்சிமொழியாக இருந்து வருகிறது. ஆனால், இத் திட்டம் வெற்றியாக நடைபெற்றதாகத் தெரியவில்லை. இதற்குக் காரணம் அரசியல் அலுவலர்களுக்குப் போதிய தமிழ்ப் பயிற்சி இல்லாமையே ஆகும். தமிழ் எழுத்துக்களில் ஆங்கிலச் சொற்களை அப்படியே எழுதி விடுவது அவர்களுடைய வழக்கமாக உள்ளது.

பல ஆண்டுகளுக்கு முன்னர், இங்கிலாந்திலும் இவ்வாறுதான் அரசியல் அறிக்கைகள் சுற்றிவளைத்து எழுதப் பெற்றன. பின்னர், சுருக்கமாகவும் தெளிவாகவும் இலக்கணப் பிழையின்றியும் அரசியல் அலுவலர்கள் எழுத வேண்டும் என்பதற்காக. அந்த நாட்டு அரசினர் பல ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். அவர்களுக்காக Department of Training and Education என்ற ஓர் அரசுத் துறையும் அமைக்கப் பெற்றிருக்கிறது.

அரசினரின் கடிதங்கள், ஆணைகள், அறிக்கைகள் இவற்றைச் சான்று காட்டி இரு சொற்களுக்கிடையே உள்ள நுட்பமான பொருள் வேறுபாடு என்ன? என்று இத்துறையினர் அரசின் அலுவலர்க்குக் கற்றுக்கொடுக்கின்றனர். இதன் விவரங்கள் (Plain words A. B. C. of Plain Words) என்னும் நூல்களில் சர் எர்னஸ்ட் கௌவர்ஸ் என்பவரால் விளக்கிக் கூறப்பெற்றுள. இவரைப் போன்ற மொழி நூலறிஞர் சிலர் அரசினர்

பயன்படுத்த வேண்டிய நடையைப்பற்றி இத்தகைய நூல்களைப் பிரிட்டிஷ் அமைச்சரவையின் வேண்டுகோளுக்கிணங்கியே எழுதியுள்ளனர்.

நகராண்மைக் கழகங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் அலுவல்கள் யாவும் தமிழிலேயே நடைபெற வேண்டுமென்று உடனடியாக ஆணையிட வேண்டும். ஆட்சிமொழிக்காவலர் இராமலிங்கம் தொண்டாற்றிய நகராண்மைக் கழகங்களில் தமிழ் உணர்ச்சியைப் பரப்பியும், சிறந்த தமிழ்நடையைக் கையாண்டும், சீர்த்திருத்தங்கள் பலவற்றை நிறைவேற்றியுள்ளார். சென்னை நகரில் ஆணையாளராக இருந்தபோது திரு. பாலசுந்தரமும் இது போன்ற முயற்சியை தொடங்கியுள்ளார்.

குறுநில மன்னர்களுடைய ஆட்சியில் நிலக்கணக்குகள் தமிழிலேயே இருந்தன. அவர்களுடைய நிலங்களை மாநில அரசினர் ஒப்புக் கொண்டனர்; அதன் விளைவாக, அந்தக் கணக்குகள் ஆங்கிலத்தில் எழுதப் பெற்று வருகின்றன. இத்தகைய நிகழ்ச்சிகளுக்கு இடம் கொடுக்கலாகாது.

சென்னை அமைச்சர்களில் தமிழ்ப்பெற்று மிக்கவராக விளங்கிய தி. சு. அவிநாசிலிங்கம் அவர்களைப் பற்றியும் இங்குக் குறிப்பிடவேண்டும். உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ் முதல் மொழி என்றும், குறள் கட்டாய பாடம் என்றும் ஆணையிட்ட பெருமை அவருக்கு உரியது. தமிழாசிரியர்களுடைய ஊதியங்களை மிகுதியாக்கவும் அவர் முயன்றார். திருச்சி மாவட்டத்தில் தமிழ் ஆட்சி மொழியாக இருந்து வரும் என்ற ஏற்பாடும் அவர் பதவியில் இருந்தபோது அமலுக்கு வந்ததே.

ஆட்சியினருக்குப் பயன்படும் மாவட்ட அலுவலக நடைமுறை (District Office Manual) 1956 இல் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. பல துறை அறிஞரும் உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியும் தமிழன்பருமாகிய எம். அநந்தநாராயணன், ஐ.சி.எஸ். இதை தமிழாக்கியுள்ளனர். அலுவலக 'பைல்'களில் 'நோட்' எழுதுவது, அலுவலகக்கடிதங்கள் எழுதும் முறை ஆகியவைபற்றிய குறிப்புக்கள் இதில் அடங்கியுள.

தமிழக அரசின் கீழ்த்திசை மொழிகளின் கையெழுத்துப் பிரதிகள் நூல்நிலையம் ஒன்று சென்னையில் இருந்து வருகிறது. இங்கு ஏராளமான சுவடிகள் உள்ளன. இந்த நிலையத்தில், தமிழுக்குச் சிறப்பான இடம் கொடுக்கப்படவில்லை. தமிழ்ப் புலவர் ஒருவருடைய தலைமையில் தமிழுக்கெென ஒரு புதிய நிலயம் அமைப்பதும் அரசினர் கடமையாகும். இந்த நிலையத்தின் கிளையாக தஞ்சை சரசுவதி மகாலின் ஆட்சிப் பொறுப்பு இருந்து வரவேண்டும்.

இந்த நிலையத்தின் வாயிலாக, ஏடுகள் பலவற்றைச் சேகரிக்க ஏற்பாடு நடைபெற வேண்டும். இப்போதுள்ள நடைமுறையில் பல குறைபாடுகள் உள்ளன. ஏனைய நிலையங்களிலுள்ள ஏடுகளைப் படியெடுக்கவும் படம் பிடிக்கவும் ஏற்பாடு தொடங்கப்பட வேண்டும்.

பழைய ஏடுகளைப் போதிய குறிப்புக்களுடன் பதிப்பித்து நூலாக்கவும் அரசினர் பேராதரவு காட்ட வேண்டும். பிரிட்டிஷ் அரசினர் வெளியிட்ட மாவட்டக் குறிப்புக்களைத் தமிழில் வெளியிடுவதும் நலம் பயக்கும். பம்பாய் அரசினர், துகாரம் பாடல்களை 1500 பக்கம் கொண்ட இரண்டு தொகுதிகளாக ரூ2-50 விலைக்கு வெளியிட்டுள்ளனர்; நமது நாட்டுப் பாடல்

கள் முதலியவற்றை இவவாறு மலிவான விலைக்கு வெளியிடுவது சிறந்த பணியாகும்.

அரசினர் செய்துவரும் தமிழ்ப் பணிகளையும் செய்ய வேண்டியவற்றையும் இனி விவரமாகக் கூறுவோம்.

மாநில அரசாங்கம் 1955-க்குப் பின் பல செயல்களைச் செய்து வந்திருக்கிறது. இவை செம்மையாகவும் தொடர்ந்தும் நடைபெறுவதைக் கண்காணிப்பதே இனி தமிழ் மக்களின் கடமையாக இருக்கவேண்டும்.

இந்திய அரசினர் பல்கலைக் கழக மானியக் குழுவின் வாயிலாகப் பல்கலைக் கழகங்களின் தமிழ் மொழி ஆராய்ச்சி, மொழி நூல் பகுதி அமைத்தல், அகராதி வெளியிடுதல், கம்ப ராமாயணப் பதிப்பு முதலியவற்றுக்குப் பொருளுதவி வருகின்றனர். அந்த அரசாங்கத்தின் பலஅமைச்சரவைகளும் இந்திய மொழிகளுக்கு முன்னைவிட முக்கியத்துவம் தருகின்றன. இவைபற்றி இனி விரிவாகக் கூறுவோம்.

**தமிழக அரசு**

தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி மொழி பெயர்ப்பு துறை பெரிய அளவில் தக்கவர் தலைமையில் நடைபெற்று வருகிறது. அவர்களுடைய வெளியீடுகள், அறிக்கைகள், செய்தித் தாள்கள் யாவற்றிலும் நல்ல தமிழ் இடம் பெற்றிருக்கிறது. சான்று வேண்டுவோர் வரவு செலவுத் திட்ட அறிக்கையில் பார்க்கலாம். காவல் நிலையம், காவலர் இல்லம், நெடுஞ்சாலை, பொது பணித்துறை என்பன பல்லுப்போன அலுவலர்க்கும் பழகிப் போன சொற்களாக வழக்குக்கு வந்துவிட்டன. நாடெங்கும் நூல் நிலையங்கள் அமைத்து, தமிழ் நூல்

வெளியீட்டுத் துறைக்குத் தமிழக அரசு செய்திருக்கும் உதவியும் பெரிது. கல்லூரிப் பாட நூல்களை வெளியிட்டும் கலைச் சொற்கள் ஆக்கியும் தமிழ் ஆராய்ச்சிக் குழுசெய்திருக்கும் பணிகள் மிகவும் போற்றுதற் குரியன.

பல்கலைக் கழகங்களில் திருக்குறள் கட்டில்கள் ஏற் படவும் தமிழக அரசு முதற் பொருள் வழங்கி வருகிறது.

சென்னை மாநிலத் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சிக் கழகம் ஒன்றைத் தமிழக அரசு நிறுவியுள்ளது. எல்லாத் துறைகளிலும், தமிழ் மொழியை வளம்பெறச் செய்வதற்காக இக்கழகம் தனி நிலையமாக இயங்கி வரும். தமிழ் மொழி வளர்ச்சிக்காக எடுத்துக் கொள்ளப்படும் ஏனைய நடவடிக்கைகளுடன் ஆட்சி மொழிச் சட்ட நிறைவேற்றக் குழு எடுத்துக்கொள் ளும் நடவடிக்கைகளுடன் இணைப்பை ஏற்படுத்தவும் அது வகை செய்யும்.

குழுவின் அலுவல்கள் வருமாறு:

(1) ஆட்சி மொழிச் சட்டத்தைச் செயற்படுத்தும் குழுவினால் செய்யப்படும் வேலைகளின் வளர்ச்சிபற்றி ஆராய்வது.

(2) மாநிலத்திலுள்ள பல்வேறு ஆலயங்களில் உள்ள எல்லாக் கல்வெட்டு (சாசனம்) களிலும் பொறிக் கப்பட்டுள்ள எழுத்துக்களை எழுதி ஒழுங்குபடுத்துவது: அவற்றைத் திட்டமிட்ட குறிப்பிட்ட காலத்திற்குள் வெளியிடுவது; இதனை இந்திய அரசின் கல்வெட்டு வேலைகளோடு ஒன்றுபடுத்துவது.

(3) தமிழக வரலாற்றுக்கு முந்திய காலம் வரலாற்றுக் காலம் இவற்றின் தொன்மையை முறை

யாகப் பயில்வதும், இதனை இந்திய அரசின் தொல் பொருள் துறை வேலைகளுடன் இணைப்பதும்.

(4) வெளியிடப்படாத நூல்கள் உள்ள கல்வி நிலையங்கள், நூலகங்களின் வேலைகளை வளர்ச்சியடையச் செய்வதும் இதைப் பதிப்பு வெளியீட்டுத் துறை வேலையுடன் இணைப்பதும்.

(5) மக்களிடையே நூல்கள் கற்கும் பழக்கத்தை வளர்க்கும் வகையில் சிறந்த நூல்களை வெளியிடும் எழுதும் எல்லா நிலையங்களின் செயல் முறைகளையும் வளர்ச்சியடையச் செய்வது; இதைக் குறிப்பாகச் சிற்றூர்களில் பொது நூலக வளர்ச்சித் துறையில் சேர்ப்பது.

(5) தமிழில் குழந்தை நூல்கள் பல எழுதவும் அவற்றை வழங்கவும் ஏற்பாடு செய்வது: கிராமங்களில் நூலக வளர்ச்சித் திட்டத்தோடு இவ்வேலையையும் சேர்ப்பது.

(7) நாடோடிக் கதைகள் ஆராய்வதை வளர்ச்சியடையச் செய்வது.

(8) மாநிலத்திலுள்ள எல்லாக் கல்வி நிலையங்களிலுமுள்ள கையால் எழுதப்பட்ட நூல்களின் பட்டியல் ஒன்றைத் தயார் செய்வது. மேற்கோள் நூல்கள், அகராதிகள், கலைக் களஞ்சியங்கள், அடிப்படைச் சொற்றொகை முதலியவற்றை வெளியிட ஏற்பாடு செய்வது. மற்றும் தொன்மைச் சிறப்பு மிக்க கையெழுத்துப் பிரதிகளை ஆராய்வது, முறையாகக் கற்பது பற்றி இன்றியமையாது செய்யவேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வது.

(9) தமிழ் மொழியை எல்லா வகையிலும் வளம் பெறச் செய்யவும் கல்வி மற்றும் பிற துறைகளில்

எல்லாவற்றிற்கும் தமிழைப் பயன்படுத்தவும் தேவையானவற்றைச் செய்வது.

### இந்திய அரசாங்கம்

அஞ்சல் துறையில் அரசியலார் தமிழுக்குச் சிறப்பான இடம் கொடுக்கவில்லை. அஞ்சல் நிலையங்களின் தேதி முத்திரைகள் தமிழில் இல்லை. சிற்றூர்களின் முத்திரைகளிலுங்கூட இந்தி மொழி இடம் பெற்றுள்ளது. அஞ்சல் தலைகளில் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப் படவில்லை. பணம் அனுப்புவதற்குரிய தாள்கள் அச்சிட்டிருப்பதும் பிற மொழிகளிலேயே தமிழ் நாட்டில் பல இடங்களில் வழங்கி வருவதும் பெருந் தவறாகும். அஞ்சல் நிலையத்தார் திருவள்ளுவர், பாரதியார் படங்களுள்ள முத்திரைகள் வெளியிட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

பொது மக்களுடன் தொடர்பு கொண்டுள்ள மற்றொரு துறை இரயில்வேத்துறையாகும். தென்னிந்திய ரயில்வே (South Indian Railway) என்பது Southern Railway என்று பெயர் மாற்றப்பட்டபோது, தக்ஷிண ரயில்வே என்று அதைத் தமிழாக்கியதிலிருந்து இத் துறையினருடைய ஆர்வம் புலனாகும்.

இரயில்வேத் தமிழுக்குச் சான்று:

**அகாறணமாய் இழுப்பவர்களுக்கு 250 ரூபாய் அபராதம்**

| | |
|---|---|
| **புருஷர்** | (ஆண்கள் என்பதற்கு) |
| **மணப்பாரை** | (மணப்பாறை என்பதற்கு) |
| **சிய்யாழி** | (சீர்காழி என்பதற்கு) |

இரயில் துறையினர் கடந்த சில ஆண்டுகளில் முன்னைவிட நல்ல தமிழைக் கையாண்டு வருகின்றனர். பலகைளில், தமிழ்நாட்டில், தமிழுக்கு முதல் இடம் தந்துள்ளனர்,

திருச்சி தமிழ்ப் புலவர் குழுவின் முயற்சியால் 1960 முதல் தென்னிந்திய ரயில்வேயில்கூட நல்ல தமிழ் புகுந்து வருவது மகிழ்ச்சிக்குரியது.

பொதுமக்களுடன் நெருங்கிய தொடர்புள்ள மற்றொரு பகுதி நீதி மன்றங்கள். இவை யாவும் ஆங்கிலத்திலேயே நடைபெற்று வருகின்றன. பதவி யேற்கும் போதும் சாட்சி சொல்லும் போதும் உறுதி மொழி எடுத்துக்கொள்ள, பகவத்கீதை கொரான் முதலிய நூல்களைப் போலவே திருக்குறளும் உறுதி மொழிக் கட்டளையாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். நீதி மன்றங்களில் பயன்படுத்தப்படும் தாள்களும் எளிய நடையில் செந்தமிழில் அமையவேண்டும்.

பத்திரப் பதிவு அலுவலகங்களில் கையாளப்படும் தமிழ் மிகக் கீழ்த்தரமாக இருந்து வருகிறது. பத்திரங்கள் எழுதுபவர்களுடைய தமிழ் அறிவுத் தகுதி இன்ன அளவில் இருக்கவேண்டுமென்று அரசியலார் வரையறை செய்யவேண்டும். அத்தகுதியுடையவர் களுக்கு மட்டுமே பத்திரங்கள் எழுதிக் கொடுக்கும் உரிமை உண்டு (Licence) என்று சட்டம் இயற்றப்பட வேண்டும். Licenced Document Writers Act என்ற சட்டம் இங்கிலாந்தில் அமலில் இருந்து வருகிறது.

தமிழ்நாடெங்கும் எழுதப்பெற்றுள்ள அறிக்கைப் பலகைகளில் ஏராளமான பிழைகள் உள்ளன, பிழை இல்லாத அறிக்கைப் பலகைகளைக் காணுவதே அருமை யாக இருக்கிறது. ஆகையால், இதுவரை எழுதப் பெற்றுள்ள விளம்பரப் பலகைகள் யாவற்றையும் சரி பார்த்துத் திருத்துவதற்காக அரசினர் ஒரு குழு அமைக்கவேண்டும். அக்குழுவினர் இப்பலகைகளில்

மலிந்துள்ள எழுத்துப் பிழை இலக்கணப் பிழை முதலியவற்றைத் திருத்துவதற்காக நாடெங்கும் உலா வரவேண்டும். புதிய பலகைகள் அவர்களுடைய இசைவைப் பெற்ற பின்னரே வெளிப்படுத்தப்பட வேண்டும்.

இந்திய அரசினர் இந்தியாவிலுள்ள நூல் நிலையங்களுக்கு வெளிநாடுகளில் நூல்கள் வாங்குவதற்காக ஐக்கிய நாடுகள் சபையிலிருந்து Unesco Book Coupons என்னும் சீட்டுக்களைப் பெறுகின்றனர். இவ்வாறே ஏனைய நாடுகள் அனுப்பும் சீட்டுக்களுக்கு இந்திய அரசினர் இந்திய நூல்களை அனுப்பி வருகின்றனர். இவ்வாறு அனுப்பும்போது தமிழ் நூல்களையும் தமிழைப் பற்றிய ஆங்கில நூல்களையும் வெளிநாடுகளுக்கு அனுப்பவேண்டுவது இந்திய அரசினரின் கடமையாகும்.

இந்தியத் தூதுவர்களின் அலுவலகங்களில் தமிழுக்கு நியாயமான இடம் கொடுக்கப்படவில்லை. இலங்கை, பர்மா, மலேயா, வியட்நாம், இந்தோனேசியா, பீஜி போன்ற பல நாடுகளில் பல லட்சம் தமிழர்கள் வாழுகின்றனர். அவ்வாறிருந்தும் அந்த நாடுகளில் அமைந்துள்ள இந்தியத் தூதுவர் அலுவலங்களில் தமிழ் தெரிந்தவர் ஓரிருவர் தான் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இங்குச் செல்லும் தமிழர்கள் அலுவலகப் பணியாளர்களிடம் வியட்நாம் அல்லது மலாய் மொழியில் சொல்லி அவர் தமக்குத் தெரிந்த அரைகுறை ஆங்கிலம் அல்லது இந்தியில் உரிய அலுவலரிடம் கையைக் காலைக் காட்டிக் களிநடனம் புரிவதும் வழக்கமாக இருந்து வருகிறது.

சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் தமிழும் ஆட்சி மொழிகளில் ஒன்றாக இருந்துவருகிறது.

எனினும் அங்குள்ள இந்தியத் தூதுவர்களின் அலுவலக நூல் நிலையங்களில் தமிழ் நூல்களையோ, தமிழ் இதழ் களையோ காண இயலாது. இக்குறையையும் போக்க போக்கவேண்டும்.

கல்கத்தாவிலுள்ள தேசிய நூலகத்தில் தமிழ் நூல்கள் யாவும் உள்ளன. இந்நூல்களையும் திரு வள்ளுவர் பெயரால் நூல் நிலையத்திலுள்ள மண்டபத் தையும் தமிழர் ஒவ்வொருவரும் காணவேண்டும்.

இந்திய அரசின் விளம்பரங்களிலும் நல்ல தமிழ் நடை கையாளப்படுகிறது என்பது சில ஆண்டுகளுக்கு முன் வெளிவந்த விளம்பரங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் தெளிவாகத் தெரியவரும்.

வேளாண்மை, பாதுகாப்பு போன்ற பல அமைச்ச ரவைகள் இப்போது தமிழிலும் செய்தித் தாள்களை வெளியிட்டு வருகின்றன. வெளிநாடுகளுக்கான ஒலி பரப்புக்களில் இடம் பெறும் ஒரு சில இந்திய மொழி களில் தமிழும் ஒன்று, இவ்வாறே, செய்தி திரைப் படங்களை இந்திய அரசு எடுக்கும் ஒரு சில இந்திய மொழிகளில் தமிழும் இடம் பெற்றிருக்கிறது. இந்திய அரசாங்கப் பல்கலைக் கழகங்களில்—டில்லி, காசி—தமி ழுக்குத் தனித் துறைகள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறு வரவேற்கத்தக்க மாறுதல்கள் தமிழ் மக்களின் கிளர்ச் சியால் இந்திய அரசாங்கத் துறைகளில் ஏற்பட்டிருப் பதை நாம் அறிந்துகொள்வதும் இத்துறையில் மேலும் முயலுவதும் நன்று.

இந்தியத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் தமிழிலும் ஓர் இதழை வெளியிட முடிவு செய் துள்ளனர். அரப்பா முதல் ஆதிச்சநல்லூர்வரை

நிகழும் அகழ்வாராய்ச்சி பற்றிய செய்திகள் இதில் அடங்கியிருக்கும்.

இந்திய அரசின் சாகித்திய அகடமி இந்தியமொழி களின் வளர்ச்சிக்காகப் பணியாற்றி வருகிறது. சிறந்த தமிழ் நூல்களுக்கு 5000 ரூபாய் பரிசுவழங்கப் பெற்று வருகிறது. தமிழின் சிறப்பைத் தெரிவிக்கும் ஒரு நூலை ஆங்கிலத்திலும் இந்தியிலும் வெளியிட ஏற்பாடு நடைபெறுகிறது. ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் சில வற்றையும், பிற மொழிகளிலிருந்து ஒரு சில சிறந்த நூல்களையும் தமிழில் வெளியிட்டிருகிறது. இவ்வாறே தமிழ் இலக்கியத்தின் சில சில பகுதிகளை ஏனைய மொழிகளில் மொழி பெயர்த்திருக்கிறது. ராஜாஜி ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ள திருக்குறளை யுனெஸ்கோ வாயிலாக உலகெங்கும் பரப்பும் சாகித்திய அகடமி முயன்று வருகிறது.

1901 முதல் 1953 வரை இந்தியாவில் வெளியான தமிழ் நூல் பட்டியலை சாகித்திய அகடமி உருவாக்கி யிருக்கிறது. இப்பட்டியல் ஆங்கிலத்தில் அச்சிடப் பெற்று உலகிலுள்ள சிறந்த நூல் நிலையங்கள் எல்லா வற்றுக்கும் அனுப்பப்பெறும். இதன் பயனாக உலக நாடுகளில் நமது மொழியில் வெளிவந்திருக்கிற நூல் களைப் பற்றிய விவரங்கள் தெரியும் வாய்ப்பு ஏற்படும். இதைப் பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் தொகுத்திருக்கிறார். தமிழ் இலக்கிய வரலாறு ஒன்றை உருவாக்கும் பொறுப்பையும் அகடா மியார் மேற்கொண்டிருக்கின்றனர்.

பாரதியார் இன்கவித் திரட்டு, கவிதைக் களஞ் சியம், தமிழ்ச் சிறுகதைக் களஞ்சியம் என்னும் தொகுப்பு நூல்களை இந்த அகடமி வெளியிட்டிருக் கிறது. கிரேக்க வரலாறு, ஷேக்ஸ்பியர் நாடகம்,

மோலியர் நாடகம், இப்சன் நாடகம், ஓரிய மொழி நாவல், புத்தரைப்பற்றி மராத்தி நூல் ஆகியவற்றை இந்த அகடமி தமிழில் தந்திருக்கிறது; இந்தியமொழி எழுத்தாளர் ஒருவர்க்கொருவர் தொடர்பு கொள்ள இந்த அகடமி உதவுகிறது.

தமிழைத் தேவநாகரி எழுத்தில் எழுத வேண்டுமென்று ஒரு கருத்து இந்திய அரசின் ஆதரவுடன் அடிக்கடி கூறப்படுகிறது. இதைப்பற்றி டாக்டர் மு. வ. பின்வருமாறு எழுதியுள்ளார்.

எல்லா ஒலிக்கும் தமிழில் சொல் உண்டு. தமிழை தேவநாகரியில் எழுதமுடியாது; எழுதினால் பொருளே மாறிவிடும்.

'ஓ' என்ற ஓசையுடைய எழுத்துத் தேவநாகரியில் கிடையாது. ஒகரம்தான் அங்கு உளது. எனவே, பொலிவு என்ற சொல்லைப் 'போலிவு' என்றுதான் அவ்வெழுத்தில் குறிப்பிட முடியும். 'சொல்' 'சோல்' ஆகும். 'பொருள்' 'போருள்' என்று உருப்பெற்று விடும். தொல்காப்பியம் என்பதைக்கூடத் தோல் காப்பியம் என்றுதான் கூறவேண்டும். தொல்காப் பியச் சூத்திரமான 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்பதை 'எல்லாச் சோல்லும் போருள் குறித்தனவே' என்றுதான் எழுதவேண்டும். இதனால் அச்சூத்திரமே உருமாறிப் பொருள்மாறிப் போய்விடுகிறது. ஆகவே தமிழ்ச்சொற்களைத் தேவநாகரியில் எழுதுவது இடைஞ்சலும் சங்கடமும் தரக் கூடியது மட்டுமன்று: பொருந்தாத முயற்சியுமாகும்.''

## 25. தமிழ் வளர்ச்சிக் கழகம்

அவிநாசிலிங்கம் செட்டியார் கல்வி அமைச்சராக இருந்தபோது அவருடைய முயற்சியால் தமிழ் வளர்ச்சிக்கழகம் 1948-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ஆம் தேதியன்று தொடங்கபெற்றது. தமிழில் பல துறைகளிலும் வெளியாகும் நூல்களில் சிறந்தவற்றிற்குப் பரிசு வழங்குவதும் அதற்கெனத் தமிழ் நாட்டில் முக்கிய இடங்களில் ஒவ்வோராண்டும் தமிழ்த் திருவிழாக் கொண்டாட ஏற்பாடு செய்வதும் அதன் நோக்கங்களில் சிலவாகும்.

கலைக்களஞ்சியத்தை வெளியிடும் பெரும் பணியை முடித்துவிட்டு குழந்தைகளுக்கான கலைக் களஞ்சியத்தை வெளியிட தமிழ் வளர்ச்சிக் கழகம் இப்போது ஈடுபட்டிருக்கிறது. பல துறைகளிலுள்ள அறிவுச் செல்வத்தையெல்லாம் தமிழில் தருவதற்கான மாபெரும் முயற்சியைச் செய்த பெரியசாமித் தூரனை எவ்வளவு பாராட்டினாலும் தகும். பத்துத் தொகுதிகள் வெளிவந்துள்ளன.

பல நூல்களின் பரப்பையும் பல்துறைக் கலைகளின் சிறப்பையும் விளக்கும் அறிவுக் களஞ்சியங்களாக இத் தொகுதிகள் அமைந்துள்ளன. பொது அறிவும் தமிழிலக்கியச் சுவையும் பெறவிரும்புபவர்க்கு இவை ஒரு சிறந்த விருந்தாய், கருவூலமாய், வற்றாதஊற்றாய்

உள்ளன. தமிழ்ப் புலவர் வகுப்பில் பயிலும் மாண வர்கள் இந்தத் தொகுதிகளில் உள்ள கலைகள், தமிழ்ப் புலவர்கள் பற்றிய கட்டுரைகளைப் படித்துப் பயன் பெறலாம். ஆற அமர இருந்து நுணுகிப் படித்தால் கலைக் களஞ்சியத்திலிருந்து அரிய செய்திகளை அறியலாம்.

கீழ்க்கண்ட கட்டுரைகள் தமிழ் மாணவர் கட்டாயம் படிக்கத்தக்கன :

| தலைப்புக்கள் | எழுதியவர் பெயர் |
|---|---|
| தொல்காப்பியம் | சோமசுந்தர பாரதியார் |
| கம்பன், கம்பராமாயணம் | டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை |
| கலிங்கத்துப்பரணி, சாசனங்கள் | சதாசிவப் பண்டாரத்தார் |
| கலை | ஜி. வெங்கடாசலம் |
| கவிதை | மீ. ப. சோமசுந்தரம் |
| காவடிச் சிந்து | கி. வா. ஜகந்நாதன் |
| சீவகசிந்தாமணி | மே. வி. வேணுகோபாலப் பிள்ளை |
| தமிழ்மொழி வரலாறு, 20-ஆம் நூற்றாண்டுத் தமிழிலக்கிய வரலாறு காப்பியம் | தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் |
| தமிழ்-இலக்கிய வரலாறு | டாக்டர் மு. வரதராசன் |
| தமிழ்-செய்யுள் இலக்கிய வரலாறு | டாக்டர் அ. சிதம்பரநாதன் |
| தமிழ்-உரைநடை வரலாறு | வ. சு. செங்கல்வராய பிள்ளை |

இசைத்தமிழ், நாடகத்தமிழ், எழுத்து-தமிழ் எழுத்துக்கள், திராவிட மொழிகள், திராவிட மொழி

களின் ஒப்பிலக்கணம் என்ற கட்டுரைகளும் விரிவாகவும் சிறப்பாகவும் எழுதப்பெற்றுள்ளன. விஞ்ஞான நூல்கள் அனைத்தும் இந்தத் தொகுதிகளில் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு கட்டுரையும் ஒரு தனி நூலுக்குச் சமமானது. இங்கே பயன்படுத்தப்பட்டுள்ள கலைச் சொற்கள் பொருத்தமாக அமைந்துள்ளன. ஒரு சில குறைபாடுகளும் உள்ளன. இவற்றை அடுத்த பதிப்புக்களில் திருத்திக் கொள்வது நன்று. கலைகள், வரலாறு, தமிழ் நாட்டு ஊர்கள் ஆகியவை பற்றி தனித்தனியே கலைக் களஞ்சியங்கள் ஏற்படவேண்டும்.

கலைக் களஞ்சியத்தில் திருத்தங்கள், பிற்சேர்க்கைகள், மறுபதிப்புக்கள் வெளியிட நிலையான ஒரு அமைப்பும் தொடர்ந்து பணிபுரியும் ஆசிரியர்க் குழுவும் வேண்டும்.

லண்டனிலுள்ள பிரிட்டிஷ் மியூசியத்திலும் வெளி நாடுகளிலுள்ள ஏனைய நூல் நிலையங்களிலும் இருந்து வரும் தமிழ் நூல்களின் பட்டியலை வெளியிட வேண்டும். ஆண்டுதோறும் தமிழ் இலக்கியம் எத்தகைய வளர்ச்சி அடைந்திருக்கிறது என்பது பற்றிய அறிக்கை வெளியிடுவதும் நன்று.

தமிழ் இலக்கியத் தொடர்புடைய கட்டுரைகள் இந்தியப் பல்கலைக் கழகங்கள் பலவற்றின் இதழ்களிலும் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. இவற்றைத் தொகுத்து ஆங்கில நூலாக வெளியிட வேண்டும்.

தமிழ் மொழியைப்பற்றி ஆங்கிலத்தில் அறிஞர் பலர் எழுதிவரும் கட்டுரைகளை அயல் மொழியார் படிப்பதற்கு உதவியாக நூலுருவில் வெளியிட வேண்டும்.

# 26. முடிவுரை

இந்த நூற்றாண்டு தமிழ் உரைநடையின் பொற்காலம் ஆகும். இவ்வாறு சிறப்புற்று விளங்கும் தமிழ் உரைநடை இலக்கியம் எளிமை, தூய்மை இனிமை, ஆற்றொழுக்கு, கவர்ச்சி, காலத்திற்கேற்ற நெகிழ்ச்சி ஆகியவற்றைப் பெற வேண்டுமென்பதை இந்நூலில் தெரிவித்தோம்.

நாட்டில் முதியோர் கல்வி பரவி வருவதால், பொது அறிவுள்ள (ஆனால் புதிதாக எழுதப் படிக்கத் தெரிந்துகொண்டிருக்கும்) தமிழன்பர் பல்லாயிரவர் தமிழ் நூல்களைப் படிக்க முன்வருவர். அவர்கட்குப் பயன்படும் நூல்களைத் தமிழறிஞர் இயற்ற வேண்டும் எல்லாப் பொருள்களையும் அவர்கள் புரிந்துகொள்வதற்கேற்ப எளிய நடையில் எழுத வேண்டுவதும் எழுத்தாளர் கடமை எனலாம். ஆனால், கொச்சையாக எழுதுவது கூடாது. பொருளைத் தாம் நன்றாக உணர்ந்து பிறரும் உணரும்படி எழுத வேண்டும். இயன்ற வரை இலக்கண விதியைப் பின்பற்ற வேண்டும்.

தமிழர் பிற மொழிகளைக் கற்றுக்கொள்வதில் காட்டும் ஆர்வத்தில் சிறிதுகூடப் பிறர்க்குத் தம் மொழியைக் கற்றுக்கொடுப்பதில் காட்டுவதில்லை. தமிழன் வெளிநாடுகளில் சென்றவிடமெல்லாம் ஆங்காங்கு வழங்கும் மொழியைத்தான் கற்றுக்கொண்டான். பிறர் தமிழ் மொழியைக் கற்க முன்வரவில்லை என்று பொதுவாகக் கூறலாம். இதற்கு ஒரு காரணம் தமிழ் மொழி கற்பதற்குக் கடினமானது என்ற

கருத்து நிலவுவதாகும். மலேயா தொடங்கி அமெரிக்கா வரை பல நாடுகளில் பலர் என்னிடம் இவ்வாறு கூறியிருக்கின்றனர்.

ஓர் இளைஞன் ஓரளவு அறிவு வளர்ச்சியடைய 50 லட்சம் சொற்கள் அதாவது 30,000 சொற்களுள்ள 175 நூல்களைப் பத்தாண்டுகளில் படித்து முடிக்க வேண்டுமென்று மேனாட்டு அறிஞர்கள் கணக்கிட்டிருக்கின்றனர். தமிழ் நூல்கள் சராசரி 10,000 சொற்கள் அளவே உள்ளன. ஆகையால் அதே அறிவு பெறுவதற்கு பாட நூல்கள் தவிர 400 தமிழ் நூல்களை நமது இளைஞர்கள் படிக்கவேண்டும். தமிழில் 400 சிறந்த நூல்கள் பொது அறிவுத் துறைகளில் இன்னும் வெளிவரவில்லை. இதற்குக் காரணம் நல்ல இலக்கியத்தை நுகருகின்ற பண்பு வளர்ந்திருந்த போதிலும், விலை கொடுத்து நூல்களை வாங்கிப் படிப்பவர் தொகை மிகக் குறைவாக இருப்பதாகும். சிறப்பான நூல்கள் வெளியிடும் முயற்சியில் ஈடுபட ஆசிரியர்களுக்குப் பொருளுதவி செய்தும் பிற வசதிகளை ஏற்படுத்தியும் பரிசு வழங்கியும் நூற்றுக்கணக்கான நூல் நிலையங்களுக்கு வழங்கியும் அரசினர் ஆதரிக்காவிட்டால் சிறந்த தமிழ் நூல்கள் வெளிவருவது கடினமாகவே இருக்கும்.

இருபதாம் நூற்றாண்டின் எஞ்சிய 32 ஆண்டுகளிலும் தமிழ் உரைநடை விரைவாகவும் சீரிய முறையிலும் வளர்ச்சியடையுமானால் தமிழ் மொழி உலகின் பழமையான மொழிகளுள் ஒன்றாகமட்டுமின்றி, உலகிற் சிறந்த மொழிகளுள் ஒன்றாகவும் விளங்கும்; இந்த நிலையை நம் தாய்மொழி அடைந்ததும், நாமும் நாமக்கல் கவிஞரோடு சேர்ந்து, ஆடிப்பாடி மகிழ்வோம்.

"தமிழ னென்று சொல்லடா!
தலை நிமிர்ந்து நில்லடா!"

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI.

# பெயர்க் குறிப்பு அகராதி


அ

அடியார்க்கு நல்லார் 11
அபிதான சிந்தாமணி 48, 49
அப்பாத்துரை, கா. 140, 311, 321, 350, 358
அப்துல் ஜபார் 281
அப்துல் ரஹீம் 281, 303, 379
அப்துல் வஹ்ஹாப் 281, 290
அப்புசாமி, பெ. நா. 325
அரசஞ் சண்முகனார் 49
அசலாம்பிகை அம்மையார் 56
அண்ணா 161, 190, 191—193, 216, 227, 264, 311, 369, 387
அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 287, 288, 290, 312, 313, 363, 422
அண்ணாமலைச் செட்டியார் (டாக்டர் ராஜா சர்) 422
அன்புப்பழம்நீ 202
அனவிரதநாயகம் பிள்ளை 306
அமுத சுரபி 251
அரவிந்தன் 14
அரவிந்த ஆசிரமம் 289, 290, 291
அரசினர் பேருந்து 276
அரில் 417
அருள் 290
அருளம்பலம், அ. 312, 313
அருணாசலம், மு. 319, 372
அறபு 282
அமெரிக்காவின் குரல் 264
அகத்தியலிங்கம், சி. 365
அகிலன் 297, 299
அவிஞசிலிங்கம், தி. சு. 304 318, 334, 354, 433
அழகப்பன், ஆறு. 408

ஆ

ஆனந்தரங்கம் பிள்ளை 25, 308
ஆனந்த குமாரசாமி 207, 314
ஆனந்த விகடன் 251, 302
ஆறுமுக நாவலர் 33, 39, 187
ஆறுமுகம், ரா. 294
ஆசார்ய ஸ்வாமிகள் 289
ஆரோக்கியசாமி, மு. 320
ஆரணி குப்புசாமி முதலியார் 297
ஆஷர் (டாக்டர்) 411
ஆர். பி. 281

## இ

இறையனார் 8
இளம்பூரணர் 8, 9
இளவழகனார் 86, 319, 360
இராகவய்யங்கார், மு. 18
இராகவய்யங்கார், ரா. 202, 407
இராமலிங்க அடிகள் 38-39, 286, 290, 403
இராமலிங்கம் பிள்ளை (பார்க்க 'நா'வில்)
இராமலிங்கர் பணி மன்றம் 290
இராமலிங்கனார், சீ. 358
இராமலிங்கம் 433
இராசமாணிக்கம், மா. 86, 150, 303, 320, 362, 366
இராசமாணிக்கம், முகவை 190
இராசாக்கண்ணனார் 265
இராஜகோபாலன், கு. ப. 294
இராஜன், தி. சே. சௌ.308
இராஜேஸ்வரி அம்மையார் 309
இஸ்லாமியத் தமிழர்கள் 106
இஸ்லாம் 281
இஸ்லாமியத் தமிழ் 282
இஸ்மாயில், எம். எம். 265
இராதா தியாகராசன் 198
இராதாகிருஷ்ணப்பிள்ளை, ம. 290
இலக்குமணப் பிள்ளை, தி. 209, 313
இலக்குவனார், சி. 363
இராமநாதன், அரு. 217, 302
இராமகிருஷ்ண மடம் 289
இராமச்சந்திரன்செட்டியார் ஜி. எம். 317
இராமசாமி, எஸ். எஸ். 325
இராமசாமி, சீ. சீ. 312
இராமசாமிப் புலவர், சு. ஆ. 360
இராமச்சந்திர தீட்சிதர், வி. ஆர். 357
இரத்தினம், க. பொ. 366
இந்தியன், பி. இ. என். 254
இலங்கை வானொலி 264
இலங்கையில் விளம்பரங்கள் 277
இலங்கை 278, 279, 347
இலங்கை அரசினர் மொழி விசாரணைக் குழு 334
இலங்கையில் கலைச் சொற்கள் 339
இலங்கைத் தமிழ் 351, 368
இலங்கை ஆகமக் கழகம் 353
இலங்கைப் பல்கலைக் கழகம் 428

## ஈ

ஈழநாடு 183
ஈழநாடும் தமிழும் 366
ஈழகேசரி 249
ஈழத்துச் சோமு 294
ஈ. வே. ரா. 189, 369, 242

## உ

உலகநாதப் பிள்ளை 19
உமாமகேசுவரம் பிள்ளை, தமிழவேள் 47
உவைஸ், எம். எம். 281
உமைதாணுப் பிள்ளை 405
உடுமலை நாராயணன் 406

ஊ

ஊழியன் 246

எ

எல்லார்வி 302
எமஞே 412

ஐ

ஐயர், வ. வே. சு. 291, 293, 356, 364, 378
ஐசெக் தம்பையா 356

ஔ

ஔவை துரைசாமிப் பிள்ளை (பார்க்க: 'து'வில்)

க

கல்லாடர் 10
கந்தப்பையர் 13
கந்தையா பிள்ளை, ந. சி. 77, 366
கந்தசாமி 247
கதிரேசச் செட்டியார், பண்டிதமணி 59, 60, 215, 362, 368
கதிர்வேலுப் பிள்ளை 374
கத்தோலிக்கர்கள் 306
கலியாணசுந்தர முதலியார் (திரு. வி. க.) 61, 64-66, 82, 126-128, 188, 202, 237-238, 303 317, 361
கலைச்சொற்கள் 107-111
கல்கி 162-163, 165-171, 193-195, 216, 251, 256, 293, 298, 311, 317
கலையன்பன் இராமன். 319
கலைக்கதிர் 247, 271
கலைமகள் 251
கலாநிலையம் 248
கல்கத்தாப் பல்கலைக் கழகம் 427
கணேசய்யர் 77, 247
கணேசலிங்கன், செ. 115, 301
கணேசன், சா. 190, 320
கணேசலிங்கன் 294
கண்ணன், பி. எம். 159, 297, 302
கண்ணப்ப முதலியார் (பாலூரர்) 290
கண்ணதாசன் 308, 405
கணபதிப் பிள்ளை 210
கணபதி, ரா. 289
கணபதி, ச. கு. 319
கணபதிப் பிள்ளை, சி. (பண்டிதமணி) 363
கருணாநிதி, மு. 227, 391
கனி, எம். 281
கனகசபாபதிப் பிள்ளை, கே. 320
கனகசபைப் பிள்ளை 357
கரந்தைத் தமிழ்ச் சங்கம் 247
கரந்தைக் கட்டுரை 368
கமாலுதீன், எஸ். எம். 281
கமீல் சுவலபில் 414

கா

காளிங்கர் 13
காளிதாசன் 316
கால்டுவெல் 31, 41, 101
காதிரு முகைதீன், எம். கே. எம். 281
காந்திமதி, சி. த. 318

காசிச் செட்டியார், சைமன் 355
காசிப் பல்கலைக் கழகம் 427
காமராஜ், கு. 369
கார்டன் மத்தியூசு 411

## கி

கிறித்தவத் தமிழர்கள் 106
கிறித்தவம் 281
கிறித்தவப் பெருமக்கள் 283, 284
கிறித்தவத் தமிழ் 284
கிறித்தவ இலக்கியக் கழகம் 289
கிருஷ்ணமூர்த்தி, கு. சா. 209
கிருஷ்ணமூர்த்தி, ரா. (பார்க்க: கல்கி)
கிருஷ்ணசாமி, டி. கே 227
கிருஷ்ணப் பிள்ளை, எச். ஏ. 284, 407
கிருஷ்ணசாமி, ஓ. ஆர். 312
கிருஷ்ணசாமி, டி. பி. 357
கிருஷ்ணசாமி ரெட்டியார், அ. வெ. ர. 406
கிராம நலம் 251
கிரிதாரி பிரசாத் 290

## கு

குணவீர பண்டிதர் 12
குணசாகரர் 12
குமாரசாமி, சுன்ருகம் 77
குமாரசாமி, த. நா. 293, 298, 302, 354
குமாரசாமி, வி. என். 326
குருசாமி, ம. ரா. பொ. 131
குருசாமி, சு. 175
குமரன் 247
குமரகுருபரர் 249
குருகுலம் 249
கு. ப. ரா. 159
குயிலன் 185
குயில் 307
குப்புசாமிப் பிள்ளை, சிவ. 209
குப்புசாமி நாயக்கர் 316
குப்புசாமி முதலியார் 361
குப்புசாமி முதலியார் ('ஆ'வில் பார்க்க)
குழந்தை அம்மாள் 198
குழந்தை, புலவர் 320, 409
குன்றக்குடி ஆதீனம் 288
குன்றக்குடி அடிகளார் 386
குமுதினி 294
குகப்ரியை 294
குலசபாநாதன் 321, 358

## கே

கேரளப் பல்கலைக் கழகம் 426

## கை

கைலாசபதி 301

## கொ

கொச்சையான நடை 248
கொத்தமங்கலம் சுப்பு 408

## கோ

கோபிநாத ராவ் 16, 19, 22, 247
கோவிந்தசாமி, எஸ். கே. 19, 366
கோபாலரத்னம், வி. சி. 210

கோபாலகிருஷ்ணன், கல்வி. 309
கோபாலகிருஷ்ணமாச்சாரியார் 322
கோதைநாயகி 297
கோதண்டபாணிப் பிள்ளை 313, 361

## கௌ

கௌசிகன் 309

## ச

சதாசிவப் பண்டாரத்தார் தி. வை. 19, 320, 365
சதாசிவம், செ. 321
சடகோபராமானுசாச்சாரி 19
சண்முகம் பிள்ளை, திருமயிலை 40
சண்முகம், தி. க. (டிகேஎஸ்–ஔவை) 205, 210, 212, 221
சண்முக சுப்பிரமணியம் 309
சண்முகம் செட்டியார், ரா. க. 312, 323, 368
சபாபதி நாவலர் 41
சபாநாதன் 286
சத்தியமூர்த்தி 101, 189
சந்திரசேகரன், கி. 165
சந்தானம், க. 311, 312
சஞ்சீவி, ந. 198, 265, 306, 320
சகஸ்ரநாமம், எஸ். வி. 216
சம்பந்த முதலியார் 208
சம்பந்தம், மா. சு. 304, 315, 317
சம்பத்குமார் 318
சரசலோசனச் செட்டியார் 209
சங்கரதாஸ் சுவாமிகள் 211, 319
சங்குப்புலவர் 372
சங்கரன், சி. ஆர். 413
சக்தி 249
சமணர் 281, 283
சசி 294

## சா

சாமிக்கண்ணுப் பிள்ளை, எல். டி. 18
சாமிநாத ஐயர், உ. வே. 39, 45, 53, 202, 287, 360, 411
சாமிவேலாயுதம், தமிழ்மணி 98–99
சாமி, ஏ. எஸ். ஏ. 227
சாமிநாத அய்யர் 303, 308
சாமிநாத சர்மா, வெ. 303, 310
சாந்தலிங்க அடிகளார், பேரூர் 30
சாவி 294
சாண்டில்யன் 298, 302
சாலை இளந்திரையன் 406

## சி

சிலப்பதிகாரம் 8
சிவப்பிரகாச சுவாமிகள் 26
சிவஞான முனிவர் 28
சிவஞானம் (ம. பொ. சி.) 103–107, 190, 264, 290, 305, 311, 369
சிவமுத்து, மயிலை 133
சிவபாதசுந்தரம், சோ. 264, 318
சிவராமன், அ. நா. 311, 312

சிவராஜ பிள்ளை, கே. என். 356
சிவாக்கிர யோகிகள் 288
சிங்காரவேலு முதலியார், ஆ. 48–49
சிதம்பரம் பிள்ளை, வ. உ. 52, 308, 368
சிதம்பரநாத முதலியார், டி. கே. 68, 70, 381
சிதம்பர சுப்பிரமணியன் 13, 159
சிதம்பரநாதச் செட்டியார், அ. 265, 318, 375
சிட்டி 159
சின்ன அண்ணாமலை 190
சின்னத்தம்பி முதலியார் 196
சின்னப்பா பிள்ளை 297
சித்தாந்தம் 247
சித்தாந்த தீபிகை 250

சீ

சீனிவாச ஐயங்கார், ஆர். 56
சீனிவாசன், சி. ஆர். 152
சீனிவாச ராவ், எம். 204
சீனிவாச ராகவன், 364

சு

சுமத்திரா 17
சுப்பிரமணியம், தி. நா. 18
சுப்பிரமணிய ஐயர், கே. வி. 19
சுப்பிரமணியப் பிள்ளை, கா. 58, 86, 362, 365
சுப்பிரமணிய பாரதியார் 158, 291, 359, 404, 416
சுப்பிரமணியன், க. நா. 159
சுப்பிரமணியம், சி. 190, 319, 389
சுப்பிரமணியன், சேலம் 190
சுப்பிரமணிய ஐயர், பி. ஜி. 204
சுப்பிரமணிய முதலியார், வெ. ப. 247
சுப்பிரமணியப் பிள்ளை, இ. மு. 290
சுப்பிரமணியம், ச. வே. 363
சுப்பிரமணிய ஐயர், ஏ. வி. 364
சுப்பிரமணிய முதலியார், சி. கே. 365
சுந்தரம், ஜே. ஜி. 28
சுந்தரேச வாண்டையார் 20
சுந்தரம் பிள்ளை, மனோன் மணீயம் 19, 43–44, 207, 407
சுந்தரம், எஸ். டி. 216
சுந்தர சண்முகனார் 291, 376
சுந்தர ராமசாமி 300
சுந்தர வடிவேலு, நெ. து. 319, 388
சுந்தரமூர்த்தி 327
சுப்பராயச் செட்டியார் 39-40
சுப்பராய ஐயர் 45
சுப்பையா, சி. பி. 190
சுப்பையா, வெ. 319
சுப்பு ரெட்டியார், ந. 326, 363
சுகுணசுந்தரி 41
சுத்தானந்த பாரதியார் 97-98, 210, 379, 392, 406
சுதேசமித்திரன் 152
சுகி 215, 293
சுரதா 406
சுரபி 408
சுவலபில் 415

### சூ

சூரியநாராயண சாஸ்திரியார் (பார்க்க பரிதிமாற் கலைஞர்)
சூரியனூர் கோயில் ஆதீனம் 288

### செ

செப்பேடுகள் 16
செல்வகேசவராய முதலியார் 50
செல்வநாயகன், அருள் 294
செல்வநாயகம், வி. 365
செல்லையா, ஜே. வி. 356
செங்கல்வராயன் 190
செங்கோல் 305
செந்தமிழ் 247
செந்தமிழ்ச் செல்வி 247
சென்னைப் பல்கலைக் கழகம் 288
சென்னை தமிழ் இசைச் சங்கம் 313
சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் 333
சென்னைத் தமிழ் 401
செட்டியார், ஏ.கே. 317, 319

### சே

சேனாவரையர் 9, 10
சேதுப்பிள்ளை, ரா. பி. 42, 73-76, 128-130, 196, 362, 384
சேஷாத்திரி 249
சேஷாத்திரி நாதன் 325
சேனாபதி 298

### சை

சைவ சித்தாந்த சமாஜம்247

### சொ

சொக்கலிங்கம், டி. எஸ். 100' 242
சொக்கலிங்கனார், ராய. 247' 290, 378
சொக்கன் 294
சொக்கலிங்கம், எஸ். என். 319

### சோ

சோமசுந்தர தேசிகர் 19, 306
சோமசுந்தர நாயகர் 43
சோமசுந்தரம், மீ. ப. (சோமு) 49, 263, 294, 319, 407
சோமசுந்தர பாரதியார், ச. 67, 96, 362
சோமசுந்தரம். நா. 216
சோமசுந்தரம் பிள்ளை, ஜே. எம். 286, 314, 358
சோமசுந்தரம், பூர்ணம். 416
சோமசுந்தரப் புலவர் (பார்க்க 'நா' வில்)
சோழவந்தான் அரசஞ் சண்முகனார், 49

### சௌ

சௌந்தரா கைலாசம் 198
சௌபாக்கியம் 250

### ஞா

ஞானியாரடிகள் 195—196, 247
ஞானசம்பந்தன், அ. ச. 198, 364, 394
ஞானசம்பந்தம் 249
ஞானப்பிரகாச முனிவர் 288
ஞானப்பிரகாசர், 313

டி

டி. கே. எஸ். (சகோதரர்கள்) 209, 216, 217, 218, 219
டி. கே. சி. (பார்க்க: சிதம்பர நாத முதலியார்)
டில்லிப் பல்கலைக் கழகம், 427

த

தண்டபாணி, நாகை. சோ. 13
தண்டபாணி தேசிகர் 286, 287, 362, 406
தனி அரசு 243
தனிநாயக அடிகள் 280, 319, 370, 382, 418
தத்துவப்போதக சுவாமிகள் 25
தமிழ்ச் சங்கம், மதுரை 47
தமிழ்நாடு 239—241
தமிழ்ப் பொழில் 247
தமிழ்த் தென்றல் 251
தமிழ் முரசு 251, 305
தமிழண்ணல் 365, 408
தமிழகப் புலவர் குழு 439
தங்கராசு, திருவாரூர் 216
தருமபுர ஆதீனம் 285, 287, 317, 368
தம்பி சீனிவாசன் 309

தா

தாலாட்டு 2
தாய்லந்து 18
தாமோதரம் பிள்ளை சி. வை. 37, 44—45
தாமோதரன், ஜி. ஆர். 318, 326,
தாம்சன் M. S. H. 411
தாண்டவராய முதலியார் 40, 372
தாருல் இஸ்லாம் 250
தாவூத் ஷா 281

தி

திருநாதர் குன்றம் 16
திருமயிலை சண்முகம் பிள்ளை (பார்க்க 'ச' வில்)
திரு (என்னும் அடைமொழி) 58
திரு, வி. க. (பார்க்க: கலியாணசுந்தர முதலியார்)
திருநாவுக்கரசு முதலியார் 82.
திருக்குறட் சொல்லடைவு 98
திருக்கோயில் 285
திருவாவடுதுறை ஆதீனம் 287, 370, 385
திருப்பனந்தாள் 287
திருக்கோணமலை 297
திருவாணன் 311
திருலோக சீத்தாராம் 408
திராவிடப் பிரகாசை 41
தி. ஜ. ர. 160, 294, 354
தினமணி 238, 242
தினசரி 242
தில்லித் தமிழ்ச் சங்கம் 251

து

துரைசாமிப் பிள்ளை ஔவை. 88-89, 350, 362, 389
துமிலன் 302
துரை அரங்கனார், மொ. அ. 370

### தூ

தூரன், பெ. 165, 309, 313, 362, 407
தூத்துக்குடித் தமிழ் இலக்கியக் கழகம் 297

### தெ

தெய்வச்சிலையார் 9
தெய்வசிகாமணி ஆச்சாரியார், டி. எம். 202
தென்மொழி 364

### தே

தேசிகவிநாயகம் பிள்ளை, கவிமணி, 19, 404
தேசிகப் பிள்ளை 291
தேசிகன். ரா. ஸ்ரீ. 364
தேவநேயப்பாவாணர் 86, 89, 362, 365
தேவன் 294

### தொ

தொல்காப்பியம், தொல்காப்பியர், 7

### ந

நக்கீரர் 8
நக்கீரர் கழகம் 420
நச்சினார்க்கினியர் 10
நம்பிள்ளை 14
நமச்சிவாய முதலியார், கா. 209
நஞ்சீயர் 14
நடேசப் பிள்ளை 196-197
நடராசன், அ. லெ. 289, 354
நடராசன் பா. 312
நடராசன் 325
நடராசன். ஆ. 355.
நல்வழி 249
நல்லசாமிப் பிள்ளை. J. M. 250
நவமணி 257
நவரத்தினம் கா. 314
நவநீதகிருஷ்ண பாரதியார் 362

### நா

நாடோடிப் பாடல் 6
நாடோடி 293
நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் 14
நாகசாமி 19
நாராயண ஐயர், பின்னத்தூார், 54
நாரண துரைக்கண்ணன் 163, 216, 249
நாமக்கல் கவிஞர் 102-103, 161, 808, 405
நாயுடு, ஜி. டி. 318
நாஞ்சில் நாட்டுத் தமிழ் 399
நாவலியூர் சோமசுந்தரப் புலவர் 405

### நீ

நீலகண்டன், ப. 216

### நெ

நெடுஞ்செழியன், இரா. 335 385
நெல்லைத் தமிழ் 399

ப

பவானந்தம் பிள்ளை 12, 47
பரிமேலழகர் 12-13
பர்னல் 18
பரிதிமாற் கலைஞர் (வி. கோ. சூ. சாஸ்திரியார்) 47-48, 79, 207, 365
பரந்தாமனுர், அ. கி. 140, 320
பரமசிவானந்தம், அ. மு. 210
பர்ரோ 413,
பருதியார் 13
பட்டிமன்றம் (ஒய். எம். சி. ஏ.) 203
பட்டாபிராமன் செட்டியார் 291.
பட்டினத்துப் பிள்ளையார் 413
பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் 406
பண்டாரத்தார் (பார்க்க: சதாசிவப்பண்டாரத்தார்)
பத்மநாபன், ரா. அ. 307
பதி, சி. கே. எஸ். 411
பகீரதன் 317, 318
பழனிவேல் 319
பம்பாய்த் தமிழ்ச் சங்கம் 368
பப்ரீசியஸ் 374
பல்லடம் மாணிக்கம் 408

பா

பாண்டித்துரைத் தேவர் 47
பாரதிதாசன் 161, 291, 404
பாஸ்கரத் தொண்டைமான். தொ. மு. 178, 286
பாலி மொழி 281
பால் நாடார்,ஏ. சி. 284
பாலகிருஷ்ணப் பிள்ளை, ஆ. 286
பாலசுப்பிரமணியம், சிற்பி. 409
பார்த்தசாரதி, நா. 301
பார்னட் 412

பி

பிள்ளையார்பட்டி 21
பிரதாபமுதலியார் சரித்திரம் 41
பிரசண்ட விகடன் 249
பிச்சமூர்த்தி, ந. 159
பி. ஸ்ரீ. 163-165, 321
பிலோ இருதயநாத் 318
பியதி கோர்ஸ்கி. எ. 416

பு

புறநானூறு 12
புருஷோத்தம நாயுடு 15
புருனே 417
புதுமைப்பித்தன் 159, 292, 293, 304
புதுமையோலன் 294
புதுவைக் கல்விக் கழகம் 368
புதுவைச் சிவப்பிரகாசம் 405
புலவர் அரசு 360
புலியூர்க்கேசிகன் 360

பூ

பூலர், டாக்டர் 18
பூஞ்சோலை 250
பூவண்ணன் 309
பூரணலிங்கம் பிள்ளை எம். எஸ். 356, 365

### பெ

பெரியவாச்சான் பிள்ளை 14
பெர்சிவல் 31, 375
பெருமாள் முதலியார் மு. ரா. 116, 355
பெரியார் (பார்க்க: ஈ. வே. ரா.)
பெஸ்கி 373

### பே

பேராசிரியர் 9
பேரூர் சாந்தலிங்க அடிகளார் (பார்க்க: சாந்த லிங்க அடிகளார்)

### பொ

பொன்னி 249, 256
பொன்னுசாமிப் பிள்ளை 297, 298
பொன்னையா பிள்ளை 313

### போ

போப்பையர் ஜி. யூ. 31, 356, 357, 410

### ம

மதுரைத் தமிழ்ச் சங்கம் 47 (பார்க்க: தமிழ்ச் சங்கம்)
மதுரைப் பல்கலைக் கழகம் 273, 420
மதுரை மீனாட்சி அம்மன் 288
மதிவாணன் 47
மகிழ்நன் 51
மகேசகுமாரசர்மா 56-57
மறைமலை அடிகள் 79, 81-86, 215, 361, 379, 384
மணிப்பிரவாளநடை 151, 282
மணியன் 319
மயிலேறு, சி. ஆர். 209
மயில்வாகனப் புலவர் 321
மகரம் 293
மலையாளத் தமிழ் 400

### மா

மாணிக்க நாயக்கர் 51
மாணிக்கம், வ. சுப. 218, 361, 362, 364
மாணிக்க வாசகம். தி. 318
மாணிக்க வாசகம், 326
மாணிக்கம். ஜே. பி. 325
மாண்டிசோரி, 309
மாயாவி, 302
மாதவையா, 303
மாரிசாமி, எஸ். எஸ். 311
மாசிலாமணிப் பிள்ளை டி. பி. 324
மார்க்கபந்து சர்மா 364

### மீ

மீனாட்சி சுந்தரம் பிள்ளை, மகா வித்துவான். 39, 287
மீனாட்சிசுந்தரனார் தெ. பொ. 197, 198, 272, 356

### மு

முத்துராமலிங்கத் தேவர் 390.
முத்துக்காளத்தி 300
முத்தையா, ஆ. 312, 313
முத்துசிவனார் 368
முஸ்தபா, உசைன். டி. எஸ். 281

முஸ்தபா, மணவை 281
முருகு சுப்ரமணியம் 350
முல்லை முத்தையா 369
முடியரசன் 405
முகவை இராசமாணிக்கம் 190

மெ

மெய்க்கீர்த்தி 17
மெய்வார்த்தே, ஏ. 415
மெய்லூர 417.

மே

மேரி மாசிலாமணி 319

மொ

மொழியரசி 98

யா

யாப்பருங்கலம் 12
யாழ்ப்பாணம் 32–33, 288, 297, 373, 374, 375
யாழ்ப்பாண மன்னர்கள் 323
யாழ்பாணத் தமிழ் 400

யோ

யோகி, ச. து. சு. 406

ர

ரங்கராஜு, ஜே. ஆர். 208
ரங்கராஜு 297
ரசூல், ஏ. 281
ரகுநாதன் 292, 293, 304, 364

ரா

ராட்லர் 31, 373,
ராமசாமிஐயங்கார் 56
ராமசாமி, வ. (வ. ரா.) 159-160, 241, 302, 303
ராமையா, பி. எஸ். 159, 294
ராமமிருதம், லா. ச. 175, 293
ராஜாஜி 190, 289, 292, 293, 311, 333
ராதா, எம். ஆர். 216–217
ராஜம் ஐயர் 297
ராஜ்வேலு, கு. 299. 301
ராகவன் 314
ராபர்ட் நாக்ஸ் 322
ராஜன். தி. சே. சௌ. 325
ராஜேஸ்வரி அம்மையார் 325
ராஜகோபாலன் 378

ரு

ருதீன், எஸ். 416

ரே

ரேடியோ சிங்கப்பூர் 264
ரேடியோ மலேயா 264

ல

லக்ஷ்மி 297, 325
லாஜரஸ் 31, 357,

வ

வரதராசன், மு. 86, 202, 265, 296, 299, 302, 303 316, 317, 361 362, 365, 379, 383.

வரதராசுலு நாயுடு. 189, 241
வளன் அரசு, பா. 145
வடுவூர் துரைசாமி ஐயங்கார் 297
வள்ளியப்பா, அழ. 309. 310, 408
வடிவேலு செட்டியார், கோ. 361

வா

வாணிதாசன் 291, 405
வாணமாமலை 314

வி

விசாகப் பெருமாள் 13
விசாலாட்சி அம்மாள் 56
வில்வராயன் சாசனம் 17
வின்ஸ்லோ 31, 373
விபுலானந்த அடிகள் 78, 207, 313, 333, 354, 407
விபுலானந்தர் நினைவு மலர். 368
விசுவநாதம். கி. ஆ. பெ. 139, 190, 219, 265
விந்தன். 294, 300
விஸ்வநாதன் ஆர். கே. 325
விசுவபாரதிப் பல்கலைக் கழகம் 428

வீ

வீரமாமுனிவர் 27, 28, 31, 79
வீராசாமிச் செட்டியார் 40

வெ

வெங்கையா 19
வெள்ளைவாரணர், க. 247, 290, 363, 364
வெங்கடாச்சாரி, ஏ. ஜி. 311
வெள்ளக்கால், ப. சுப்பிர மணிய முதலியார் 407

வே

வேங்கடசாமி, மயிலை சீனி, 18, 123.
வேங்கடசாமி நாட்டார், ந. மு. 57-58, 360, 377
வேங்கடாசலம் இரா. 88, 209, 216, 227
வேங்கடசாமி, டாக்டர் 325.
வேங்கடராசுலு ரெட்டியார் 354
வேங்கடராமன் செட்டியார், செ. 361
வேங்கடேசுவரப் பல்கலைக் கழகம், 426
வேதநாயகம் பிள்ளை 41-43
வேதநாயகம் பிள்ளை மாயூரம் 296, 297
வேம்பு 298
வேலன், என். கே. 325
வேலுப் பிள்ளை, ஆ. 363
வேணுகோபாலப் பிள்ளை மே வீ. 371, 372

வை

வையாபுரிப் பிள்ளை 71-73 201, 364
வைத்தியநாதன் பி, எஸ். 316
வைணவத் தமிழ் 401

ஜ

ஜகந்நாதன் கி. வா. 76, 198, 257, 293, 295, 394-401, 408

ஜா

ஜானகிராமன் 298, 300
ஜான்மார் 411, 412

ஜி

ஜிகன்பாக் 24

ஜீ

ஜீவானந்தம், ப. 190

ஜூ

ஜூலியன் வின்கின் 417

ஜெ

ஜெகசிற்பியன் 298, 301, 302
ஜெயகாந்தன் 302

ஜோ

ஜோதி பாண்டியன் 313

ஹா

ஹாய்சிங்டன், எச். ஆர். 357

ஹீ

ஹீராஸ் பாதிரியார் 370

ஹூ

ஹூல்ஷ் 20

ஸ்

ஸ்மிர்ஞேவா, ஐ. 416
ஸ்குவைசர், டாக்டர் 418

ஸ்ரீ

ஸ்ரீலங்கா 251

MADURAI UNIVERSITY LIBRARY
20 OCT 1970
MADURAI.

# மாணவர்க்குப் பெரிதும் பயன்படக்கூடிய நூல்களுள் சில

| | |
|---|---|
| டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் | —என் சரிதம் |
| திரு. வி. க. | —வாழ்க்கைக் குறிப்புக்கள் |
| வையாபுரிப் பிள்ளை | —தமிழின் மறுமலர்ச்சி |
| ,, | —தமிழ்ச் சுடர்மணிகள் |
| டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி | —சங்ககாலச் சிறப்புப் பெயர்கள் |
| சதாசிவப் பண்டாரத்தார் | —பிற்காலச் சோழர் வரலாறு |
| டாக்டர் வ. சுப. மாணிக்கம் | —தொல்காப்பியப் புதுமை |
| ,, | —வள்ளுவம் |
| டாக்டர் மு. வரதராசன் | — மொழி நூல்<br>இலக்கிய மரபு<br>இலக்கிய ஆராய்ச்சி |
| டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை | —ஊரும் பேரும்<br>தமிழின்பம் |
| அ. ச. ஞானசம்பந்தன் | —இலக்கியத் திறன் |
| ந. சஞ்சீவி | —செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள் |
| கா. சுப்பிரமணியப் பிள்ளை | —தமிழ் இலக்கிய வரலாறு |
| மயிலை சீனி. வேங்கடசாமி | —மறைந்துபோன தமிழ் நூல்கள் |
| அ. கி. பரந்தாமனார் | —நல்ல தமிழ் எழுத வேண்டுமா? |
| மு. வை. அரவிந்தன் | —உரையாசிரியர்கள் |
| தமிழகப் புலவர் குழு | —தமிழியற் காட்சிகள் |